# கன்றின் குரல்

16 JUN
MADURAI

கி. சரஸ்வதி அம்மாள்

கலைமகள் காரியாலயம்
மைலாப்பூர் :: சென்னை-4.

உரிமை பதிவு] [விலை ரூ. 4/-

முதற் பதிப்பு, ஜூன் 1956

நவபாரத் பிரஸ், சென்னை-1.

# குன்றின் குரல்

# கன்றின் குரல்

"ஜம்புநாதா! நீ பட்டணம் புறப்படத் தயாராக வேண்டியதுதான், இதோ பார், உனக்குக் கிறிஸ்டியன் காலேஜில் பி. எஸ்ஸீக்கு அட்மிஷன் கிடைத்துவிட்டது; கார்டு வந்திருக்கிறது" என்றார் ராமசாமி ஐயர், ஒரு தபால் கார்டை மகனிடம் கொடுத்துக்கொண்டே.

அவர் மகன் ஜம்புநாதன் அதை மிகுந்த ஆவலோடு வாங்கிக்கொண்டான்.

"ஆமாம் அப்பா, காலேஜ் 27-ந் தேதியே திறக்கிறார்களே; இன்னும் நாலே நாளில் கிளம்ப வேண்டியதுதான்போல் இருக்கே" என்றான் கார்டைப் பார்த்துக்கொண்டே. அவன் குரலில் உற்சாகம் தொனித்தது.

"ஏண்டா, அவ்வளவு சுருக்கவா? நான் என்னமோ இன்னும் நாள் இருக்கு என்றுன்னு எண்ணிக்கொண் டிருக்கிறேன்" என்றாள், இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்த அவன் தாயார் விசாலம்.

"உன் நினைப்பு நன்றாக இருக்கு. ஜூன் மாதமும் முடியப் போகிறது. காலேஜ்கள் இன்னுமா திறக்காமல் இருப்பார்கள்? முழுசாய் மூன்று மாதந்தான் லீவு கொடுத்திருக்கிறார்களே; போதாதா?" என்றார் ராமசாமி ஐயர்.

"எனக்கு மூணு மாசமாத் தோணலே; நாள் நிமிஷமாப் போயிடுத்து. இவன் இனிமேலே பட்டணத்திலே போய்த் தனியாக ஹாஸ்டலிலே இருக்கணுமே, அதுதான் நினைத்துக் கொண்டால் விசாரமாயிருக்கு" என்றாள் விசாலம்.

"என்னம்மா நீ, நான் என்ன சின்னக் குழந்தையா? நீ

இப்படிச் சொல்வது எனக்குப் பிடிக்கவேயில்லை'' என்றான் ஜம்புநாதன், தாயைக் கடிந்துகொள்ளும் பாவனையில்.

''மாமி! அவன் கெட்டுக் கிட்டுக் காணாமே போயிடாதே நான் பார்த்துக்கொள்கிறேன்; நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்றான் ஜம்புநாதனைப் பார்க்க வந்திருந்த அவன் நண்பன் பசுபதி. சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் அவனுக்கு இடங் கிடைத்திருப்பதை நண்பனிடம் சொல்லத்தான் அவன் வந்திருந்தான்.

''என்னமோ அப்பா, உனக்குப் பரிகாசமாயிருக்கு, சொல்றே. எங்களை விட்டு, சித்தப்பா, பெரியப்பா, அத்தை, பாட்டின்னு கூட நாலு நாளைக்கு ஓரிடத்தில் போய் இருந்ததில்லை அவன். இலையிலே போட்டதைக்கூடச் சரியாகச் சாப்பிடத் தெரியாது அவனுக்கு. எல்லாம் பார்த்துப் பார்த்துக் கொடுத்தால்தான் உண்டு. படிக்கப் போகிறேனென்று உடம்பைக் கெடுத்துக்கப்படாது பாரு'' என்றாள்.

''எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால் பிள்ளை களைத்த மாதிரிதான் இருக்கும். மாமி, நீங்கள் பார்த்துக்கொள்ள இருக்கிறீர்கள் என்றுதான் அவன் இப்படித் தன்னைப் பற்றின சிந்தனையே இல்லாமல் இருக்கிறான். நீங்கள் பக்கத்தில் இல்லையென்றால் பாருங்கள்; அப்பொழுது எப்படி இருக்கிறானென்று'' என்றான் பசுபதி விடாமல்.

''நீ இருந்தாலும் ரொம்பத்தான் பிரமாதப்படுத்துகிறாய். இந்தக் காலத்தில் பெண் குழந்தைகளெல்லாம் பெற்றோரை விட்டு வெளியிடங்களிற் சென்று படிக்கிறதுகள்; ஆண் பிள்ளைக்கு என்ன வந்தது? இப்படி வாசற்படி இறங்கவிடாமல் உன் மடியிலேயே உட்கார வைத்திருந்தாயானால் அவனுக்கு என்னதான் தெரியப்போகிறது? அவனுடைய வருங்காலத்திற்குத்தான் அது நல்லதோ? அவனையொத்த பிள்ளைகள் எல்லாம் தன்னந்தனியாக வெளி நாடுகளெல்லாம் சென்று படிப்பு, தொழில் எல்லாம் கற்று, மேதாவிகளாக வருகிறார்கள். நீ என்னடா என்றால் இவனை இந்தத் திருச்சி ஜங்ஷனைத் தாண்ட விடமாட்டேன் என்கிறாய். இவன் வயதில் நான்கூட எவ்வளவோ தெரிந்து குடும்பத்துக்கு நானே பெரிய

வனுக எல்லாம் நடத்தியிருக்கிறேன். நீ இவனை வீட்டுக் காரியங்களிலும் புகவிடாமல், வெளியிலும் ஒன்றும் செய்யவிடாமல் பழக்குகிருய். உயர்த்தியாகப் படிக்கிருனென்று மகிழ்ந்து போகிருய். இந்தக் காலத்திலே படித்தால் மட்டும் போதுமா? முன்னெல்லாம் படித்தவனைக் கூப்பிட்டு உத்தியோகம் கொடுத்துக்கொண் டிருந்தான் வெள்ளைக்காரன்; இப்போது அந்தக் காலம் மலையேறிப் போய்விட்டது. உலகமன்ருே தெரிய வேண்டிஇருக்கிறது. உலகத்தோடு சகஜமாகப் பழகத் தெரிய வேண்டும். எந்த வேலையும் செய்யத் தெரிய வேண்டும்; இன்னும் எவ்வளவோ தெரிந்தாக வேண்டும்'' என்ருர் ராமசாமி ஐயர் பெரிதாகப் பிரசங்கம் செய்யும் தோரணையில்.

"ஆமாம், தெரியாமே போயிடறது. தெரிய வேண்டிய நாளிலே தானே தெரிஞ்சுட்டுப் போறது'' என்ருள் அவர் மனைவி அலட்சியமாக.

''நினைத்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான். எதுவும் சின்ன வயசிலிருந்து பழகினுல்தான் வரும். அல்பக் காரியமானுலும் திடீரென்று வந்துவிடாது; வித்தையாகத்தான் இருக்கும்.''

"அவனுக்கு இப்போ என்ன தெரியலே என்கிறேள்?''

"நீதானே அவனுக்குச் சாப்பிடக்கூடத் தெரியாதென்று விசாரப்பட்டாய்; அதற்குத்தான் சொல்கிறேன்: அவனுக்கு, கிடைத்ததைக் கொண்டு வயிற்றை நிரப்பிக்கொண்டு உலகமெல்லாம் சுற்றிவர வயதாயிற்று என்று.''

"ஏதுக்கப்பா, இந்தத் தர்க்கம்? அம்மா அப்படித்தான் ஏதாவது சொல்லுவாள்; அவளுக்கென்ன? நான் எல்லாம் பார்த்துக்கொள்வேன்'' என்ருன் ஜம்புநாதன், தன்னைப்பற்றின அவர்களுடைய விவாதத்தைக் கேட்கப் பிடிக்காதவனுக.

அப்படி அவனை அவன் பெற்ருேர்கள் அவரவர் முறையில் ஒன்றும் தெரியாதவனுக வைத்துப் பேசுவது, அதுவும் அவன் நண்பன் எதிரில் பேசுவது அவனுக்கு அவமானமாக இருந்தது. அப்புறம் அவன் சிநேகிதர்களுக்குள் அவனைப்பற்றிக் கேலி செய்ய அது விஷய மாகிவிடு மல்லவா? ஏற்கனவே அவன் நாலைந்து பெண்களுக்கு நடுவில் ஒரு மகனுக இருந்து அவன்

தாயார் அவனைப் பெரிதுபடுத்துவதுபற்றி அவர்களுக்குள் கேலிப் பேச்சாகத்தான் இருந்து வருகிறது. இப்பொழுது இது மாதிரி சம்பாஷணை அதற்குப் பின்னும் உதவியாக இராதா?

ஆனால் அவன் சொன்னதற்காக அவன் தாய் நிறுத்துவதாக இல்லை. "அது கிடக்கட்டும், சாவித்திரிக்காவது கடுதாசி போடுங்கோ. அவளும், அவாத்துக்காரருமாவது பார்த்துக் கொள்ளட்டும். அவாத்திலேகூட இருக்கலாம்; நீங்கள்தான் என்னமோ கேட்காமே ஹாஸ்டலுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேள்" என்றாள்.

"உனக்கு எத்தனை தரம் சொல்லுகிறது? சாவித்திரி நம்மகத்துப் பெண்தான். ஆனால் அவள் புக்ககத்து மனுஷ்யர்கள், அவள் கணவன், இவர்கள் வேற்று மனுஷ்யாள் இல்லையா? அதெப்படி இவன் போய் மாதக் கணக்கில் அவர்கள் வீட்டில் உட்காருவது?" என்றார் ராமசாமி ஐயர்.

"இவன் சின்னப் பிள்ளை; இவன் போய் இருக்கிறதற்காக அவாளுக்கு என்ன ஆகிவிடப் போகிறது? சாத்தோடு சாதம்" என்றாள் விசாலம் விடாமல்.

"இப்படிப் பேசுகிறவர்களுடன் என்ன பண்ணுகிறது? அயல் வீட்டுப் பிள்ளையை வீட்டோடு வைத்துக்கொள்வதில் சாப்பாட்டுச் செலவு மட்டுந்தானா? எத்தனையோ பொறுப்பல்லவா இருக்கிறது. முதலில் அவர்களுக்கும் அவனுக்கும் ஒத்துப் போக வேண்டும். அப்புறம் அவனுக்குப் போகவரச் சௌகரியம், இருக்கச் சௌகரியம், இன்னும் காலைத் தலையை வலித்தால் எத்தனையோ அல்லவா இருக்கின்றன. இந்தக் காலத்தில் சாப்பாட்டைக்கூடத்தான் சொல்லியாகவேண்டும்; ஒருத்தர் கூட என்றாலும் கூடச் செலவுதான்."

"நன்னாருக்கு. ஐம்புநாதனாலே செலவா? அப்படியும் அவாளுக்குக் கணக்குப் பாக்கணுமா? சாவித்திரிக்குப் பணம் கொட்டிக் கிடக்கு. கணேசனும் இப்போ வக்கீல் வேலையிலே வாரிக் கொட்டுகிறான். எல்லாம் நாமாக நினைச்சுக்கறது. இவன் அவாத்திலே இருக்கிறதற்காக அங்கே கிடைக்காத சாமான் ஏதாவது நாம் அனுப்பிச்சுட்டாலும் போறது. இது

ஒரு காரணமா? நீங்க பண்ணுகிற ஆட்சேபம் அவாளுக்கு இருக்காது'' என்றாள் விசாலம்.

''போடி, உன்னோடு ஒரு மனுஷ்யன் பேச முடியாது. அவா வைத்துக்கொள்ளுகிறேன் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டால்கூட நான் சம்மதிக்கமாட்டேன். எல்லாம் இருக்கிற உறவிலே இருக்க வேண்டும். அதிகம் நெருங்கிச் சிநேகத்தைக் கெடுத்துக்கொள்ளப்படாது. கடுதாசி போட்டிருக்கிறேன். அவ்வப்போது வந்து பார்த்து விசாரித்துக்கொள்ளுவார்கள். அதற்கு மேல் என்ன வேண்டும்? சும்மா இரு'' என்றார் ராமசாமி ஐயர், மனைவியை அதட்டிப் பேச்சை முடிக்கும் தோரணையில்.

''நான் சொல்லி உங்களண்டே எனக்கு என்ன நடக்கப் போகிறது? அது தெரிந்திருந்தும் என்னால் சும்மாயிருக்க முடியலையே; அதைன்னு சொல்லவேணும். தலையில் எழுத்துப் போல நடக்கட்டும். வாயை மூடிக்கொண்டு இருக்கத் தெரியவில்லையே; என் புத்தியைச் செருப்பால் அடிச்சுக்கணும்'' என்று தனக்குத் தன் கணவரிடம் சலுகை இல்லை என்பதாக வருத்தத்தோடு சொல்லிக்கொண்டு உள்ளே போகப் புறப்பட்டாள் விசாலம்.

''அண்ணா பட்டணம் போகிறானம்மா? அண்ணா மட்டுமா? நாமெல்லோரும் கூடவா?'' என்று அங்கே கூடத்தில் பள்ளிக் கூடப் பாடம் படித்துக்கொண்டும், நடுநடுவில் விளையாட்டாகப் பராக்குப் பார்த்துக்கொண்டும் இருந்த, ஆறு வயதிலிருந்து பத்து வயதுக்கு உட்பட்ட மூன்று பெண் குழந்தைகளில் சிறியவளாயிருந்த ஒருத்தி, இவர்கள் சம்பாஷணையை அரைகுறையாகக் கவனித்துவிட்டு ஆவலோடு கேட்டாள்.

''ஆமாமடி, ஆமாம். எல்லாரும் போக வேண்டியதுதான். நீயும் நானும் பட்டணம் போகாமல் முடியுமோ?'' என்று தனக்கிருந்த வெறுப்பையும் கோபத்தையும் அந்தச் சிறுமியின் பேரில் காட்டிவிட்டு விசாலம் உள்ளே சென்றாள்.

''சீ அசடே, அண்ணா படிக்கன்னுடி போகிறான். நாமெல்லாம் எதற்காகடி போகிறது? ஒரு தரம் நீ பட்டணம் போய் விட்டு வந்துவிட்டதற்காக மறுபடியும் மறுபடியும் போக

முடியுமா?'' என்ருள், அவளுக்குச் சற்று மூத்தவளான ஒரு பெண்.

"நான் பரீட்சை யெல்லாம் முடித்துவிட்டு காலேஜுக்குப் போவேன். அப்போது நானும் பட்டணம் போவேனுக்கும்'' என்ருள் முதலில் பேசிய சிறுமி.

''அது பார்த்துக்கலாம்; இப்பொழுது பாடத்தைப் படி. செய்யுள் ஒப்பிக்காததற்காக வாத்தியாரம்மா உன்னைப் பெஞ்சுமேலே நிற்கவைக்கப் போகிருள், ஜாக்கிரதை'' என்று எச்சரித்தாள் அவள் தமக்கை.

## 2

இதற்குள் ஜம்புநாதனும் அவன் சிநேகிதனும் அவ்விடம் விட்டு மெதுவாக நகர்ந்து வாசலுக்கு வந்திருந்தார்கள்.

''யாருடா அது, உனக்கு ஒரு கார்டியன் ஏற்பாடாகிறது பட்டணத்தில்? யார் இந்தச் சாவித்திரி?'' என்று கேட்டான் பசுபதி விளையாட்டாக.

''போடா, நீ ஏதாவது உன் பரிகாசத்தை ஆரம்பித்து விடாதே. என் அத்தங்காள் அவள்; கார்டியன் ஒன்றுமில்லை.''

''உன்னுடைய அம்மா அல்லவா குழந்தை தன்னை விட்டுப் பிரிந்து இருந்தால் என்ன ஆபத்துக்களில் சிக்கிக்கொண்டு விடுமோ என்று பயப்படுகிருள்; போகிற இடத்திலேயும் தனக்குச் சரியான ஆள் இருந்து உன்னைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிருள்'' என்ருன் பசுபதி.

''அம்மாவைப்போல் அத்தங்காள் பார்த்துக்கொள்வது என்பது சாத்தியமா? அவள் எனக்கு ஐந்தாறு வயதுதானே பெரியவள். மேலும், பாவம்! அம்மாவுக்கு எனக்கு வரக் கூடும் என்று தோன்றுகிற ஆபத்துக்களொன்றும் அவளுக்குத் தோன்றவே தோன்ருது. இது விஷயத்தில் அம்மாவினுடைய மூளை அபார சக்தி வாய்ந்தது. அது சாதாரணமாக யாருக்குமே வராது; அதிலும் சாவித்திரிக்கு அதற்கு வேண்டுமென்கிற வயதும் அநுபவமும் போதாது'' என்ருன் ஜம்புநாதன்

சற்று விளையாட்டும் நிஜமும் கலந்த குரலில்.

"அதென்னவோ உண்மை; விசாரப்படப் பெரியவர்களுக்குத்தான் நன்ருகத் தெரியும். அவர்களைப்போல் கவலைப்படச் சின்ன வயதில் சாத்தியமாகாது. அதனுல்தான் நீ இப்பொழுது தப்பித்தாய். ஆனுல், இந்த உன்னுடைய அத்தங்காள் சாவித்திரி எப்படியோ? உங்கம்மாவுக்கு அவளிடம் நம்பிக்கை இருக்கிறமாதிரி இருக்கிறதே" என்ருன் பசுபதி சந்தேகத்தைக் கிளப்பும் தொனியில்.

"சாவித்திரி—அத்தங்காளைப்பற்றி அப்பாதான் உயர்வாகச் சொல்லுவார்; கேட்டிருக்கிறேன். அப்பா உத்தியோகம் பார்த்த நாட்களில் அத்தான் வீட்டிற்கு, அதாவது சாவித்திரியின் தந்தை வீட்டிற்கு அடிக்கடி போய் வருவார். நாங்களெல்லோரும் போனதேயில்லை. இந்தத் திருவானைக்காவை விட்டே நாங்கள் யார்தாம் அதிகமாக வெளியே போயிருக்கிருேம்; இல்லை. சாவித்திரியின் கல்யாணத்திற்குப் போயிருந்தோம்; அப்பொழுது எனக்கு 6, 7 வயதுதான் இருக்கும். இருந்தாலுங்கூட அத்தானுடைய அரண்மனை போன்ற பெரிய பங்களா வாசலிற் போட்டிருந்த விஸ்தாரமான பந்தல், சாவித்திரியும் அவள் கணவனும் ஜோடியாய் உட்கார்ந்து ஊஞ்சலாடினது, எல்லாம் எனக்கு நன்ருக நினைவில் இருக்கின்றன. சாவித்திரி நல்ல அழகாக இருப்பாள்" என்ருன் ஐம்புநாதன், அவைகளை யெல்லாம் நினைவிற்குக் கொண்டுவர முயன்றுகொண்டு.

"நான் சொல்கிறேனென்று நீ கோபித்துக்கொள்ளாதே. இருந்தாலும் உன் தந்தை மிகவும் சுயநலக்காரர்தான். அவர்மட்டும் எங்கு வேண்டுமாளுலும் போய்க்கொண்டு, உங்களை யெல்லாம் வீட்டை விட்டே வெளியில் அழைத்துச் செல்லாமல் இருந்திருக்கிருர். அது நியாயமா?" என்ருன் பசுபதி நண்பனுக்காகப் பரிந்துகொண்டு.

"அவரைக் கேட்டாயாளுல் விஷயம் முற்றும் வேருக இருக்கும். அவர்தாம் எங்களுக்காகத் தியாகம் செய்தவராக இருப்பார். 'எக்ஸைஸ் டிபார்ட்மென்'டில் அவருக்குச் சொற்ப சம்பளம். அதில் ஊர் ஊராகக் குழந்தைகளை அலைக்கழிக்கக்

கூடாது, வீணுக்குப் பணச்செலவோடு குழந்தைகளுடைய உடம்பிற்கும் சிரமம் என்பது அவர் எண்ணம். இங்கே வீடும் வாசலும் சௌகரியம் நிறைய இருக்கிறது. பாட்டியும் அத்தையும் வேறு கவனித்துப் பார்த்துக்கொள்ள இருக்கிறார்கள். அம்மாவும் பாதியும் இங்கேதான் இருப்பாள். அவர் தன்னந் தனியாக எவ்வளவோ சமயங்களில் புது இடங்களில் எல்லாம் திண்டாடியிருக்கிறார். அதனால்தானே அவர் உத்தியோகத்தை டயத்துக்கு முன்னாடியே ராஜீனாமா செய்துவிட்டு வந்துவிட்டார். அவரைக் கேட்டால் சொல்லுவார். சர்க்கார் உத்தியோகம் செய்து சம்பாதித்து, குப்பை கொட்டுகிறதைவிட வீட்டோடு இருந்து நில புலன்களைக் கவனித்துக்கொண்டால், வேண்டிய பணம் மிச்சம் என்று" என்றான் ஜம்புநாதன்.

"அவ்விதம் அவர் சொல்வதை நானுந்தான் கேட்டிருக்கிறேன். அதன்படி தன் அநுபவத்திலேயே கண்டுவிட்டதாகப் பெருமை பேசுகிறாரே. அவர் உத்தியோகம் பார்த்த நாட்களைவிட இப்பொழுது காசும் பணமுமாக இருக்கிறாராமே" என்றான் பசுபதி.

"அத்தான் சொன்ன புத்திமதிகளையும் கேளாமல் உத்தியோகத்தைவிட்டு விலகிக்கொண்டது தமது புத்திசாலித்தனம் என்றுதான் அவருக்குத் தம்மைப்பற்றியே பெருமை. 100க்கும் 150க்கும் கை கட்டிச் சேவகம் செய்து ஊர் ஊராய் மாற்றலில் அலைந்து தேக நலனையும் கெடுத்துக்கொண்டு, காசும் போதாமல் கஷ்டப்படுவதைக்காட்டிலும், தாமே எஜமானனாக, இருந்த இடத்தில் நிலத்து வரும்படியில் சௌக்கியத்திற்குக் குறைவில்லாமல் இருப்பது எவ்வளவோ மேல் என்பது அவர் அபிப்பிராயம். தம்முடைய நிலைமையில் அவருக்கு மிகுந்த திருப்தி. என்றுமே அவருக்கு அதிக ஆசைகள் இல்லை. அத்தானுடைய உயர்வைக் கண்டு அவருக்கு அசூயை தோன்றினதே இல்லையாம்; அவரே சொல்லுவார்" என்றான் ஜம்புநாதன்.

"ஆனால், சாவித்திரியின் தந்தை பெரிய அந்தஸ்தில் இருப்பவரோ?," என்று கேட்டான் பசுபதி.

"அவர் கொழுத்த பணக்காரர். வக்கீல் உத்தியோகத்தில்

பதினுயிரக் கணக்கில் வாரிக் கொட்டினுர். பங்களாவும் தோட்டமும், வண்டியும் காடியும் வருவாரும் போவாரும் பெரிய ராஜாங்கந்தான். அவைகளையெல்லாம் சொல்லும் பொழுது அப்பாவுக்குப் பெருமை தாங்காது. அநேகமாகத் தமது மாற்றல் காலத்தையெல்லாம் பட்டணத்தில் அத்தான் அகத் தில்தான் கழிப்பார். உச்ச நிலையில் இருக்கும்பொழுது திடீ ரென்று அத்தான் இறந்து போனதை நினைத்துக்கொண்டால் அப்பாவுக்கு இப்பொழுதும் துக்கம் தாங்காமல் வந்துவிடும்; கண்ணீர் வெள்ளமாகப் பெருக்கிவிடுவார்."

"ஆனுல், அந்த அத்தான் இப்பொழுது உயிருடன் இல்லையா? சாவித்திரிக்குத் தகப்பனுர் இல்லையா?"

"ஆமாம்; அவர் இறந்து இப்பொழுது ஏழெட்டு வருடங் கள் இருக்கும். எங்கள் அப்பாவுக்கு அவர் அத்தான் அல்ல: கூடப் பிறந்த தமையன் என்றுதான் சொல்ல வேண்டும். இருவருக்கும் இணையற்ற நேசம். சின்ன வயதிலேயே தந்தையை இழந்த என் தகப்பனுர் அத்தானுடன்தான் பாதி யும் இருப்பாராம். அத்தான் இறந்தபோது அப்பாவுக்கு ஏதா வது நேர்ந்துவிடுமோ என்று நாங்களெல்லோரும் நடுங்கிப் போனேம். கொஞ்ச நாளைக்கு ஒருவருடனும் பேசாமல், உணவுகூடச் சரியாக உட்கொள்ளாமல் இருந்தார். அம்மா, பாட்டி எல்லாரும் மிகவும் கஷ்டப்பட்டுப் போனுர்கள். நான் அப்பொழுது பத்து வயதுப் பையன். ஒரே மட்டில் அப் பாவின் எதிரில் வரவே பயப்பட்டுக்கொண் டிருப்பேன். என் பள்ளிக்கூடப் பாடம் உண்டு, நான் உண்டு என்று, வீட்டில் இருக்கும் நேரத்தில்கூட இருக்கிற இடம் தெரியாமல் புத்தகத் துக்குள் புகுந்துகொண் டிருப்பேன். அப்பா அப்புறம் எப் பொழுது சாதாரணமாக ஆனுரோ நினைவில்லை. எந்தத் துக்க மும் நாள் ஆக ஆகக் குறைந்துதானே தீரவேண்டும். அது வாகவே அப்பாவுக்கும் குறைந்துபோயிருக்கும்" என்ருன் ஜம்பு நாதன் சில வருடங்களுக்குமுன் அத்தான் சாவு நடந்தபோது அப்பா இருந்த மாதிரி நினைவு வந்தவனுய்,

"பாவம். அப்பொழுது சாவித்திரிக்குப் பதினேழு, பதி னெட்டு வயது. ஏற்கனவே தாயில்லாப் பெண். உடன்பிறந்தவர்

களும் யாரும் இல்லை. அவள் ஒருத்திதான். அவளுக்காக வேறு அப்பா உருகிப் போனார். கணவன் அவளை அன்பாக நடத்தவில்லையென்று அப்பொழுது ஏதோ சொல்லிக்கொள்ளு வார்கள். இப்பொழுது எல்லாம் சரியாகப் போய்விட்டது. மிக உயர்வாகவே இருக்கிறாள். 'நாகசாமி பார்க்காமல் போய் விட்டானே! "பெண் கஷ்டப்படுகிறாள்" என்பதாகத்தவித்தான். இப்பொழுது அவள் நன்றாக இருப்பதைப் பார்க்காமல் போய் விட்டான்;' என்று வாய்க்கு வாய் சொல்லி வருந்துகிறார் அப்பா' என்று மேலும் தொடர்ந்து கூறினான் ஜம்புநாதன்.

பசுபதிக்குச் சாவித்திரியின் சமாசாரங்கள் கேட்கக் கதை போல் சுவாரஸ்யமாக இருந்தன. இன்னும் கேட்க ஆவல் கொண்டான். சாவித்திரியின் கணவன் அன்பாக நடத்த வில்லையென்றால், என்ன செய்தான்? அப்புறம் எப்படி மாறி னான்? இவைகள் தெரிய வேண்டும்போல் இருந்தது. ஆனால், அவ்வளவிற்கு விளக்கிச் சொல்ல ஜம்புநாதனுக்கே முழு விவ ரமும் தெரிந்தாலன்றோ? அதுபற்றி அவன் தந்தை அதிகம் பேசினதில்லை. அவனும் சிறியவனாதலால் விவரம் தெரிய ஆவல் கொண்டதில்லை. பொதுவாக அத்தங்காள் சாவித்திரி அழகு, குணம், படிப்பு, கூடவே செல்வம், எல்லாம் ஒன்று சேர அமைந்தவள். அவள் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரையில் அதிக அன்பில்லாமல் நடந்துகொண்ட கணவன் பிறகு அன்பு மயமாக மாறிவிட்டான். அவ்வளவுதான் அத்தங்காளைப்பற்றி அவனுக்குத் தெரியும். அதற்குமேல் அவனுக்குத் தெரியவேண்டுமென்பது என்ன? இப்பொழுது பட்டணம் போகப் போகிறான்; அவளையும் பார்க்கப் போகிறான் என்பது இல்லாவிட்டால் அவளைப்பற்றின இந்த நினைப்புத் தான் அவனுக்கு எதற்காக உண்டாகப் போகிறது?

"போகிறது; உனக்கும் எனக்கும் ஒரே கல்லூரியில் இடம் கிடைத்ததே; அதைச் சொல்லு. இதைக் கேட்டு மற்றவன்கள் பொறாமைப்பட்டுச் சவான்கள்" என்றான் ஜம்புநாதன் வேறு நினைவு வந்தவனாய்.

"அதற்கென்ன பண்ணுகிறதாம். இவன்களை இன்னும் கீழே மார்க் வாங்கச் சொல்லு, சேர வேண்டுமென்று

நினைக்கிற கலாசாலையிலெல்லாம் சேர்ந்துவிடலாம்!" என்றான் பசுபதி ஏளனமாக.

"இப்பொழுதெல்லாம் கலாசாலை 'அட்மிஷனே' உத்தியோகம் படுகிற பாடு படுகிறதாம். அப்பா கிறிஸ்தவக் கலாசாலையில் படித்தவர்; அதனால் எனக்கு இடம் கிடைப்பதைப்பற்றி அவருக்குக் கவலை இருக்கவில்லை" என்றான் ஜம்புநாதன்.

"உனக்கென்ன? நீ நிறைய மார்க் வாங்கியிருக்கிறாய். எனக்குக் கிடைத்தது வேண்டுமானால் அதிருஷ்டம். முதல் கிளாஸ் மார்க் என்றாலும் அதிகம் ஒன்றுமில்லை. அதனால் நான் விசாரப்பட்டுக்கொண்டிருந்தேன். நம் இரண்டு பேரையும் பிரிக்காமல் வைத்ததற்கு நமது மலைக்கோட்டைப் பிள்ளையாருக்குத்தான் நன்றி செலுத்த வேண்டும்" என்றான் பசுபதி.

"ஆமாம்டா, பட்டணம் போவதற்கு முன்னால் பிள்ளையாரைத் தரிசிக்க வேண்டும். அவர்தானே எந்தக் காரியத்திற்கும் துணை புரிய இருக்கிறார்" என்றான் ஜம்புநாதன் பிள்ளையாரிடம் பக்தி மேலிட்டவனாய்.

"அதிலும் நம் சகபாடிகளுடைய பொறுமைத் தீ நம்மை எரிக்காமல் இருக்க வேண்டுமென்றால் அவர் தயவு கட்டாயம் வேண்டியதுதான். அவர்களுக்கு நாம் இவ்விதம் பட்டணம் போவது நமக்கு ஏதோ பதவி கிடைத்துவிட்டதாக மண்டிக் கிடக்கும்" என்றான் பசுபதி.

"இன்று வெள்ளிக்கிழமையல்லவா? அவருக்கு விசேஷ தினமாயிற்றே. சாயங்காலமாக அவர் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்துவருவோமே" என்றான் ஜம்புநாதன்.

"வாஸ்தவம்; சுவாமியாக இருந்தாலும் முன்னடி செய்து கைக்குள் போட்டு வைத்துக்கொள்ள வேண்டியதுதான். பிள்ளையார், பாவம், நல்லவர். குட்டுக் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணம் போட்டாலும் போதும் அவருக்கு. திருப்தியாகிவிடுவார்" என்றான் பசுபதி.

"சுவாமியைக்கூட உனது கேலி விடவில்லையே! தேவலையப்பா நீ!" என்று ஜம்புநாதன் கூறிக்கொண்டே சிநேகிதனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டுப் பட்டணம் செல்ல

வேண்டியதைக் குறித்து, தாயுடனும் தந்தையுடனும் மேலும் பேச வீட்டுக்குள் சென்றான்.

## 3

ஜம்புநாதனுக்குப் பட்டணம் போகப்போகிறோம் என்கிற நினைப்பே அவனையும் அறியாமல் மிகுந்த குதூகலத்தைக் கொடுத்தது. அந்தத் திருச்சியைவிட்டு, ஏன்? அந்தத் திருவானைக் காவைவிட்டே அவன் எந்த இடத்திற்குத்தான் இதுவரையும் அதிகம் சென்றிருக்கிறான்? அவனுக்கு வயது பதினெட்டு ஆகிறது. ஆறு, ஏழு வயதாக இருக்கும்பொழுது ஒரு முறை பட்டணம் சென்றிருக்கிறான். அதுதான் சாவித்திரியின் கல்யாணத்திற்குப் போனது. அப்புறம் எங்குமே அவன் ரயிலேறிச் சென்றதாக அவன் நினைவில் இல்லை. ஆமாம்; ஒரு தடவை அவன் பாட்டனார், அதாவது அவன் தாயைப் பெற்ற தந்தை, இறந்தபொழுது அம்மாவோடு தஞ்சைக்குப் போய் வந்திருக்கிறான். அதுகூட நடந்து இப்பொழுது நாலைந்து வருடங்கள் ஆகியிருக்கும். ஆகையால், வெளியூருக்குச் சென்றுவர அவனுக்கு ஆவல் இருப்பது நியாயமே அல்லவா? இளவயதில் ஊர் ஊராகச் செல்லவும், அங்குள்ள விநோதங்களைப் பார்க்கவும் புதுப் புது விஷயங்களைக் கிரகிக்கவும், ஆசை இருக்க வேண்டியதும் அவசியந்தானே.

பட்டணம் போகப்போகிறான், அதோடு தன் மனிதர்கள் யாருமின்றி ஹாஸ்டலில் தனியே வசிக்கவும் போகிறான். இவைகள் அவனுக்கு முற்றும் புதிய—இதற்குமுன் நேராத—அநுபவங்கள். அவைகளை நினைக்கும்போதே ஒருவகைக் குதூகலமும் கூடவே அச்சமும் உண்டாயிற்று அவனுக்கு. அவன் பெற்றோருக்கு அருமையாக ஒரே மகன். அதாவது முதலில் கொஞ்ச நாளைக்குக் குழந்தைகளே இல்லாமலிருந்து பிறகு விரும்பி வேண்டிப் பிறந்தவன். பிறகும், நாலைந்து வருடங்களுக்கு ஒரே அருமைக் குழந்தையாக வளர்ந்தவன். அப்புறந்தான் வரிசையாக நான்கு பெண்கள் பிறந்தார்கள், அவன் பெற்றோர்களுக்கு. அப்படியும் மகன் ஒருவன் என்று ஆகிவிட்ட

தில் அவனுடைய அருமை குறைவதற்கே காரணமின்றிப் போயிற்று; அதிகரித்தது என்றுகூடச் சொல்லலாம்.

அவர்கள் குலம் விளங்க அவன் ஒருவன்தான் என்கிற தில் பாட்டிக்கு அவனிடத்தில் தனிப் பற்றுதல். தனக்கென்று குழந்தைகள் இல்லாத அத்தைக்கு அருமை மருமகனிடத்தில் அலாதியான அன்பு. 'அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு பிறர் வீட்டுக்குப் போகிற பெண்கள்தாமே!' என்று வாய்க்கு வாய் மருமகள்மார்களைக் குறைவாகச் சொல்லிக் கொண்டு மருமகனுக்குத் தனி உபசரணைகள் செய்தாள். அவள், தான் ஓரிடத்திற்கும் ஒன்றையும் கொண்டுபோகாமல் பிறந்த வீடான தமையன் வீட்டோடு இருந்து அவர்களுக்கு உழைத்துக்கொண்டு, கணவரையும் உடன் இருந்து அவர் களுக்கு உழைக்க வைத்துக்கொண் டிருப்பதைக் கொஞ்சமும் நினைத்தவளாகத் தெரியவில்லை. பாவம், அவள் கணவருக்குத் தனித்து வசிக்க வகையில்லை. மைத்துனனின் நில புலன்களை மேல்பார்வை பார்த்துக்கொண்டு வேட்டகமே கதியாக இருந்து விட்டார்.

ராமசாமி ஐயருக்கு அவர் அவ்விதம் இருந்தது உதவி தானே. எல்லா வேலைகளுக்கும் கட்டாக்கட்டியாகச் சொந்த மனுஷ்யனாக ஓர் ஆசாமி இருப்பது சௌகரியம் அல்லவா? ஆனால், அவ்விதம் நினைத்தல்ல, அவர் தங்கையை யும் அவள் புருஷனையும் வீட்டோடு வைத்துக்கொண்டது. சுபாவத்திலேயே அவர் பந்துப் பிரியர். அதிலும் சகோதரியி னிடத்தில் அபாரப் பிரேமை. சிறு வயதிலேயே தந்தையை இழந்து அவர்கள் ஒருவருக்கொருவர் அதிக வாஞ்சையுடன் வளர்ந்திருக்கிறார்கள். எப்பொழுதும் இளமையில் விதிவசத் தால் பெற்றோரை இழக்கும்படி நேரிடின் சகோதர வாஞ்சை யானது அது இருக்க வேண்டிய அளவிற்கும் மேல்பட்டு, இறந்த பெற்றோருடைய வாஞ்சையும் சேர்ந்து இருப்பதுபோல் காண்கிறதல்லவா?

ஜம்புநாதனுடைய அம்மாவைப்பற்றியோ சொல்ல வேண் டியதில்லை. தானும் எங்கே தன் நாத்தனாரைப்போலவே மலடி என்கிற சொல்லுக்கு இலக்காகி விடுவோமோ, என்று வருந்

திக்கொண்டிருந்த அவள், பிள்ளைக் கலி தீர்க்க வந்த அவனைச் சாமானியமாகவா நேசித்திருப்பாள்? உலகில் யாருக்கும் கிட்டாத பாக்கியம் தனக்குக் கிட்டியிருப்பதாகவே மகிழ்ந்து போனாள். அவனுக்குப் பிறகு பிறந்த பெண்கள் அவள் பெற்ற குழந்தைகள்தாம் என்றாலும், அவர்களிடத்தில் அவளுக்கு ஏற்பட்டிருந்த பாசத்தை ஜம்புநாதனிடம் அவளுக்கிருந்த அன்போடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைவு என்றே சொல்லவேண்டும்.

இவ்விதம் மூன்று ஸ்திரீகளும் தங்கள் அன்பை முழுதும் அவனிடம் வைத்துத் தனிச் சலுகை கொடுத்து அவனை வளர்த்தார்கள். ஆனால் அந்தச் செல்லத்தினால் அவன் கெட்டுக் கழுசடையாகாமல், படித்துப் புத்திசாலியாக வளர்ந்தான். அளவுக்கு மிஞ்சின செல்லம், வளரும் குழந்தைகளுக்குப் பெரும் கெடுதல் அல்லவா? முரண்டும் பிடிவாதமும் ஏற்பட்டு ஒன்றுக்கும் உதவாமல் அடித்துவிடுமல்லவா? அவ்விதமின்றி நமது ஜம்புநாதன் ஒருபெண்ணல்ல, மூன்று பேராகச் செல்லங் கொடுத்தும் கெட்டுப் போய்விடாமல் புத்திசாலியாக முன்னுக்கு வருவதில் குறியாக இருந்தானென்றால் அது புகழுக்கு உரியதுதானே! இப்பொழுது அவன் பட்டணம் போகப் போவதைக் குறித்துத்தான் அவர்கள் மூவரும் கவலைப்பட்டுப் போனார்கள்.

"இங்கேயே இத்தனை நாளும்போல் படிச்சா என்ன? எதற்காகப் பட்டணம் போகணம்?" என்றாள் பாட்டி.

"அதுதான் எனக்கும் புரியவில்லை" என்றாள் அத்தை.

"என்னவோ? குழந்தை, சாப்பாட்டுக்குத் திண்டாடிப் போவானே! அதுதான் எனக்கு" என்றாள் பாட்டி.

"நான் போயிருந்து சமைத்துப் போடுகிறேன் என்று சொன்னதற்கு அண்ணா ஒரேமட்டில் வேண்டாமென்று சொல்லிவிட்டார். குடித்தனம் போடுவது வீண் செலவு என்கிறார். குழந்தைக்கு வாய்க்கு வேணுமென்கிறதைச் சமைத்துப் போடுவதைவிட்டு இங்கே எனக்கு என்ன வேலை கிடக்கு?" என்று அலுத்துக்கொண்டாள் அத்தை.

"எதற்கு நீங்கள் இதையெல்லாம் சொல்லுகிறீர்கள்?

அவர் ஒன்றையும் காதில் வாங்கிக்கொள்ளப் போகிறதில்லை. பிள்ளையை அடித்து விரட்டுவதில் இருக்கிறார்; நன்றாகத் தெரிகிறது. சாவித்திரி அகத்திலே இருக்கக்கூடாதா என்று சொன்னதற்கே என்னை ஒரு அதட்டு அதட்டிவிட்டார்" என்றாள் விசாலம், கணவர் யாருடைய வார்த்தையையும் கேட்டு நடப்பவராக இல்லை என்கிற வருத்தத்தில்.

"ஏன்? சாவித்திரி அகத்தில் இருந்தால் என்னவாம்? அதற்கு அவனுக்குப் பாத்தியம் இல்லையா?" என்றாள் அத்தை.

"என்னவோ, யார் கண்டா? ஊராராத்துப் பிள்ளையாம். சரியாக வராதாம், சிநேகமே கெட்டுவிடுமாம். அவர் என்ன என்னமோ சொல்லுகிறார்" என்றாள் விசாலம் அலுத்துக் கொண்டு.

"ராமசாமி சொல்றது சரிதான். சாவித்திரி அகத்தில் இருக்கிறது சரியாக வராது. அவள் புக்காத்துவா ஒரு மாதிரி மனுஷயாள்தான்" என்றாள் பாட்டி. அவளுக்கு அவர்கள் எல்லாரையும் முன்னமேயே தெரியும்.

"நீங்கள் எதற்காக இவ்வளவு விசாரப்படுகிறீர்கள்? ஹாஸ்டலில் வேண்டிய சௌகரியங்கள் இருக்கிறதாம்; எல்லோரும் சொல்லுகிறார்கள். உள்ளூர்ப் பிள்ளைகள்கூட அங்கே வந்து வசிக்கப் பார்க்கிறார்களாம்; இடம் கிடைக்காததனால் நிற்கவேண்டி இருக்கிறதாம்" என்றான், அந்தச் சமயத்தில் உள் நுழைந்த ஜம்புநாதன்.

"அதென்னமா? சொந்த அகம் மாதிரி எப்படி ஆகும்?" என்றாள் அத்தை அதிசயத்தோடு.

"வீட்டிலே பொம்மனாட்டிகள் எதாவது கவனித்துக் குழந்தைகளுக்குச் செய்தால்தானே. பட்டணத்துப் பெண்களை நம்மைப்போல் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா? சதா வெளியிலே போய்க்கொண்டிருக்கும் அவாளுக்கு வீட்டைக் கவனிக்க நேரம் ஏது? பாதிப்பேருக்குச் சமையல் உள்ளே தெரியுமென்று எனக்குத் தோணலே" என்றாள் விசாலம் தன்னுடைய பட்டணவாசத்து அநுபவத்தை வைத்துக் கொண்டு. அவள் கணவருடன் இரண்டொரு முறை சாவித்திரி அகத்தில் போய் இருந்திருக்கிறாள் அல்லவா?

"பொம்மனாட்டியாப் பிறந்துவிட்டு அது மாதிரியும் இருப்பாளா?" என்று அதிசயித்துக்கொண்டாள் பாட்டி.

"எங்கேதான் போக இடம் இருக்கும்?" என்று கேட்டாள் அத்தை.

"ஏன்? இடமா கிடையாது? அவர்கள் எல்லோரும் படித்தவர்கள். கிளப்பு என்றும் மீட்டிங் என்றும் சினிமா என்றும் ஆயிரம் இடமிருக்கு அவாளுக்குப் போய்வர; புருஷாளுக்கு மேலாகவேன்னு அவா வெளியே போய் வரா?" என்றாள் விசாலம்.

"உத்தியோகம் பார்க்கிற பெண்களுக்கு வேறு வேலை இருக்கும். சாதாரணக் குடும்பத்துப் பொம்மனாட்டிக்குக் கூடவா அத்தனை காரியம் இருக்கும்?" என்றாள் அத்தை.

"உத்தியோகம் பண்றவா எப்படியோ எனக்குத் தெரியாது. சாதாரணப் பெண்ணுக்குத்தான் இத்தனை ஜோலி இருக்கு."

"சாவித்திரிகூட அப்படித்தானாக்கும்?" என்றாள் பாட்டி.

"அவள் கொஞ்சம் வித்தியாசந்தான். அவாத்திலே அவள் மாமியார், நாத்தனார் இரண்டு பெண்கள் இருக்கிறார்களே, அவர்களைப் பார்க்கவேண்டும். அடே அப்பா, கார் ஏறிக் கொண்டு வெளியே போகிறதும் வீட்டுக்கு வந்தால் போய் விட்டு வந்ததைப்பற்றிப் பேசுகிறதுந்தான் வேலை. அந்தந்த வேளைக்கு ஆகாரம்கூடத் தயாராக வச்சிருக்க வேண்டியிருக்கு. பரிசாரகன் இல்லாதபோனால் என்ன செய்வாளோ? ஒருத்தர் சமையலறைப் பக்கம் வரணுமே! கிடையாது. வயது வந்த பொம்மனாட்டியான சாவித்திரியின் மாமியார் இவ்விதம் இருக்கிறாளே! பாவம், ஆத்துக்காரப் பிராம்மணனை வாசலிலே உட்கார வைத்துவிட்டுச் சிறு பெண்போல் அலங்காரம் செய்து கொண்டு கிளம்பிவிடுகிறாள். சாவித்திரியின் சின்ன நாத்தனாரைச் சரோஜாவின் கல்யாணத்தில்பார்த்தேன். சாவித்திரியின் மாமியார் உள்ளுப் பக்கம் வரணுமே, 'ஊஹூம்; கிடையாது. எதுவும் வாசற்புறம் டிராயிங் ரூமாமே, அதில் சோபாவில் உட்கார்ந்து அதிகாரம் செய்வதோடு சரி."

"சாவித்திரியின் மாமியாருக்கு என்ன தெரியும். பெண்களா

வது கலாசாலையில் படித்தவர்கள். புருஷர்களுடைய தோரணை யில் இருக்கட்டும். இவள் நம்மைப்போலத்தானே. புதுசாப் பணக்காரியாகப் போயிட்ட பெருமையா?'' என்றாள் அத்தை.

''நன்னாச் சொன்னே! அவளுக்குத் தெரியறது, அவள் பெண்களுக்குக்கூடத் தெரியாது. அவள் பேசுகிறதும் நடந்து கொள்கிறதும் அப்படின்னா இருக்கு'' என்றாள் விசாலம்.

''அது சரி, இங்கேகூடப் பொம்மனாட்டிகள் அது மாதிரி தான் இருக்கா. பேர்களைச் சொல்லக்கூடாது! லேடீஸ் கிளப் புக்குப் போறதும், புருஷாளைப்போல் பந்து ஆடுகிறதும் சில பேர் செய்யத்தான் செய்யறா'' என்றாள் அத்தை.

''அந்த வம்பெல்லாம் நமக்கு எதுக்கு? அவாவாளுக்குச் சரியென்று தோன்றுகிற விதம் அவாவாள் இருந்துட்டுப் போகிறார்கள். சாவித்திரி சரியாகத்தான் இருப்பள். அவள் தங்கமான பெண்'' என்றாள் பாட்டி. பிறரைப்பற்றின வம்பு எதற்கு என்கிறது அவளுக்கு.

''அது சரிதானம்மா; நானும் வம்புக்காகச் சொல்லவில்லை. பட்டணத்தில் நான் பார்த்தமட்டில் பெண்களெல்லாம் வீட்டுப் பொறுப்பு இல்லாமல்தான் குடித்தனம் வகிக்கிறா. வீட்டுக்கு வீடு சமையலுக்கு ஆள் போட்டாய்விடுகிறது. உப்போ புளியோ அவன் பார்த்துப் போடுகிறதுதான். அதனால்தான் பிள்ளைகளுக்கு வீட்டுச் சாப்பாட்டுக்கும் ஹோட்டல் சாப்பாட் டிற்கும் வித்தியாசம் தோணாமல் இருக்கு. ஹோட்டல்காரனா வது வியாபாரம் ஆகணும் என்கிறதற்காகக் கொஞ்சம் பார்த்துப் பண்ணியிருப்பன். வீட்டில் அதுவும் இராது. அத னால்தான் பிள்ளைகளுக்கு அகத்தைவிட வெளியில் சாப்பிட ஆசை ஏற்படுகிறது'' என்று முடித்தாள் விசாலம்.

''நாம் அதற்குள் பிறத்தியாரைத் தூஷித்து வம்பு அளக்கிற தாக அம்மாவுக்குப் பயம். பேசினது போதும் என்று எச்சரிக் கிறா. ஊரில் நடக்கிறதைச் சொன்னால் அது ஒரு வம்பா?'' என்றாள் அத்தை.

''ஆமாம், யார் எப்படியிருந்தா நமக்கென்ன? அதையெல் லாம் பேசி வீண் பாவத்தைக் கட்டிக்கொள்வானேன். இந்தப்

2

போதுக்கும் சிவா, ராமான்னு நல்ல நாமாக்களைச் சொன்னாலும் போகிற வழிக்கு உண்டு'' என்றாள் பாட்டி.

அவளுக்கு வயதாகிவிட்டது. மறு உலக சிந்தனைகள் அடிக்கடி மனத்தைப் பாதிக்கத் தொடங்கியிருக்கின்றன. பிறரைப் பற்றின வம்பில் மனது செல்வது குறைந்து, போகிற வழிக்குப் புண்ணியம் தேடிக்கொள்ளத் துடித்தது.

ஜம்புநாதன் இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண் டிருந்தவன், 'சாவித்திரி இவர்கள் ஒத்துக்கொள்ளும் அளவிற்குப் பட்டணத்தில் மற்றப் பெண்களைவிட வித்தியாசமாக இருப்பாள் போல் இருக்கிறது' என்று தனக்குத்தானே நினைத்துக் கொண்டான்.

இந்தச் சமயத்தில் அவன் தந்தை, ''ஜம்புநாதா! அங்கே அவர்கள் மத்தியில் என்ன வம்பு பேசிக்கொண் டிருக்கிறாய்? பட்டணம் போகவேண்டியதற்கு என்ன செய்யவேண்டும்; அங்கே போன பிறகு எப்படி இருக்கவேண்டும்; இவைகளை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?'' என்று கூடத்தில் இருந்தவாறு அழைத்தார்.

ஜம்புநாதனும், ''இதோ வந்துவிட்டேன் அப்பா'' என்று ஆவலுடன் அவர் சொல்லப் போவதைக் கேட்கச் சென்றான். பட்டணம் போகிற சந்தோஷத்தில் யாருடைய எந்தப் புத்திமதியையும் கேட்க அவன் தயாராக இருக்கிறானல்லவா?

''முதல் முதலாக நீ இப்பொழுதுதான் பட்டணம் போகிறாய். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். உங்கம்மா, பாட்டி, அத்தை மூன்று பேருமாக உனக்கு ஒன்றும் தெரியாமல் அடித்திருக்கிறார்கள்'' என்று பேச்சை ஆரம்பித்தார் ராமசாமி ஐயர்.

''அவனுக்குப் புத்திமதி சொல்லணும்னு அதற்கு எங்களைப் பழிச்சால்தானா? வேளைக்குச் சரியாகச் சாப்பிட்டு, படிப்பில் கவனமாக இரு; படிப்பதற்கு உட்கார்ந்துவிட்டால் உனக்கு வேறொன்றும் நினைவில் இருக்காது. பக்கத்தில் நின்று ஆகாரம் செய்து வைக்க நாங்கள் யாரும் இல்லை. ஆகையினால் வயிற்றுக்குச் சாப்பிட மறந்துபோகாதே. அவ்விடத்தில் பால் ருசியாக இராது. அதற்காகப் பால் சாப்பிடாமல் இருப்ப

தென்பது கூடாது. படிக்கிற பிள்ளைகளுக்கு உஷ்ணம் அதிகரித்துவிடும். தூக்கம் விழிப்பதும் சரியில்லை. இதுகளையெல்லாம் சொல்வதைவிட்டு இந்தமாதிரி பழிச்சொல்லோடு ஆரம்பிக்கிறீர்களே!'' என்றுள் அவர் மனைவி விசாலம் மகனுடன் கூடவே வந்தவள்.

''நீங்கள் செய்திருக்கிற பழக்கத்தையும் சொல்லத்தானே வேண்டும். ஒருவர் கூட இருந்து சம்பந்தி மாப்பிள்ளைக்குச் செய்வதுபோல வேளை வேளையாகச் சாப்பாடு பண்ணி வைக்கிறீர்களே, இனிமேல் அது முடியாது. அவனுகச் சாப்பிட்டுக்கொள்ள வேண்டியது. அதைத்தான் சொல்லுகிறேன்.''

''என்னவோ, தப்பிதந்தான். பின்னுடி எப்பொழுதோ இதுமாதிரி தனியாக அனுப்ப வேண்டி வரும் என்பதற்காக முதலிலேயே வயிற்றுக்குக் கூடச் சரியாகப் பார்த்துப் போடாமல் குழந்தைகளை அநாதைபோல் வளர்க்க வேண்டும். இது தெரியாமல் போயிடுத்து. அது போகட்டும்; இப்பொழுது நீங்கள் அவனுக்குச் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்'' என்றுள் விசாலம்; எங்கே தங்களுடைய பரஸ்பர விவாதத்தில் முக்கியமாக மகனுக்குச் சொல்ல எண்ணியிருந்த அவருடைய புத்திமதிகள் சொல்லப்படாமல் விட்டுப் போய் விடுமோ என்கிற பயத்தில்.

''ஆமாம், கட்டிக்கொடுத்த சாதமும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும் எந்த மட்டும்? அவனவனுக்காகத் தெரிய வேண்டும். நம்முடைய சமாதானத்துக்கு நாம் ஏதோ சொல்லுகிறோம, அவ்வளவுதான்'' என்று அவள் கணவர் அலட்சியமாகச் சொல்லிப் பேச்சை ஆரம்பித்தார்.

''வெளியிலே போகும்போது மிகவும் ஜாக்கிரதையாகப் போகவேண்டும். பராக்குப் பார்த்தபடி போனுல் வண்டி காடியில் அகப்பட்டுக்கொண்டு பிராணனை விடவேண்டியதுதான். பஸ்கள் அதிகம். ஓடுகிற பஸ்ஸிலிருந்து பெரிய சாமர்த்தியமாக நினைத்துக்கொண்டு இறங்கி ஆளே தீர்ந்துபோகிருர்கள், சில மேதாவிகள். எலெக்ட்ரிக் ரயிலில் உஷாராகத்தான் ஏறி இறங்கவேண்டும். தவறி விழுந்து கைலாசம் போகக் கூடாது. பேப்பரில் இந்தப் பிரகஸ்பதிகளின் பிரதாபங்கள்

தான் பாதியும் வருகின்றன.''

இவ்விதம் அவர் சொல்லி வரும்பொழுதே விசாலத்திற்கு வயிற்றை என்னவோ செய்தது. பிள்ளைக்கு ஏதோ நேர்ந்து விட்டதுபோலவே வேதனை தோன்றிற்று: இந்த ஆபத்துக்களை அவள் நினைத்துப் பார்க்கவே யில்லையே. சாப்பாட்டைப் பற்றியே பெரியதாக எண்ணிக்கொண்டு இருக்கிறுளே. 'பட்டணத்தில் வண்டி, காடிகளில் அகப்பட்டுச் சாகிறதல்லவா அதிகம். வெளியிலே போனவர்கள் வீடு வந்து சேருகிற வரைக்கும் நிம்மதி இருக்காதே. பட்டணத்திற்கு வெளியில் தாம்பரத்தில்தான் கலாசாலை இருக்கிறது. பட்டணம் வருவ தற்கு எலெக்ட்ரிக் ரயிலில்தான் வந்துபோக வேண்டும். அதில் ஆபத்து வராமல் இருக்க வேண்டுமே நமது மகனுக்கு. சாவித் ரிதி யகத்தில் இருக்கும்படி ஏற்பாடு செய்யாததும் நல்லது தான். அவளகத்தில் இருந்தால் அன்ருடம் அல்லவா ரயிலில் போய்வந்தாக வேண்டும்.'

இவ்விதம் நினைக்கவுமே பிள்ளைக்கு வரவிருந்த விபத்தை நினைத்து அவள் உடல் குலுங்கிற்று. 'ஒவ்வொரு சனி, ஞாயிறிலும் சாவித்திரி யகத்திற்குத் தவருமல் சென்று வா' என்று கண்டிப்பாகச் சொல்ல நினைத்த அவள் இப்பொழுது, 'போகவே வேண்டாம்' என்று கூட நிச்சயிக்கத் தொடங்கி ஞள். நம்மால் கூடியமட்டும் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத் திற்குப் போகாதிருந்து ஆபத்துக்களைத் தடுத்துக்கொள்வது நல்லதல்லவா? ஆயிரம் பிள்ளைகள் உணவு கொள்ளும் ஹாஸ்டலில் இவனுக்கு மட்டும் வாய்க்கு வழங்காமல் என்ன ஆகிவிடப்போகிறது! இங்கே நம் வீட்டுச் சாப்பாடு எந்த இடத்தில்தான் கிடைக்கும்? ஆத்திலேயே கடைந்தெடுத்த வெண்ணெயும் பாலும் தயிரும், அவர்களே ருசி ருசியாகச் சமைத்த உணவும், இலையைப் பார்த்துப் பரிமாறி, வயிறு நிரம்ப உணவு செய்விப்பதும் எந்த இடத்தில்தான் இருக்கும். சாவித்திரி யகத்தில்கூட இந்தச் சௌகரியங்கள் ஏது? என் னவோ பரிசாரகன் போடுகிறதுதானே. சாப்பாடு பண்ணி வைக்கிறது என்கிற பழக்கம் அவர்கள் வீட்டிலுந்தான் கிடை யாது.

இவ்விதம் அவள் எண்ணமிட்டுக்கொண் டிருக்கும் பொழுதே, "ஆமாம், சினிமா டிராமாவென்று கிளம்பிக் கண்ட காலாடிகளுடன் சேர்ந்து ஊர் சுற்றக் கூடாது. பெரியவர்கள் கண் பார்வையில் இல்லையென்பதற்காக ஜமா சேர்ந்து கொண்டு கெட்ட பழக்கங்களை வரவழைத்துக்கொள்ளக் கூடாது. சுருட்டுக் குடிப்பதும் இன்னொன்றும் எனக்குச் சிறிதும் பிடிக்காது. நம்ம குலம் கோத்திரத்தில் இதுவரையிலும் யாரும் இவைகளைச் செய்ததில்லை" என்றார் அவர் மேலும் தொடர்ந்து.

"என்னப்பா இது? எனக்கு இவைகளை யெல்லாம் நீங்கள் சொல்லவேண்டுமா? இதுவரையும் நான் அதுமாதிரி ஏதாவது செய்திருக்கிறேனா?" என்றான் ஜம்புநாதன், தந்தையின் பேச்சைத் தடுத்துக்கொண்டு. அவன் ஒழுங்கான முறையில் நடந்து வரும்பொழுது அவனிடம் அவன் தந்தை இதுமாதிரி கூறலாமா என்கிறது அவனுக்கு.

'ஆமாம், அவன் எவ்வளவு நேர்மையாக இருக்கிறான். ஊரிலுள்ள மற்றப் பிள்ளைகளைப்போலவா கெட்டலைகிறான்? நமது பிள்ளை பத்தரை மாத்துத் தங்கம்; அவனுக்கு இது மாதிரி உபதேசங்கள் எதற்கு?' என்று நினைத்தாள் விசாலம்.

"அது சரிதான்! இங்கே உன்னைக் கண்ணிற்குள் வைத்து இமையால் மூடியிருக்கிறது. கூண்டிற்குள் குஞ்சை வைத்து இரை தேடிக் கொணர்ந்து கொடுக்கிறதே குருவி, அதுபோல் செய்தாகிறது. வேளை வேளையாகப் பார்த்து, ஆகாரம் பண்ணி வைப்பதோடில்லாமல், நீ போகிற இடம் வருகிற இடம் இவைகளைக் கவனித்து, சரியான சகாக்களையும் சேர்த்துக் கொடுத்து இத்தனையும் பண்ணிக்கொண்டு வருகிறது. அங்கே போனால் இவைகளையெல்லாம் செய்கிற வர்கள் யார்? நீயாக உன் சொந்தப் புத்தியைக் கொண்டு ஆள் தெரிந்து பழகி, நல்லது தெரிந்து நடந்துகொள்ள வேண்டும். கெட்ட சகவாசங்கள் ஏற்பட்டுவிட்டால் அப்புறம் எத்தனை நாளைய நல்ல பழக்கமும் நிமிஷமாகப் பறந்து போய் விடும். கெடுக்கிறதற்கு என்றே காத்துக்கொண் டிருப்பான்கள்; ஊரில் போக்கிரிகள். கவனித்துக்கொள்ளப் பெரியவர்கள்

கிட்டத்தில் இல்லையென்று தெரிந்தால் உடனே ஒரு கை பார்ப்பார்கள்'' என்றார் அவன் தந்தை.

'ஆமாம், ஆமாம், வாஸ்தவம். அவர் சொல்வது ரொம்பவும் சரி. கெட்டலைகிற தத்தாரிகளுக்குத் தாங்கள் அலைகிறது போருது; பிறத்தியாரையும் கெடுப்பதில்தான் திருப்தி. ஐயோ! அதுமாதிரி நம்ம பிள்ளையைக் கெடுத்து விட்டான்களானல்?' அவள் அருமையாகப் பெற்று, உயர்வாக வளர்த்து, பாடுபட்டதெல்லாம் என்னவாகிறது? 'என்ன படிப்பு வேண்டிக்கிடக்கு; இத்தனை ஆபத்துக்கள் வர இருக்கும்பொழுது. பிள்ளை மனம் மாறித் தோணினபடி நடக்க ஆரம்பித்துவிட்டால், அப்புறம் எனக்கு வாழ்க்கையில் என்ன இருக்கிறது! போதும், பாஸ் செய்திருக்கிற பரீக்ஷை போதுமே. இவர் உத்தியோகத்தை விட்டு, நிலத்தை வைத்துக்கொண்டு சுகமாக இல்லையா? இவனும் அப்படி இருந்துவிட்டுப் போகட்டுமே; அவருக்கு இருப்பது அவனுக்கும் இருக்கு. அண்ணு தம்பியா, பாகம் பிரித்துக் கொடுக்க வேணுமா? சொத்துக் குறைந்து போகப் போகிறதா?' இவ்விதம் நினைக்கத் தொடங்கி விட்டாள் விசாலம். அதன்படி வார்த்தைகளும் அவளுக்கு வரத் தொடங்கின.

''இவ்வளவு சொல்லிக்கொண்டு அவனை எதற்காகப் பட்டணம் அனுப்பவேண்டும்? இங்குள்ள படிப்புப் போறுமே. வீட்டோடு வேணும்னு அவன்பாட்டுக்கு இருக்கட்டுமே; சம்பாதித்துத்தான் ஆகணுமா? நம்முடையதெல்லாம் அவனுக்குத் தானே'' என்று ஆரம்பித்தாள்.

''போடீ; உன் யோசனைகளும் நீயும். உன் எதிரில் வாய் திறக்கக்கூடாது. உன் மூளை தனியாக வேலை செய்யக் கிளம்பி விடும். அவனுக்கு ஜாக்கிரதைக்காகச் சொல்ல வந்தால், நீ நிஜமாகவே அவ்வளவும் வந்துவிட்டதாகக் கற்பனை பண்ணிக் கொண்டு விடுகிறாய்'' என்றார் ராமசாமி ஐயர்.

''இல்லை; நீங்கள்தான் சொல்லுவீர்களே; உத்தியோகம் பண்ணிச் சம்பாதிப்பதைக் காட்டிலும் வீட்டோடு இருந்து, நிலத்தைக் கவனித்தாலே வேண பணம் மிச்சமென்று. அதும்படிதான் அவன் இருக்கட்டுமே'' என்றாள் விசாலம்.

அவள் அவ்விதம் சொல்வதைக் கேட்கும்பொழுது ஜம்பு நாதனுக்கு எங்கே இந்த யோசனை தந்தைக்கும் உகந்ததாகப் பட்டுவிடுமோ என்று கவலை ஏற்பட்டது. ஏன்? அவர் சதா சொல்லுகிற வார்த்தைகள் அல்லவா அவைகள். சிறிது நேரத்திற்குள் அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று அவன் தவித்துப்போனான்.

"போடீ, அசடே! பணத்தைப்பற்றியா பெரிதாக இப்பொழுது நினைக்கிறது? அதில்லை. அவன் பி. எஸ்ஸி. பாஸ் செய்துவிட்டு, நமது நாட்டில் தொழில்முறைகளை விருத்திசெய்ய வேண்டுமென்பதல்லவா என் நினைப்பு. அதற்காக அவன் சீமை சென்று படிக்க வேண்டுமென்றாலும் நான் அனுப்பத் தயார். இந்தச் சென்னை போவதற்கே நீ இந்தப் பாடு படுகிறாய். உன் எதிரில் பேசுவதே உசிதமில்லை" என்றார் ராமசாமி ஐயர், மனைவியின் கவலைகளைக் கேட்கப் பிடிக்காதவராக.

உண்மையில் அவள் எதிரில் பேசக்கூடாது என்று பேச்சையும் நிறுத்திக்கொண்டார். மகனைப் பெண் குழந்தையைப்போல வீட்டோடு வைத்துக்கொண்டு போற்றி வளர்த்தாய்விட்டது. இப்பொழுது அவனை வெளியில் அனுப்புவது கவலையாகப் படுகிறது அவளுக்கு. அவருக்கு மட்டும் கவலையில்லையா? இருந்தது. ஆனாலும், 'ஆண்பிள்ளையாகப் பிறந்தவனுக்கு அவ்விதம் பார்ப்பது முடியுமா?' என்றுதான் இருந்தார்.

தந்தையின் பேச்சைக் கேட்க ஜம்புநாதனுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. 'தன் வருங்காலத்தைப்பற்றித் தந்தை இவ்வளவு தூரம் நினைத்திருக்கிறாரா? அவருக்கு ஆசைகள் இல்லை. உள்ளத்தில் திருப்தி அதிகம். தன்னையும் ஏதோ படித்துவிட்டு வீட்டோடு இருக்கட்டும் என்றுதான் நினைப்பார்' என்று இதுகாறும் நினைத்துவந்தான். இப்பொழுது அவன் சம்பந்தமாக அவர் கொண்டிருக்கும் எண்ணங்கள் வெளிவரவே அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒவ்வொருவர் எங்கு எங்கோ சென்று என்ன என்னவோ படித்துப் பிரசித்தி பெறுவதை அவன் விசேஷமாக

நினைத்து வந்திருக்கிறான். ஒரு ஜில்லா கலெக்டரின் பதவியைக் காட்டிலும் அவனை அந்தப் பதவியை அடையச்செய்த அவன் மேதைதான் அவனைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. அவ்விதமே ஒவ்வொரு துறையிலும் விசேஷ புத்திமான்களைக் கண்டுதான் அவனுக்கு மோகம். ஸயன்ஸ் அவனுக்கு மிகவும் பிடித்த படிப்பு. அதில் பிரசித்தி அடைந்திருப்பவர்களைப்போல் தானும் ஆகவேண்டுமென்றுதான் அவன் விரும்பினான்.

இப்பொழுது தந்தையின் எண்ணங்கள் தெரியவும் தனது வருங்காலத்தைப்பற்றி என்ன என்னவோ மனக்கோட்டை களைத்தானாகவே அவனது உள்ளம் எழுப்பத் தொடங்கிற்று. பசுபதியிடம் அவைகளையெல்லாம் வருணித்துச் சொல்ல ஆவல்கொண்டான். உச்சிப்பிள்ளையாரைத் தரிசிக்க இருவரும் செல்வதாக இருந்ததனாலேயே பசுபதியைத் தேடி அவன் வீட்டிற்கு உடனே செல்லாமல் நின்றுகொண்டான்.

## 4

ஜம்புநாதன் அவனது அத்தை புருஷரான அத்திம் பேரைத் தேடிக்கொண்டு வீட்டின் பின்புறத்துத் தோட்டத்தை நோக்கிச்சென்றான். அவனுக்கு அவர் எதற்கு என்றால் அவன் சாயங்காலம் கோவிலுக்குப் போவதாக இருக்கிறான். அதற்குத் தேங்காய்கள் வேண்டும். அத்திம்பேரிடம் மனுப் போட்டு உத்தரவு பெற்றாலன்றி மரத்திலுள்ள தேங்காய்களைப் பறித்துக் கொடுக்கமாட்டான் ஆள்காரன். தோட்டத்திலுள்ள புல்லைப் பிடுங்கவும் அந்த வீட்டில் வேறு ஒருவருக்கும் அதிகாரம் இல்லை. ராமசாமி ஐயரின் நிலத்தில் உழைத்துப் பாடுபட அத்திம்பேர் ராமகிருஷ்ணையருக்கு எவ்வளவு தனிச் சுதந்தரம் இருந்ததோ, அதே சுதந்தரந்தான் அந்த வீட்டுத் தோட்டத் திலும் அவருக்கு இருந்தது. நாற்று நடவு என்று அவர் கிரா மத்துக்குப் போகாத நாட்களிலெல்லாம் அந்தத் தோட்டத்தில் தான் ஏதாவது பயிர் வேலையில் ஈடுபட்டிருப்பார். சொல்ப மாகக் கறிகாய் வகைகள் போட்டு அவைகளைப் பிஞ்சாகப் பறித் துச் சமையலுக்கு உதவும்படி செய்வதில் அவருக்கு ஒருவகைத்

திருப்தி. மத்தியான்னம் 12 மணி வரையிலும் ஆட்களை ஏவிக்கொண்டு ஏற்றம் இறைத்துத் தண்ணீர் பாய்ச்சுவது, புல் பூண்டுகளைக் களைந்து செடிகளுக்கு எரு இடுவது, இது போன்ற வேலைகளில் இருந்துவிட்டு, பிறகுதான் ஸ்நானம் செய்து சாப்பிட வருவார்.

வீட்டில் பெண்கள் அவருக்காகக் காத்திருந்து அலுத்துப் போவார்கள். "கிழவி பிராணன் பசியால் துடித்துப் போகிறது; இப்படிச் செய்தால் என்ன பண்ணுகிறது?" என்று அத்தை ஜானகி அவரைக் கடிந்துகொள்வதற்கு, "அம்மாவைச் சாப்பிடச் சொல்லு; எனக்காக யாரும் காத்திருக்கவேண்டாம்" என்றுதான் பதில் கூறுவாரே தவிர வயதான தமது மாமியார் பட்டினி கிடக்கிறாளே என்பதற்காகவும் அவர் செடி கொடிகளின் வேலையை விட்டு அவசரப்பட்டு வந்து விடமாட்டார்,

பச்சைப் பயிர் வேலையில் அவருக்கு அத்தனை பிரியம். காவேரியிலிருந்து வெட்டப்பட்டுக் குறுகலாக, நீர் நிறைந்து ஓடிக்கொண் டிருக்கும் வாய்க்கால் வரையும் நீண்டிருந்த அந்தத் தோட்டத்தில் மா, பலா, தென்னையென்று பல மரங்களும், சிறு வாழைத் தோட்டமும், இவைகளுக்கு நீர் இறைத்து ஜலம் பாய்ச்சுவதற்கென்றே ஏற்றம் போட்ட ஒரு சிறு கிணறும் இருந்தன. அதைச் சுற்றி மல்லிகை, முல்லை, ரோஜா என்று சில வாசனை மலர்ச் செடிகளும் இருந்தன. அவைகளில் மலர்ந்திருக்கும் மலர்களையும் தம் கைகளால் தாமேபறித்து மைத்துனனுடைய பெண் குழந்தைகளிடம் கொடுத்து, அவர்கள் அவைகளை அலங்காரமாகத் தலையில் சூடிக்கொள்வதைப் பார்ப்பதில் அவருக்கு அளவற்ற ஆசை. ஆனால் அதற்காகவும் அவர்களாக அந்தப் புஷ்பங்களைக் கிள்ள விடமாட்டார். அவர்கள் தெரியாத்தனத்தில் மொட்டுகளைத் திருகி, கிளைகளை ஒடித்து, ஏதாவது செய்துவிட்டால், அந்த இளஞ் செடிகளைக் காலினால் கண்டபடி மிதித்துவிட்டால், அவைகள் வாடி வதங்கிவிடாவா?

அவருக்கு அந்தப் பெண் குழந்தைகளிடம் அன்பென்றாலும், அதற்கும் மேலாக அந்தச் சிறு செடிகளிடம் பிரேமை

இருந்தது. அத்திம்பேரின் உத்தரவின்றி ஜம்புநாதனின் கடைசித் தங்கை சுந்தரியும், தனது குழந்தை உள்ளத்தின் ஆசை மிகுதியால், ஒரு பூவைக்கூடத் தானுகப் பறித்துவிட மாட்டாள். அப்படி இருக்கும்பொழுது ஜம்புநாதன் மட்டும் தேங்காய்கள் வேண்டுமென்பதற்காக அத்திம்பேரைக் கேட்காமல் உத்தரவிட்டுவிடுவானு?

அவன் வந்தபொழுது அவர் ரோஜாச் செடி ஒன்றின்கீழ் உட்கார்ந்து, அதன் நீண்ட கிளை யொன்றை வளைத்துப் பூமியோடு சேர்த்து, மண் அணைத்துப் பதியம் போட்டுக்கொண்டிருந்தார்.

"என்ன பண்ணிக்கொண் டிருக்கிறீர்கள் அத்திம்பேர்?" என்று கேட்ட வண்ணம் ஜம்புநாதன் அவர் பக்கத்தில் வந்து நின்றுன்.

"ரோஜாச் செடிகள் அதிகமில்லை; கொஞ்சம் பதியம் போட்டு விருத்திபண்ணலாமென்று பார்க்கிறேன்" என்றுர் அவர், தம் வேலையிலிருந்து தலை நிமிராமலேயே.

அவரிடம் பேச்சுக் கொடுத்து அவர் தன்னைக் கவனிக்கும்படி செய்ய எண்ணி ஜம்புநாதன், "ரோஜாவுக்கு இது மாதிரியா பதியன் போடுவார்கள்?" என்றுன்.

"முற்றின கிளைகளைச் சாண்சாணுக ஒடித்து எருப்போட்டுப் புதம் பண்ணின நிலத்தில் சேர்ந்தாற்போல் நட்டும் செய்வதுண்டு. ஆனுல் அதைக் காட்டிலும் இது மாதிரி செய்வது தான் நிச்சயமாகப் பலிக்கும்" என்றுர் அவர், தாவர சம்பந்தமான தம் அறிவை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைத்த திருப்தியோடு. மேலும் தொடர்ந்து, "இப்படிச் செய்வதில் கிளை சாகாமல் உயிரோடிக்கொண் டிருப்பதால் பூமியோடு சேரும் இடத்தில் தானுகவே வெகு சீக்கிரத்தில் வேர் விட்டுக் கொண்டுவிடும். பிறகு தனிச் செடி துளிர்விடக் கேட்பானேன். ஒடித்து நட்ட கிளைகளுக்கு அப்படியில்லை. மண்ணின் உரத்தில் புதிதாக உயிர் பெற்றுத் தாமாக வேர் பிடித்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் மட்டும் எல்லாப் பதியன்களும் பிழைத்துக்கொண்டுவிடும் என்று சொல்ல முடியாது. இவைகளும் நம்மைப்போல்தான். பெரியவர்கள் இருந்து வளர்க்கும்

பிள்ளைகள் சிரமமில்லாமல் முன்னுக்கு வருகிறார்கள். அது இல்லையென்றால் கஷ்டப்படத்தானே வேண்டியிருக்கிறது'' என்றார்.

''நீங்கள் வெகு எளிதாக இந்தச் செடிகளிலிருந்து பெரிய தத்துவம் ஒன்றைக் கூறிவிட்டீர்கள்!'' என்றான் ஜம்புநாதன் ஒருவகைப் புகழ்ச்சியாக.

''நமது பெரியவர்கள் இயற்கையிலிருந்துதானே பெரிய படிப்பினைகளையெல்லாம் கற்று வந்திருக்கிறார்கள். இந்த ரோஜாச் செடியைத்தான் பாரேன். அதற்கு நாம் செய்கிற செய்நேர்த்திக்காக அது உடனே தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எவ்வளவு அழகாகப் பூத்து மலர்ந்திருக்கிறது. ஒன்று இரண்டா, ஒரு செடியில் எத்தனை மலர்கள் பார்த்தாயா? அழகையும் வாசனையையும் அள்ளிக் கொடுத்து நம்மை ஒரே அடியில் மகிழ்விக்கிறது. செய்ந்நன்றியைக் காண்பிப்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா?'' என்றார், செடியின் புஷ்பிக்கும் தன்மைக்குப் பெரிய பொருள் கொடுத்துக்கொண்டு.

வாஸ்தவத்தில் அவர் சுட்டிக் காட்டின ரோஜாச் செடியில் அவ்விதந்தான் கிண்ணங் கிண்ணமாக இதழ் விரித்துக் கண்ணைக் கவரும்படியான மேன்மையுடன் மலர்கள் மலர்ந்திருந்தன. ஒன்றுபோல் ஒன்று, லேசான சிவப்பு நிறத்திலோ அளவிலோ வித்தியாசம் இன்றிச் செடி நிறைய மலர்கள் காணப்பட்டன. சிறிதும் பெரிதுமான மொட்டுகளுக்கும் அதில் குறைவு இருக்கவில்லை. நாளையும் மறுநாளும் பின்னும் இது மாதிரிப் பூக்களை அது புஷ்பிக்கப் போகிறதல்லவா? அதைத்தான் அது தெரிவித்துக்கொண்டு பல அளவில் மொட்டுகளுடன் நிறைந்து நின்றது.

''அகண்ட காவேரியில் பிரவாகம் வந்துவிட்டது. அந்தச் சந்தோஷந்தான் இந்தச் செடிகளுக்கு. காற்றுக் கொண்டுவரும் காவேரி நீர்த்துளிகள் தங்கள்மேல் படப் பின்னும் புதுத் தெம்புகொண்டு நிமிர்ந்து நிற்கின்றன, இவைகள். மெல்லிய புஷ்ப இதழ்கள் கனம் தாங்காது துவண்டு விடாதபடி எவ்வளவு லேசாக ஜலத்துளிகளைக் காற்று, தூவிச் செல்கிறது

பார். இந்த உதவியை நம்மால் அதற்குச் செய்ய முடியுமா? இவ்வளவு லேசாக மேலே படுவது தெரியாமல் தண்ணீர் தெளிப்பது நம்மால் சாத்தியமா? அது தெரிந்துதான் அவைகள் அத்தனை குதூகலமாகக் காற்றை வரவேற்று நிமிர்ந்து நிற்கின்றன" என்றார் அவர், அந்தச் செடியின் தத்துவத்தை வருணித்துக்கொண்டே.

இப்பொழுது அவர் செடியின் கீழிருந்து வேலை முடிந்து எழுந்து செடியைப் பார்த்துக்கொண்டு நின்றார். எப்பொழுதும் அவைகள் மத்தியிலேயே இருந்து அவைகளைக் கவனித்துக் கொண்டிருந்ததால், தம் சொந்தக் குழந்தைகளின் தன்மை முழுவதும் ஒரு தந்தைக்குத் தெரிவதுபோல அந்தச் செடிகளின் தன்மை முழுவதும் அவருக்குத் தெரிந்திருந்தது.

காலை 9 மணி நேரமாக இருந்தும் வெயில் ஏறுவது தெரியாமல் செய்துகொண் டிருந்தது, அந்த நீர் வாடையுடன் கூடின குளிர்ந்த காற்று. ஜம்புநாதனும் அந்தக் காற்றின் குளிர்ச்சியையும், அம் மலர்களின் அழகையும் ஒருங்கே அநுபவித்து நின்றான். அவர் சுட்டிக் காட்டி எடுத்துச் சொன்ன பிறகு அவனுக்கும் அவைகளின் விசேஷம் பெரிதாகப் பட்டது. அந்த அநுபவத்திலிருந்து விடுபட்டு மறுபடியும், தான் வந்த காரியத்தைச் சொல்லத் தொடங்குமுன் அவன் கடைசித் தங்கை சுந்தரி அவ்விடம் ஓடோடியும் வந்தாள்.

"அத்திம்பேர், பூவை என்னிடந்தான் கொடுக்க வேண்டும். ஸ்ரீமதியிடம் கொடுக்கக்கூடாது. அவள் நேற்றுக் கொண்டுபோனாள். இன்னிக்கி நான்தான் எடுத்துப் போவேன்" என்றாள், இறைக்க இறைக்க மூச்சு விட்டுக் கொண்டு.

"ஏதுக்கடி இந்த ஓட்டம்? உங்கள் இரண்டு பேருக்குள் ளேயும் சண்டையா?" என்று கேட்டான் ஜம்புநாதன். அவனுக்குச் சற்றுப் பின்னால் வந்து நிற்கும் அவனது இன்னொரு தங்கை ஸ்ரீமதியைப் பார்த்துவிட்டு.

"என்ன அண்ணா, இவளே நித்தியம் பூவை வாங்கிண்டு போயிடப் பார்க்கிறாள். எனக்கு விடமாட்டேன் என்கிறாள்" என்றாள் சுந்தரி தன் கட்சி நியாயம் என்கிற தெம்போடு.

"அவளிடம் நான் கொடுப்பேனு? இன்றைக்கு நீதான் கொண்டுபோகப் போகிருய். என்றைக்கு யாருடைய முறை என்பது எனக்குத் தெரியாதா? என்னை ஏமாற்ற முடியுமா?" என்ருர், சுந்தரியைச் சமாதானப்படுத்திக்கொண்டு ராமகிருஷ்ணையர்.

"பூவை எடுத்துப் போவது யாராக இருந்தால் என்ன? அவைகளைத் தொடுப்பது யார்?" என்று கேட்டான் ஜம்புநாதன்.

"அகிலாண்ட அக்காதான் தொடுக்கணும். எங்களுக்கு நன்ருக வராது. பூ கசங்கிப் போகும்" என்ருள் ஸ்ரீமதி.

"பூவை எடுக்கிறது அத்திம்பேர், அதைத் தொடுப்பது அகிலாண்டம்; அப்புறம் இதை உள்ளே கொண்டு போவதற்காக உங்கள் இரண்டு பேருக்கும் இத்தனை போட்டி; அழகு தான்! இதை யார் செய்தால் என்ன?" என்ருன் ஜம்புநாதன் பரிகாசமாக.

"நான் பறிக்கமாட்டேனுக்கும்! அத்திம்பேர்தான் என்னைப் பூக் கிட்டவே போகவிடமாட்டேன் என்கிரு. இதைப் பறிக் கட்டுமா, அத்திம்பேர்?" என்று சுந்தரி அவளுக்கு எட்டுகிற உயரத்தில் இருந்த ரோஜா மலர் ஒன்றை ஆவலாய்க் கிள்ளச் சென்ருள்.

"ஊஹூம், தொடப்படாது! குழந்தைகள் தொட்டால் செடிக்கு வலிக்கும்; தெரியுமா? தள்ளிக்கோ!" என்று எங்கே தான் தடுக்கும் முன் அவள் பறித்துவிடுவாளோ என்கிற பதற்றத்துடன் கூறிஞர் ராமகிருஷ்ணையர்.

"பூவை முன்னுடியே பறித்திருக்க வேண்டும். பதியன் போடுவதில் இருந்துவிட்டேன்; விட்டுப்போய்விட்டது" என்று தாமே சொல்லிக்கொண்டு ஒரு குருத்து வாழைஇலையைக் கிள்ளிக் கொணர்ந்து, ஒவ்வொரு புஷ்பமாகக் காம்போடு கிள்ளி எடுத்து அதில் வைத்துச் சுந்தரியிடம் கொடுத்தார்.

"பத்திரமாக இரண்டு கைகளையும் இப்படிப் பிடிச்சுக்கோ" என்று லேசாக அவைகள் கசங்காமல் கைகளில் வைத்துக் கொள்வது எப்படி என்பதையும் அவளுக்குக் காண்பித்துக் கொடுத்து அனுப்பிஞர்.

சாதாரண நடை நடந்தாலும் கைகளின் அசைவில் அவைகள் நசுங்குண்டுவிடுமோ என்கிற பயத்தில் அடிமேல் அடி வைத்து நடந்து சென்றாள், அந்தக் குழந்தை. பூவின் அருமை அறிந்த அவளுடைய அந்தச் செய்கையைப் பார்த்து அத்திம்பேர் உதடுகளில் புன்னகை தோன்றிற்று. ஜம்புநாதனும் அவளுடைய ஜாக்கிரதைக்காக லேசாகச் சிரித்துக்கொண்டான். ஸ்ரீமதியும் தங்கையைத் தொடர்ந்து உள்ளே போன பிறகு ஜம்புநாதன் பார்வை அவர்களிடமிருந்து திரும்பி ரோஜாச் செடியில் விழுந்தது. சற்று முன் இருந்த அதன் சோபைக்கும் இப்பொழுது அது இருப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்! அழகாய் அணிந்திருந்த அணிகலன்கள் யாவற்றையும் இழந்து நிற்கும் பெண்ணைப்போல் காட்சி அளித்தது அந்தச் செடி!

"செடி வெறிச்சென்று போயிடுத்தே!" என்று அங்கலாய்த்தான் ஜம்புநாதன். "நீங்கள் பூக்களைப் பறித்திருக்கவே கூடாது அத்திம்பேர்! செடியிலேயே விட்டு வைத்திருக்க வேண்டும்" என்றான்.

"அப்பொழுது மட்டும் அவைகள் அப்படியே இருக்குமா? வாடி உதிர்ந்து போகாவா!" என்றார் ராமகிருஷ்ணயர்.

"உதிர்கிறவரைக்குமாவது இருக்கலாமே, பார்க்க அழகாக இருக்குமே!"

"குழந்தைகள் அவைகளைச் சேர்த்துத் தொடுத்துத் தலையில் வைத்துக்கொண்டால், அப்பொழுது பார், இன்னும் அழகாயிருக்கும். பூவிற்குப் பிறரையும் அழகு செய்துகொண்டு தானும் அழகு குறையாமல் சோபிக்கும் தன்மை உண்டு."

"இருந்தாலும் செடிக்குச் சோபை போயிடுத்து!" என்று வருந்தினான் ஜம்புநாதன்.

"ஒருகாலும் போகாது, நாளைக்குப் பார். இன்னும் நிறையப் பூப் பூத்துப் பின்னும் அலங்காரமாக நிற்கும். நாம் பறிக்கப் பறிக்கத்தான் பூக்கள் விருத்தியாகும்; நாம் அவைகளை ஆண்டு அநுபவிப்பதால்தான் அவைகளுக்கு விசேஷத் திருப்தியோ என்றுகூடத் தோன்றும், இந்தச் செடிகள் புஷ்பிக்கிற வேகத்தைப் பார்த்தால்! பயிர்களே எல்லாம் இப்படித்

தான். பூத்துக் காய்த்து நமக்குக் கொடுக்கத்தான் காத்திருக்கிற மாதிரி இருக்கும்'' என்றார் அவர்.

'மனிதன் ஒருவன்தான் சுயநலமாக, தனக்காகவே வாழ்க்கை நடத்துகிறவன். உலகத்தில் மற்றவைகள் எல்லாம் பிறர் பொருட்டே வாழ்கின்றன' என்கிற தத்துவத்தை எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது அவர் சொன்னவைகள்.

''அத்திம்பேர், நான் வந்த காரியத்தை விட்டு வேறு ஏதோ பேசுகிறேனே'' என்றான் ஜம்புநாதன்.

''எதற்கு வந்தாய்?''

''உச்சிப் பிள்ளையாருக்கு உடைக்கத் தேங்காய் வேண்டும். இன்று சாயங்காலமாகப் பிள்ளையாரைத் தரிசனம் செய்து வரலாம் என்று இருக்கிறேன்.''

''ஏதப்பா, திடீரென்று பிள்ளையார் நினைவு வந்தது உனக்கு? அதிலும் தேங்காய் பழ சகிதமாய்ப் போக வேண்டுமென்று. சிநேகிதர்களோடு கையை வீசிக்கொண்டு சும்மா வேண்டுமானால் போவாயே தவிர, அர்ச்சனை பண்ணமாட்டாயே. 'தேங்காயைத் தூக்குகிறது யார் என்பாயே?'' என்றார் ராமகிருஷ்ணயர், இந்த மாறுதலுக்குக் காரணம் என்ன என்கிற அதிசயத்தோடு.

''அதெல்லாம் ஊரிலேயே இருக்கும்பொழுது. இப்பொழுது நான் பட்டணம் போகப்போகிறேன்; அதனால்தான்'' என்றான் ஜம்புநாதன்.

''கலாசாலையில் இடம் கிடைத்துவிட்டதா? நீ சொல்லவே இல்லையே!''

''இன்று காலையில்தான் பி. எஸ்ஸியில் அட்மிஷன் கிடைத்துக் கார்டு வந்தது. இன்னும் இரண்டு மூன்று நாளில் கிளம்பவேண்டும்'' என்றான் ஜம்புநாதன்.

''உங்க அப்பாவுக்குத்தான் இந்த விஞ்ஞானப் படிப்பில் ஒரு மோகம் ஏற்பட்டிருக்கிறது. விஞ்ஞானத்தினால் உலகுக்கு நன்மை இருக்கிறதாக எனக்குத் தோன்றவில்லை. எல்லாம் இந்த மேல்நாட்டவர்களைப் பார்த்துக்கொண்டு நாமும் கெட்டுப் போகிற காரியந்தான்'' என்றார்.

''அப்படிச் சொல்லலாமா அத்திம்பேர்! விஞ்ஞானத்

திறல் மனிதன் எவ்வளவெல்லாம் முன்னேறியிருக்கிறன்?"

"என்ன முன்னேற்றம் வேண்டியிருக்கு? அவ்வளவுக்கு அவ்வளவு பின்னுல் கெடுதல்தான் ஏற்படும். சரி, உன்னுேடு இப்பொழுது பேசி என்ன? உனக்குத் தேங்காய்கள் தானே வேண்டும். அதற்கென்ன, வேண்டியது இருக்கு. ஒன்றுக்குப் பத்தாகக் கொண்டுபோய் எல்லாக் கோவில்களுக்கும் உடைத்துவிட்டு வா. இந்த அகிலாண்டேசுவரி அபார சக்தியுள்ளவள். அவளையும் நன்ருக வேண்டிக்கொள்" என்ருர் ராமகிருஷ்ணையர். வேலைக்காரனிடம் ஒரு கூடை தேங்காய் தரவும் உத்தரவு இட்டுவிட்டார்.

அவரிடம் சமாதானமாக, "பிள்ளையார் கோவிலுக்கு மட்டும் இன்று போய்விட்டு வந்துவிடுகிறேன். மற்றவைகளை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லித் தப்பித்துக்கொள்வது பெரும் பாடாகிவிட்டது.

"ஒரே நாளில் எல்லாக் கோவில்களுக்கும் சென்று வருவதென்ருல் நேரமாகிவிடும். ஆத்தில் பாட்டி, அத்தை இவர்கள் விசாரப்பட்டுப் போவார்கள்" என்று எடுத்துச் சொன்ன பிறகுதான் அவர் ஒருவாறு ஒப்புக்கொண்டார்.

கூடை நிறையத் தேங்காய் பழங்களுடன் ஆள் சகிதம் கிளம்புவதிலிருந்து அவனும் தப்பித்துக்கொண்டான். அவர் ஏற்பாட்டுக்கு மீறி நடப்பதென்பது லகுவில் நடக்கக்கூடியதல்ல. அவர் கோபித்துக்கொண்டுவிடுவார். அதற்காக அவன் தந்திரமாக வீட்டுப் பெண்களைச் சாக்குச் சொல்லிக் காரியத்தைச் சாதித்துக்கொண்டான்.'

## 5

ஜம்புநாதனும் பசுபதியும் உச்சிப்பிள்ளையார் கோவிலை நோக்கிச் செல்லும்பொழுது வழி முழுவதும் தந்தை, அம்மாவிடம் சொன்னவைகளைப் பற்றியே பேசிவந்தான் ஜம்புநாதன். "நான் நன்ருகப் படிக்கவேண்டும், அவ்வளவுதான். எங்கள் அப்பா என்னை எந்தத் தேசத்திற்கு வேண்டுமாலுைம் அனுப்பிப் படிக்க வைக்கத் தயார். எல்லாம் என்னுடைய

கையில்தான் இருக்கிறது. நான்தான் சிரத்தையாகப் படித்து முதலாக வர வேண்டும்'' என்று திரும்பத் திரும்பச் சொன்னுன்.

''ஏண்டா, எத்தனை தரம் சொல்லுவாய்? நானுந்தான் எவ்வளவு தடவை, 'உனக்கென்ன படிப்பைப் பற்றிக் கவலை?' என்று பதில் சொல்லி வருகிறது. நீதான் என்றுமே முதலாவதாக வருகிறவனுயிற்றே. அந்த முதலுக்குமேல் ஒரு கிளாஸ் இருந்தாலும் நீதான் சந்தேகமில்லாமல் அதையும் பெறுவாய். எனக்குத் தெரியாதா? என்னை வேணுமாஞல் சொல்லு; திறமை இல்லாமல் இருக்கிறேன். ஒரு தடவை முன்னுல் வந்தால் மறு தடவை ஓரேயடியில் கீழே போய்விடுகிறேன். எனது மூளைதான், 'வேவ் லெங்த் தியரி'யைப்போல் இருக்கிறது. அதனுல் மேலும் கீழுமாகத்தான் செல்லத் தெரிகிறதே தவிர ஓரே உயரத்தில் இருக்கத் தெரியவில்லை'' என்ருன் பசுபதி.

''நீ எப்பொழுதும் ஓரேவித சிரத்தையுடன் படிப்பதில்லை. சில சமயங்களில் அலட்சியமாக இருக்கிருய். அதன்படி ரிஸல்டும் கிடைக்கிறது. மனது மட்டும் வைத்தால் உன்னுல் எனக்கு மேலாகவே வர முடியாதா?''

''அந்த 'மனது'தானே வைக்க முடிகிறதில்லை. 'சற்று முன்னுடி பிறந்திருந்தால் அரசனுகப் பிறந்திருப்பேன்' என்று சொல்லிக்கொள்வதில் பிரயோஜனம் என்ன? மனசு வைத்துப் புத்தியை உபயோகிக்க முடியாத குறை குறைதானே?''

''அதெப்படிக் குறை ஆகும்? புத்திக் குறைவு இருந்தால் சொல்லு; ஒப்புக்கொள்ளுகிறேன். மற்றதெல்லாம் சோம்பலே தவிர வேறென்றும் இல்லை; சிரமப்படப் பிடிக்காத சோம்பல்; அவ்வளவுதான்.''

''புத்திக் குறைவுக்குமேல் சோம்பல் இருப்பது இன்னமும் கெடுதல். நீ அதை லேசாக நினைத்துவிடாதே. புத்திக் குறைவை யாவது மொண்ணைக் கத்தியைச் சாணை பிடித்துத் தீட்டிக்கொள்வதுபோல் உழைத்துக் கூர்மை யாக்கிக்கொள்ள லாம். சோம்பலுக்கு விமோசனமே இல்லை. பாசி படர்வது போல் படர்ந்து, இருக்கிற மூளையையும் மூடிவிடும்; தெரியுமா!''

''போதும்; நீ பெரிதாய் வருணிக்கிறது! பாசியை விலக்க

முடியாதாக்கும். உன்னை எனக்குத் தெரியாதா? மனசுமட்டும் வைத்தால் ஊரையே வென்றுவிட மாட்டாயா? நானும் நீயும் இனிமேல் ஹாஸ்டலில், சேர்ந்துதானே இருக்கப் போகிறோம். உன்னுடைய சோம்பலுக்கு இடங் கொடாதபடி நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அப்போது இந்தப் பாசியெல்லாம் படர் கிறதா, பார்ப்போம்?"

"சரி, பார்ப்போம். எனக்கு என்னிடத்தில் இல்லாத நம்பிக்கை உனக்கு என்னிடத்தில் இருக்கிறது. பாசி படர்ந்து குட்டை நீராக இல்லாமல் அதி வேகமாக ஓடுகிற இந்தக் காவேரியின் சுத்தமான நீராகப் பண்ணிவிடுகிறேன் என்கிறாய். அவ்வளவுதானே!"

இதுமாதிரி பசுபதி சொல்லும்பொழுது அவர்கள் மலை உச்சியில் பிள்ளையாருடைய சந்நிதியைச் சமீபித்துக்கொண் டிருந்தார்கள். அந்த உயர்த்திலிருந்து அவர்களுக்குப் பட்டணம் முழுதும் நன்றாகத் தெரிந்துகொண் டிருந்தது. ஊரைச் சுற்றி வளைத்துச் செல்லும் காவேரி நதியானது தனது இரு கைகளையும் கொண்டு ஊரையே தழுவி அணைத்துச் செல்வது போல் இருந்தது. அந்த அணைப்பின் பிரபாவத்தால் தாயின் அன்பணைப்பில் வளரும் செல்வக் குழந்தையைப்போல் ஊரும் செழித்துக் காணப்பட்டது.

"ஊர் முழுதும் இங்கிருந்து பார்ப்பதற்கு எப்படித் தெரி கிறது பார்? வீடுகளும் மரங்களும் எவ்வளவு சிறியனவாய்த் தெரிகின்றன; கொலு பொம்மையைப்போல! சாயங்கால வெயில் பட்டுக் காவேரியின் நீர்தான் என்ன மின்னு மின்னு கிறது. கிட்டத்தில் பார்க்கும்பொழுது, சுழலும் அலையுமாகக் கொந்தளித்துப் பயங்கரமாகச் செல்லும் நதி இந்தத் தூரப் பார்வைக்கு மெலிந்து சாந்தமாகச் செல்கிற மாதிரி தோன்று கிறது" என்றான் ஐம்புநாதன்.

"அப்பா, நீ ஸம்ஸ்கிருத கவிகளைப்போல் வருணிக்கக் கிளம்பிவிடாதே" என்றான் பசுபதி.

"என்னடா வருணித்துவிட்டேன்? நிஜமாகவே இங் கிருந்து ஊரைப் பார்க்க மிகவும் அழகாக இல்லையா? சொல்லு. பிள்ளையார் கோவிலை இந்த உயரத்தில் கட்ட வேண்டுமென்று

தோன்றிற்றே ஒருவனுக்கு, அவனுடைய ரசிகத் தன்மையை என்னவென்று சொல்லுகிறது!" என்றான் ஜம்புநாதன் சுற்றிலும் பார்த்து வியந்துகொண்டே.

"போடா, யாருக்கடா தனியாகத் தோன்றிவிட்டது. பிள்ளையார் அவராகவேண்ணு உயிருக்குப் பயந்து இங்கே ஓடி வந்து உட்கார்ந்துவிட்டார். விபீஷணன் என்ன பண்ணிவிடுவானோ என்கிற பயம் மட்டும் இல்லாவிட்டால் இவர் இப்படி உயர இடந்தேடி வருவாரா?" என்றான் பசுபதி விளையாட்டாக.

"அப்படிப் பார்க்கப்போனால் ரங்கநாதர் அல்லவா இதற்குக் காரணம். அவருக்கு விபீஷணனோடு லங்கைக்குப் போகப் பிடிக்கவில்லை. இந்த இடத்தைப் பார்க்கவும் இங்கே தங்க ஆசை ஏற்பட்டுவிட்டது. அதற்காக இந்தச் சூழ்ச்சி செய்துவிட்டார். அதல்லவா விஷயம்? வாஸ்தவமாகவே இந்தக் காவேரியின் அழகும் பூமியின் வளமும் யார் மனத்தைத்தான் கவராது! எந்த இடத்திற்கு இந்த உயர்வு வரும்" என்றான் ஜம்புநாதன்.

"அதுதான் எழுப்பினாலும் எழுப்ப முடியாதபடி ரங்கநாதர் ஸ்திரமாய் இவ்விடத்தில் நீண்டு பள்ளிகொண்டுவிட்டார் என்றான் பசுபதி."

"நம்மவர்கள் அங்கங்கே அழகிய கோவில்களைக் கட்டுவித்து, ஒவ்வொன்றையும்பற்றிச் சுவாரஸ்யமான கதைகளையும் ஜோடித்து, எல்லா மனிதர்களும் ஈசுவரனிடம் சுலபமாக மனத்தைச் செலுத்த வழி செய்துவிட்டார்கள்" என்றான் ஜம்புநாதன்.

"விசேஷக் கதை மட்டுமா? தனித்தனியே விசேஷ சக்தியுமல்லவா ஒவ்வொரு இடத்துக் கடவுளுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இந்த உச்சிப்பிள்ளையார் இருக்கிறாரே இவர், செய்ய முடியாத காரியத்தை யெல்லாம் செய்யும் திறமையைக் கொடுத்துவிடுவாராம். கையா லாகாதவனையும் சாமர்த்திய சாலி யாக்கிவிடுவதில் இவருக்கு இணை யாரும் இல்லையாம். பிறருக்கு இவ்வளவு செய்ய முடிகிற இவருக்கு, விபீஷணனை எதிர்க்க முடியவில்லையே, அதுதான் வேடிக்கை! விபீஷணன் விஷ்ணு பக்தனாயிற்றே; அவனைப் பிள்ளையார் வென்றுவிட்

டால் விஷ்ணுவுக்கு மகிமை குறைந்துவிடுமே என்று யாராவது ஐயங்கார் சுவாமிகள் ஜோடித்துக் கட்டிவிட்ட கதையாகவும் இருக்கலாம்'' என்றான் பசுபதி.

''எந்தச் சாமிக்கு எந்தச் சக்தி இருந்தால் என்ன? நமக்கு இப்பொழுது இவருக்குத் தேங்காய் உடைக்கச் சக்தி இராது போல் இருக்கிறதே'' என்றான் ஜம்புநாதன்.

அன்று வெள்ளிக்கிழமை யல்லவா? பிள்ளையாரின் சந்நிதி ஜனக்கூட்டத்தால் நிறைந்திருப்பதற்குக் கேட்க வேண்டுமா? சதுர்த் தேங்காய்கள் உடைபடுவதும் கணக்கில்லாமல் தான் இருந்தது. தேங்காய் ஓட்டாஞ்சில்லுகள் பட்டுக் காயம் ஏற்படாமலும் பாறைகளில் ஓடும் இளநீரில் வழுக்கி விழுந்து காலை முறித்துக்கொள்ளாமலும் கூட்டம் அவரவர்கள் வீடு போய்ச் சேருவதே அவருடைய கிருபையினால்தான் நடக்க வேண்டும்போல் இருந்தது.

அந்தச் சில்லுகளைப் பொறுக்கப் போட்டி போடுபவர்கள் இருவருக்கொருவர் மோதுண்டு அடிபட்டுக்கொள்ளாமல் இருப்பதும் அதற்கும் மேல்போன காரியமாகத்தான் இருந்தது. சிறுவர்களுக்குச் சரியாகப் பெரியவர்களும் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். கேவலம் தேங்காய்ச் சில்லுக்கே காக்கை, குருவி போல், 'நான் நீ' என்று அடித்துக்கொள்ளும் மனிதனுக்கு வாழ்க்கையின் மற்றவைகளில் போட்டி இருக்கக் கேட்க வேண்டுமா?

''அர்ச்சனை பண்ண வேண்டாம்; சதுர்த் தேங்காய் விட்டு விடுவோம்'' என்றான் ஜம்புநாதன்.

''அதுகூடத்தான் இந்தக் கூட்டத்தில் செய்கிற காரியமாகத் தெரியவில்லையே!'' என்று தயங்கினான் பசுபதி.

இவர்கள் இப்படித் திகைத்து நிற்கும்போது, ''என்னடா, பிரகஸ்பதிகளா! 'எப்படித் தேங்காய் உடைக்கிறது!' என்று விழிக்கிறீர்களா? வாய்ப்பேச்சில்தான் வீரர்கள்; இல்லையா? புத்தகத்தை வேண்டுமானால் கரைத்துக் குடிப்பீர்கள்! காரியத்தில் ஒன்றும் முடியாது. அப்படித்தானே? என்னிடம் கொடுங்கள்; நான் ஒரு நொடியில் உடைத்துத் தருகிறேன். பரீக்ஷையில் பெயில் ஆனாலும், நான் இதுகளிலெல்லாம்

'கெட்டிக்காரன்" என்று அவர்கள் கலாசாலைச் சகபாடி ஒருவன் சொல்லி அவர்கள் எதிரில் வந்து நின்றான்.

அந்தக் கூட்டத்தில் அவன் இருந்ததை அவர்கள் பார்க்கவில்லை. அவன் இவர்களைப் பார்த்துவிட்டான். அவர்கள் எதற்காக அவ்விதம் தயங்கி நிற்கிறார்கள் என்பதும் அவனுக்கு உடனேயே தெரிந்துபோயிற்று. அதன்பேரில்தான் அவன் இது மாதிரி சொல்லிக்கொண்டு அவர்கள் இருக்கும் இடம் வந்தான். அவன் பெயர் நடராஜன்; ஜம்புநாதன் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசிப்பவன். ஏதோ முண்டியடித்து இன்டர் வரையும் வந்துவிட்டான். அந்தப் பரீக்ஷையைத் தாண்ட முடியாமல்தான் இந்த வருடம் பெயிலாகியிருந்தான். வெகு சரளமான சுபாவம் உள்ளவனாகையால் அந்தத் தோல்வியைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், தன்னுடைய பெருங் குறையாக நினைத்து வருந்தாமல் இருந்தான். பாஸ் செய்திருக்கும் நண்பர்களிடமும் பொறாமைத் தீயை மனத்தில் வளர்க்காமல் முதல் கிளாஸில் பரீக்ஷை தேறியிருக்கும் அவ்விரு நண்பர்களையும் பார்த்துக் கொஞ்சமும் அசூயையின்றி வழக்கமான உத்ஸாகத்துடனேயே அவர்களை நெருங்கியிருந்தான். அவனுக்கு அந்த மலைக்கோட்டைப் பிள்ளையார் கோவில் வெகு பழக்கமான இடம். எவ்வளவோ சமயங்களில் கூட்டத்தோடு முண்டியடித்துத் தேங்காய்ச் சிதறல்களையே பொறுக்கித் தின்றிருக்கிறான்; தானும் வெற்றிகரமாகச் சதிர்த் தேங்காய்கள் உடைத்தும் இருக்கிறான். அந்தத் தெம்பால்தான் இப்பொழுது இவர்களுக்கு உதவி செய்ய வலுவில் முன் வந்தான்.

அவர்கள் அதிசயித்துப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்களிடமிருந்த தேங்காய்களைப் பெற்றுக்கொண்டு பெருத்த அதட்டலுடன் கூட்டத்தினுள் நுழைந்தான். அவன் போட்ட சத்தத்தில் கூட்டம் சற்றுப் பயந்து ஒதுங்கத்தான் ஒதுங்கியது. உடனே தேங்காய்களும் சுக்கு நூறாய் உடைபட்டுவிட்டன. விலகின கூட்டம் மறுபடியும் ஒன்று சேருமுன் நடராஜனும் வெற்றி வீரனாக நண்பர்களிடம் திரும்பி வந்து சேர்ந்தான். "என்ன சொல்கிறீர்கள்?" என்று மார்தட்டி நின்றான்.

"கங்ராஜலேஷன் டா! சாமர்த்தியமாகத்தான் செய்திருக்

கிருய்'' என்று சொல்லிப் பசுபதியும் ஜம்புநாதனும் அவனு டைய கைகளை ஆளுக்கு ஒன்ருகப் பிடித்துக் குலுக்கித் தீர்த் தார்கள்.

''எல்லாம் சர்வீஸாக்கும்! ஒவ்வொரு பரீக்ஷைக்கும் 108 தேங்காய்கள் வீதம் சின்ன வகுப்பிலிருந்து உடைத்து வந்திருக் கிறே ளுக்கும். இந்தத் தடவையும் பாஸ் செய்திருந்தேனுனல் அவ்விதந்தான் செய்திருப்பேன். அதற்கில்லாமல் இவர் தாம் செய்துவிட்டார்'' என்ருன் நடராஜன், விளையாட்டாகப் பிள்ளை யாரைக் குறை கூறிக்கொண்டு.

''இனிமேல் உன்னிடமிருந்து பிள்ளையாருக்குத் தேங்காய் கள் கிடைக்கும் சான்ஸ் போய்விட்டதுபோல் இருக்கிறது. நீ இனிமேல் பரீக்ஷைகள் பாஸ் பண்ணப் போவதில்லையே'' என் றனர், பசுபதியும் ஜம்புநாதனும் சேர்ந்தாற்போல்.

''வாழ்க்கையில் பரீக்ஷை ஒன்றுதாளு? வேறு எவ்வ ளவோ இல்லையா? அவைகளைப் பிள்ளையார் நாம் விரும்புகிற விதம் செய்து வைத்தாராளுல் அவருககுத் தேங்காய்கள் கிடைத்துவிடுகின்றன'' என்ருன் நடராஜன்.

'' இனிமேல் என்ன கேட்கப் போகிருய்? கல்யாணம் ஆக வேண்டுமென்ரு? ஆளுல் பிள்ளையார் கல்யாணத்தை என்ன கண்டார்? அவர் நித்தியப் பிரம்மசாரி யல்லவா?'' என்ருன் பசுபதி, நடராஜனைக் கேலி செய்துகொண்டு.

''இவ்வளவுதாளு உனக்குத் தெரிந்த லக்ஷணம்! பிரம்ம சாரியாளுலும் பிள்ளையார்தான் கல்யாணங்கள் பண்ணி வைக் கிறவர்; தெரியுமா?'' என்ருன் நடராஜன்.

''அவர், தாம் செய்துகொள்ள முடியாதவைகளை யெல் லாம் பிறருக்குச் செய்வதில் கைகாரர்போல் இருக்கிறது. இந்தக் காலத்து மேடைப் பிரசங்கிகள் தாங்கள் ஒன்றும் செய் யாமல் பிறருக்கு உபதேசிக்கிருர்களே, அதுபோல'' என்ருன் பசுபதி.

''பிறரைத் தூண்டிவிடுகிற சக்திமட்டும் லேசா? அது எல் லோருக்கும் வருமா?'' என்ருன் ஜம்புநாதன்.

''நடராஜனுக்கு விநாயகரிடம் இருக்கும் நம்பிக்கையைப் பார்த்தால் அவருக்கு அந்தச் சக்தி நிறைய இருக்கிருற்போல்

தெரிகிறது. அவன் தன்னுடைய எந்தக் காரியத்துக்கும் அவரையே நம்பியிருக்கிறதாகச் சொல்லிவிட்டான்.''

"நூற்றெட்டுத் தேங்காய்கள் தரச் சித்தமாயிருக்கிறன். இவன் பட வேண்டிய சிரமமெல்லாம் தேங்காய்களைச் சம்பாதித்து, இந்தக் கூட்டத்தைச் சமாளித்து அவைகளை வெற்றிகரமாக உடைத்துவிட்டு வெளி வருவதுதான். மற்றதெல்லாம் பிள்ளையாரின் பொறுப்பு. இல்லையா நடராஜா?'' என்று கேட்டான் பசுபதி.

"என்னவோ, எனக்கு நம்பிக்கைதான் அப்பா; அவருடைய உதவி இல்லாவிட்டால் நான் இந்த மட்டுங்கூட வருவது ஏது? கலாசாலையை எட்டிப் பார்த்திருப்பேனு? எல்லாம் அவருடைய அநுக்கிரகந்தான்.''

"முழுதும் அந்த அநுக்கிரகம் இல்லாமல் போய்விட்டது போல் இருக்கிறதே? உன்னை அரைக் கிணறுதானே தாண்ட வைத்திருக்கிருர் அவர். பி.ஏ.யும் பாஸ் செய்ய வைத்து டிகிரி வாங்கிக் கொடுத்திருக்கலா மல்லவா?''

"நமக்கு அவ்வளவுக்கு அதிருஷ்டம் வேண்டாமா? இருந்தாலும் எனக்குப் படிப்பில் பொருந்துகிறதற்கும் எனக்கு இருக்கும் புத்திக்கும் இதுவரைக்கும் நான் வந்ததே அவருடைய உதவியினுல்தான். இதை வைத்துக்கொண்டு நான் ஏதாவது பிழைக்க வழி தேடிக்கொண்டுவிடுவேன். அது போதும் எனக்கு. உங்களைப்போல் சொந்த மேதையில் நம்பிக்கை கிடையாதப்பா எனக்கு'' என்றுன் நடராஜன்.

"வாஸ்தவம்; பரீக்ஷைகளுக்கெல்லாம் எங்களைத்தான் நாங்கள் நம்புகிற வழக்கம். விநாயகரிடம் பளுவைச் சுமத்திவிட்டுச் சும்மா இருக்க மாட்டோம்'' என்றுன் பசுபதி.

"ஆனுல், உங்கள் சொந்த சாமர்த்தியம் இந்தப் பரீக்ஷைகளோடு சரி; மற்றவைகளுக்கெல்லாம் வேறு யாராவது உதவி செய்தாக வேண்டும் என்று தெரிகிறது. நான் அப்படியல்ல; எனக்குப் படிப்புத்தான் வராது. மற்றவைகளை நானே சமாளித்துக்கொண்டு விடுவேன்.''

"ஏண்டா, எங்களை ஏட்டுச் சுரைக்காய் என்று நினைத்துவிட்டாயா? வாழ்க்கைக்கு உபயோகமில்லை என்கிருயா?

இந்தத் தேங்காய்களை உடைத்துவிட்டதனால் நீ சமர்த்தன்! அது செய்யாததால் நாங்கள் கையாலாகாதவர்கள்! அப்படித் தானே? எல்லாம் போகப் போகத் தெரியும். நாங்களும் அவ்வளவுக்கு மோசமில்லை'' என்றான் பசுபதி.

இவ்விதம் அவர்கள் ஏதேதோ பேசிக்கொண்டு பொழுது போவது தெரியாமல் வெகு நேரம் காற்று வாங்கின வண்ணம் ஒரு புறமாகப் பாறையில் உட்கார்ந்துவிட்டார்கள்.

''அடே, கூட்டம் குறைந்துவிட்டதே; மணி எட்டு அடிக்கப் போகிறதென்று நினைக்கிறேன். வீட்டுக்குப் போக வேண்டுமடா'' என்று எழுந்தான் ஜம்புநாதன்.

''ஆமாண்டா அப்பா; உங்கள் வீட்டில் உன்னைக் காணவில்லையென்று விசாரப்பட்டுப் போவார்கள். குழந்தையைப் 'பூச்சாண்டி' பிடித்துக்கொண்டு விட்டதாகத் தவிப்பார்கள். அப்பா, நடராஜா! இவனை வீடு கொண்டுபோய்ச் சேர்ப்பது உன் பொறுப்பு'' என்று சொல்லிக் கிளம்பினான் பசுபதி.

''வாடா; கையைப் பிடித்துக்கொள். சிறு பையனை அழைத்துக்கொண்டு போகிறதுபோலவே ஜாக்கிரதையாக அழைத்துச் செல்கிறேன்'' என்று நடராஜன் அதை ஏற்று விளையாட்டாகச் சொல்லிவிட்டு, ''இவன் பட்டணம் போகிறதற்கு இவன் வீட்டில் எப்படிச் சம்மதித்தார்கள்! அதிசயமாக இருக்கிறதே! பாவம்! பசுபதி! அவர்கள் உன்னை நம்பித்தான் அனுப்புகிறார்கள் என்று நினைக்கிறேன்'' என்றான் நடராஜன் பசுபதியிடம்.

''முழுதும் என்னைமட்டும் நம்பிவிடவில்லை அவர்கள். பட்டணத்திலும் ஒரு, 'கார்டியன் ஏன்ஜிலை' ஏற்பாடு செய்துதான் இருக்கிறார்கள்'' என்றான் பசுபதி.

''அப்படிச் சொல்லு! அதுதான் பார்த்தேன்; இவன் வீட்டில்கூட இவனைத் தனியே உன்னைமட்டும் நம்பி அனுப்பிவிடுகிறார்களா என்று! நீ சொல்லுகிற இந்த, 'ஏன்ஜில்' யாரோ? ஆணா? பெண்ணா?'' என்றான் நடராஜன்.

''என்னடா? நீங்கள் பேசுகிறதைக் கேட்டால் எனக்கு மனிதர்கள் யாருமே பட்டணத்தில் இருக்கக் கூடாதுபோல் இருக்கிறதே. எங்கள் அப்பாவுக்கு அத்தானுடைய பெண்

மதராஸில் இருக்கிருள். அவளுடைய கணவர் அங்கே, 'அட்வ கேட்.' அவர்கள் அந்த ஊரிலேயே வெகு நாளாக இருக்கிற வர்கள். எனக்காக நீங்கள் அவர்களை ஊரைவிட்டு ஓடச் சொல்லுகிறீர்களா?'' என்ருன் ஜம்புநாதன்.

''வேண்டாமப்பா; அவர்கள் நன்ருக அங்கேயே இருக்கட் டும். உன்னையும் செவ்வையாகப் பார்த்துக்கொள்ளட்டும். எங்களுக்கு அதில் ஒரு ஆட்சேபமும் இல்லை'' என்ருர்கள், பசுபதியும் நடராஜனும் சேர்ந்து.

இப்படிப் பேசிக்கொண்டே வீடுகளை அடைந்தார்கள்.

## 6

ஜம்புநாதன் வீட்டில் நுழைந்தபொழுது கூடத்தில் சாப் பாட்டுக்காக இலைகள் போட்டுச் சித்தமாக இருந்தது. கூடத் தில் ஓர் ஓரமாக அவன் தந்தை ரேடியோவிலிருந்து வரும் டில்லி அஞ்சலை வெகு கவனமாகக் கேட்டுக்கொண் டிருந்தார். குறிச்சியை ரேடியோவுக்கு வெகு சமீபமாகப் போட்டுக் கொண்டு, எங்கே வார்த்தைகள் விட்டுப்போய்விடுமோ என்று பயங்கொண்டவர்போல், 'கண்ணும் கருத்துமாக என்பார் களே' அப்படிக் காதுகளை மட்டுமல்ல, கண்களையும் அதிலேயே பதித்து வைத்துக்கொண் டிருந்தார். கூடத்தில் மற்ருேர் ஓர மாகச் சந்தி ஜபத்தை முடித்துவிட்டுச் சாப்பிட உட்காரும் வரையில் சும்மா இருக்க மனமின்றி அவன் அத்திம்பேர் ராம ஜபம் செய்தவண்ணம் மணையில் உட்கார்ந்திருந்தார். கொஞ்ச நாளைக்கு முன் அவ்விடத்திற்கு வந்து, ஜம்புநாதர் கோவில் பிராகாரத்தில் சில தினங்கள் தங்கிச் சென்ற சாமியார் ஒருவர், அவருக்குச் செய்த உபதேசப்படி, ஊர் வம்பு பிடிக்காத ராமகிருஷ் ணையர் ஈசுவரனுடைய நாமாக்களை ஓழிந்த நேரங்களில் ஜபிப் பது என்று வைத்துக்கொண் டிருந்தார். ஜபத்தின் நோக்கமும் பாதியும் அதுவாகத்தானே இருக்க வேண்டும்?

இரவு உணவைத்தான் அவர்கள் எல்லாரும் சேர்ந்து சாப்பிடுவது என்று இருந்தது, அந்த வீட்டில். அதாவது பெண் குழந்தைகள் தவிர, ஜம்புநாதன், அவன் தந்தை, அத்திம்பேர்

இவர்கள் மூவரும் ஒன்ருக உணவருந்துவார்கள். பெண்கள், சிறுவர்கள் என்பதால் இருட்டினவுடனே சாப்பிட்டுப் படுத்துத் தூங்கிவிடுவார்கள். காலையில் ஜம்புநாதன் தனக்குக் கலா சாலே இருக்கும் தினங்களில் ஒன்பது மணிக்கே சாப்பிட்டுச் செல்ல வேண்டும். அத்திம்பேருக்கோ தோட்ட வேலை பகல் பன்னிரண்டு மணியானுலும் முடிவடையாது. ராமசாமி ஐயரால் அத்தனை நேரம் பட்டினி கிடப்பதென்பது சாத்திய மல்ல. அவர் ஆபீசுக்குப் போக வேண்டிப் பத்துப் பதிஞெரு மணிக்கெல்லாம் சாப்பிட்டுப் பழக்கமானவர். ஆகையால் அவர்கள் பகல் ஆகாரத்தைத் தனித் தனியாகவே செய்து வந் தார்கள். இரவிலேயே ஒன்று சேர்ந்து உண்பது என்பது கட்டாயமாக இருந்தது. அதன்படிதான் இப்பொழுது அவர்க ளுக்கு இலைகள் போட்டுத் தயாராக வைக்கப்பட்டிருந்தது.

ஒரு புறம் மேஜைக்குப் பக்கத்தில் அவனுடைய மூத்த தங்கை அகிலாண்டம் மட்டும் ஏதோ பாடம் எழுதிக்கொண் டிருந்தாள். அவள் ஐந்தாவது பாரத்தில் படிக்கிருள் அவ ளுக்கு வீட்டில் செய்துகொண்டு போக நிறையப் பாடங்கள் இருந்தன. அதிலும் கணக்கு அவளைத் திண்டாற அடித்துக்கொண் டிருந்தது. ஜம்புநாதன் உள் நுழைவதைக் காணவுமே அவள், "அண்ணு, இந்தக் கணக்கு வரவே மாட்டேன் என்கிறது. கொஞ்சம் சொல்லித் தருகிருயா?" என்று கேட்டாள்.

தகப்பஞர் கவனத்தைக் கலைக்கக்கூடாது என்கிற ஜாக் கிரதையால் அவள் ரகசியமாகப் பேசிஞள்.

"என்ன கணக்கு அது? ஏன் வராமல் தொந்தரவு கொடுக்கிறது?" என்று அவள் பக்கத்தில் வந்து நின்றவாறே புத்தகத்தைப் பார்த்தான் ஜம்புநாதன்.

"பைதாகரஸ் தீரமா? அது கஷ்டம்தான். இரு, நான் சாப்பிட்டுவிட்டு வந்து சொல்லிக்கொடுக்கிறேன். இதில் இப் பொழுது உட்கார்ந்தால் நாழிகை ஆகிவிடும். எனக்காகத் தான் காத்துக்கொண் டிருக்கிருர்களா என்ன? இலைகள் போட்டுத் தயாராக இருக்கிறதே" என்ருன் ஜம்புநாதன்.

அப்படி அவன் சொல்லவும் அவன் தந்தையும் அஞ்சல் முடிந்து ரேடியோவை மூடிவிட்டுத் திரும்பிப் பார்த்தார். "ஏன்

இத்தனை நேரம்?'' என்று கேட்கவும் கேட்டார்.

''மலைக்கோட்டைப் பிள்ளையார் கோவிலுக்குப் போயிருந்தேன் அப்பா; கூட்டம் அசாத்தியம். அர்ச்சனை கூடப் பண்ண முடியவில்லை; நேரமாகிவிட்டது. சதுர்த் தேங்காய்கள்தான் போட்டோம். அதற்கும் எதிரகத்து நடராஜன் இல்லாதிருந்தால் முடிந்திராது'' என்றான் ஜம்புநாதன்.

''ஏன்? ஏதாவது உத்ஸவமா?'' என்றார் அவன் தந்தை. அவர் சாதாரணமாகக் கோவிலுக்கே போகிறதில்லை. அதனால் சதுர்த் தேங்காய்களுக்குக் கூடுகிற கூட்டம் அவருக்கு அவ்வளவாகத் தெரியாது.

''வெற்று நாள்தான் அப்பா; சாதாரண வெள்ளிக்கிழமைதான்?'' என்றான் ஜம்புநாதன்.

''ஊரில் எல்லோருக்கும் பக்தி மேலிட்டுவிட்டதா? ஒரேயடியில் பிள்ளையாரை முற்றுகை இடுவதற்கு?''

''பக்தி ஒன்றையும் காணவில்லை; தேங்காய் விள்ளலுக்குத்தான் கூட்டமும் அடிதடியும். சாமியை யார்தான் பார்க்கிறார்கள்!'' என்றான் ஜம்புநாதன்.

''ஒரு விள்ளலுக்கா இவ்வளவும்? அன்றாடம் ஆளுக்கு ஒரு தேங்காய் கிடைக்கும்படி தென்னந் தோப்புகளை விருத்தி பண்ணக் கூடாதா? உணவுப் பொருளை விருத்தி பண்ணுவது தானே இப்பொழுது முக்கியமாகச் செய்ய வேண்டிய நமது கடமை.''

''இது சாமி பிரசாதம் அப்பா!'' என்றான் ஜம்புநாதன்.

''பிரசாதமும் ஆச்சு; மண்ணும் ஆச்சு. சும்மா கிடைக்கிறது என்பதற்காகப் போட்டி போடுகிறார்கள். நம்மவர்களுக்கே உழைத்துப் பாடுபடப் பிடிக்காது. ஆனால், யாராவது உழுது பாடுபட்டால்தானே உழைக்காதவர்களுக்குச் சோறு. வரவர ஊரில் பஞ்சம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. கட்சிகள் ஏற்பட்டு எல்லாம் பாழாய்ப் போகிறது; சோற்றுக்கே திண்டாட்டம் வந்துவிடும். அப்பொழுது என்ன பண்ணுவார்கள்?'' என்றார் ராமசாமி ஐயர், பொதுவாக ஜனங்களிடம் அலுத்துக்கொண்டு.

''இப்போது கொஞ்ச காலமாகத்தான் இது மாதிரி

யெல்லாம் நடக்கிறது. இதற்கு முன் ஒழுங்காய் வேலை நடக்க வில்லையா? கட்சிகள் ஏதாவது இருந்தனவா? சாப்பாட்டுச் சாமானுக்குப் பஞ்சமென்கிற சொல் கேட்டதுண்டா?'' என்றார் ராமகிருஷ்ணையர் மைத்துனருக்குப் பதில் சொல்லிக் கொண்டு.

"வெள்ளைக்காரனோடு வாதாடி நமக்குள்ளேயும் கட்சி கட்டத் தெரிந்துவிட்டது. அதன் பலன் நாமேதான் கஷ்டப் படவும் வேண்டியிருக்கிறது. நாம் வரவர ஜனத்தொகையை அதிகரித்துக்கொண்டே போகிறோம். அதனால் விளைபொருள் களும் நமக்கு அதிகம் வேண்டியிருக்கிறது. அப்படியிருக்க, இப்பொழுதுதான் நமக்கு வேலை செய்யவும் பிடிக்காமல் ஆகி யிருக்கிறது. ரேடியோவிலே அதைத்தான் இத்தனை நேரம் கேட்டுக்கொண் டிருந்தேன். உணவுப்பொருள்களுக்கே அயல் நாடுகளுக்கு நாம் ஏகப் பணம் கொடுக்கிறோமாம். அது குறைந்தால்தான் வேறு தொழில்களுக்கு வேண்டுமென் கிற யந்திர சாதனங்களை வரவழைத்துக்கொண்டு நமக்கு அவசியமான மற்றப் பொருள்களையும் நாம் உற்பத்தி செய்துகொள்ள முடியுமாம். நமக்கு வேண்டிய அரிசிக்கும் கோதுமைக்கும் அயல் நாட்டை எதிர்பார்க்காமல் நமது வேளாண்மையையாவது நாம் விருத்தி செய்துகொண்டோமானால் மற்றவைகளுக்குப் பணம் மிஞ்சும். 'எல்லோரும் ஒத்துழைத்து நிலத்தின் விளைவை விருத்திபண்ணுங்கள்' என்று தான் நமது பிரதம மந்திரி இப்பொழுது கேட்டுக்கொள்ளுகிறார். எந்தப் பயிர் சீக்கிரமாகவும் நிறையவும் வருமோ அதைத் தெரிந்து பயிர் செய்து, சாப்பிடவும் சொல்கிறார். மொத்தமாக ஊரின் க்ஷேமத்தையும் சுபிட்சத்தையும் நம்மில் யாருக்குப் பார்க்கத் தெரிகிறது? தனித்தனியாகச் சொந்த லாபத்தை வேண்டுமானால் ஏதோ யோசனை பண்ணுகிறோம்; அவ்வள வுக்குத்தான் நமக்குப் புத்தியிருக்கிறது'' என்றார் ராமசாமி ஐயர்.

"ஏன்? சிலர் பாடுபடத் தயாராக இல்லையா? நல்ல உரங்கள் பார்த்துப் போட்டுப் பயிர் செய்ததில் நமது நிலத்தில் நெல் கூடவே கிடைக்கிறதே! ஊரில் மற்றவர்கள்

நிலத்தில் கிடைப்பதைவிட நமக்கு அதிகந்தான் கிடைக்கிறது. கம்பும் சோளமும் நிறைய வரலாம்; அதற்காக முதல் தர நெல் விளையும் பூமிகளில் அவைகளைப் பயிராக்குவார்களா? மட்ட மான பூமியில் வேண்டுமானால் அவைகளைப் பயிர்செய்து பார்க்கட்டுமே" என்றார் ராமகிருஷ்ணையர். விவசாய சங்கதி ராமசாமி ஐயருக்கு என்ன தெரியும் என்கிறது அவருக்கு.

"அது சரி; அந்த நெல் விளைச்சலைத்தான் இன்னும் அதிக மாகும்படி செய்யக்கூடாதா?"

"நல்ல உரங்கள் போட்டு விருத்திசெய்துதானே இருக்கி றோம். அதற்குமேலும் என்ன செய்ய இருக்கிறது?" என்றார் ராமகிருஷ்ணையர் தாம் எவ்வளவு பாடுபடுகிறார் என்பதை விளக்குவதற்காக.

"ஏன், 'ட்ராக்டர்' போட்டு உழுதாலோ? அது ஒன்றுக்கு மூன்றாகப் பலன் தருகிறதாமே!"

"யந்திரம் போட்டுப் பூமியை உழுவதாவது! அது நமது நாட்டிற்கு ஒரு நாளும் ஒத்து வராது. அவைகள் மேல்நாட்டுச் சரக்குகள். விவசாயத்தை முக்கியமாகக் கொண்டிருக்கிற நமது நாட்டில் இது மாதிரி என்றைக்காவது செய்திருக்கிறார் களா? நம் நிலத்தின் தன்மை தெரிந்துதானே வேத காலம் முதல் மாடு பூட்டி ஏர் உழுவது என்பது நமக்கு ஏற்பட்டிருக் கிறது; அதை மாற்றிச் செய்வது சரியல்ல" என்றார் ராமகிருஷ் ணையர் தீர்மானமாக.

இது மாதிரி விவாதங்கள் மைத்துனருக்கும் மாப்பிள்ளைக் கும் இப்பொழுது சில மாத காலமாக அடிக்கடி நிகழ்ந்து வந்தன. 'டிராக்டர்' போட்டு உழுது பார்க்க வேண்டுமென்பது ராமசாமி ஐயருடைய ஆவல். ஆனால் ராமகிருஷ்ணையர் அதை ஒப்புக்கொள்கிறதே யில்லை.

"நமது தேசத்தில் அப்படிச் செய்வதில்லை. வெகு கால மாக இருந்துவரும் பழக்கத்தை மாற்றுவதில் நன்மை இராது" என்பதுதான் அவர் கட்சி.

"யந்திரங்கள் இப்பொழுதுதானே கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அக்காலத்தவருக்கு அவைகளைப்பற்றித் தெரி யாதே" என்கிற பதிலை அவர் காதுகொடுத்துக் கேட்டுக்கொள்

கிறதே இல்லை.

"அந்தக் காலத்தில் யந்திரங்கள் கிடையாதென்று யார் சொன்னது? எவ்வளவோ இருந்திருக்கும்! ஆகாய மார்க்க மாகப் பிரயாணங்கள் செய்யத் தெரிந்தவர்களுக்கு யந்திரங் கள் செய்யத் தெரியாமலா இருந்திருக்கும்? அவைகளால் ஜனங்களுக்கு நன்மை இராது என்றுதான் அவைகளைச் செய் யாமல் விட்டிருப்பார்கள்" என்று அவர் கட்சி பிடித்து விடுவார்.

'ட்ராக்டர் போட்டு உழுது நல்ல பலன் கண்டிருக்கிறார் களே' என்று எடுத்துக் காண்பிப்பதற்கு, 'மிஷினில் அரிசி குத்தவில்லையா? முனை முறியாமல் இருக்கிறது என்று ஆனந்தப் படவில்லையா? என்றால், அதனால் என்ன ஆயிற்று? வியாதிகள் வருவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்; அவ்வளவுதான்!' என்பார்.

'டிராக்டர் போட்டு உழுது பயிர் செய்ய ஆரம்பித்த பிறகு அது விளைச்சல் பூமியையே கெடுத்துவிட்டது. அதிலிருந்து வரும் தானியமும் கெடுதல்தான் என்று ஏதாவது கண்டு பிடிப்பார்கள்' என்று அதற்கும் ஒப்புக்கொள்ளாமல் பேசுவார்.

நிலம் ராமசாமி ஐயருடையதுதான். ஆனாலும் அதில் ராம கிருஷ்ணயர் பாடுபட்டு உழைக்கும்போது, நிலம் தம்முடையது என்பதற்காக அவர் அபிப்பிராயத்துக்கு விரோதமாக ஏதாவது செய்யலாமா? கூடாது என்பது ராமசாமி ஐயரின் நன்றியோடு கூடிய நல்ல மனத்தின் கொள்கை

ஆனாலும் அதற்காக உணவுப் பிரச்சினையைப்பற்றிய பேச்சு வரும்பொழுது அவர் புது முறைகளைப்பற்றிக் கூறாமல் இருப்பதில்லை.

'என்றாவது ஒரு நாள் ராமகிருஷ்ணயர் மனத்தில் அது சரியென்று தோன்றாதா?' என்பதுதான் அவருடைய நம்பிக்கை.

ராமகிருஷ்ணயரோ நிலம் மைத்துனருடையது என்பதை மறந்ததோடு, அதில் பாடுபட்டு உழைக்கத் தம் ஒருவருக்குத் தான் சுதந்தரம் என்றும் தீர்மானித் திருந்தார். ஆகையால்,

அதில் மைத்துனருடைய யோசனைகளைக் கேட்டுக்கொள்ள அவர் ஒருபோதும் தயாராக இல்லை. அதனால் நிலச் சொந்தக்காரரான ராமசாமி ஐயருடைய விருப்பத்திற்கு ஒரு மதிப்பும் இல்லாமல் இருந்தது. தமக்கென்று சொந்தமாக அரைக் காசும் அதிலிருந்து எடுத்துக்கொள்ளாவிட்டாலும் ராமகிருஷ்ணையர் தமதென்று இருந்தால் எப்படியோ அப்படி மனதோடு பாடுபட்டு வந்தார். அவருக்குச் சரியென்று தோன்றுகிற முறையில்தான் விவசாயமும் நடந்து வந்தது. அதில் சந்தேகம் கொண்டு கேள்வி கேட்கும்படியான சந்தர்ப்பமே ராமசாமி ஐயருக்கும் இதுவரையில் நேரிட்டதில்லை. இப்பொழுது சிறிது காலமாகத்தான் ட்ராக்டர் விஷயமாக இருவரிடையேயும் இது மாதிரி அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவதாயிருந்தது. ராமசாமி ஐயருக்குப் பணத்தாசை இல்லை. பணத்திற்காக அவர் நிலத்து வரும்படியை அதிகப்படுத்த விரும்பவில்லை. ஆனால், "உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இக் காலத்தில் விளை பொருளை விருத்தி செய்ய ஏதாவது செய்ய வேண்டாமா!' என்றுதான் அவர் நினைத்தார். அதற்காக வேண்டித் தங்கை புருஷரின் மனத்தையும் மாற்ற எண்ணி அப்பொழுது அப்பொழுது விடாமல் சொல்லி வந்தார். இன்றும் ரேடியோவின் அஞ்சலைக் கேட்டுவிட்டு அந்த எண்ணத்தில்தான் பேச்சை எடுத்தார்.

"எதிரகத்துத் தியாகராஜையர் சொல்லுகிறார்: அவருக்குத் தெரிந்த ஒருவர் ட்ராக்டர் உபயோகித்ததில் அபாரமாக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறதாம்" என்று ஆரம்பித்தார்.

"இப்போ விளைஞ்சுட்டால் போதுமா? பின்னால் நிலத்திற்கு அதனால் பழுது இல்லையாமா? அதை அவர் அநுபவத்தில் கண்டிருக்கிறாரா?" என்று ராமகிருஷ்ணையர் ஆட்சேபங்களை விடாமல் கிளப்பவே, இந்தப் பேச்சு ஆரம்பித்தால் அதற்கு முடிவு ஏது என்பதைத் தெரிந்திருந்த ஜம்புநாதனின் அத்தை, சமையலறை வாயில் படியண்டை வந்து, ஜம்புநாதனுக்குச் சைகை காட்டிச் சாப்பிட அழைத்தாள். ஜம்புநாதனும் அந்தக் குறிப்பை அறிந்துகொண்டு, "அப்பா, இலை போட்டிருக்கிறதே; சாப்பிட உட்காருவோமா?" என்று அவர்கள் பேச்சை

நடுவில் நிறுத்தினன்.

பிறகு அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். விசாலம், நாத்தனர் அகமுடையானிடம் மரியாதையால், வாய் பேசாது பரிமாறினள். அத்தை ஜானகியும் அவளுக்கு உதவி யாக உணவு பரிமாறிக்கொண் டிருந்தாலும் ஒன்றும் பேச வில்லை. தமையன்தான் என்றாலும் ராமசாமி ஐயரிடம் அவளுக் கிருந்த மரியாதையில் அவள் தாராளமாகப் பேசிவிட மாட்டாள். கணவர் தனித்திருக்கும்போது தன் பிறந்தகத் தில் அவர் இருக்கிறார் என்கிற தென்பில் கொஞ்சம் தாட்டி யாகவே சம்பாஷணை நடத்தினலும், தமையன் எதிரில் கணவ ருடன்கூட அவள் அதிகம் வார்த்தை யாடுவதில்லை. அதனல் அவள் இலையைக் கவனித்துப் பரிமாறுவதில்மட்டும் ஈடுபட் டிருந்தாள். ஜம்புநாதன் எல்லோருக்கும் முன்னதாக ஆகா ரத்தை முடித்து எழுந்தான்.

"என்னடா, அதற்குள் உனக்கு ஆகிவிட்டது? என்ன, பசி இல்லையா? ஊருக்குப் புறப்படும் சமயத்தில் வியாதியாகப் படுத்துக்கொண்டு விடாதே" என்று எச்சரித்தார் ராமசாமி ஐயர்.

"அதொன்றும் இல்லையப்பா; அகிலாண்டத்திற்குக் கணக்குச் சொல்லித் தரணுமாம்; அவள் தூங்காமல் காத்துக் கொண்டிருக்கிறாள். அதனல்தான் வேகமாக முடித்துக் கொண்டு விட்டேன்" என்றான் ஜம்புநாதன்.

"கடினமான கணக்கெல்லாம் பெண் குழந்தைகளுக்கு எதற்கு? பின்னல் அவைகளால் பிரயோஜனம் என்ன? பெண் களுக்கென்று சிலவற்றைப் பள்ளிக்கூடங்களில் மாற்றி வைக்கத்தான் வேண்டும்" என்றார் ராமசாமி ஐயர்.

"அப்படிச் செய்யப் பொம்மனாட்டிகள் விடுவார்களா? அவர்கள்தான் சகலத்திலும் சமத்துவம் வேண்டும் என்கிறார் களே!" என்றார் ராமகிருஷ்ணையர்; ஸ்திரீ சமத்துவத்தைப்பற்றிப் பேப்பரில் வரும் விஷயங்களை அவர் படித்திருக்கிறார் அல்லவா? ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் காண்பிக்க அவர்கள் விடுவார்களா? என்பது அவருக்கு.

"நீங்கள் சொல்வது வாஸ்தவம். அவர்களைப் பிரித்து,

வார்த்தையில்கூட - ப்பேச விடமாட்டார்கள்தான்!'' என்று ஆமோதித்தார் ராமசாமி ஐயர். இவ்விதம் பேச்சு மாற அவர்களும் சாப்பாட்டை முடித்தார்கள்.

ஜம்புநாதனும் அகிலாண்டத்திற்குக் கணக்கை ஒருவாறு புரியும்படி செய்துவிட்டுப் படுத்துக்கொள்ளப் புறப்பட்டான். "அண்ணு, நீ பட்டணம் போன பிறகு எனக்கு யார் கணக்குச் சொல்லித் தருவார்கள்? நான் திண்டாட வேண்டியதுதான்!'' என்று அகிலாண்டம் சொன்னதற்கு, "உனக்கு வருகிற கணக்குப் போதும். பாக்கிப் பாடங்களைப் படி; கணக்கு என்ன, வாழ்க்கைக்கு அவ்வளவு முக்கியமா?'' என்று அவளுக்குச் சமாதானமாகக் கூறிச் சென்றான் ஜம்புநாதன்.

## 7

ஜம்புநாதன் சென்னை புறப்பட வேண்டிய தினமும் வந்தது. அதற்கான ஏற்பாடுகளும் பலமாக நடந்துகொண் டிருந்தன. போகிற இடத்தில் சாப்பாடு எப்படி இருந்தாலும் பக்ஷணமாவது ருசியாகத் தின்பதற்குக் கையில் இருக்கட்டுமென்று, அது செய்வதில் முனைந்தார்கள் வீட்டு ஸ்திரீகள். "பால் நிறைய இருக்கு; திரட்டுப்பால் செய்து கொடுப்போம். முறுக்கு ஜம்புநாதனுக்குப் பிடிக்கும்; ஒரு மாதம் இருந்தாலும் கெட்டுப் போகாது'' என்று ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணத்தோடு பல தினுசுகள் தயாரிப்பதில் ஈடுபட்டார்கள்.

"இதென்ன, நீங்கள் ஒரே பக்ஷணமாகச் செய்து குவிப்பீர்கள்போல் இருக்கிறதே? நான் படிக்கப்போகிறேனு? ஸ்பெஷலாகப் பக்ஷணம் தின்னப் போகிறேனு? இவ்வளவையும் எப்படிக் கொண்டுபோகிறது?'' என்றுன் ஜம்புநாதன், பக்ஷணத்திற்கான ஏற்பாடுகளைப் பார்த்துத் திகைத்தவனுய்.

"அதற்கென்ன? தனிப் பெட்டியில் வைத்துத் தருகிறேன்'' என்றுள் அவன் தாய்.

"யாராவது பார்த்துச் சிரிக்கப்போகிறுர்கள் அம்மா!'' என்று ஜம்புநாதன் சொன்னதற்கு, "சிரிப்பானேன்!

பிள்ளைகள் படிக்க வெளியூர் போனால் கைக்கு ஏதாவது கொடுத்தனுப்ப மாட்டார்களா? ராமசாமி படிக்கச்சே நான் வேணது பண்ணிக் கொடுத்திருக்கேன். அவனும் பேசாமல் கொண்டு போயிருக்கான்'' என்றாள் பாட்டி; இது என்ன புதிசு என்கிறதில்.

''அது சரிதான் பாட்டி! அப்பா அத்தானகத்துக்குப் போனார். அதனால் நீயும் செய்து கொடுத்தாய். நான் ஹாஸ்டலுக்கல்லவா போகிறேன். இவைகளை அங்கே கொண்டு போய் என்ன பண்ணுகிறது?''

''ஹாஸ்டலிலேயே வச்சுக்கோயேன்!''

''நாலைந்து பேர் ஒரு ரூமில் இருக்கும்படி இருக்கும். ஒருவன் மட்டும் பக்ஷணம் வைத்துக்கொண்டு தின்றால் நன்றாயிருக்குமா?''

''அவர்களுக்கும் கொடு; நிறையப் பண்ணியிருக்கு; அந்தப் பிள்ளைகளுக்கு அவாங்களில் செய்து தராளோ என்னமோ?'' என்றாள் விசாலம். அவளுக்குத் தங்களைப்போல் யார் பிள்ளைகளுக்குக் கவனித்துச் செய்யப்போகிறார்கள் என்கிற எண்ணம்.

''அதெல்லாம் சரியாக வராது. ஹாஸ்டலில் தவறாமல் டிபன் தருவார்கள். அவைகளைத் தின்ற பிறகு மறுபடியும் எப்படிச் சாப்பிடுகிறது?'' என்று ஆட்சேபித்தான் ஜம்புநாதன். அவனுக்கு இவ்வளவையும் தூக்கிக்கொண்டு போய் மற்றப் பிள்ளைகளின் பரிகாசத்திற்கு ஆளாகிவிடப் போகிறோமே என்கிற பயம். ஒரே மட்டில் வேண்டாம் என்று தடுத்துக் கூறினான்.

''கொஞ்சம் கொண்டு போ!'' என்று பாட்டி சமாதானம் செய்தாள்.

இவ்விதம் இவர்கள் விவாதம் செய்துகொண்டிருந்த பொழுது ராமசாமி ஐயர் அறையுள் நுழைந்தார். அவர் கையில் உடைத்துப் பார்த்த தபால் கவர் ஒன்று இருந்தது. ''என்ன வாக்குவாதம்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தவர், அங்கே நடக்கும் ஏற்பாடுகளைக் காணவும், ''இதென்ன, கல்யாணமா? ஒரே அமர்க்களமாக இருக்கிறதே?'' என்றார்.

"அதுதானப்பா சொல்லுகிறேன்; எனக்காகப் பண்ணுகிறார்களாம். இவ்வளவையும் எப்படிக் கொண்டுபோகிறது? எதற்காகக் கொண்டுபோகிறது? நீங்களே சொல்லுங்கள்" என்று ஜம்புநாதன் அவரிடம் முறையிட்டான்.

இப்படிப்பட்ட பைத்தியக்கார ஸ்திரீகளைப் பார்த்ததில்லை. இவ்வளவையும் அவன் தின்ன வேண்டுமென்று பண்ணுகிறீர்கள்? தின்றுவிட்டு, போன இடத்தில் அவன் படுத்துக்கொள்ளவா? அங்கே அவனுக்கு ஒன்றுமே கிடைக்காது என்கிற எண்ணமா? இவ்விடத்திற்கு மேலாகவே கிடைக்கும். வீணுக்குச் சிரமப்படாதீர்கள்; போதும் நிறுத்துங்கள்" என்றார் ராமசாமி ஐயர்.

அவர் அவ்விதம் நிச்சயமாகச் சொன்ன பிறகு மேற்கொண்டு செய்வது முடியாது என்பது அந்த ஸ்திரீகளுக்கு இவ்வளவு நாளும் அவரோடு பழகியும் தெரியாதா! ஆனாலும், விசாலம் விடாமல், "சாவித்திரி அகத்துக்கு முதல் முதல் போகிறான். வெறுங் கையாகப் போனால் நன்றாயிருக்குமா?" என்று அவர் ஒப்புக்கொள்ளக் கூடியதாக ஒரு காரணத்தைச் சொல்லிப் பார்த்தாள்.

"அதற்கானால் திரட்டுப் பால் செய்துகொடு. அதுதான் அவர்களுக்கு அபூர்வத் தின்பண்டமாக இருக்கலாம். சீடையும் முறுக்கும் எதற்கு? உங்களுக்கு அவைகள்தாம் செய்யத் தெரியும். அங்கே அவர்கள் என்ன என்னவோ செய்கிறார்கள்" என்றார். அதில் அவர் தாயார் உள்பட அந்த ஸ்திரீகள் மூவருக்கும் தங்களை அவர் இறக்கிக் கூறினதாக மனத்தாங்கல் ஏற்பட்டது.

"அலட்சியமாகச் சொல்லிவிட்டாயே! இந்தப் பட்சணங்களுக்கு ஈடு வருமா? இவைகள் செய்யத்தான் எல்லாருக்கும் வந்துவிடுமா?' கரகரன்னு வாயிலே கரையும்படி மணி மணியா முறுக்குச் சுத்துவது லேசா?" என்று அவர் தாயார் பெரிதாய் ஆரம்பிக்கு முன், "அது கிடக்கட்டு மம்மா, "இதோ பார்; சாவித்திரி கடிதம் போட்டிருக்கிறாள். அதை உங்களுக்குப் படித்துக் காண்பிக்க வந்தேன்."

"என்ன எழுதியிருக்கா?" என்று அவர் தாயார் ஆவ

லாய்க் கேட்க, மற்ற இரு ஸ்திரீகளும் தங்கள் கைக் காரியத்தை விட்டு, அவர் சொல்லப் போவதைக் கவனமாகக் கேட்கத் தயாரானார்கள்.

"படிக்கிறேன்; கேளுங்கள். ஜம்புநாதா, நீயும் கேட்டுக் கொள். எல்லாம் உனக்காகத்தானே" என்று சொல்லி உறையி லிருந்து கடிதத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினார்.

"சித்தப்பா அவர்களுக்குச் சாவித்திரி அநேக நமஸ்காரம். (அவர் அவளுடைய தந்தைக்கு இளைய சகோதரருடைய ஸ்தானத்தில் இருந்தார் என்ப தற்காக அந்த உறவு முறை கொண்டுதான் அவள் அவரை அழைப்பது வழக்கம். அதை யொட்டியே அவர் வீட்டவரையும் அந்த உறவுக்குள்ள பெயர் கொண்டே அவள் சொல்லிவந்தாள்.) இவ்விடத்தில் எல்லாரும் க்ஷேமம். அவ்விடத்து எல்லாருடைய க்ஷேமத்தையும் அறிய விரும்புகிறேன். உங்கள் கடி தம் பார்த்தேன். ஜம்புநாதன் கலாசாலை சேர இவ் விடம் வரப்போகிறான் என்பது கேட்க மிகவும் சந்தோ ஷம். அவன் எங்களோடு அகத்தில் இருக்கப் போவ தில்லை என்பதில்தான் எனக்கும் உங்கள் மாப்பிள் ளைக்கும் மிகுந்த வருத்தம். எங்களிடம் ஒரு வார்த்தை கேளாமல் நீங்கள் ஹாஸ்டலில் ஏற்பாடு செய்துவிட் டீர்கள். 'அது சரியா?' என்று நாங்கள் கேட்டால், 'அவனுக்கு அதுதான் சௌகரியம்; உன்னிடத்தில் இருந்துகொண்டு அவனுக்குக் கலாசாலை போய் வரவே நேரம் சரியாகப் போகாதா? படிக்க நேரம் இருக்குமா?' என்று எங்களையே நியாயமாகக் கேள்வி கேட்கிறீர்கள். எங்களை மேல்கொண்டு பேச முடியா மல் செய்கிறீர்கள்.

"எதுவாக இருந்தாலும் அவனுக்காக எங்கள் வீட்டில் ஓர் அறை எப்போதும் சித்தமாக இருக்கும். எப்போது நினைத்தாலும் அவன் வந்து அதில் தங்கி இருக்கலாம். அவனுக்கு அது முழுதும் சொந்தம்.

"நான் அவனைச் சிறு பிள்ளையாக இருக்கும் பொழுது பார்த்ததுதான். அதனால் அவனைப் பார்க்க எனக்கு எவ்வளவு ஆவல் இருக்கிறது தெரியுமா? அதை வார்த்தைகளால் சொல்ல முடியுமென்று தோன்றவில்லை. சொந்தத் தம்பியைப் பார்க்க ஆசைப் படுவதும், கூடவே வைத்துக்கொள்ள விரும்புவதும் அதிசயமா? நீங்கள்தான் அதற்கில்லாமல் செய்து விட்டீர்கள். அகத்தில் சித்தி, பாட்டி, அத்தை இவர் களிடம் சொல்லுங்கள். அவனைப் பற்றின கவலை அவர்களுக்குச் சிறிதும் வேண்டாம். இங்கே ஒரு தமக்கை நான் இருக்கிறேன், அவனைப் பார்த்துக் கொள்ள என்று சொல்லுங்கள். இவ்வளவு நாளுந் தான் அவர்கள் அவனைக் கவனித்துக்கொண் டிருந் தார்களே; கொஞ்ச நாளைக்கு நான்தான் பார்த்துக் கொள்ளுகிறேனே.

"உங்கள் மாப்பிள்ளை ஸ்டேஷனுக்கு வந்து ஜம்பு நாதனை அழைத்து வருவார். நான்தான் பார்த்த தில்லையே தவிர, அவர் அவ்விடம் வந்த சமயங்களில் அவனைப் பார்த்திருக்கிறார் அல்லவா? அடையாளம் கண்டுகொள்ளுவார்.

"நான் அங்கே யாரைத்தான் பார்த்திருக் கிறேன்? சுந்தரியை வேண்டுமானால் என் நாத்தனார் கல்யாணத்துக்குச் சித்தியுடன் வந்திருந்தபோது பார்த்தேன். அதிலிருந்து அவள் நினைவாகவே இருக் கிறது எனக்கு. 'அவள் தமக்கைகளும் அவளைப் போலவே இருந்தால், எல்லாருக்கும் பிடிக்கும்படி இருப்பார்களே' என்பதை நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவள் அத்தனை சமர்த்தும் அழகும் பொருந்தியிருக்கிறாள். எனது ஆசையும் அன் பும் அவர்களுக்குக் கடிதத்தோடு நிற்கிறது. மற்றப்படி அதை நேரில் தெரிவித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் என்று வருமோ? அகிலாண்டத்தின் கல்யாணத்தின்

பொழுதுதான் அது சாத்தியமாகலாம்; இல்லையா?

இப்படிக்கு,
அநேக நமஸ்காரம்,
சாவித்திரி.''

"குறிப்பு: இந்தக் கடிதத்தைச் சித்தி, பாட்டி, அத்தை, இவர்களுக்குக் காட்ட வேண்டுமென்றே பிரத்தியேகமாகத் தமிழில் எழுதியிருக்கிறேன். என்னுடைய வார்த்தைகளிலேயே நான் ஜம்புநாதனைக் கவனித்துக் கொள்வதாகச் சொல்வதைக் கேட்க அவர்களுக்குச் சிறிதாவது நம்பிக்கை ஏற்படுமல்லவா?

சாவித்திரி.''

இதைப் படித்து முடித்துவிட்டு, "போதுமா?'' என்றார் ராமசாமி ஐயர். இனியும் நீங்கள் கவலைப்பட வேண்டுமா என்கிற தோரணையில்.

"வாஸ்தவம்; சாவித்திரி ஒரு நடை இங்கே வரக் கூடாதோ! அவளைப் பார்த்து எந்தக் காலமோ ஆகிறது!'' என்றாள் பாட்டி.

"நம்ம மனசு தெரிஞ்சு எப்படி எழுதியிருக்காள் பாரு! நமக்குத் தெரிய வேணு மென்பதற்காகத் தமிழில் எழுதி, படித்துக் காண்பிக்கும்படியும் நினைவாகச் சொல்லியிருக்கா! இல்லாவிட்டால் இவர் இவ்வளவு தூரம் பொறுமையாக நமக்குப் படித்துக் காண்பிக்கிறது ஏது!'' என்றாள் விசாலம்.

இவ்விடத்தில் நாம் சாவித்திரியின் ஆங்கிலப் படிப்பைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அவள் சின்ன வயதிலிருந்து வெள்ளைக்காரக் கான்வென்டில் படித்தவள். அந்த இங்கிலீஷ்க்காரரைப்போலவே பேசவும் எழுதவும் அவளுக்கு வெகு செம்மையாக வந்திருந்தது. ஆகையால் ஆங்கிலத்தில் சொந்த பாஷைபோலவே எழுதிவந்தாள் அவள். ராமசாமி ஐயருக்கு ஆங்கிலத்தில்தான் அவள் எப்பொழுதும் எழுதுவது வழக்கம். அவரும் அவள் கடிதங்களைப் பார்த்து அதிசயித்து, மகனுக்குப் படித்துக் காண்பித்து, தெரிந்தவர்களிடமும் சொல்லிப் பெருமை அடித்துக்கொள்வார். தாமும் அவள் திறமையைப் புகழ்ந்து பதில் எழுதுவார். இவ்விதம் பக்கம் பக்கமாக

எழுதின கடிதங்கள் அவர்களுக்குள் நடமாடிக்கொண் டிருந்த தால்தான் அவர் அடிக்கடி அவளைப் பாராததைப் பெரிதாக நினைக்கவில்லை.

"சுந்தரியைப்போல் ஒரு பெண் குழந்தையாவது சாவித்தி ரிக்குப் பிறக்கப்படாதோ? வயசு ஆய்க்கொண்டு போகிறதே!" என்று அங்கலாய்த்தாள் அத்தை.

'பணமும் காசும் நிறைய இருக்கோ இல்லையோ? அதுதான் பிறக்கமாட்டேன் என்கிறது. சோத்துக்கு விதியற்று இருந்தால் பிறக்குங்கள்" என்றுள் விசாலம்.

"நாகசாமியின் குலம் விளங்கச் சாவித்திரிக்கு ஒரு பிள்ளை பிறக்கத்தான் வேணும்" என்றுள் பாட்டி.

"அவள் மாமனுர் மாமியாருக்கு இருக்காதோ, பாவம்! ஒரு சாந்தி, பரிகாரம் பண்ணமாட்டாளோ!" என்றுள் அத்தை.

"பண்ணுமல் இருப்பாளா? பண்ணித்தான் இருப்பா; நமக்குத் தெரியவில்லை என்கிறதற்காக அவாளுக்கு ஒண்ணுங் கிடையாதுன்னு சொல்லிப்பிடலாமா?" என்றுள் பாட்டி.

"சாந்தி, பரிகாரத்திலேதான் அத்தனையும் இருக்காக்கும்! நாம்ப, ஜானகிக்கு எல்லாம் செய்யலையா?" என்றுர் ராமசாமி ஐயர்."

"அவாவா தலையெழுத்து வேறே இருக்கோன்னு!" என் றுள் அத்தை. அவளுக்கும் தன் நினைவுதான். "தன்னைப் போலவா சாவித்திரி? தனக்கு அண்ணுவின் குழந்தைகள் இருக் கிறுர்கள்; தனக்கென்று தனியாக இல்லாவிட்டால் என்ன?" என்று நினைத்தது அவள் மனது.

"அக்கா கல்யாணத்திற்குத்தான் அத்தங்காள் வருவா ளாம்மா? அக்கா கல்யாணம் எப்போம்மா?" என்று கேட்டாள் அவர்கள் பேச்சைக் கவனித்துக்கொண் டிருந்த சுந்தரி.

"உங்கப்பா, 'மாப்பிள்ளை பார்க்கிறேன்' என்று வரு கிறப்போ! அவருக்குத்தான் கல்யாணத்துக்குப் பெண் இருக்கு என்கிற நினைவையே காணுமே!" என்றுள் விசாலம்.

"ஜம்புநாதனைப்போல் ஒரு பிள்ளையும் அகிலாண்டத்தைப் போல் ஒரு பெண்ணும் நம்மாத்துக்கு இப்போ வேணும். அது

எங்கே கிடைக்கப் போகிறது?'' என்றாள் பாட்டி.

''ஜம்புநாதன் பட்டணம் போகிறான். நல்ல பிள்ளையாகப் பார்த்துக்கொண்டு வரட்டும்'' என்றாள் அத்தை.

''அண்ணாவுக்குக் கல்யாண மாம்மா? அதுக்கா, பாட்டி, 'அக்கா மாதிரி பெண் வேணும்' என்கிறா?'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள் சுந்தரி.

''போடீ; பெரியவா பேசற இடத்திலே இருந்துண்டு வம்பு கேட்கப்படாது; போ'' என்று அதட்டினாள் விசாலம்.

''வேணும் நன்னா! அம்மா வசாளா! அதுதான் அப்பவே பேசாதேன்னு சொன்னேன்'' என்றாள் ஸ்ரீமதி.

''என்ன வசுப்புட்டாள். பிரமாதம்! ஒண்ணுமில்லே. சாவித்திரி அத்தங்கா என்னைப்பற்றித்தானே எழுதியிருக்கா; நான்தானே அவா ஊருக்குப் போயிருந்தேன். அவாத்திலே என்ன தெரியுமா? இங்கேபோல் இல்லை. தரையெல்லாம் கண்ணாடியாப் பளபளன்னு மின்னறது! காலை வச்சால் வழுக்குன்னு வழுக்கிடும்'' என்றாள் சுந்தரி, அத்தங்காள் வீடு நினைவு வந்தவளாய்.

அவள் பட்டணம் போய் வந்ததிலிருந்து அவளுக்கு அத்தங்காள் அகத்தின் பெருமைதான்! அவள் தமக்கைகள் யாரும் பாராததை அவள் பார்த்து வந்துவிட்டாள். அந்தச் சந்தோஷம் வேறு அவளுக்கு.

''போறும், உன் பொய்யும் புளுகும்!'' என்றாள் ஸ்ரீமதி அதைக் கேட்கப் பொறுக்காதவளாக.

''பொய்யா? யாரு சொன்னா? அம்மாவைக் கேள். வைரத்தாலே வாசற்படிக்கெல்லாம் திரை கட்டித் தொங்கவிட் டிருக்காளாக்கும்! விளக்கு ஏத்தினால் பள பளன்னு கண்ணைப் பறிக்கிறது'' என்று மேலும் பெரிதாக ஆரம்பித்தாள் சுந்தரி.

'அவளை நிறுத்துவது சாத்தியமல்ல. பேச்சு, பலமாகப் போய்விடும். அப்புறம் பெரியவர்கள் காரியமாகப் பேசிக் கொண்டிருக்கும் இடத்தில் சத்தம் போடுவதற்கு அம்மா தன்னைத்தான் வைவாள். அம்மா எப்பொழுதும் அப்படித் தான். சுந்தரி பண்ணுகிற தப்புக்கும் அவர்களைத்தான் கோபிப்பாள். சுந்தரியை ஒன்றும் சொல்லமாட்டாள்' என்று

ஸ்ரீமதி நினைத்துப் பேச்சை நிறுத்திக்கொண்டாள். அந்தப் பெண்கள் எல்லோருமே அவ்விதந்தான் நினைத்தார்கள்; சுந்தரிக்குத் தங்கள் வீட்டில் சலுகை அதிகமென்று. அவர்களுக்கே கூட அவளிடம் ஆசையும் அதிகமாகத்தானே இருக்கிறது. அவள் கடைக்குட்டி யல்லவா? எல்லோருக்கும் அவளிடம் ஆசை பொங்கத்தானே பொங்கும்?

"என்ன, பையன் பட்டணம் போகிறானுமே!" என்று கேட்டுக்கொண்டு எதிர் வீட்டுத் தியாகராஜையர் இதன் நடுவில் கூடத்தில் நுழைந்தார். அந்தப் பெண்களிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது என்கிற சந்தோஷத்துடன், "வாருங்கள், வாருங்கள்!" என்று வரவேற்றுக்கொண்டு சமையல் அறையிலிருந்து விரைந்து வெளிவந்தார் ராமசாமி ஐயர்.

"பட்டணத்துக் கலாசாலை இவ்விடத்தைவிட நன்றாக இருக்கும் இல்லையா?" என்றார் தியாகராஜையர்.

"ஆமாம், பி. எஸ்ஸி. பாருங்கோ; அங்கே படித்தால் விசேஷந்தான்; அங்கிருக்கிற 'லேபரடரி' மாதிரி இங்கே வருமா?"

"அது வாஸ்தவம், பட்டணத்துப் படிப்பு என்ன இருந்தாலும் மேல்தான். மதராஸில் படித்தானென்று சொல்லிக்கொள்வதே நன்றாக இருக்கிறது. ஆனால் உங்களுக்குத்தான் அவனை அனுப்புகிறது சிரமம்."

"சிரமம் என்ன? ஊரிலே பிள்ளைகளெல்லாம் போகவில்லையா?"

"இவன் உங்களுக்கு ஒரே மகனாச்சே! அருமை இல்லையா?"

"படிப்பு விஷயத்திலே அருமை உண்டோ? படிப்புக்குக் காண்பிக்க வேண்டிய அருமை யெல்லாம் எந்த இடத்திலே நல்ல படிப்பு இருக்கிறதோ அந்த இடத்திற்கு அனுப்பிப் படிக்க வைக்கிறதுதான். நன்றாகப் படிக்கும் பிள்ளைகளுக்குத்தான் இந்தச் சலுகை காண்பிக்க முடியும்" என்றார் ராமசாமி ஐயர். இப்படிச் சொல்வதால் தியாகராஜையர் மகன் நடராஜனைச் சுட்டிக் காண்பிக்கிற மாதிரி ஆகிவிட்டதோ என்கிற சம்சயம் உண்

டாயிற்று அவருக்கு. ஆனால் தியாகராஜையர் அதை அவ் விதம் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

"ஆமாம், ஆமாம்; வாஸ்தவம்; நடராஜனைப்போல் படித் தால் அவனை எந்த இடத்திற்கு அனுப்பிப் படிக்க வைக்கிறது? ஜம்புநாதன் நல்ல புத்திசாலி; நன்றாகப் படிக்கிறான்; அவனைத் தான் அது, இது என்று பாராமல் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அவர்களால் ஊருக்கும் நல்லது உண்டாகும்" என்று ஆமோதித்தார் தியாகராஜையர்.

"அதுதான் எனக்கு; இவன் நன்றாகப் படித்து, நம்ம ஊரி லேயே தொழிலுக்கு வேண்டுமென்கிறதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறது எனக்கு. எத்தனை காலம் நாம் சகலத்துக்கும் மற்ற நாடுகளை எதிர்பார்த்துக்கொண்டு இருக் கிறது? நமக்காக எல்லாம் தெரிய வேண்டுமென்றால் நம்ம பிள்ளைகள்தாமே படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். வேறு தேசத்துப் பிள்ளைகள் செய்யவில்லையா? நம்ம பிள்ளைகளும் அதுபோலத்தானே" என்றார் ராமசாமி ஐயர்.

"நீங்கள் சொல்வது சரியான வார்த்தை. நமது பிள்ளை களுக்கு மட்டும் அதற்கு வேண்டிய புத்தி கிடையாதா? அந்தப் பிள்ளைகள் படித்துக் கற்றுக்கொண் டிருக்கிறார்கள். நம்மவர்கள் அது செய்யவில்லை. இந்த வித்தியாசந்தானே. இப்பொழுது தான் அந்தப் படிப்பையெல்லாம் நம்ம ஊரிலேயே கற்றுக் கொடுக்கிறார்களே!" என்றார் தியாகராஜையர் பின்னும் ஆமோ தித்துக்கொண்டு.

"இவ்விடத்தில் இருக்கும் படிப்புப் போதவில்லை யென்றால் நான் சீமைக்கு அனுப்பவும் தயார் ஸார்! அப்படித்தான் எண் ணிக்கொண் டிருக்கிறேன்" என்றார் ராமசாமி ஐயர்,உத்ஸாகத் துடன். பிள்ளையைப் படிக்க வைப்பதில் தேசத் தொண்டு நிறைந்து கிடப்பதாக அவருக்குச் சந்தோஷம்.

'அவன் படித்து நாட்டின் நிலைமையையே உயர்த்திவிடப் போகிறான்; நமது தொழில்களை யெல்லாம் விருத்தி செய்யப் போகிறான்.' 'இவ்விதந்தான் அவர் மனக்கோட்டை கட்டினார். அவனும் சம்பாதித்துக்கொண்டு ஊருக்கும் சுபிட்சம் வரும் வகையில் செய்யப் போகிறான்; இரண்டு காரியமும் அதில்

அடங்கியிருக்கின்றன' என்று எண்ணித்தான் அவர் மகிழ்ந்து போனார். இதுமாதிரி நாட்டின் க்ஷேமத்திற்காக முற்போக்கு எண்ணங்கள்தான் எல்லோருக்கும் வேண்டும் என்பது அவர் அபிப்பிராயம்.

"என்ன ஸார், நமக்குச் சுதந்தரம் கிடைத்துவிட்டது; நம்மை நாமே ஆண்டுகொள்ளுகிறோம். அப்படி யிருக்கும் பொழுது நாட்டின் பொருள் உற்பத்தியையும் நாமே செய்து கொள்ள வேண்டாமா? பிற நாடுகளையா எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறது. அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்க முடியா மல் கஷ்டப்படுகிறோமே; அப்படியா இருக்கிறது? நமக்கு வேண்டுமென்கிற உணவுப் பொருளைக்கூட விருத்தி பண்ணிக் கொள்ளத் தெரியவில்லையே" என்று விசனித்தார் ராமசாமி ஐயர்.

"என்ன ஸார், பண்ணுகிறது? உங்களைப்போல் படித்து விஷயம் தெரிந்தவர்கள் காரியத்திலே சிரத்தை எடுத்துக் கொள்ளாமல் சும்மா இருந்துவிடுகிறார்கள். 'சர்க்கார் உத்தி யோகம் வேண்டுமானால் பார்க்கிறேன்' என்கிறார்களே தவிர நில புலன்களைக் கவனிக்கிறதில்லை. அவர்கள் கவனித்தால் அல்லவா சரியாக வரும். இப்போது பாருங்கள். ட்ராக்டர் போட்டு உழுதால் பிரமாதமாக விளையும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்."

"அதை எந்தக் குடியானவன் கேட்பன். நாமல்லவோ அதைச் செய்து பார்க்க வேண்டும்" என்றார் தியாகராஜையர்.

"ஆமாம்; விளைகிறது சரிதான்; பின்னால் பூமிக்குச் சக்தியே குறைந்து போகிறதாமே; அது தெரியுமா உமக்கு?"

"அதற்குத்தான் ஒரு வருடம் ட்ராக்டர் போட்டு உழுதால் மறு வருடம் அதுமாதிரி செய்கிறதில்லை. அது நிலமும் கெட்டுப் போகாமல் விளைச்சலையும் விருத்தி செய்கிறதாம்; சொல்லுகிறார் கள். செய்துதான் பார்ப்போமே என்கிறது எனக்கு. ஆனால் ட்ராக்ட்ர் விலைதான், ஆனை விலை, குதிரை விலையாக இருக்கி றதே! பத்துப் பன்னிரண்டாயிரம் ஒரே அடியாகச் செலவு செய்ய நான் எங்கே போவேன். அதுதான் ஜம்புநாதன் பட்டணம் போகிறானே; அங்கே கம்பெனிகளில் ட்ராக்டர்

45810

வாடகைக்குக் கொடுப்பார்களா என்று விசாரிக்கச் சொல்லுங்களேன்,"

"அவனுக்கு அவ்வளவெல்லாம் விசாரிக்கச் செய்யத் தெரியுமா?" என்று சந்தேகித்தார் ராமசாமி ஐயர்.

"கணேசன் ஒத்தாசை செய்யமாட்டாரா? அவரிடம் சொல்லி விசாரிக்கட்டுமே. அதைச் சொல்லிவிட்டுப் போகத் தான் முக்கியமாக வந்தேன். ஏதாவது செய்ய வேண்டும்; சும்மா இருக்கப்படாது" என்றார் தியாகராஜையர்.

இதுமாதிரி மேலும் வற்புறுத்திச் சொல்லிவிட்டு, ஜம்பு நாதனையும், "என்ன, போய்விட்டு வருகிறாயா அப்பா? நம் திருவானைக்காவுக்கே பிரசித்தி வரும்படி நன்றாகப் பாஸ் பண்ண வேண்டும். எனக்குப் படிக்கிற பிள்ளைகளிடம் எப் பொழுதும் பிரியந்தான். நடராஜனுக்குத்தான் படிப்பு வர மாட்டேன் என்கிறது" என்று ஜம்புநாதனைப் புகழ்ச்சியாகப் பேசின அதே தோரணையில் மகனையும் குறைவாகச் சொல்லி விட்டுச் சென்றார். வாழ்க்கையில் எதையும் அதிகம் மனத் திற்கு எடுத்துக்கொள்ளாமல் சமமாகப் பார்க்கிறவர் அவர் என்பதை அது வெளிக்காட்டிற்று.

அவர் போன பிறகு, "தியாகராஜையர் என்ன சொல்லி விட்டுப் போகிறார்? ஜம்புநாதனையே ட்ராக்டர் வாங்கி அனுப்பச் சொல்லுகிறாரா?" என்று ராமகிருஷ்ணையர் கேட்டதற்கு, "அதொன்றும் அவ்வளவு எளிதான காரியமாகத் தெரிய வில்லை. ஆஸ்தியைக் கொடுத்துத்தான் அதை விலைக்கு வாங்க முடியுமென்று தோன்றுகிறது. ஒருகால் வாடகைக்குக் கிடைக் குமா என்று பார்க்கச் சொல்லுகிறார். பாவம், அவருக்கு உணவுப் பிரச்சினையைத் தீர்க்க ஏதாவது செய்து பார்க்க வேண்டும் என்கிற ஆசை" என்றார் ராமசாமி ஐயர்.

"வீண் நஷ்டத்துக்குத்தான்; வேறொன்றும் இல்லை!" என்று ஒரே வார்த்தையில் சொல்லிக்கொண்டு ராமகிருஷ்ணையர் தோட்டத்திற்குச் சென்றுவிட்டார். ட்ராக்டர் விலை அதிகம்; வாங்குவது எளிதல்ல என்பதைக் கேட்க அவருக்கு ஒரு வகை மன நிம்மதி ஏற்பட்டது.

'அவர் பிடிவாதத்தை மாற்றுவது நம்மால் ஆகாதுபோல்

இருக்கிறது' என்கிற விசாரம் ஏற்பட்டது ராமசாமி ஐயருக்கு. 'தியாகராஜையர் செய்து பார்க்கட்டும்; அதற்கு நல்ல பலன் கிடைத்தால், அதிலிருந்தாவது தெரிந்துகொள்ள மாட்டாரா பார்ப்போம்' என்று உடனே சமாதானம் செய்துகொண்டார். அதனால் மகனிடம் நினைவாகச் சென்னை சென்றதும் முதல் காரியமாகக் கணேசனிடம் தெரிவித்து ட்ராக்டர் சமாசாரம் விசாரித்து எழுதும்படி சொல்ல அவர் மறந்து போகவில்லை.

## 8

ஜம்புநாதன் ரயிலேறிய பிறகு வெகு நேரம் தூக்கம் வரும் வரையில் தன் மனுஷ்யர்களைப்பற்றியே பசுபதியிடம் பேசி வந்தான். பட்டணம் போக எவ்வளவோ உத்ஸாகத்தில் அவன் புறப்பட் டிருந்தாலும் முதல் முதல் சொந்த மனிதர்களை விட்டுத் தனியே செல்கிறானல்லவா? அது அவனுக்கு மிகுந்த வருத்தமாகவே இருந்தது. மனத்தை என்னவோ வேதனை செய்தது. ரயிலிலிருந்த கூட்டத்திலும் சத்தத்திலும் அவனுக்கே கூட இருந்த ஒருவகைப் பரபரப்பிலும் தூக்கமே வர மறுத்தது. 'அகத்தில் அம்மா, பாட்டி, அத்தை இவர்கள் தன்னைப் பிரிந்திருக்க என்ன கஷ்டப்படுவார்கள்! அவர்களுக்குத்தான் தன்னிடத்தில் எத்தனை அன்பு!' இவைகளையெல்லாம் பெரிதாகச் சொல்லி வந்தான்.

கூடவே இருந்து அவைகளை அநுபவித்துக்கொண் டிருக்கும் போது அவைகளுக்கு அவன் அலுத்துக்கொண் டிருக்கிறான். இப்பொழுது அவைகள் அவனுக்கு எவ்வளவோ உயர்வாகத் தோன்றிக்கொண் டிருந்தன.

"அப்பாகூடத்தான் வெளிக்குக் காண்பித்துக்கொள்ள மாட்டாரே தவிர, உள்ளுக்குள் என்னைப் பிரிந்து கஷ்டந்தான் படுவார். எல்லாரையும் விட அத்திம்பேரைச் சொல்லு! அவருக்கு அதிகம் தோன்றும். என்னிடத்தில் அவருக்கு அலாதியான பிரியந்தான். 'நான் ஏதோ மேதாவி, தனியாகக் கழற்றிவிடுவேன்!' என்கிற நம்பிக்கை. "புறப்படுமுன் என் தங்கைகளைப் பார்த்தாயே; அவர்கள் கலகலப்பே இல்லாமல்

இருக்க வில்லையா? அவர்களுக்கு நான் எங்கேயோ போய் விடுகிற மாதிரி துக்கம். 'அச்சான்யம்' என்று அகத்தில் கோபிப்பார்கள் என்றுதான் சுந்தரிகூட அழாமல், 'அண்ணு' நீ எப்போ திரும்பி வருவே? எத்தனை நாளாகும்?' என்றெல்லாம் கேட்டுக்கொண் டிருந்தாள். அகிலாண்டத்தின் கண்களில் ஜலமே ததும்பிவிட்டது. கண்ணிலே தூசி விழுந்த மாதிரி காண் பித்துத் துடைத்துக்கொண்டாள்.''

இவ்விதம் ஒவ்வொருவரையும் தனித்தனியாக நினைத்துச் சொல்லிவந்தான்.

பசுபதியும் அவன் ஏதோ இதுமாதிரி பேசிச் சொந்த மனிதர்களை விட்டுப் பிரிந்த அவனுடைய மன ஏக்கத்தைக் குறைத்துக்கொள்ளட்டும் என்று சும்மாக் கேட்டு வந்தான். 'அவனுந்தானே பட்டணத்திற்குத் தனியாகப் போகிருன்! அவனுக்கு மனிதர்கள் இல்லையா? அவனும் அவர்களை விட்டுப் பிரிந்து வரவில்லையா?' என்ருல், அவனுடைய மாதிரி வேறு. அவர்கள் நாலைந்து பேர் அண்ணன் தம்பிகள். ஏற் கனவே அவனது சகோதரர்கள் வெளி இடங்களில் வேலைக் காகவும் படிப்புக்காகவும் சென்றிருக்கிருர்கள். அவனுங்கூட அவர்களுடைய இடங்களுக்கெல்லாம் சென்று வந்திருக்கிருன். ஆகையால் அவன் வீட்டை விட்டுப் புறப்படுவது, இது முதல் தடவை அல்ல. அதனுல் ஜம்புநாதனுக்குத் தோன்றினபடி அவனுக்குத் தோன்ற நியாயமில்லை. அவன் பெற்ருேரும் அவ்வளவாக அவனைப் பிரிந்து கஷ்டப்படமாட்டார்கள். இவ் விதம் நினைத்துத்தான் பசுபதி ஜம்புநாதனைப் பேசவிட்டுச் சும்மாக் கேட்டு வந்தான்.

வாஸ்தவத்தில் ஜம்புநாதனுக்கும் அதுபோல் தன் வீட்ட வர்களின் அன்பைப்பற்றி யெல்லாம் நினைத்துப் பேசினதில் சிறிது சமாதானம் ஏற்படத்தான் ஏற்பட்டது. பேச்சை நிறுத்தி, ரயில் ஸ்டேஷன் ஸ்டேஷனுக நின்று செல்வதையும், நின்ற இடங்களில் ஜனங்கள் பாதி ராத்திரியானுலும் விழித்திருந்து ஏறி இறங்குவதையும், அந்த ரயிலில்—இரவு பகல் என்ற வித் தியாசமின்றிக் காலம் செல்வதுபோல்—விடாமல், குறிப்பிட்ட இடத்தை நோக்கிச் சென்றுகொண் டிருப்பதையும், ஒரு வித

அதிசயத்தோடு பார்த்துச் சென்றான்.

அதிகப் பிரயாணம் செய்திராதவனுகையால் அவனுக்கு எதுவுமே விநோதமாகப் பட்டுக்கொண் டிருந்தது. இயற்கையின் தத்துவத்தைப்போலவே ரயிலின் தன்மையும் இருப்பதாக நினைத்தான். ரயிலும் தன் வேலையைத் தானுகவே பொறுப்புடன் செய்துகொண்டு போகிற மாதிரி இருந்தது அவனுக்கு. ஒவ்வொருவரையும் அவரவர் செல்ல வேண்டுமென்கிற இடத்திற்குத் தன் வழியில் இறக்கிச் சென்றுகொண்டிருந்ததல்லவா அது? திருச்சியிலிருந்த அவனை அவன் முயற்சி எதுவுமின்றி ஓர் இரவில் சென்னை கொண்டுபோய்ச் சேர்க்கிறதே! மனிதனை ஒரு சூழ்நிலையிலிருந்து மற்றொரு சூழ்நிலைக்கு இழுத்துச் சென்று அவன் விதியைத் தெய்வத்தைப் போல் அல்லவா அது அமைக்கிறது!

இவ்வளவு நாளும் அவன் அகத்தில் இருந்ததற்கும், இனி அந்தச் சென்னை ஹாஸ்டலில் இருக்கப் போவதற்கும் எத்தனை வித்தியாசம்! ஒரே மட்டில் அவனை நேசித்து அன்பு பாராட்டும் சுற்றத்தாரின் மத்தியில் இருந்துவிட்டு; முன் பின் பார்த்திராத பல பிள்ளைகளுடன் அவன் இனி வசிக்கப்போகிறுன். அவர்கள் பல நாட்டினரும் பல ஜாதியினருமாக இருப்பார்கள். அவர்களுடைய நெருங்கின சகவாசத்தால் அவனேகூட என்னவெல்லாம் தெரிந்துகொள்வானே? அவனுடைய வாழ்க்கையிலேகூட மாறுதல்கள் ஏற்படக் கூடுமோ?

இவ்விதமெல்லாம் அவன் தானே எண்ணமிட்டுக் கொண்டு சென்றான்; ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்தவாறு. விடியற்காலையில்தான் அவன் சிறிது கண்ணயர்ந்திருப்பான். காலைச் சூரியனது செங் கிரணங்கள் அவன் கண்ணுள் புகுந்து அவனை எழுப்பின. அதே சமயத்தில் பசுபதியும், "எழும்பூர் வந்துவிட்டது, எழுந்திரு!" என்று அவன் தோளைத் தட்டி எழுப்பினான்.

இதுவரையும் சும்மா இருந்ததற்கு ஈடு செய்வதுபோல், வண்டி நின்றதும், பிரயாணிகள் அவசர அவசரமாக ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு கீழிறங்கினார்கள். அந்தக் கூட்டத்தோடு ஜம்புநாதனும் பசுபதியும் பிளாட்பாரத்தில் இறங்கி

நின்றனர். ஜம்புநாதன் தனக்காகக் கணேசன் வந்திருக்கிருரா? என்று நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். அவர் வருவார் என்றுதானே அத்தங்காள் எழுதியிருந்தாள். ஆம்; அதோ இரண்டாவது வகுப்பு வண்டிகள் நிற்கும் இடத்தில் அவனுக்காகப் பார்த்துக்கொண்டு அவர் வருகிருர் என்று தெரிந்தது ஜம்புநாதனுக்கு. தன்னை அவர்கள் அந்த வண்டியில்தான் எதிர்பார்த்திருக்கிருர்கள். அவர்கள் அவ்விதம் நினைத்திருக்கும்போது அவன் மூன்ருவது வகுப்பு வண்டியில் வந்தது அவனுக்குச் சிறிது அவமானமாகப் பட்டது.

"எங்கடா? உன்னைச் சந்திக்க யாரும் வரவில்லையா?" என்று கேட்டான் பசுபதி. அவனைச் சந்திக்க அவன் தூரத்துப் பந்து ஒருவர் வந்திருந்தார். நேராகத் தாம்பரம் போக இருந்த அவன், அவருடைய வற்புறுத்தலுக்காக அவர் வீட்டுக்குப் போவதாக இருந்தான்.

"என் அத்தங்காளின் அகமுடையான் அதோ வந்திருக்கிருர். என்னை இரண்டாவது வகுப்பு வண்டிகளில் தேடுகிருர் போல் இருக்கிறது" என்ருன் ஜம்புநாதன்.

"அவர் பெரிய அந்தஸ்தில் இருப்பவர் அல்லவா? அவருக்கு அதற்குக் கீழ் வண்டியில், தனக்குச் சொந்த மனுஷ்யர்கள் வரக் கூடும் என்கிற எண்ணங்கூட இல்லைபோல் இருக்கிறது, பாவம்!" என்ருன் பசுபதி.

"சரி, வா; அவரிடம் நாம் வந்துவிட்டதைத் தெரிவித்துக் கொள்வோம். சற்று இருங்கள் ஸார். இவனை இவன் மனிதர்களிடம் சேர்த்துவிட்டு வந்துவிடுகிறேன்" என்று தனக்காகக் காத்திருப்பவரிடம் சொல்லிவிட்டு, ஜம்புநாதனை அழைத்துக்கொண்டு சாவித்திரியின் கணவரை நோக்கிக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு சென்ருன், பசுபதி.

சாவித்திரியின் கணவன் கணேசனும் தேடுகிலும் பார்த்துக்கொண்டு இவர்களை நோக்கி வந்துகொண் டிருந்தார். அவர் நிமிர்ந்த நடையும் கம்பீரப் பார்வையும் அந்தக் கூட்டத்திலும் அவரைத் தனியாகத்தான் எடுத்துக் காண்பித்தன. அதிகம் சிவப்பு இல்லாவிட்டாலும் கறுப்பு அல்ல அவருடைய நிறம்.

இவர்கள் அவரை நெருங்குமுன் அவரும் இவர்களைப் பார்த்துவிட்டார். "அப்பா வா, ஜம்புநாதா! நெடுகிலும் அங்கிருந்து உன்னைத் தேடி வருகிறேன், நான்" என்ருர்.

"உங்களைப் பார்த்துவிட்டுத்தான் வருகிருேம். நீங்கள் இரண்டாம் வகுப்பு வண்டிகளில் தேடினீர்கள்போல் இருக்கிறது" என்ருன் பசுபதி, நண்பனுக்காகப் பதில் சொல்லிக்கொண்டு. ஜம்புநாதன் ஏதோ தயங்குகிருனே என்கிறது அவனுக்கு.

"இது யார் தெரியவில்லையே?' என்கிற தோரணையில் கணேசன் பசுபதியைப் பார்க்கவும், ஜம்புநாதன் தன் தயக்கத்தைச் சமாளித்துக்கொண்டு பசுபதியை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

"சரி வாருங்கள்; நாழிகை யாகிவிட்டது. காருக்குப் போவோம்" என்று கணேசன் சொல்லவும், "இல்லை; மன்னிக்க வேண்டும். நான் வருவதற்கு இல்லை. எனக்கு மனுஷ்யர்கள் வந்திருக்கிருர்கள். அவர்களோடு நான் போக வேண்டும்" என்று சொல்லிவிட்டு, "ஜம்புநாதா ,நாளை தாம்பரத்தில் சந்திப்போம்" என்றி கூறி விடை பெற்றுக்கொண்டான் பசுபதி.

"நீயும் வருகிருய் என்றல்லவா நினைத்தேன். ஏன்? ஜம்புநாதனேடு வருவதற்கென்ன?" என்று கணேசன் அழைத்ததற்கு, "இல்லை ஸார், மன்னியுங்கள். அவர்கள் காத்திருக்கிருர்கள். இன்னெரு சமயம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்ருன் பசுபதி.

அவன் போன பிறகு அவர்கள் வெளியில் வந்து அவர்களுக்காகக் காத்திருந்த பெரிய காரில் ஏறிக்கொண்டார்கள். காரும் வேகமாகச் செல்லத் தொடங்கிற்று. மெத்தென்று மெத்தையிட்ட விஸ்தாரமான அதன் ஸீட்டில் உட்காரவுமே ஜம்புநாதனைச் சுகமாய்ப் பின்னுக்குச் சாய வைத்தது, அது. அப்புறம் அவன் இரு புறமும் உள்ள காட்சிகளைப் பார்த்துச் செல்லக்கூட மறந்து போனுன். ஆகாய மார்க்கத்தில் மிதப்பதுபோல் இருந்த அவனுக்குக் கார் சாதாரண ரோட்டில்

தான் செல்கிறது என்கிறதுகூட நினைவுக்கு வரவில்லை. இதற்கு முன் அவ்வளவு நல்ல புத்தம் புதிய காரில் அவன் பிரயாணம் செய்ததில்லை அல்லவா? அதன் தனிச் சுகம் அவனை அப்படியே கவர்ந்துகொண்டது. அவன் தன்னையே மறந்துபோனான்.

"வீட்டில் அப்பா எல்லோரும் சௌக்கியமா?" என்று கணேசன் கேட்ட பிறகே அவனுக்குத் தன் நினைவு ஏற்பட்டது.

"உம்; சௌக்கியந்தான்; உங்களை ரொம்ப விசாரித்ததாக அப்பா சொல்லச் சொன்னார்" என்று பதிலளித்தான்.

"ரயிலில் ரொம்பக் கூட்டமோ? படுத்துத் தூங்கச் சௌகரியம் இல்லையோ?" என்று கணேசன் கேட்டார். "ஆமாம், உட்காரத்தான் இடம் கிடைத்தது. காலேஜ் திறக்கிறார்கள் அல்லவா? மாணவர்களே நிறைய இருந்தார்கள்" என்றான் ஜம்புநாதன்.

"அதற்குத்தான் இரண்டாவது வகுப்பில் வந்திருக்க வேண்டும்" என்றார் கணேசன்.

'அதிகம் செலவாகாதா?' என்று சொல்ல நினைத்தான். ஆனால் பணச் செலவைப்பற்றிக் கணேசனிடம் பேசுவது அவனுக்கு அவமானமாக இருக்கும்போல் பட்டது.

'இவ்வளவு பெரிய கார் வைத்திருப்பவரிடம் பணச் செலவைப்பற்றிச் சொன்னால்கூடப் புரியவா போகிறது?' என்றும் நினைத்தான்.

"இதோ வீட்டுக்கு வந்துவிட்டோம்!" என்று கணேசன் சொன்னபொழுது கார் ஒரு கேட்டினுள் நுழைந்துகொண்டிருந்தது. ஜம்புநாதனும் வீட்டைப் பார்க்க ஆவலாகக் கழுத்தை நீட்டி முன்புறம் பார்த்தான். பெரிய வெளுப்பான கட்டிடம் ஒன்று தெரிந்தது. அதன் முன்னால் கம்பளம் விரித்தாற்போல் இருந்த பச்சைப் புல் தரையும், அதற்கு இரு புறமும் வண்டிகள் செல்லப் புதிதாகப் பண்படுத்தப்பட்ட சிவந்த பாதையும், பாதையின் ஓரத்தில் ஒழுங்காக, வேலிகளாக வெட்டப்பட்ட செடிகளும் காணப்பட்டன. பங்களாவிற்கும் கேட்டிற்கும் அரை பர்லாங்கு தூரம் இருக்கலாம். கேட்டிலிருந்தே மரம், மட்டைகள் ஒன்றும் மறைக்காமல் கட்டிடம் வெகு நேர்த்தியாகத் தெரிந்துகொண்டிருந்தது. காலை

மஞ்சள் வெயில் சுற்றியிருந்த பசுமைக்கு ஒரு வகைத் தங்க மெருகு கொடுத்துக்கொண் டிருந்தது. இவைகளை ஜம்புநாதன் பார்த்து மனத்துள் ஏற்றுக்கொள்ளுமுன் கார் பங்களாவின் 'போர்ட்டிகோ'வை அடைந்துவிட்டது. அவர்களும் இறங்கி ஞர்கள்.

வீட்டின் அளவிற்கு நீண்டிருந்த வாசல் வராந்தாவில் ஒரு புறமாகத் தொங்கிக்கொண் டிருந்த விசுபலகையில் உட்கார்ந் திருந்த கணேசனின் தந்தை இவர்களைப் பார்த்தவுடன், "ராம சாமியின் பிள்ளையா? ராமசாமியைப்போலவே இருக்கிருன்" என்று ஜம்புநாதனை வரவேற்றுவிட்டு, "உனக்குக் கட்சிக்காரர் கள் வந்திருக்கிருர்கள். ஆபீஸ் அறையில் உட்கார்த்தியிருக் கிறேன்" என்று மகனுக்கும் சமாசாரம் சொன்ஞர்.

"இதோ போகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கணேச னும், "சின்னம்மா எங்கடா?" என்று ஜம்புநாதனின் சாமான் களை உள்ளே எடுத்துப் போக வந்த ஆளிடம் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார். ஜம்புநாதன் தானும் அவரைப் பின்தொடரத்தானே வேண்டும் என்று நினைத்துக் கிளம்புமுன், "இதோ பார்; சாவித்திரி! ஜம்புநாதனை அழைத்து வந்துவிட்டேன். இனி உன் பொறுப்பு" என்று அப்பொழுதுதான் அங்கே வந்த சாவித்திரியிடம் கணேசன் கூறிஞர்.

அவன் அத்தங்கார் சாவித்திரியா அது! ஜம்புநாதன் திகைத்தே போஞன்! சாவித்திரியின் செளந்தரியம் அவனைப் பிரமிக்க அடித்தது. உயர்ந்து கொடிபோல் வளர்ந்திருந்த அவள் சிவந்த உருவத்தை அதிசயத்துடன் பார்த்தான். அவன் சிறு பையஞக இருந்தபொழுது அழகென்று மனத்தில் நினைத்துவைத் திருந்த உருவத்திற்கும் இப்பொழுது அவன் கண்முன் பார்க் கும் உருவிற்கும் ஏதாவது ஒப்பு இருக்கிறதா? அவஞல் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை! பாவம். ஜம்புநாதன்! அழ கான பெண்களுக்கு யெளவனமும் சேரும்பொழுது மெருகிட் டுப் பிரகாசிக்கும் அந்த வனப்பின் சிறப்பை என்ன கண் டான்! அவைகளைத் தெரிந்துகொள்ள அவனுக்கு வயது போதுமா?

அவள் அப்பொழுதுதான் ஸ்நானம் செய்து தலையைக் கோதி முடிந்திருந்தாள். காதோரமாகச் சில மயிர்ச் சுருள்கள், அழுத்தி வாரப்படாமையால் சுருண்டு தொங்கிக்கொண்டு முகத்துக்குப் பின்னும் அழகு கொடுத்தன. அவளது பிரகாச மான நெற்றியில் இட்டிருந்த சிறு குங்குமப் பொட்டு, ஏதோ தனி ஆபரணம்போல் சோபையை அளித்துக்கொண் டிருந்தது. பள பளவென்று கறுத்து மின்னிக்கொண் டிருந்த கண்களும் நீண்ட மூக்கும் மாம்பழம் போன்ற முகமுமாகக் கவிகள் வருணிக்கும அழகிய நங்கையாகவே இருந்தாள் அவள். இந்தக் காலத்திற்கு ஏற்ப முன் கொசுவம் வைத்துப் புடைவை உடுத்தியிருந்தாள். காதில் சிறு வைரக் கம்மலும், கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலியும், கைகளிலும் அதேபோல் இரண்டொரு தங்க வளையல்களுந்தான் அவள் அணிந்திருந்த நகைகள். ஜம்பு நாதன் தன்னையே வெறித்துப் பார்க்கிருன் என்பதை அறிந்தும், அவள் அதைக் காண்பித்துக்கொள்ளாமல், "ஜம்புநாதனு இது! வா அப்பா! நான் என்ன ஊகித்தும் நீ இவ்வளவு வளர்ந்து பெரியவனுகி இருப்பாயென்று நினைக்கவில்லையே! எனக்கு உன்னைப் பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அகத்தில் எல்லாரும் சௌக்கியமா? முதலில் உள்ளே வந்து காபி சாப்பிடு. அப்புறம் பேசுவோம்'' என்று அவனை வரவேற்ருள்.

"நீங்களும் ஜம்புநாதனேடு கொஞ்சம் காபி சாப்பிட்டுப் போங்களேன். ரயிலுக்குப் போக வேண்டிச் சீக்கிரமே சாப்பிட்ட தல்லவா?'' என்று கணேசனிடம் சொன்னுள்.

"சரி; சாப்பிடுகிறேன்; ஆனல் சீக்கிரம் கொடுக்க வேண்டும்'' என்ருன் கணேசன். பிறகு மூவரும் முன் டிராயிங் ரூமைக் கடந்து கூடத்துக்குச் சென்ருர்கள். அங்கே உள்ள சாப்பாட்டு மேஜையின் பக்கத்தில் போடப்பட் டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்ததும், அவர்களுக்குக் காபியைத் தயாராக வெள்ளி டம்ளர்களில் பரிசாரகன் கொண்டுவந்து கொடுத்தான். ஜம்பு நாதனல் அந்த இடத்தைச் சுற்றிப் பார்ப்பதற்குக்கூடக் கண்களைச் சாவித்திரியிடமிருந்து திருப்ப முடியாதுபோல் இருந்தது. அவள் எதிரில் இருக்கும்பொழுது அவள் முகத்தைவிட்டு அவ்

விதம் பார்வை வேறிடம் செல்ல மறுத்தது.

சாவித்திரியும் ஊரில் குழந்தைகள், பெரியவர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் விசாரிக்கத் தொடங்கினாள்.

“உன்னிடம் பேச எவ்வளவோ இருக்கும்போல் இருக்கிறது. எல்லாம் கேட்டு ஆகாதுபோல் இருக்கிறதே!” என்றாள்.

“இவ்வளவு நாள் நீ பாராமல் இருந்ததற்கு அவ்வளவையும் இந்த நிமிஷமே கேட்டுவிட வேண்டும் என்று நினைத்தாயானால் அது சாத்தியமா? அவன் பதில் சொல்லத் திணறிப் போக மாட்டானா?” என்றார் கணேசன்.

“வாஸ்தவம்; அவன் இனிமேல் நம் அகத்திலேயே இல்லாவிட்டாலும் இந்த ஊரிலேதானே இருக்கப்போகிறான். சாவகாசமாக ஒவ்வொன்றாகப் பேசிக்கொள்ளலாம். அவன் வந்து சேர்ந்ததற்குத் தந்தி கொடுத்தீர்களா?” என்று கேட்டாள் சாவித்திரி

“இதோ போய் அனுப்புகிறேன்” என்று எழுந்தார் கணேசன்.

“அம்மா எங்கே?” என்று அவன் கேட்டதற்கு, “மாடியில் இருக்கிறார்” என்று சாவித்திரி சொன்ன பதிலுக்கும் காத்திராமல் அவர் சென்றுவிட்டார்.

“தந்தி எதற்கு? நான் கடிதம் எழுதிப் போட்டுவிடலாம் என்றிருக்கிறேன்” என்று ஜம்புநாதன் அதைத் தடுக்கும் எண்ணத்தில் எழுந்திருக்கவும், “சும்மா இரு, அவர் தந்தி கொடுக்கட்டும்; தந்தியானால் இப்பொழுதே போய்ச் சேர்ந்துவிடும். நீ சாவகாசமாக லெட்டர் போட்டுக்கொள்ளலாம், அவர்களுக்கும் விசாரம் இல்லாமல் இருக்கும். உனக்காக என்ன செய்ய வேண்டும் என்கிறது எனக்குத் தெரியும். இனிமேல் நான் தானே உன்னைக் கவனித்துக்கொள்ளப் போகிறேன். என்னை நீ இவ்வளவு நாளும் பார்க்காததற்காக அசலாளென்று நினைக்கக் கூடாது. எங்கள் அப்பாவுக்கு உன் தந்தை ஆவதுபோல், எனக்கும் நீ தம்பிதான். சித்தப்பாவை விட்டால் எனக்குக் கிட்டின பந்து யார் இருக்கிறார்கள்? உன்னை இன்று பார்த்ததில் என்னுடைய சந்தோஷம் கொஞ்சமா நஞ்சமா? ஹாஸ்டலில்

இருந்தால்கூட, நீ இங்கே இருக்கிற மாதிரியே அடிக்கடி வந்துகொண் டிருக்க வேண்டும்'' என்று அன்பைக் கொட்டிப் பேசினுள் சாவித்திரி.

அவள் அவ்வளவு பிரியமாகப் பேசினவுடன் அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தயங்கினுன் ஜம்பு நாதன். அவன் தட்டுத் தடுமாறி ஏதோ சொல்ல ஆரம்பிக்கு முன், சாவித்திரி! என்று கூப்பிடும் அவள் மாமியாரின் குரல் மெத்தைமேலிருந்து கேட்டது.

"என்ன அம்மா!" என்று கேட்டுக்கொண்டே சாவித்திரி அந்தக் கூடத்தின் ஒரு புறமாக இருந்த மாடிப் படிப் பக்கம் சென்றுள்.

"அப்பா ஸ்நாநம் செய்துவிட்டாரா? இல்லாவிட்டால் செய்யச் சொல்லு. சரோஜாவாத்துக்குப் போக வேணும். கார் தயாராக இருக்கா? கடைக்கும் போக வேணுமென்று சரோஜா சொன்னுள். வருகிறதாகச் சொல்லியிருக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே சாவித்திரியின் மாமியார் படிகளில் இறங்கி வந்தாள். அவள் வெளியில் செல்ல வேண்டிப் புதுச் சேலை உடுத்திருந்தாள். கால்களில் செருப்பும் கையில் நாக ரிகமாகப் பர்ஸூம் வைத்திருந்தாள். முற்றும் நரைத்த மயி ரென்றுலும் அதை வெறும் முடிப்பு முடித்துக்கொள்ளாமல் பிச் சோடா கட்டுக் கட்டியிருந்தாள். ஜம்புநாதனின் அத்தை, அம்மா இவர்களுக்கு அவள் நிச்சயமாக வயதில் பெரியவள் தான் என்றுலும் அவள் அலங்காரம் முற்றும் வேறு விதமாக இருந்ததில், தோற்றத்திலும் மாறுதலைத்தான் அளித்தது.

"அம்மா, ஜம்புநாதன் வந்திருக்கிருன்; பார்த்தீர்களா?'' என்றுள் சாவித்திரி.

"ராமசாமி பிள்ளையா? ஏண்டாப்பா, காலேஜில் சேர வந் திருக்கிருயா? இப்பத்தான் புதுசாகப் பட்டணம் வருகிருயாக் கும்! உனக்கு எல்லாம் புதுசாக இருக்கும். திருவானைக்காவல் ஒரு நாட்டுப்புறம்! அங்கே என்ன உண்டு? ஆனுல் பக்கத்தில் திருச்சி இருக்கு. அது பெரிய ஊர்தான்'' என்றுள்.

'பட்டணங்களில் தவிர கிராமங்களில் மனிதர்கள் வசிப்பார் களோ!' என்று தொனித்தது அவள் பேச்சு. 'கிராமங்களில் வசிப்

பவர்களுக்கு என்னதான் தெரியும் என்றும்' நினைக்கிற மாதிரி இருந்தது. இதற்கு என்ன பதில் சொல்வான் ஜம்புநாதன்?' அவளும் அவன் பதிலை எதிர்பார்த்த மாதிரி தெரியவில்லை. ஏனெனில் உடனேயே, "என்ன அவர் தயாரா? சாவித்திரி, கேட்டயா?" என்று நாட்டுப்பெண்ணை விசாரித்தாள்.

"இதோ தயாராகிவிடுவாராம்; ஸ்நானம் செய்யப் போகிறாராம்" என்று, மாமனாரிடம் விசாரித்து வந்து சாவித்திரி சொன்னதற்கு, "புறப்படவே நாழிகையானால் திரும்பி வர நேரம் ஆகிவிடும். சரோஜாவுக்குச் சாப்பாட்டு வேளை தப்பிப் போகும். வேளை தப்பிச் சாப்பிட்டால் அவளுக்கு உடம்புக்கு ஆகாது; ஆகாரமும் செல்லாது" என்றாள் சாவித்திரியின் மாமியார்.

"அவ்வளவு துர்ப்பலமான உடம்பா சரோஜாவுக்கு!" என்று நினைத்துக்கொண்டான் ஜம்புநாதன். இவ்வளவு தடபுடலாக ஸ்திரீகள் வெளிக் கிளம்புவதை அவன் பார்த்ததில்லை. ஆகையால் சாவித்திரியின் மாமியாரின் தோரணை அதிசயமாக இருந்தது அவனுக்கு.

"அவர், கூட வருவது ஒத்தாசையாக இருக்கும். விலைவாசி பேரம் செய்து வாங்கச் சௌகரியமாக இருக்கும் என்று பார்த்தால், அவர் நேரம் செய்கிறாரே!" என்று அலுத்துக் கொண்டாள் அவள்.

"இதோ வந்துவிட்டேனே; போய் வந்து ஸ்நானம் செய்து கொள்ளுகிறது" என்று தயாராகக் காலில் செருப்பும் சட்டையும் அணிந்து வந்து நின்றார் அவர். 'அம்மாவோ அத்தையோ கணவரை இது மாதிரி அதிகார தோரணையில் பேசுவார்களா?' என்று ஜம்புநாதன் நினைத்துக்கொண்டான்.

ஆம்! சாவித்திரியின் மாமியார், கணவரைக் கொஞ்சம் அதிகாரமாகவேதான் நடத்தினாள். அவரும், தம் பிள்ளை, பெண்கள் நல்ல இடத்தில் கல்யாணம் செய்துகொண்டு, மேல் அந்தஸ்தில் இருப்பதன் பெருமை முழுதும் தம் மனைவியைச் சார்ந்ததாகவே நினைத்து மனைவியைக் கௌரவித்தார். அவள் காண்பித்துக்கொண்ட மாதிரியில் தன்னைவிட அவளுக்குத் தான் குழந்தைகள் அதிக பாத்தியமாக, அவருக்கும் தோன்றிக்

கொண்டிருந்தது, இப்பொழுது தங்களுக்குக் கிடைத்திருக்கும் அதிருஷ்டம் முழுதும் அவளுடையது என்று தீர்மானித்திருந்தார். சாவித்திரியைப் பிள்ளைக்கு மணந்துகொண்டதிலிருந்து ஊரில் அவர்கள் அந்தஸ்து விசேஷமாக உயர்ந்துவிட்டது. அதோடு முதல் மாப்பிள்ளை மத்திய கவர்ன்மென்டில் பெரிய உத்தியோகத்தில் டில்லியில் இருந்தான். அவனுக்கு இரண்டு குழந்தைகளும் இருந்தார்கள். இரண்டாவது மருமகனும் ஹைகோர்ட்டு ஜட்ஜின் மகன். இவ்விதம் அவர்கள் அந்தஸ்து மேலே மேலே உயர்ந்துகொண்டு போயிருக்கிறது. 'இத்தனைக்கும் நியாயமாக உரியவள் சாவித்திரியின் மாமியார் தான்.'—இவ்விதம் அந்த அம்மாள் உள்பட எல்லோர் மனத்திலும் ஊர்ஜிதம் ஆகிவிட்டது. பிறகு கேட்க வேண்டுமா அவள் அதிகாரம் வகிப்பதற்கு.

"கார் வெளியில் செல்கிறதா? எனக்கு ஸீனியர் வீட்டுக்குப் போக வேண்டும்" என்று கணேசன் சொல்லிக்கொண்டிருந்ததற்கு, "மத்தியான்னமாகப் போயேன்; லீவ்தானே! எனக்கு முக்கியமாகச் சரோஜாவைக் கடைக்கு அழைத்துப் போயாக வேணும். நேற்றே ஒரு புடவை பார்த்து ஆசைப்பட்டிருக்கிருள். அதை உடனே போய் எடுத்து வராவிட்டால் யாராவது எடுத்துப் போய்விடுவார்கள்" என்று சொல்லிக் கிளம்பிவிட்டாள், சாவித்திரியின் மாமியார்.

'அப்படி ஏதாவது தாலிக் கூறையா! முகூர்த்தம் தப்புகிறதா!' என்று யார் கேட்கிறது? கணேசனுடைய கச்சேரி வேலையும் அவள் போக வேண்டுமானால் காத்திருக்க வேண்டியதுதான்!

## 9

ஜம்புநாதனுக்காக அவர்கள் ஒழித்துவிட்டிருந்த அறை மாடியின் முன்புறம் இருந்தது. அதன் முன்பக்கத்துச் சன்னலின் வழியாக, முன் 'லானும்' கேட்டும் அதைத் தாண்டி ரோடும் அழகாகத் தெரிந்துகொண்டிருந்தன. அறையின் கிழக்குப் புறத்தில் இரண்டு சிறிய ஜன்னல்களும், இன்னொரு

புறத்தில் மாடி முன் வராந்தாவிற்குச் செல்ல வாசற்படியும் இருந்தன. எழும்பூரில் நல்ல விஸ்தாரமான தெரு ஒன்றில் தெற்குப் பார்த்த பங்களா அது. சாவித்திரியின் தந்தை அதைப் பழைய மோஸ்தரில் கட்டியிருந்தாலும், இவர்கள் அதைப் புதுப்பித்து முற்றும் மாற்றியிருந்தார்கள். நெடுகிலும் வழவழத்த தரையும், கொச்சுக் கோலமின்றி மொழு மொழு வென்று இருக்கும் சுவர்களுமாகச் செய்திருந்தார்கள். ஒவ் வோர் அறைக்கும் வித வித வர்ணப் பூச்சுக் கொடுத்து, அதற் குத் தகுந்தபடி ஸோபா முதலிய சாமான்களும் போட்டிருந் தார்கள். அதற்கு ஒத்துப் போகும்படி அறை எங்கும் மெத் தென்று இருக்கும ரத்ன கம்பளங்களும் விரிக்கப்பட் டிருந்தன.

இன்னும் விளக்குகள் முதல், நிறம் பார்த்து அலங்கார மாகப் பொருத்தப்பட் டிருந்தன். எல்லாவற்றையும் ரசித்துப் பார்த்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றுன் ஜம்புநாதன். அறையில் அவன் உட்கார்ந்து படிக்க, மேஜை, நாற்காலி, படுத்துத் தூங்கக் கட்டில், எல்லாம் சித்தமாக இருந்தன. அவ னுக்கு இடத்தைக் காண்பிக்கக் கூடவே வந்த சாவித்திரி, "ஸ்நானம் செய்வதற்கு வெந்நீர், கீழ் ஸ்நான அறையில்தான் தயாராக இருக்கும். ஆகையால் அங்கே வந்து குளித்துவிட்டுப் பிறகு இவ்விடம் வரலாம்" என்று சொன்னுள்.

"எனக்கு வெந்நீர் வேண்டும் என்கிறதே இல்லே. ஊரில் இந்த வெயில் காலத்தில் நான் பச்சைத் தண்ணீரில்தான் குளிப்பது வழக்கம்" என்று ஜம்புநாதன் சொன்னுன்.

"ஊருக்குப் புதிது; கொஞ்சம் பழகுகிறவரைக்கும் ஜாக்கிர தையாக இருக்க வேண்டும். வெந்நீரிலேயே குளி; பச்சைத் தண்ணீர் வேண்டாம்!" என்று சாவித்திரி சொல்லிவிட்டுப் போனுள். நிஜமாகவே அவனேக் கவனித்துக்கொள்ளும் தோர ணேயில் அவள் ஆரம்பித்திருந்தாள். ஜம்புநாதனுடைய மனத் திற்கு அது ஒரு விதமாகப் பிடித்த மாதிரி இருநதது.

அந்த வீட்டில் கை சிவக்கப் பாத்திரத்திலிருந்து செம்பு செம்பாகச் வெந்நீர் மொண்டு விட்டுக்கொண்டு சிரமப்பட வேண்டியதில்லே. 'ஹாட்' என்று ஆங்கிலச் சொற்களில் எழு தப்பட் டிருந்த ஒரு குழாயைத் திருப்பினுல் சுடச்சுட வெந்நீரும்,

அது போலவே, 'கோல்டு' என்று போட்ட குழாயிலிருந்து பச்சைத் தண்ணீரும் வேண்டுமென்கிற அளவு எடுத்துக் கொள்ளலாம். ஊரில் அவனுடைய வீட்டில் செய்வதுபோல உலர்ந்த தென்னமட்டைகள், ஓலைகள், இவைகளைப் போட்டு எரித்த அடுப்பின் புகை, கதவைத் தாழிட்டுக்கொண்டவுடன், அறையைச் சூழ்ந்துகொண்டு கண்ணை அவித்துவிடாது.

'பானைத் தண்ணீரை நாமே முழுதும் எடுத்துக்கொண்டு விட்டால், நமக்குப் பிறகு குளிப்பவருக்கு வெந்நீர் இல்லாமல் போய்விடுமே!' என்கிற கவலை சிறிதுமின்றி வேண்டுமென்கிற தண்ணீரில் வேண்டுமென்கிற நேரம் நிம்மதியாகக் குளிக்க லாம். அத்தனை சௌகரியம் அந்த மின்சார வெந்நீர் அடுப்பி னால் ஏற்பட் டிருந்தது. இந்தச் சுகத்தை நினைத்துப் பார்த்து அநுபவித்துக்கொண்டே மெதுவாகக் குளித்துவிட்டு, அந்த வழ வழத்த தரையில் ஈரக் கால் பட்டு வழுக்கி விழுந்துவிடாமல் சமாளித்துக்கொண்டு வெளிவந்தான் ஜம்புநாதன்.

பிறகு அறைக்குச் சென்று கண்ணாடியின் முன் ஈரத் தலையை வாரி, ஒழுங்கு செய்துகொண்டு முன் வாயிலை நோக்கிய பொழுது, அந்த வீட்டு மோட்டார் வண்டி, கேட்டுக்குள் நுழைந் தது தெரிந்தது. கடைக்குச் சென்றவர்கள் திரும்புகிறார்கள் போல் இருக்கிறதே; அவன் அத்தனை நேரமா ஸ்நானத்துக்குச் செலவழித்திருக்கிறான்! அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

வாசலில் கார் நின்று, கதவு திறக்கப்படும் ஓசையும், மனி தர்கள் கலகலவென்று பேசும் சத்தமும் அவன் காதை எட்டின. அவனும் வெளி வராந்தாவிலிருந்த மாடிப் படி வழியாகக் கீழே இறங்கிச் சென்றான். சாவித்திரியின் மாமியார் மீனாக்ஷி யம்மாள், அவள் கணவர் சுந்தரேசையர், அவர்கள் மகள் சரோஜா மூவருந்தான் காரிலிருந்து இறங்கியிருந்தார்கள். ஏதோதோ சாமான்களைக் காரிலிருந்து வேலையாள் எடுத்துக் கொண்டிருந்தான்.

"அடேடே! அதைக் கசக்கிவிடாதே! அந்த மூட்டையை என்னிடம் கொடு" என்று ஒரு சிறு துணி மூட்டையை ஆளிட மிருந்து வேகமாக வாங்கிக்கொண்டாள் சரோஜா.

அவள் தோற்றம் வெகு நாகரிகமாக இருந்தது. அவள்

பிடரியில் புரளப் புரளப் போட்டிருந்த தலை முடியும், முன் நெற்றியில் சுருட்டி விடப்பட் டிருந்த மயிர்ச் சுருளும், கண்களில் அழகாகத் தீட்டப்பட் டிருந்த மையும், நெற்றியில் துலங்கின சிறு குங்குமப் பொட்டும், நிறத்தை எடுத்துக் காண்பிக்கும்படி பூசப்பட் டிருந்த உடல் நிறத்துக்குத் தகுந்த பவுடரும் அவளை விளம்பரங்களுக்காகப் போடப்படும் படத்திலுள்ள பெண்ணைகவே தோன்றச் செய்தது. கணேசனுடைய முகஜாடை அவளுக்கு இருந்ததிலிருந்து அவள்தான் அவன் தங்கை சரோஜாவென்று ஒரு நொடியில் ஊகித்துக்கொண்டான் ஜம்புநாதன். மாடியிலிருந்து இறங்கும் அவனை, யாரது என்கிற பாவனையில், அவளும் கழுத்தை வளைத்து ஒரு பார்வை பார்த்தாள்.

அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட அவள் தந்தை, "சாவித்திரியின் அம்மாஞ்சி; திருவானைக்காவிலிருந்து வந்திருக்கிறான். காலேஜில் சேரப்போகிறான்" என்றார்.

"அந்த விசாலம் மாமி வந்திருந்தாளே, அவள் பிள்ளையா?" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு, "வாம்மா டிராயிங் ரூமிற்குச் சென்று புடவையைப் பிரித்துப் பார்ப்போம்; ஆத்து வெளிச்சத்தில் எப்படி இருக்கிறதென்று?" என்று தாயை அழைத்தாள்.

"அப்புறம் பார்க்கலாமே! சாப்பிட உனக்கு நாழியாகலையா?" என்று அவள் தாயார் பரிவாகச் சொன்னதற்கு, "இருக்கட்டும் அம்மா; புடவையைப் பிரித்துப் பார்த்த பிறகுதான் எனக்குச் சாப்பாடு செல்லும்" என்று சாதித்துவிட்டாள் அவள்.

அவர்கள் டிராயிங் ரூமுக்குள் சென்றபொழுது, சுந்தரேசையர் ஜம்புநாதனையும் கூடவே வரும்படி அழைக்க, அவனும் அந்த ஹாலுக்குள் அவர்களுடன் நுழைந்தான். அந்த வீட்டிற்கே அந்த அறைதான் அலங்காரத்தின் சிகரமென்று சொல்ல வேண்டும். அதிலிருந்த ஸோபாக்களும் நாற்காலிகளும் மற்றுமுள்ள வஸ்துக்களுமே மிகவும் விலை உயர்ந்தனவாக இருக்க வேண்டுமென்று தெரிந்தது; அவைகளின் வேலைப்பாட்டையும் அழகையும் நோக்கும்பொழுது. அறை முழுதும்

அவ்வீட்டவர்களுடைய புகைப்படங்கள், சிறு சிறு மேஜைகள் மீதும் சுவரிலும் தொங்கிக்கொண் டிருந்தன.

சரோஜா, அவள் கணவன், பத்மா, அவள் கணவர், குழந்தைகள், சாவித்திரி, அவள் கணவன், ஏன்? மீனுக்ஷியம்மாள்கூடத்தான் கணவருடன் தன்னைப் படம் பிடித்துக் கொண்டிருந்தாள். பல மாதிரிகளில், முகத்தையும் உடலையும் திருப்பிக்கொண்டு அவர்களுடைய உருவங்கள் சட்டத்திற்குள்ளிருந்து வெளியே நோக்கிக்கொண் டிருந்தன. அந்த இளந் தம்பதிகளுக்குச் சரியாக மீனுக்ஷியம்மாளும் அவள் கணவருங்கூடக் கை கோத்துக்கொண்டு நின்றிருந்தார்கள்.

ஜம்புநாதன் அவைகளை யெல்லாம் ஒரு விநோதமாகவே பார்த்துக்கொண்டு ஸோபாக்களில் எதிலும் உட்காராமல் அங்கிருந்த அகன்ற ஜன்னலண்டை சென்முன். ஸோபாக்களுக்குச் சரியாகவே மெத்தையிடப்பட்ட அதன் ஸீட்டில் உட்கார்ந்தும் கொண்டான்.

அங்கிருந்து அந்தப் பக்கத்துத் தோட்டத்தைப் பார்க்க வெகு அற்புதமாக இருந்தது. ஜப்பான் தேசத்துப் பட்டுக்களைத் தோற்கடிக்கும் நிறத்துடன் ஒரே புஷ்பங்கள் மயமாகக் கண்ணைக் கவர்ந்தது. அது மாதிரி மலர்களை அவன் அந்த ஜப்பான் தேசத்துப் படங்களில்தான் பார்த்திருக்கிருன். 'நமது நாட்டில் கூட இவ்வளவு அழகிய பூக்கள், இவ்வளவு செழிப்பாகப் பூக்கிறது உண்டா!' என்றுதான் அவன் அதிசயித்துப் போனுன். அவைகளையே கண் கொட்டாமல் பார்ப்பதில் அவன் ஈடுபட் டிருக்கும்பொழுது மீனுக்ஷியம்மாள், சரோஜா, சாவித்திரி மூவரும் சேலையைப் பிரித்துப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த சத்தம் புஷ்பங்களிலிருந்து அவன் பார்வையையும் நினைவையும் அவர்கள்பால் திருப்பிற்று. அவர்கள் வந்தது தெரிந்து, சாவித்திரியும் அவ்விடம் வந்திருந்தாள்.

"கலரும் கரையும் ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது" என்று புடைவையைத் தொட்டுப் பார்த்துச் சொல்லிக்கொண் டிருந்தாள்.

"அதற்குத்தான் நான் பத்மாவுக்கும் இருக்கட்டுமென்று இரண்டாக எடுத்து வந்துவிட்டேன். இன்னென்று இருந்தால்

நீயும் வாங்கி உடுத்திக்கொள்ளலாம்'' என்றாள் மீனாக்ஷியம்மாள் சாவித்திரியிடம்.

''என்னிடந்தான் இது மாதிரி இருக்கே'' என்றாள் சாவித்திரி.

''எங்கே இருக்கு மன்னி?''

''அதற்கென்ன, கொஞ்சம் கரை வித்தியாசம்.''

''கரைககாகத்தானே நான் வாங்கிக்கொள்ளுகிறேன்; கரை வித்தியாசத்தில் புடவையே வேறு மாதிரி யல்லவா தோன்றுகிறது.''

''அப்படிப் பார்த்துக்கொண்டே போனால் அன்றாடம் ஒரு புதுச் சேலை வாங்க வேண்டியதுதான்'' என்றாள் சாவித்திரி.

''ஏன் வாங்கினால் என்னவாம்? எங்க நாத்தனாரைப் பாரு! அவள் கேட்கிறதற்கு முன்னேயே எங்காத்தில் வாங்கித் தள்ளிவிடுகிறார்கள்'' என்று தங்கள் வீட்டில் தன்னுடைய நாத்தனாருக்குக் காண்பிக்கப்படும் சலுகையைப் பெரிதாகச் சொன்னாள் சரோஜா.

''உன் நாத்தனார் கட்டிக்கொண்டுவிட்டால்தான் என்ன? கண்ணைப் பறிச்சிண்டுதான் போகும்!'' என்று மீனாக்ஷியம்மாள் சரோஜாவின் நாத்தனாரை அழகில்லை என்பதாகத் தூஷித்தாள்.

''அவர்கள் அதையெல்லாம் நினைப்பதில்லையம்மா! பிடித்தால் வாங்கிக்கொள்ள வேண்டியது; அவ்வளவுதான்'' என்றாள் சரோஜா.

''அவள் ஜட்ஜ் பெண்; அவளுக்கு அது மாதிரி முடியும்! நமக்கு அதெல்லாம் சாத்தியமா? சரோஜாவுக்கு எதுவும் நன்றாக இருக்கிறது. அதற்காக அவள் மாமியார் அவளுக்கு வாங்குகிறாளா! பெண்ணுக்கு வேண்டுமானால் வாங்கித் தள்ளுகிறாள்'' என்றாள் பெருத்த குறையுடன் மீனாக்ஷியம்மாள்.

''ஏன்? நீங்கள் வாங்குகிறது கொஞ்சம் குறைவாக இருக்கிறதா!'' என்றார் சுந்தரேசையர் நடுவில்; அவருக்கு இவர்கள்மட்டும் கொஞ்சமாகவா துணியில் செலவு செய்கிறார்கள் என்கிற வருத்தம்.

"நீங்கள் தேவலையே! இங்கே யார் கண்டபடி செலவு செய்யறு? வேணுமென்கிறதுகூட வாங்காமல் இருப்பார்களா?" என்று கர்ஜித்தாள் மீனுக்ஷியம்மாள்.

"வேணுமென்கிறதுகூடத்தான் முன்னெல்லாம் இவ்வளவு அதிகம் இருந்ததாகத் தெரியவில்லை" என்று அதுபற்றி அவர் சொல்ல ஆரம்பிக்கு முன், "அந்தப் பழங்காலத்தை இப்பொழுது கொண்டாட முடியுமா? போறும், உங்கள் பழம் பசலித்தனம். ஒவ்வொருவர் வீட்டில் போய்ப் பாருங்கள்; அப்பொழுது தெரியும்; நாங்கள் எவ்வளவு கணக்கில் நகையோ புடவையோ வாங்கிச் செலவு செய்கிறுமென்று. ஒவ்வொருத்தர் அன்றுடம் புதிதாக ஏதாவது வாங்கி அதைப் பார்த்து எல்லோரும் பிரமித்துப் போக அடித்து வருகிறுர்கள்!" என்று பெரிதாக அதட்டினுள் மீனுக்ஷியம்மாள்.

"அப்பா, நீ இருந்தாலும் எங்களை ரொம்பத்தான் சொல்லுகிருய். உனக்குப் பணம் கொடுக்க இஷ்டம் இல்லாவிட்டால் சொல்லு. எனக்குப் புடவையே வேண்டாம். இன்னெரு கலரில் இதே மாதிரி கரை போட்டது ஆர்டர் கொடுத்துவிட்டு வந்தேன். அதையும் இப்பொழுதே போன் செய்து நிறுத்தி விடுகிறேன்" என்ருள் சரோஜா மனத்தாங்கலோடு.

"அதற்கில்லை அம்மா! ஆசையாக இருந்தால் வாங்கிக் கொள். உங்கம்மா குறைப்பட்டாளே; அதற்கல்லவா சொன்னேன். அன்றுகூடத்தான் உனக்காக ஏதோ வாங்கி வந்திருந்தாள். அப்படி இருக்கும்பொழுது இது மாதிரி பேசுவானேன்?" என்ருர் சுந்தரேசையர் சமாதானமாக.

"அதுவா? அது நூல் புடவை. அது மாதிரி என் நாத்தனுருக்கு ஒரு டஜன் புடவைகளாக்கும் வாங்கியிருக்கிருர்கள்!"

"அவள் கலாசாலை போகிறவள்; அவளுக்கு நூல் சேலைகளுக்கு அவசியம் அதிகம் இருக்கும்" என்ருள் சாவித்திரி; அவர்கள் காரணத்தோடுதான் வாங்குவார்கள் என்ற அர்த்தத்துடன்.

"அதென்னமோ மன்னி; அவள் உடுத்தியிருந்தபொழுது அந்தச் சேலைகள் கொஞ்சமும் நன்ருக இருப்பதாகத் தோன்றவில்லை. அடுத்தாற்போல் அதையே என் இடுப்பில் பார்த்த

வர்கள் எல்லாம், 'பட்டுப் புடவையா!' என்று கேட்டார்கள்'' என்ருள் சரோஜா. தன்க்கு எதுவும் அழகாக இருக்கிறது; தனது நாத்தனுருக்கு அவ்விதம் இல்லை என்பது அவள் எண்ணம்.

இவ்விதம் பேச்சு அவர் சொன்னவைகளுக்காக அவரிடம் கோபப்படுவதிலிருந்து வேறு விதம் திரும்பினதில் சுந்தரேசை யருக்குத் திருப்தி. கணேசன் சம்பாதிக்கத் தொடங்கிக் குடித் தனப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டான். தாம் உத்தி யோகத்திலிருந்து சம்பாதித்து வைத்த பணம் இவர்களின் இது மாதிரி செலவுக்குக் கண்டுவிடும் என்றுதான் அவர் என்ரே மனத்தைச் சமாதானம் செய்துகொண் டிருந்தார். ஆகையால் அவர்கள் இவ்விதம் செலவு செய்வதற்கு அவர் அதிகம் கவலைப்படுவதில்லை. இருந்தாலும் விலை வாசிகள் இப் பொழுது விஷம் ஏறுவதுபோல் ஏறியிருப்பதால் அவருக்குச் சிறிது கவலை ஏற்பட்டுத்தான் இருந்தது. அதிலிருந்து இரண் டொரு சொல் அவரையும் மீறி வந்துகொண்டுதான் இருந்தது.

''பணம் இருக்கு என்பதற்காக, யார் வேணுமாலுைம எதை வேணுமாலுைம் வாங்கிக்கொண்டு விடுகிறதா?'' என்ருள் மீனுக்ஷியம்மாள் பெண்ணைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டு.

இவர்கள் நன்ருக இல்லையென்று சொல்வதற்காகச் சரோஜாவின் நாத்தனுர் கமலினிக்கு நன்ருக இல்லாமற் போய் விடுமா?' என்கிறது சாவித்திரிக்கு. ஆனால் அந்த எண்ணத்தை வெளியிட்டுச் சொல்லிவிட முடியுமா? வீண் மனஸ்தாபம் அல் லவா ஏற்படும்?

'தங்கள் அழகைத் தாங்களே இவ்விதம் உயர்த்திக் கூறிக் கொள்கிருர்களே!' என்று ஜம்புநாதன் அவர்கள் பேசுவதை அதிசயமாகக் கேட்டு வந்தான். 'சரோஜாவின் மாமியாரைக் குறை கூறும் மீனுக்ஷியம்மாளுக்குத் தன் நாட்டுப் பெண்ணின் நினைவு வந்ததா? எங்கோ டில்லியிலிருக்கும் பெரிய பெண்ணுக் கும் சேர்த்து, புடவை பிடித்திருக்கிறது என்று எடுத்து வந்திருக் கிருளே, அத்தங்காளுக்கு எடுத்து வந்தாளா? தன் பெண்ணின் அழகைக் குறித்துக் கர்வப்பட்டுக்கொள்ளுகிறவள், நாட்டுப்

பெண் அதற்கும் மேலான சௌந்தரியம் படைத்தவளாக இருக்கிறுளென்பதை அறிந்துகொண்டவளாகவே தெரிய வில்லையே!'' என்றெல்லாம் நினைத்துக்கொண்டான்.

“என்ன, சாப்பிடப் போவோமா? பிறகு எனக்கு ஸீனியர் வீட்டுக்குப் போக வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டு கணேசன் அவ்விடம் வந்தார்.

“சரோஜா உனக்கு நாழியாகிவிட்டதே! சாவித்திரி, இலை போட்டுத் தயாரா யிருக்கா?'' என்று கேட்டுக்கொண்டே பரபரப்புடன் எழுந்திருந்தாள் மீனுக்ஷியம்மாள்.

“என்ன சரோஜா, எப்போ வந்தே?'' என்று கணேசன் தங்கையை வரவேற்ருன்.

“இதோ பார் அண்ணு, புடவை என்ன நேர்த்தியாக இருக்கிறது!'' என்று சரோஜா தமையன் முன் புடைவையை நீட்டிஞள்.

“நன்ருகத்தான் இருக்கிறது'' என்று அவர் ஆமோதித்துச் சொன்னபோது, “அதுதான் மன்னியையும் வாங்கிக்கொள்ளச் சொல்லுகிறேன்; 'எல்லாம் தனக்கு இதுமாதிரி இருக்கு' என்று சொல்லிவிட்டாள்'' என்ருள் சரோஜா.

“அப்பொழுது சரிதானே; இருந்தால் மறுபடியும் எதற்கு?'' என்ருன் கணேசன்.

“இதுமாதிரியென்ருல், இதே மாதிரி இல்லை அண்ணு! கொஞ்சம் வித்தியாசந்தான்'' என்று அவள் மேலும் சொன்னதற்கு, “சிறிய வித்தியாசத்திற்காக வெல்லாம் வேறே வேறே வாங்குவார்களா? சரி, சாப்பிடுவோம் வாருங்கள்; வாப்பா ஜம்புநாதா!'' என்று அழைத்துக்கொண்டே அவர் கூடத்தை நோக்கிச் சென்ருர்.

பிள்ளைகளுக்குக் கெட்ட சகவாசம்போல் பெண்களுக்கும் ஆடை அலங்காரத்திலேயே முழுதும் மனத்தைச் செல்லவிடுவது தவறு என்று அவன் தந்தை சொல்வதை ஜம்புநாதன் கேட்டிருக்கிருன். 'இங்கே இந்தப் பெண் அதே நினைவாக வல்லவா இருப்பாள்போல் இருக்கிறது' என்று எண்ணமிட்டான்.

ஸ்திரீ புருஷர் என்ற வித்தியாசமின்றி எல்லோரும் ஒரே பந்தியாகச் சாப்பிட உட்கார்ந்தார்கள். மீனுக்ஷியம்மாளும்,

பெரியவளாக இருந்து இலையைப் பார்த்துப் பரிமாறுகிறது என்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமல், தானும் பெண்ணின் பக்கத்தில் உட்கார்ந்து, அவள் சரியாகச் சாப்பிடுகிறுளா என்கிற கவனத்தில் இருந்தாள். பெண் சாதாரணமாகச் சாப்பிடும்பொழுதே, "ஏண்டீ, சாதம் வேண்டியிருக்க வில்லையா? பசி மிஞ்சிப் போச்சா?" என்று அவள் சரியாகவே சாப்பிடவில்லை போல் பாவித்துக் கேட்டு வந்தாள்.

"என்னவோம்மா! வர வர நம் ஆத்தில் சாப்பாடு நன்ருகவேதான் இருக்கமாட்டேன் என்கிறது" என்று பெண்ணும், தான் கடையில் சாக்கலேட் வாங்கித் தின்றது, லெமனேட் வாங்கிக் குடித்தது இவைகள் பசியைப் போக்கடித் திருக்கும் என்பதை மறந்தவளாய்ச் சொல்லிவந்தாள்.

"இப்படி ஆகாரம் இறங்காவிட்டால் உடம்பு துர்ப்பலமாகப் போகாதோ?" என்று அங்கலாய்த்துக்கொண்டாள் மீனுக்ஷியம்மாள்.

ஜம்புநாதன் சமையலைப்பற்றி ஒன்றும் கவனிக்காதவனுகவே சாப்பிட்டான். அம்மா சொன்ன தோல் போகாத பருப்பும் கற்கள் நிறைந்த சாதமும் புளிக் கோதுடன் கூடின குழம்பும் அவனுக்குத் தெரியவில்லை. அவன் தாயார் அப்படித்தான் சொல்லுவாள்: பட்டணத்தில் பெண்கள் உட் புகுந்து மளிகைச் சாமான்களைப் பழுது பார்ப்பது என்பது இல்லை. ஆகையால் பரிசாரகன் கல்லோடும் மண்ணோடுந்தான் சமைத்துப் போடுவானென்று. பவழம்போல் சிவந்த வழவழத்த தரையில் கருங்காலி மரத்தினுல் செய்த மணைகள் போடப்பட்டு புது மெருகுடன் கூடிய வெள்ளிப் பாத்திரங்களில் குடிக்க நீர் வைக்கப்பட்டு, தங்கத் தகடுபோன்ற வாழை இலையில், பரிசாரகன் வாய் பேசாது, ஓடி ஓடிப் பரிமாற, தலைக்கு நேராக மின்சார விசிறி சுகமாய்க் காற்றை வீசிக்கொண் டிருக்கும்பொழுது, சமையலைப்பற்றித் தனியே கவனிக்கத் தோன்றுமா? ஜம்புநாதனுக்கு இவைகள் புது அநுபவங்கள் அல்லவா? பேச்சு வேறு கல்லூரியைப்பற்றியும், இக்காலத்திய படிப்பின் அவசியத்தைப்பற்றியும் அவர்களுக்குள் ஆரம்பமாகி யிருந்தது.

"ஆர்ட் கோர்ஸ் வேண்டாமென்று பி. எஸ்ஸி.யில் சேர்ந்து விட்டா யாக்கும்" என்று கேட்டார் கணேசன்.

"ஆமாம், அப்பாவுக்கு இந்த நாளைக்கு அதுதான் உப யோகமான படிப்பு என்கிற எண்ணம்" என்று பதில் அளித் தான் ஜம்புநாதன்.

"எல்லோரும் உபயோகம் என்று சொல்லிக்கொண்டு விஞ்ஞானம் படிக்கப் போய்விட்டால், அப்புறம் பி. ஏ. படிக்க ஆள்களே இல்லாமல் அல்லவா போய்விடுவார்கள்! சரித்திரம், இலக்கியம் இவைகளெல்லாம் தெரிந்துகொள்வது முக்கிய மல்லவா? அவைகள் எவ்வளவோ நல்ல விஷயங்களைப் போதிக்க வில்லையா?" என்றாள் சாவித்திரி.

"இருந்தாலும் இந்தக் காலத்தில் தொழில் முக்கியமாகப் போய்விட்டது. அதற்கு விஞ்ஞான அறிவு அவசிய மாகிவிட் டது. அதனால் எல்லோரும் ஸயன்ஸ் படிப்பதிலேயே அதிகம் முனைகிறார்கள்" என்றார் சுந்தரேசையர்.

"எனக்கென்னவோ இலக்கியத்தில் எவ்வளவோ இருக்கிற மாதிரி இருக்கிறது. நல்ல அறிவு வளர்ச்சியும் சிறந்த குணங் களும் அதனால் ஏற்படுகிறது; சித்தப்பாவுக்கு இலக்கியத்திலும் மிகுந்த ஆசை உண்டே! அவர் நிறையப் படித்திருக்கிறாரே! இவ் விடம் வரும்போதெல்லாம் என்னைப் புத்தகங்கள் படிக்கச் சொல்லிப் பிரத்தியேகமாக நல்லவைகளாகவும் பொறுக்கிக் கொடுப்பாரே. அப்படி இருப்பவர் தம்முடைய பிள்ளையை இலக்கிய ஆனர்ஸில் சேரச் சொல்லுவாரென்றே நான் நினைத் திருந்தேன். பி. எஸ்ஸி.யில் சேர்த்திருப்பது எனக்கு ஆச்சரி யந்தான்!" என்றாள் சாவித்திரி.

"நாடு இருக்கிற நிலைமையில் தொழிலுக்கான கல்வி அல்லவா அவசிய மாகிவிட்டது. இலக்கியம் படித்து வித்துவா னாகிக் கவி பாடுகிறேனென்றால் யார் கேட்கிறார்கள்? எந்தக் காலத்திலும் இலக்கியம் எல்லாருக்கும் ஏற்றதல்ல. அதிலும் இப்பொழுது நல்ல சீமான் வீட்டுப் பிள்ளையாக இருந்தால் தான் இலக்கியம் படித்துக்கொண்டு சும்மா இருக்கலாம்; மற்ற வர்களுக்கு அது முடியாது" என்றார் கணேசன்.

"இலக்கியம் படிப்பது சோம்பேறிகளுடைய பொழுது

போக்கு என்பது உங்கள் எண்ண மல்லவா?'' என்ருள் சாவித்திரி.

''நான் ஒன்றும் அவ்விதம் சொல்லவில்லை; நீயாக ஏன் அவ்விதம் மாற்றிக்கொள்ளுகிருய். 'இலக்கியம் சோறு போடாது' என்றுதான் சொல்லுகிறேன். சோத்துக்குத் தாளம் போடும் நாம் இலக்கியத்தை ரசித்துக்கொண் டிருந்து என்ன பண்ணுகிறது?'' என்ருர் கணேசன்.

''யாருமே இலக்கியம் படிப்ப தில்லையென்று வந்துவிட்டால், சிறந்த எண்ணங்களும் கலை வளர்ச்சியும் எங்கிருந்து உண் டாகும்? எல்லோரும் வெறும் யந்திரம்போல் ஆகி, 'சம்பாதித்து வயிற்றை நிரப்பிக்கொள்வதுதான் ஜன்மம் எடுத்ததற்கு' என்று ஆகிவிட்டால் அப்புறம் உலகில் என்ன இருக்கிறது!'' என்ருள் சாவித்திரி.

''இலக்கியத்தை விட்டால் பாக்கி எல்லாம் படிப்பில்லையா? உடனே மனிதன் மிருகமாக ஆகிவிடுவாஞ?'' என்ருர் கணேசன்.

''ஸயன்ஸ் படிப்பதற்காக இலக்கியம் படிக்கக் கூடாது என்று சொல்லி யிருக்கிறதா என்ன? விஞ்ஞான வளர்ச்சிக் காக ஸயன்ஸ் படித்தால், மன வளர்ச்சிக்கு இலக்கியம் படிக் கிறது; அப்படித்தான் அப்பா சொல்லுவார். வீட்டில் படிக்க நிறையப் புத்தகங்கள், புத்தகசாலையி லிருந்தால்கூட எப் பொழுதும் வாங்கி வருவார்; என்னையும் படிக்கச் சொல்லு வார்'' என்ருன் ஜம்புநாதன்.

''என்ன புத்தகங்கள் எல்லாம் நீ படித்திருக்கிருய்? எவை கள் உனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன?'' என்றெல்லாம் சாவித்திரி ஜம்புநாதனை ஆவலாகக் கேட்கத் தொடங்கிஞள்.

அவன் ஏதோ சில புத்தகங்களின் பெயர்களைச் சொல்வ தற்குள், ''நீ தேக்கரேயின் பெண்டென்னிஸ் (Pendennis) படித்திருக்கிருயா? உன்னைப்போலத்தான் அவன் அம்மாவின் செல்லப்பிள்ளை. தாயார் பிள்ளைக்குக் கொடுத்த செல்லத்தில், பிள்ளையைத் தன்னைப்பற்றித் தானே கர்வப்படச் செய்து விட்டாள். அவனுக்குக் கலாசாலையில்கூட பிரின்ஸ் ஆவ் பேர் ஓக்ஸ் (Prince of Fair oaks) என்று பட்டப் பெயர் வந்து

விடுகிறது என்றால் பார்த்துக்கொள்ளேன்! அவன் தன்னை அவ்வளவு பெரிய மனிதனாகக் காட்டிக்கொள்கிறான். படிப்பதற்கு வெகு சுவாரஸ்யமாக இருக்கும். உள்ளூற ஹாஸ்யம் ததும்பும். வீட்டில் தாயாரால் அருமையாக வளர்க்கப்பட்ட எந்தப் பிள்ளையும், 'ஆர்தரைப்'போல இருப்பானென்றே தோன்றும்'' என்று உத்ஸாகத்துடன் பேசினாள். அவளுக்கு இம்மாதிரி புத்தகங்கள் படித்து, அவற்றைப்பற்றிப் பேச மிகுந்த ஆசையென்று தெரிந்தது.

ஜம்புநாதன், 'என்னை அவள் ஆர்தரோடு ஒப்பிடுவதில் ஏதாவது பொருத்தம் இருக்கிறதா? என்னிடத்தில் அந்த வகையில் பெரும் தோரணைகள் தெரிகின்றனவா?' என்று தானே சிந்தித்துப் பார்த்துக்கொண்டான். அவனும், 'பெண்டென்னிஸ்' படித்திருக்கிறான் அல்லவா? "ஆர்தரைப்போல் எதில் இருந்தாலும் 'லாரா'வின் உயர்வைத் தெரிந்துகொள்ளாத சுயநலப் பேர்வழியாக நான் இருக்கமாட்டேன்'' என்றான் ஜம்புநாதன் சிறிது சிரித்துக்கொண்டு.

"லாராவின் ஸ்தானத்தில் இங்கே எந்தப் பெண்ணும் இல்லை யல்லவா?'' என்றாள் சாவித்திரி.

'இவ்விதம் பேச்சு, சாவித்திரிக்கும் ஜம்புநாதனுக்கும் மட்டுமே நிகழ்ந்துகொண்டு போகுமா?' என்று தோன்றுகிற சமயத்தில், "உனது முதல் தங்கை எதற்குப் படிக்கிறாள்? கல்யாணம் செய்ய வயதாக வில்லையா?'' என்று சுந்தரேசையர் நடுவில் கேட்டார்.

"அகிலாண்டமா? அவள் ஐந்தாவது பாரம் படிக்கிறாள்; வயது இப்பொழுதுதான் பதினான்கு ஆகிறது. 'எஸ். எஸ். எல். ஸி. யாவது பாஸ் பண்ணட்டும்; கல்யாணம் செய்யலாம்' என்கிறது அப்பாவுக்கு'' என்று ஜம்புநாதன் அவருக்குப் பதில் சொன்னான்.

"வயதாகிவிட்டால் கல்யாணம் செய்துவிட வேண்டியதுதான். பெண்கள் படித்துப் புரட்டுகிறார்க ளாக்கும்! சரோஜாவைப் பார். இன்டர் பாஸ் செய்துவிட்டு என்ன பண்ணுகிறாள்? சதா புடவையும் நகையுந்தான் நினைவாக இருக்கிறாள்!'' என்றார் கணேசன், மொத்தமாக ஸ்திரீகள் படித்து ஒன்றும்

செய்கிறதில்லை என்று கூறும் பாவனையில்.

வாஸ்தவத்தில் சரோஜா அவர்கள் சம்பாஷணையில் கலந்துகொள்ளவில்லை. புஸ்தகம், படிப்பு என்கிற விஷயங்கள் அவளுக்குச் சுவாரஸ்யம் கொடுக்கவில்லை. ஏதாவது புது மாதிரி புடைவையோ, யாராவது செய்துகொண் டிருந்த புது அலங்காரமோ இவைகளைப்பற்றின பேச்சாக இருந்தால் அவள் உத்ஸாகத்துடன் கலந்துகொண் டிருப்பாள். அது இல்லை யெனவே அவள் அம்மாவிடம், முதல் நாள் அவள் சினிமாவுக்குச் சென்றது, அங்கே யார் யாரோ என்ன என்ன விதமாகவோ அலங்காரம் செய்துகொண் டிருந்தது இவைகளை யெல்லாம் வருணித்துச் சொல்லிக்கொண் டிருந்தாள். அவள் தாயாரும் சுவாரஸ்யமாகக் கேட்டு வந்தாள். கணேசன் சொன்னவைகளை அரைகுறையாகக் கேட்டுக்கொண்ட சரோஜா, "என்ன அண்ணு, என்னைத் தூஷிக்கிறே!" என்று கோபிக்கிறவள் மாதிரி கொஞ்சலாகக் கேட்டாள்.

"அவனுக்கு என்ன? புடவை, நகை, ஒரு பேச்சுமே படாது. ஊரிலே மத்தவாளைப் பார்க்கட்டும்" என்று அலக்ஷ்யமாகச் சொல்லிச் சாப்பாட்டை முடித்து எழுந்தாள் மீனாக்ஷியம்மாள்

## 10

"ஜம்புநாதா, உனக்கு ரயிலில் வந்தது சிரமமாக இருக்கும். நீ உன் அறையில் சென்று சிரம பரிகாரம் செய்துகொள்" என்று சாவித்திரி, நினைவாக அவர்கள் ட்ராயிங் ரூமுக்கு வந்தவுடன் சொன்னாள். அவள் அவ்விதம் தன்னிடம் சிரத்தை எடுத்துக்கொண்டு சொன்னது அவனுக்குப் பிடித்திருந்ததோடு, 'எவ்வளவு பரிவு காண்பிக்கிறாள்!' என்றும் தோன்றிற்று. அவள் சொன்னபடி அவன் செல்ல எழுந்திருக்கு முன் அங்கே ஒரு சிறு நாடகமே நடப்பதுபோல் இருந்தது; சரோஜாவும் அவள் தாயாரும் செய்த அமர்க்களம்! சரோஜா சாப்பிட்ட கையை அலம்பி உள்ளே வந்தவள் தனக்கு எதோ மயக்கம் வருகிறாப்போல் இருக்கிறது என்று சொல்லி ஸோபாவில் சாய்ந்துகொண்டாள்.

''ஏண்டீ, ஏன் தலையைச் சுத்துகிறது? அதற்குத்தான் நான், 'பசி மிஞ்சிப் போகும்; சுருக்கச் சாப்பிடு' என்றேன். கேட்காமே பட்டினி கிடந்திருக்கே. பட்டினியும் பசியும் கிடக்க நல்ல உடம்போ!'' என்று பெரிதாகத் தவித்துப்போனாள், மீனாக்ஷியம்மாள்.

''சாப்பிட்ட படபடப்பு, வேறு ஒன்றும் இராது'' என்றார். கணேசன்.

''டாக்டரை அழைத்து வரச். சொல்லவா?'' என்றார் தந்தை.

''கொஞ்சம் ஜில்லுன்னு தண்ணீர் சாப்பிடுகிறாயா? சரியாகப் போகும்'' என்றாள் சாவித்திரி.

''ஸோபாவில் காலை நீட்டிப் படுத்துக்கொள்ளட்டும், கொஞ்சம் பங்காவை வேகமாக விடுங்கள்'' என்று உத்தரவிட்டாள் மீனாக்ஷியம்மாள்.

''என்ன, டாக்டர் வேண்டுமா சொல்லு; போய் அழைத்து வருகிறேன்'' என்றார் கணேசன்.

''கொஞ்சம் ஜலம் சாப்பிட்டுப் பார்க்கட்டும்'' என்றாள் சாவித்திரி. அதன்படி கொண்டுவந்தும் கொடுத்தாள். ஒரு வாய்த் தண்ணீர் அருந்தின பிறகு, ''தேவலை'' என்று சமாளித்துக்கொண்டாள் சரோஜா.

''என்ன பலவீன உடம்போ! இந்தப் பெண்ணுக்கு! சற்று வேளை தப்பிச் சாப்பிட்டது இந்தப் பாடுபடுத்தறது! அவாத்தில் சொல்லி ஒரு மாசமாவது இங்கே கொண்டுவந்து வைத்துக்கொண்டால் தேவலை'' என்றாள் மீனாக்ஷியம்மாள் கணவரிடம்.

''மாப்பிள்ளை வரட்டும்; கேட்டுப் பார்ப்போம்'' என்றார் சுந்தரேசையர்.

''அவர் ஒத்துக்கொள்ள மாட்டா ரம்மா. என்னை விட்டுப் பிரிந்திருக்க அவர் சம்மதிக்க மாட்டார்'' என்றாள் கண்களை மூடியபடியே சரோஜா.

''நீ அலட்டிக்கொள்ளாதே: சித்த நேரம் கண்ணை மூடிப் படுத்திரு'' என்றாள் தாயார்.

மாப்பிள்ளை பெண்ணைவிட்டுப் பிரிந்திருக்கச் சம்மதிக்க

மாட்டான் என்பதைக் கேட்க அவளுக்குச் சந்தோஷம். மற்ற வர்கள், 'சரோஜாவுக்குக் கடைக்குப் போய் வந்தது தள்ளா மையை உண்டு பண்ணிவிட்டது. சற்று ஓய்வு எடுத்துக்கொள் ளட்டும்' என்று அவரவர்கள் காரியமாக அவ்விடம் விட்டுச் சென்றுர்கள். ஜம்புநாதனும், 'காற்றடிக்கக் காரிலே சென் றது, சிறிது நேரம் பொறுத்துச் சாப்பிட்டது இவைகள் இவ் வளவு சிரமப்படுத்துகின்றனவா!' என்று அதிசயித்தவாறே தன் அறையை அடைந்தான்.

முதலில் தந்தைக்குக் கடிதம் எழுதிவிட்டுப் பிறகே சிரம பரிகாரம் செய்துகொள்ள நினைத்தவனாக எழுத உட்கார்ந் தான். தான் சௌக்கியமாக வந்து சேர்ந்தது, கணேசன் காருடன் ரயிலடிக்கு வந்து தன்னை அழைத்து வந்தது, பிறகு அவருக்குத் தந்தி கொடுத்தது எல்லாம் எழுதினான்.

''அப்பா! இந்த இடத்தை என்னவென்று சொல் வது? ஏதோ புத்தகங்களில் படிக்கும், மாளிகையில் இருப்பதுபோலவே எனக்குத் தோன்றுகிறது. எத் தனை பெரிய பங்களா! எவ்வளவு சௌகரியங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன! எத்தனை விஸ்தாரமான தோட்டம்! நான் இன்னும் இவைகளை முழுதும் பாக்க வில்லை. அதற்கு ஒரு நாள் பூராவும் பிடிக்குமென்று நினைக்கிறேன். அத்தங்காள் மிகவும் அன்பாக இருக் கிறுள். அவள் சொன்னபடி உண்மையில் என்னைத் தம்பியாகத்தான் ஏற்றுக்கொண்டு விட்டாள். அதற் குள்ளாகவே என்னைக் கவனித்துக்கொள்ளத் தொடங்கிவிட்டாள். பாட்டி, அம்மா, அத்தை எல்லா ரிடமும் சொல்லுங்கள்; அவர்களுக்கு மேலாக இங்கே அத்தங்காள் என்னைப் பார்த்துக்கொள்ளு கிருளென்று. அவர்களைக்கூடத் தோற்கடித்துவிடு வாளென்று தோன்றுகிறது; அவள் எனக்காகக் காண் பிக்கும் சிரத்தையைப் பார்த்தால்! அவள் இன்று என்னைப் பச்சைத் தண்ணீரில் ஸ்நாநம் செய்ய விட வில்லை. ஒன்று சொல்ல வேண்டுமே; இங்கே என்ன தெரியுமோ அப்பா? குளிக்கும் வெந்நீர்கூட

மின்சார உதவியால்தான் காய்ச்சப்படுகிறது. குழாயைத் திறக்க வேண்டியதுதான்; நினைத்தபோது வெந்நீர் வருகிறது. சமையல்கூட மின்சார அடுப்பில்தான் செய்கிறார்களோ என்னவோ? நான் அவ்வளவுக்கு உள்ளுக்குள் போய்ப் பார்க்கவில்லை. எல்லாம் வெகு நேர்த்தியாக இருக்கின்றன.

"கணேசன், அவருடைய அப்பா, அம்மா எல்லாரும் உங்களை நிரம்ப விசாரித்தார்கள். என்னை அன்பாக வரவேற்றார்கள். நீங்கள் அத்தங்காளைப் பற்றி உயர்வாகச் சொல்வீர்களே! அது அவ்வளவும், எவ்வளவு சரி என்கிறது நேரில் பார்த்த பிறகுதான் தெரிகிறது. அவள் சௌந்தரியத்தைப்பற்றி நீங்கள் புகழும்பொழுது நான் அதை இவ்வளவு அதிகமென்று புரிந்துகொள்ளவேயில்லை. வந்த சில மணி நேரத்திலேயே வெகு நாள் பழகின மாதிரி ஆக்கிக் கொண்டுவிட்டாள். பணக்காரி என்கிற பெருமை அவளிடம் சிறிதாவது காணப்பட வேண்டுமே! இல்லை. மிகவும் படித்து விஷயங்கள் தெரிந்தவளாகவே தோன்றுகிறாள். நம் வீட்டில் எல்லாரையும் நிரம்ப விசாரித்தாள். நீங்கள் ஏன் அவளுடன் வந்து சில தினங்கள் இங்கே தங்கிவிட்டுப் போகக் கூடாது? நீங்கள் வருகிறதேயில்லை என்றெல்லாம் அத்தங்காள் வருந்தினாள். நீங்கள் அவசியம் ஒரு முறை வந்து இருக்கத்தான் வேண்டும், அப்பா. உங்களை விட்டால் அவள் சொல்லுகிறதுபோல் அவளுக்குப் பிறந்த வீட்டு மனுஷ்யர்கள் யார் இருக்கிறார்கள்?

"நான் நாளைக் காலை ஹாஸ்டலுக்குப் போகிறேன். கணேசன் காரிலேயே கொண்டுபோய் விட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறை இவ்விடம் வந்து கழித்தால் என்ன என்று நினைக்கிறேன். அத்தங்காளிடம் நன்கு பழகிக் கொள்ள வேண்டுமென்கிறது என் ஆசை. நம் அகி

லாண்டத்தையும் அத்தங்காளைப்போல் இருக்கப் பழக்க வேண்டுமென்கிறது எனக்கு.

"நான் உத்ஸாகமாக இருக்கிறேன். நீங்கள் எனக்காகக் கவலை எதுவும் பட வேண்டாம். திரட்டுப் பாலை எங்கும் வைத்துவிடாமல் நினைவாக அத்தங்காளிடம் சேர்த்துவிட்டேனென்று, அம்மா முதலானவர்களிடம் சொல்லிவிடுங்கள். ட்ராக்டர் சமாசாரமும் விசாரித்து எழுதுகிறேன்.

"சுந்தரி, அத்தங்காள் வீட்டைப்பற்றி வருணித்துச் சொன்னதெல்லாம் சரியாக இருக்கிறது என்று அவளிடம் சொல்லுங்கள். அவளுடைய இந்தத் திறமை விருத்தி யாகிக்கொண்டே போனால் அவள் நிச்சயமாகப் பெரிய ஆசிரியை ஆகிவிடுவாள்! ஏனெனில், அவளைப்போல் மனத்தில் பட்டதை எளிதாகச் சொல்ல முடியாமல்தானே நான் இப்பொழுது திண்டாடுகிறேன். அவள் ஓரே வார்த்தையில், 'அத்தாங்காள் வீடு ஓரே கண்ணாடியும் வைரமுமாக இழைத்து மின்னுகிறது!' என்று அடித்துவிட்டாளே! அவள் சொன்னது வெகு பொருத்தமான வார்த்தை. எல்லாம் பளிங்கினால் செய்த மாதிரிதான் இருக்கிறது! என் தங்கைகள் எல்லாருக்கும் என் அன்பைச் சொல்லுங்கள். அத்திம்பேரிடம் நான் எழுதியிருப்பதைச் சொல்லி என் நமஸ்காரத்தையும் தெரிவியுங்கள். நான் அவருக்குப் பிறகு எழுதுகிறேன்.

இப்படிக்கு,
அநேக நமஸ்காரம்,
**ஜம்புநாதன்."**

இதை எழுதி உறையில் இட்டு, விலாசம் எழுதி, தான் கீழிறங்கிச் செல்லும்போது எடுத்துச் செல்லத் தயாராக மேஜையின்பேரில் வைத்தான். பிறகு கட்டிலிற் சாய்ந்து படுத்துக்கொண்டான். அவன் மனது இங்கே வந்ததிலிருந்து நடந்தவைகளை ஒரு முறை நினைத்துப் பார்த்தது. 'அத்தங்காள் மிகவும் நல்ல மாதிரியாக இருப்பாள்போல் இருக்கிறது.

தன்னைப் பார்ப்பதற்குள் தன்னிடம் அன்பு காண்பித்து நடந்து கொள்கிருள். தன்னுடைய சங்கோசத்தையெல்லாம் ஒரு நொடியில் போக்கடித்துவிட்டாள்; வெகு நாள் பழகின மாதிரி தோன்ற வைத்துவிட்டாள். வந்த சில மணி நேரத்தில் அந்த வீடே அவனுக்குச் சொந்தம்போல் தோன்றத் தொடங்கி விட்டது. இவ்வளவு பெரிய பங்களாவும் தோட்டமும், புதிதாகப் பார்ப்பவர்களுக்குச் சாவித்திரியுடையது என்றுகூடத் தோன்ருது. மாமஞர், மாமியார், கணவன் இவர்களுடன் சகஜமாகப் பழகிஞலும் மரியாதையாகவும் இருப்பாள்போல் இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் சாவித்திரியுடையது என்கிற நினைப்பு இருக்கிருற்போலவே இல்லை. 'சாவித்திரியின் மாமஞர் சம்பாதித்ததுகூட இல்லை. எல்லாம் தன் சொந்தச் சீதனம்!' என்கிற மாதிரியல்லவா ராங்கி செய்துகொள்ளுகிருள் அவள் மாமியார்! பெண்ணைத்தான் என்ன பிரமாதப்படுத்துகிருள்! கீழே நடந்தால் கால் தேய்ந்துவிடும் என்பாள்போல் இருக்கிறதே!

'குனிந்த முதுகில் பூ விழுந்தது; முதுகு வலித்துவிட்டது!' என்று பாட்டி ஏதோ கதை சொல்லுவாள். அதுபோல் இருக்கிறது இவள் சுகுமாரத்தனம். பெண்ணைத்தான் அப்படிச் சொல்லுகிருளோ? இல்லை, அம்மா செய்கிற ஆர்ப்பாட்டத்தில் அவ்விதம் காண்பித்துக்கொள்ளத் தோன்றுகிறதோ? இருந்தாலும் இது மாதிரி ஸ்திரீகளை அவன் பார்த்ததில்லை. அவன் வீட்டில் அவன் அம்மா, அத்தை இவர்கள் வெகு சாதாரணமாகவே இருக்கிருர்கள். அவர்களிடம் ஒரு தோரணையும் இல்லை. அவர்கள் செய்கிற காரியங்களும் கணக்கே இல்லை. ஆனல் அவர்களுக்கு வீட்டுக் காரியங்கள்தான் தெரியும். வேறு படிப்பு ஒன்றும் தெரியாது.

'அத்தங்காளுக்கு எல்லாம் தெரிகிறதே! தனது தங்கை அகிலாண்டம், அத்தங்காளைப்போல் இருக்க வேண்டுமென்று அவன் நினைப்பது சரியேயல்லவா? படிப்பும் படித்து வேறு விஷயங்களும் தெரிந்து, அமரிக்கை, அடக்கம் எல்லாம் பொருந்தியிருப்பது எத்தனை உயர்வானது! இப்படி இருப்பவளை எவ்வளவு கௌரவித்துக் கொண்டாட வேண்டும்! ஆனல் இந்த வீட்டில் சரோஜாவுக்குத்தான் சகலமும் என்று தெரி

கிறது. அத்தங்காளும் சேர்ந்து அவளைத்தான் பெரிதுபண்ணி எல்லாம் செய்கிருள்; அவ்வளவுதான். அத்தங்காளைத் தனியே உயர்வாக நினைக்கிறவர்கள் அங்கே யாரும் இல்லை. கணேசன் ஒருகால் தம் மனைவிக்கும் மற்றும் தம் வீட்டவருக்கும் இருக்கும் வித்தியாசத்தைத் தெரிந்துகொண் டிருப்பாரோ என்னவோ? ஆனுல் அவரும் வெளிக்குக் காண்பிக்கிறவராகத் தெரியவில்லை!' என்று இவ்விதம் அவன் சிந்தனை ஓடிற்று.

சாவித்திரியிடத்தில் அவனையும் அறியாமல் அநுதாபம் ஏற்படத் தொடங்கியது. 'அவளுடைய சம்பத்தையெல்லாம் சொந்தமாக அநுபவித்துக்கொண்டு, தங்கள் மதிப்பையும் தாங்களே உயர்த்திக்கொண்டு அவளை மிகவும் சாதாரணமாக நடத்துகிருர்களே அவ்வீட்டவர்கள்! அவளுக்குத் தாயோ தந்தையோ இல்லை. வேறு எந்த வித பந்துவாவது இருந்தால் இதுமாதிரி நடக்குமா?' சாவித்திரியின் புக்ககத்து மனிதர்களிடம் அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று.

தான் அந்தப் பந்துவாக இருந்து, அவர்களுக்கு எதிராகச் சாவித்திரியை உயர்த்தி அவர்களைத் தாழ்த்த வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. சண்டையில் தன்னைச் சாவித்திரியின் கட்சிக்குப் பலமான துணையாகப் பாவித்துக்கொண்டான்.

இவ்விதம் சாவித்திரிக்காகப் பரிந்து எண்ணினவாறு ரயில் பிரயாணத்திஞல் ஏற்பட்ட அலுப்பில் கண்ணயர்ந்துவிட்டான்.

"காபி தயாராகிவிட்டது. சின்னம்மா பார்த்துவரச் சொன்னுங்க" என்று வேலைக்காரன் எழுப்பின பிறகே அவன் விழித்துக்கொண்டான். உடனேயே எழுந்து, வந்த ஆளின் பின்னுலேயே, தந்தைக்கு எழுதி வைத்திருந்த கடிதத்துடன் கீழிறங்கிச் சென்ருன். கூடத்தில் எல்லோரும் மேஜை யருகே உட்கார்ந்து காபியும் பலகாரமும் சாப்பிட்டுக்கொண் டிருந்தார்கள்.

"வா, அப்பா. ஜம்புநாதா! பலகாரம் சாப்பிடு" என்று அழைத்தாள் சாவித்திரி.

"எனக்குக் கொஞ்சம் வெளியில் போக வேண்டிய ஜோலி இருக்கிறது. அபூர்வமாக வந்திருக்கும் உன்ஞேடு முழுதும் இருப்பதற்கில்லை. இன்று கிளப்புக்கும் போக வேண்டா

மென்று நினைத்தேன். அவ்விதம் செய்வதற்கில்லை; இன்று கமிட்டி மீட்டிங்; முக்கிய விஷயம் பேசப் போகிறார்கள். நான் போய்த்தான் ஆக வேண்டும்'' என்று தொடர்ந்து சொன்னாள்.

''இவர்களுடைய முக்கிய விஷயம் என்பது என்னவாக இருக்கும் என்கிறாய்? யாராவது ஒரு ஸ்திரீயின் கணவர் உத்தியோக அலுவலாக, வேறு ஊருக்குப் போவார். அந்த அம்மாளும் அவருடன் போவதாக இருப்பாள். அவளுக்கு, 'டீ பார்ட்டி' கொடுத்துப் பிரிவுபசாரம் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி இவர்கள் கூடிப் பேசுவார்கள். அதன்படி பார்ட்டியும் கொடுப்பார்கள். பார்ட்டியைப் பெற்றுக்கொண்டு போன அந்த அம்மாள் பத்து நாளைக்கெல்லாம் திரும்ப இவர்கள் மத்தியில் வந்து நிற்பாள்!'' என்றார் கணேசன் பரிகாசமாக.

''அப்படி ஒன்றுமில்லை; நீங்கள் இப்படிச் சொல்லாதீர்கள். ஒரு மெம்பர் மேல் நாடுகளுக்குப் போயிருந்தாள். அவளுக்குப் பார்ட்டி கொடுத்தோம். அதற்கென்று அவள் முதலில் போட்டிருந்த திட்டப்படி அவ்வளவு நாட்கள் அங்கே தங்கிவிட்டு வர முடியவில்லை. யுத்தம் ஆரம்பித்துவிட்டதில் உடனேயே திரும்பி விட்டாள். அதற்காக அவளைத் தப்புச் சொல்லுகிறதா?'' என்றாள் சாவித்திரி.

''பார்ட்டியைப் பெற்றுக்கொண்டால் திரும்பி வரக் கூடாதாக்கும்'' என்றான் ஜம்புநாதன்.

''இல்லாவிட்டால் பிரிவுபசாரம் பெற்றுக்கொண்டு உடனேயே வந்துவிடுவார்களா? அது போகட்டும்; வேறு என்ன முக்கிய விஷயம் இருக்கும் என்கிறாய்? பாட்மின்டன், டென்னிஸ் என்றெல்லாம் மாட்சுகள் ஏற்பாடு செய்வார்கள். ஒரு மெம்பருக்கு ஒத்து வருகிற நாள் இன்னொரு மெம்பருக்கு ஒத்து வராது; எல்லோருககும் சரிப்பட்டு. நாள் குறிப்பதற்குள் மறு வருஷத்து மாட்சுக்கு டயம் வந்துவிடும்.'' என்றார் கணேசன் பரிகாசமாகவே.

''அண்ணாவுக்கு இருந்தாலும் பொம்மனாட்டிகள் காரியமெல்லாம் இளப்பந்தான்!'' என்றாள் சரோஜா. அவளும், 'உடம்பு தேவலை' என்று எழுந்து அந்த மேஜைக்குச் சிற்றுண்டி அருந்த வந்திருந்தாள்.

"புருஷர்கள் மட்டும் உயர்வாகச் செய்துவிடுகிறார்களாக்கும்! அவர்கள் காரியங்களிலும் வேண்டிய ஊழல்கள் நடக்கின்றன! சண்டைகூட ஏற்படுகிறது!" என்றாள் சாவித்திரி.

ஸ்திரீகள் சண்டை போட மாட்டார்களா? அடே யப்பா! அவர்கள் வாய்ச் சொல்—பாணத்தின் எதிரில் புருஷர்கள் நிற்க முடியுமா? புற முதுகிட்டு ஓட வேண்டியதாக இருக்குமே!" என்றார் கணேசன் விடாது பரிகசித்துக்கொண்டு.

"நான் சொன்னவைகளை வைத்துக்கொண்டே நீங்கள் எங்களை மட்டந் தட்டுகிறீர்களே! அதுதான் நம்மைப்பற்றி நாமே குறைவாகச் சொல்லிக்கொள்ளக் கூடாது என்கிறது" என்றாள் சாவித்திரி.

"இந்த நாளில் பெண்களைக் குறைவாக எந்த விதத்திலாவது சொல்ல முடியுமா? புருஷர்களுக்குச் சரியாகப் பெரிய பெரிய பொறுப்புள்ள ஸ்தானங்களையெல்லாம் அவர்கள்தாம் நன்றாக வகிக்கிறார்களே!" என்றான் ஜம்புநாதன்.

"அப்படிச் சொல்லு" என்றாள் சாவித்திரி, அவன் சொன்னவைகளுக்காகச் சந்தோஷப்பட்டுக்கொண்டு.

"தேவலையே! ஜம்புநாதன் உனக்குப் பக்க பலமாக இருப்பான்போல் இருக்கிறதே!" என்றார் கணேசன் விளையாட்டாக.

"நான் பேசிக்கொண்டிருப்பதற்கில்லை. மீட்டிங் ஆரம்பித்துவிடுவார்கள். ஜம்புநாதன் உங்களோடு இருப்பானில்லையா?" என்று கேட்டுக்கொண்டே கிளம்பினாள் சாவித்திரி.

"என் வேலையெல்லாம் முடிந்துவிட்டது. இனி நாளை வரைக்கும் ஓய்வுதான்" என்றார் கணேசன்.

## 11

சாவித்திரி, புறப்படத் தயாராக டிரஸ் செய்துகொண்டு வந்தபொழுது காலையில் இருந்ததைவிடப் பின்னும் அழகாக இருந்தாள். கலைந்த மயிரை வாரி முடிந்திருந்தது, அவள் நெற்றியைப் பின்னும் சோபிதமாக எடுத்துக் காட்டிற்று. உள்ளங்கழுத்தோடு அவள் அணிந்திருந்த முத்து ஹாரம் நீண்டு உருண்டு லக்ஷணமாக அமைந்திருந்த அவள் கழுத்தின் வடி

வத்தை நன்கு எடுத்துக் காட்டிற்று. அவள் அணிந்திருந்த நீல நிறப் புடைவையால் அவள் சிவப்பு நிறம், பின்னும் அதிக மாகப் பிரகாசித்தது.

பெண்கள் எதற்காக நகைகள் அணிகிருர்கள் என்கிற தத்துவத்தை, ஜம்புநாதன் அப்பொழுதுதான் உணர்ந்தவனுகத் தோன்றினுன். தனியே அவள் கழுத்தின் அழகில் அது வரைக்கும் அவன் பார்வை செல்லவில்லை யல்லவா?

சாவித்திரி வந்ததும் அவளைக் காலோடு தலை நோட்டமாகப் பார்த்த சரோஜா, "ஏன் மன்னி; வளையல்களை மாற்றிக் கொள்ள வில்லையா? முத்து மாலைக்குச் சரியாக, முத்து வளையல்கள் போட்டுக்கொண்டால் நன்ருயிருக்குமே?" என்ருள்.

"அதற்கெல்லாம் நேரமில்லை; நான் வருகிறேன்; உன் கையில் கடிதமா? என்னிடம் கொடு; போகும்பொழுது வழியில் தபால் பெட்டியில் போட்டுவிடுகிறேன்" என்று ஜம்புநாதன் கையிலிருந்த கவரைக் கவனித்துச் சாவித்திரி அவனிடமிருந்து அதை வாங்கிச் சென்ருள்.

'ஒன்றுவிடாமல் கவனிப்பாள்போல் இருக்கிறது!' என்று ஜம்புநாதன் சாவித்திரியிடம் இன்னொரு விசேஷ குணத்தைக் கண்டுகொண்டதாக நினைத்துக்கொள்ளுமுன், "சாவித்திரிக்குக் கிளப்புக்குப் போகிற அவசரம்; ராத்திரிக்குச் சமையல்தான் சொன்னுளோ மறந்தே போனுளோ!" என்று அவள் மாமியார் அவளைக் குற்றம் கூறினுள்.

'இந்த அம்மாள் பெரியவளாக எதற்கு இருக்கிருள்? சமையல் செய்யாவிட்டாலும் சொல்லக் கூடாதா?' என்று சாவித்திரிக்காகப் பரிந்துகொண்டு நினைத்தான் ஜம்புநாதன். அந்த அம்மாளிடம், அவன் நினைத்ததைச் சொல்ல முடியுமா!

"உன் அகத்துக்காரர் வந்தால் சாப்பிட மாட்டாரா? அவருக்காக ஏதாவது செய்யச் சொல்ல வேண்டாமா?" என்று மறுபடியும் பெண்ணிடம் கேட்டாள்.

"எல்லாம் மன்னி சொல்லிவிட்டுப் போயிருப்பாள், அம்மா; நீ எதற்கு வீணுக்குச் சிரமப் பட்டுக்கொள்ளுகிருய்? உன் மாப்பிள்ளை சாப்பிடுகிறது ஒன்றும் நிச்சயமில்லை. சினிமாவுக்குப் போக வேண்டி வருவதாகச் சொல்லி யிருக்கிருர்.

நாங்கள் அங்கிருந்தே அகத்துக்குப் போனாலும் போய்விடுவோம். ஐயோ! மணி நாலு ஆகிவிட்டதே; டிரஸ் செய்துகொண்டு தயாராக வேண்டுமே! அவர் வந்தால் காத்திருக்க மாட்டாரே!'' என்று அவள் சொல்லிக்கொண்டு எழுந்து மாடியை நோக்கி விரைந்து போனாள்.

''இன்று எடுத்து வந்த சேலையை உடுத்துக்கொள். அதற்கு வைர நெக்லஸ் போட்டுக்கொண்டால் பொருத்தமாக இருக்கும்'' என்று ஏதோ கூறிக்கொண்டு மீனாக்ஷி அம்மாளும் பெண்ணின் அலங்காரத்தைப் பக்கத்தில் இருந்து மேற்பார்வை இடுவதற்குப் பெண்ணின் கூடவே எழுந்து சென்றாள்.

அவளும் போன பிறகு ஆண்பிள்ளைகள் மூவரும் வாசல் வராந்தாவிற்குச் சென்று உட்கார்ந்துகொண்டார்கள். ஜம்புநாதன் கணேசனிடம் ட்ராக்டர் சமாசாரத்தைப்பற்றிச் சொன்னான். தந்தை அதுபற்றி விசாரிக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார் என்பதாகக் கூறினான்.

''எனக்கு அதுபற்றின சங்கதிகளொன்றும் தெரியாது; விசாரித்துத்தான் சொல்ல வேண்டும்'' என்றார் கணேசன்.

''ட்ராக்டர் போட்டு விவசாயம் செய்யப் போகிறாரா, உன் தந்தை?'' என்றும் கேட்டார்.

''அப்பாவுக்காக அல்ல; எதிர்வீட்டுத் தியாகராஜையர் தான் மிகவும் முனைந்திருக்கிறார். அவர்தான், 'வாடகைக்காவது கிடைக்குமா? கிடைத்தால் என்ன பணம் கேட்பார்கள்?' இவைகளை யெல்லாம் விசாரித்து எழுதச் சொல்லி யிருக்கிறார். அப்பாவுக்கும் செய்து பார்க்க வேண்டுமென்கிற ஆசைதான். அத்திம்பேர்தான் அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்போல் இருக்கிறது. அவரை விரோதித்துக்கொண்டு செய்ய அப்பாவுக்குச் சம்மதமில்லை. தியாகராஜையர் செய்யட்டும். 'அவருக்கு நல்ல பலன் கிடைத்திருப்பதைக் கண்ணால் பார்த்த பிறகாவது அத்திம்பேர் மனம் மாறாதா?' என்கிறது அப்பாவுக்கு'' என்றான் ஜம்புநாதன்.

''உன் அத்திம்பேர் எதற்காக ஆட்சேபிக்கிறார்? ட்ராக்டரைப்பற்றிச் பெரிதாகச் சொல்லுகிறார்களே; பத்திரிகைகளி

லெல்லாங்கூட வருகிறதே!'' என்றார் சுந்தரேசையர்.

"காரணம் ஒன்றும், அவர் தெளிவாகச் சொல்லிவிட வில்லை. மொத்தத்தில் அது அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் குடியானவருக்குச் சரியாக நிலத்தில் பாடுபடுகிறவர். அப்பாவின் நிலம் பூராவையும் அவர்தான் பார்த்து வருகிறார். அதில் ஒவ்வோர் இடத்து மண்ணின் தராதரமும் அவருக்கு வெகு நன்றாகத் தெரியும். அது அதற்குச் சரியான உரம் போட்டுச் சாகுபடி செய்கிறார். அதற்குத் தகுந்தபடி நல்ல பலனும் கிடைத்திருக்கிறது. ட்ராக்டர் போட்டு உழுதால் பூமியின் சாரம் கெட்டுவிடும் என்று அவருக்கு ஏதோ அபிப் பிராயம். அவருக்கு இருக்கும் நில அபிமானத்தில் பரீக்ஷை பார்க்கக்கூட மனம் வரமாட்டேன் என்கிறது.''

"அப்படி இருக்கலாமா? எதிலும் முயன்று பார்க்கிறது என்பது வேண்டாமா? பயந்துகொண்டு சும்மா இருந்துவிட் டால் ஒரு வேளை நல்லதாக இருப்பதும் வராமல் போய்விடுமே'' என்றார் கணேசன்.

"நமது தேசத்து முறைகளை எவ்வளவோ பரீக்ஷித்துத்தான் பார்த்திருக்கிறார். 'இந்த மேல்நாட்டுச் சரக்கு நமது பூமிக்குச் சரியாக வராது' என்கிற ஏதோ ஒரு எண்ணம் அவருக்கு.''

அப்படி நாமாக நினைத்துக்கொண்டுவிடுகிறதா? அநுபவஸ் தர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டாமா?''

"அவருக்குப் பிறர் வார்த்தைகளில் நம்பிக்கை இல்லை! அதுதான் சிரமம். 'சும்மா, பெருமைக்குச் சொல்லிக் கொள்ளுவார்கள்; குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்ட வில்லை!' யென்று; நஷ்டம் வந்தாலும் வெளிக்குக் காண்பித்துக் கொள்ள மாட்டார்கள்' என்றெல்லாம் பிறரிடம் அவ நம்பிக்கை.''

"அப்பா, உன் அத்திம்பேர் மிகவும் பிடிவாதக்காரர் என்று நினைக்கிறேன்'' என்றார் கணேசன்.

"எல்லா விஷயத்திலும் அவர் அப்படி இருப்பவர் இல்லை. இதில் மட்டுந்தான் அவருக்கு இந்தப் பிடிவாதம். சரீரத்தை உழைத்துப் பாடு படுகிறார் அல்லவா? அதனால் பூமியினிடத் திலும் தனி வாஞ்சை வளர்ந்திருக்கிறது.

"அவரை மீறிக்கொண்டு ஒன்றும் செய்யக் கூடாது என்று உன் தந்தை நினைத்தால் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்க வேண்டியதுதான். அதிகம் விளைந்து அதிக வரும்படியையும் எதிர்பார்க்க முடியாது" என்றார் சுந்தரேசையர் நடுவில்.

"அப்பாவும் வரும்படிக்கு ஆசைப்படுகிறவர் இல்லை. அவருக்குப் பணத்தில் ஆசை என்றுமே இல்லை. இப்பொழுது நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடிக்காகவே ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைக்கிறார். விளைச்சலை விருத்தி செய்து பஞ்சத்தைத் தவிர்க்கத் தம்மால் ஆனவரைக்கும் செய்ய வேண்டும் என்கிறது அவருக்கு" என்றான் ஜம்புநாதன்.

தந்தை உயர்ந்த கொள்கைகள் உள்ளவர் என்பதை அவ்விதம் பெருமையாகச் சொல்லிக்கொண்டான் அவன்.

"நமக்கு நிலம் இல்லை. இருந்தால் நாம் இந்த உணவுப் பஞ்சத்துக்கு ஏதாவது செய்யலாம். கள்ள மார்க்கெட் படுத்துப் போக வேண்டுமானால் உற்பத்தி பெருகினால்தான் சாத்தியமாகும். பணம் படைத்தவர்கள் தங்களுக்கு வேண்டிய அளவு, நிறையப் பணம் கொடுத்துச் சாமான்களை வாங்கிச் சேர்த்துவேறு வைத்துக்கொண்டு விடுகிறார்கள். இவர்கள் அவ்விதம் வாங்காதிருந்தால், கள்ள மார்க்கெட் செழித்து நிற்குமா? பொதுவாக ஜனங்களுக்கும் சாமான்கள் கிடைக்காமல் போகுமா? பொது ஜனங்களும் இவ்விதம் பணக்காரர்களைக் குற்றம் கூறிக்கொண்டு இராமல் விளைபொருளை விருத்தி செய்யலாம். அப்படிச் செய்யாமல் தங்களுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச பூமியையும் பராமரிப்பாரற்று அப்படியே போட்டுவிட்டுப் பணத்தைத் தேடிப் பட்டணத்திற்கு வந்து பின்னும் திண்டாடுகிறார்கள்" என்றார் கணேசன்.

அவர் சொல்வதில் நியாயம் இருப்பதாகத் தோன்றிற்று ஜம்புநாதனுக்கு. "விளைபொருள் ஒரேயடியில் விருத்தி ஆகிவிட்டால் சாமான்களும் நிறையக் கிடைக்கத் தொடங்கிவிடும். அப்பொழுது பணக்காரர்கள் ரகசியத்தில் சேமித்துக்கொள்வதும் நின்று போகும். பிறகு கறுப்பு மார்க்கெட் தானகவே

ஒழிய வேண்டியதுதான் அல்லவா? அதற்கு அப்பா செய்யும் முயற்சிகள் எவ்வளவு அவசியம்? அது செய்ய முடியாமல் அத்திம்பேர் இவ்விதம் தடை போடுகிறுரே' என்று ஜம்புநாதன் துக்கத்தோடு நினைத்துக்கொண்டான்.

இந்தச் சமயத்தில் இவர்கள் பேச்சைத் தடுத்து நிறுத்திக் கொண்டு, கப்பலைப்போல் நீண்ட பெரியதொரு கார் வாசலில் வந்து நின்றது. அதில் சரோஜாவின் கணவன், மாப்பிள்ளை நீலகண்டன் மனைவியை அழைத்துச் செல்ல வந்திருந்தான். சுந்தரேசையர் பறந்தெழுந்து, அவனை வரவேற்கச் சென்றுர். கணேசனும் அவரைப் பின் தொடர்ந்து சென்றுர். மாப்பிள்ளை! —அதிலும் ஹைகோர்ட் ஜட்ஜின் மகன்! – கேட்க வேண்டுமா, இவர்கள் மரியாதை காண்பிப்பதற்கு! அவன் காரிலிருந்து இறங்குவதாக இல்லை. 'சினிமாவிலிருந்து திரும்பும்பொழுது பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லிச் சரோஜாவைக் கூப்பிடும்படி சொன்னுன். அதற்குள் கார் நுழைவதை மெத்தையிலிருந்து பார்த்துவிட்ட சரோஜாவை அவள் தாயும் துரிதப்படுத்தவே அவள் ஓடோடியும் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தாள். காலையிலேயே அவள் அலங்காரத்தைப் பார்த்துப் பிரமித்த ஜம்புநாதன், இப்பொழுது எப்படி ஆனுன்! முன் புறம் மார்பு வெகு தூரம் தெரியும்படி வெட்டப்பட் டிருந்த அவள் ரவிக்கையையும், உள் ஆடை தெரியும் அளவிற்கு மெல்லிதாக இருந்த அவள் புடைவையையும் பார்த்து; 'இது அடக்கத்தோடு கூடின குடும்பத்துப் பெண்ணின் அலங்காரந் தானு!' என்று நினைத்து அவன் அதிசயிக்குமுன், அவள் மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து, அவள் கணவன் அவளுக்காகத் தயாராகத் திறந்து வைத்துக்கொண் டிருந்த கதவின் வழியே காரினுள் ஏறி, அவன் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள்.

"நாங்கள் வருகிறோம்" என்று இருவரும் சேர்ந்து சொன்ன சொற்கள் இவர்கள் காதில் விழுமுன், கார் சத்தமின்றிக் கிளம்பிச் சென்றுவிட்டது.

சரோஜா, மாப்பிள்ளைக்கு வெகு கிட்டத்தில் நெருங்கி உட்கார்ந்ததும், மாப்பிள்ளை ஒரு கையை மனைவியின் தோளைச சுற்றியும், இன்னொரு கையை கார் திருப்பும் பக்கத்திலும் வைத்

திருந்ததும், கார் லானைச் சுற்றி வளைந்து செல்லும்பொழுது இவர்களுக்குத் தெரிந்தது.

அதைப் பார்த்தபொழுது, கூச்சமின்றிப் பிரியத்தை வெளிக்காட்டும் வேண்டாத செய்கையாகவே அது ஜம்புநாதனுக்குத் தோன்றிற்று. வெள்ளைக்காரர்கள்தான் இது மாதிரி வெளிப்படையான இன்ப வாழ்க்கை நடத்துவார்கள் என்று சினிமாப் படங்களைப் பார்க்கும்பொழுதெல்லாம் ஜம்புநாதன் நினைத்துக்கொள்வான். நமக்குள்ளும் இவ்விதம் இருக்கிறதென்பதை இன்றுதான் அவன் நேரில் காண்கிறான்.

## 12

மறு நாள் காலை ஜம்புநாதன் வெகு சீக்கிரமே விழித்துக் கொண்டுவிட்டான். அவனது அறையுள் கிழக்குப் பார்த்த ஜன்னல் வழியாகச் சூரியன் உதிப்பதற்கு முன்னமேயே அருணோதயத்தின் வெளிச்சம், விடிந்துவிட்டது என்பதைத் தெரிவித்து அவனை எழுப்பிவிட்டது. அத்தங்காள் வீட்டில் முழுவதும் ஒரு நாளைத்தான் அவன் கழித்திருக்கிறான். ஆனாலும் பல நாட்கள் அங்கே இருந்து பழகினவன்போல் அவர்களுடைய புது நாகரிகத்தை ஒட்டின பேச்சுகளும் காரியங்களும் அவனுக்கு நன்கு தெரிந்திருந்த மாதிரி தோன்றிற்று. அவனேகூட அந்த நாகரிக அம்சங்களில் சிலவற்றை அநுபவிக்க வில்லையா?

சாவித்திரி அவனுக்காகச் சீக்கிரமே கிளப்பிலிருந்து திரும்பி வந்தவள், சிறிதாவது அவனுக்கு ஊரைக் காண்பிக்கும் உத்தேசத்தில் சென்னைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றாள். அவர்கள், காரிலேயே கடற்கரையின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குச் சென்று வந்தார்கள்.

அந்தப் பீச்சின் மெரினாவை ஒட்டிப் புத்தப் புதிய பல மோட்டார் வண்டிகள் நின்றிருந்தன. அவைகளில் நவ நாகரிக ஆடை அலங்காரத்தோடு காணப்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கணக்கு இருக்கவில்லை. மைல் கணக்கில் நீண்டிருக்கும் அந்த நீலக் கடலையும், அதன் விஸ்

தாரமான மணல் பரப்பையும் கண்டு அதிசயிப்பதற்கு மேலாகவே அங்கே வந்து உல்லாசமாகப் பொழுது போக்கும் ஜனங்களைப் பார்ப்பது ஒரு பெரும் அதிசயமாக இருக்கும்போல் இருந்தது. அத்தனை வித மனிதர்கள்! அத்தனை வித நடை, உடை, அலங்காரம்! ஜம்புநாதன் பார்த்த இளந் தம்பதிகளுக்குக் கணக்கே இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் காரிலும் மணல் வெளியிலும் உட்கார்ந்து நேரம் போக்கும் மாதிரிக்கும் கணக்கில்லைதான்.

'அத்தங்காளும் அவர் கணவனும் அந்தத் தம்பதிகளைப் போல் இருக்க மாட்டார்களா? அவர்களும் இந்தப் புது நாகரிகத்தில் தோய்ந்தவர்கள்தாமே!' என்கிற எண்ணம் இந்தக் காலை வேளையில், அவன் உள்ளத்தில் உதயமாயிற்று.

அதை எண்ணியவாறே அவன் பல் துலக்கினான். 'அவர்கள் அப்படி ஒன்றும் இருக்க மாட்டார்கள்' என்று ஏதோ ஒன்று அவன் மனத்திற்குள் கூறிக்கொண் டிருந்தது.

கிழக்கிலிருந்து வரும் உப்பங் காற்றை ஏற்றவாறே அவன் முகம் துடைத்துக்கொண்டு ஜன்னலண்டை நின்றபொழுது, கீழிருந்த அந்தப் பூக் குவியல்களின் மத்தியில், சாவித்திரி தானும் ஒரு விசேஷ மலராகக் காட்சி அளித்துக்கொண்டு நிற்பதைக் கண்டான். அந்த மலர்களின் அழகைத் தானும் கிட்டச் சென்று பார்க்க எண்ணிக் கீழே இறங்கிச் சென்றான்.

"என்ன அத்தங்காள், காலையிலேயே தோட்ட வேலையா?" என்று அவன் கேட்டதற்கு, "வேலை ஒன்றும் இல்லை; டிராயிங் ரூமில் வைக்கப் புஷ்பங்கள் பறித்துக்கொண் டிருக்கிறேன்" என்றாள் அவள். அதன்படி பல வகை மலர்களை நீண்ட காம்புடன் கிள்ளிச் செண்டாகக் கையில் வைத்திருந்தாள்.

'அவள்தான் இவைகளைப் புஷ்ப ஜாடிகளில் அவ்வளவு அலங்காரமாக வைக்கிறாளா! தனித்தனி மலராக அவைகள் இருக்கும்பொழுதைவிட ஒன்று சேர்ந்திருப்பது எவ்வளவோ அழகாய்த்தான் இருக்கிறது' என்று நினைத்துக்கொண்டான் ஜம்புநாதன்.

'எந்த மலரோடு எது சேர்ந்தால் சோபிதமாக இருக்கும் என்பதைத் தெரிந்து, வைக்க, அவளுக்குத்தான் தெரியும்'

என்று தோன்றிற்று அவனுக்கு.

அவ்விதம் வெளிப்படையாக அவளிடம் புகழ்ந்து கூற வெட்கப்பட்டு, "இவைகளை நிறம் பார்த்துச் சேர்த்து வைக்கத் தெரிந்திருக்க வேண்டு மல்லவா?" என்றுமட்டும் கேட்டான்.

"அது ஒன்றும் வித்தை இல்லை. இந்தப் பூக்கள் லேசான நிறமுடையவைகள்தாம். இவைகள் ஒன்ருேடொன்று எப்படிச் சேர்த்தாலும் சேரும். இந்த இங்கிலீஷ்ப் பூக்களில் அதுதான் விசேஷம். நம் நாட்டு மலர்களை இவ்வளவு அலங்காரமாக ஒன்று சேர்க்க முடிவதில்லை. அவைகள் ஆழ்ந்த நிறமுடையவைகளாக இருக்கின்றன" என்ருள் சாவித்திரி.

"நமது மலர்களின் தன்மையே வேறு; அவைகளுக்கு வாசனைதான் அதிகம். கண்ணுக்கு அழகு என்பது அதிகம் இல்லை. இந்த மலர்களுக்கு, மணம் இல்லாவிட்டாலும் கண்ணைப் பறிக்கும் நிற அழகு இருக்கிறது. இவைகளுக்கு மணமும் சேர்ந்துவிட்டால் உலகிலேயே இப் பூக்களுக்கு நிகர் இருக்குமா? ஒரு குணம் இருந்தால் ஒன்று இல்லாமல் வைத்து விடுகிருர் சுவாமி!" என்ருன் ஜம்புநாதன்.

"ரோஜா மலருக்கு இரண்டும் இருக்கிறதே!" என்ருள் சாவித்திரி.

'ஆமாம், அபூர்வமாக அத்தங்காளைப்போல், சில பெண்களுக்கு அழகும் குணமும் சேர்ந்து அமைவதுபோலத்தான்' என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டான் அவன். ஆனல் வெளிப்படையாக, "அதனுல்தான் ரோஜா, புஷ்பங்களுக்குள் நாயகமாக விளங்குகிறது" என்று மட்டும் சொன்ஞன்.

"ஆனுலும், இவைகள் கண்ணைப் பறிக்கின்றன. பல நிறத்திலும் பல மாதிரியிலும், விரிந்து, மலர்ப் படுக்கை விரித்தாற்போல் அல்லவா இருக்கின்றன!" என்று மேலும் மேலும் வியந்து பேசினுன்.

சாவித்திரிக்கு அது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அவள் குழந்தையைப்போல் அன்பாக வளர்க்கும் செடிகள் அல்லவா? அவைகளின் புகழ்ச்சி அவள் மனத்திற்குப் பிடித்திராதா?

இவ்விதம் அவர்கள் பேசிக்கொண்டே டிராயிங் ரூமை

அடைந்தார்கள். சாவித்திரி அங்கங்கே மேஜைகளில் வைக்கப்பட் டிருந்த புஷ்ப ஜாடிகளினின்றும் வாடின புஷ்பங்களை எடுத்துவிட்டுப் புது மலர்களை, அழகு பார்த்து வைக்கத் தொடங்கினாள். அந்தச் சமயத்தில் கணேசனும் அவ்விடம் வந்தார். அந்தப் பூக்களைப் பார்த்தவுடன் முதல் நாள் உணவுப் பொருள் அபிவிருத்தி செய்வதைப்பற்றிப் பேசினது அவர் நினைவிற்கு வந்தது.

"சாவித்திரி, இப்பொழுது நாட்டில் ஏற்பட் டிருக்கும் உணவு நெருக்கடியைத் தீர்க்க நாம் ஏதாவது செய்ய வேண்டாமா?" என்று ஆரம்பித்தார்.

"நாம் என்ன பண்ணக் கிடக்கிறது? நில புலன் இருந்தால் அல்லவா அவர்கள் சொல்லுகிறபடி, சோளம், கம்பு என்று பயிர்செய்து பார்க்கலாம். நேற்றுக் கிளப் மீட்டிங்கில்கூட இது ஒரு முக்கியப் பேச்சாகத்தான் நடந்தது. ஸ்திரீகள் ஏதாவது இது குறித்துச் செய்ய வேண்டாமா என்றுதான் பேசினார்கள்" என்றாள் சாவித்திரி.

"என்ன தீர்மானித்தீர்கள்" என்று கேட்டார் கணேசன்.

"ஸ்திரீகள் தனியே என்ன செய்ய முடியும்? உழுது பயிரிடுகிறவர்கள் செய்ய வேண்டிய காரியம் அல்லவா அது" என்றாள் சாவித்திரி.

"ஏன்? வீட்டு எஜமானிகள், தங்கள் பங்களாத் தோட்டங்களில் காய் கறி பயிராக்கக் கூடாதா?" என்றார் கணேசன்.

"அதை நாங்களேதான் சொன்னோம். ஆனால் பாதியும் அது மாதிரிதான் எல்லா இடத்திலும் நடந்து வருகிறதே. நாம் நம் வீட்டில் தோட்டம் போட்டிருக்க வில்லையா?"

"இந்தப் புஷ்பப் பாத்தியிலும் முன் பக்கத்து லானிலும் போட்டிருக்கிறோமா? அந்த இடங்களிலும் சாப்பாட்டுக்கு உபயோகமான பயிர் செய்யக் கூடாதா?"

"நன்றாகச் சொன்னீர்கள்! முன் புறத்திற்கு இந்த லான் எத்தனை அழகு கொடுக்கிறது. நான் அதை எவ்வளவு பாடுபட்டு வளர்த்திருக்கிறேன்! அதை அழித்துவிடுகிறதா! எனக்கு மனம் வருமென்று தோன்றவில்லை. இந்தப் பூஞ் சோலையில் கை வைப்பார்களா! இளங் குழந்தைகளின்

மென்னியைத் திருகுவதுபோல் இலைகளைப் பிடுங்கி எறிந்து, கொன்று போடுவார்களா! கூடவே கூடாது!'' என்றாள் சாவித்திரி படபடப்பாக. அவளுக்கு அந்த எண்ணமே மிக வும் கொடூரமாகப் பட்டது.

'டில்லியில் வைஸ்ராய் மாளிகையில்கூடக் காய் கறிச் செடிகள்தானே பயிர் செய்கிறார்களாம்!'' என்றார் கணேசன்.

அவர் சொன்னதென்னவோ உண்மை. இருந்தாலும் சாவித்திரிக்கு, தான் அன்பாக வளர்க்கும் செடிகளைப் பிடுங்கி எறிவதென்றால் மனம் வரவில்லை. தன்னால் அத்தங்காளுக்கு மன வருத்தம் நேருகிறதே என்று ஜம்புநாதன் கஷ்டப்பட்டான். அவன் ட்ராக்டர் சமாசாரம் பேசாவிட்டால் கணேசனுக்கு இந்த எண்ணம் தோன்றியிருக்குமா? இது வரைக்கும் அவன் இதுமாதிரி நினைத்தவனாகத் தெரியவில்லையே. 'எந்த இடத் திலும் இந்த ட்ராக்டர் யாருக்காவது வருத்தத்தை உண்டு பண்ணிக்கொண்டுதான் இருக்குமா என்ன? ஊரில் அத்திம் பேருக்கு அதுபற்றின பேச்சையே கேட்க முடியவில்லை, இங்கே சாவித்திரிக்கு அதன்மூலம் வருத்தம் ஏற்படுகிறது!' என்று எண்ணி ஜம்புநாதன் கவலைப்பட்டான்.

கணேசன் மேலும் நிறுத்தாமல், ''உங்கள் சித்தப்பாகூட ஏதாவது செய்யத்தான் முக்கியமாக நினைக்கிறாராம். ட்ராக்டர் கொண்டு உழ வேண்டுமென்று பார்க்கிறாராம். அதுபற்றிய விவரங்கள் விசாரிக்க ஜம்புநாதனிடம் சொல்லியனுப்பியிருக் கிறார். அதைக் கேட்ட பிறகே எனக்கு நாமும் சும்மா இருக்கக் கூடாது, நம்மால் ஆனதை உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கச் செய்ய வேண்டுமென்று தோன்றிவிட்டது. எல்லாரும் தலைவர் கள் சொல்வதையெல்லாம் கவனமாகக் கேட்டுவிட்டு, 'காரியத் தில் செய்ய வேண்டியவர்கள் வேறு யாரோ? நாம் இல்லை' என்கிற மாதிரி இருந்தால் சரியா? அப்புறம் எவ்விதம் இந்தப் பிரச்னை தீருகிறது?'' என்றார்.

''சித்தப்பா எண்ணுவது நியாயம். அவர் நிலம் வைத் துக்கொண் டிருப்பவர், அதன் விளைச்சலை விருத்தி பண்ண எந்த முயற்சியும் அவர் செய்ய வேண்டியதுதான். புஷ்பத் தோட்டத்தை அழித்துச் செய்கிற மாதிரி அவருக்கு ஒன்றையும்

அழிக்க வேண்டாமே" என்றாள் சாவித்திரி.

"பூக்களால் உபயோகம் என்ன சொல்லு? கண்ணுக்கு அலங்காரம்; அவ்வளவுதானே?"

"பூக்களைப் பார்த்துக்கொண் டிருந்தால் பசியல்லவா பறந்து போகும்போல் இருக்கிறது. அத்தனை கவர்ச்சி யல்லவா இருக்கிறது, இந்தத் தோட்டத்திற்கு!" என்றான் ஜம்புநாதன்; உண்மையில் அந்த மலர்களின் அழகில் ஈடுபட்டவனாக.

"உன்னைப்போல ரஸிகர்களுக்குச் சரிதான் அப்பா; மற்றவர்களுக்கு இதைப் பார்த்துக்கொண் டிருந்தால் மட்டும் போதுமா? வயிறு பசிக்காதா?" என்று கணேசன் ஜம்புநாதனைப் பரிகசிக்கும் பாவனையில் சொன்னார்.

"ஆனால், நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள். இவைகளை இப்படியே காயப் போட்டுவிட்டு, இந்த இடத்தில் காய்கறிகள் பயிர் செய்துவிடலாம் என்றா?" என்று கேட்டாள் சாவித்திரி. அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைக்கிற மாதிரி இருந்தது.

"பூந்தோட்டம் இருக்கட்டும். முதலில் முன் பக்கத்துப் புல் தரையில் பயிர்கள் செய்வோம்" என்று யோசனை சொன்னார் கணேசன்.

சாவித்திரியும் அதை ஏற்றுக்கொள்கிறவள்போல, "என்ன பயிர் செய்யலாம்?" என்கிற வகையில் பேசினாள். அவ்விதம் அவள் உடனேயே மனத்தை மாற்றிக்கொண்டது ஜம்புநாதனுககுத்தான் வருத்தமாக இருந்தது. ஒரு பெண் அல்ல; மூன்று பெண்கள் மத்தியில் அருமையாக வளர்ந்தவன் அவன். எப்பொழுதும் அவர்களுடனேயே இருந்து அவர்கள் பேச்சு, காரியம் இவைகளையும் கவனித்து வந்திருக்கிறான். அதில் இருந்தெல்லாம் அவர்கள் மனப் போக்கையும் ஒருவாறு நனகு அறிந்திருந்தான். தங்கள் விருப்பம் எதுவாயினும் அதை விட்டுவிட்டு, அவன் தந்தை சொற்படிதான் அவர்கள் எந்தக் காரியத்தையும் செய்ய முற்படுவார்கள். ஆனாலும் சிற்சில சமயங்களில் அவ்விதம் தங்கள் விருப்பத்திற்கு மாறி நடக்கும்பொழுது உள்ளூற வருந்தியும் இருக்கி

ளூர்கள். அவனுக்குத் தெரியும்.

'இப்பொழுது சாவித்திரியும் அதுபோலத்தான் கணவனுடைய விருப்பத்திற்குச் சம்மதித்துவிட்டாள். ஆனால் உள்ளுக்குள் வருந்தத்தான் வருந்துவாள். பங்களாவை அழகுபடுத்துவதை முக்கியமாகக் கருதி அந்தப் புற்களை வளர்த்து, ஒழுங்காக வெட்டி, எல்லாம் செய்திருக்கிறாள். வாஸ்தவத்தில் அந்தப் பச்சைப் புற்கள் அந்த வெண் மாளிகையை வெகுவாகத்தான் எடுத்துக் காண்பித்துக்கொண் டிருந்தன. அதில் அவள் பெருமைப்படுவதில் நியாயம் இருக்கத்தான் இருந்தது. அந்தப் பெருமைக்குப் பங்கம் ஏற்படுகிறதென்றால் அவள் மனத்திற்குக் கஷ்டத்தைத்தான் கொடுக்கும்' என்று நினைத்துக் கொண்டான் ஜம்புநாதன். அவ்விதம் அவள் கஷ்டப்படுவதற்குத் தானும் ஒரு காரணமாக ஆனோமே என்பது, அவனை மிகவும் உறுத்திற்று. இப்படி நினைத்ததால்தான் ஹாஸ்டலுக்குப் புறப்படுமுன் சாவித்திரியிடம் தனிமையில், "அத்தங்கா, என்னால் உனக்கு வருத்தம் நேர்ந்துவிட்டது, அப்பா ட்ராக்டரைப் பற்றி விசாரிக்கச் சொல்லியிருந்ததன்பேரில் அதைப்பற்றிப் பேசினது இவ்விதம் விபரீதமாகப் போய்விட்டது" என்றான் ஜம்புநாதன்.

"விபரீதம் என்ன? வாஸ்தவமாகவே காலத்திற்குத் தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டாமா? உபயோகமாகச் செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில் கேவலம் அலங்காரத்தைப் பற்றிப் பெரிதாகக் கருதலாமா? முதலில் எனக்கு அவ்விதம் படவில்லை. ஆனால், பிறகு தெரிந்துகொண்டுவிட்டேன்" என்று சாவித்திரி சாதாரணமாகச் சொன்னாள். ஆனாலும் அவன் அவ்விதம் தன்னிடத்தில் பரிவு காண்பித்ததற்கு மிகவும் நன்றி தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் பின்னோடு அவள், "ஜம்புநாதா, எனக்குத் தம்பீ இருந்தால் எப்படியோ அப்படித்தான் நீ என்னிடம் அன்பாக இருக்கிறாய்" என்றாள்.

ஜம்புநாதனுக்கும் இவ்விதம் ஒருவாறு தனக்கு அவளிடம் ஏற்பட்டிருக்கும் அன்பைத் தெரிவித்துக்கொண்டதோடு அவளும் அதை ஏற்றுக்கொண்டு பேசினதில் மிகுந்த திருப்தி

உண்டாயிற்று.

## 13

ஜம்புநாதன் மிகுந்த உத்ஸாகத்துடன் ஹாஸ்டலுக்குக் கிளம்பினுன். சுந்தரேசையர், மீனுக்ஷியம்மாள் எல்லாரிடமும் போய்விட்டு வருகிறேனென்று மரியாதையாகச் சொல்லிக் கொண்டான். "அடிக்கடி வந்துகொண்டு இரு, அப்பா!" என்ருர் சுந்தரேசையர்.

"இதற்கு முன் நீ பட்டணம் வந்தவன் இல்லையே; இந்த ஊர் ஒன்றும் உனக்குத் தெரியாதே; சனி, ஞாயிறில் வா; ஊரைப் பார்க்கலாம்" என்ருள் மீனுக்ஷியம்மாள். அவனைப் பட்டிக்காட்டாளுக வைத்து, அவ்விதம் பட்டணம் பார்க்க அழைத்தாள் அவள்.

"அவன் இனி இவ்விடத்து ஆசாமிதானே; அவனுக்கு ஊரைப் பார்த்து அலுத்துக்கூடப் போய்விடும்" என்ருர் கணேசன்.

"ஒவ்வொரு வாரமும் உன்னைக் கார் அனுப்பி அழைத்து வரலாம். ஆனல், இந்தப் பெட்ரோல் கஷ்டத்தில் அப்படிச் செய்வதற்கில்லை. நீயாகத்தான் வர வேண்டும். ஸ்டேஷன் கிட்டத்தான்" என்ருள் சாவித்திரி.

"ஆண் பிள்ளைக்கு என்ன வந்தது? தாராளமாக வரலாம்; ட்ராமும் பஸ்ஸும் இருக்கிற ஊரில். சின்னப்பிள்ளையா? அவனுக்கென்ன வருவதற்குக் கஷ்டம்" என்ருர் சுந்தரேசையர்.

"ஜாக்கிரதை தெரிய வேணும்; அவ்வளவுதான்" என்று ஆமோதித்தார் கணேசன்.

"அதொன்றும் பெரிதல்ல. என்னுடன் வந்திருக்கிருனே நண்பன், அவனுக்கு நெடுகிலும் சுற்றி நல்ல பழக்கம்; எனக்கும் எல்லாம் கற்றுக்கொடுத்துவிடுவான்" என்ருன் ஜம்புநாதன்.

"உன்னுடன் அவனையும் அழைத்து வா; உனக்கு உபகாரமாக இருக்கப்போகும் நண்பனை நாங்களும் பார்க்கிருேம்" என்ருள் சாவித்திரி.

"உன்னோடு வந்தானே ஒரு பிள்ளையாண்டான்; உன்னை

என்னிடம் ஒப்பிக்கிற மாதிரி செய்துவிட்டுப் போனானே, அவனா? கட்டாயம் அழைத்து வா அப்பா; ரொம்பக் கெட்டிக் காரனாக இருப்பான்போல் இருக்கிறது'' என்றார் கணேசன்.

இவ்விதம் சிநேகிதனுக்கும் சேர்த்து அழைப்பைப் பெற்றுக் கொண்டு, கலாசாலைக்குப் புறப்பட்டான் ஜம்புநாதன். கணே சன் தாம் சொன்னபடி, அவனைத் தம் காரிலேயே கொண்டு போய் விட்டார். இவ்விதம் அவன் புத்தம் புதிய பெரிய மோட்டாரில் வந்து இறங்கினது, அங்கே முன்னமேயே வந் திருந்த மற்ற மாணவர்களிடத்திலும் மற்றுமுள்ள கலாசாலைச் சிப்பந்திகளிடத்திலும் அவன் மதிப்பை ஏற்றிற்று. 'பெரிய சீமான் வீட்டுப் பிள்ளைபோல் இருக்கிறது! பெரிய காரில் வந்து இறங்குகிறான்' என்று நினைத்துக்கொண்டார்கள்.

பசுபதி முன்னாடியே வந்து ஹாஸ்டல் வார்டனைக் கண்டு பேசி, தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, தங்கள் அறையை யும் கண்டுபிடித்து அதில் சாமான்களை வைத்து, எல்லாம் செய் திருந்தான். பிறகு ஜம்புநாதனுக்காக வெளியில் வந்து காத்துக் கொண்டும் இருந்தான். அவனைக் கணேசன் பார்த்தபொழுது, "ஜம்புநாதனைத் திரும்ப உன்னிடம் கொண்டுவந்து சேர்த்து விட்டேன் அப்பா'' என்று விளையாட்டாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

"உன் அத்தங்காள் அகமுடையான் நல்ல மாதிரியாக இருப்பார்போல் இருக்கிறது'' என்று கூறிக்கொண்டே பசுபதி, "வாடா அப்பா, உனக்காக நான் எல்லாம் செய்து சித்தமாக வைத்திருக்கிறேன்; வந்து பார். ஊருக்குக் கலெக்டரை வர வேற்கிற மாதிரி உன்னை வரவேற்கிறேன்'' என்றான்.

"ரொம்பத் தாங்ஸ் டா! நீ எல்லாம் செய்வாய்; உனக்குத் தெரியவும் தெரியும்'' என்றான் ஜம்புநாதன் விசுவாசத்துடன்.

"சில பேருடைய அதிர்ஷ்டம், அதையல்லவா சொல்ல வேண்டும். யாரும் அவர்களுக்குச் செய்கிறவர்களாக அமை வார்கள். நான்தான் நண்பன் என்கிற ஹோதாவில் உனக்கு எல்லாம் பண்ணுகிறேன் என்றால், உன் அத்தங்காள் அகத்திலும் உனக்கு எல்லாம் நடக்கிறாப்போல் இருக்கிறதே! இந்தக் காலத்துப் பெட்ரோல் சிரமத்தில் இவ்வளவு பெரிய

காரைப் புரட்டிக்கொண்டு வந்து உன்னை விட்டுவிட்டுப் போகிறாரே, உன் அத்தங்காள் புருஷன்! அதைச் சொல்லு" என்றான் பசுபதி, அதிசயிக்கும் பாவனையில்.

"ஆமாம் டா; சொல்ல வேண்டுமே; அவர்கள் எல்லோரும் என்னிடம் மிகுந்த பிரியந்தான் காண்பிக்கிறார்கள். அத்தங்காள் சொந்தத் தமக்கைபோலவே அன்பாக இருக்கிறாள். இவ்வளவு நாள் பாராதவள் என்கிறதாகவே தோன்றவில்லை எனக்கு!" என்றான் ஜம்புநாதன்; அந்த ஒரு நாளில் சாவித்திரி எவ்வளவு பழக்கம் ஆகிவிட்டாள் தனக்கு, என்பதை நினைத்துப் பார்த்தவனாக.

அவர்கள் பேசிக்கொண்டே ஆளுக்கு ஒன்றாகச் சாமான்களைத் தூக்கிக்கொண்டு படி ஏறத் தொடங்கினார்கள். இவர்களைப்போலவே அன்றுதான் வந்து இறங்கியிருந்த மாணவர்கள் பலர், மேலும் கீழும் தங்கள் அறையைத் தேடியும், அறைகளில் சாமான்களை வைத்துவிட்டு வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்கள். வார்த்தையாடிக்கொண்டே, ஒருவர் பின் ஒருவராக இவர்கள் படி ஏறிக்கொண்டிருந்த சமயம், இவர்களை இடித்துத் தள்ளிக்கொண்டு ஜோடியாக வந்த ஆணும் பெண்ணுமான இருவர், அதி வேகமாக அந்தப் படிகளில் இறங்கிக்கொண்டிருந்தார்கள்.

ஆங்கிலோ இந்தியர் வகுப்பைச் சார்ந்த அவர்களுடைய தோற்றத்திலிருந்து, அவர்கள் அந்தக் கலாசாலை மாணவர்கள் என்பதும் தெரிந்தது. கழுத்துப் பட்டையோடு வெட்டப்பட்டிருந்த தலை மயிரும் கணுக் காலுக்கு மேலோடு தொங்கிக்கொண்டிருந்த கவுனுமாக, கையில் ஏதோ புத்தகத்துடன் அந்தப் பெண் துரிதமாக இறங்கிக்கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து, அவளையே நோக்கிய வண்ணம் அதே வேகத்தில் இறங்கினான் அந்த வாலிபன், தான் சிறிது தாமதித்து நின்றுவிட்டாலும் எங்கே அவள் தன்னை விட்டுப் போய்விடுவாளோ என்று பயந்தவன்போல. அவனுக்கு அவளோடு சேர்ந்து செல்ல அத்தனை வேகம் இருந்தது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ஏனெனில் அந்த அவசரத்தில் தான் தன்னைச் சுற்றிப் பார்த்துச் செல்லத் தவறியவனாக ஜம்புநாதன்மேல் மோதிக்

கொண்டான்.

அவன் அவ்விதம் இடித்துக்கொண்ட வேகத்தில் ஜம்பு நாதன் கையில் பிடித்திருந்த பெட்டி, கை நழுவிச் சத்தத்துடன் படிகளில் விழுந்தது. ஜம்புநாதனுக்கு முன் செல்லும் பசுபதி நடந்ததை அறிந்து, ஜம்புநாதனுடைய உதவிக்கு வரு முன், ஜம்புநாதனும், கூடக் குனிந்து பெட்டியை எடுத்துக்கொள்ளு முன், 'ஸாரி', என்று அவசரமாகக் கூறிவிட்டு, அந்த வாலிபன் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்றுவிட்டான்.

"என்னடா என்ன! அவன் உன் கைப்பெட்டியைத் தட்டி விட்டு ஓடுகிறுனு? இந்தப் பசங்களே இப்படித்தான்; மரியாதை கிடையாது!" என்றுன் பசுபதி காரமாக.

"வேண்டுமென்று செய்த மாதிரி தெரியவில்லை; அவனுக்கு அந்தப் பெண்ணேடு போகிற அவசரம்" என்றுன் ஜம்புநாதன்.

"நல்ல அவசரம்; அதற்காக எதிரில் வரும் மனிதாகளா கண் தெரியாது! அவள் பின்னுல் ஓடுகிறது அவ்வளவு முக்கியம் போல் இருக்கிறது! நின்று சமாதானங்கூடச் சொல்ல முடிய வில்லை. நாம் இவ்விதம் நடந்தால், மரியாதை தெரியாத காட்டு மிராண்டிகள் என்பார்கள். இவன்கள் மரியாதை காட்ட வேண்டிய அவசியம் இல்லைபோல் இருக்கிறது!" என்றுன் பசுபதி. அவனுக்கு, 'இந்தப் பசங்களுக்கு என்ன வந்தது, அவ்வளவு நம்மை அலட்சியமாக நடத்துவதற்கு!' என்கிற கோபம்.

"ஏதோ, 'ஸாரி' என்றுதான் சொல்லிவிட்டுப் போகிறுன். அவள் போய்விடப் பொகிறுள் என்பதால் அவனுக்கு நிற்கப் பயம்போல் இருக்கிறது; போகிறுன் அவன்" என்றுன் ஜம்பு நாதன்.

"அவள் அவனுக்காகச் சற்று நின்று போனுல் என்ன வாம்? குதிரை மாதிரி, கழுத்தை நிமிர்த்தித் தலை மயிரைச் சிலிர்த்துக்கொண்டு நடக்கிறுளே! என்ன அடக்கம் இல்லாத பெண்களடா இவர்கள்!" என்றுன் பசுபதி, கட்டிடத்தை விட்டு இறங்கி, மணல் தரையில் நடந்து செல்லும் அவர்களைத் திரும் பிப் பார்த்துக்கொண்டு.

"அடக்கம், நாணம் என்கிற குணங்களையெல்லாம் இவர்க

ளிடம் எதிர்பார்க்க முடியுமா? அவைகள் நம்முடைய ஸ்திரீக ளின் குணங்க ளல்லவா?'' என்ருன் ஜம்புநாதன்.

''இவர்களைப் பார்த்துக்கொண்டு நமது பெண்களுந்தான் அந்தக் குணங்களைக் கைவிட்டு வருகிருர்களே! அதுதான் வருத் தமாக இருக்கிறது. நல்லது படிவது சிரமம்; கெடுதல் நிமிஷ மாக வந்துவிடுகிறது'' என்று அவைகளைப் பொது நியாயமாக வைத்துப் பேசினுன் பசுபதி.

அவர்கள் இதற்குள் தங்கள் அறையை அடைந்திருந்தார் கள். இருவர் தாராளமாக வசிக்கக் கூடிய அளவிற்கு இருந் தது அந்த அறை. அந்தப் பகுதியில் இருந்த எல்லா அறை களும் ஒரே விதமானவைதாம். ஒவ்வொன்றிலும் அநேகமாக இரண்டு இரண்டு மாணவர்களே வசித்தார்கள். யாரோ புது ஆசாமியோடு, அறையைப் பகிர்ந்துகொள்ளும்படி இல்லாமல், நண்பர்கள் இருவரும் ஒரே அறையில் இருக்கும்படி நேர்ந்தது நல்லதாகப் போயிற்று.

பசுபதி முன்னுடியே வந்து, அவ்விதம் அதைப் பார்த்து ஏற் பாடு செய்திருந்தான். அறையின் முன் பக்கம் எல்லா அறை களுக்குமாகத் தொடர்ந்து செல்லும் வராந்தா; மொத்தத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஸ்நாந அறை; இவ்விதம் எல்லா வசதிகளும் செய்யப்பட் டிருந்தது அவ்விடத்தில். மறு நாள் கலாசாலை திறக்கப்போகிறபடியால் அநேகமாக அங்கே தங்கப் போகிற எல்லா மாணவர்களும் வந்து சேர்ந்திருந்தார்கள். பக்கத்துப் பக்கத்து அறையில் இருந்த புது மாணவர்கள் ஒரு வரை ஒருவர் தெரிந்துகொள்வதும்,பழகினவர்க ளானுல் கலா சாலை விடுமுறை கழிந்து மறுபடியும் சந்திப்பதால் ஒருவருக் கொருவர் க்ஷேம லாபங்கள் விசாரிப்பதுமாகக் கூட்டங் கூட்ட மாக அங்கங்கே வராந்தாவிலும் கீழும் மேலும் கலாசாலைக் காம்பவுண்டிலும் காணப்பட்டார்கள். ஒரே மாணவர்கள் மய மாகக் காட்சி அளித்தது, அந்தப் பிரதேசம்! ஆசிரியர்கள் வசிக்க விடுதிகள், மாணவர்கள் வசிக்க ஹாஸ்டல், பாடங்கள் நடக்கக் கல்லூரி, இவ்விதம் பல கட்டடங்கள் கொண்டு, அது ஒரு தனி நகரமாகவே விளங்கிற்று.

''வெள்ளைக்காரர்களைச் சொல்லு; எங்கிருந்தோ தேசம்

விட்டுத் தேசம் வந்து, இவ்விதம் இவ்வளவு பெரிய கலா சாலையை நிறுவி யிருக்கிறார்களே. இந்தக் காலேஜ் இல்லாவிட்டால், நாம் இவ்வளவு பேர்களும் படிக்க இடம் இல்லாமல் தானே இருந்திருக்கும்'' என்றான் ஐம்புநாதன், ஆங்கிலேயர்களின் சாமர்த்தியத்தை வியந்துகொண்டு.

"அதிலும் இந்த மிஷனரிகள் இருக்கிறார்களே, அவர்கள் பலே கெட்டிக்காரர்கள்! போகிற இடமெல்லாம் இது மாதிரி ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, நல்ல வரும்படி சம்பாதித்து விடுகிறார்கள்'' என்றான் பசுபதி.

"வெறும் சம்பாத்தியமா? பரோபகாரமாகவும் அல்லவா இருக்கிறது.''

"வாஸ்தவம்; அவர்கள் தங்களைத் தியாகம் செய்துகொண்டு பிறருக்கு உதவி செய்ய முன் வருவதில்லை. தங்களுக்கும் நல்லதாகவும், பிறருக்கும் நன்மை செய்யக் கூடியதாகவும் இருக்கிற மாதிரி பார்த்து உபகாரம் செய்கிறார்கள். அதனால்தான் அவர்களுடைய முயற்சிகள் விசேஷமாக விருத்தி அடைகின்றன'' என்றான் பசுபதி.

"அப்படிச் செய்தால் போதுமே; கொடுக்கிறவன், பெற்றுக்கொள்ளுகிறவன், இரண்டு பேருக்குந்தான் செளகரியங்கள் கிட்டட்டுமே. இந்த முறை நன்றாக இருக்கிற மாதிரி தோன்றுகிறது எனக்கு'' என்றான் ஐம்புநாதன், அதைச் சிலாகித்துக்கொண்டு. 'நம்மவர்கள் உபகாரமென்றால் ஒரேமட்டில் தங்களைத் தியாகம் செய்துகொண்டு செய்ய முற்படுகிறார்கள். அதற்குப் பிரதியாக அவர்களுக்குப் பலன் கிட்டாமல் போகிற போது மனம் சோர்ந்து போகிறது; தொடர்ந்து நல்லது செய்துகொண் டிருக்க முடியாமல் ஆகிறது. அவ்விதமின்றி, இது நல்ல முறை அல்லவா?' என்கிறது அவனுக்கு.

அவர்கள் இவ்விதம் ஏதேதோ பேசிக்கொண்டு நெடுகிலும் கலாசாலையை ஒரு முறை சுற்றி வந்தார்கள். ஹாஸ்டல் வார்டன் வந்து எல்லாம் சரியாக இருக்கிறதா, அவரவர்கள் ரூமில் அவரவர்கள் இருக்க வசதி செய்துகொண்டு விட்டார்களா? என்று பார்க்க வேண்டியவைகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு, புத்தகங்களில் பதிய வேண்டியதையும்

பதிந்துகொண்டு சென்ருன். மாணவர்களும் கிளாஸ்கள் நடக்கும் மணிகள், சாப்பாடு டிபன் இவைகளுடைய நேரங்கள், இவைகளை யெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு அதன்படி தாங்களும் நடந்துகொள்ளத் தயாராகத் திட்டம் போட்டு வைத்துக்கொண்டார்கள். கலாசாலைத் தலைமை ஆசிரியரை யும் மற்றும் உள்ள பேராசிரியர்களையும் கண்டு பேச, அவர் களுக்கு ஆவல் துடித்துக்கொண்டுதான் இருந்தது. யாவும் ஒழுங்காக நடக்க ஆரம்பிக்கு முன் ஒரு வகைப் பரபரப்பு இருக் கும் அல்லவா? அந்தப் பரபரப்புத்தான் கலாசாலை முழுவ துமே இருந்தது.

ஜம்புநாதன் அந்தப் புது வாழ்க்கையை ஏற்க மிகுந்த உத்ஸாகத்துடனும் பரபரப்புடனும் இருந்தான். அவனுக்குக் கலாசாலை அநுபவம் ஏற்கனவே இருந்தது என்ருலும் இப் பொழுதுதான் முதல் முதலாக அவ்விடத்திலேயே வசித்துக் கொண்டு, முழுதும் படிப்பு மயமான சூழ்நிலையில் வாழ்க்கை நடத்தப் போகிருன். அது அவன் படிப்பைப் பின்னும் விசேஷ மாகத் தூண்டப் பெரிதும் துணை புரியும். இத்தனை நாளும் அவன் படித்து வந்த பள்ளி, கலாசாலை, இவைகளில் எல்லாம் முத லாவதாக அவன் பரீக்ஷைகள் தேறி வந்திருக்கிருன். இனி ராஜதானிக்கே முதலாக வரலாம் அல்லவா? அப்படி அவன் வரும்பொழுது அத்தங்காள் அவனை எவ்வளவு உயர்வாகக் கருதுவாள். அவள் முன், அவன் சோபிக்கப்போவதை நினைத்துப் பெருமையும் சந்தோஷமும் கொண்டான். அவன் உயர்வாகப் பரீக்ஷைகள் தேறுவதை,அகத்தில் அம்மா முதலான வர்கள் மட்டும் அல்ல; அப்பா, அத்திம்பேர் இவர்களும் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்துகொண் டிருக்கிருர்கள். அவன் அப்பாவைக்காட்டிலும் அவனுடைய அத்திம்பேர் வாய்விட்டே, ‘அவனுக்கு மேல்கொண்ட புத்திசாலி உலகில் இல்லை!’ என் கிற வகையில் புகழ்வார். இவ்விதப் புகழ்ச்சிக்குப் பழக்கமான வன்தான் அவன். ஆனுலும், இப்பொழுது சாவித்திரியின் மதிப்புக்குப் பாத்திரமாகப் போவது குறித்து, அவனுக்கு விசேஷ சந்தோஷம் ஏற்பட்டது. இப்படி அவன் வரப்போகும் உயர்வை எதிர்பார்த்துக் குதூகலத்தை அடைந்துகொண்

டிருந்தான்.

அதனாலேயே அவனும் பசுபதியும் தங்கள் தங்கள் தந்தைக்கு, தாங்கள் கலாசாலை சேர்ந்து, எல்லாச் சௌகரி யங்களையும் அமைத்துக்கொண்ட விவரத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதியபோது, ஜம்புநாதனுடைய கடிதம் தனி உத்ஸா கத்துடன் தொனித்தது. அவனைப்பற்றி அவன் வீட்டில் யாரும் கவலைகொள்ளாமல் இருக்கும்படி அது அமைந்திருந்தது.

## 14

ஜம்புநாதன், பசுபதி இவர்களுடைய கல்லூரி வாழ்க்கை ஆரம்ப மாயிற்று. ஜம்புநாதனுக்கு அதிகமாக ஒன்றும் தெரி யாது. அவன் தானாகத் தனக்கு வேண்டியவைகளைச் செய்து கொண்டு பழக்கமானவன் அல்ல என்பதனால், பசுபதி அவனுக்கு எல்லாச் சௌகரியங்களும் செய்து கொடுத் தான். அவன் சாப்பாடு முதலியவைகளைக்கூடத் தானே கவனித்துக்கொண்டான். சுபாவத்தில் சிறிதும் சங்கோஜம் என்பது இல்லாதவன் ஆதலால், பசுபதிக்கு யாருடனும் பேசுவது எளிதாக இருந்தது. அதனால் அங்கே உள்ளவர்க ளுடன் பழகிக்கொள்வதும், கலாசாலை வழக்கத்தை ஒட்டி வாழ்க்கையை நடத்திச் செல்வதும் சிரமமாக இருக்க வில்லை. அவன் எல்லர்வற்றையும் நண்பனுக்காகவும் சேர்த்துக் கவனித்துக்கொண்டு போனான். அவன் அவ்விதம் செய்தது, எல்லாரையும் ஜம்புநாதனிடம் அதிக மதிப்புக்கொள்ளச் செய்தது. அவன் புத்தம் புதிய பெரிய மோட்டாரில் வந்து இறங்கினதைக் கண்டே எல்லோரும் அவனை ஏதோ சீமான் வீட்டுப் பிள்ளை என்பதாக மதித்துக் கௌரவித்தார்கள். பசுபதி வேறு, வேலையாள்போல அவனைக் கவனித்துச் செய்தது, அந்த எண்ணத்தைத்தான் பின்னும் உறுதிகொள்ளச் செய்தது. கலாசாலை திறந்து ஒரு வாரம் ஆகுமுன், அவனை விசேஷப் பணக்காரனாக எல்லோரும் தீர்மானித்துவிட்டார்கள். அவர் கள் அவ்விதம் நினைப்பதற்குத் தனது செய்கையும் ஒரு காரணம்

என்பது தெரிந்திருந்தும், பசுபதி அதற்காகத் தன்னை மாற்றிக் கொள்வதாக இல்லை. அவன் தன் நண்பனைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, மற்றவர்கள் ஏதோ நினைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதற்காக மாறுவானா? அப்படித்தான் இருக்கட்டுமே, அவன் தந்தை பணம் இல்லாதவரா என்று அலட்சியமாகத் தள்ளிவிட்டான். வகுப்புகளுக்குச் செல்வது, ஸ்நானத்திற்குச் செல்வது, சாப்பாட்டுக்குச் செல்வது, மற்றும் சாயங்காலங்களில் காலாற விளையாட்டு மைதானங்கள் முதலிய இடங்களுக்குப் போவது எல்லாவற்றையும், அவர்கள் சேர்ந்தே செய்தார்கள். இருவரும் எப்பொழுதும் இணை பிரியாது இருக்கத் தொடங்கினார்கள்.

புதிய மனிதர்களுடன், எடுத்த எடுப்பில் பேச, ஜம்புநாதன் சிறிது சங்கோஜப்பட்டாலும், கொஞ்சம் பழகியதும், புத்தி சாதுரியத்துடன் பேசி நடந்துகொண்டது, ஆசிரியர்கள் முதல் எல்லோருக்கும் அவனை மிகவும் பிடிக்கும்படி செய்தது. வெகு அமரிக்கை, புத்திசாலி என்றெல்லாம் அவர்கள் அபிப்பிராயம் கொண்டார்கள். அந்த எண்ணம் காற்றைப்போல் கடுகி, வெகு வேகமாகக் கலாசாலை முழுவதும் பரவி, 'சாவித்திரி சொன்னபடி அவன், ஆர்தர் பெண்டென்னிஸ் (Arthur Pendennis) ஐப்போலவே தனக்கு உண்மையில் உள்ளதுக்கும் மேலான மதிப்பைப் பெறுகிறானா?' என்று ஜம்புநாதனை சந்தேகிக்கும் விதம் ஆயிற்று.

இவ்விதம் அவனை யாவரும் உயர்வாக நினைத்ததால்தான் ஜம்புநாதனைக் கலாசாலைப் படிகளில் முதலில் சந்தித்த அந்த ஆங்கிலோ-இந்திய வாலிபனும் அவனைப் புத்தகசாலையில் பார்த்தபொழுது, வலுவில் அவனிடம் போய், தான் அன்று பெட்டியைக் கை நழுவும்படி செய்ததற்கு மன்னிப்புக் கோரினான்.

"ஏதோ தவறுதலாக நேர்ந்ததற்கு மன்னிப்பு என்ன? அதற்கு அவசியமே இல்லை!" என்று அதை ஏற்க மறுத்தான் ஜம்புநாதன்.

"அப்பொழுது நின்று பேச எனக்கு நேரம் இல்லை. மேரி—

அதுதான் மிஸ் ஹாண்டர்ஸன்–வீட்டிற்குப் போக அவசரம்'' என்றான் அந்த ஆங்கிலோ–இந்தியன். வாய் தவறி மேரி என்று அந்தப் பெண்ணினுடைய சொந்தப் பெயரை உச்சரித்ததை ஜம்புநாதன் கவனித்திருப்பானோ என்கிறதில் அவன் முகம் சிவப்பேறிப் போயிற்று. அவர்களுக்குள் நெருங்கிய பழக்கம் உள்ளவர்களே, அது மாதிரி ஒருவரை ஒருவர் குடும்பப் பெயரை விட்டுச் சொந்தப் பெயர் சொல்லி அழைப்பது வழக்கம் அல்லவா?

ஆனால் அதை ஒன்றும் ஜம்புநாதன் கவனித்தவனாகத் தெரியவில்லை. ‘‘உன்னோடு அன்றிருந்த பெண் மிஸ் ஹாண்டர்ஸன் என்பவளா? அவளும் நமது கல்லூரி மாணவியா?'' என்று மட்டுந்தான் கேட்டான்.

உடனே அந்த வாலிபனும் அவள் யார், எப்படிப்பட்டவள் என்பதை ஒரு வகை உத்ஸாகத்துடன் நிறுத்தாமல் சொல்லத் தொடங்கினான். ‘அவள் அந்தக் கலாசாலை இலக்கிய ஆசிரியரின் மைத்துனி; இலக்கியத்தில் ஆனர்ஸ் படிக்கிறாள்; அதுதான் அவளுடைய கடைசி வருஷம்; மிகவும் கெட்டிக்காரி. அந்த வருஷத்துப் பரீக்ஷை முடிவில் முதலாக வருவாள் என்று எல்லாரும் எதிர்பார்க்கிறார்கள். ஆசிரியர் வீட்டிலேயே தமக்கையுடன் வசித்து வருகிறாள்' என்றெல்லாம் அவளைப்பற்றின முழு விவரமும் சொன்னான்.

தன்னுடைய பெயர் ஜான் ரிச்சர்ட்ஸ் என்றும், தன்னை ஜான் என்கிற சொந்தப் பெயர் கொண்டே அழைக்கும்படியும் ஜம்புநாதனிடம் சொன்னான். அவனும் பி. எஸ்ஸி. மாணவன்தான். அவனுக்கு அது இரண்டாவது வருஷம். அவனும் அங்கே ஹாஸ்டலில்தான் தங்கியிருக்கிறான். அவன் இருப்பது ஆங்கிலேயர்கள் பகுதி. அவனுக்கு இலக்கியத்தில் வெகு பிரியம். அடிக்கடி புத்தகசாலைக்கு வந்து புத்தகம் படிப்பதில் அவனுடைய ஆசை சொல்ல முடியாது. அந்தப் பழக்கத்தில் இருந்துதான் அவனுக்கு மிஸ் ஹாண்டர்ஸனுடைய சிநேகமும் கிடைத்தது.

இவ்விதம் எல்லா விவரங்களையும் அவனோடு சம்பாஷணை நடத்தித் தெரிந்துகொண்டார்கள் அவர்கள். ஜம்புநாதனோடு

தான் அவன் பேசத்தொடங்கினுன் என்றுலும், கூடவே இருந்த பசுபதி, தன்னை யார் என்கிற வகையில் அவனுக்கு அறிமுகம் செய்துகொண்டான் அல்லவா?

பிறகு ஜம்புநாதனும் பசுபதியும் அவ்விடம் விட்டு அவனைப் பிரிந்து செல்லும்பொழுது, "பிள்ளையாண்டான் கதை உலகில் வசிக்கிறுன் என்று நினைக்கிறேன்; அந்தப் பெண் அதற்குக் கதா நாயகிபோல் இருக்கிறது. அவளுடைய சொந்தப் பெயரைச் சொல்லிவிட்டு எப்படி விழித்தான் பார்!" என்றுன் பசுபதி.

"அவர்களைக் காதலர்கள் என்கிறுயா? அவர்களுக்கு வயது வித்தியாசம் இராதுபோல் இருக்கிறதே?" என்று சந்தேகித்தான் ஜம்புநாதன்.

"அவர்களுக்கு வயதில் பெரியவர்கள், சிறியவர்கள் என்கிறதே கிடையாது. யாரை வேண்டுமானுலும் யாரும் காதலிக்கலாம்; மணம் செய்துகொள்ளலாம்" என்றுன் பசுபதி வெகு இளப்பமாக.

"அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. தோன்றினபடி ஊகித்துக்கொண்டு பேசக் கூடாது. இவர்களுக்கு வேறு வகையில் நட்பு இருக்கக் கூடாதா என்ன? அவள் இலக்கியம் படிக்கிறுள்; வெகு கெட்டிக்காரி என்று வேறு சொல்கிறுன். இவனுக்கோ இலக்கியப் பற்று அசாத்தியமென்றும் சொல்லிக்கொள்ளுகிறுன். இருவருக்கும் அதற்காக ஏற்பட்ட சிநேகமாக ஏன் இருக்கக் கூடாது?" என்று கட்சி பிடித்தான் ஜம்புநாதன். ஸ்திரீ, புருஷர்கள் நட்பென்றுல் உடனே சந்தேகிப்பது அவனுக்குப் பிடிக்க வில்லை.

"உனக்கு யாரையும் தவறு நினைத்துவிடக் கூடாது; அதனுல் சொல்கிறுய்" என்றுன் பசுபதி.

"நீ எதையும் நிச்சயமாகச் சொல்லிவிடுகிறுய் அப்பா. நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. இந்தப் பையன் நல்ல மாதிரியாகக் காண்கிறுன். இவனுடைய இலக்கிய ஆசைதான், அவளிடம் இவனை இழுத்துச் செல்கிறது என்று நினைக்கிறேன். ஒருவரைச் சரியாகத் தெரிந்துகொள்ளு முன் அவர்களைப்பற்றின சந்தேக ஆஸ்பதமான விஷயங்களை மனத்

தில் வைத்துக்கொள்ளக் கூடாது'' என்றான் ஜம்புநாதன்.

''இதில் சந்தேகம் என்ன? யார் எவ்விதம் இருப்பார்கள் என்பது பார்த்த மாத்திரத்தில் ஊகித்துவிட முடியாதா?''

''அந்த ஊகம் சரியில்லை என்று ஆகிவிட்டால்?'' என்று கேட்டான் ஜம்புநாதன்.

''என்ன குடி முழுகிப் போய்விடும். நாம் கொண்ட எண்ணத்தை மாற்றிக்கொண்டுவிடுகிறது; அவ்வளவுதானே!''

''முதலில் தப்பு அபிப்பிராயத்தோடு ஒருவரிடம் பழகி விட்டுப் பிறகு மாற்றிக்கொண்டால், அது அவர்களுக்குத் தெரியாமற் போகுமா? 'நம்மைத் தவருக நினைத்தவர்கள் தானே!' என்று பிறகு நம்மிடம் சகஜமாகப் பழகுவார்களா?''

''அவர்கள் நமது எண்ணங்களை அறியும்படி விடலாமா? மறைத்துக்கொள்ள வேண்டும்! அதில்தான் சாமார்த்தியம் இருக்கிறது. பிறந்த மேனிக்கு மனத்தை வெளிக் காண்பித்துக்கொண்டு பழகத் தொடங்குவார்களா?'' என்றான் பசுபதி.

''எனக்கு அது மாதிரியெல்லாம் உள் ஒன்று, புறம் ஒன்று வைத்துப் பழகத் தெரியாது. ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் தவருகவும் நான் எடுத்துக்கொள்ள மாட்டேன்'' என்றான் ஜம்புநாதன்.

''ஒருவரை நல்ல மனுஷ்யனாக நினைத்துப் பழகிவிட்டு, அவன் அவ்விதம் இல்லை என்று பிறகு தெரிந்தால் மிகுந்த ஏமாற்றமும் வருத்தமும் உண்டாகிற தல்லவா? அதைத் தடுத்துக்கொள்ளத்தான் முன் ஜாக்கிரதையுடன் இருந்துவிடுவது நலம்'' என்றான் பசுபதி.

'ஒருவருடன் பழகும் விஷயத்தில் கூடச் சுயநலந்தானு பிரதானம்! நாம் ஏமாறக் கூடாது என்பது ஒன்றுதானு முக்கியம்! நாம் அவர்களைச் சந்தேகிப்பது தெரிந்தால் அவர்கள் மனம் நோகுமே என்கிறது கிடையாதா? எல்லோருடனும் சகஜமாகப் பழகும் பசுபதி, இவ்விதமா ஒவ்வொருவரையும் சந்தேகிக்கிறான்!' என்கிற வியப்பு அவனுக்கு.

''நான் அவனை ஏதோ பெரிய குற்றவாளி என்று சொல்லி விட்டதுபோல் பேசுகிறாயே. பருவ வயதை அடைந்திருக்கும் ஸ்த்ரீ, புருஷர்களுக்குச் சகஜமாக ஏற்படக் கூடியவைகள்

தாமே இவைகள். ஒரு யுவனும் யுவதியும் நட்புக்கொள்கிறார்கள் என்றால் அவ்விடத்தில் காதல் இல்லாமலா இருக்கும்? இலக்கியத்திற்காக ஏற்பட்ட நட்பு, பிறகு காதலாக மாறாமல் வேறு என்ன செய்யும்? மேலும் அவர்களுக்கு இவை வெகு சகஜம். வாழ்க்கையில் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் காதல் அவசியம் ஏற்பட்டே தீருகிறது. காதல் முற்றித் தவறான நடத்தைக்குக் கொண்டுபோகாமல் இருந்தால் அதுவே பெரிது என்று ஆகிவிடுகிறது'' என்றான் பசுபதி.

''இரண்டு ஆண் பிள்ளைகளுக்குச் சில காரணங்களை முன்னிட்டு அத்தியந்த சிநேகம் வளருவதில்லையா? அதேபோல் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருப்பது சாத்தியம் இல்லை என்று கருதிவிட முடியுமா?'' என்றான் ஜம்புநாதன்.

''சாதாரணமாக அவ்விதம் இல்லைதான். அவர்களுடைய யௌவன வயது அதற்கு இடம் கொடுப்பதில்லை'' என்றான் பசுபதி தீர்மானமாக.

''இருவருக்கும் பொதுவாக ஒன்றில் விசேஷப் பற்றுதல் இருந்து, அது அவர்களை நண்பர்களாகப் பிணைத்து வைக்கிறது. அது உடனே ஆண் பெண் ஆசையாகத்தான் பரிணமிக்க வேண்டும் என்கிற நியதி என்ன?'' என்றான் ஜம்புநாதன் கட்சி ஆடிக்கொண்டு.

''ஆம், நியதியாகத்தான் சொல்ல வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள தொடர்பு இயற்கையில் ஏற்பட்டது. அதை மீறி இருப்பது சாதாரணமாகச் சாத்தியம் இல்லை. நம்மில் ஆணும் பெண்ணும் அதிகம் நெருங்கிப் பழகுவதில்லை. அதனால் நமக்கு அவைகள் ஒன்றும் தெளிவாகத் தெரிய வகை இல்லை. நமக்குச் சமான வயதுடைய அந்நியப் பெண்களுடன் நாம் எங்கே பழகுகிறோம்? எல்லாம் தங்கை, தமக்கை என்கிற உறவுப் பெண்களோடு தீர்ந்து போகிறது. அவர்களில் அவ்விதம் இல்லை. யாரும் யாருடனும் தாராளமாகப் பழகுகிறார்கள். அதனால் காதலுக்கும் மற்றவைகளுக்கும் அங்கே இடம் ஏற்படுகிறது. அநேகமாக ஒத்த வயதுடைய யுவனும் யுவதியும் சிநேகம் என்றால், நாம் அவ்விடத்தில் காதலை எதிர்பார்க்க வேண்டியதுதானே'' என்று பிரசங்கித்தான் பசுபதி.

"ஆகையால் இப்பொழுது நீ அந்தப் பெண்ணும் அவனும் காதலர்கள் என்கிறாய்; அவ்வளவுதானே; இருக்கட்டும். அதனால் நமக்கென்ன? நாம் அவனுடன் பழகிக்கொள்வதற்கு அது தடை இல்லை அல்லவா? அவன் காதல் நம்மை ஒன்றும் செய்துவிடாது. அந்தக் காதல் வலையில் நாம் விழுந்துவிடப் போகிற தில்லையே" என்றான் ஜம்புநாதன்.

"நாமும் அவ்விதம் வலையில் அகப்பட்டுக்கொள்வதற்கு ஒரு பெண் கிடைக்க வேண்டாமா? நமது வாழ்க்கையில் அதற்கு இடம் இல்லை. இவர்களுடைய காதல் நாடகத்தை வேண்டுமானால் பார்த்து அநுபவிக்கலாம். நமக்குக் கிடைக் கக் கூடியது அவ்வளவுதான்!" என்றான் பசுபதி விளையாட்டாக.

"வாஸ்தவம்; நம்மவர்களுக்கு வாழ்க்கையில் இந்த அநு பவம் இல்லாமலேதான் போகிறது. புஸ்தகங்களில் படிப்ப தோடு சரி. மற்றப்படி வாழ்க்கையில் எல்லோரும் ஒரே மாதிரி கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டியது; குடும்பம் நடத்த வேண்டியது என்று வைத்துக்கொண்டு விட்டோம்" என்றான் ஜம்புநாதன்.

"இப்பொழுதெல்லாம் நமது இளைஞர்கள் சிலருக்கு அந்த ஆசைதான் ஏற்பட் டிருக்கிறது. காதலித்து, பிறகுதான் விவா கம் செய்துகொள்ள வேண்டுமென்று பார்க்கிறார்கள். அது சரியானபடி நடக்காமல் போகிறது. யாரைக் காதலிப்பது, எப்படிக் காதலிப்பது என்கிறதொன்றும் ஒழுங்கில்லாமற் போகிறது. காதலிக்கும் அளவுக்கு நமது சமூகம் இன்னும் முன்னேற வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப் பொழுது, ஸத்தியாக, விவாகமான பிறகு, காதல் வாழ்க்கை நடத்துகிறார்களே, அதோடு நிறுத்திக்கொள்ள வேண்டியது தான் என்று நினைக்கிறேன்" என்றான் பசுபதி; பொதுவாக இளந் தம்பதிகள், எல்லோர் முன்னிலையிலும் தங்களுக்குள் இருக்கும் ஸ்வாதந்திரியத்தைக் காண்பித்து நடந்துகொள்ளும் மாதிரியைக் குறிப்பிட்டுக்கொண்டு.

"அதிலும் இந்தச் சென்னையில் வசிக்கும் இளைஞர்களுக்கு வெட்கமே இல்லைதான். தாங்கள் தம்பதிகள் என்பதைப் பிறரிடம் காண்பிப்பதில்தான் முனைந்து நிற்கிறார்கள். தனிமை

யில் தங்கள் அன்பை ஒருவருக்கு ஒருவர் தெரிவித்துக்கொள் வதற்கு அவர்களிடம் ஒன்றும் இராது என்றே நினைக்கிறேன். எல்லாம் பகிரங்கமான செய்கைகளாக ஆகி வருகின்றன" என்றான் ஜம்புநாதன்.

சரோஜா, அவள் கணவன், மற்றும் கடற்கரையில் காற்று வாங்கிக்கொண் டிருந்த சதி பதிகள், இவர்கள் அவன் நினை விற்கு வந்தனர்.

'சென்னையில் என்று, அவன் பிரித்துச் சொன்னதில் அவன் அத்தங்காள் அகத்தவர்களைச் சொல்லுகிறானோ?' என்று பசுபதி சந்தேகித்தான். ஆனால் அதுபற்றிப் பசுபதி கேட்ட கேள்விகளுக்கு ஜம்புநாதன் நேரடியாகப் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

பசுபதியே நேரில் பார்த்த பிறகு அத்தங்காள், அவள் வீட்டவர்கள் இவர்களைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொள் கிறான் என்பதை அறிவதில் ஆவலோடு இருந்தான் அவன். அதனால் முன் கூட்டி அவர்களைப்பற்றி எந்த விதமாகவும் சொல்வதில்லை என்கிற தீர்மானத்தில் இருந்தான். அதற்கு அநுசரணையாக மேலும் அந்தக் கேள்வியைப் பசுபதி தொடர்ந்து கேட்க முடியாதபடி சில மாணவர்கள் அவர்க ளுடன் வந்து சேர்ந்துகொள்ளவே அவர்களுடைய அந்தச் சம்பாஷணை அத்துடன் நிற்க வேண்டிய தாயிற்று. தெரிந்து கொள்ள ஆவல் இருந்தும், பசுபதியும் அதை அடக்கிக்கொள்ள வேண்டிய தாயிற்று. சம்பாஷணையின் போக்கில் ஒருவரைப் பற்றி அறிந்துகொள்ள யத்தனிப்பது தவறு ஆகாது. ஆனால், வேண்டுமென்று பேச்சைப் புகுத்தி, கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ளப் பார்ப்பது அவ்விதம் ஆகா தல்லவா?

ஜம்புநாதன் பசுபதிக்கு அத்தங்காளின் உயர்த்தியைச் சொல்லத்தான் துடித்துக்கொண் டிருந்தான். 'ஆனால் பசுபதி தனக்கு உலக அநுபவம் நிறைய உண்டு என்கிறான். எல்லா ரைப்பற்றியும் பார்த்த மாத்திரத்தில் தெரிந்துகொண்டு விடு பவனாகப் பேசுகிறான். அத்தங்காளையும் அவள் வீட்டு மனிதர் களையும் எந்த விதம் எடுத்துக்கொள்கிறான்? பார்க்கவேண்டும்' என்றுதான் ஒரு விதமும் அவர்களைக் குறித்துப் பேசாது,

அவர்கள் வீட்டிற்குத் தாங்களே போகப் போகும் நாளை மட்டும் எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

## 15

கலாசாலை திறந்த புதிது என்பதால் அவர்களுக்குப் பாடங்கள் ஒன்றும் ஆரம்பம் ஆகி இருக்கவில்லை. அவர்களுடைய நேரம் முழுவதையும் இஷ்டம்போல் செலவழிப்பதற்கு யாதொரு தடையும் இருக்க வில்லை. தலைமை ஆசிரியரிடம் சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் ஹாஸ்டலைவிட்டு வெளியில் தங்க அநுமதி பெற்றுக்கொண்டு, சனிக்கிழமை, சாப்பாட்டுக்குமேல் புறப்பட்டு சாவித்திரி வீட்டை அடைந்தார்கள்.

இவர்கள் வந்த சமயம் சாவித்திரி ஏதோ புதுவிதப் பக்ஷணம் ஒன்று செய்து பார்த்துக்கொண் டிருந்தாள்.

வாசல் வராந்தாவின் விசுப்பலகையில் சாவித்திரியின் மாமனார், தூங்கிக்கொண் டிருந்தார். அதைக் கலைக்காமல் அவர்கள், சந்தடியின்றி அவரைத் தாண்டி வந்திருந்தார்கள்.

டிராயிங் ரூமைக் கடந்து வரும் வரையில் அவர்கள், வீட்டு மனிதர்கள் யாரையும் சந்திக்க வில்லை. அவர்களைப் பார்த்த வேலைக்காரன், ஜம்புநாதனைத் தெரிந்துகொண்டான் ஆகையால், "சின்னம்மா கூடத்தில் இருக்காங்க" என்று மட்டும் அவர்களுக்கு வழி காட்டிவிட்டுப் போனான். அதனால் சாவித்திரி இருக்கும் இடத்திற்கு அவர்களால் உடனே வந்து சேர முடிந்தது. அவர்களைப் பார்த்தவுடன் சாவித்திரி, "வாருங்கள், உட்காருங்கள்" என்று சொன்னதுடன், "இதோ நானும் வந்து விட்டேன்" என்று சொல்லி, பாத்திரத்தில் இருந்த வஸ்துவைத் தட்டில் கொட்டவும் கொட்டினாள்.

"நான் பக்ஷணம் செய்து முடிப்பதற்கும் நீங்கள் வருவதற்கும் எவ்வளவு சரியாக இருந்திருக்கிறது" என்று கூறிக் கொண்டே, முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைக் கைக் குட்டையால் துடைத்துக்கொண்டாள். அடுப்பின் அனல் பட்டு அவள் முகம் சிவப்பேறி இருந்தது. வெள்ளைக்காரப்

பெண்கள் அழகு செய்யவென்று, கன்னங்களுக்குச் சிவப்பு வர்ணம் தடவிக்கொள்கிருர்களே, அது உண்மையில் முகத்தின் வசீகரத்தை அதிகப்படுத்துகிறது என்று தெரிந்துதான் செய்துகொள்கிருர்கள் என்று நினைத்துக்கொண்டான் ஜம்புநாதன்.

“நீயே செய்திருக்கும் பக்ஷணத்தை ருசி பார்க்க நான் மட்டும் அல்ல; எனது நண்பன் பசுபதியையும் அழைத்து வந்திருக்கிறேன்” என்ருன் ஜம்புநாதன்.

“உனக்கு வழிகாட்டியாக இருக்கப்போகிருன் என்ருயே, அந்த நண்பனு?” என்று சாவித்திரி பசுபதியை வரவேற்ருள்.

“அதென்னமோ ரொம்ப உண்மை; நான் இன்று இவனுடன் வராவிட்டால் இவன் வழி கண்டு பிடித்துக்கொண்டு உங்கள் வீடு வந்திருக்கப் போவதில்லை” என்ருன் பசுபதி, வீட்டு விலாசத்திற்குமேல் ஒன்றும் தெரியாமல் ஜம்புநாதன் விழித்ததற்காகப் பரிகசித்துக்கொண்டு.

“அன்று காரிலேயே வந்து போனதல்லவா? திக்குத் திசை தெரியவில்லை. நான் உன்னை நம்பியிருக்கிறது இதற்காகத்தானே. எனக்கு ஊர், பழக்கம் ஆகும் வரையில் நீ வழி காட்டத்தான் வேண்டும்” என்ருன் ஜம்புநாதன்.

“இது மாதிரி வழி காட்டி என்ருல் சரிதான்; இதற்குமேல் வாழ்க்கைக்கு என்று வைத்துக்கொண்டு விடாதே. பிறகு நீ செய்யும் தவறுகளுக்கு நான் பொறுப்பாளி ஆகும்படி ஆகி விடும்” என்ருன் பசுபதி விளையாட்டாக.

“ஜம்புநாதன் விஷயத்தில் நீ ஒன்றும் அப்படிப் பயப்பட வேண்டாம். அவனைச் சித்தப்பாவின் வீட்டில் வெகு ஜாக்கிரதையுடன் வளர்த்திருக்கிருர்கள். அவன் தவறு ஒன்றும் செய்யமாட்டான்” என்ருள் சாவித்திரி.

“அவ்விதம் லகானில் வளருகிற பிள்ளைகள்தான் அது சிறிது தளராதா என்று காத்திருந்து மீறிவிடுவார்கள்” என்ருன் பசுபதி விடாமல்.

“என்னடா நீ! அத்தங்காளிடம் என்னைத் தூஷிப்பதற்காகவே என்னுடன் வந்தாயா என்ன? நான் ஏதோ சுபாவத்தில் கெட்டவன் என்று தோன்ற வைத்துவிடுவாய்போல்

இருக்கிறதே!'' என்முன் ஜம்புநாதன்.

''நான் ஒன்றும் அவ்விதம் நண்பனைக் காட்டிக் கொடுத்து விடமாட்டேன். பயப்படாதே!'' என்முன் பசுபதி மேலும் விளையாட்டாகவே.

''அவன் சொன்னாலும் நான் நம்பிவிடுவேனா!'' என்முள் சாவித்திரி, அந்தக் கொஞ்சப் பழக்கத்திலேயே ஜம்புநாதனை அவள் அறிந்துகொண்டு விட்டதாகக் காண்பித்துக்கொண்டாள்.

இவ்விதம் அவர்கள் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே சாவித்திரி தான் செய்த பக்ஷணத்தில், சில துண்டுகள் நறுக்கிக் கொணர்ந்து, ''நேற்று ரேடியோவில் சொன்ன தின்பண்டம் இது. செய்து பார்த்திருக்கிறேன். ருசியாக இருக்கிறதா? தின்று பார்த்துச் சொல்லுங்கள்'' என்று அவர்களிடம் கொடுத்தாள்.

''எங்களை, 'டெஸ்டர்களாக' வைத்துக் கொடுக்கிறீர்களா? நீங்கள் செய்திருக்கும் பக்ஷணத்துக்கு மதிப்புச் சொல்லும்படியான சக்தி எங்களுக்கு இருக்க வேண்டாமா?'' என்முன் பசுபதி, சாவித்திரியை உயர்த்திக் கூறும் எண்ணத்தில்.

''அதற்காக இல்லை. அவர்கள் சொன்ன அளவில் அவர்கள் சொன்ன சாமான்களைக் கொண்டு செய்திருக்கிறேன். சரியான பதத்தில் வந்திருக்கிறது. ருசியும் சரியானபடி இருக்கிறதா, பார்க்க வேண்டாமா?'' என்முள் சாவித்திரி; ஏதோ கொடுத்திருக்கும் சில எண்களைக் கூட்டிப் பார்த்துச் சரியான விடை கண்டு பிடித்து விட்ட சிறு பையனின் சந்தோஷம் அவளுக்கு ஏற்பட் டிருந்தது.

''ஸயன்ஸ் எக்ஸ்பெரிமென்ட் மாதிரி செய்திருக்கிமுய் அல்லவா? வெவ்வேமுன இரண்டு திராவகங்களை ஒன்று சேர்க்கும்பொழுது நாம் எதிர்பாராமலே இன்னென்று வந்து நிற்கும். நம்மையே பிரமிக்க அடித்துவிடும். அதுபோல் இந்தப் பக்ஷணமும் சில வஸ்துக்களைச் சில அளவில் போட்டுச் செய்ததில் ஒரு வகைப் புதுத் தின்பண்டமாக உருவாகி இருக்கிறது; இல்லையா?'' என்முன் ஜம்புநாதன், சாவித்திரியின் சந்தோஷத்திற்குக் காரணம் தெரிந்தவனுக.

"நீ பெரிய விஷயத்திற்குப் போய்விட்டாயே. பக்ஷணம் செய்வதும் ஸயன்ஸ் எக்ஸ்பெரிமென்டும் ஒன்ருகுமா?" என்ருள் சாவித்திரி. ஆனாலும் அவளுக்கு அவ்விதம் நினைப் பதில் திருப்திதான் ஏற்பட்டது.

"செய்து பார்த்துச் சரியாக வரும்பொழுது ஏற்படும் உத்ஸாகம் வரையிலும் இரண்டும் ஒன்றுதான். மற்றப்படி வேண்டுமானால் இவைகள் வெறும் தின்பண்டமாகப் போகின் றன; அவைகள் பெரிய விஷயங்களாக மாறுகின்றன" என் ருன் ஜம்புநாதன்.

"நீ சொல்வதைக் கேட்டால் ஸயன்ஸ் படிப்பதும் ஸ்வா ரஸ்யமாக இருக்கும்போல் இருக்கிறதே. நான் இதுவரையில் இலக்கியம் ஒன்றுதான் படிக்கக் கூடியது என்று வைத்திருந் தேன்" என்ருள் சாவித்திரி.

"ஓரளவுக்கு அப்படித்தான். ஸயன்ஸ் படித்தவர்களுக் குத்தான் அதில் ஸ்வாரஸ்யம் ஏற்படும். மற்றவர்களுக்கு இராதுதான்" என்ருன் ஜம்புநாதன்.

"அப்படிப் பார்க்கும்பொழுது எந்த விஷயமும் அப்படித் தான். பக்ஷணமும், செய்து பார்க்கிறவர்களுக்குத்தானே உத் ஸாகமான வேலையாக ஆகிறது" என்ருன் பசுபதி.

"சரி, பேசிக்கொண்டே இருக்கிறீர்களே; ருசி பார்த்துச் சொல்லவில்லையே. நீங்கள் பார்த்துச் சொன்ன பிறகல்லவா நான் முழுப் பெருமையையும் அடைய வேண்டும்."

"நாங்கள் மட்டுமா தின்று பார்க்கிறது? கணேசன் எங்கே? நீ செய்திருப்பதை அவர் சாப்பிட்டு அபிப்பிராயம் சொல்ல வேண்டாமா? நான் பசுபதியைவேறு அவருக்காக அழைத்து வந்திருக்கிறேனே" என்ருன் ஜம்புநாதன்.

"அவரை நீ பார்க்கிறதென்ருல் இப்போதைக்கு முடியாது. சனி ஞாயிறில்கூட அவருக்கு வேலைதான். வக்கீல் வீடோ இன்னொரு இடமோ போக வேண்டி யிருக்கும். நான்தான் இந்த வீட்டுச் சகல காரியத்திற்கும்" என்ருள் சாவித்திரி. அதை அவள் ஒரு குறையாகச் சொல்லிக்கொண்ட மாதிரி இருந்தது.

இந்தச் சமயத்தில், "சாவித்திரி! யார் அங்கே!" என்று

கேட்டுக்கொண்டு, மீனுக்ஷி யம்மாள் கீழே இறங்கி வந்தாள். சாப்பாட்டுக்குப் பிறகு, சிறு தூக்கம் தூங்கி விழித்துக்கொண்ட அவளுக்கு, இவர்களுடைய பேச்சுக் குரல் கேட்டு, 'யாரது?' என்று பார்க்க ஆவல் ஏற்பட் டிருந்தது.

"ஜம்புநாதனின் நண்பன் பசுபதி" என்று சாவித்திரி அவளுக்குப் பசுபதியை அறிவித்துவிட்டு, "அன்று ரேடியோ வில் சொல்ல வில்லையா, அந்தப் பக்ஷணத்தைச் செய்திருக் கிறேன்; அது சரியாக வந்திருக்கிற தம்மா!" என்று சந்தோஷத் துடன் மாமியாரிடம் சொன்னுள்.

"ஆமாம், சர்க்கரையும் நெய்யும் சேர்ந்தால் ஏன் சரியாக வராமல் போகிறது!" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு, "சரோஜாவின் மாமியார் இப்பொழுது வருவாள்? அவளுக்குப் புதுவிதப் பட்சணமாகக் காண்பிக்கலாம்; இருக்கட்டும்" என்று அவள் சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே வாசலில் மோட் டார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. சாவித்திரியும் மீனுக்ஷி யம்மாளும் வந்தவர்களை வரவேற்கச் சென்ருர்கள். சம்பந்தி யம்மாள், அவள் பெண் இருவருந்தான் வந்திருந்தார்கள். சரோஜா வரவில்லை. சம்பந்தி யம்மாள் யார் வீட்டிற்கோ விஸிட் போகிறவள், வழியில் இவர்கள் வீட்டிற்கும் வருகிருள்; அவ்வளவுதான்!

அவர்கள் டிராயிங் ரூமில் பேசுவது, கூடத்தில் ஜம்புநாத னுக்கும் பசுபதிக்கும் நன்கு கேட்டுக்கொண் டிருந்தது. சாவித் திரி இவர்களை இங்கே இருக்கும்படி சொல்லிப் போயிருக்கும் பொழுது, பேச்சுக் காதில் விழுகிறது என்பதற்காக அவர்கள் எங்கே போவார்கள்?

"வாருங்கள், வாருங்கள்! ஏது இந்த வெயில் வேளையில் இப்படி?" என்று சம்பந்தி யம்மாளை வரவேற்ருள் மீனுக்ஷி யம்மாள்.

வராந்தா விசுப்பலகையில் சிரம பரிகாரமாகத் தூங்கிக் கொண்டிருந்த சுந்தரேசையரும், மோட்டார் வந்த சத்தம் கேட்டு, வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்து, அவர்களைப் பின்தொடர்ந்து டிராயிங் ரூமுக்குள் வந்திருந்தார்.

"ஆமாம், வெயில் ரொம்ப அதிகந்தான். ஒரே மட்டில்

அசத்துகிறது. ஒரு வேளை இரவு மழை வரலாம்'' என்றார் தானும் ஏதோ சொல்ல எண்ணி.

''வெயிலைப் பார்த்தால் முடிகிறதா? சீப் இன்ஜினீர் சம்சாரம் பார்க்கும் இடங்களி லெல்லாம் அவள் அகத்துக்கு வர வேண்டும், வர வேண்டும் என்று அழைக்கிறாள். அவளும் நம் வீட்டுக்குப் பல தடவைகள் வந்து போய்விட்டாள். இனி மேலும் போகாதிருந்தால் நன்றாக இராது. சாயங்காலங்களில் ஏதாவது முக்கிய ஜோலி ஏற்பட்டுவிடுகிறது. இப்படி மத்தியான்னத்தில் புறப்பட்டால்தான் புறப்பட்டது. அதுதான் கிளம்பினேன். போகிற வழியில் இங்கும் வந்துவிட்டுப் போகலாமென்று நுழைந்தேன். மீனாக்ஷி யம்மாளும் நான் வருகிறதே இல்லையென்று புகார் பண்ணுகிறாரே'' என்றாள் சம்பந்தி யம்மாள்.

''உண்மைதானே! நீங்கள் எங்கே வருகிறீர்கள்?'' என்றாள் மீனாக்ஷியம்மாள்.

''என்ன பண்ணுகிறது, நாள் முழுவதும் சரியாகப் போகிறது. இன்றைக்குக்கூட இப்படி அவசரத்தில் வந்தால் தான் வந்ததாக இருக்கிறது. சாயங்காலம் பாரதியார் விழாவுக்குத் தலைமை வகிக்கப் போக வேண்டும். உங்களுக்கும் அழைப்பு வந்திருக்குமே? கட்டாயம் வாருங்கள். அதையும் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்'' என்றாள் சம்பந்தி யம்மாள். தனக்குக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்துப் பேசத் திறமை உண்டு என்கிற பெருமை அவளுக்கு.

அவள் வாஸ்தவத்தில் மீனாக்ஷி யம்மாளைவிடப் படித்தவள் தான். சங்கீதம், நாட்டியம் என்கிற விஷயங்களைப்பற்றியும் அவள் கொஞ்சம் தெரிந்துகொண் டிருந்தாள். ஹைகோர்ட் ஜட்ஜின் மனைவி என்கிற கௌரவமும் இருந்தது அவளுக்கு. இவைகள் நடக்கும் மாதர்கள் கூட்டம் எதுவானாலும் அதற்கு அநேகமாக அவள் தலைமை வகிப்பது என்று ஏற்பட்டுப் போயிருந்தது. சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி, கூச்சமின்றி எழுந்து நின்று, தட்டுத் தடுமாறாமல் அவளுக்குப் பேசத் தெரிந்தும் இருந்தது. இவைகள் உண்மையில் பெருமைப்படக் கூடியவைகள் அல்லவா?

"பாரதியார் பாட்டுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு இன்று பரிசும் வழங்குகிறீர்கள்போல் இருக்கிறதே" என்றாள் சாவித்திரி.

"போட்டி நடந்தபோது நீ வராமல் போய்விட்டாயே! பாவம், ஜட்ஜ்கள் பாடு திண்டாட்டந்தான். ஒரு பெண்ணா வது சுமாராகப் பாட வேண்டுமே! கிடையாது. அரை குறை யாகக் கற்றுக்கொடுத்து அனுப்பியிருந்தார்கள். அந்தக் குப்பை யில் ஒன்றைப் பொறுக்கும்படி ஆய்விட்டது" என்றாள் சம்பந்தி யம்மாள்.

"என்னம்மா நீ, ஒரே மட்டில் அடித்துவிடுகிறாய். சில பெண்கள் தேவலை; சுமாராக இருந்தது. அதற்கென்ன பண்ணுகிறது? நல்ல பாட்டுக்காரர் யாரும் போட்டிக்கு நிற்கா மலே இருந்திருக்கிறார்கள். தங்களுக்குப் பரிசு வராதுபோனால் அவமானம் என்று பேசாமல் இருந்திருக்கிறார்கள். நல்ல பாட்டு வெளிவர வேண்டும் என்று, இவர்கள் போட்டிகள் வைத்தால் அதற்குப் பலன் இல்லாமற் போகிறது" என்றாள் அவள் பெண் கமலினி.

"நீ பாடியிருக்கலாமே; உனக்குப் பாரதியார் பாட்டுக்கள் வெகு நன்றாக வருமே!" என்றாள் சாவித்திரி.

"அம்மாவுக்கும் அதே பயந்தான்; போட்டியில் சேர்ந்து ப்ரைஸ் வராமல் போய்விடுமோ என்கிறது. அதனால் என்னைச் சேர விடவில்லை. எல்லாம் சுத்த மோசமாக இருந்ததைப் பார்த்த பிறகு நானும் சேர்ந்து பரிசை அடித்துக்கொண்டு போயிருக்கலாமே என்று தோன்றுகிறது அவளுக்கு" என்று தாயைப் பரிகசித்தாள் கமலினி.

பெண்ணின் வார்த்தையைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் சம்பந்தியம்மாள், "காலமே இப்பொழுது அப்படி ஆகிவிட்டது. எதிலும் அரை குறை அறிவோடு வெளிக் கிளம்பிவிடுகிறார்கள். முன்போல் உழைத்துக் கற்றுக்கொண்ட பிறகுதான் வெளியில் வரலாம் என்கிறது யாருக்கும் இல்லை. போட்டிகள் வைப்ப தன் அர்த்தமும் வீணாகப் போகிறது" என்றாள்.

"அவ்வளவுக்குப் பொறுமை வேண்டாமா? ஒரு வித்தை கொஞ்சம் வருவதற்குள், நாலு பேருக்குக் காண்பித்து, புகழ்

பெற்றுக்கொள்வதில் ஆசை யல்லவா மேலிட்டுவிடுகிறது'' என்ருள் சாவித்திரி.

'சரோஜா வரவில்லையே. ஏன்?' என்று கேட்க அவர்களைப் பார்த்தது முதல் தவித்துக்கொண் டிருக்கும் மீனுக்ஷி யம்மா ளுக்கு அதைக் கேட்க முடியாததால் இவர்களுடைய பேச்சு, கட்டோடு பிடிக்க வில்லை. இப்பொழுது சாவித்திரியின் வார்த் தையைத் தடுத்துக்கொண்டு பெண் வராத காரணத்தைச் சம்பந்தி யம்மாளிடம் கேட்டாள்.

''அகத்துக்காரர் ஆத்தில் இருக்கும்பொழுது, அவளுக்கு வர முடியுமோ? அதுதான் வரவில்லை'' என்று விளையாட்டாகச் சொல்லி, ''நான் வரட்டுமா, இன்ஜினீயர் வீட்டுக்குப் போய் வந்து மீட்டிங்கிற்குக் கிளம்ப வேணும்; நேரம் ஆகிவிடும்'' என்று எழுந்தாள்.

''கொஞ்சம் காபி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்; இருங்கள்; இன்று புதுப் பக்ஷணம் செய்து பார்த்தே, அதையும் சம்பந்தியம்மாவுக்கும், கமலினிக்கும் கொண்டுவந்து கொடு'' என்று சாவித்திரியிடம் உத்தரவிட்டாள் மீனுக்ஷியம் மாள். பக்ஷணம் அவள்தான் செய்த மாதிரி இருந்தது அவள் சொன்ன மாதிரியில்.

''எப்படிச் செய்தீர்கள்? ரொம்ப நன்ருக இருக்கிறதே!'' என்று புகழ்ந்தாள் சம்பந்தி யம்மாள்.

''ஏதோ ரேடியோவில் சொன்னதைக் கேட்டுச் செய்தது'' என்று, சாவித்திரி செய்தாள் என்பதைச் சொல்லாமலே பொதுவாகப் பேசினுள் மீனுக்ஷியம்மாள்.

''ரேடியோவில் சொல்கிறதொன்றும், சரியாக வராது என் றல்லவா நான் இத்தனை நாளும் நினைத்திருந்தேன். நான் அவை களைக் கேட்கிறதுகூட இல்லை'' என்ருள் சம்பந்தி யம்மாள்.

மீனுக்ஷி யம்மாளுக்குப் பெருமை தாங்கவில்லை. சாவித்திரி செய்தது என்பது அவளுக்கு உண்மையிலேயே மறந்து போயிற்று. தானே செய்த மாதிரி தோன்றிக்கொண் டிருந்தது. ''நான் எப்பொழுதும் அவைகளை அசட்டை செய்கிற வழக்கம் இல்லை. கேட்டுப் பார்த்துச் செய்தும் பார்க்கிறதுதான்'' என்று தாட்டியாகவே பெருமை அடித்துக்கொண்டாள்.

"உங்களுக்கு இவ்வளவு வயதாகிறது; நீங்கள் இவ்வளவு சுறு சுறுப்பாய் இருக்கிறீர்கள். சரோஜாவை மட்டும் ஏன் இப்படி ஒன்றுந் தெரியாமல் இருக்கும்படி வளர்த்திருக்கிறீர்கள்? எங்கள் கமலினி சும்மாவே இருக்கமாட்டாள். 'நான் நான்' என்று ஒவ்வொரு காரியத்திற்கும் வருவாள். நாளைக்கு நீலகண்டனுக்கு வேலையாகி எந்த ஊருக்காவது போனால், சரோஜா இப்படிச் சமையல் உள்ளே தெரியாமல் இருந்தால் நல்லதோ?" என்றாள் சம்பந்தி யம்மாள்.

இதற்கு என்ன பதில் சொல்கிறது என்றே மீனாக்ஷி யம்மாளுக்குத் தெரியவில்லை. சரோஜாவை ஒரேயடியில் மட்டந் தட்டிவிட்டாளே என்கிற ஆத்திரந்தான் பொத்துக்கொண்டு வந்தது. அதற்காகக் கோபித்துக்கொண்டுவிட முடியுமா? "உடம்பைப் படுத்துகிறது; அதனால்தான் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்று, தானே முண முணத்துக்கொண்டாள்.

"சிறுசுகளுக்கு உடம்பு திடம் இல்லை என்று இருக்கலாமோ? அந்த எண்ணமே அவாளுக்கு வரக் கூடாது. எல்லாம் கல கலப்பும், ஆட்டமும் பாட்டமுமாக இருந்தால் ஒன்றும் வராது" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டு, "சரி, நாழிகை ஆகிவிட்டது; நான் வருகிறேன்; சாவித்திரியும் நீங்களும் கட்டாயம் கூட்டத்திற்கு வாருங்கள்" என்று சொல்லிக் கிளம்பினாள்.

"பக்ஷணம் நீ செய்ததுதானே மன்னி; ரொம்ப நன்றாயிருக்கு. நானும் டொமஸ்டிக் கிளாஸில், உனக்கு மேலாகச் செய்யக் கற்றுக்கொண்டு விடுகிறேன் பார்!" என்று சாவித்திரியிடம் கமலினி தனிமையில் கூறிவிட்டு, "சாயங்காலம் கூட்டத்திற்கு வராமல் இருந்துவிடாதே; அம்மாவுக்கு வருத்தமாகப் போய்விடும். தான் தலைமை வகித்துப் பேசப் போகும் கூட்டத்துக்கு ஆள் இல்லாமல் போய்விடப்போகிறதே என்கிறதற்காகவே இன்று அவள் பிரத்தியேகமாக விஸிட் செய்து, ஞாபகப்படுத்த வந்திருக்கிறாள்" என்று தாயைப்பற்றியும் பரிகாசமாகச் சொல்லிவிட்டு எழுந்தாள்.

"வராமல் இருப்பேனா? கட்டாயம் வருகிறேன். எனது

அம்மாஞ்சி பிள்ளையும் அவன் சிநேகிதனும் கிறிஸ்தவக் கலா சாலையில் இருந்து இப்பொழுதுதான் வந்தார்கள். அவர்களைக் கூட, அவர் வந்து பார்த்துக்கொள்ளட்டும் என்று கிளம்ப வேண்டியதுதான்'' என்றாள் சாவித்திரி.

“மன்னி, எல்லாம் இருக்கிறவர்கள் பார்த்துக்கொள் வார்கள்; நீ மட்டும் வராமல் இருந்துவிடாதே! உன்னை நம்பிக் கொண்டுதான் நான் போகிறேன். யாராவது இரண்டு பெரிய வர்கள் பேசத் தெரியாமல் எழுந்து நின்று உளறிக் கொட்டி, திண்டாடுவதை மௌனமாகக் கேட்டுக்கொண் டிருக்க வேணும். நீ வந்தா லாவது இருவருமாக ஏதாவது பேசிக் கொண் டிருக்கலாம்'' என்றாள் கமலினி.

அவள் அவ்விதம் சொன்னதைக் கேட்டுச் சாவித்திரிக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'வாஸ்தவம், பாதிப் பெண்கள் இரண்டு வார்த்தைகள் சேர்ந்தாற்போல் சொல்லத் தெரி யாமல் திண்டாடுவதைப் பார்ப்பது சிரமந்தான்; பரிதாப மாகத்தான் இருக்கிறது' என்று நினைத்துக்கொண்டாள்.

## 16

அவர்கள் தாயாரும் பெண்ணும் கார் ஏறிச் சென்ற பிறகு, மீனாக்ஷியம்மாள் பெரிதாக ஆரம்பித்தாள். “போகிற போக்கில் என்ன பேச்சுப் பேசிவிட்டுப் போகிறாள்! தேவ லையே! சரோஜாவுக்கு ஒன்றும் தெரியவில்லை என்றுன்னு இடித்துக் காண்பித்துவிட்டுப் போகிறாள்! சிறிசுகள் என்ன காரிய மெல்லாம் செய்துவிடுவார்கள்? சமாராதனைக்குச் சமைத்துவிடுவார்களா? கமலினி பிரமாதமாகப் புரட்டுகிறு ளாமே. அழகில்லாத பெண்ணுக்கு வேறு எந்த உயர்த்தி யாவது சொல்லிக்கொள்ளத்தானே வேணும்!'' என்று அடுக்கினாள்.

“பெண்களுக்குக் காரியம் தெரிந்திருக்க வேண்டியதும் அவசியந்தானே'' என்று ஏதோ சுந்தரேசையர் ஆரம்பிக்கு முன்,

“நீங்கள் தேவலை; சரோஜாவுக்குக் காரியம் தெரியவில்லை

என்று உங்களுக்கும் குறைவாகத் தோன்றுகிறதா? அதனால் தான் அவள் நம் பெண்ணைத் தூஷிக்கும்பொழுது பேசாமல் கேட்டுக்கொண்டு சும்மா இருந்தீர்களா? நீங்களே அதுமாதிரி நினைக்கிறீர்கள் என்றால், பிறத்தியாரைப்பற்றிக் கேட்பானேன். அவர்கள் வீட்டுப் பரிசாரகனை அனுப்பிவிட்டு இவள் சமைத்துப் போட வேணும் என்கிறீர்க ளாக்கும். அவ்வளவுக்கு அந்தப் பெண்ணுக்குத் திராணி இருந்தாலும், செய்யட்டும் என்று இருக்கலாம்'' என்று கணவர்பேரில் கோபத்தைத் திருப்பிக்கொண்டாள் மீனாக்ஷி யம்மாள்.

''சரோஜா வேலைக்காரிபோல வேலை செய்ய வேணுமென்று சொல்லுவேனா? பெண்களுக்கு உள் விஷயமும் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டியதுதான் என்று சொல்ல வந்தால் நீ பிரமாதப்படுத்துகிறாயே'' என்றார் சுந்தரேசையர் சமாதானமாக.

''பெண்ணாகப் பிறந்தால் உள்ளுக் காரியம் தெரியாமல் தான் போய்விடப் போகிறது! இது ஒரு வார்த்தையா? அவள் சொல்லுகிறாள் என்று நீங்களும் தெரிந்த மாதிரி ஆரம்பிக்கிறீர்களே. அவள் பாட்டையும் படிப்பையும் இவர்கள் கொண்டாடட்டுமே. அதைக் காணோம். கமலினியின் சங்கீதம் இவர்களுக்கு மகா உயர்வாக இருக்கிறது. ஆகாயத்தில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். ஊரில் உள்ள பாட்டுக்காரனை யெல்லாம் வரவழைத்து, பாடிக் காண்பித்து, ஸ்தோத்திரம் செய்யச் சொல்லிக் கேட்டு மகிழ்கிறார்கள். சரோஜாவின் பாட்டை மட்டம் தட்டி, அவளுக்கே பாட மனதில்லாமல் செய்துவிட்டார்களே! பெண்ணுக்கும் நாட்டுப்பெண்ணுக்கும் இத்தனை வித்தியாசமா! வெளியில் சொல்லிக்கொண்டால் நமக்குத்தான் குறைவு என்றுதான் நான் பேசாமல் பொறுத்துக்கொண் டிருக்கிறேன். 'சரோஜா, அகமுடையான் ஆத்தில் இருக்கும்பொழுது வருவாளா?' என்று அசலாரைக் கேலி செய்வதுபோல் செய்கிறாளே! சரோஜா தானாக வேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டு அகமுடையானுடன் உட்கார்ந்திருக்கிறாளா? இவள் பிள்ளைதானே பெண்டாட்டியைப் பக்கத்தைவிட்டு நகரக் கூடாது என்கிறான். பிள்ளையும் நாட்டுப்

பெண்ணும் ஆசையாக இருப்பது இவளுக்கு மனதாக வில்லை. நாளைக்குக் கமலினி இவ்விதம் இருந்தால் இப்படிப் பரிகசிப் பாளா!'' என்று பெரிதாகச் சம்பந்தி யம்மாளின்பேரில் குற்றங்களை அடுக்கினுள் மீனுக்ஷி யம்மாள்.

தன் பெண்ணை ஒரு வார்த்தை குறைவாகச் சொல்லி விட்டாலும் கேட்க அவளுக்குப் பொறுக்காது. அதோடு இன் னொரு பெண்ணினுடைய புகழ்ச்சியும் சேருகிறது என்ருல் அவளால் தாங்க முடியுமா?

அதை அறிந்திருந்த சுந்தரேசையர், பேச்சை மாற்றும் எண்ணத்தில், "ஏதோ புதுப் பக்ஷணம் என்ருயே, அதென்ன?'' என்று கேட்டு வைத்தார். மனைவி அதைக் குறித்துப் பெருமை யாக இருந்தாளே, அதைத் தானும் கொண்டாடினுல் அந்தச் சந்தோஷத்தில் சம்பந்தி யம்மாளின் பேச்சை மறந்து, தன் பேரில் ஏற்பட்ட கோபமும் தணியும் என்பது அவர் எண்ணம். ஆனுல், அந்தக் கேள்வி எரிகிற கொள்ளியில் எண்ணெயை ஊற்றினுல்போல்தான் உதவிற்று. அதைக் காண்பிக்கக் கொண்டுதானே வார்த்தை இவ்வளவு தூரத்திற்கு வளர்ந் தது. அதைச் செய்ததற்காகச் சாவித்திரியிடமேகூட அவ ளுக்குக் கோபம் ஏற்பட்டாலும் அதிசயம் இல்லை.

''ஆமாம், யாரோ போது போகாமே இங்கே பண்ணினு; எல்லாம் சாவித்திரி காரியம்'' என்ருள் வெறுப்புடன்.

அவர் அவ்வளவு நேரம் அதை அவ்விதம் புரிந்துகொள் ளவே இல்லை. சாவித்திரி செய்தது என்று அவள் சொல்லி யிருந்தால், அவர் அவ்விதம் அதுபற்றிப் பேச்சை ஆரம்பித் திருக்கமாட்டார். 'சம்பந்தி யம்மாளும் ஒரு வேளை சாவித்திரி யைப் பாராட்டியதோடு நிறுத்திக்கொண் டிருக்கலாம். சரோ ஜாவைக் குறித்து ஒன்றும் சொல்லாது போயிருக்கலாம்' என்று நினைத்துக்கொண்டார் சுந்தரேசையர்.

அதை அவ்விதம் மனைவியிடம் சொன்னுல் அவள் ஒப்புக் கொள்வாளா? அவள், ஏதோ நாட்டுப்பெண்ணைப் புகழ்ந்து கூற நினைத்த, தன்னுடைய நல்ல எண்ணத்திற்கு இவ்விதப் பிரதிபலனு என்றல்லவா பச்சாத்தாபப் பட்டுக்கொண் டிருக் கிருள். ஏதேதோ அதுமாதிரிதான் அங்கலாய்த்துக்கொண்

டிருந்தாள் மீனுக்ஷியம்மாள். சற்று முன் காலைச் சூரியனைக் கண்ட தாமரை என மலர்ந்து சோபித்த சாவித்திரியின் முகம், இதழ் குவிந்து வாடிப்போன மலரெனப் பிரகாசம் இழந்து காணப்பட்டது. ஜம்புநாதனும் பசுபதியும் அவர்கள் இருக்கும் இடத்துக்குத் திரும்பி வந்தபொழுது, அவர்கள் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

"வந்தவர்கள் போய்விட்டார்களா?" என்று பசுபதி பேச்சைத் துவக்கினுன்.

"உன் மாமியாருக்குச் சம்பந்தியம்மாள் பேசினதில் கோபமா? ஏதோ இறைகிருளே?" என்று கேட்டான் ஜம்புநாதன். அதைக் கேட்கத் தனக்குப் பாத்தியதை உண்டு என்று அவன் நினைத்தான்.

"சரோஜாவைக் குறைவாகச் சொல்லிவிட்ட மாதிரி அவருக்குப் பட்டுவிட்டது; வேறென்றும் இல்லை" என்று சாவித்திரி சாதாரணமாகச் சொன்னுலும், அவள் முகம் அவள் அவ்விதம் நினைக்கவில்லை என்பதைக் காண்பித்தது. அவள் பக்ஷணம் செய்து, அது சரியானபடி வந்திருந்தபொழுது அந்த முகத்தில் பிரதிபலித்த உத்ஸாகத்திற்கும், இப்பொழுது அதில் இருக்கும் உறக்கத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! அவளைச் சமாதானம் செய்யப் பெரிதும் விரும்பினுன் ஜம்புநாதன். என்றும் வாடாத மலராக அவளைப் பார்ப்பதில்தானே அவனுக்கு விருப்பம் இருந்தது.

"அழகில்லாத தங்கள் மகளைச் சம்பந்தியம்மாள் பாராட்டிப் பெருமை அடித்துக்கொண்டதுவேறு, பிடிக்காமல் இருந்திருக்கிறது என்று நினைக்கிறேன்" என்ருன் பசுபதி பேச்சைத் தொடர்ந்து.

"நாம் சொன்னதற்காக அப்படி ஆகிவிடுமா? அதற்கென்ன? சரோஜா அளவு சிகப்பில்லை கமலினி; மற்றப்படி நல்ல களை பொருந்திய முகத்தோடு அழகாகவே இருக்கிருள். கர்வம் என்பது சிறிதும் இல்லாமல், சுறு சுறுப்பும், புத்தி சாதுரியமும் பழகுபவர்களைக் கவரக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது அவளுக்கு. ஆனுல் இப்படி நடுக் கூடத்தில் நின்று நான் அவைகளைப் பேசக் கூடாது. என் மாமியாருக்குத்

தப்பாகப் போய்விடும். மொத்தத்தில் நமது உயர்வுகளை எடுத்துக் சொல்லச் சொந்த மனிதர்கள் வேண்டும். அப்பொழுது தான் அவைகள் எடுபடும்'' என்ருள் சாவித்திரி. அத்துடன் பேச்சையும் நிறுத்திக்கொண்டாள் அவள்.

"அதென்னவோ வாஸ்தவம்; பக்ஷணம் நீ செய்தது என்று சொல்லாமலே சாமர்த்தியமாகப் பேசிஞளே உன் மாமியார்! அதன் புகழ் உனக்கு வந்துவிடப் போகிறது என்கிற பயமா?'' என்று ஜம்புநாதன் ஆரம்பித்தான். அவனை மேலே பேச விடாமல் வாய்மேல் விரல் வைத்து ஜாடை காண்பித்து எச்சரித்தாள் சாவித்திரி.

பிறகு கணேசன் வந்து சிற்றுண்டி சாப்பிடும்பொழுது புதுத் தின்பண்டத்தைப்பற்றி யாருமே பேச்செடுக்க வில்லை. சாவித்திரி தாஞகச் சொல்லிக்கொள்வதற்கும், அவளுக்கு அது குறித்து ஏற்பட்டிருந்த உத்ஸாகந்தான் அவ்விதம் தடைப் பட்டு விட்டதே. அவ்விதம் கணேசனுக்குத் தெரியாமலே அது போய்விடுவதில் ஜம்புநாதனுக்குத்தான் மனம் இல்லை. அவஞவது கொண்டாடி ஒரு வார்த்தை பேச மாட்டாஞ? அப்பொழுது சாவித்திரிக்குத் திருப்தி ஏற்படாதா என்கிறது அவனுக்கு. அதஞல் ஜம்புநாதன், "அத்தங்காள் எக்ஸ்பெரிமென்டாகச் செய்திருப்பதைப் பார்த்தீர்களா?'' என்று ஏதோ ஆரம்பித்தான். ஆஞல் அதையும் கணேசனுக்கு இருந்த வேலை அலுப்பாலோ என்னவோ அவர் கவனித்துக் கேட்டுக் கொள்ளவில்லை. ஜம்புநாதன் சாவித்திரியைக் கொண்டாடிச் சொல்ல நினைத்ததும் சொல்லப்படாமலேயே நின்று போயிற்று.

இவ்வளவுக்குப் பிறகு மீஞக்ஷியம்மாள் கூட்டத்திற்கே போகமாட்டாளோ என்று நினைத்தால் அதுதான் இல்லை. அந்த அம்மாள் சாவித்திரிக்கு முன்ஞலேயே தன்னை அலங்கரித்துக்கொண்டு தயாராக இருந்தாள். எந்த மனஸ்தாபத்திற்காகவும் வெளியே செல்வதை அவள் நிறுத்துவாளா! பலர் கூடும் இடங்களில்தானே, யார் யார் என்ன அணிந்து எவ்விதம் அலங்கரித்துக்கொண் டிருக்கிருர்கள் என்பதைப் பார்க்க முடியும்; பிறகு அது மாதிரி அலங்காரம் பெண்ணுக்குச் செய்ய முடியும்?

அவர்கள் சென்ற பிறகு, கணேசன் ட்ராக்டரைப்பற்றித் தாம் விசாரித்து வந்த விவரங்களை ஜம்புநாதனிடம் சொன்னார். "வாடகைக்குக் கிடையாது; பழைய விலைக்கு வேண்டுமானால் ஒரு வேளை வாங்கலாம். அதிலும் தொல்லைகள் நிறைய இருக்குமென்று தெரிகிறது. பழைய விலைக்கு வாங்குகிற மிஷின்கள் சதா தொந்தரவு கொடுத்த வண்ணம் இருக்கின்றனவென்று கேள்விப்படுகிறேன்" என்பதாகச் சொன்னார்.

"அப்படியானால் அதை வாங்குவதில் பிரயோஜனம் என்ன? அதைப் பழுது பார்த்துக்கொண்டு காலம் கடத்தும்படி அல்லவா ஆகும்? நம்முடைய உத்தேசமே அதனால் பாதிக்கப்பட்டுவிடும். வேலைகள் அதிகம் நடக்க வேண்டுமென்று நினைக்கப்போய், வேலையே தடைப்பட்டுப் போகும். நான் அப்பாவுக்கு எழுதிவிடுகிறேன்" என்றான் ஜம்புநாதன்.

உணவுப் பெருக்கத்துக்கான ஒன்றைச் செய்ய முடியாமல் இவ்விதம் தடை ஏற்படுகிறதே என்றுதான் இருந்தது அவனுக்கு. தியாகராஜையரைப் பார்த்துக்கொண்டு அப்பாவும் ட்ராக்டர் கொண்டு வேலை தொடங்கினால், அத்திம்பேர் வருத்தப்பட்டுவிடுவார் என்கிற கவலையும் அவனுக்கு ஒரு புறம் இருக்கத்தான் இருந்தது. அத்திம்பேர் அதற்கு இவ்வளவு தீவிரமான விரோதியாக இருக்கிறாரே, அவரை மீறிக்கொண்டு செய்தால் அவர் என்ன வருத்தத்திற்கு ஆளாவாரோ என்கிற பயம்; அதற்காகச் செய்து பார்க்காமல் இருப்பதற்கும் மனதில்லை. இப்படி இரண்டு விதமும் நினைத்தது அவன் மனம்.

"இங்கே நாங்கள் செய்திருக்கும் உணவுப் பெருக்கத்துக்கான வேலையைப் பார்க்க வேண்டாமா? வாருங்கள்; சுற்றிப் பார்த்து வருவோம்" என்று அழைத்தார் கணேசன்.

"கேட்டுக்குள் நுழையும்பொழுதே உங்கள் கைத் திறனை நாங்கள் பார்த்துக்கொண்டுதானே வந்தோம். ஒரே பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் மிருதுவாக இருந்த புல் தரை மறைந்து, அதற்குப் பதிலாகக் காய்ந்த குச்சிகள் பாதத்தைக் குத்திக் காண்பிக்கின்றனவே!" என்றான் ஜம்புநாதன் பரிகாசமாக.

"சாவித்திரியைப்போல் நீயும் சம்பத்தே போய்விட்டது

என்று அங்கலாய்ப்பாய்போல் இருக்கிறதே. எல்லாம் வெட்டிக் கொத்திப் புதுப் பயிர் கிளம்பின பிறகு பார்; புதுக் குழந்தை பிறந்த சந்தோஷம் உண்டாகும்" என்றார் கணேசன். தான் சொல்வது சரியல்லவா? என்கிற பாவனையில் அவர் பசுபதியை நோக்கினார்.

"நான் திருச்சி டவுனில் வசிப்பவன் ஸார்; இந்தச் செடி கொடிகளின் அழகு எனக்கு ஒன்றும் தெரியாது. ஜம்புநாதனைச் சொல்லுங்கள்; அவன்தான் அவைகளைக் கண்டு சந்தோஷம் பொங்கப் புலவனாக வருணிப்பான்" என்றான் பசுபதி.

அவர்கள், தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்தார்கள். அதுவே அவர்களுக்கு ஒரு பெரிய நடையாக இருந்தது. அவ்வளவு விஸ்தாரமான தோட்டம் அது. அதில் உள்ள உயர்ந்த மரங்களுக்கும் செடி வகைகளுக்கும் கணக்கு இருக்குமென்றே தோன்றவில்லை. கிளி கொஞ்சுகிறது என்பார்களே, வாஸ்தவத்தில் அவ்விதம் செழித்து, வளர்ந்து, அழகு கொஞ்சத்தான் கொஞ்சியது. அவர்கள் வீட்டுக்கு வேண்டிய எந்த வகைக் காய்கறிகளும் அதிலிருந்து அவர்களுக்கு கிடைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. நடந்து செல்லச் சுத்தமான பாதைகளும், மரத்திற்கு மரம் நீர் பாய்வதற்கு ஒழுங்கான பாத்திகளும் அமைந்து வெகு நேர்த்தியாக இருந்தது. தோட்டக் கோடியில் இருந்த துரவில் இருந்து மின்சார என்ஜினால் இறைக்கப்பட்டு யானைத் துதிக்கை போன்ற குழாய் வழியாக, நீர், வாய்க்கால்களை நிரப்பிச் சென்றுகொண்டிருந்தது. கடுங்கோடையிலும் வெப்பம் தெரியாமல் குளுமையான நிழல் கொடுத்துக்கொண்டிருந்தது.

"நவ நிதியும் விளைந்து வரக் கூடிய இடமாக அல்லவா இருக்கிறது! இவ்வளவு நல்ல நிலைமையில் தோட்டத்தை வைத்திருக்கிறீர்களே! இதற்கு நிறையச் செலவாகுமே!" என்று கேட்டான் பசுபதி.

"ரொம்பச் செலவுதான்; இப்பொழுது கொஞ்ச நாளாக இந்தச் சென்னையில் யாரும் இத்தனை பெரிய தோட்டம் வைத்திருக்கிறவர்கள் கிடையாது. பெரிய தோட்டங்களை யெல்லாம் வீடுகள் ஆக்கி வேண்டிய பணம் சம்பாதித்துவிட்டார்கள்.

சாவித்திரிக்குத்தான் அது பிடிக்கவில்லை. அவள், தன் அப்பா காலத்தில் இருந்த விதமே இருக்க வேண்டும் என்கிருள்; மாறுதல் கூடாது என்கிருள்'' என்ருர் கணேசன்.

''தோட்டத்தில் பயிராகும் காய் கறி வகைகளை நீங்கள் விற்கக் கூடாதா? வீட்டுக்கே அவ்வளவும் செலவாகுமா?'' என்று கேட்டான் பசுபதி; அதைப் பராமரிக்கும் செலவுக்குக் காய் கறி விற்று வருகிற பணம் ஈடு செய்து விடாதா? என்பது அவனுக்கு.

''அதிகம் இருப்பதை விற்கத்தான் விற்கிருேம். இருந்தாலும் ஆகிற செலவுக்கு அது எந்த மூலை?'' என்ருர் கணேசன்.

''இந்த உணவுப் பஞ்ச நாளில் அது ஒரு நல்ல காரியம் இல்லையா? அத்தங்காள் மாறுதல் கூடாது என்று நினைக்கிறதிலும் நல்லது இருக்கிற தல்லவா?'' என்ருன் ஜம்புநாதன்.

''அதற்கென்ன, இந்தச் சென்னையில் இப்பொழுது, தங்க வீடு இல்லாமல் தவிக்கும் ஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதும் உபகாரந்தான். சாப்பாட்டுப் பொருள்களுக்கு மேல். வீட்டுப் பஞ்சமும் அதிகமாகத்தான் இருக்கிறது. வீட்டினுல் நமக்கும் பணம், அவர்களுக்கும் குடியிருக்க இட வசதி, பரஸ்பர உதவி'' என்று பேசினுர் கணேசன்.

'இரு வகுப்பாருக்கும் லாபகரமான நன்மைகளைச் செய்வதுதான் உயர்ந்த முறை' என்று சாதித்து, வெள்ளைக்காரர்களைப் புகழ்ந்து பேசின ஜம்புநாதன், இப்பொழுது வேறு விதம் நினைக்கிருனே, ஏன்? சாவித்திரியின் விருப்பத்திற்கு விரோதமான விஷயமென்ருல் அது எதுவாயினும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக அவனுக்குத் தோன்றவில்லை. 'இவ்வளவு மனேகரமான சோலையை அநுமாரைப்போல அழித்து நாசஞ் செய்வதா?' என்றுதான் அவன் நினைத்தான்.

இப்பொழுது அவர்கள் அந்தச் சிறு பூந்தோட்டத்தையும் பார்த்துக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்துகொண் டிருந்தார்கள். ''நல்ல காலம், அந்தப் பசும் புல் தரையின் கதி இதற்கும் நேரவில்லை; அப்படி நேர்ந்திருந்தால் அதைப் பார்க்கச் சகிக்குமா? வெறும் புல்தான்; ஆனுலும் அது கோரையாகப் போய்க் கிடப்பதைக் காண மனம் சகிக்கவில்லை. கண்

லைக் கவரும் பலவித மலர்கள் பூக்கும் இச் செடிகள், அந்த மலர்களோடு வாடி நிற்கும் காட்சியை யார்தான் காணச் சகித்திருப்பார்கள். இளங் குழந்தைகள் பலருடைய சாவை மனத்தோடு பொறுப்பதற்குச் சமானம் அல்லவா அது? அந்த மட்டும் அத்தங்காளுக்காக இவைகளில் கை வைக்க வேண்டாமென்று முடிவு கட்டினீர்களே, அது எவ்வளவோ நல்ல காரியம். இதை அழித்திருந்தால் அத்தங்காள் பார்த்துச் சகித்திருப்பாளா? கஷ்டப்பட்டுப் போயிருக்க மாட்டாளா?'' என்று சாவித்திரிக்குப் பரிந்து, தான் நினைத்ததைக் கணே சனிடம் கூருமல் ஜம்புநாதனுல் இருக்க முடியவில்லே.

## 17

சுந்தரேசையர் சொன்னது சரியாக இருந்தது. பகலில் காய்ந்த நல்ல வெயிலுக்குப் பிறகு, இரவில் நல்ல மழை பெய்தது. 'வாழ்வில் கஷ்டத்திற்குப் பிறகு சுகம் உண்டு' என்னும் கொள்கையை அது நிரூபித்துக் காண்பிப்பதுபோல் இருந்தது. மழையினுல் பூமி குளிர்ந்து,அந்தக் காலே வேளேயில் மிருதுவான மந்த மாருதம் மலர்களின் சுகந்தத்துடன் கலந்து வீசிக்கொண் டிருந்தது. ஜம்புநாதனும் பசுபதியும் இரவு மழை பெய்தது கூடத் தெரியாமல் நன்ருகத் தூங்கி விழித்தார்கள். தங்கள் அறையில் இருந்தவாறே சாளரத்தின் வழியாகத் தோட்டத்தை நோக்கியபொழுது, மரங்கள் எல்லாம், மழை நீரினுல் இலே களில் படிந்திருந்த தூசிகள் கழுவப்பட்டு மேலும் பசுமையுடன் விளங்குவது தெரிந்தது. வேலிகளாக நெடுகிலும் வைத்து, ஓரே அளவில் வெட்டப்பட்டு அடர்ந்திருந்த தங்க அரளிச் செடி களின் நீண்ட கூரான சிறு இலேகளின் நடு நரம்பின் அடிப் புறத்தில், மழைத் துளிகள் மணிகள் கோத்தாற்போல் வரிசை யாகத் தொங்கிக்கொண் டிருந்தன. சூரியனுடைய இளங் கிரணங்கள் அவைகளே ஸ்படிக மணிகளாகவேறு மாற்றி மின்னும்படி செய்துகொண் டிருந்தன.

''இந்த அதிசயத்தைப் பாருடா! நேற்று வெறும் இலே களாக இருந்த இவைகள், இன்று வரிசையாக முத்துக்கள்

கோத்தாற்போல் காட்சி அளிக்கின்றன. இரவு பெய்த மழை, இந்தச் செடிக்குச் செய்திருக்கும் அலங்காரத்தைப் பார்" என்று பசுபதியைக் கூவி அழைத்தான் ஜம்புநாதன், ஜன்னலண்டை நின்றவாறு. பார்த்தபொழுது, அதன் அழகு பசுபதிக்கும் புலப்படாமல் போகவில்லை.

"ஆமாம்டா, இலைகளின் அளவுக்குச் சரியாக, நுனிக்குச் செல்லும்பொழுது வர வரச் சிறுத்துவேறு தெரிகிறது. இலைகளின் பசுமைக்கும், அந்த மணிகளின் கண்ணாடிபோன்ற பளபளப்புக்கும் எவ்வளவு அழகாக இருக்கிறது! ஒரு இலை விடாமல் மணிகள் தொங்கிக்கொண்டு, இந்த அரளிச் செடி இன்று புது வகைச் செடியாக மாறிவிட்டதே!" என்று அதிசயித்தான்.

"நான் ஏதாவது பேசினால், "என்னடா புலவன்போல் வருணிப்பு என்பாயே!' இப்பொழுது நீ பெரிய வர்ணனைக்குக் கிளம்பிவிட்டாயே. இயற்கையில் உண்மை அழகு எவரையும் கவியாக ஆக்குகிறது பார்த்தாயா? நல்ல காலம்! இவர்கள் இருக்கிற இடத்தையெல்லாம் கட்டிடமாக அடிக்காமல் இந்த மட்டும் விட்டு வைத்திருக்கிறார்களே! நேற்றுக் கணேசன் சொன்னபொழுது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. போகிறது; அத்தங்காளின் விருப்பத்துக்கு இவர்கள் இந்த மட்டுமாவது மதிப்பு வைத்துத் தோட்டத்தை அழிக்காமல் விட்டிருக்கிறார்களே!" என்றான் ஜம்புநாதன் ஆசுவாசத்துடன்.

"நான் சொல்வதற்காக நீ ஒன்றும் நினைத்துக்கொள்ளாதே. நிஜமாகவே உன் அத்தங்காள் சந்தோஷமாக இருக்கிறாளா என்று எனக்குச் சங்கைதான் ஏற்படுகிறது" என்றான் பசுபதி யோசனையுடன்.

"ஏன், எதிலிருந்து சந்தேகிக்கிறாய்? அவளுக்கு என்ன குறைவு இருக்கிறது?" என்று பதற்றத்துடன் கேட்டான், ஜம்புநாதன். சாவித்திரியின் சந்தோஷ வாழ்க்கையைச் சந்தேகிக்க இடம் இருப்பதாக நினைக்கவே அவன் மனம் பதறிப் போயிற்று.

"அவள் புக்ககத்து மனுஷ்யர்கள் இருக்கும் மாதிரியில் அவ்விதம் தோன்றுகிறது; அவ்வளவுதான். சுத்த சுய நலப் பேர்வழிகளாக இருப்பார்கள்போல் இருக்கிறது. அவள் மாமியாரைத்தான் பாரேன்; நேற்று ஒரு நொடியில் சாவித்திரி

யின் உத்ஸாகம் முழுவதையும் போக்கடித்து விட்டாளே. அந்தப் பக்ஷணத்தைப்பற்றி ஒரு நல்ல வார்த்தை சொன்னாளா? அதற்குப் பதில், தான் செய்ததாகப் பெருமை பெறப் பார்த்தாள். அது இல்லையெனவும் கோபமே வந்துவிட்டது அவளுக்கு. கணேசனிடங்கூட அப்புறம் யாரும் அதுபற்றிப் பேசவில்லை. நீ சொல்ல வந்ததை அவரும் கேட்டுக்கொள்ளவில்லை. அவரும் சாவித்திரியின் மனத்தை அறிந்து சந்தோஷப் படுத்தும் சுபாவம் உள்ளவராக இருப்பாரா என்பது சந்தேகந்தான். அவர்போக்கில் இருப்பார் என்று தோன்றுகிறது" என்றான் பசுபதி.

'பசுபதி சொல்வது சரியாக இருக்கலாம்' என்று நினைத்தான் ஜம்புநாதன். 'இவர்கள் அவ்வளவாக உயர்ந்த மனிதர்களாகத் தெரியவில்லை. மீனாக்ஷியம்மாள் மிகுந்த மட்ட குணம் உள்ளவளாகத்தான் தோன்றுகிறாள். அவளுக்கு உலகமே தன்னுடனும் தன் பெண்களுடனும் சரி என்று தோன்றுகிறது. நகையிலும் புடைவையிலுந்தான் அவள் மனம் செல்லும்போல் இருக்கிறது. வயதானதன் விவேகம் அவளிடம் சிறிதும் காணப்படவில்லை. அத்தங்காளை அவள் ஒரு பொருட்டாகவே வைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஏதாவது காரியம் ஆக வேண்டும்பொழுதுதான் நாட்டுப்பெண்ணின் நினைவே அவளுக்கு வருகிறது. மற்றச் சமயங்களில் அத்தங்காளை அவள் மறந்தே போகிறாள். அத்தங்காள் தெய்வப் பெண்ணாகக் கொண்டாடப்பட வேண்டியவள்! இந்த வீட்டில் யாராலும் மதிக்கப்படாமல் இருக்கிறாளே, இதென்ன அநியாயம்! இவர்களுக்கு அவள் லக்ஷ்மி, சரஸ்வதி இருவரும் ஓர் உருக்கொண்டு வந்திருப்பதாக அல்லவா தோன்ற வேண்டும். அவள் அழகும் பணமும் சாமானியமா? இவர்கள் இந்திர போகமாக அநுபவித்து வரும் மாளிகையும் தோட்டமும் அவளுடையதல்லவா!' இவ்விதம் அவன் மனத்தில் எண்ணங்கள் புரண்டன. சாவித்திரிக்காகப் பரிந்து கொண்டு, கோபமும் வருத்தமும் கலந்து எழுந்தன.

வழக்கம்போல் சாவித்திரி பூஞ்சோலையில் மலர் ஜாடிகளில் வைக்கப் புஷ்பங்கள் சேகரித்துக்கொண்டிருந்தவள்

சாளரத்தின் அருகில் இருக்கும் இவர்களை நிமிர்ந்து பார்த்தாள். "எழுந்துவிட்டீர்களா? கீழே வாருங்களேன்" என்று அழைத்தாள்.

'அந்த மலர்களின் மத்தியில்தான் அவள் வசிக்கத் தகுந்தவள். மலர்களிடம் எள்ளளவும் முரட்டுத்தனம் காண்பிக்கக் கூடாது. அவைகளை லேசாக மோந்துதான் பார்க்கலாம்; கசக்கிவிடக் கூடாது. அவளிடமும் மற்றவர்கள் அன்பாக மட்டுந்தான் நடந்துகொள்ளலாம்; அவள் மனம் நோக அடிக்கக் கூடாது' என்கிறது ஐம்புநாதனுக்கு. 'நமது பெண் தெய்வங்களை, மலர்மேல் இருக்கச் செய்தவர்களின் நோக்கங்களும் அதுவாகத்தான் இருக்கக் கூடும் அல்லவா?' என்றும் நினைத்துக்கொண்டான்.

அவர்கள் காபி குடிக்கும்பொழுது எல்லாருமாகச் சிறிது நேரம் பேசினதுதான்; பிறகு கணேசன் மறு நாள் கச்சேரியில் நிறையக் காரியம் இருப்பதாகச் சொல்லி, ஆபீஸ் அறைக்குச் சென்றுவிட்டார். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் சரோஜாவும் அவள் கணவனும் சாப்பாட்டிற்கே அவ்விடம் வருவார்கள். மாப்பிள்ளைக்காக விசேஷமாக ஏதாவது தயாரிக்கவென்று சாவித்திரியும் காரியமாகச் சமையல் அறைக்குச் சென்றுவிட்டாள். மீனாக்ஷியம்மாள் பெண்ணும் மாப்பிள்ளையும் வருவதற்குள் ஸ்நானம் செய்து தயார் ஆக வேண்டி, சுறுசுறுப்பாக ஸ்நான அறைக்கும் கூடத்திற்குமாக, என்ன புடைவை உடுத்துக்கொள்ளலாம் என்கிற யோசனை தெளிவு படாமல் நடை போட்டுக்கொண் டிருந்தாள். சுந்தரேசையர் வழக்கம்போல் வாசல் வராந்தாவில் விசுப்பலகையில் உட்கார்ந்து, ஆட்கள் முன் புறத்தில் வேலை செய்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார். இரவு பெய்த மழையில் தரை நனைந்து, கொத்துவதற்கு எளிதாக இருந்தது. அந்தக் காய்ந்த புற்களை அகற்றி ஆட்கள் வேலை செய்துகொண் டிருந்தார்கள். அவ்விதம் புதிதாகக் கிளறி விடப்பட்ட அந்த மண் தரையிலும் ஒரு வகை அழகு இருப்பதுபோலவே காணப்பட்டது. அந்த மண்ணின் மணமும் ஒருவித மலரின் சுகந்தம்போலவே இனிய வாசனையைக் கொடுத்துக்கொண் டிருந்தது. "சாப்பிடுகிற

வரைக்கும் சும்மா இருப்பானேன். கிட்டத்தில் ஒரு சுற்றுச் சுற்றி வரலாம் வா; உனக்கும் கொஞ்சங் கொஞ்சமாக ஊர் தெரிய வேண்டும் அல்லவா?'' என்று பசுபதி சொல்ல, இருவருமாக வெளிக் கிளம்பினார்கள்.

''மாப்பிள்ளை அதிக நேரம் பட்டினி கிடக்க மாட்டார்; சுருக்க வந்துவிடுங்கள்'' என்று சுந்தரேசையர் அவர்கள் போகும்பொழுது சொல்லத் தவற வில்லை. அதன்படியே அவர்களும் கால தாமதம் செய்யாமல் கிட்டத்தில் இருந்த கட்டிடங்களைப் பார்வை யிட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

பங்களாவின் முன் நின்ற ஜட்ஜ் வீட்டின் பெரிய காரைப் பார்க்கவும் சரோஜாவும் அவள் கணவனும் வந்துவிட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்தது.

பிறகு எல்லோரும் ஒன்றாகத்தான் சாப்பிட்டார்கள் என்றாலும் பேச்சுகள் ஒன்றும் அதிகம் நடக்க வில்லை. சரோஜாவின் கணவனுக்கு மனைவியிடந்தான் பேச நிறைய இருந்ததாகத் தோன்றிற்றே தவிர, மற்றவர்களுடன் வார்த்தையாட அதிக விஷயங்கள் இருந்ததாகத் தெரிய வில்லை. மீனாக்ஷியம்மாளுக்குப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்த்துக் கொண்டிருப்பதிலும், அவர்கள் இலையைப் பார்த்துப் பரிமாறச் சொல்வதிலும், நடுவில் தானும் தன் சாப்பாட்டை முடித்துக்கொள்வதிலுந்தான் கவனம் இருந்தது. மற்றவர்கள் அவரவர்க ளாகவே ஒருவிதமாகத் தங்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு டிராயிங் ரூமுக்கு வந்து, தாம்பூலம் தரித்துக் கொண் டிருக்கும்பொழுது, சாயங்காலம் பொழுதுபோக்குக்கு எங்கே போய் வரலாம் என்பதுபற்றி அவர்களுக்குள் விவாதம் எழுந்தது.

சாவித்திரி, ''எல்லாருமாக, 'அன்னா கரீனா' என்னும் திரைப்படம் பார்த்து வரலாம்'' என்று யோசனை சொன்னாள். சில தினங்களாகச் சென்னையில் அது ஓடிக்கொண் டிருந்தது.

''எனக்கு அது பிடிக்க வில்லை; ரயிலடியில் விழுந்து அவள் தற்கொலை செய்துகொள்வதை யாரால் பார்க்க முடியும்'' என்றாள் சரோஜா.

''ரொம்பவும் நன்றாக இருக்கிறதாம்; எல்லாரும் கொண்

டாடுகிறுர்கள். பார்க்காமல் இருப்பார்களா? சாவைக் காண அவ்வளவு பயமா?'' என்றுள் சாவித்திரி.

''அய்யேடி! படம் பார்க்கப் போனுலும் இந்தக் கண்ராவி தானு! வேண்டவே வேண்டாம். ஊரிலே ஆயிரம் படம் ஓடு கிறது; வேறு எதற்காவது போவோம்'' என்று சொல்லிவிட்டாள் மீனுக்ஷி யம்மாள்.

''பெண்களான நீங்கள் ஆளுக்கு ஒன்று சொல்லிவிட்டீர் கள். ஆண்களுடைய அபிப்பிராயம் என்ன? ஓட் எடுப்போம். யாருக்கெல்லாம், 'அன்னு கரீனினு' பார்க்க இஷ்டம்; யாருக் கெல்லாம் வேண்டாம்; அதன்படி இரண்டு கட்சிகளாகப் பிரிந்து போய் வருவோம்'' என்றுர் கணேசன்.

அவ்விதம் பார்க்கவும் யார் யார் எங்கே போகிறது என் பது வெகு எளிதில் நிச்சயம் ஆகிவிட்டது. சரோஜாவின் விருப் பத்தை ஆமோதித்தான் அவள் கணவன். சுந்தரேசையர், தாம் எங்குமே வரவில்லை என்று சொல்லிவிட்டார். ஜம்பு நாதனும் பசுபதியுமோ சாவித்திரியின் விருப்பத்தையே பின் பற்றியதோடு கணேசனையும் தங்களுடன் வரும்படி வற்புறுத் திஞர்கள்.

பிறகு, இரண்டு கட்சிகளாகப் பிரிந்து அவர்கள் சினிமா சென்று வருவது என்று ஏற்பா டாயிற்று. அதன்படி அவர்கள் புறப்பட்டபொழுது சாவித்திரியோடு போகிறேம் என்பது, அவனையும் அறியாமல் ஜம்புநாதனுக்கு மிகுந்த சந்தோஷத் தைக் கொடுத்தது. அதோடு சினிமாவில் அவள் பக்கத்தில் உட்கார்ந்தது பின்னும் அதை அதிகப்படுத்துவதாக இருந்தது. ஏதோ வருத்தமான கதை என்பதற்காக அவன் மனம் குதூ கலம் அற்றுப் போகவில்லை. அங்கே படம் பார்க்க வந்திருந்த மற்றவர்களும் உத்ஸாகம் அற்றவர்களாகக் காணப்படவில்லை. இளந் தம்பதிகள் எல்லாப் படங்களுக்கும்போலவே விசேஷ அலங்காரங்களுடன் ஓய்யாரமாகத்தான் வீற்றிருந்தார்கள். விளக்குகள் அணையவும் ஒருவர் தோளோடு ஒருவர் தோள் பொருந்தச் சாய்ந்துதான் இருந்திருப்பார்கள் என்றும் தோன் றிற்று.

நடிப்பென்றே தோன்ருத வண்ணம் படம் ஓடிக்கொண்

டிருந்தது.

'அன்ன'வின் உயர்வை நாமும் முழுதும் ஒத்துக்கொண்டு பார்த்தோம். 'வ்ரோன்ஸ்கி'யிடம் அவளுக்கு ஏற்படுகிற அளவற்ற காதலும் நமக்கு நியாயமாகவே தோன்றிற்று. சமூகத்தின் மதிப்பில் அநியாயமாகக் குறைந்துபோகிறளே என்று தான் வருந்தினேம். அவள் ஓடுகிற ரயிலின் கீழ் விழப் போகும் காட்சி எல்லோரையும் ஓர் உலுக்கு உலுக்கிற்று. எந்த விதமாக வாவது அதைத் தடுத்து நிறுத்த மாட்டோமா என்று, இருப்புக்கொள்ளாமல் உடல் பதறிற்று; கண்களில் நீர் ஆருகப் பெருகி ஓடிற்று.

இருட்டில் யாரும் பார்க்கப் போகிற தில்லை என்கிற தைரியத்தில் ஜம்புநாதன் தாராளமாகக் கண்ணீரைப் பெருக்கினன். விளக்குகள் ஏற்றப் படுமுன் அவன் அவசரமாகக் கைக் குட்டையால் கண்களைத் துடைத்துக்கொள்ள முற்பட்ட பொழுது, படம் பார்க்க வந்திருந்த அவ்வளவு பேரும் அதைத் தான் செய்கிறர்கள் என்பது தெரிந்தது. தான் மட்டுந்தான் ஏதோ கோழையாக நடந்துகொள்ள வில்லை என்கிற சமாதானம் அடைந்தான்.

இடை நேரத்திற்காக விளக்குகள் ஏற்றப்பட்டபொழுதே சாவித்திரி, "அப்பா! நன்ருகத்தான் இருக்கிறது. டால்ஸ்டாயின், 'அன்ன கரீனின' அப்படியே பிரத்தியக்ஷமாக இருக்கிறளே! மேல்நாட்டவர்களின் நடிப்புத் திறமை அபாரந் தான்!" என்று ஏதோ புகழ்ந்து கூறினள்.

படம் முடிந்து வெளியே வரவும் கணேசனும் அதற்குப் பதில் சொல்கிறவன்போல், "சினிமாவே அவர்களுடைய கலைதானே; நாம் அதைப் பார்த்துத்தானே கற்றுக்கொண்டு வருகிறேம்" என்ருர்

"நடிக்கும்பொழுது கதையின் அந்த அந்தப் பாத்திரமாகவே அவரவர்கள் ஆகிவிடுகிருர்கள். அதனல்தான் அவர்களுக்கு அவ்வளவு தத்ரூபமாக நடிக்க வருகிறது" என்ருன் பசுபதி.

"நான் புத்தகம் படித்த தில்லை; படத்தைப் பார்க்கவும் படிக்க வேண்டுமென்று ஆவல் உண்டாகிறது" என்ருன்

ஜம்புநாதன்.

"அவள், 'வ்ரோன்ஸ்கி'யின்மேல் ஆசைப்படுவது தவறு தான்; அதற்குத் தகுந்த பலன்தான் கிடைக்கிறது. ஆனாலும் நமக்கு வருத்தம் என்னவோ ஏற்படத்தான் ஏற்படுகிறது; இல்லையா?" என்றார் கணேசன்.

"கதையில் படிக்கும்பொழுது இன்னும் எவ்வளவோ கஷ்டமாக இருக்கும். அவள் மட்டும் அந்தக் 'கரீனி'னை'வை மணம் புரியாமல் இருந்திருந்தால், அவளுடைய வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கும்! இவ்விதம் எல்லாரும் இகழும் படி ஆகி, உயிரையும் தானே மாய்த்துக்கொள்ளும்படி நேர்ந்திருக்குமா? 'அன்னா' மிகவும் உயர்ந்தவள்; தெய்வம் அவளைச் சதி செய்துவிட்டது; நிஜமான வாழ்க்கையிலும் எத்தனை பேர்களுக்கு இது மாதிரி துன்பங்களெல்லாம் நிகழ்கின்றனவோ? அதைப்பற்றி யாரும் தெரிந்து சொல்கிறவர்கள் இல்லை; அதனால் அவைகள் வெளி வருவதும் இல்லை" என்றாள் சாவித்திரி ஒரு பெரு மூச்சுடன்.

"எல்லாரும் நன்றாக அழுதீர்களா? சினிமாக்களில் விளக்குகளை அணைப்பதிலும் சௌகரியம் இருக்கிறதல்லவா? யார் எது செய்தாலும் கேள்வி முறை இல்லை" என்று கணேசன் கதையைவிட்டு முற்றும் வேறான பேச்சைக் கிளப்பினார். அவர் சொன்னது எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படி இருந்தது. ஏனெனில், அவர்களில் அழாதவர்கள் யார் இருந்தார்கள்?

பிறகு ஜம்புநாதனும் பசுபதியும் படுக்கச் சென்றபொழுது, "படமே நினைவாக இருக்கிறது இல்லையா? ரயில் அடியில் விழப் போகு முன், அவள் முகத் தோற்றத்தைத் திரும்பத் திரும்பக் காட்டி அதுவே கண்முன் நிற்கும்படி செய்துவிட்டான். நடத்தையில் தவறிப்போன ஸ்திரீகளை சமூகம் வெகு கடுமையாகத் தண்டிக்கிறது. உயிரை மாய்த்துக்கொள்ளத் தோன்றுகிற தென்றால் எவ்வளவு தாங்கக் கூடாத கஷ்டம் ஏற்பட் டிருக்க வேண்டும்?" என்றான் ஜம்புநாதன்.

"மத்தளத்துக்கு இரு புறமும் இடி என்பார்களே, அது போலத்தான் தவறிப் போகிறவர்களின் கதியும். தாங்களே

தேடிக்கொண்ட சந்தோஷ வாழ்க்கை நீடித்து நிற்குமா என்று சதா அவர்களுக்குச் சங்கையும் பயமும்; மற்றப்படி சமூகம் வேறு அவர்களை இரக்கமின்றிப் பகிஷ்கரித்துத் தண்டித்துவிடுகிறது" என்றான் பசுபதி.

"அதிலும், 'ஸ்திரீகளுக்குத்தான் தண்டனைகள் முழுதும்; ஆண்களுக்கு ஒன்றும் இல்லை!' என்று சமூகம் நடக்கிறதே. தவற்றுக்கு இருவரும் சமமான பொறுப்பாளிகளாக இருக்க, ஒருவரிடம் மட்டும் குற்றம் எவ்விதம் அதிகம் ஆகும்?" என்றான் ஜம்புநாதன்.

"இத்தனை நாளும் நமது தேசத்தில்தான் ஸ்திரீகளிடம் கடுமையாக இருக்கிறார்கள் என்று நினைத்திருந்தேன். இந்தப் படத்திலிருந்து மற்றத் தேசங்களிலும் அதுமாதிரிதான் இருக்கிறது என்று தெரிகிறது" என்றான் பசுபதி.

"மொத்தத்தில் ஸ்திரீகளின் வாழ்க்கையில் புருஷனைவிடச் சோதனைகள் அதிகம் என்று தெரிகிறது. அவர்கள் வெகு பொறுமைசாலிகளாக இருக்க வேண்டி இருக்கிறது. ஆண் மகன், நல்லதோ கெடுதலோ, தானே தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறான். பெண்ணுக்கு அப்படி அல்ல. அவனுக்குச் சரியாக அவள் தன் வாழ்க்கையைச் செய்துகொள்ள வேண்டி இருக்கிறது. அது பின்னும் சிரமம் அல்லவா? நாமாகச் செய்துகொண்ட ஒரு கஷ்டத்தை அநுபவிக்க, மனத்தை எளிதாகத் தேற்றிக்கொண்டு விடலாம்; பிறரால் உண்டுபண்ணப்பட்டது என்றால் அதை அநுபவிப்பது எவ்வளவு சிரமம்!"—இவ்விதம் அவர்கள் ஏதோதோ அன்று பார்த்த சினிமாவைப்பற்றியும் பொதுவாகவும் பேசிக்கொண்டே படுத்திருக்கும்பொழுது பசுபதி தூங்கிவிட்டான் என்று தெரிந்தது.

திடீரென்று அவன் பேச்சு நின்றதுடன், ஒரே கணக்கில் நீண்ட மூச்சு விடுவதும் அதை ஊர்ஜிதம் செய்தது. பிறகு ஜம்புநாதன் பேச்சை நிறுத்த வேண்டியதுதானே? வாய் பேசாவிட்டாலும் அவன் பார்த்து வந்த அந்தப் படம் இரவு வெகு நேரம் வரைக்கும் அவன் மனக்கண் முன்னே ஓடிக்கொண்டே இருந்தது. முதலில், 'அன்னா' அவள் தமையன் வீட்டுக்கு வரும்பொழுது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறாள். அவள்

தமையன் வீட்டில்தான் அவளை எவ்வளவு கொண்டாடுகிறார்கள். மற்ற ஸ்திரீகளை எல்லாம் - அவள் எதிரில் இருக்கும் பொழுது—வெகு தாழ்ந்தவர்களாக எண்ணத் தோன்றுகிறது. குழந்தைகள்கூட அவள் சொன்னதைக் கேட்டு அன்புடன் நடக்கிறார்கள். அவ்வளவுக்கு அவள் தெய்வப் பெண்போலத் தோன்றுகிறாள். வ்ரோன்ஸ்கி (Vronski) மட்டும் அவளுடைய வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் அவள் ஒப்பற்ற நக்ஷத்திரமாகச் சோபித்திருக்க மாட்டாளா?

ஜம்புநாதனுக்கு, கதையில் வ்ரோன்ஸ்கிபேரில்தான் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. அவளைக் கீழே தள்ளவென்றே அவன் எங்கிருந்தோ வந்து முளைத்தான். 'அன்னா' தாழ்வடைந்து வாழ்ந்திருப்பது ஆசிரியருக்கே பிடிக்கவில்லை. அவளைத் துர்மரணமாகச் சாக அடித்து, படிப்போரின் அநுதாபத்தை அவளுக்குச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டார்' என்று நினைத்தான் ஜம்புநாதன்.

'அத்தங்காள் சொன்னதுபோல் எல்லா நல்லது கெடுதல்களும் சூழ்நிலைப்படிதான் வாழ்க்கையில் அமைகின்றன. "எத்தனை பேர்களுக்கு என்ன என்ன கஷ்டங்கள் இருக்கின்றனவோ யார் கண்டது?" என்றாள் அத்தங்காள். அவள் அவ்விதம் எதற்காகக் கூறினாள்? அவள் ஏதோ இந்த விஷயங்கள் அதிகம் தெரிந்திருந்த மாதிரி பேசினாள். அவளுக்கேகூட ஏதாவது சிரமம் இருக்கக் கூடுமோ?' இந்தக் கேள்வியை தனக்குத் தானே கேட்டுப் பார்த்து, பதில் தெரிந்துகொள்ள முடியாமலே தூங்கிப் போனான் ஜம்புநாதன்.

ஜம்புநாதனும் பசுபதியும் சாவித்திரி வீட்டுக்குப் பல முறை வந்து போனார்கள். அவர்களுடைய சென்னை வாசம் ஆரம்பம் ஆகி இரண்டொரு மாதங்களும் ஆகிவிட்டன அல்லவா? ஆகையால் ஐந்தாறு ஞாயிற்றுக்கிழமைகளை அவர்கள் சாவித்திரியின் வீட்டில் கழித்திருந்தார்கள். அதனால் அவ்வீட்டவர்களின் வாழ்க்கையின் சுபாவமும் அவர்களுக்கு ஒருவாறு தெரிந்தது.

இன்றும் சாவித்திரி வீட்டில் இருந்துதான் அவர்கள் அப்பொழுது திரும்ப ஹாஸ்டலுக்கு வந்திருந்தார்கள். இப்பொழுதெல்லாம் திரும்புகாலில் வகுப்புக்கு நாழிகை ஆகிவிடுகிறது

என்று திங்கட்கிழமை காலையில் அவர்கள் முதல் நாள் சாயங் காலமே திரும்பிவிடுவது வழக்கம் ஆகிவிட்டது. "அப்பா! இந்த மனிதர்களை நெருங்கிப் பார்க்கப் பார்க்க மிகவும் அல்பர்களாகப் படுகிறது. தங்கள் சுயநலம் தவிர வேறு நல்ல குணம் உள்ள வர்களாகத் தெரியவில்லை. இவர்கள் மத்தியில் சதா இருப்பது கஷ்டந்தான்'' என்றான் பசுபதி.

"அத்தங்காளின் மாமியாரைத்தானே சொல்லுகிறாய்? அவள் ஒரு மாதிரி மனுஷியாகத்தான் இருக்கிறாள். எப்பொழு தும் கடைக்குச் சென்று வருவதிலும் வேடிக்கை விநோதங்கள் என்று போவதிலும், வீட்டிற்கு வந்து அவைகளைப்பற்றிப் பேசு வதிலுந்தான் அவளுக்குச் சுவாரஸ்யம் இருக்கிறது. இந்தக் காலத்து விலை வாசியில் சாமான்கள் வாங்க எங்கேதான் இவளுக்குப் பணம் கிடைக்கிறதோ!'' என்று அதிசயித்தான் ஜம்புநாதன்.

"அவர்கள் இந்த ஜம்பச் செலவைத் தவிர, வேறு என்ன செய்கிறார்கள்? ஒரு நல்ல காரியத்திற்கு ஒரு தூசி கொடுக்க மனம் வரும் என்று தோன்றவில்லை. அப்பொழுது வெகு கருமி களாகக் கணக்குப் பார்க்கிறார்கள். அதையும் நான் கவனித் தேன்.

"தங்கள் சொந்தச் செலவுக்கே அவர்களுக்கு நிறையப் பணம் வேண்டும்போல் இருக்கிறதே. அப்புறம் அல்லவா பிற ருக்குக் கொடுக்க முடியும். அடே அப்பா! சௌக்கியங்களுக் குத்தான் என்ன செலவு செய்துகொள்ளுகிறார்கள்! வாங்கக் கூடாது என்று சர்க்கார் போட்டிருக்கும் கட்டுப்பாடு ஒன்றை யும் அவர்கள் லக்ஷியம் செய்வதில்லை. தங்கள் சௌகரியத் தைக் குறைத்துக்கொள்ள விரும்பாமல் ஒன்றுக்கு மூன்று விலை கொடுத்து, கள்ள மார்க்கெட்டில் சாமான்கள் வாங்கிவிடு கிறார்கள். அதற்கு எதிரிடையாகப் பேசுகிறவர்களுடைய சொற்கள் காதில் விழாததுபோல நடந்துகொள்கிறார்கள்.

"அவர்கள் சட்ட விரோதமாகச் செய்யும் காரியம் நமக்கு மலைப்பாக இருக்கிறது. அவர்களைப் பெரிய மனிதர்கள் என்று மதிக்க அது உதவுகிறது. காலம் எவ்விதம் மாறிப் போய்விட்டது! பார்த்தாயா? பணம் இருந்தாலும் எளிய வாழ்க்கை வாழ்பவர்

களைக் கண்டால் மதிப்பு இருப்பதில்லை. அவர்கள் பிறருக்கு உபகாரம் செய்வதும் கண்ணில் படுவதில்லை'' என்றான் பசுபதி.

''அதென்னவோ, நீ சொல்வது உண்மை. எந்தத் தப்பான முறையில் சம்பாதித்த சொத்தானாலும், அந்தப் பணக்காரர்களைக் கண்டால் மலைப்புத்தான் தட்டுகிறது; இழிவு தோன்றுகிறதில்லை. ஆனால், அத்தங்காள் பாடு இவர்கள் மத்தியில் கஷ்டந்தான். அவளுக்கு நல்ல குணமும் விவேகமும் இருக்கிறது. நல்ல முறையில் இருப்பதைத்தான் விரும்புகிறாள். காட்டு மிராண்டிகளின் மத்தியில் நாகரிகப் பண்புள்ளவர்கள் சந்தோஷமாக வாழ முடியாததைப்போலவே இவர்கள் சுபாவத்திற்கும் அவளுடைய திறத்திற்கும் ஒத்து வருவது கடினந்தான்'' என்றான் ஜம்புநாதன்.

''நல்ல போடு போட்டாய்! மீனாக்ஷியம்மாள் இந்த வார்த்தையைக் கேட்டால் உன்னை லேசில் விடுவாளா? நம்மைப் பட்டிக்காட்டு ஆசாமிகள், ஒன்றும் தெரியாது என்று மதித்து, முகங் கொடுத்துப் பேசுவதுகூட இல்லை, அந்த அம்மாள். அப்படியிருக்க நீ அவர்களைக் காட்டுமிராண்டி என்கிறாயே!''

''இவர்கள் நாகரிகமாக அலங்கரித்துக்கொண்டு விட்டதால் அறிவாளிகள் ஆகிவிடுவார்களா? நல்ல விஷயங்களைக் கிரகித்து, நல்ல மாதிரியில் நடப்பதல்லவா நாகரிகப் பண்பு. நாட்டின் நிலைமை, சுற்றி இருப்பவரின் சுக துக்கம், இவைகள் ஒன்றும் இவர்களுக்கு ஒரு பொருட்டாக இராதுபோல் இருக்கிறது. பெருத்த தியாகங்கள் செய்திருப்பவர்களைப் பார்த்த பிறகும் இந்த நாளில் மனிதர்கள் ஒரு பொதுநல உணர்ச்சி இல்லாமல் இவ்விதம் இருக்கிறார்களே! அதிசயந்தான். பாவம், இவர்கள் மத்தியில் நல்ல விஷயங்களைப்பற்றிப் பேசக்கூட அத்தங்காளுக்குச் சாத்தியம் இல்லை என்று தெரிகிறது. கணேசன்கூட சதா வேலையில் இருந்துவிடுகிறார். அதனால்தான் அவளுக்கு நம்மோடு பேசுவதுகூடச் சுவாரஸ்யம் கொடுக்கிறது'' என்றான் ஜம்புநாதன்.

''அவருந்தான் எப்படியோ யார் கண்டது? ஏதோ சம்பாதிக்கிறார், அந்தப் பெருமையில் இருக்கிறார்? அவரும் மனைவியின் மனம் அறிந்து நடந்துகொள்வார் என்று தோன்றவில்லை.

உன் அத்தங்காளுக்குத் தந்தையிடம் மிகுந்த மதிப்பு என்று தெரிகிறது. கணேசனுக்கு அவ்விதம் இல்லாததுடன், அவளுக்காகக்கூட அதை மறைத்துக் காண்பிக்க வேண்டும் என்கிறதைக் காணோம். அவரைப்பற்றிப் பேசும்பொழுது தாராளமாகக் குறைத்துப் பேசுகிறார். அதைக் கேட்க முடியாமல் அவள் முகம் சுண்டிப் போவதை அவர் கவனிப்பதே இல்லை'' என்றான் பசுபதி.

''அன்று அவருடைய சட்ட அறிவைக் குறித்து,குறைவாகப் பேசினாரே, அதிலிருந்து சொல்கிறாயா?!'' என்று கேட்டான் ஜம்புநாதன்.

''ஆமாம், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்? உன் அத்தங்காள்வேறு பேச்சை ஓட்ட மனம் இல்லாமல் நிறுத்திக்கொள்ள வில்லையா? நீ அவளுக்காகப் பரிந்து சொல்ல வந்ததைக்கூடத் தடுத்துவிட வில்லையா? அந்தப் பேச்சைக் கேட்கப் பிடிக்காமல்தானே நிறுத்தினாள்'' என்றான் பசுபதி.

''அத்தானுடைய புத்தியைக் கணேசன் என்ன கண்டார்! அப்பா அல்லவா எவ்வளவோ சொல்லுவார்; அவர் புத்திக்கு எட்டாத விஷயமே கிடையாதாம்! முன்னடி பரிச்சயம் இல்லாத தானாலும் நொடியில் புரிந்துகொண்டு விடுவாராம். அதைக் கண்டுதான் அவரோடு வேலை பார்த்தவர்களுக்கெல்லாம் அவரிடம் அபார மதிப்பாம். ஒரே கோடு கிழித்த பாதையில் செல்லக் கூடியது அல்ல அவருடைய புத்தி. சற்று இப்படி அப்படித் திரும்பினால் குடை சாய்ந்துவிடாது. அதைத் தெரிந்துகொள்ளாமல் கணேசன், அவர் சட்டத்தில் தனியாகப் பிடுங்கிவிடவில்லை என்கிறார். சட்ட அறிவு இல்லாமலா வக்கீல் தொழிலில் பணத்தை வாரிக் கொட்டினார்? இந்த நாளில் ஒரு வேளை, சட்டத்திற்காக யாராவது தனியே உயிரை விடுகிறார்களோ என்னவோ? அது இவருக்குப் பெரிதாகத் தோன்றுகிறது'' என்றான் ஜம்புநாதன்.

''எதுவானாலும் உன் அத்தங்காள் காது கேட்க அவர் அவள் அப்பாவை மட்டந்தட்டிப் பேசுவது அழகில்லை. அவர், உயிருடனாவது இருக்கிறாரா? அதுவும் இல்லை. இறந்து போனவர்கள் மதிப்பைக் கொஞ்சம் ஏற்றி வைத்துப் பேசிவிட்டால்

தான் என்ன குடி மூழுகிப்போகும்? அதற்கு வேண்டிய தாராள புத்தி இல்லேயே இவரிடம். அன்று அவள் அப்பா காலத்துத் தோட்டத்தை மாற்ற மனதில்லே அவளுக்கு என்கிறதை ஒரு குற்றம்போலச் சொன்னுர்; கவனித்தேன். அவளுக்குத் தந்தை அவர்; மேலும் சொத்து முழுதும் அவருடையது. அவர் ஞாபகத்தை மறக்கக் கூடியதைச் செய்ய அவளுக்கு மனம் வருமா?'' என்ருன் பசுபதி.

சாவித்திரியின் வீட்டவர்களே மட்டும் அல்ல, கணேசனேயும் சேர்த்துப் பழிப்பதென்று அவன் கச்சை கட்டியிருந்தான் என்றே தோன்றிற்று.

''அத்தான் எவ்வளவோ தான தருமங்கள் செய்திருக்கிருர். பல ஸ்தாபனங்களுக்குச் சரீர ஒத்தாசை, திரவிய சகாயம் எல்லாம் செய்திருக்கிருர். அவரைப்பற்றிப் பேச இவர்களுக்கு யோக்கியதை ஏது?'' என்ருன் ஜம்புநாதன்.

'சாவித்திரியின் கணவர் அன்புடையவராக மாறிவிட்டார் என்று சொன்னதில் ஒன்றும் உண்மை இல்லேபோலும். அவள் வெளியே காண்பித்துக்கொள்ளாமற் போகவே, எல்லாம் சரியாகிவிட்டது என்று அப்பா நினைத்துக்கொண்டிருக்கிருர். அப்பாவிற்கே பெண்களின் மனத்தை அறியும் சக்தி போதாது. வீட்டில் அம்மா, அத்தை இவர்கள் எவ்வளவோ சமயங்களில் சிரமப்பட்டு வருந்தும்பொழுது அவர் அதைக் கண்டுகொண்டதே இல்லே. ஆகையால், அப்பாவின் அபிப்பிராயத்தை இது விஷயத்தில் முழுவதும் நம்புவதற்கு இல்லே. அவரை விட்டால் அத்தங்காளே நெருங்கிப் பார்த்துத் தெரிந்துகொள்கிறவர்கள் யார்? பழைய நாளேப்போல் அடித்து, உதைத்து, கணவன் துன்புறுத்திஞல் அது பகிரங்கம் ஆகிவிடும். இவைகள் எல்லாம் மனத்திற்கு மனம் ஏற்படுகிற போராட்டங்கள் அல்லவா? விரோதமான அபிப்பிராயங்களேத் தெரிவித்து, மாற்றிப் 'பேசி' மனத்தைத் துன்புறுத்துபவை அல்லவா இவைகள். வில்லம்பு பட்டால் ஆறும்; சொல்லம்பு பட்டால் ஆறுமா?' என்பது வசனம். இவைகள் அதற்கும் மேலாகச் சொல்லிஞல்கூட அல்லாமல் பாவத்திஞலேயே நிகழ்வதாக இருக்கின்றன. அநுபவிப்பவர்களே அவைகளே வெளியிட்டுச் சொல்லிக்கொண்டால்

அன்றிப் பிறர் அறிய வழி இல்லை. கூட இருந்து நுட்பமாகக் கவனித்துப் பார்த்து ஒரு வேளை தெரிந்துகொள்ளலாம். அந்தச் சந்தர்ப்பந்தான் எனக்கு இப்பொழுது வாய்த்திருக்கிறதோ?' என்று நினைத்துக்கொண்டான் ஜம்புநாதன்.

பசுபதிக்குப் பிறரை அறியும் திறமை உண்டு. அவன், ஒருவரைப்பற்றி ஊகமாகச் சொல்பவைகள்கூடப் பிறகு அப்படியே சரியாக இருக்கின்றன. அன்று, பார்த்த மாத்திரத்தில், அந்த ஆங்கிலோ-இந்தியனையும், அவனுடன் இருந்த மங்கையையும் காதலர்கள் என்று ஓர் அடி அடித்தான். பிறகு பார்த்தால் அது அப்படியே சரியாக இருப்பதுடன் கலாசாலை முழுவதும் அதே பேச்சாகவும் இருக்கிறது. மாணவர்கள் ஒருவரை ஒருவர் வெளியில் காணும்பொழுது, அந்த ஜோடிகளின் நடவடிக்கைகளைப்பற்றித்தான் பேசுகிறார்கள். அவர்கள் சேர்ந்து உல்லாசமாக உலாவச் செல்வது, அவன் அவளுக்குத் தனியாக, மைதானத்தில் சைக்கிள்விடக் கற்றுக் கொடுப்பது, அந்தச் சமயங்களில் அவன் அவளை அப்படியே அணைத்துப் பிடித்திருப்பது, இப்படி எத்தனையோ சுவாரஸ்யமான விஷயங்களைப் பேசுகிறார்கள். ஒருவன் அவர்கள் முத்தம் இட்டுக்கொண்டதையே பார்த்ததாக உத்ஸாகத்துடன் அன்று அளந்துகொண்டிருந்தான். இவ்விதம் அவர்களுடைய காதல் நாடகந்தான் எல்லா மாணவர்களுக்கும் ஒரு வகை ஹாஸ்ய உணர்ச்சியை எழுப்பிச் சுவாரஸ்யம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பசுபதி தெரிந்து சொல்லக் கூடியவன் என்பதற்கு இதைவிடச் சிறந்த அத்தாட்சி வேணுமா?

ஆகையால், அவன் வார்த்தைகளில் ஜம்புநாதனுக்கு நம்பிக்கை ஏற்படத்தான் ஏற்பட்டது. 'சாவித்திரி அவள் புக்ககத்தவர்கள் மத்தியில் சந்தோஷத்தோடு இருக்க முடியுமா?' என்றுதான் அவனும் சந்தேகிக்கிறான். அடுத்த தடவை அவன் அவள் வீட்டிற்குச் செல்லும்பொழுது, அவளிடம் நேரிலேயே கேட்டு விஷயத்தைத் தெரிந்துகொண்டால் என்ன? அவ்வளவிற்கு அவனுக்குப் பாத்தியதை இல்லையா? அவள் தன் சொற்களாலேயே, 'நீங்கள் சந்தேகிக்கும் விதமாக ஒன்றும் இல்லை; நான் சந்தோஷமாகவே இருக்கிறேன்' என்று

சொன்ன பிறகுதான் அவனுக்கு மன நிம்மதி ஏற்படும் என்று தோன்றிற்று. பசுபதியுடன் கூடவேயே அவன் ஒவ்வொரு தடவையும் அவள் வீட்டிற்குச் சென்று வருகிறுன். அதனுல் அவளுடன் தனித்துப் பேசச் சந்தர்ப்பம் நேராமல் போயிற்று. அப்படி இல்லாமல் அவன்மட்டும் சென்று, அவளிடம் எவ்வித மாவது பேச்சுத் தொடங்கி, உண்மை நிலையை அறிந்துகொள்ள வேண்டும். அவள் அவனைச் சகோதர ஸ்தானத்தில் ஏற்றுக்கொண் டிருப்பதற்கு, அவன் அதாவது செய்ய வேண் டாமா? அவனுடைய கடமை அல்லவா அது? இவ்விதத் தீர்மானத்துக்கு வந்தான் அவன். புல்லின் ஊடே லகுவாகப் பாம்பு நுழைந்து செல்வதுபோல, அவன் மனத்திற்குள்ளும் சாவித்திரியின் சந்தோஷ வாழ்க்கையைக் குறித்த சந்தேகம் எளிதாகப் புகுந்து ஊரத் தொடங்கிற்று.

## 18

மறு நாள் அவர்கள் வகுப்புக்குச் சென்றபொழுது அவர்கள் சந்தித்த மாணவர்கள் யாவரும், ஒரே விஷயத்தைப் பற்றித்தான் பேசினுர்கள். அதாவது வெளியில் சென்றிருந்த ஜான், இரவு நேரம் பொறுத்து ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்த தற்காக வார்டன் அவனை மிகவும் கண்டித்து, அபராதம் போட்டதுடன் மறுபடியும் இப்படி நேர்ந்தால், கலாசாலையை விட்டே விலக்கிவிட வேண்டி யிருக்கும் என்றும் எச்சரித்திருந் தான். இந்தச் சமாசாரத்தைத்தான் ஒருவருக் கொருவர் ஒரு வகைப் பர பரப்போடு பேசிக்கொண்டார்கள் அவர்கள். அவன் அவ்விதம் நேரம் பொறுத்து வந்ததோடு,அவனுடன் மிஸ் மேரியும் இருந்ததாகக் கூறப்பட்ட விஷயந்தான் எல்லோருக்கும் மிகுந்த சுவாரஸ்யம் கொடுப்பதாக இருந்தது. அவனும் அவளும் இவ்விதம் தனித்து வெளியே சென்று,இரவு நேரம் பொறுத்துத் திரும்பி வந்தார்கள் என்ருல், அது அவ்விருவருக்குள்ளும் இருக்கும் உறவு முறையை நன்கு விளக்கிக் காட்டுகிற தல்லவா? ஆகையால், அதுபற்றிப் பேசப் பிள்ளைகளுக்கு இருக்கக் கூடிய உத்ஸாகத்திற்கு கேட்க வேண்டுமா? எல்

லோரும் அவரவர்கள் முறையில் - அதுபற்றி வியாக்கியானம் செய்தார்கள்.

"ஒருவருக்கொருவர் அவ்வளவு ஆசை என்றால், பேசாமல் மணந்துகொள்வதற்கு என்னவாம்? எதற்கு இந்த ரசாபாசமான செய்கை?" என்றான் ஒருவன்.

"கணவன், மனைவி என்று ஆகிவிட்டால் அப்புறம் அதில் சுவாரஸ்யம் என்ன இருக்கிறது? முன்னாடி நடத்துகிற காதல் நாடகத்தில் அல்லவா, இன்பம் இருக்கிறது" என்றான் இன்னொருவன்.

"பிறகு மணம் நடக்க முடியாமல் போய்விட்டால், அவளுடைய கதி என்ன ஆகிறது?" என்று ஒருவனுக்குச் சந்தேகம் எழுந்தது.

"அவர்களுக்கு அது மாதிரியான கவலைகள் இல்லை. அவர்கள் ஆடிப் பாடி அமர்ந்த பிறகுதான் விவாகமே செய்து கொள்வார்கள். விவாகத்திற்கு முன்னால் நிறையக் காதல் அநுபவம் ஏற்பட்டவர்களுக்கே அவர்களில் கௌரவங்கூட. ஆடவர் மயங்கும்படியான ஏதோ கவர்ச்சி தங்களிடம் இருப்பதாகப் பெண்களுக்கு அபிப்பிராயம்" என்றான் ஒருவன்; அவர்கள் வழக்கம் முற்றும் தெரிந்தவனைப்போல்.

"அப்படி மோகிக்கும் விதம் மேரியிடம் என்ன அழகு இருக்கிறது? எனக்குத் தெரியவில்லை" என்று ஒருவன் சாதித்தான்.

"மலரை வண்டு மொய்ப்பதுபோல் மொய்க்க, அவளிடம் யௌவனம் இருக்கிறதே; போதாதா?" என்றான் உலக அநுபவம் உள்ள ஓர் ஆசாமி.

இவ்விதச் சம்பாஷணையின் நடுவில்தான் பசுபதியும் ஜம்புநாதனும் வந்து சேர்ந்துகொண்டார்கள். அவர்களுக்கும் விஷயம் விளக்கப்பட்டது.

"அவர்கள் வேண்டுமென்றேயா இரவை எவ்விடத்திலோ சேர்ந்து கழித்துவிட்டு வந்தார்கள்?" என்று சந்தேகத்தோடு கேட்டான் ஜம்புநாதன்.

"என்ன புத்திசாலிக் கேள்வி அப்பா, நீ கேட்பது? தற்செயலாகக் கூடநடக்குமா? நீ ஒரு அப்பாவி, உனக்கு ஒன்றுங்

தெரியாது. இங்கிருந்து இருவரும் சேர்ந்துதானே புறப்பட்டுப் போயிருக்கிருர்கள். அது அவர்கள் வேண்டுமென்று செய்தது தானே. அதுபோல் திரும்பவும் நேரம் பிடித்திருக்கிறது'' என்ருன் ஒரு மாணவன், அவர்கள் எண்ணத்தை எளிதாகக் கண்டுபிடித்துவிட்டவனுக.

இவர்கள் இவ்விதம் எந்த ஜானைப்பற்றி விவாதித்தார் களோ, அவ்னே அவ் வழியாக வரவே, அவர்கள் பேச்சு அத் துடன் நிற்கும்படி ஆயிற்று. தங்கள் பேச்சு அவன் காதுகளில் விழுந்திருக்குமோ? என்கிற சம்சயம் ஐம்புநாதனுக்கு. அவன் இவர்களைத் தாண்டிச் சென்றபொழுது அவன் முகம் சிவப் பேறி இருந்ததையும், அவன் ஒரு விதமாக இவர்களைப் பாரா ததுபோல் விலகிச் சென்றதையும், நோக்கினபொழுது அவ் விதம் நினைக்கத் தோன்றிற்று. அவர்கள் தமிழில்தான் பேசிக் கொண்டார்கள் என்ருலும், அவனுடைய பெயரும் மேரியின் பெயரும் அடிபடுவதில் இருந்து அவன் ஒருவாறு ஊகித்திருக்க முடியாதா? நமது நாட்டிலேயே பிறந்து, வளர்ந்த, அவனுக்கு, தன்னைப்பற்றித்தான் அவர்கள் வம்பளக்கிருர்கள், என்று புரிந்துகொள்ளும் அளவுக்குத் தமிழ்ப் பேச்சுத் தெரிந்திராதா?

'ஒருவரை முகத்திற்கு நேராக எதுவும் சொல்லலாம்; அவர்களுக்குப் பின்புறம் அவர்களைத் தவருகப் பேசலாமா? அது குற்றம் அல்லவா?' என்பது ஐம்புநாதனுக்கு. அவன் வருகிற சமயம் தானும் அந்த வம்பர்கள் மத்தியில் இருந்ததற் காக அவன் தன்னை நொந்துகொண்டான். அது அவமானப்பட வேண்டிய செய்கையாக அவனுக்குத் தோன்றிக்கொண் டிருந்தது.

இவ்வித மனேபாவத்தில் அவன் இருந்தான். அவன் மத்தியான்னம், வகுப்பு ஒன்றும் இல்லாத நேரத்தில் புத்தக சாலைக்குப் புத்தகம் ஏதாவது பார்க்கும் உத்தேசத்தோடு சென்றபொழுது, அங்கே ஜானைத் தனியாகப் பார்த்தான். உடனே அவனிடம் மன்னிப்புக் கோரத் தோன்றிற்று அவ னுக்கு. "என்ன புத்தகம் அது, நீ படிக்கிறது?" என்று கேட்ட வண்ணம் ஜானை நெருங்கினன்.

ஜானும் கையிலிருந்த புத்தகத்திலிருந்து தலை நிமிர்ந்து

அவனைப் பார்த்தான். அவன் முகத்தில் இருந்த தீனமான பார்வை ஜம்புநாதனை, 'பாவம்!' என்கிற வகையில் இரக்கங் கொள்ளச் செய்தது.

"உன்னிடம் மன்னிப்புக் கேட்கலாம் என்று வந்தேன். உன்னைப்பற்றி நாங்கள் அவதூறு பேசுவதாக நினைத்திருப்பாய். அப்படி ஒன்றும் இல்லை. ஹாஸ்டல் வார்டன் உன்னைக் கண்டித்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப்பற்றி யார் தவருகப் பேசினாலும் எனக்கு அது இஷ்டம் இல்லை. இதை உன்னிடம் தெரிவிக்க வேண்டும் என்பது எனக்கு" என்றான் ஜம்புநாதன்.

இவ்விதம் மனம் விட்டு வெளிப்படையாக ஜம்புநாதன் பேசியது, ஜானுடைய மனத்தில் அவனைப்பற்றி மிகுந்த நல்ல எண்ணத்தைக் கொடுத்திருக்க வேண்டும். உடனே அவன் தன் முகத்தில் நன்றி தோன்ற, உட்கார்ந்திருந்த குறிச்சியை விட்டு எழுந்து நின்றான். கைகளை நீட்டி ஜம்புநாதனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். "நீ இப்படிச் சொல்வதைக் கேட்க எனக்கு எவ்வித சமாதானம் ஏற்படுகிறது தெரியுமா? அவர்கள் பேசிக்கொண்டது முழுவதையும் நான் புரிந்து கொள்ளாவிட்டாலும் என்னைப்பற்றித் தவருகப் பேசுகிறார்கள் என்பது, எனக்கு நன்கு தெரியத்தான் தெரிந்தது. என்னை எது வேண்டுமானாலும் அவர்கள் சொல்லட்டும்; அதனால் எனக்கு ஒன்றும் இல்லை. மேரியையும் தூஷணை செய்கிறார்களே! அதுதான் பொறுக்கவில்லை. நின்று பதில் பேச வேண்டும் என்கிற ஆத்திரந்தான் எனக்கு. ஆனால், 'அதனால் எல்லாம் நன்மை ஏற்படப் போகிற தில்லையே' என்றுதான் சும்மா இருந் தேன். உண்மையாக நடந்த விஷயத்தை நான் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் யாரும் நம்பப்போவ தில்லை. நம்பி ஏற்றுக்கொண்டுவிட்டால் அப்புறம் சுவாரஸ்யம் ஏது? அதற் காகவே உண்மை என்று தெரிந்தாலும் யாரும் நம்பமாட் டார்கள். அதனால், நான் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. என்னால் மேரியின் பெயருக்கு மாசு உண்டாகிறதே; அந்த வருத்தந்தான் என்னால் தாங்க முடியவில்லை" என்றான்.

அவன் கண்களில் ஜலமே ததும்பி நின்றது. அவன் அவ்

விதம் வருந்துவதைப் பார்த்தபொழுது ஜம்புநாதனுக்கு உண்மையிலேயே அவனிடம் அநுதாபம் ஏற்பட்டது. சற்று முன் வரைக்கும் ஜானிடம் கொண்டிருந்த தவருன எண்ணமும் மாறத் தொடங்கிற்று. 'என்ன இருந்தாலும் இவனும் அந்தப் பெண்ணும் நடந்துகொள்ளும் விதம் சரியில்லைதான்; அதை எல்லோரும் தூஷிக்காமல் என்ன செய்வார்கள்?' என்று நினைத்திருந்தான். இப்பொழுது ஜானுடைய வருத்தத்தைத் நேரில் காணவே, அவனுக்குத் தன்னையும் அறியாமல் அநுதாபம் ஏற்பட்டது. மேலும், ஜான் தன்னைவிட்டு, அவளுக்காக வருந்துவது, ஜம்புநாதனுடைய மதிப்பில் அவனை உயர்த்தியே விட்டது. சுயநலம் அற்ற உண்மை அன்பு, அவனுக்கு அவளிடம் இருப்பதாலேயே. அவளைப்பற்றிய தூஷணையைக் கேட்க அவன் மனம் பொறுக்கவில்லை' என்று நினைத்துக்கொண்டான்.

பிறகு, "அப்படி ஒன்றும் இல்லை. எல்லோரும் ஏற்கா விட்டாலும் சிற்சிலர் உன் காரணங்களை ஏற்கத் தயாராகத்தான் இருப்பார்கள்" என்ருன். அவனுக்குச் சமாதானம் அளிக்கும் பொருட்டும் தான் அவனை நம்பத் தயார் என்பதையும் இப்படி அறிவித்தான் ஜம்புநாதன்.

ஜானும் அவனைப் புரிந்துகொண்டு, நன்றியோடு நோக்கினன். ஒருவனுவது தன்னை நம்பித் தன் விளக்கத்தைக் கேட்கத் தயாராக இருக்கிருனே' என்கிற ஆறுதல் அவனுக்கு.

"மேரியை நான் எவ்வளவு உண்மையாகக் காதலிக்கிறேன் தெரியுமா? அவளுடைய சந்தோஷத்திற்காக என் உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன். அப்படி இருக்க, என்னுலேயே அவளுக்கு இவ்வித அவமானம் நேர்ந்திருக்கிறது என்ருல்,அது என்னுல் தாங்கக் கூடியதா? நாங்கள் சினிமா பார்க்கப் பகல் காட்சிக்குத்தான் சென்ருேம். இடம் கிடைக்காமல் போய் விட்டது. அவள் திரும்பிவிடத்தான் நினைத்தாள். நான்தான் பிடிவாதம் செய்து அவளைச் சாயங்காலக் காட்சிக்கு நிறுத்திக் கொண்டேன். ஆனுல் நானும், 'எங்களுக்கு ரயில் தவறிவிடும்; அதனுல் திரும்புவதற்கு நேரம் ஆகி, இவ்வித அபவாதம் ஏற்படும்' என்கிறவரைக்கும் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் நிற்காமல் விரைவாக வந்தும் கலாசாலைக் கேட்டுகளைச் சாத்திவிட்டார்கள்.

அதைக் கண்டதும், மேரி மனம் குன்றிப் போனாள். அப்புறம் என்னுடன் நிற்பதுகூட அவளுக்குப் பிடிக்க வில்லை. காவற்காரன் கதவைத் திறந்தபொழுது அவள், என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் விரைந்து பிரிந்து போனாள். நான் இன்று காலை அவளைக் கண்டு மன்னிப்புக் கேட்க நினைத்துச் சென்றபொழுது, அவள் என்னைப் பார்க்கவே மறுத்துவிட்டாள். அவள் தமக்கையும் என்னிடம் ஒரு மாதிரிதான் பேசினாள். இவ்விதம் நேர்ந்துவிட்டதில் அவர்கள் எல்லாருக்கும் மிகுந்த வருத்தம் என்று தெரிகிறது. அவளைச் சமாதானம் செய்யும் வகை அறியாமல் நான் தவிக்கிறேன்'' என்று ஜான் தன் போக்கில் நடந்தவற்றை எல்லாம் சொல்லி முடித்தான்.

''தவறு நேர்ந்ததற்கு நீதான் என்ன செய்வாய். அதற்கு உன் பேரில் கோபிப்பது சரி அல்ல'' என்று ஜம்புநாதன் அவனுக்குச் சமாதானம் கூறினான். அவனுக்கு அந்த ஆங்கிலோ—இந்தியர்களின் போக்கு, தெளிவாகப் புரியவில்லை. 'அவள் அவனுடன் தாராளமாகப் பழகுவதில் ஒன்றும் குறைவைக் காணோம். அப்படி இருக்க, இவ்விதம் நேர்ந்ததைப் பெரிதாக நினைக்க என்ன இருக்கிறது?' என்றுதான் அவன் எண்ணினான்.

''நான் அல்லவா அவளோடு படம் பார்க்கும் ஆசையில், அவளை நிறுத்திக்கொண்டு விட்டேன். இல்லை என்றால் இப்படி நேர்ந்திருக்குமா?'' என்றான் ஜான் வருத்தத்துடன்.

''நேரம் ஆனது ஒரு பெரிய தவறா? உங்களில் இவைகளையெல்லாம் அதிகம் பார்க்கிற வழக்கம் இல்லையே?' என்று ஜம்புநாதன் கேட்க ஆரம்பிக்கு முன், ''யார் அப்படிச் சொன்னது? எவ்வளவு சகஜமாகப் பழகினாலும் இரவில் தனித்துப் போகலாமா? கூடாது. மணம் செய்துகொள்ள நிச்சயித்திருக்கிறவர்கள்தான் அப்படிச் செய்யலாம். மற்றவர்களுக்கு அது தப்புத்தான்'' என்றான் ஜான்.

''நீங்கள்தான் ஒருவரை ஒருவர் காதலிக்கிறீர்கள்; மணம் செய்துகொள்ளவும் போகிறீர்கள் அல்லவா? அப்பொழுது எல்லாம் சரியாகிவிடுகிறது.''

''அந்த நம்பிக்கையில்தான் நான் உயிரை வைத்துக்கொண்

டிருக்கிறேன். ரோமியோவின் காதலை, என்னுடைய காதலுக்கு இணை கூற முடியாது. நான் மேரியை அவ்வளவு நேசிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள். ஆனால், நாங்கள் விரும்புகிற அவ்வளவு சடுதியில், விவாகம் செய்துகொள்வதுதான் முடியாதுபோல் இருக்கிறது. என் படிப்பு முடிந்து, நான் சம்பாதிக்கத் தொடங்க வேண்டாமா? அப்புறம் அல்லவா அவளை வைத்துச் சம்ரக்ஷிக்க என்னால் முடியும்? அதற்குச் சில வருஷங்கள் ஆக வேண்டுமே. அவள் எனக்காகக் காத்திருப்பதாக வாக்களித்திருக்கிறாள். அதுவரையில் பேச்சுக்கு இடம் இல்லாதபடி நாங்கள் நடந்துகொள்ள வேண்டும் அல்லவா?" என்றான் ஜான்.

அவர்களுக்குள்ளும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அதை மீறி நடக்க அவர்களும் விரும்பமாட்டார்கள் என்று தெரிந்தது. ஜான் சரியான முறையில் நடப்பவன் என்று தெரிந்துகொண்டதில், ஜம்புநாதனுக்கு ஒருவகைச் சமாதானம் ஏற்பட்டது. பிள்ளைகள் எல்லோரும் பேசுகிறதுபோல், அவர்கள் பழக்க வழக்கங்கள் அவ்வளவு மோசமானவை அல்ல.

"நமது மாணவர்களுக்கு என்ன? யாரைக் குறித்தும், 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ?' என்று தோன்றினதைப் பேசிவிடுவார்கள். அதைப் பெரிதாக எடுத்துக்கொண்டு வருந்தாதே. மிஸ் மேரிக்கு இந்தச் சமாதானந்தான் நீ சொல்ல வேண்டும்" என்று யோசனை கூறினான் ஜம்புநாதன்.

"அவள் என்னுடன் ஒரு வார்த்தையும் பேசப் போகிறதில்லை. கொஞ்ச நாள் என் முகத்திலும் விழிக்கமாட்டாள். அவளுக்கு அவ்வளவு வருத்தமும் அவமானமும் ஏற்பட்டுவிட்டது. நான் எனக்குள்ளாகவே கஷ்டப்பட வேண்டியது தவிர வேறு வழி இல்லை. இந்த மட்டும் ஏதோ என் புலம்பலைப் பொறுமையாகக் கேட்டாயே; அதற்காக உனக்கு நன்றி. புத்தகத்தில்கூட என் மனம் செல்ல மறுக்கிறது. நீ கேட்டபொழுது கையில் இருந்த புத்தகம் இன்னது என்பதுகூடத் தெரியாமல்தான் இருந்தது" என்றான்.

"மனத்தைத் தளர விடக் கூடாது" என்று அவனுக்குச்

சமாதானம் சொல்லிவிட்டு, ஜம்புநாதன் தன் அறைக்குச் சென்றான். அங்கே மறு நாள் டெஸ்டுக்குப் படித்துக்கொண்டிருந்த பசுபதி, இவனைக் கண்டதும், "எங்கே போயிருந்தாய்? லைப்ரரிக்கா?" என்று கேட்டான்.

"ஆமாம்; ஆனால் நான் அங்கே ஒரு புத்தகமும் படிக்கவில்லை."

"ஏன்? வேண்டும் என்கிற புத்தகம் கிடைக்கவில்லையா?"

"அதில்லை; அவ்விடத்தில் ஜான் இருந்தான். அவனோடு பேசிக்கொண்டிருந்ததில் புத்தகம் பார்க்க முடியாமல் போய்விட்டது. பாவம், அவனையும் மேரியையும் சேர்த்து நாம் கண்டபடி பேசுவது சரியில்லையடா."

"ஏது, அவனிடத்தில் உனக்கு இத்தனை இரக்கம் தோன்றிவிட்டது? அவன் என்ன குழையடித்தான்?"

"சரியாக விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமல் கண்டவாறு பேசுகிறோம். வெளியில் சென்றவர்களுக்கு வர நேரம் ஆகிவிட்டது, என்பதற்காகத் தாறுமாறாகச் சொல்கிறதா? அது கூடாதல்லவா? அவனுக்கு நாம் பேசினது தெரிந்திருக்கிறது. மேரியும் அவனிடம் கோபமாக இருக்கிறாளாம். மிகவும் வருந்துகிறாள்."

"அவள் எதற்குக் கோபிக்கிறாள்? எல்லாருக்கும் தெரிந்து பகிரங்க ரகசியம் ஆகிவிட்டதே என்று வருத்தப்படுகிறாளா?" என்றான் பசுபதி கிண்டலாக.

"ஜான் வருத்தப்படுவதைப் பார்த்தால், நீ இப்படிப் பேச மாட்டாய். நேர்ந்து போனதற்கு அவன் நிஜமாகவே வருந்துகிறான்."

"அவன் சொல்கிறது அப்படியே உண்மை என்று உனக்குத் தோன்றிவிட்டது; மனசு உருகிப் போகிறது; அவ்வளவுதானே?"

"அவன் சொற்களில் எனக்கு நம்பிக்கைதான். ஒருவர் உண்மை பேசுகிறதும், பொய் பேசுகிறதும் அவர் பேசும்பொழுது தெரியாதா?"

"அப்படியே இருக்கட்டும், இவன் ஆண்பிள்ளை; இவனுக்கு என்ன வந்துவிட்டது?" என்றான் பசுபதி.

"அவன் தனக்காக அல்ல; அவளுக்காக வருந்துகிறன். அதனுல்தான் எனக்கும் அவனிடத்தில் அநுதாபம் உண்டாகிறது. அவனைப்பற்றி உயர்வாகவும் தோன்றுகிறது."

"அவள் பெயருக்கு ஹானி வருகிறது என்று இவன் உருகிப் போகிருனு?" அவர்களுக்கு அது ஒன்றும் பெரிய தப்பு அல்ல. என்ருன் பசுபதி.

"போடா! அங்கேதான் நீ தவறு செய்கிருய். அவர்களுக்கும் ஓர் அளவுக்குமேல் பழகினுல் தப்பு என்பது உண்டு. இவ்விதம் நேர்ந்து போனதற்குத் தான் காரணம் ஆகிவிட்டதை எண்ணி ஜான் கஷ்டப்படுகிருன். அவளை அவ்வளவு உண்மையாக நேசிப்பதால், இப்படித் தன்னை நொந்துகொள்ளத் தோன்றுகிறது அவனுக்கு."

"அவன் இதெல்லாம் பேசி உன்னை ஏமாற்றுகிருனு?" என்று பசுபதி வியந்த மாதிரி கேட்கவே, ஜம்புநாதனுக்குக் கோபமே வந்தது. பின்னும் வாக்குவாதம் செய்யப் பிடிக்கவில்லை. "என்னை ஏமாற்றுவதால் அவனுக்கு ஆக வேண்டியது என்ன? ஏதோ நான் அநுதாபத்துடன் கேட்பதாகத் தோன்றி, மனத்தை வெளியிட்டிருக்கிருன்" என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டு, தானும் படிக்க உட்கார்ந்துவிட்டான்.

## 19

பசுபதிதான் ஜானைக் குறித்து நல்ல எண்ணம் இல்லாமல் இருந்தான் என்ருல், ஹாஸ்டலில் மற்றப் பிள்ளைகளும் அவ்விதந்தான் இருந்தார்கள். ஜம்புநாதன் அவனுக்காகப் பரிந்து பேசுவதைக் கண்டு, சிரித்தார்களே தவிர, ஒருவரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜானுக்காகப் பேசுவதை ஜம்புநாதன்தான் நிறுத்திக்கொள்ளும்படி நேர்ந்தது. ஆண், பெண் சம்பந்தமான விஷயங்களில் உண்மையை யாராவது அலசிப் பார்த்துக்கொண் டிருப்பது உண்டா? நெருப்பு இல்லாமல் புகை கிளம்பாது என்று தீர்மானித்துவிட மாட்டார்களா? 'புகையே' நாமாகக் கற்பித்துக்கொண்டதாக இருக்குமோ? என்று யாரும்

சந்தேகிக்கும் வழக்கம் இல்லை. இந்த நியதியை உத்தேசித்துத்தான் ஸ்திரீ, புருஷர்கள் முன்னெச்சரிக்கையுடன் பழக வேண்டி இருக்கிறது. அஜாக்கிரதையுடன் இருப்பவர்கள் இழி சொல்லுக்கு ஆளாகிவிடுகிறார்கள். பிறகு அவர்கள் ஆயுள் உள்ளவரைக்கும் சந்திரனில் களங்கம்போல் அந்தக் கறை அவர்களை விட்டு நீங்குவ தில்லை.

ஜம்புநாதனால் மற்றவர்கள் நினைப்பதை மாற்ற முடியவில்லை. ஆனாலும் இதில் இருந்து ஜானுக்கும் அவனுக்கும் மிகுந்த நட்பு ஏற்படத்தான் ஏற்பட்டது. வகுப்பு இல்லாத நேரங்களில் அவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசத் தொடங்கினார்கள். அவ்விதம் அவர்கள் தனித்துச் சந்தித்த நேரங்களில், மேரியிடம் தனக்கு இருக்கும் அன்பைப்பற்றித்தான் ஜான் பேசி வந்தான். அவன் தனது காதல் உணர்ச்சிகளை விவரித்துச் சொல்வதைக் கேட்கும்போது, ஜம்புநாதனுக்கு அவனையும் அறியாமல், சுவாரஸ்யம் ஏற்படத்தான் ஏற்பட்டது. மேரியைத் தூரத்தில் பார்க்கும்பொழுதே அவன் இருதயம் துள்ளுவதையும், அவளை நெருங்க, அவளுடன் பேச, அவன் மனம் துடிப்பதையும், அவன் எவ்வளவோ சொன்னான். புத்தகங்களில் கண்ட காதல் அநுபவங்களை அவன் அப்படியே அநுபவிப்பதாகப் பேசினான். தப்பித் தவறி அவளைத் தீண்டும்பொழுது அவன் மெய் சிலிர்ப்பது, எப்பொழுதும் அவள் பக்கத்திலேயே இருப்பதைச் சுவர்க்க சுகமாகக் கருதுவது, ஆகிய தன் உணர்ச்சிகளை வருணித்தான் அவன்.

அவள் அழகைக் குறித்து அவன் பேசியபொழுது, கேட்பவருக்குத்தான் வெட்கம் உண்டாகும். அப்படி அவளது ஒவ்வோர் அங்கத்தையும் வருணித்தான் அவன். அவள் உதடுகளின் சிவப்பையும் கண்களின் மிருதுவான பார்வையையும் பற்களின் பள பளப்பையும் கைகளின் வழ வழப்பையும் நிமிர்ந்த நடையையும் அவள் மார்பின் வட்ட வடிவத்தையுங்கூட அவன் சொல்லத் தவறவில்லை. முன்போல் அவளோடு பழக முடியாமல் இருந்ததனால், அவளைப்பற்றிப் பேசுவதில் அவனுக்குச் சமாதானம் உண்டாயிற்று. அவன் இப்படிப் பேசும் பொழுது ஜம்புநாதனுக்கு ஒரு வகைக் கூச்சம் ஏற்பட்ட

தாயினும் கேட்பதற்கே வெறுப்புத் தோன்றி விடவில்லை. ஒரு வகை ஆசையே இருந்ததோ, என்றுகூடச் சந்தேகிக்கத் தோன்றிற்று. காதல் உணர்ச்சிகளைக் கற்பனை செய்யும் பருவம் உடையவன் அல்லவா?

பசுபதிக்குத்தான் ஜம்புநாதனுடைய புதிய சிநேகம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவர்கள் அவனையும் தங்கள் அந்தரங்கப் பேச்சுக்களில் சேர்த்துக்கொண்டிருந்தார்களானால், அவனுக்கும் ஒரு வேளை ஸ்வாரஸ்யம் உண்டாகி இருக்கலாம். அவனை விலக்கி, தங்களுக்குள்ளாகவே அவர்கள் சிநேகம் கொண்டது அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. "என்னடா, அவன் காதல் கத்தரிக்காய் என்று ஏதாவது அளக்கிருனு? அதைக் கேட்கிறதில் உனக்கு ஸ்வாரஸ்யமா? காதல் ஒன்றும் கிடையாது தெரியுமா? எல்லாம் வெறும் பேச்சு" என்ருன் பசுபதி.

ஜம்புநாதன் இது விஷயத்தில் பசுபதியின் சொல்லை ஏற்பதாக இல்லை. "நமக்கு அந்த அநுபவம் இல்லை என்ருல் அது உலகிலேயே இல்லை என்று சாதித்துவிடுகிறதா? நமது இலக்கியங்கள் எல்லாம் அதைப்பற்றிக் கூறியிருக்கும்பொழுது இல்லை என்று எப்படி ஆகிவிடும்?" என்று தர்க்கித்து, ஜானிடம் ஏற்பட்ட சிநேகத்தை விடாமல்தான் வைத்துக்கொண்டிருந்தான் ஜம்புநாதன். கலாசாலையில் சேர்ந்த புதிதில் இருந்ததுபோல் பசுபதியும் ஜம்புநாதனும் சேர்ந்தே இருப்பதென்பதும் இப்போது கொஞ்சம் குறைந்துதான் இருந்தது. ஜம்புநாதனுக்கே எல்லாம் பழக்கம் ஆகிவிட்ட பிறகு இன்னும் பக்கத்துணை வேண்டியிருக்குமா?

ஒரு ஞாயிற்றுக்கிழமை அத்தங்காள் வீட்டுக்கு ஜம்புநாதன் புறப்பட்டபொழுது, "படிக்க வேண்டிய பகுதிகள் நிறைய இருக்கின்றன. நான் வரவில்லை. நீ மட்டும் போய் வா" என்று சொல்லிவிட்டான் பசுபதி. ஜானின் சிநேகம் காரணமாக ஜம்புநாதனிடம் ஏற்பட்டிருந்த வெறுப்பு, சற்று விலகிக்கொள்ளும்படி அவனைத் தூண்டிற்று. 'ஒவ்வொரு தடவையும் தானும் எதற்காகச் சாவித்திரி வீட்டுக்கு அவனுடன் போகிறது? ஜம்புநாதன் அவர்கள் உறவு; போகிருன். நாம்

எதற்காகப் போக வேண்டும்?' என்றும் தோன்றியது அவ னுக்கு. சாவித்திரி ஒரு வேளை அவன் வரவில்லையே என்று நினைத்தாலும் அவள் வீட்டவர்கள் அவ்விதம் நினைக்கமாட்டார் கள்; நிச்சயம். அவர்களுக்கு இவர்கள் இருவருமே லக்ஷ்யம் இல்லை அல்லவா?

ஜம்புநாதன் மட்டும் தனியாகக் கிளம்பினான். அத்தங்கா ளுடன தனித்துப் பேச அவன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் கிடைத்ததில் அவனுக்குச் சந்தோஷம்.

அவன் சென்றபொழுது பகல் வேளை. சாவித்திரி மட்டுந் தான் வீட்டில் இருந்தாள். அவன் எண்ணி வந்ததற்கு அது அநுகூலமாகவே இருந்திருக்கும். ஆனால் அவள் ரேடியோ வின அருகே உட்கார்ந்து சங்கீதம் கேட்டுக்கொண் டிருந்தாள். ஜம்புநாதனைக் கண்டவுடன், "வா, உட்காரு, பாட்டைக் கேளு" என்று மட்டும் சொன்னாளே தவிர, மேல்கொண்டு பேசுவதாக இல்லை. அவள் கவனம் முழுவதும் பாட்டில் லயித்திருந்தது. ரேடி யோவில் இருந்து வெகு இனிமையான சங்கீதம் வெளிவந்து, அறை முழுவதும் பரவி, நிறைந்து, ஒலிசெய்துகொண் டிருந்தது. நலல ஞானமும அதற்கு ஏற்ப இனிமையான குரலும் சேர்ந்து அமையப்பெற்ற பாடகியின் பாட்டு என்று தெரிந்தது. ஜம்புநாத னும் மெய்ம்மறந்து அதைக் கேட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். பாட்டைப்பற்றி அதிகமாக அவனுக்குத் தெரி யாதானாலும், மனத்தை அள்ளிக்கொண்டு போகும் அந்த இனிய கீதம அவனைப் பரவசப்படுத்தத்தான் படுத்தியது. அநதக் குரலில், ஒரு கவர்ச்சி இருந்தது. பாட்டு முடிந்து, 'இதுவரையில் பாடியவர் ஸ்ரீமதி கமலினி' என்று நிலையத் தார அறிவித்த பிறகுதான், சாவித்திரி ரேடியோவை மூடி விட்டு ஜம்புநாதனைப் பார்த்தாள். அதுவரைக்கும் அவள் கண்ணும கருத்தும் அந்தப் பாட்டிலேயே லயித்திருந்தன.

"கமலினி என்றால் சரோஜாவின் நாத்தனாரா! நான் யாரோ பெரிய பாடகி என்றல்லவா நினைத்தேன்!" என்று அதிசயத்துடன் கேட்டான் ஜம்புநாதன்.

"பாடகிகள் தோற்றுப்போக வேண்டியதுதான். அவ்வளவு மதுரமான குரலும் அபார ஞானமும் அல்லவா இருக்கின்றன

அவளுக்கு' என்றாள் சாவித்திரி. 'எந்தப் பாடகி இவ்வளவு பாவத்தோடு பாடுகிறாள்!' என்கிறது அவளுக்கு.

"அதனால்தான் அவர்களும் பெருமை அடித்துக்கொள்கிறார்கள்போல் இருக்கிறது" என்றான் ஜம்புநாதன்; அன்று மீனாக்ஷியம்மாள் அவர்களைச் குற்றம் கூறினது நினைவு வந்தவனாக.

"இல்லாததைப்பற்றிப் பெருமை அடித்துக்கொள்கிறவர்கள் அல்ல அவர்கள். கமலினி அதற்கு இடம் கொடுக்கவும் மாட்டாள். அவள் பாட்டைக் கேட்கப் பிடிக்காமல்தான், என் மாமியார் சமயம் பார்த்து உறவினரைப் பார்க்க என்று மாமனாரையும் அழைத்துக்கொண்டு போயிருக்கிறார், பார். எங்கே காதால் கேட்டால், தங்களுக்கே நல்லதாகப் பட்டுவிடுமோ என்கிற பயம். அப்படி ஒரு பொறாமை என் மாமியாருக்கு!" என்றாள் சாவித்திரி.

"நீ பாடமாட்டாயா அத்தங்கா?" என்றான் ஜம்புநாதன். அவள் பாட்டுக் கற்றுக்கொண்டிருந்தால் வராமல் போயிருக்குமா? என்கிற எண்ணம் அவனுக்கு. ஏனோ, இந்தக் கேள்வி சாவித்திரியை வருத்தத்திற்கு உள்ளாக்கிற்று. அவள் முகம் அதுவரையிலும் இருந்த பிரகாசத்தை இழந்து காணப்பட்டது.

"கமலினியைப்போல அவ்வளவு நல்ல பாட்டு என்னால் பாட முடியாது. ஆனால் சுமாராகப் பாடுவேன்; அதுவும் இப்பொழுது இல்லை."

"ஏன்?" என்று கேட்டான் ஜம்புநாதன்.

"இந்த வீட்டில் யாருக்கும் பாட்டு, பிடிப்பதில்லை. அதனால் எனது பாட்டும் போய்விட்டது. இதர வித்தைகளைப்போலவா இது? பிறர் காதுக்குக் கேளாமல் நமக்குள்ளாகவே பாடிக்கொள்வது சாத்தியமா?" என்றாள்.

"யாருக்கு கேட்கப் பிடிக்காமல் இருக்கிறது? உன் மாமியாருக்கா?"

"தனியாக அவருக்கு மட்டும் என்ன? எல்லாருக்குந்தான். அப்பாவுக்குத்தான் நான் பாடுவது உசத்தியாக இருந்தது. அவரோடு அதுவும் போய்விட்டது" என்றாள் சாவித்திரி.

வீட்டில் எல்லோரும் என்று அவள் யாரைக் குறிப்பிடு

கிருள்? கணேசனையா? அவருக்குப் பாட்டுப் பிடிக்காது என்றாலும் அவளுக்காக அவர் அதை மாற்றிக்கொள்ள வேண்டாமா? சாவித்திரியிடம் உண்மை அன்பு இருந்தால் இவ்விதம் அசட்டையாக இருக்கத் தோன்றுமா? மேரிக்காக ஜான் எவ்வளவோ தியாகங்கள் செய்யச் சித்தமாக இருக்கிறுனே. உண்மை அன்பு அவ்விதம் அல்லவா இருக்கச் செய்யும்.'

"உன்னைக் கேள்வி கேட்டு வருத்தப்படுத்துவதாக நினைத்துக்கொள்ளாதே. கணேசனுக்கே நீ பாடுவது பிடிக்கவில்லையா? அவரே கூடாது என்று உன்னைக் கட்டுப்படுத்துகிருரா?" என்றுன் ஜம்புநாதன் ஆத்திரத்துடன்.

அவனுடைய பட படப்பு அவளைத் திகைக்க அடித்தது. தனக்காக ஏதோ உணர்ச்சி வசப்பட்டு, அவன் அப்படி இருக்கிறுன் என்பதை அவள் தெரிந்துகொண்டாள். அவனிடம் அவளுக்கு மிகுந்த பரிவு ஏற்பட்டது. ஆனுலும் அவன் அப்படி நினைக்க இடம் கொடுக்கக் கூடாது என்று நிச்சயித்துக் கொண்டாள்.

"இதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளாதே. இதற்கெல்லாம் வருந்தத் தொடங்கிவிட்டால், அப்புறம் வாழ்க்கையில் நிம்மதி ஏது? ஆனுல் நானும் முன்னெல்லாம் சிறு பெண்ணுக இருக்கும்பொழுது இவ்விதந்தான் இருந்தேன். சின்ன விஷயங்களுக்கெல்லாம் மனம் தளர்ந்து அப்பாவையும் சிரமத்திற்கு உள்ளாக்கினேன். இப்பொழுது தெரிந்து போய்விட்டது. வாழ்க்கையில் விட்டுக் கொடுத்து, சமாளித்துக்கொண்டு போவதில்தான் சுகம் இருக்கிறது" என்றுள் சாவித்திரி.

"விட்டுக்கொடுக்கிறது என்கிற நியாயம் ஒரு பக்கத்துக்குத் தாஞ? மனைவிதான் கணவனேடு, சரி செய்துகொண்டு போக வேண்டுமா? அவனுக்குப் பொறுப்பு ஒன்றும் கிடையாதா?" என்றுன் ஜம்புநாதன்.

சாவித்திரி தான் கணேசனிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்வதைத்தான் சொல்கிருள் என்று அவனுக்குத் தோன்றி விட்டது. 'முதலில் அவள் ஒரு மாதிரி தன் விருப்பங்களை நடத்திச் செல்லப் பார்த்திருக்கிருள். அதனுல் கஷ்டப்பட்

டிருக்கிருள். இப்பொழுது ஒரு விதமாகத் தன் ஆசைகளை அடக்கிக்கொண்டு, கணேசனுடைய போக்கில் செல்லத் தெரிந்துகொண்டு விட்டாள். அதனுல் அவள் வாழ்க்கையும் மிருதுவாகச் செல்கிற மாதிரி தோன்றுகிறது' என்று தீர்மானித்துக்கொண்டான்.

"இருவருக்குந்தான் சொல்லுகிறேன்: மனைவி சிலவற்றில் கணவனை அநுசரித்துச் சென்ருல், கணவனும் அவளுகவே அவள் தன் மனப்படி செல்ல ஓர் ஆட்சேபமும் கிளப்பமாட்டான். சில இடங்களில் இவ்வித வேறுபாட்டுக்கே இடம் இல்லாமல் இருவரும் ஒரு மனத்தினராக அமைந்துவிடுகிருர்கள். அது இல்லை என்ருல் இப்படித்தான் ஒருவருக்கொருவர் சரி செய்துகொள்ள வேண்டும்."

'நீ அவ்விதந்தான் கணேசனிடம் நடந்துகொள்கிருய் இல்லையா? உன் விருப்பங்களைத் தியாகஞ் செய்திருப்பதனுலேயே அவர் உன்னிடம் அன்பாக இருக்கிருர். அப்படித்தானே?' என்று நேரிலேயே விஷயத்தை ஒளிவு மறைவு இன்றிக் கேட்டுவிட நினைத்தான் ஐம்புநாதன். அப்பொழுது சாவித்திரி ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும். மாற்றி, மறைக்கப் பார்க்கிருளே, அதுபோல் செய்ய முடியாதல்லவா?

ஆனுல் அப்படி அவன் கேட்கும் முன்னமேயே ஜட்ஜ் வீட்டு மோட்டார் உள்ளே நுழைந்து, வாசலில் வந்து நின்றது. அதில் இருந்து ஜட்ஜ் மனைவியும் அவர்கள் மகள் கமலினியும் இறங்கி உள்ளே வந்தார்கள். சாவித்திரி அவர்களை வரவேற்று, உபசரித்து உட்காரும்படி சொன்னுள்.

"ரேடியோ நிலையத்தில் இருந்து வருகிறீர்களா? கமலினி எப்படித்தான் பாடினுள்! நானே வந்து சொல்ல வேண்டும் என்று இருந்தேன்; நீங்களே வந்துவிட்டீர்கள்" என்ருள்.

"அதுவரைக்கும் அம்மாவுக்குப் பொறுக்குமா மன்னி? அதுதான் நாங்களே வந்துவிட்டோம். என்னை, ஸரஸ்வதி என்று நீ சொன்னுலும் அம்மா ஏற்றுக்கொள்ளத் தயார்! நீ கவலைப்படாமல் என்னை எவ்வளவு உயர்த்தி வைத்து வேண்டுமானுலும் பேசு" என்ருள் கமலினி தாயைப் பரிகசித்துக் கொண்டு.

“நல்ல பெண்ணடி நீ; ‘பங்களாவைத் தாண்டிக்கொண்டு போகிறோமே; உள்ளே நுழைந்துவிட்டுத்தான் போவோம்’ என்று வந்தால் அதற்கு என்ன அர்த்தம் பண்ணுகிறுள் பார்!” என்றுள் சம்பந்தி அம்மாள்.

“அவள் சொல்லட்டுமே மாமி; அதனுல் என்ன? அவள் பாடின பாட்டுக்கு அவனே எவ்வளவு புகழ்ந்தால்தான் போதும்! அதை வேறு ஒருவர் சொல்ல வேண்டுமா? நமக்கே தெரியாதா?” என்றுள் சாவித்திரி.

“உனக்கு நல்ல ஞானம் ஆயிற்றே; நீ என்ன சொல்லுகிறுய் என்பதைக் கேட்க எனக்கு ஆவல்தான். அதனுல்தான் வந்தேன்; அதில் தவறு என்ன?” என்று ஒப்புக்கொண்டாள் சம்பந்தி அம்மாள்.

“எங்கே உன் மாமியாரைக் காணேம்?” என்று கேட்டுக் கொண்டே சுற்றிலும் பார்த்தாள். ஜம்புநாதன் மெதுவாக அவ்விடத்தை விட்டு எழுந்து செல்ல நினைத்தான். அதைக் கவனித்த சாவித்திரி, “ஜம்புநாதா, நீ எங்கும் போக வேண்டாம். இரு; இவர்கள்தான் சரோஜாவின் மாமியாரும் நாத்தனுரும். யாரோ பிரசித்தப் பாடகி பாடுகிறதாக நினைத்து, இத்தனை நேரம் ரேடியோ கேட்டாயே! அவள்தான் இந்த ஸ்ரீமதி கமலினி. மாமி, இவன் எங்கப்பாவின் அம்மாஞ்சி பிள்ளை; திருவானைக்காவில் இருப்பவன்; கிறிஸ்தவக் கல்லூரியில் பி.எஸ்ஸி. படிக்கிறுன்” என்று ஜம்புநாதனை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினுள்.

“உட்காரு! சின்னப்பிள்ளை; உனக்கென்ன சங்கோஜம்?” என்று சொல்லி, “உங்காத்தில் இதற்கு முன் நான் இவனைப் பார்த்ததே இல்லையே” என்று சாவித்திரியைக் கேட்டாள் சம்பந்தி அம்மாள்.

“அவன் வந்திருந்தால் அல்லவா நீங்கள் பார்த்திருக்க முடியும்!” என்ற சாவித்திரி, “அவன் வீட்டார் யாரும் இங்கே அதிகம் வந்ததில்லை. சரோஜாவின் கல்யாணத்திற்குக்கூட, அவன் அப்பாவும் அம்மாவுந்தான் வந்திருந்தார்கள்” என்று சொன்னுள்.

“உன் சித்தியும் சித்தப்பாவுந்தானே! நன்றுக நினைவு

இருக்கிறது. வெகு கல கலப்பு மனுஷ்யர்; வெகு நல்ல மாதிரி" என்று புகழ்ந்தாள் சம்பந்தி அம்மாள்.

அவளைப் பிரசித்தப் பாடகி என்று ஜம்புநாதன் நினைத்த தாகச் சாவித்திரி சொன்னதில், சிறிது வெட்கித் தலை குனிந் திருந்த கமலினிக்கு, இவ்விதம் அவர்கள் ராமசாமி ஐயரையும் விசாலத்தையும்பற்றிச் சொன்னபொழுது, அவர்கள் பெண் சுந்தரியின் நினைவுதான் வந்தது. அண்ணா கல்யாணத் தில் சம்பந்தி வீட்டாரின் அந்தக் குழந்தையை அவ ளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்தப் பெண்ணினுடைய கள்ளங் கபடு அற்ற அழகிய முகமும் புத்தி சாதுரியத்தோடு கூடின அவள் குழந்தைப் பேச்சும்–சரோஜாவின் தமக்கையான பத்மாவின் பெண்களின் வயதிற்கு மேற்பட்ட அறிவோடு கூடின பேச்சுக்களைக் காட்டிலும்–அவளை வசீகரித்திருந்தன. கல்யாணத்தில் சதா அந்தச் சிறுமியைத் தன் கூடவே வைத்துக் கொண்டிருந்தாள் அவள். இப்பொழுது ஜம்புநாதன் அந்தப் பெண்ணின் தமையன் என்று தெரிந்ததும், அவளுக்கு ஜம்பு நாதனிடங்கூடப் பழகின மாதிரி ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. 'சுந்தரி சௌக்கியமா?' என்று கேட்க நினைத்தாள்.

எவ்வளவு புது நாகரிகப் பெண் என்றாலும் ஒரு முறை பார்ப்பதற்குள் அந்நிய வாலிபர்களிடம் பேசத் துணிவு வந்து விடுமா? கண்களை நிமிர்த்திப் பார்த்ததோடுமட்டும் நின்று விட்டது, அவள் செய்கை. ஆனால், அந்தப் பார்வையால் அவனும்-சுந்தரியைப்போலவே-நல்ல வசீகரத் தோற்றம் உள்ள வனாக இருக்கிறான் என்பதை மட்டும் கண்டுகொண்டாள்.

மானின் மருண்ட பார்வையோடு கூடின அவளுடைய கரு விழிகளின் அழகை, தன்னை அவள் நோக்கியபொழுது ஜம்புநாதனும் கவனிக்கத்தான் கவனித்தான். அவள் முகத் திற்கே அந்தக் கண்கள் தனி அழகைக் கொடுத்துக்கொண் டிருந்தன. 'மீனாக்ஷி அம்மாள் அவள் அழகில்லை என்று தூஷித்தாளே, அது சரியா?' என்று நினைத்துப் பார்த்தான் ஜம்புநாதன்.

'அவள் அதிகச் சிவப்பில்லைதான்; ஆனால், அந்த மாநிறத் திற்கு இருந்த காந்தி, சிவப்புக்கும் மேலாகவே பிரகாசமாக

இருந்தது. அத்தங்காளின் செளந்தரியத்துக்கு வேண்டுமானால் இணையாகக் கூற முடியாதே தவிர, சரோஜாவின் அழகுக்கு ஒரு நாளும் குறைந்த தல்ல' என்று நிச்சயித்தான் ஜம்புநாதன். இது விஷயமாக மீனாக்ஷி யம்மாளிடம் தர்க்கம் செய்து கட்சி கட்டவும் அவன் தயார் ஆகிவிட்டான்.

"உன் மாமியார் எங்கே? நீ சொல்லவே இல்லையே!" என்று, ஜம்புநாதன் கமலினி இவர்கள் சிந்தனைகளைக் கலைத்துக்கொண்டு கேட்டாள் சம்பந்தி அம்மாள்.

"உறவினரைப் பார்க்கப் போயிருக்கிறார்" என்று சாவித்திரி சொன்னதற்கு, "கமலினி பாடுகிற சமயம் பார்த்துப் போனாள் ஆக்கும்!" என்றாள் சம்பந்தி யம்மாள்.

"இல்லை, அவசியம் போக வேண்டி இருந்தது, இவரும் ஸீனியர் வீட்டுக்குச் சென்றார்; போகிற வழி" என்று ஏதோ சாவித்திரி காரணம் கூறத் தொடங்கும் முன், "நீ ஒன்றும் மாமியாருக்குப் பரிந்துகொண்டு வர வேண்டாம். அவளுடைய பொருமைக் குணம் எனக்குத் தெரியும். உன்னைப் பாடாமல் அடித்தவள்தானே அவள்; அவள் கிடக்கிறாள்" என்று அலக்ஷ்யமாகச் சொல்லி எழுந்தாள் சம்பந்தி அம்மாள். மீனாக்ஷி யம்மாளை அவள் அவ்விதம் இறக்கிப் பேசினதைக் கேட்க, ஜம்பு நாதனுக்குத் திருப்தியாகவே இருந்தது. அந்த அம்மாள் அதைக் கேட்டுக்கொள்ளப் பக்கத்தில் இல்லையே என்றுதான் குறைப் பட்டான்.

"பிள்ளை நல்ல லக்ஷணமாக இருக்கிறான். முகத்தில் புத்திசாலிக் களை சொட்டுகிறது" என்று சம்பந்தி அம்மாள் கார் ஏறுமுன் ஜம்புநாதனைக் குறித்துச் சாவித்திரியிடம் சொன்னது, ஜம்புநாதன் காதுகளில் விழுந்தது. ஆண்பிள்ளை என்றாலும் அவனுக்கும் அவனுடைய தோற்றத்தைப்பற்றின புகழுரையைக் கேட்கச் சிறிது வெட்கம் உண்டாயிற்று. அவன் புத்திசாலித்தனத்துக்கு வேண்டிய பாராட்டுதலை அவன் வீட்டில் கேட்டுப் பழகியிருக்கிறான். ஆனால் அவனுடைய ரூபத்தைக் குறித்து இதுவரையிலும் யாரும் பேசினதில்லை. முதல் முதல் சம்பந்தி அம்மாளிடம் இருந்துதான் அதைப்பற்றி வெளிப்படையான பாராட்டுதலைக் கேட்கிறான்.

அதில் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது என்றாலும், கூடவே வெட்கமும் உண்டாயிற்று.

## 20

ஜம்புநாதன் அன்று கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாமல் பேச்சுத் தடைப்பட்டுப் போனாலும், 'சாவித்திரியிடம் அன்பும் ஆதரவும் அவள் புக்ககத்தார் காட்டி, நடத்தவில்லை. கணேசனுங்கூட அவளை முற்றும் உணர்ந்து, அவளிடம் ஆசையுடன் இல்லை' என்றும் நிச்சயித்தான்.

சாவித்திரியின் வீட்டுக்கு அடிக்கடி சென்று அங்கே தானைப் பார்த்தும் சாவித்திரியின் பேச்சிலிருந்தும் இவ்விதம் கிரகித்திருந்தான் அவன். ஜான், காதலிக்காக உயிரையும் தியாகம் செய்யச் சித்தமாக இருக்கிறான். 'அப்படி இல்லாவிட்டாலும் சரோஜாவின் கணவனைப்போல்கூடக் கணேசன் அத்தங்காளிடம் அன்பு காண்பிக்க வில்லையே என்று வருத்தங் கொண்டான். நாகரிக தம்பதிகளைப்போல் வெளிப்படையாக ஆசை காண்பிக்காத அவர்களுடைய செய்கைக்கு, அடக்கமே காரணம் என்று முதலில் உயர்ந்த மதிப்புக்கொண் டிருந்த அவனுக்கு, இப்பொழுது அன்பில்லாமையே காரணம் என்று தோன்றத் தொடங்கிவிட்டது. அவளுக்கு இருக்கும் இலக்கிய ஆசைக்கும் அறிவிற்கும், அந்த வீட்டில் ஒரு பாராட்டும் இல்லை. அதனாலேயே பசுபதியும் அவனும் போகும் சமயங்களில் அவர்களோடு பேசுவதில் அவளுக்கு உத்ஸாகம் ஏற்படுகிறது. இலக்கியப் பற்றுகொண்டவர்கள், தங்களுக்குள்ளாகவே படித்ததைச் சிந்தித்து மகிழ்வதோடு, பிறரிடம் தாங்கள் ரசித்து இன்புற்ற விஷயங்களை அளவளாவுவதிலும் ஆசை கொள்ளுகிறார்கள். அதற்கு வழி இல்லாமல்தான் அத்தங்காள் கஷ்டப்படுகிறாள்.

இவர்கள் சாவித்திரியைப் பார்க்கவே வருபவர்கள் என்று இப்பொழுதெல்லாம் அவர்கள் வீட்டில் இவர்களை வேறு யாரும் கவனிப்பதுகூட இல்லை. பல சமயங்களில் சாவித்திரியுடன் மட்டும் அவர்கள் பேசிவிட்டுத் திரும்பும்படியும் ஆகியிருக்கிறது.

சிற்சில சமயங்களில் கணேசன் இவர்கள் பேச்சின் மத்தியில் வர நேர்ந்தால், 'உங்களுக்காக ஓர் அபிப்பிராயமும் இல்லா விட்டாலும் சாவித்திரி தன்னுடைய எண்ணங்களை உங்க ளிடம் உறை ஏற்றுகிருள் ஆக்கும்' என்று பரிகசிப்பார். அவ ருக்குக் கச்சேரி வேலைகள் அதிகமாக இருந்து அலுத்திருந் தாலோ, ஒரு வார்த்தையும் பேசாது மௌனமாக இருந்து, அவர்கள் பேச்சுக்குத் தடை போட்டுவிடுவார். ஒருவர் கலந்து கொள்ளாமல் இருக்கும்பொழுது அவர்கள் எதிரில் சம்பாஷிப் பது சாத்தியமா? எவ்வளவு ஸ்வாரஸ்யமான பேச்சாலும் தாகுகவே நின்றுபோகும்.

இப்படி எல்லாம் சாவித்திரியின் வாழ்க்கையில் மனம் வருந்தப் பல காரணங்கள் இருந்தன. பணமும் காசும் அவளைச் சுகத்தில் வைத்துவிடவில்லை, என்று தெரிந்தது. அதை மாற்றி அமைப்பது எப்படி? அதற்குத்தான் ஜம்புநாதனுக்கு வழி புலப்படவில்லை.

அவளுடைய உயர்வைக் கணேசன் நன்கு உணரும்படி செய்து அவள் மனம் கோணுமல் நடக்கும்படியும் செய்ய வேண்டும் என்று அவன் நினைத்தான். 'அவள் எல்லாப் பெண் களையும் போலவா? அவளிடம் தனி அன்பும் தனி மரியாதையும் காட்ட வேண்டாமா? ஜான் சாதாரணப் பெண்ணுன மேரியைத் தன் உயிருக்கும் மேலாகவே நேசிக்கிறதாகச் சொல்லுகிருன். அத்தங்காளைக் கணேசன் அந்த வகையில் நேசிக்க வேண் டாமா? புத்தகங்களில் வரும் கதாநாயகியைப்போல் காதலிக் கப்பட வேண்டியவள் அல்லவா அவள்! அவளுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்க வேண்டாமா கணேசன்' என்கிறது அவனுக்கு.

பசுபதியிடம் இது விஷயமாகச் சில வார்த்தைகள் சொன்ன போது, "கணவன் மனைவி விஷயங்களில் பிறர் தலையிடுவது சரியல்ல" என்று சொல்லிவிட்டான் அவன். ஆகையால் கணேசன் சாவித்திரியின் உயர்வை அறியும்படி செய்ய ஒரு வழியும் இல்லை என்று தோன்றிற்று. ஜம்புநாதன் ஆத்திரப் பட்டும் அவளுக்காக ஒன்றும் செய்ய முடியவில்லை.

அவர்களுக்கு மைக்கல்மஸ் ஸு க்காகக் கலாசாலை இரண்டு

வாரம் முடிஞர்கள். பசுபதியும் ஜம்புநாதனும் ஊருக்குச் சென்று வர நிச்சயித்தார்கள். ஜம்புநாதன் வீட்டார் அவனைப் பார்க்க மிகுந்த ஆவலோடு இருந்தார்கள். ஆகையால் அவன் கட்டாயம் சென்றே தீர வேண்டும்.

அவர்கள் அதனபடி ஊருக்குப் புறப்படும் அன்று, சாவித்திரியிடம் சொல்லிக்கொள்ள அவள் வீட்டுக்குப் போஞர்கள். அவர்கள் பங்களாவை அடைந்தபொழுது, வாசலில் டாக்டருடைய மோட்டார் நிற்பதைக் கண்டதும் யாருக்கு உடம்பு அசௌகரியமோ என்கிற கவலை எழுந்தது அவர்களுக்கு. சரோஜாவுக்குத்தான் உடல் சுகம் இல்லை என்பது அவர்கள் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் தெரிய வந்தது. சரோஜா மாடி அறையில் படுத்துக்கொண்டிருந்தாள். டாக்டர் அவளைப் பார்த்துவிட்டுத் திரும்பக் காருக்கு வந்துகொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து மீஞக்ஷியம்மாள், "ஒன்றும் இல்லையா டாக்டர்? எனக்குக் கவலையாக இருக்கே!" என்று கேட்டுக்கொண்டே வந்தாள். "ஒன்றும் இல்லை அம்மா! இது சகஜமாக இருக்கிறதுதான்" என்று டாக்டர் அவளுக்குத் தென்பு சொன்னதற்கு, "அதற்கில்லை; ஒரே மட்டில் பலவீனம் வந்துவிடாதா?" என்று அவர் சொல்லும் சமாதானத்தை ஏற்காமல் ஏதோ கேட்டுக்கொண்டு வண்டி வரைக்கும் அவருடன் சென்று திரும்பிஞள் அந்த அம்மாள்.

'நிஜமாகவே சரோஜாவுக்குக் கவலைக்கு இடமான வியாதி வந்துவிட்டதா என்ன?' என்று ஜம்புநாதன் நினைத்தான். பிறகு அவர்களுக்கு விஷயம் தெரிந்தபொழுது, 'ஏற்கனவே துர்க்குணி, அதிலும் கர்ப்பிணி' என்று பாட்டி சொல்லும் பழமொழியின் பொருத்தந்தான் அவன் நினைவுக்கு வந்தது. சரோஜாவுக்கு மசக்கை வாயிலெடுப்புக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது; அதற்குத்தான் இவ்வளவும். மீஞக்ஷியம்மாள், 'இவ்விதம் நன்னீர் தக்காமல் இருந்தால் பெண் பலவீனத்திலேயே இறந்துவிடுவாள்!' என்று நிச்சயித்துவிட்டாள். 'தன் பெண்ணுக்கு விபரீதமாக உடம்புக்கு வந்துவிட்டது!' என்ருள். உலகம முழுதும் இவ்விதந்தானே விருத்தி அடைந்திருக்கிறது. அவள்கூட இதுமாதிரி சிரமங்களை அநுபவிக்கவில்லையா?

அவைகள் அவளுக்கு மறந்தே போயிற்று. சகஜம் என்பதை விட்டு,சரோஜாவின் நிலைமையே தனி என்று நினைத்துக் கவலைப் பட்டாள். ஊரில் பெண்களைப் பெற்றவர்கள் எல்லாரும் பொறுமைப்படும்படி, அவள் ஹைகோர்ட் நீதிபதியின் மக னுக்கு வாழ்க்கைப்பட் டிருக்கிருள். விவாகமான மறு வருடமே கர்ப்பம் தரித்திருக்கிருள் என்று தெரிந்தால், 'எல்லோருக்கும் பொறுமை மேலும் மண்டிப் போகாதா? அவ்வளவு பேருடைய அசூயையும் ஒன்று சேர்ந்து, பெண்ணை ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டுமே!' என்பது அவளுக்கு.

"எல்லாம் சரியாகி விடும் அம்மா" என்று சாவித்திரி சொன்னதை அவள் காதில் வாங்கிக்கொள்ள வில்லை. "சாவித் திரிக்கு என்ன அநுபவம்? அவள் பிள்ளை பெற்றிருக்கிருளா? அவள் எதைக் கண்டாள்?" என்றுள் அவள்.

"சாவித்திரி! எனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு தான் இது விஷயம் உனக்கும் தெரியும். ஆகையால் இதில் நீ பேசுவதற்கு இல்லை" என்று கணேசன் பாதி பரிகாசமும் பாதி உண்மையும் கலந்து சொன்னது, சாவித்திரியை மிகுந்த வருத் தத்திற்கு உள்ளாக்கிற்று. அதனுல் ஜம்புநாதனையும் பசுபதி யையும் பார்த்த பிறகுகூட, அவளுக்குச் சந்தோஷம் ஏற்பட வில்லை. வழக்கம்போல், அவர்களைக் காண்பதற்குள் அவர் களை வரவேற்று, உத்ஸாகமாகப் பேச்சை ஆரம்பிக்க வில்லை. அவள் அவ்விதம் உறங்கி இருந்தது, அவர்களையும் கல கலப் பின்றிச் சகஜமாயிருப்பதற்கு இல்லாமல் செய்தது. முதல் முதல் அவ்விடத்திற்கு வந்ததில் இருந்து, இவ்வளவு நாளாக அவர்கள் பல முறை வந்து போன பொழுது, ஒரு தடவையும் இது மாதிரி தாங்கள் அவசியம் இல்லாத இடத்திற்கு வந்து விட்டதாக நினைக்கும்படி இருந்ததில்லை. தங்கள் சொந்த இடத் திற்கும் மேலான சுவாதீனத்துடன், யார் என்ன நினைக்கிருர் கள் என்கிற கவலை அற்று, அவர்கள் வந்து போயிருக்கிருர்கள். சாவித்திரி அன்பும் ஆதரவும் காட்டி வரவேற்பதில், ஒவ் வொரு தடவை வந்து போகும்பொழுதும், ஏதோ நல்ல காரி யம் செய்துவிட்டுப் போகிறதுபோல் தங்களிடமே திருப்தி ஏற் படுகிறது உண்டு.

அந்த வீட்டில் மற்றவர்கள் செய்யும் அலக்ஷ்யத்தையும் அவர்கள் ஒரு பொருட்டாக நினைத்ததில்லை. தாங்கள் வரும்பொழுது மீனாக்ஷியம்மாள், தங்களைப் பாராமலே கார் ஏறிச் சென்றது பற்றியும், வெறும் விளையாட்டுப் பேச்சாகவே சுந்தரேசையர், 'சாவித்திரி வெளியே போயிருக்கிறாளே!' என்று இவர்கள் சாவித்திரிக்காகவே வருபவர்கள் என்று சொல்லிக் காண்பித்ததையும், இன்னும் இது போன்ற அவர்கள் செய்கைகளையும் இவர்கள் பேசிக்கொள்வார்கள். அதற்காக ஒருபொழுதும் சாவித்திரியின் வீட்டுக்குச் செல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றினதில்லை. இன்று சாவித்திரியே உறங்கினமாதிரி இருந்தது அவர்களை வேதனைக்கு உள்ளாக்கியது. அவ்விடம் விட்டுச் சீக்கிரமே போய்விட வேண்டும்போல் இருந்தது. அவர்கள் இரவு பிரயாணப்பட வேண்டியவர்கள்; ஆகையால் சீக்கிரமே விடை பெற்றுக்கொண்டு கிளம்பும்படியாகவும் இருந்தது.

'ஆனால், தான் புறப்பட்டுப் போகும்போது இவ்விதம், அத்தங்காள் அதிகம் உறங்கி இருக்கிறாளே! தான் அவளுக்காக ஒன்றும் செய்வதற்கு இல்லாமல் கிளம்பும்படி இருக்கிறதே!' என்று ஜம்புநாதன் மனத்தாங்கல் கொண்டான்.

"நான் வரட்டுமா அத்தங்கா! ஊரில் அப்பா எல்லாருக்கும் ஏதாவது சமாசாரம் இருக்கிறதா? இன்னும் 15 நாட்கள் கழித்துத்தான் நான் உன்னை வந்து பார்க்க முடியும்" என்று அவன் வருத்தத்தோடு கூறி விடை பெற்றுக்கொண்ட போது, "நானும் உன்னுடன் வருகிறேன், ஜம்புநாதா. சித்தப்பாவைப் பார்த்து எந்தக் காலமோ ஆகிறது; உன் தங்கைகள் எல்லாருடனுந்தான் இருந்துவிட்டு வருகிறேனே" என்றாள் சாவித்திரி.

அவளுடைய இந்தச் சொல் அவனை ஒரேமட்டில் திகைக்க அடித்தது. அவள் அவ்விதம் விரும்பக் கூடும் என்பதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவள் மிகுந்த மன வருத்தத்தோடு இருக்கும்போது, அவளைத் தேற்றுவதற்கு இல்லாமல் விட்டுச் செல்வது சரியா? என்று சந்தேகித்து, கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இது மாதிரி அவளைத் தன்னுடன் அழைத்துச்

செல்ல முடியும் என்று ஏற்பட்டதில் அவன் சந்தோஷத்திற்குக் கேட்கவேண்டுமா?'அவ்விடம் விட்டே அவளை வேறு இடத்திற்கு அழைத்துச் சென்ருல் தானுகவே அவள் மனத்திற்குச் சமா தானம் ஏற்பட்டுவிடும்; அதோடு தங்கள் வீட்டில் அவன் தந்தை அவளுக்கு மிகவும் பிரியமான பந்து. அவரோடு சில தினங்கள் இருப்பது அவளுக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும். மேலும், அவளுடைய புக்ககத்து ஜனங்களுக்கும்–அவள் சில நாளாவது தங்களோடு இல்லாமல் இருந்தால்-அவளது அருமை புலப்படும்' என்றெல்லாம் நினைத்தான்.

ஆனால் கூடவே அவள் உண்மையாகத்தான் அவ்விதம் சொல்லுகிருளா என்ற சந்தேகமும் அவனுக்கு ஏற்பட்டது. கணேசனிடமும் அவள் அதைக் கூறின பிறகுதான், அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. திடீரென்று அவளுக்கு இந்த எண்ணம் எங்கிருந்து உண்டாயிற்று என்று கணேசனும் அதிசயித்துத் தான் போனுர். அவரும் தம் காதுகளை நம்பவில்லைபோலத் தான் தோன்றிற்று, அவர் அவளைப் பார்த்த பார்வையில் இருந்து.

"ஏன்? நான் போய்வரக் கூடாதா? திருவானைக்காவுக்கு நான் போனதே இல்லை. சித்தப்பாவின் வீடு எப்படி இருக்கும் என்பதுகூட எனக்குத் தெரியாது. அவருடைய மற்றக் குழந் தைகளையும் நான் பார்த்ததில்லை. பாட்டி வயதானவள்; அவளை நான் போய்ப் பார்க்கவில்லை என்ருல் அவளால் வர முடியுமா? அவள் இன்னும் எவ்வளவு நாள் உயிரோடு இருக் கிருளோ? ஜம்புநாதனேடு இப்பொழுது போவதில் துணையும் ஆயிற்று. உங்களை உங்கள் வேலையின் நடுவில், அழைத்துப் போகும்படி தொந்தரவு செய்யவும் வேண்டாம்."

இப்படிச் சாவித்திரி, பல காரணங்களை அடுக்கின பொழுது, கணேசன் அவளைத் தடுத்து ஒன்றும் சொல்லவில்லை. அவர் ஏதாவது ஆட்சேபங்கள் கிளப்பியிருந்தால், ஜம்புநாதன் சும்மா இருப்பதாக இல்லை. அவைகளை எதிர்த்து, அவள் இஷ் டப்படி அழைத்துச் செல்ல உத்தேசித்திருந்தான். அவள் விருப் பத்தை நிறைவேற்ற, ஒரு சந்தர்ப்பத்தை அவளாகக் கொடுத் திருக்கும்பொழுது அவன் அதை நழுவ விட்டுவிடுவானு!

ஆனால், இவனுடைய தலையீட்டுக்கு அவசியமே இல்லாமல் போயிற்று. கணேசன் இவ்வளவு நாளும் இல்லாமல் தோன்றிய அவள் விருப்பத்துக்குத்தான் ஆச்சரியப் பட்டானே தவிர, ஆட்சேபம் எதுவும் கிளப்பவில்லை. அவளுடைய விருப்பம் திடீரென்று ஏற்பட்டிருக்கிறது என்பது தவிர, அதில் பிசகு ஒன்றும் இல்லை அல்லவா?

"சரோஜா வந்திருக்கிறாளே, அவளுக்கு உடம்பு குணம் இல்லையே!" என்று அவன் ஏதோ சொன்னதற்கு, "அவளுக்கு நான் என்ன செய்கிறேன்? அப்படியும் இது விஷயங்கள் எனக்கு என்ன தெரியும்?" என்று அவள் சொன்னதில் இருந்து அவள் மனக் குறையின் காரணத்தை அவர் ஊகித்துக்கொண் டிருக்க வேண்டும். அவள் சமாதானம் அடைய அவள் இஷ்டம்போல் நடக்கட்டும் என்று அவர் விட்டுவிட்டார். ரயிலுக்கு இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகள் கிடைப்பது கஷ்டம்; ஆகையால் ஜம்புநாதனுடைய பிரயாணத்தை மறு நாளைக்கு ஒத்திப் போட்டுக்கொள்ள மட்டும் சொல்லிவிட்டு அவள் சென்றுவர அநுமதி அளித்துவிட்டான். பிறகு மீனாக்ஷி யம்மாளிடமும் சுந்தரேசையரிடமும் சொல்லிக்கொண்டு கிளம் புவது அவள் பொறுப்பு.

அவளும் அவைகளுக்கு அவருடைய உதவியை எதிர் பார்க்கவில்லை. அந்த வீட்டில் அவள் சுதந்தரத்தைத் தடுத்து, யாரும் எதுவும் சொல்வதில்லை; அவள் இஷ்டம்போல் செய்ய யாதொரு தடையும் இருக்கவில்லை.

அவளை ஒரு பொருட்டாக மதியாமல் இருந்துதானே அவர் கள் துன்புறுத்துகிறார்கள். அதுதான் சாவித்திரியின் தீராக் குறை என்று, பிறகு ஜம்புநாதன் ரயிலில் அவளோடு செல்லும் பொழுது அவளிடமிருந்து தெரிந்துகொண்டான். மேல்நாட்டுப் புஷ்பங்களின் கண்ணைக் கவரும் வெளிச் சிறப்பு மட்டும் அல்ல; நமது நாட்டு மலர்களுடைய வாசனையான குணச் சிறப்பும் அவளுக்கு இருக்கிறது. ரோஜா மலரைப்போல் இரண்டும் பொருந்தி உயர்வாக இருக்கிறாள். அப்படி இருந்தும் மதிப்பார் அற்று, காட்டிலே தானே மலர்ந்து வாடிப் போகும் மலரென

அவள் கொண்டாடுவாரற்று இருக்கிறாள். இதைவிட மனத்தைத் துன்புறுத்தக் கூடியது வேறு இருக்கிறதா?

"அப்பா இருக்கும்போதே என்னிடம் குற்றம் கண்டு பிடித்து, தூஷித்துக்கொண் டிருந்தார்கள். இவர்களைத் தவிர எனக்கு மனிதர்கள் இல்லை என்று ஆன பிறகு என்னை அவர்கள் மதிப்பதே இல்லை. தூஷணைகளைக்கூடப் பொறுக்கலாம். அலக்ஷ்யத்தைப் பொறுக்க முடியுமா? எனக்கு அந்த ஸ்திதிதான் கிடைத்திருக்கிறது. மனிதர்களுடைய மனசு தனக்கு என்று ஒரு நியாயமும் பிறருக்கு என்று ஒரு நியாயமும் நினைக்கிறது. கமலினியின் அம்மா, பெண்ணிடம் பட்சபாதம் காண்பிப்பதாகக் குற்றம் கூறுகிறாரே என் மாமியார்; இவருக்கல்லவா அப்படி இருக்கிறது. இனி சரோஜா பிள்ளை பெறுகிறவரையிலும் வேறு ஒருவர் வீட்டில் இருப்பதற்கு இல்லை. அவளுக்கு அவ்வளவு நடக்கப்போகிறது. ஒன்று தெரிந்து போயிற்று. எதை யெல்லாம் பிறரிடம் குற்றமாக ஏற்றிப் பேசுகிறார்களோ அவைகளில்தான் இவர்களுக்கும் ஆசை. சமயம் நேரும்பொழுது அவைகளை இவர்கள் அதிகமாகவே செய்வார்கள். இவர்களுக்கு அதில் இருக்கும் ஆசையால்தான் பிறரிடம் அந்தக் குற்றங்கள்கூடக் கண்ணில் படுகின்றன" என்று சாவித்திரி ஜம்புநாதனிடம் மாமியார்பேரில் இருக்கும் தன் வெறுப்பைத் தெரிவித்துப் பேசினாள்.

ஏதோ அவள் மனம் நொந்து வருந்தும்பொழுது அவளை அவ்விடம் விட்டு அழைத்துப்போகிறோமே, என்கிற ஆசுவாசத்தில் அவள் சொன்னவைகளைக் கேட்டு வந்தான் ஜம்புநாதன். விலை மதிப்பற்ற மாணிக்கத்தை, உயர்ந்த பத்தரை மாற்றுத் தங்கத்தில் பதிப்பதற்குப் பதிலாகக் குப்பை மேட்டில் எறிந்ததற்குச் சமமாக, சாவித்திரியை இந்த மனிதர்களிடம் கொண்டு போய்த் தள்ளி ஆகிவிட்டது. இதற்கு விதியை நொந்துகொள்வதைத் தவிர, யாரைக் குறை கூற முடியும்? அன்பு நிறைந்த அவளுடைய சொந்தத் தந்தையின் செய்கை யல்லவா அது!"

இவ்விதம் சாவித்திரிக்காக அவளுடைய சிரமங்களைப் பூதக் கண்ணாடி கொண்டு நோக்கி, பெரிது செய்து, வருந்தின ஜம்புநாதனுக்கு, 'சரோஜாவின் இப்போதைய நிலைமையில் சாவித்

திரிக்கு ஏற்பட்டிருக்கும் ஒருவகைப் பொறுமைதான் அவளுடைய இந்த அதிக வெறுப்பிற்கும் வருத்தத்திற்கும் காரணமாக இருக்குமோ?' என்று சிந்திக்கத் தோன்றவில்லை. பொறுமை போன்ற தாழ்மையான குணத்தை அவன் அத்தங்காளிடம் எதிர்பார்ப்பானா? அவளை ஒப்புயர்வற்ற ரத்தினமாக அல்லவா அவன் கருதியிருக்கிறான்.

## 21

ஜம்புநாதன் திருச்சி போய்ச் சேருகிற வரையில் சாவித்திரியின் சிரமங்களைப்பற்றி நினைத்து வருந்தினானே தவிர, அவளுக்குத் தங்கள் வீட்டில் எப்படி இருக்கும், என்பதை எண்ணிப் பார்க்க மறந்தே போனான். அவள், சகல நாகரிக சுக போகங்களும் நிறைந்த தன் மாளிகையில் வசித்துவிட்டு, அவைகள் ஒன்றுகூட இல்லாத, தங்கள் வீட்டில் எப்படி வசிப்பாள்? இந்த எண்ணம் பிறகுதான் அவனுக்கும் உதயம் ஆயிற்று. அடாடா, இவைகளை நினைத்துப் பார்க்காமல், அவன் அவளுக்கு ஏதோ செய்வதாக நினைத்து, சந்தோஷப்பட்டு, அழைத்து வந்துவிட்டானே! இவைகளைச் சிந்தித்து இருந்தானானால் அவள் வராமல்கூடத் தடுத்திருப்பான். முக்காலும் நாட்டுப்புறத்தின் அம்சங்களே அதிகம் பொருந்தி யிருக்கும் அந்த இடத்தில் அவளுக்குச் சௌகரியம் என்பது லவலேசமும் இருப்பதற்கு நியாயம் இல்லை. திருச்சியின் ஒரு பாகமாகத் திருவானைக்கா இருந்தாலும், பட்டணங்களின் லக்ஷணம் அதற்குச் சிறிதும் ஏற்படவில்லை. மின்சார சக்தி கொண்டு பிரகாசமாக எரியும் விளக்குகள்கூட, புழுதியோடு கூடின சிறு தெருக்களுடனும், நெருங்கி நிற்கும் சிறு வீடுகளுடனும் இருக்கும் அந்தக் கிராமத் தோற்றத்தைத்தான் எடுத்துக்காட்ட உதவின. அவ்விடத்திற்கே பெரிய வீடாகக் கருதப்பட்ட அவன் வீட்டை, சாவித்திரியின் பங்களாவோடு ஒப்பிடும் பொழுது எவ்வளவு சிறியது அது! அந்தப் பங்களாவின் விஸ்தீரணத்தில் நாலில் ஒரு பங்காவது இருக்குமா? அவள் வீட்டின் பளபளத்த கண்ணாடிபோன்ற தரைக்

கும், அன்றுடம் சாணம் போட்டு மெழுகி, தூசு யடிந்திருக்கும் செங்கல் தரைக்கும், வெறும் சுண்ணும்புச் சுவருக்கும்......அட, இவைகளையெல்லாம் அவன் நினைக்காமல் விட்டுவிட்டானே. இப்பொழுது அவைகள் நினைவில் வந்து, சாவித்திரியைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போவதில் அவமானமே அடையச் செய்தது. அதோடு அவள் சௌக்கியத்திற்குக் குறைவு வருமே என்கிற எண்ணம், வருத்தத்தை வேறு உண்டு பண்ணிற்று. நிற்கும் இடமெல்லாம், உட்காரவும் சாய்ந்துகொள்ளவும், நாற்காலிகளுக்கும் சோபாக்களுக்கும் அவன் எங்கே போகிறது. அத்தங்காளுக்குத் தரையில் உட்கார்ந்து பழக்கமே இல்லையே. இவ்விதமெல்லாம் அவன் கவலைப்பட்டுப்போனுன். ஆனுல், அவர்கள் ஊரை வந்து அடைந்த பிறகு, அவனுடைய இந்தச் சிந்தனைகளினுல் பிரயோஜனம் என்ன?

அவர்கள் முதலில் உத்தேசித்தபடி, முதல் நாளே பசுபதி மட்டும் சென்னையை விட்டுப் புறப்பட்டுப் போய் ராமசாமி ஐயரிடம், ஜம்புநாதன் சாவித்திரியுடன் மறு நாள் வரப்போகும் சமாசாரத்தைத் தெரிவித்திருந்தான். அதற்காகவேதான் அவன், தன்னுடைய பிரயாணத்தையும் மறு நாளைக்கென்று மாற்றிக்கொள்ள வில்லை. ராமசாமி ஐயருக்கு, ஜம்புநாதன் அன்று வராத காரணம் தெரிய வேண்டும்; இல்லாவிட்டால் அவரும் அவர் வீட்டவர்களும் விசாரப்பட்டுப் போவார்கள். மறு நாள் அவன் சாவித்திரியை அழைத்து வரப்போவதும் தெரிய வேண்டும். இரண்டையும் உத்தேசித்து, ஜம்புநாதனையும் கலந்துகொண்டு, அவர்கள் போட்ட திட்டப்படி, அவன் மட்டும் முதல் நாளே புறப்பட்டுப் போய்ச் சேர்ந்திருந்தான்.

அத்தி பூத்தாற்போல் சாவித்திரி வந்ததற்கு ஜம்புநாதன் வீட்டில், அவன் தந்தையும் மற்றவர்களும் காண்பித்த சந்தோஷத்திற்கு அளவு இருந்ததாகத் தெரியவில்லை. "வா, அம்மா, சாவித்திரி!" என்று அவன் தந்தை அவளை வரவேற்றபொழுது அவர் குரலில் தொனித்த பரிவு, பார்வையில் இருந்த அன்பு, இவை சொல்லுக்கு அடங்கக் கூடியனவாக இல்லை. அவர்

உள்ளத்தில் இருந்த அன்பு முழுதும் முகத்தில் பிரகாசித்தது.

"என்னம்மா சாவித்திரி, உனக்கு வரணும் என்று தோணித்தே! உன்னைப் பார்த்து எந்தக்காலம் ஆயிற்று!" என்று சாவித்திரியைத் தடவிக் கொடுத்து வரவேற்றாள் பாட்டி. அவள் கண்களில் ஆனந்த பாஷ்பந்தான் ததும்பி நின்றது.

அத்தையும் விசாலமும், "வா, வா!" என்று அன்பும் ஆதரவும் காட்டி வரவேற்றார்கள். பெண்கள் எல்லாம் அவர்களுக்கிருந்த ஆவலிலும் ஆசையிலும் வாசலுக்கே வந்து நின்றார்கள். சுந்தரி, அத்தங்காளை இதற்கு முன் பார்த்திருக்கிறாள். அதோடு கடைக்குட்டி என்கிற செல்லம் ஆகையால் அவளுக்கு அவ்வளவாகச் சங்கோசம் கிடையாது. ஆகையால் அவள் தான் ஓடி வந்து அத்தங்காளின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"என் அருமைச் சுந்தரியா?" என்று சாவித்திரியும் அவளைத் தழுவி, தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டாள். அத்திம்பேர் சாவித்திரியை அதிகம் பார்த்ததில்லை; இருந்தாலும் பெரியவர் ஆனதால் "வா அம்மா, சௌக்கியமா?" என்று வரவேற்றார். வேலைக்காரன், வேலைக்காரி, இவர்கள்கூடப் பட்டணத்தில் இருந்து வந்த அம்மாவைப் புன்சிரிப்போடு நின்று பார்த்துவிட்டுத்தான் பிறகு தங்கள் வேலைக்குச் சென்றார்கள். வீடே சாவித்திரியை ஒரு வகை உத்ஸாகத்துடனும் அன்புடனும் வரவேற்றது. ஜம்புநாதனின் வரவிற்கு இருக்க வேண்டிய குதூகலமும் சாவித்திரியின் வரவினால் பிரித்து அறிய முடியாதபடி அதில் கலந்துகொண்டது.

இப்படி அன்பானது பிரவாகமாகப் பெருகி ஓடும் பொழுது, சாவித்திரி அதில் அமிழ்ந்து திளைக்காமல் என்ன செய்வாள்? ஜம்புநாதன் நினைத்துப் பயந்தபடி, அவள் அந்த வீட்டின் அசௌகரியத்தை உணர்ந்ததாகவே தெரியவில்லை. அதிலேயே பிறந்து வளர்ந்தவள்போல வெகு சாதாரணமாகவே நடந்துகொண்டாள். அவளுக்கென்று அவர்கள் ஏதாவது பிரத்தியேகமாகச் செய்ய முற்படும் பொழுதும், ஜம்புநாதன் ஏதாவது அவ்விடத்து அசௌகர்யத்தை எடுத்துச் சொல்லும்பொழுதும், 'இதனால் நிஜ

மான குறைவும் சிரமும் இருக்கிறது என்று சொல்லு கிருய்? எனக்கு அப்படித் தோன்றவில்லை. எல்லாவற்றிற்கும் ஈடு செய்ய உண்மை அன்பு இருக்கிறதே இவ்விடத்தில்!' என்றுதான் சொல்லுவாள். அண்டை அயலாருங் கூட, சாவித்திரி அவ்வளவு சகஜமாக இருந்ததைக் கண்டு ஆச்சரி யந்தான் கொண்டார்கள். பட்டணங்களில் வசிப்பவர்கள் கிராம வாழ்க்கையை இகழ்ந்து, வெறுப்பது சகஜமான செய்கை அல்லவா?

தன்னுடைய வரவு, ராமசாமி ஐயருக்குச் சற்று அதிச யத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை முகத் தோற்றத்தில் இருந்து கண்டுகொண்ட சாவித்திரி, "சித்தப்பா, எனக்கு இதற்கு முன்பே தோன்ருமல் போய்விட்டது. நான் அடிக்கடி இங்கே வந்து போய்க்கொண் டிருந்திருக்க வேண்டும். ஜம்பு நாதன் அங்கே வந்த பிறகுதான் எனக்கு இந்த எண்ணமே உண் டாயிற்று" என்று, இவ்வளவு நாளும் வராமல் இருந்ததற்குப் பச்சாத்தாபப்படுகிறவளாகப் பேசிஞள் அவள். தான் ஏதோ மனக் குறையில் புறப்பட்டு வந்திருககிறதாக அவர் நினைத்துக் கொண்டுவிடக் கூடாது என்பது அவள் எண்ணம். சரோஜா விற்கு இவ்வளவு நாளுக்கும மேலாக நடக்கப்போகிற சலு கையைப பாாக்காமல்தான அவள் வந்தாள் என்பதைத் தனக் குத்தானே கூட ஏற்க விரும்பவிலலை அவள் உள்ளம்? ஏதோ பிடித்த பேச்சாகப் பேசி, மன வெறுப்பை மாற்றிக்கொள்ள, ஜம்புநாதனும் இரணடு வாரத்திற்கு அவ்விடம் வரப்போவ தில்லை எனற விஷயம அவளைச் சடுதியில் இந்தத் தீர்மானத் திற்கு வரச் செய்திருந்தது. சரோஜா தனக்கு எவ்வளவோ சிறிய வள், அவளுக்குக் குழந்தை பிறக்கப்போகிறது. அதற்காக அவ ளுடைய அப்பா, அம்மா மட்டும் அல்ல, கணேசனும் சேர்நது பெரிது படுத்துகிருர்கள். இந்த எண்ணம் அவள் மன வெறுப் புக்குக் காரணமாக இருந்தது. அவளுக்கும் ஒரு குழந்தை பிறக்க வேண்டும் என்று அவர்கள் யாரும் நினைக்கவில்லையே! அவளிடத்தில் அதை ஒரு குறையாக ஏற்றி வேண்டுமாஞல் பேசுவார்கள்போல் இருநதது. எந்த ஸ்திரீதான் மலடி என்ப தாக ஏச்சுக் கேட்க மனம் பொறுப்பாள்?

ஆனால், சாவித்திரி தான் வந்ததற்குக் காரணம் அது என்று நினைக்கவில்லை. ஜம்புநாதனுடன் பழகிய பிறகு, அவன் தங்கைகளையும் பார்க்க ஆசை ஏற்பட்டுவிட்டது. மற்றப்படி அத்தை, பாட்டி இவர்களும் அவள் இருக்கும் இடம் வருகிறவர்கள் இல்லை. அதனால் அவர்களையும் வந்து பார்க்க வேண்டும். சித்தப்பாவுக்கும் சித்திக்கும்—அவர்கள் சொல்லிக்கொள்ளா விட்டாலும்—அவளைச் சில தினங்களாவது தங்களிடம் வைத்துக்கொள்ள ஆசை இராதா? அங்கே இருக்கும் இட செளகரியம், தங்களிடத்தில் இல்லை என்பதாலேயே அவர்கள் அவளை இதுவரைக்கும் வற்புறுத்தி அழைக்கவில்லை. அவள் இவ்வளவு நாளும் அதைப் புரிந்து கொள்ளாமலே இருந்தது பிசகு, என்று தன் வருகைக்குக் காரணத்தை அவள் தனக்கே நிச்சயமாகும்படி கூறிக்கொண்டாள்.

அவர்களைப்பற்றி அவள் நினைத்த வரையிலும் முற்றும் சரியே. அவளுக்கு இங்கே செளகரியக் குறைவு என்று நினைத்துத்தான் அவர்கள் இவ்வளவு நாளும் வருந்தி அழைக்காமல் இருந்தார்கள். இப்பொழுது அவளாக வந்ததும் அவர்கள் கொண்ட சந்தோஷம் கொஞ்ச நஞ்சம் அல்ல.

சாவித்திரி வந்த சில தினங்களில் அவர்கள் எல்லோருடனும் வெகு நெருங்கிப் பழகிக்கொண்டாள். அகிலாண்டமும் அவள் தங்கைகளும் அத்தங்காளைச் சதா சுற்றிக்கொண்டே இருந்தார்கள். சாவித்திரி அந்தச் சிறுமிகள் ஒவ்வொருவரிடமும் ஒரு விசேஷத்தைக் கண்டுபிடித்துக் கொண்டாடினாள். 'அகிலாண்டம் சிறியவள் ஆனாலும், சடுதியில் விஷயங்களைக் கிரகித்துக்கொள்கிறாள். எல்லாம் தெரிந்து பேசித் தனக்குத் தோழிபோல் இருககிறாளே!' என்று அதிசயித்தாள். சங்கரியின் அடக்கத்தையும், ஸ்ரீமதியின் நேர்மைப் புத்தியையும், சுந்தரியின் சமர்த்தையும் அவளால் புகழாமல் இருக்க முடியவில்லை.

அத்தங்காள் இவர்கள் மத்தியில் வெகு சந்தோஷமாக இருப்பதைக் காண ஜம்புநாதனுக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டது. அந்த மட்டும் தனக்குத் தோன்றுமற்போனாலும் அவளாக

வாவது வந்ததில் இவ்வளவு நன்மை ஏற்பட் டிருக்கிறதே என் கிறது அவனுக்கு. ஏதோ ஒரு விதத்தில் அவள் கஷ்டப்படா மல் இருப்பதைத்தான் அவன் விரும்பினான்.

அவன் அம்மாவும் அத்தையும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் திறமையைக் காட்டி வெகு ருசியாகப் பல வகைப் பதார்த்தங்களைச் சமைத்து, வெகு அன்பாகப் பரிமாறி, சாவித்திரியின் வருகையைப் பிரத்தியேகமாகக் கொண்டாடி னார்கள். நமது தேசத்தில் அபூர்வமாக வந்திருப்பவர்களைக் கொண்டாடும் விதம் அதுதான் அல்லவா?

"உன் அகத்தில் உன் மாமியார் உள்ளுப் பக்கம் வர மாட்டா ளாமே? அவளால் அதுமாதிரி இருக்க எப்படி முடி கிறது? என்ன ஆளிருந்து செய்தாலும் நாம் நேரில் பார்த்துச் செய்கிற மாதிரி ஆகுமோ?" என்றெல்லாம் அத்தையால் சாவித்திரியிடம் மீனாக்ஷியம்மாளைப்பற்றிக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"என்னவோ? அவர் அதுமாதிரி பழகிக்கொண்டுவிட் டார்" என்று சாவித்திரி அதற்குச் சமாதானம் சொன்ன பொழுது, "அதென்னமாப் பழகிக்கொள்கிறது? பழக்கிக் கொண்டால்தான் வருமோ? பெண்ணாய்ப் பிறந்தா சமையலைக் கவனித்து, சாப்பிடுகிறவர்களுக்குப் பார்த்துப் பரிமாறாமல் இருக்கத் தோணுமோ? அதிலும் வயது வந்த ஒரு பொம்மனாட் டிக்கு!" என்று மேலும் அத்தை விடாது அதிசயித்தாள்.

"என்னடீ நீ! அவள் மாமியார் இருப்பதற்கு அவளைக் கேள்வி கேட்டுத் தொந்தரவு செய்கிறாயே. அந்த அம்மாளுக்குப் பிடித்தது அது; அதற்கு இவள் என்ன செய்வாள்?" என்று பாட்டி பெண்ணைக் கடிந்துகொண்டாள்.

"என்ன அக்கா நீங்கள்? அந்த அம்மாள் நம்மைப் போலவா? நமக்குச் சட்டி சுரண்டத்தான் தெரியும், அவளுக்கு எவ்வளவோன்னு தெரிகிறது?" என்று விசாலம் கிண்ட லாகச் சொன்னாள்.

"வீட்டுப் பொம்மனாட்டிகள் உட்புகுந்து பார்த்து, நல்ல சாப்பாடு செய்வித்தால்தானே வீட்டிலுள்ள ஆண்பிள்ளை களுக்கு வியாதி இல்லாத நல்ல திட சரீரம் ஏற்பட்டு, மற்றக்

காரியங்களைத் தெம்புடன் கவனிக்க முடியும்?'' என்று அத்தை, விஷயத்தின் அடித் தத்துவத்திற்கே சென்றாள்.

''அத்தங்கா, இவர்களை என்ன நினைக்கிறாய்? இவர்களுக்குத் தங்களைப்போல் கிடையாது என்கிற எண்ணம். பட்டணத்துப் பெண்கள் குடித்தனப் பொறுப்பு இல்லாமல் இருப்பார்கள்; அதனால் வீட்டில் வாய்க்கு ருசியான சாப்பாடு கிடைக்காது. தாங்கள்தான் ருசியாகச் சமைத்து வீட்டவர்களை ஆரோக்கியமாக வைத்திருக்கிறார்கள் என்ற பெருமை'' என்றான் ஜம்புநாதன்.

''இவர்கள் பெருமை கொள்வதிலும் நியாயம் இருக்கிறது. பாதி இடங்களிலும் வீட்டில் கவனக் குறைவால், சாப்பாட்டில் புஷ்டி போதாமல், டாக்டர் கொடுக்கும் பலத்திற்கான மருந்தைக் குடிக்கவேண்டி இருக்கிறது'' என்றாள் சாவித்திரி.

''சரி, நீ இப்படிவேறு சொல்லிவிடு, அப்புறம் இவர்கள் பெருமை ஓயாது'' என்றார் ராமசாமி ஐயர் பரிகாசமாக.

''சமைக்கிறதும், சமைத்த உணவை வயிறாரப் பரிமாறுவதும் பெண்களுடைய தனி உரிமை அல்லவா? இன்னொருவர் அதில் போட்டியிட்டு ஜயிக்க முடியுமா? அப்படித் தங்களுக்கே தனியாக உள்ள சிறப்பில் அவர்கள் பெருமை கொள்வதில் தவறென்ன?'' என்றார் அத்திம்பேர்.

இப்படிச் சாவித்திரி அங்கிருந்த சில தினங்களில் பல தடவை அவர்கள் சாப்பிடும்பொழுது பேச்சு நிகழ்ந்துவந்தது. சிறுமிகளும் அதில் பங்கெடுத்துக்கொண்டு பேசினார்கள். 'யாருடைய சமையல் ரொம்ப நன்றாக இருக்கும்? அம்மாவுடையதா? அத்தையுடையதா? அல்லது பாட்டி சில சமயம் பிரத்தியேகமாகச் சிலவற்றைச் செய்வாளே? அதுவா?' என்று அவர்கள் ஒரு நாள் தர்க்கித்தார்கள். அண்ணா பட்டணம் போன பிறகு அகிலாண்டக்காள் ஏதோ செய்து பார்த்துத் தீய வைத்துவிட்டாளே! அதை அவள் தங்கைகளெல்லாம் ஜம்புநாதனிடம் சொல்லிச் சிரித்தார்கள்.

''ஆமாம்டீ, நீங்களெல்லாரும் தப்பே செய்ய மாட்டீர்கள்!'' என்று அகிலாண்டம் சொன்னதற்கு, ''நான் அக்கா மாதிரி ஆகிறபொழுது சமைப்பேன்; அப்போ அப்படியே நாக்கிலே

வச்சிண் டிருக்கும்படி நன்னுப் பண்ணுவே ளுக்கும்'' என்றுள் சுந்தரி.

''சரீடி, உன் பெருமையை இங்கே யாரும் கேட்கலே. நீ எது செய்தாலும் உசத்திதான். நீயே சொல்லிக்கொள்; ரொம்ப அழகுதான்'' என்ருள் ஸ்ரீமதி.

'அந்தச் சிறு பெண்ணுக்கு நாமே பெருமைப்பட்டுக்கொள் வதில் அர்த்தமில்லை என்பது தெரிந்திருக்கிறது. ஆனல், அவ் வளவு பெரியவளான அத்தங்காளின் மாமியாருக்கு இந்த நியா யம் தெரியவில்லையே! அப்படிப்பட்ட மனிதர்களுடன் அத்தங் காள் வாழ்க்கை நடத்தவேண்டி இருக்கிறதே!' என்று கஷ்டப் பட்டுக்கொண்டான் ஜம்புநாதன்.

''ஆமாம், நீ செய்தால் உள்ளுக்கு விழுங்கப் பிடிக்காதபடி அவ்வளவு மோசமாகத்தான் இருக்கும் இல்லையா?'' என்று சுந்தரியைப் பரிகசித்தான்.

''அத்தங்கா! அண்ணுவைப் பாரு, என்னைக் கேலி பண்ணு கிருன்'' என்று சுந்தரி சாவித்திரியிடம் சிபார்சுக்குப் போனுள்.

''அவன் கிடக்கிருன்; உன் உசத்தியை அறிய அவன் என்ன கண்டான்?'' என்று சாவித்திரி சுந்தரியைச் சமாதானம் செய்தாள்.

சாவித்திரியினுடைய பெரிய காருக்குப் பதிலாக ராமசாமி ஐயருடைய இரட்டை மாடுகள் பூட்டின வில் வண்டியில் ஸ்ரீரங்கநாதர் கோவில், மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோவில, உள்ளூர் ஜம்புநாதர் கோவில் முதலிய கோவில் களை எல்லாம் சாவித்திரியையும் அழைத்துக்கொண்டு போய் வந்தார்கள் அவர்கள். காவேரியின் வெள்ளத்தைப் பார்த் துக்கொண் டிருப்பதிலேயே பொழுதையெல்லாம் கழிப்பதென் ருலும், சம்மதமாக இருக்கும்போல் இருந்தது சாவித்திரிக்கு. விஸ்தாரமான அந்த நீர்ப்பரப்பு, சமுத்திரம்போல அகாதமாகக் கண்ணுக்குத் தென்பட்டது உண்மை. ஆனல், அவ்வளவும் சுத்தமான நீரல்லவா? ஊரே செழித்து, வளம்பெறச் செய்து உயிர்களை உஜ்ஜீவிக்கச் செய்கிற தல்லவா அது? அதன் தன்மை, மனத்தைக் குளிர்விப்பதற்குக் கேட்க வேண்டுமா? உப்பு நீரான கடல் எவ்வளவோ பெரியது என்றுலும் இதன் மகிமை

அதற்கு ஏது? அமுதம் என்பது இந்தத் தண்ணீர்தான். இந்த ஜீவ நதியை வைத்துக்கொண்டு நாம் உணவுப் பஞ்சம் என்று பேசலாமா?' என்றுதான் சாவித்திரி நினைத்தாள்.

"எனக்கு ஜம்புநாதர் கோவில்தான் பிடித்திருக்கிறது பாட்டி. பிரம்மாண்டமான கோபுரமும் ஜனக்கூட்டம் இல்லாத பிராகாரமும் ஈசுவரன் இருக்கக் தகுதியான இடமாகத் தோன்றுகிறது. நிம்மதியாக இன்றைக்கெல்லாம் அவரைத் தியானிக்கலாம்" என்றுள் சாவித்திரி. தள்ளாத கிழவியான பாட்டியை அழைத்துக்கொண்டு தினமும் அங்கே போய் விட்டு வாந்தாள்.

"அகிலாண்டேசுவரி கிருபையால் உனக்குப் பிள்ளை பிறக் கட்டும். தொட்டிலும் சங்கிலியும் அவள் சன்னிதியில் கொண்டு வந்து கட்டுகிறேன்" என்று சாவித்திரிக்காக வேண்டிக்கொண் டாள் பாட்டி.

"மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் ரொம்பச் சக்தியுள்ள வர். அவருக்கு நூற்றெட்டுத் தேங்காயும் குழக்கட்டையும் செய்து நிவேதனம் செய்கிறேன். இப்படி வேண்டிக்கொண்டு தான் விசாலத்துக்குக் குழந்தைகள் பிறந்தார்கள்" என்று பாட்டி ஒரு சமயம் சென்னபொழுது வெகு அதிகமாக வேண்டிக்கொண்டு விட்டீர்களே அம்மா, அதுதான் போதும் போதும் என்று சொலலும்படி பெண்களாகப் பிறந்து தள்ளி விட்டார்கள்" என்றுள் விசாலம்.

இவர்களைப்போல் எத்தனை பெண்கள் பிறந்தால்தான் என்னவாம்?" என்றுள் சாவித்திரி.

"கல்யாணம் செய்து ஒருவனிடம் ஒப்படைத் தாகணுமே; அதற்குத்தான். உங்க சித்தப்பாவுக்கு இருக்கும் சுறுசுறுப்புக்கும் அக்கறைக்கும் இத்தனை பெண்கள் எதற்கு?" என்று அலுத்துக் கொண்டாள் விசாலம்.

"அண்ணுவுக்குக் கல்யாணம். இல்லையா அம்மா?" என் றுள் சுந்தரி நடுவில், கல்யாணம் என்கிற பேச்சில் அது நினைவு வந்தவளாக.

"அதென்ன அது? எனக்கு யாரும் சொல்லவில்லையே!" என்று சாவித்திரி கேட்டதற்கு, "திருச்சியில் சங்கரையர் என்ப

வர் ஜவுளிக் கடை வைத்திருக்கிருர். இந்த யுத்தம் காரணமாக நிறையப் பணமும் சம்பாதித்திருக்கிருர். அவருடைய மூத்த மகளை ஜம்புநாதனுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு மாத மாக நடை நடையாக வந்து போகிருர் அவர்.''—இந்தச் சமா சாரங்களை ராமசாமி ஐயரே சாவித்திரிக்குச் சொன்னுர்.

''பெண்ணுக்கு வயது பதினைந்து ஆகிறது. சுமாரான லக்ஷணம் என்றும் சொல்லுகிருர்கள். இப்பொழுது பணக் காரர் ஆகிவிட்டார். நிறையச் செய்வதாகவும் சொல்லுகிருர். எல்லாவற்றையும்விட அவருக்கு ஒரு மருமான் இருக்கிருன். இன்ஜினீயரிங் கலாசாலையில் படிக்கிருன். இந்தக் கல்யா ணத்தை நிச்சயஞ் செய்தால் அவனையும் நமது அகிலாண்டத் திற்கு முடித்துத் தருவதாகச் சொல்லுகிருர்'' என்ருர் ராமசாமி ஐயர்.

'விஷயம் இவ்வளவு தூரத்திற்கு முன்னேறி இருக்கிறதா?' என்று சாவித்திரி நினைத்துக்கொண்டாள். ஜம்புநாதன் கல் யாண விஷயமாக அவள் வேறு ஏதோ திட்டம் போட்டிருக் கிருளே. அது காற்றில் ஊதிக்கொண்டு போக வேண்டியது தாஞ?

''ஜம்புநாதன் வந்த பிறகு அவனைக் கலந்து பதில் சொல்வ தாகச் சொல்லியிருந்தேன். அவன் வந்தது தெரிந்து, இரண்டு நாளாக அவர் வந்து வந்து போகிருர். ஜம்புநாதனுடன் அது பற்றிப் பேசத்தான் அவகாசத்தைக் காணும். அவனுக்குச் சிநேகிதர்களைப் பார்ப்பதற்கும் உங்களுடன் ஊர் சுற்றுவதற் குமே சரியாகப் போகிறது. சாவித்திரி, நீ சமயத்தில் வந் திருக்கிருயே; நீ என்ன நினைக்கிருய்? சொல்லு'' என்று சாவித்திரியைக் கேட்டார்.

அவர் மகன் கல்யாணத்தில் அவர்கள் அவ்வளவு பேரை யும் விட்டு, மணம் செய்துகொள்ளப் போகிறவனுகிய ஜம்பு நாதனையும் விட்டு, அவள் சொல்லுக்கு மதிப்பு இருக்குமா?

''உங்களுக்குத் தெரியாதா சித்தப்பா? ஜம்புநாதன் சம் மதித்தாஞல் செய்ய வேண்டியதுதான். அவனுக்கு இன் னும் உயர்ந்த இடத்துப் பெண்கள் வரக்கூடும். ஜம்புநாத னுக்கு வாழ்க்கைப்படுகிற பெண்ணும் அகிலாண்டத்தை

மனைவியாக அடைகிற பிள்ளையும் மிகுந்த அதிர்ஷ்டசாலிகள் தாம். அவ்வளவுதான் நான் சொல்லுவேன்'' என்றுள் சாவித்திரி ஒரே வார்த்தையில்.

''அவனுக்காகக் கல்யாணத்தைப்பற்றித் தெரியும் வயது ஜம்புநாதனுக்கு ஆகிவிட்டதா? நமக்கு நல்லதென்று பட்டால் செய்ய வேண்டியதுதான். அவனைத் தனியாகக் கேட்கிறது என்ன?'' என்றுள் விசாலம்.

இவ்விதம் பார்த்துக்கொண்டு போவதில் பெண்ணின் கல்யாணம் தள்ளிப் போய்விடப் போகிறதே என்கிற விசாரம் அவளுக்கு.

''என்னவோ நான் சாகிறதுக்கு முன்னே இந்த இரண்டு கல்யாணமும் நடந்தால் கண் குளிரப் பார்த்துவிட்டுப் போகலாம்; ஆனுல் அதுக்காகக் குழந்தைகளுக்கு மனதில்லாமல் பண்ணக் கூடாது; ஆயிரங்காலத்துப் பயிர்! நன்று யிருக்கனும்!'' என்றுள் பாட்டி, தன்னுடைய ஆசைக்காகக் குழந்தைகளுடைய வருங்காலத்தை அவசரப்பட்டுக் கண்டபடி அமைத்துவிடக் கூடாது என்கிறது அவளுக்கு.

''பாட்டி, நீதான் நித்தியம் ஜபம் பண்ணறச்சே படுத்துக்காமே சுருக்கச் சாகனுமின்னு சாமியை வேண்டிக்கிறதாகச் சொன்னயே. அப்படிப் போயிட்டயானு என்ன பண்றது? அதுக்குள்ளே கல்யாண மெல்லாம் நடந்துட வேண்டாமா?'' என்றுள் சுந்தரி. பாட்டி செத்துப் போய்விடுவாள் என்கிற பயத்துக்காகவாவது சீக்கிரத்தில் கல்யாணம் செய்யமாட்டார்களா? நாமும் அதில் கலந்து சந்தோஷமாக இருக்கமாட்டோமா? என்கிறது அவளுக்கு. அதற்குத்தான் அவள் அதை எடுத்துச் சொன்னுள்.

''அம்மாவுக்கு, 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை'. அவசரப்படாமல் ஆர அமர நல்ல இடமாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணவும் வேணும்; தானும் அதுவரைக்கும் இருந்து பார்க்கவும் வேணும் என்கிறது'' என்று ராமசாமி ஐயர் தாயாரைப் பரிகசித்தார்.

இந்தப் பேச்சின் மத்தியில் அங்கே வந்த ராமகிருஷ்ணையர் இவர்கள் சம்பாஷணையைத் தெரிந்துகொண்டு, ''இவர்கள்

நல்ல மனுஷ்யர்கள்; ஜவுளி வியாபாரம் என்கிறதற்காக மனிதர் ஒன்றும் கௌரவக் குறைவானவர் அல்ல. நாம் சம்பந்தம் பண்ணக்கூடிய தகுதி உள்ளவர்தான்'' என்ருர்.

ராமசாமி ஐயருக்கு, 'ஜவுளிக் கடை ஆயிற்றே!' என்கிற சந்தேகம் இருந்தால் அதைப் பலக்க விடாமல் செய்ய ராமகிருஷ்ணையர் தயாராக இருந்தார் என்பது வெட்ட வெளிச்சமாக இருந்தது. அவ்வளவுக்குச் சங்கரையர் அவரிடம் வந்து வந்து பேசி, குழையடித்து, தம் பக்கத்திற்குச் சரியான ஆளாக அவரைச் செய்து வைத்திருக்கிருர் என்று சொல்லத்தான் வேண்டும்.

## 22

ஜம்புநாதனிடம் தனியாகக் கல்யாணத்தைக் குறித்து, அவன் தந்தை பிரஸ்தாபித்தபொழுது, "கல்யாணமா! எனக்கா!" என்று அவன் அதிசயித்துக் கேட்டான். தனக்கு அதற்குள் விவாகம் செய்வதுபற்றி அவர்கள் நினைக்கக் கூடுமென்று அவன் எண்ணவில்லை.

"உனக்கில்லாமல் வேறு யாருக்கு? வயதாகவில்லையா? சிறு பையன் என்கிற எண்ணமா?" என்ருர் அவன் தந்தை.

"இருந்தாலும் அப்பா, என் கல்யாணத்துக்கு இப்பொழுது என்ன அவசரம்? என்னுடைய படிப்பு முடியவே இன்னும் எவ்வளவோ நாள் இருக்கிறதே. அது முடியட்டும் அப்பா; அதற்குள் கல்யாணம் வேண்டாம்" என்று ஒரேயடியில் அவன் மறுத்துக் கூறினுன். அவனுக்கு விவாகத்தைக் குறித்த பேச்சே கேட்கப் பிடிக்கவில்லை. பெண் யார்? எவ்விடம்? என்று தெரிந்துகொள்ளக்கூட ஆவல் உண்டாகவில்லை. ஜானிடமிருந்து காதலைப்பற்றியெல்லாம் எவ்வளவோ தெரிந்துகொண்டிருக்கும் அவன் இதற்கு முன் கண்ணுல்கூடப் பார்த்திராத பெண்ணை மணக்கச் சம்மதித்துவிடுவாஞ? என்னதான் காதல் மணங்கள் நம்முள் இல்லை என்ருலும், கொஞ்சமாவது பெண்ணைப் பார்த்து, பழகி, பிடித்திருக்க வேண்டாமா?

"அவசரம் என்று யார் சொல்லுகிறுர்கள்? நல்ல இடம் என்று தெரிகிறது; செய்துவிடுவோமே!' என்கிறதுதான். அகிலாண்டத்தின் கல்யாணமும் இதனுல் எளிதாக முடியலாம் என்று தோன்றுகிறது" என்று எல்லா விவரத்தையும் மக னுக்கு அவர் எடுத்துச் சொன்னுர்.

"நான் இந்தப் பெண்ணை மணந்துகொண்டால்தான், அவன் நமது அகிலாண்டத்தை விவாகம் செய்துகொள்வா னுமா? அது மாதிரி யென்ருல் அது என்ன வரன்? அகிலாண் டத்தை அவளுக்காகவே மணக்கப் பிரியப்படுகிறவனுக் கல்லவா கொடுக்க வேண்டும்? இது என்ன பண்டமாற்றுப் பேரமா? எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை அப்பா. இதற்கு நான் ஒரு நாளும் ஒத்துக்கொள்ள மாட்டேன்" என்ருன் ஜம்பு நாதன் பிடிவாதமாக.

"அப்படியொன்றும் நாம் கேட்டு அவன் சொல்லிவிட வில்லை. இந்தச் சங்கரையருக்கு அவன் சகோதரியின் மகன். அதனுல் உனக்கு ஒருவேளை இவர் மகளை மணந்துகொண் டால், அகிலாண்டத்தின் விவாகமும் எளிதில் முடிந்துவிடக் கூடும் என்கிறது என் யோசனை. ஏதோ அவ்விதந்தான் சங்கரையரும் பேசுகிறுர்" என்ருர் ராமசாமி ஐயர்.

"முன்பின் பார்த்துப் பழகாதவனுக்கா நமது அகி லாண்டத்தைக் கொடுக்கிறது? நமக்கு இந்தப் பையனையோ அவன் வீட்டவரையோ கொஞ்சமும் தெரியாதே. மேலும் அகிலாண்டத்திற்குப் பிடிக்க வேண்டாமா? அவசரப்பட வேண்டாம் அப்பா. கொஞ்சம் பழகித் தெரிந்துகொண்டுதான் செய்ய வேண்டும். அப்புறம் மாற்ற முடியாது பாருங்கள்" என்ருன் ஜம்புநாதன். அவனுக்குச் சாவித்திரியின் நினைவு கூடத்தான். இவ்விதம் பெரியவர்கள் கல்யாணம் செய்ய அவசரப்பட்டு, தெரியாத இடத்தில் சம்பந்தம் செய்துவிட்டுத் தான் சாவித்திரிக்குச் சுகமில்லாமல் இருக்கிறது என்று அவன் நினைத்தான். மறுபடியும் அதே தப்பைச் செய்யக் கூடாது என்கிறது அவனுக்கு.

சிறு பிள்ளையானுலும் அவன் விஷயம் தெரிந்து பேசுகிற மாதிரி ராமசாமி ஐயருக்குத் தோன்றிற்று. எவனே தெரியாத

ஒருவனுக்கு அவர் மகளைக் கொடுத்துவிட அவருக்கும் மன தில்லைதான். அவ்விதம் அதை நினைத்துப் பார்க்காமல்தான் அவர் ஏதோ யோசனை செய்திருக்கிறார். இப்பொழுது ஜம்பு நாதனுடைய சொற்கள் அவருக்கு அவைகளை நினைவூட்டி விட்டன.

"என்னைக் கேட்டால் அப்பா, பசுபதிக்குக் கொடுத்தால் என்ன? அவனைப்போல் தங்கமான ஒருவன் எங்கே தேடி ஞலும் கிடைக்கமாட்டான். நல்ல புத்திசாலி, நல்ல குடும்பம், சொத்தும் இருக்கிறது. தமையன்கள் எல்லாரும் உத்தியோ கத்தில் இருக்கிறார்கள். இவனுக்கும் உத்தியோகம் தேடிக் கொடுத்துவிடுவார்கள். அவனுக்கு நமது அகிலாண்டத்தி னிடம் பிரியம் உண்டு என்பது எனக்குத் தெரியும். அவன் நமது ஜாதி இல்லை; நாம் கொடுக்கமாட்டோம் என்று வைத்துத் தான் சும்மா இருக்கிறான். இல்லாவிட்டால் அவனேகூட அதைப்பற்றிக் கேட்டிருப்பான். என்னிடம் பேசும்பொழுது அப்படித் தொனிக்கும்படிகூடப் பேசியிருக்கிறான்" என்றான் ஜம்புநாதன்.

"பசுபதி நல்ல வரன்தான்; யார் இல்லையென்று சொல்ல முடியும்? ஆனால் இந்த ஜாதி வித்தியாசத்தை எங்கே கொண்டு போய்த் தள்ளுகிறது!"

"பிராம்மணர்களுக்குள் இதெல்லாம் பார்ப்பார்களா? அதுவும் வர்ண வித்தியாசமே பாராமல் கலப்பு மணங்கள் சர்வ சாதாரணமாக நடந்து வரும் இந்தக் காலத்தில் இது கவனிக்கக் கூடிய விஷயமா என்ன? நீங்கள் எல்லாம் தெரிந்து, முற்போக்கான கொள்கைகள் உடையவ ராயிற்றே. பிராம் மணர்களுக்குள் காரண மில்லாமல் ஏற்பட் டிருக்கும் இந்தப் பிரிவுகளை ஒரு பொருட்டாக, நீங்களும் நினைக்கிறீர்களா? நமது வேதத்திலேயே நாலு வர்ணங்கள்தானே சொல்லியிருக்கிறது; மற்றப் பிரிவுகளெல்லாம் நாமாகச் செய்துகொண்டது என்று தானே சொல்லுகிறார்கள்?"

"அதென்னவோ அப்படித்தான்; இவைகள் நாமாகச் செய்துகொண்டவைகளாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் இவ்வளவு காலமாகப் பழக்கத்தில் இருந்து வந்திருக்

கிறது. மேலும் நம் வீட்டில் உங்கள் பாட்டி முதலானவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவர்களுக்குத் தெரியாது. ஜாதிப் பிரஷ்டம் ஆகிவிட்டாற்போல் தவித்துப் போவார்கள். அதற்குத்தான் பார்க்கவேண்டி யிருக்கிறது. அத்திம்பேர் வேறு, பழைய ஆசாரங்களில் நம்பிக்கை உள்ளவர். இன்னொருவர் சொல்லைக் கேட்கவும் மாட்டார். இந்தப் பெண்களாவது என் வார்த்தைக்கு அடங்கிப் போய்விடுவார்கள். இவரிடம் அதொன்றும் பலிக்காது'' என்றார் ராமசாமி ஐயர்.

அவருக்கு அவர் மகன் சொல்வதில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றிற்று. ஒன்றும் தெரியாதவன் என்று நினைத்திருந்த மகன், இவ்வளவு தெரிந்து பேசுகிறானே என்கிறதில் ஆச்சரியம் வேறு. 'ஜவுளி வியாபாரம் செய்து புதுப் பணம் படைத்தவர் சங்கரையர்; பரம்பரைப் பெரிய மனுஷ்யர் இல்லை' என்கிறதாக முதலிலிருந்தே அவருடைய சம்பந்தத்தில் அவ்வளவாக மனமில்லை அவருக்கு. 'அகிலாண்டத்தின் விவாகத்தைத் துரிதப்படுத்தும்படி மனைவி தொல்லை கொடுக்கிறாளே. சங்கரையர் மருமான் பல விதத்திலும் தக்க வரனாக இருப்பான்போல் இருக்கிறதே; பார்க்கலாம்; ஜாதகம் வாங்குவோம்' என்று அவர் நினைப்பதற்குள்ளாகத்தான் சங்கரையர் தம் மகளை ஜம்புநாதனுக்கு முடித்து, அகிலாண்டத்திற்கும் தம் மருமானை நிச்சயம் செய்து தருவதாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார். அவர் பொழுது பொழுதாக வந்து வற்புறுத்தியதனால்தான், அவ்விதந்தான் செய்வோமே என்கிற எண்ணம் ராமசாமி ஐயருக்கு உண்டாகி யிருந்தது.

ஆனால் இப்பொழுது மகன் எடுத்துச் சொன்ன பிறகு அவருக்கும் அது பத்தியமாகப் பட்டுவிட்டது. 'நமது மகன் என்ன? சிறு பிள்ளைதானே! அவனுக்கு இப்பொழுது விவாகத்திற்கு அவசரம் என்ன வந்தது?' என்று நினைத்தார்.

"அவன் படிப்பு நடக்க வேண்டியதல்லவா முக்கியம்? விவாகத்தினால் அதற்கு எங்காவது தடை ஏற்பட்டுவிட்டால்? சில பிள்ளைகள் அவ்விதம் மனைவி வந்த சாக்கில், படிப்பில்

அசட்டை காண்பித்து, மனைவியின் அதிருஷ்டத்தின்மேல் பழி போடுகிறார்கள். ஆகையால் இப்பொழுது அவனுடைய விவாகத்திற்கு ஒன்றும் அவசரமில்லை'' என்றுதான் நிச்சயித்தார்.

மைக்கல்மஸ் பரீக்ஷையில் அவர் எதிர்பார்த்த அளவு நல்ல மார்க்குகள் வாங்கவில்லை அவன். அது அவருக்குச் சிறிது ஏமாற்றத்தை அளித்திருந்தது. 'கலாசாலை புதிது; ஆசிரியர்கள் எல்லாம் புதிது. அதனால் அப்படி. எல்லாம் சரியாகப் போய்விடும் பாருங்கள்' என்று பசுபதி கூறின தெம்பில்தான் அவர் சமாதானமாக இருந்தார். அகிலாண்டத்திற்கும் பார்த்துக் கேட்டுத்தான் செய்ய வேண்டும்; அவசரம் இல்லை. மேலும் மகள் கல்யாணத்தை நினைத்து, மகனுக்கு விருப்பம் இல்லாதபோது, அவன் மனத்திற்கு விரோதமாக ஓரிடத்தில் பெண் கொள்ளச் சொல்லி வற்புறுத்தக் கூடாது என்பது அவருக்கு. ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் தனித் தனி அல்லவா? ஒருவருக்காக மற்றவர்களுடையதைத் தியாகம் செய்வது கூடாது என்கிற எண்ணம் வேறு.

இப்படி அவர் நிச்சயித்துக்கொண்ட பிறகு சங்கரையரிடம், ''மகன் இப்பொழுது கல்யாணம் வேண்டாம் என்கிறான்; வருகிற வருஷம் பார்த்துக்கொள்வோம்'' என்று சொல்ல அவர் தயங்கவில்லை. அவர் அவ்விதம் சொல்வதால் சங்கரையருக்கு மனஸ்தாபம் ஏற்படுமே என்கிறதையும் அவர் கவனிக்கவில்லை. ராமசாமி ஐயருடைய சுபாவமே அதுதான். தமக்குச் சரியென்று நிச்சயம் ஆகிவிட்டால், பிறகு யாருக்காகவும் எதற்காகவும் அவர் சந்தேகித்துத் தயங்கிக்கொண் டிருக்க மாட்டார்.

வீட்டில் மற்றவர்களுக்கு இந்தச் சமாசாரம் தெரிய வந்தபொழுது அவர்கள் ஆளுக்கொன்று சொல்லி அங்கலாய்த்தார்கள். 'தானாக வருகிற ஸ்ரீதேவியை இப்படிக் காலால் உதைத்துத் தள்ளுவார்களோ? ஒருத்தர் வார்த்தையையும் கேட்காமெ அண்ணா அவராகப் பண்ணியிருக்கிறாரே!'' என்று வருந்தினாள் அத்தை.

'ஒருத்தரைக் கேளாமே என்ன? பிள்ளையைக் கேட்டுத்

தான் பண்ணியிருக்கிறர். அவன் தனக்குக் கல்யாணம் வேண்டாம் என்றுனும். இவருக்கும், படிக்கிற பிள்ளைக்குப் படிப்புக் கெட்டுவிடும் என்று நியாயமாகப் பட்டுவிட்டதாம். அவன் நேற்றுப் பையன். கல்யாணம் காட்சிகளைப்பற்றி அவன் என்ன கண்டான்? அப்படியும் பிள்ளைகள் அவர்களாக, 'நான் நான்' என்று கல்யாணம் பண்ணிக்கொள்ள முன்னே வந்து நிற்பார்களா? வெட்கமாக இராதா? பிள்ளைகள் வேண்டாம் என்றுதான் சொல்வார்கள். தந்தை யல்லவா கட்டாயப் படுத்திப் பண்ணிக்கொள்ளச் சொல்ல வேணும்? அதற்குப் பதில் அப்பாவுக்குப் புத்தி இப்படிப் போனல் அப்புறம் சிறு பிள்ளைகளைக் குற்றம் எப்படிச் சொல்கிறது? நமது வார்த்தைக்கு மதிப்பைக் காணேம்; குழந்தைகள் கல்யாணத்தில் கூட நமக்குச் சொல்ல வாயில்லை என்று இருக்கிறது' என்று விசாலம் தன் சொல்லுக்கு மதிப்பு இல்லை என்பதாக வருந்திஞள்.

'பிள்ளைகள் அவ்விதம் இருப்பார்கள்; சகஜம்; ஆனல் தந்தையாக இருக்கப்பட்டவர் சரிப்படுத்தப் பிரயத்தனப்படாமல் மகன் சொன்னதைக் கேட்டு நடக்கலாமா?' என்று அவளுக்குக் கணவர்பேரில்தான் குற்றம் தோன்றியிருந்தது.

'அதுக்கு வேளை வரணும்; வந்தால் தானே நடந்துபோகும். நாம் வீணுக்கு ஒருத்தரைப் பழிப்பனேன்?' என்றது பாட்டிக்கு.

அவள் வயதானவள்; வாழ்க்கையின் அநுபவத்தில், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்கிற உண்மையைக் கண்டவள். 'பிள்ளையினுடைய கல்யாணம் என்றலும் நல்ல இடமாக வரும்பொழுது செய்தால்தானே; பின்னல் எப்படி இருக்குமோ?' என்று கவலைப்பட்டாள் அத்தை.

"அது போகட்டும்! இவனுக்குக் கல்யாணம் ஆனல் ஆகிறது; இல்லாவிட்டால் கல்யாணமே இல்லாமல் நித்தியப் பிரம்மசாரியாக இருக்கட்டும். இந்த ஊரில் இருப்பதற்குப் பிள்ளையாரைப் பின்பற்ற ஓர் ஆள் வேண்டாமா? அகிலாண்டத்தின் கல்யாணம்னு இதனல் நின்று போகிறது; அவா பெண்ணை நாம் பண்ணிக்கொள்ளா விட்டால் நமது பெண்ணைப் பண்ணிக்கொள்ள அவா தயாராக இருப்பாளா? 'தானும் கெட்டு, சந்திர

புஷ்கரணியையும் கெடுத்தானும்' என்று ஏதோ சொல்லு வாளே அதுமாதிரி பண்ணியிருக்கான் ஜம்புநாதன்'' என்று அங்கலாய்த்தாள் விசாலம். அவளுக்குப் பிள்ளையின் அருமை மறந்து, கோபமே ஏற்பட்டது. 'அவன் எக்கேடும் கெட்டும்' என்றுகூட ஆத்திரம் கொண்டாள்.

"சித்தி, நீங்கள் இப்படி விசாரப்பட்டு வருந்துவதற்கு அவசியமில்லை. நான் சொல்லுகிறேன் என்று பாருங்கள். ஜம்புநாதனுக்கு இந்தப் பெண்ணைவிட எத்தனையோ விதத்தில் உயர்ந்த மனைவி வரப்போகிருள். அப்பொழுது இவன் இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னதற்கு நீங்களே சந்தோஷப்படப் போகிறீர்கள். அகிலாண்டத்தைப் பண்ணிக் கொள்கிறவனும் இன்னொருத்தருக்காகப் பார்த்துக்கொண் டிருக்கமாட்டான். அவளுக்காகவே வந்து பண்ணிக்கொண்டு போவான் பாருங்கள்'' என்ருள் சாவித்திரி.

பெரியவர்களுக்கு எப்படியோ? ஜம்புநாதன் தங்கை களுககு, சாவித்திரியின் இந்த வார்த்தையில் நம்பிக்கை உண்டாயிற்று. 'வர இருந்த கல்யாணம் வராமற் போகிறதே; புது ஆடைகளும் நகைகளும் அணிந்து குதூகலமாக இருப்ப தற்கு இல்லாமல் இருக்கிறதே!' என்று அவர்களுக்கு உண்டான ஏமாற்றம் எங்கோ பறந்து போயிற்று. அவர்களுக்கு அத்தங்கா ளுடைய வார்த்தையில் அவ்வளவு நம்பிக்கை! அகிலாண்டம் தனியாக, தன் கல்யாணம் நின்றுபோகிறதே என்று துக்கப் பட்டாளா? அவ்வளவுக்கு அவளுக்கு வயது எங்கே ஆயிற்று?

"அத்தங்கா, நீ அண்ணுவுக்குப் பார்த்து வைத்திருக்கிற பெண் யார் மாதிரி இருப்பாள்? அக்கா போலவே இருப் பாளா?'' என்று சுந்தரி கேட்கவே தொடங்கிவிட்டாள். சாவித் திரி சொன்னதில் அவளுக்கு அத்தங்காள் அவ்வளவு தூரம் நிச்சயம் செய்துவைத்திருப்பாள் என்றே தோன்றிற்று. சாவித் திரியும் தன் மனத்தில் நிச்சயித்திருக்கும் பெண்ணை விவரிக்கத் தயார்தான். ஆனல், 'பெண்வீட்டவர்களுடைய அபிப்பிராயத் தைத் தெரிந்துகொள்ளுமுன் சொல்லிவிடக் கூடாதே' என்று தான் சும்மா இருந்தாள்.

அத்திம்பேருக்கு விஷயம் தெரிந்தவுடன் அவருக்கு மிகுந்த

கோபம் உண்டாயிற்று; மைத்துனன்பேரில், ஜம்புநாதன் பேரில், இரண்டு பேரிடத்திலுமே. 'இப்படியும் ஒரு நல்ல காரியத்தைக் கெடுத்துக்கொள்வார்களா?' என்கிற ஆத்திரந் தான் வந்தது.

'ஏதோ மகன் சிறு பிள்ளைத்தனமாக உளறுகிறான் என்றால், அநுபவஸ்தரான தகப்பன் அதைக் கேட்டு நடத்துவாரா? தந்தை சொற்படி மகன் கேட்க வேண்டும் என்கிறது போக, தலைகீழ்ப் பாடமாக இருக்கிறதே! நல்ல வார்த்தையிலோ அதட்டியோ காரியத்தைச் சரிசெய்யாமல் இதென்ன அசட்டுத்தனம்!' என்று மைத்துனன் பேரிலும், 'பெரியவர்களின் பராமரிப்பை விட்டுப் பட்டணத்தில் பூரண சுதந்தரத்தில் தனிவாழ்க்கை நடத்துவதில் பிள்ளையாண்டான் மாறிப் போய்விட்டான்; தான்தோன்றி யாகக் கிளம்பிவிட்டான்; அடக்குவார் இல்லை. இந்தக் கோணல் புத்தி இன்னும் எவ்வளவு தூரத்திற்குப் போகுமோ? இன்று கல்யாணம் வேண்டாம் என்கிறான்; நாளைக்கு எவளையாவது ஜாதி கெட்டவளை மணப்பேன் என்று கிளம்புவான்! யார் கண்டது?' என்றெல்லாம் ஜம்புநாதன்பேரிலும் கோபம் கொண்டார்.

விஞ்ஞானப் படிப்பென்று அவன் சென்னைக்குக் கிளம்பி னதே நல்லதுக்கு இல்லை என்பது அவர் அபிப்பிராயம். விஞ் ஞானம் உலகத்திற்கு நன்மை செய்கிறது என்கிறதை அவர் ஒப்புக்கொண் டிருந்தால் அல்லவா, ஜம்புநாதன் அதைப் படிப்பது சரி என்று நினைப்பார்?

ஜம்புநாதனிடம் நல்ல வார்த்தையிலும் கோபமாகவும், அவன் விவாகம் செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லிப் பார்த்தார். அவன் அவருக்குப் பணி வாகப் பதில் சொன்னாலும், கல்யாணத்திற்கு மட்டும் சம்ம திக்கவில்லை. ஒரே வார்த்தையில், "அதற்கு இப்பொழுது அவசரம் இல்லை, அத்திம்பேர்! என்னுடைய படிப்பே இன்ன மும் மூன்று வருஷத்திற்கு இருக்கிறது; அதுவாவது முடியட்டும்" என்று சொல்லி அவரிடம் பேசிக்கொண்டு நிற்காமல் அப்பால் சென்றுவிட்டான். அதை இதைப் பேசி அவர் கோபத்தை அதிகப்படுத்த அவனுக்குப் பயம்; 'நமக்குள் வீண் மனஸ்தாபங்

கள் வரவிடக் கூடாது' என்கிறது அவனுக்கு.

அவன் அம்மாவும் அத்தையும் அவனிடம் தனித்தனியாக மன்ருடிச் சொன்னதற்குக்கூட, "வீணுக்குக் கஷ்டப்படாதீர்கள்; கல்யாணம் ஒன்றும் நடக்காமல் போய்விடாது. அகிலாண்டத்தின் குணத்திற்கும் அழகிற்கும் அப்பாவின் அந்தஸ்திற்கும் அவளுக்கு நல்ல கணவன் வருவான்" என்று உறுதி கூறினனே தவிர, தன்னுடைய நிச்சயத்தை விட்டுக் கொடுக்கவில்லை.

அவனுக்காக வேண்டி இன்னொருவன் தன் தங்கையைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறது என்கிற எண்ணம் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் தந்தையும் அதைச் சரியென்று ஏற்றுக்கொண்டுவிட்டார். அவன் மறுத்ததற்காக, அத்தங்காள் வேறு அவனை உயர்வாக நினைக்கிருள் என்று, அவள் பேச்சிலிருந்து அவன் உணர்ந்துகொண்டான். அதன் பிறகு அவன் தன் தீர்மானத்தை விடாமல் இருந்ததற்குக் கேட்க வேண்டுமா? பாட்டி ஒருத்திதான் அவனிடம் ஒரு சலுகையும் கேட்டுக்கொண்டு வரவில்லை. 'குழந்தைகள் கல்யாணத்தைப் பார்க்க எனக்குப் பிராப்தம் இருக்க வேணும்!' என்று தானே சொல்லிக்கொள்வதோடு நிறுத்திக்கொண்டாள்.

## 23

**ப**சுபதியின்மூலமும் எதிரகத்து நடராஜன்மூலமும், ஏன்? சாவித்திரியை விட்டுக்கூட ஜம்புநாதனுக்கு எடுத்துச் சொல்லி அவன் மனத்தை மாற்ற அத்திம்பேர் எண்ணினர். ஆனல், ஒன்றையும் செய்து பார்க்கவே முடியாமல் உடனேயே கைவிட வேண்டிய தாயிற்று. பசுபதியிடம், "அப்பா, நீதான் உன் நண்பனுக்குப் புத்தி சொல்லி, பெரியவர்கள் சொல்லைக் கேட்கும்படி செய்ய வேண்டும்; அவன் விவாகம் வேண்டாம் என்று பிடிவாதம் செய்வது அழகில்லை" என்று அவர் பசுபதியின் வீட்டுக்கே சென்று அவனிடம் சொன்னர். வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் இருக்க வேண்டி அவர் அப்படி அவனைத் தேடிச் செல்ல வேண்டியதாயிற்று. அவன் அவர்கள் வீட்டுக்குப் போது போதாக வந்து, எல்லார் மத்தியி

னும் இருந்து போகிறுன்; உண்மை! ஆனால் அவனை மற்றவர்களிடமிருந்து பிரித்து, விஷயத்தைச் சொல்வது அங்கே சாத்தியம் இல்லை. அதற்காக அவர், அவன் தம் வீட்டை விட்டுப் புறப்படும் முன்னமேயே, அவனைச் சந்திக்க அவன் இருக்கும் இடம் தேடிச் சென்ருர்.

அப்படி அவர் தன்னிடம் வந்து சொன்னபோது, பசுபதிக்கு அவருடைய ஆசையின் வேகம் நன்கு புரிந்ததுஆனாலும் இந்த விஷயத்தில் தான் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை என்று தான் அவரிடம் அவன் வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டான்.

"ஜம்புநாதன் சாந்தமான குணம் உள்ளவன். ஆனாலும் தீர்மானக்காரன். அவன் கொண்டுள்ள தீர்மானத்தை அவனே மாற்றிக்கொண்டால் அன்றி, பிறர் மாற்றுவது என்பது எளிதல்ல. மேலும் உங்கள் எல்லாரையும் மீறிச் செய்ய அவன் சாதாரணமாக விரும்பமாட்டான். அவனுக்கு இதில் மிகவும் மனம் இல்லாதிருப்ப தாலேயே விரோதமாக இருக்கிறுன். ஆகையால் நான் இதில் ஒன்றும் செய்வதற்கு இல்லை. என் சொல்லை அவன் கேட்கவும் மாட்டான். இப்பொழுது அவன் போக்கில் விட்டுவிடுங்கள். அவனாகவே மாறினாலும் மாறுவான்; அப்பொழுது பார்த்துக்கொள்வோம்" என்று சமாதானம் கூறிவிட்டான் பசுபதி.

அவனுக்கு உண்மையிலேயே ஜம்புநாதனை மாற்ற முடியாது என்கிறது சில நாட்களாக ஏற்பட்ட எண்ணம். ஜான் விஷயத்தில் அவன் காட்டிய பரிவிலிருந்து அவன் அதைக் கண்டுகொண்டு விட்டான் அல்லவா? நல்ல காலம்; அவன் அந்தக் காரணத்தை மட்டும் அத்திம்பேரிடம் வெளியிட்டு அப்படியே கூறிவிடவில்லை. அவன் சொல்லியிருந்தா னால் ஜம்புநாதன், சகவாச தோஷத்தால் கெட்டுப்போய்விட்டதாக அவர் மட்டும் என்ன, அவன் வீட்டில் எல்லாருமே அதை நினைத்துக் கஷ்டப்பட்டுப் போயிருக்கமாட்டார்களா? அது தெரிந்துதான் பசுபதி ஜாக்கிரதையாக, முன்னெச்சரிக்கையுடன், ஜம்புநாதனுடைய புதுச் சிநேகத்தைக் குறித்து, தான் என்ன நினைத்து மனஸ்தாபப்பட்டாலும், யாரிடமும் வாய்திறககவில்லை. அவ

னுக்குச் சிநேகிதனிடத்தில் அவ்வளவு விசுவாசம்.

பசுபதி உறுதியுடன் கூறின பிறகு, திரும்பத் திரும்ப அவனிடம் சிபார்சு வேண்டி நிற்பதில் பிரயோஜனம் என்ன? சாவித்திரியின் உதவியை நாடுவதில் ராமகிருஷ்ணையருக்கே சந்தேகம் வந்துவிட்டது. அவள் அவருடைய தோட்டத்தின் அழகைச் சிலாகித்துப் பேசினாலும், அதுபோல ஒன்று சென்னையில் இருந்தால் தோட்டப் பரிசுப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கும் என்று நிஜமாகவே கொண்டாடினாலும், இது விஷயத்தில் மட்டும் அவருக்கு விரோதமாக இருப்பாள் என்றே தோன்றிற்று. ஏனெனில் ஜம்புநாதனின் விவாக சம்பந்தமாகப் பேசும் பொழுதெல்லாம் அவள், 'அவனுக்கென்ன பெண்கள் வருவதற்கு?' என்றுதான் சொல்லி வந்தாளே தவிர ஒரு தடவையும், 'ஆத்தில் அம்மா, பாட்டி முதலானவர்கள் ஆசைப்படுகிறார்களே; செய்துகொள்ளேன்!' என்று அவர்களுக்காகவுங்கூடப் பரிந்து ஜம்புநாதனிடம் சொல்லவில்லை. ஆகையால், அவளைத் தம் கட்சியை ஏற்றுப் பேசச் சொல்ல முடியாது என்ற சம்சயம் அவருக்கே உதித்துவிட்டது.

எதிர்வீட்டு நடராஜன் ஜம்புநாதனுக்கு அப்படி ஒன்றும் ஆப்தன் இல்லை என்றாலும் சிநேகிதன்தான். தாராளமாகப் பேசி எடுத்துச் சொல்லுவான். அவனைக்கொண்டு முயன்று பார்ப்போம் என்று கடைசியாக அவர் தீர்மானத்திற்கு வருவதற்குள் அதிலும் நிராசைப்படும்படியான செய்தி ஒன்று அவருக்கு எட்டியது.

வாசலில் விளையாடிக்கொண் டிருந்த ஸ்ரீமதி, சுந்தரி இவர்கள், அண்ணாவுக்குப் பெண் கொடுப்பதாகச்சொல்லிக்கொண்டு வந்த மாமா எதிரகத்துக்குப் போவதைப் பார்த்துவிட்டு, ஒரு வகைப் பரபரப்புடன் உள்ளே ஓடி வந்து சொன்னார்கள். அதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும் என்று அந்தச் சிறுமிகளுக்கே ஊகிக்கத் தெரிந்தது என்றால், ராமகிருஷ்ணையருக்கு அதன் பொருள் தெரியாமலா போகும்?

'சங்கரையர் ஜம்புநாதனை விட்டு, நடராஜனை மாப்பிள்ளையாக வரிக்க, அவர்கள் வீட்டுக்குச் செல்லத் தொடங்கியிருக்கிறார் என்பதைத் தவிர்த்து அதற்கு வேறு என்ன காரணம்

கூறுவது? நடராஜனும் அவன் தந்தையும் அதை எதிர்பாராத பெரிய அதிர்ஷ்டம் என்றே நினைப்பார்கள். உண்மையும் அது தான். ஜம்புநாதன் அளவு ஆஸ்தியோ படிப்போ அழகோ இல்லாத நடராஜனுக்கு, ஜம்புநாதனுக்கு வாழ்க்கைப்படத் தகுதியுள்ள பெண் கிடைப்பதென்றால் அதை அவர்களுடைய ஜன்மாந்தர பாக்கியம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லுகிறது? ஆகையால் உடனேயே மேல் விழுந்து நிச்சயம் செய்துகொள்வதில் முனைவார்கள் அவர்கள். இனி நடராஜ னிடம் சிபார்சுக்குப் போவது அனர்த்தத்தைத் தவிர வேறு இல்லை. தங்களுக்கு இருக்கும் ஆவலைத் தெரிவித்து, மேலும் துரிதமாகக் காரியத்தை முடித்துக்கொள்ள அவர்களைத் தூண் டவே அது உதவும்; அதனால் வேறு லாபம் இல்லை.

இப்படி நிச்சயமான பிறகு, அத்திம்பேர் எதற்காக நடரா ஜனின் உதவியை நாடுகிறார்? ஒன்றும் செய்வதற்கு இல்லை என்று சும்மா கை கட்டி இருப்பதோடு, காரியம் மிஞ்சிப்போய் வேறு விதமாக முடிவதையும் பொறுமையுடன் பார்த்திருக்கும் படி ஆகிவிடும் என்றே அவருக்கு நிச்சயம் ஏற்பட்டது. அவர் ஜம்புநாதனுக்குத் தக்கவள் என்று நினைத்த பெண் நடராஜ னுடைய மனைவியாகச் சீக்கிரத்தில் ஆகிவிட்டால் அப்புறம் அதில் செய்வதற்கு என்ன இருக்கிறது?

அவ்விதந்தான் விஷயம் மாறுகிறது என்று தெரிந்தது. நடராஜனும் அவன் தந்தையும் அவரவர் முறையில் அதை இவர்களிடம் வந்து தெரிவித்துச் சென்றார்கள். ஜம்புநாதன் சென்னையிலிருந்து வந்ததும் வராததுமாகத் தியாகராஜையர் மிகுந்த உரக்கத்தோடு, "என்னப்பா, ட்ராக்டர் சங்கதி ஒன் றும் செய்வதற்கில்லாமல் இருப்பதுபோல் இருக்கிறதே! வாடகைக்குக் கிடையாது என்று கம்பெனிகளில் சொல்லி விட்டார்களாமே!" என்று கேட்டார். அதுபற்றி அவன் தந்தைக்கு எழுதியிருந்த கடிதங்களை அவர் திரும்பத் திரும்பப் படித்திருந்தும், அவனை நேரில் கண்டு தம் ஏமாற்றத்தைத் தெரி வித்துக்கொள்ளாமல் இருக்க அவரால் முடியவில்லை.

"ஆமாம், அப்படித்தான் இருக்கிறது; என்ன பண்ணு கிறது?" என்று ஜம்புநாதன் சொன்னதற்கு, "உணவு அபி

விருத்தி செய்யச் சொல்லி இந்தச் சர்க்கார் இவ்வளவு முறையிடுகிறார்களே தவிர, அதற்கு ஒத்தாசையாக ஏதாவது செய்ய முன்வருகிறார்களா? காணோம். இவர்கள் பணம் போட்டு ட்ராக்டர்கள் வரவழைத்து, வாடகைக்குக் கிடைக்கும்படி செய்யக் கூடாதா? சர்க்காருக்கும் வரும்படி, என்னைப்போலொத்தவர்களுக்கும் பயிர் விருத்தி செய்து பார்க்க உதவி. அப்படி ஒன்றும் காரியமாகச் செய்யாமல் பொழுது பொழுதாகப் பிரசங்கம் செய்வதோடு நிறுத்திக்கொள்கிறார்களே. இவர்கள் நமக்குக் காசு பணம் கொடுக்க வேண்டாம்; இது மாதிரி உபகாரம் செய்யக் கூடாதா?'' என்று மேலும் மேலும் குறை கூறி வருத்தப்பட்டார் அவர். அவருக்கு இப்பொழுது—நெல் விலையேறி நிற்கும் நாளில்—விளைச்சலை விருத்தி செய்து நிறையப் பணம் சம்பாதிக்க வழியில்லாமல் போகிறதே, என்கிறது ஆறாத துயரம்.

அவரைப்போல் பணத்திற்காக இல்லாவிட்டாலும், உணவுப்பொருள் பற்றாக் குறையைத் தீர்க்க வழி இல்லாமல் போகிறதே என்கிறது ஜம்புநாதனுக்கு. அவர் சொல்வதை அவன் அப்படியே ஒப்புக்கொண்டான்.

இப்படி வருத்தத்தோடு காணப்பட்ட அவர் திடீரென்று உத்ஸாகமாக மாறித் தென்பட்டார்.

''என்ன ராமசாமி ஐயர், சங்கரையர் தம் பெண்ணை நடராஜனுக்குத் தருவதாக வந்து கேட்கிறார். ஜம்புநாதன் கல்யாணமே வேண்டாம் என்று சொன்னதாக நீங்கள் சொல்லிவிட்டீர்களாம். என்னிடம் நேற்று வந்தார். எனக்கு என்ன ஐயா, நடராஜனுக்கு இவ்வளவு நல்ல இடத்துப் பெண் கிடைக்க வேண்டுமே! 'ஜம்புநாதனுக்கும் கேட்டுவிட்டு அடுத்தபடி நம்ம பையனுக்கும் கேட்கிறார்களே அவர்கள்!' என்கிற ஆச்சரியந்தான் எனக்கு. 'அதற்கென்ன முடிந்து போட்டு விடுவோம்' என்று உடனேயே மனுஷ்யனை அலக்கழிக்காமல் ஒப்புக்கொண்டுவிட்டேன்'' என்று சந்தோஷத்தோடு சொல்லிக்கொண்டார். தமது மகன் அதிகப் படிப்பில்லாமல் இருப்பதற்கு, தமக்கும் சொத்து ஒன்றும் விசேஷமாக இல்லாதிருப்பதற்கு, எல்லாவிதத்திலும் தங்களைவிட மேல்

கையான ராமசாமி ஐயர் மகனுக்கு வந்த பெண், தம் மகனுக்குக் கிடைப்பதென்றால் அவருக்கு மகிழ்ச்சி தோன்றாமல் இருக்குமா? அவர் அதை ஓரளவு ஒளிவு மறைவின்றி இவர்களிடமே வந்து கூறி, பெருமைப்பட்டுக்கொண்டார்.

நடராஜனும், பசுபதியிடமும் ஐம்புநாதனிடமும், "உங்களைப் போல் எனக்கு ஒன்றும் வாழ்க்கையில் லட்சியங்களை வைத்துக் கொண்டு நடக்கக் கட்டாது, அப்பா. உயர்ந்த படிப்புப் படிக்க வேண்டும்; வரப்போகிற மனைவி விசேஷ ஆதரிசப் பெண்ணாக விளங்க வேண்டும் என்றெல்லாம் பார்த்தால் எனக்கு ஒன்றுமே கிடைக்காது. அவ்வளவுக்கு என்னிடம் உயர்வுகள் இருந்தால் அல்லவா என்னுடைய தீர்மானங்களுக்குப் பிறர் மதிப்புக் கொடுப்பார்கள்? அவைகளை நடத்திச் செல்வது என்கிறதும் அப்பொழுதல்லவா சாத்திய மாகும்?" என்று, தான் விவாகத்துக்குச் சம்மதித்திருப்பதை அவர்களிடம் தெரிவித்துக்கொண்டான்.

"நீ தேவலையே! நமது வாழ்க்கை லட்சியங்களைப் பிறர் நடத்துவது என்கிறாயே! அப்படியானால் நாமாக அவைகளைச் செய்வது என்பது இல்லை என்கிறாயா?" என்று கேட்டான் ஐம்புநாதன்.

"நீ கோபித்துக்கொள்ளாதே; ஓரளவுக்கு அவைகள் செம்மையாக நடக்க வேண்டுமானால் பிறர் உதவியும் வேண்டித்தானே இருக்கிறது; அதனால்தான் சொல்கிறேன். இப்பொழுது உன் கொள்கையை உன் தந்தை மதித்து ஏற்றுக் கொண்டதனால்தானே உன்னால் இந்தக் கல்யாணம் வேண்டாமென்று சொல்லி, நடத்தவும் முடிந்தது?" என்றான் நடராஜன்.

"இதை லட்சியம் என்று சொல்கிறாயா?" என்று சிரித்தான் ஐம்புநாதன்.

"அப்படிப் பார்த்தால், ஏண்டா உன்னுடையது மட்டும் லட்சியப்படி நடக்கவில்லையா? நீதான் வலுவில் கிடைக்கிற எதையும் ஏற்றுக்கொண்டு விடுகிறது என்று வைத்துக்கொண்டிருப்பதாகச் சொன்னாயே; அது உன்னுடைய லட்சியம் ஆகி விட்டதல்லவா? அதன்படிதானே இப்பொழுது கிடைத்திருக்கும் பெண்ணையும் நீ ஏற்றுக்கொள்ளுகிறாய். நீதான் இப்பொழுது

சிரத்தையாக, உண்மையில் உன்னுடைய லட்சியப்படி நடந்திருக்கிறாய் என்று சொல்ல வேண்டும்'' என்றான் பசுபதி

"இப்படியே எனக்கு என்றும் நல்லதாகக் கிடைத்துக் கொண்டிருக்கட்டும். நானும் என்னுடைய லட்சியத்தைக் கைவிடாமல் இருக்கிறேன்'' என்று திருப்தியோடு கூறிக்கொண்டான் நடராஜன். அவனுக்குத் தன்னிடத்திலேயே திருப்தி, சந்தோஷம் எல்லாம். "நான் எப்படியாவது சமாளித்துக் கொண்டுவிடுவேனடா. அவருடைய ஜவுளி வியாபாரத்தில் நானும் ஓர் ஆளாகச் சேர்ந்துகொண்டு சம்பாதிக்கவும் தொடங்கிவிடுவேன். உங்களுக்கு அது உயர்ந்த சம்பாத்தியமாகத் தோன்றுது. இதுதான் உயர்ந்த லட்சியத்திற்கும் கீழ்த்தர லட்சியத்திற்கும் வித்தியாசம். முதலில் சொன்னது கடைப்பிடிப்பதற்குக் கஷ்டம்; இரண்டாவது சுலபம்'' என்றான் அவன்.

இப்படி அவன் தனக்கு வரப்போகிற அதிருஷ்டத்தைப் பற்றி நண்பர்களிடம் உத்ஸாகமாகப் பேசித் தெரிவித்துவிட்டுப் போன பிறகு, அதைப்பற்றிச் சந்தேகிக்க ஏதாவது இடம் இருக்கிறதா?

எதிர் வீட்டில் கல்யாணம் நிச்சயம் ஆகிக்கொண் டிருந்தது. அது ஜம்புநாதன் வீட்டில் எல்லாருக்கும் பரபரப்பைக் கொடுத்துக்கொண் டிருந்தது. நம்முடைய வீட்டில் நடக்க வேண்டிய சுப காரியம் இன்னொருவர் வீட்டுக்குப் போய்விட்டதென்றால் யாரால்தான் அதைச் சகித்துக்கொண் டிருக்க முடியும்? ஒரு சமயம், தங்களுக்கு வரவிருந்த எல்லா நல்லவையும் போய் விட்டனபோல் வருந்தியும், மற்றொரு சமயம், 'ஐயேடி! என்ன வந்தது? ஊரிலே கல்யாணமே நடக்காதா? என்ன அதிசயம்! ஏதோ நிச்சயம் பண்ணிண்டு போகட்டுமே!' என்று வெறுத்துக் கூறியும், ஸ்திரீகள் எதிர் வீட்டில் நடக்கும் கல்யாண சம்பந்தமான சமாசாரம் காதில் படும்பொழுதெல்லாம் பேசிக்கொண்டார்கள். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு நடராஜனும் அவன் தந்தையும் வெகு அற்பர்களாகவும் பேராசைக்காரர்களாகவும் அவர்களுக்குத் தோன்றிக்கொண் டிருந்தார்கள்.

சிறுமிகள் எல்லாரும், "இப்படி அப்பாவும் அண்ணாவும்

சேர்ந்து நம்மாத்திலே கல்யாணம் வர முடியாமே பண்ணிவிட் டார்களே; அந்தக் கல்யாணம் எதிர்வீட்டுக்குப் போய்விட் டதே!'' என்று கஷ்டப்பட்டுக் கொண்டார்கள். அத்திம்பேருக்கு இருந்த வருத்தத்திலும் கோபத்திலும் அவருக்கு யாருடனும் பேசுவது கூடப் பிடிக்காமல் இருந்தது.

''உங்களுக்கென்ன தனியா வந்துடுத்து? 'குரங்கு சாகக் கொடுத்த ஆண்டி' என்பார்களே, அதுபோல முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு விட்டீர்களே! இந்த வருஷம் இல்லாவிட்டால் வருகிற வருஷம் இதற்கு மேலாகவே பேஷான இடமாக வந்துவிட்டுப் போகிறது'' என்று அத்தை தன் கணவரைத் தனியாகக் கடிந்துகொண்டாள்.

''ஆமாம், இவ்வளவு நல்ல மனுஷ்யாள் மறுபடியும் கிடைக்கிறு! உங்க அண்ணு, பிள்ளை தெரிஞ்சு சொல்லிவிட்ட மாதிரி சந்தோஷப்படுகிருர். அவன் மேலே மேலே சொன்னதைக் கேட்காமல் இருக்கத்தான் இது வழி!'' என்ருர் அத்திம்பேர்.

''நன்ருயிருக்கு நீங்கள் சொல்றது! ஜம்புநாதன் ஒண்ணும் தறுதலை இல்லை. நெடுகிலும் சொன்னதைக் கேளாமல் இருக்க மாட்டான். அந்தப் பிராம்மணன் உங்களிடம் சரியாகப் பேசிப் பசப்பிஞல், அதைக் கொண்டு அவர் உங்களுக்கு மகா நல்லவராகத் தோன்றிவிட்டது. கிட்ட நெருங்கிஞல் மனுஷ்யர் எப்படியோ? யார் கண்டா? வெறும் புடவைக்காரர்தானே! என்ன நல்ல குணம் இருந்துவிடும்?'' என்று கணவரை மேலே பேச விடாமல் தடுத்துக் கூறிஞள் அத்தை.

நாமாக நம் மனிதரைக் குற்றங் குறைகள் நிறையச் சொல்லிக்கொள்ளலாம். இன்னொருவர் சொல்வதைக் கேட்கப் பிடிக்குமா? ஜம்புநாதனை அத்திம்பேர் குற்றம் சொல்வதைக் கேட்க, அதஞல்தான் அத்தைக்கு மனம் வரவில்லை.

அவள் அப்படி அவரை அதட்டினதற்காகவும் அவர் ஒன்றும் சுமுகமாக மாறிவிடவில்லை. ராமசாமி ஐயர் ஒருவர்தாம் பெரிய தவறு ஒன்றும் நடந்துவிடவில்லை என்று சுபாவப்படி இருந்தார். அவர் வீட்டவர்களுடைய ஜாடைமாடையான குற்றச்சாட்டை ஒன்றும் கவனித்துக்கொள்ளவில்லை; நல்ல காலம். ஜம்புநாதனுக்கும் அதிக நாள் அங்கே இருந்துகொண்டு

ஒவ்வொருவருடைய விதவிதமான பேச்சையும் இன்னொன்றையும் கேட்டுக்கொண்டு இருப்பதற்கில்லை. விடுமுறை நாட்கள் தீர்ந்துவிட்டபடியால் அவன் சென்னை புறப்பட வேண்டிய நாள் வந்துவிட்டது. எனவே அவனும் பசுபதியும் சாவித்திரியுடன் கிளம்பினார்கள்.

"எனக்கு இந்தச் சில தினங்களைப்போலவே என்றும் இருக்கக் கூடாதா என்றுதான் இருக்கிறது. அவ்வளவு சந்தோஷமாக இவ்விடத்தில் எல்லாருடனும் இருநதேன்" என்று சாவித்திரி சொல்லி, "இனிமேல் நாம் ஒருவர் இடத்துக்கு ஒருவர் அடிக்கடி வந்து போய்க்கொண் டிருக்க வேண்டும்; நீங்களெல்லாரும் கட்டாயம் சென்னைக்கு வர வேண்டும்" என்று வற்புறுத்திக் கூறி விடை பெற்றுக்கொண்டாள்.

"அத்தை, நீங்கள் என் மாமியாரை நேரில் வந்து பாருங்கள். அப்பொழுதுதான் உங்களுக்குச் சமையல் அறைக்குள் புகுந்து காரியம் பார்க்காமல் இருக்கிறது எப்படி, என்கிறது தெரியவரும்" என்று அத்தையைப் பிரத்தியேகமாக அழைத்தாள் சாவித்திரி.

"உனக்கு வளை காப்புச் சீமந்தம் வரட்டும்; கட்டாயம் வருகிறேன்" என்று கூறி விடை கொடுத்தாள் அத்தை. பாட்டியைச் சாவித்திரி நமஸ்கரித்து, விடை பெற்றுக்கொண்ட பொழுது, "இந்த அகிலாண்டேசுவரி கண் திறந்து பார்க்கட்டும்" என்று மனத்தோடு ஆசீர்வதித்தாள் பாட்டி. 'என் புக்ககத்தில் இப்படி நினைப்பதாகவாவது, எப்பொழுதாவது காண்பித்திருக்கிறார்களா?' என்று சாவித்திரியால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பெண்களெல்லாரும் அவளைப் பிரிய மனம் இல்லாமல் பிரிந்தார்கள். இதையெல்லாம் பார்த்த ஜம்புநாதன் மிகுந்த திருப்தி கொண்டான். அவன் முயற்சி எதுவும் இன்றி அவன் எதிர் பார்த்ததற்கும் மேலாகச் சாவித்திரியின் வருகை இப்படி மகிழ்ச்சிகரமாக முடிந்ததில் அவன் மிகுந்த சமாதானம் அடைந்தான்.

ஜம்புநாதனுக்கு இப்பொழுதெல்லாம் தன்னிடத்தி லேயே ஒருவகை மதிப்பு ஏற்பட்டுவிட்டது. முன்போல் ஒன்றுந் தெரியாத, அதாவது வெளி அநுபவம் சிறிதும் இல்லா தவனாக அவன் இருக்கவில்லை. எதையும் நன்கு கிரகித்து, சகலமும் தெரிந்து நடந்துகொள்கிறான். அவன் தந்தைகூட அவன் சொற்களுக்கு மதிப்புக் கொடுத்து ஏற்றுக்கொள்கிறார்; அவர் சிந்திக்கத் தவறின விஷயங்களைக்கூட அவன் அவருக்கு எடுத்துச் சொல்லும் அளவுக்குச் சமர்த்தன் ஆகிவிட்டான். நேற்று வரைக்கும் திருவானைக்காவில் ஒன்றுந் தெரியாத சிறு பிள்ளையாக நினைக்கப்பட்டிருந்த அவன் தன்னுடைய இந்தச் சில மாதச் சென்னைவாசத்தில் எந்த விஷயத்தையும் கூர்ந்து பார்க்கும் அறிவுள்ளவனாக மாறிவிட்டான். அவன் விவாகம் செய்துகொள்ள மறுத்து, அவன் அம்மா முதலான, வீட்டில் எல்லாருடைய அபிப்பிராயத்துக்கும் எதிராக நின்று, வெற்றி பெற்றதற்கு அத்தங்காள் வேறு அவனை மிகவும் பாராட்டினாள்.

"எங்கே நீ சம்மதித்துவிடுவாயோ என்கிறது எனக்கு. அவ்வளவு பேரும் உன் விவாகத்தில் அவ்வளவு ஆசையோடு இருக்கிறார்களே; அத்திம்பேர் வேறு மிகவும் மனஸ்தாபப்படுவார்போல் இருக்கிறதே; இது அவ்வளவை யும் லட்சியம் செய்யாமல் இருப்பது சாத்தியமா? உன் ஒரு சொல்லைப் பொறுத்ததாக அவ்வளவு பேருடைய சந்தோஷ மும் இருக்கும்பொழுது அதை வழங்க மறுக்க உனக்குத் திடம் வருமா?' என்றுதான் நினைத்தேன். ஒருவிதமாகச் சமா ளித்துவிட்டாய். சமர்த்தன்தான்! என்ன இருந்தாலும் கல்விப் பண்பு சிறிதும் இல்லாத குடும்பத்துப் பெண். பெண்ணுக்குப் படிப்பே ஒன்றும் இல்லை என்றால் அதென்ன சம்பந்தம்? அவர்கள் எதிரில் அப்படிச் சொன்னால் உனக்கு நடக்க இருக் கும் சுப காரியத்தை நான் தடுப்பதாக என்னிடத்தில் மன வருத்தம் ஏற்படும் என்றுதான் நான் சிரமப்பட்டு வாய்திற வாமல் பொறுத்துக்கொண் டிருந்தேன்" என்று தனக்கு அந்தக் கல்யாணம் நடக்கவில்லை என்கிறதில் ஏற்பட்ட திருப்

தியை அவள் தெரிவித்தாள். இப்படி அவள் அவனைத் தட்டிக் கொடுத்துச் சொன்னது அவனுடைய தன்மதிப் பைத்தான் விருத்தியடையச் செய்தது.

ஜம்புநாதனும் பசுபதியும் ரயிலடியிலிருந்து நேரே சாவித்திரியுடன் அவள் வீட்டில் போய் இறங்கி, பிறகு சாயங்காலமாகத்தான் ஹாஸ்டலுக்குச் செல்வது என்று இருந்தார்கள். இரண்டு வாரமாகச் சாவித்திரி இல்லாதிருந்ததை அவ்வீட்டவர்கள்கூட ஒருவாறு உணர்ந்து சிரமப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றிற்று. அவர்கள் அவளை ஒருவகை உத்ஸாகத்தோடு வரவேற்றதிலிருந்து அது நன்கு வெளியாயிற்று. சரோஜா, அவள் தாயார் பயந்த விதம் ஆகாரமின்றிப் பலவீனம் அடைந்துவிடவில்லை. மசக்கை தெளிந்து, படுக்கையை விட்டு எழுந்து ட்ராயிங் ரூம் சோபாவில் வந்து உட்கார்ந்திருந்தாள். சாவித்திரியைக் கண்டதும், "மன்னி, நீ இல்லாமல் அம்மா இங்கே தவித்தே போய்விட்டாள். நீ வருவதற்கு இன்னும் சில நாள் தாமதித்திருந்தாயானல், உன்னை அழைத்துவர ஆளையே அனுப்பியிருப்பாள்" என்று கூறி வரவேற்ருள்.

"என்ன சமையற்காரன் இந்தக் கிருஷ்ணன்! இவனை வைத்துக்கொண்டு எப்படி உள்ளுக் காரியம் பார்க்கிறே? வழக்கமாகச் செய்கிற கறி குழம்பைத் தவிர ஒரு அதிகப்படி பண்ணத் தெரியலையே" என்று மீனுக்ஷியம்மாள் ஏதோ அது சாவித்திரியினுடைய குற்றம்போல் ஆளைக் குற்றம் கூறினாள்.

"நான் கூட இருந்து காண்பித்துக் கொடுத்தால்தான் செய்வான். இல்லாவிட்டால் அவனுக்குத் தட்டுக்கெட்டுப் போய்விடும்" என்று சாவித்திரி சொன்னதற்கு, "என்னமோ போ; எனக்கு முடியவில்லை. சரோஜாவுக்கு வாய்க்கு வேணுமென்கிறபடி தனியாக ஒன்று செய்ய முடியாமல் போயிடுத்து. நீதான் அவனுக்கு எப்படிச் சொல்லணுமோ சொல்லிச் செய்யச் சொல்லு" என்று சாவித்திரியிடம் வீட்டுப் பொறுப்பை அவசரமாக ஒப்படைத்துவிட்டு, விச்ராந்தியாகப் பெருமூச்செறிய விரும்பினாள் அந்த அம்மாள்.

"என்ன, சித்தப்பா அகத்தைவிட்டு வர மனசு வந்ததா?"

என்றுதான் கணேசன் விளையாட்டாகக் கேட்டார். அவர் சாவித்திரி வந்ததற்காகத் தனது கச்சேரி அவசரத்தைக்கூடச் சிறிது தாமதம் செய்தார் என்று தெரிந்தது.

"மனசு வராதுபோலத்தான் இருந்தது. அவ்வளவு உபசாரம் அங்கே எனக்கு, போங்கள்!" என்றாள் சாவித்திரி.

"அவர்கள் எப்படிச் செய்திருப்பார்கள் என்கிறது எனக்குத் தெரியும். சிறுவர்கள் கதைப் புத்தகங்களில் வரும் அரசகுமாரியாகவே உன்னை ஏற்றுக் கொண்டாடி இருப்பார்கள்" என்றார் கணேசன்.

"நிஜமான ராஜகுமாரியாக இருக்க அத்தங்காளுக்குத் தகுதி இல்லையா? சிறுவர் புத்தகங்களில் வரும் விளையாட்டு ராஜகுமாரி என்கிறீர்களே!" என்று ஜம்புநாதன் சற்றுக் காரமாகவே பேச்சை ஆரம்பித்தான்.

"நிஜம் ராஜகுமாரியாக இருக்க ராஜ்யம் வேண்டாமா! அதற்காகச் சொல்லுகிறேன் அப்பா; நீ தவறாக எடுத்துக் கொள்ளாதே" என்றார் கணேசன்; தாழ்மையாகக் கூறுவதாகக் காண்பித்துக்கொண்டு.

"இப்பொழுதுதான் ஓரிடத்திலுமே ராஜ்யம் இல்லாது போய்க்கொண்டு வருகிறதே. தேசங்களெல்லாம் குடியரசாக மாறின பிறகு ராஜகுமாரிகளுக்கு எங்கே போகிறது? நாம் ஒவ்வொருவரும் நமது நாட்டு மன்னர் என்பதற்கு இணங்க, அவரவர் வீட்டுப் பெண்கள் அவரவருக்கு அரச குமாரிகள்; அவ்வளவுதான்" என்றான் பசுபதி.

"சரியாகச் சொன்னாய் அப்பா; அவனுக்கு அவள் ராணி என்று கணவனுக்கு மனைவியை நாம் சொல்லுவது வழக்கம்; அதுபோல எலலாரும் அவரவர் வீட்டுக்கு அரசகுமாரிகள் தாம்" என்று கணேசன் பசுபதியுடன் ஒத்துப் பேசினார்.

இப்படிப் பேச்சு விளையாட்டாக மாறிப்போவது ஜம்புநாதனுக்கு மனமில்லை. அத்தங்காளின் உயர்வை எடுத்துச் சொல்லி, அதைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கும் அவர் மனத்தில் பட வைக்க அது தகுதியான சமயம் அல்லவா? அதனால் அவன், "அவ்விதமெல்லாம் விளையாட்டாகத் தள்ளி

விடுவதற்கில்லை. அத்தங்காள் அரசகுமாரியாக இருக்கத் தகுந்த சிறப்புகள் உள்ளவள்தான். மற்றப் பெண்களுடன் அவளைச் சமமாகக் கூறிவிட முடியாது. எல்லாருக்கும் ஒன் றிருந்தால் ஒன்றில்லை; அழகிருந்தால் பணம் இருக்கிறதில்லை; இரண்டும் சேர்ந்து தப்பித்தவறி இருந்துவிட்டாலோ பிறகு கேட்கவே வேண்டாம்; அவ்விடத்தில் நாம் குணத்தை எதிர் பார்க்கவே முடியாது. அழகும் பணமும் சேர்ந்து கர்வத்தை உண்டுபண்ணி நல்ல குணங்களைத் தடிகொண்டு விரட்டிவிடும். அப்படிக்கின்றி, நிலவுக்கு ஒளியுடன் குளிர்ச்சியும் சேர்ந்திருப் பதுபோல அத்தங்காளிடம் எல்லா அம்சங்களும் ஒன்று சேர்ந் திருக்கின்றன. அவளைப்போல் பெண்கள் நம்மில் யார்தான் இருக்கிறார்கள்? 'கொல்லைப் பச்சிலைக்கு வீரியம் இல்லை' என்பதுபோல் நம்மிடத்தில் இருக்கும் உயர்வை நாம் அறியா மல் இருக்கிறோம். அலட்சியங்கூடச் செய்கிறோம்'' என்று வேகத்துடன் பேசினான் ஜம்புநாதன்.

'அவனுடைய இவ்வளவு வேகத்துக்குக் காரணம் என்ன?' என்கிற அதிசயத்தோடு அவனைப் பார்த்தார் கணேசன். சாவித்திரிகூட அவன் பேச்சுக்கு அதிசயப்படுபவளாகத்தான் காணப்பட்டாள்.

"பெரிதாகக் குறை கூறுகிறாயே? உன் அத்தங்காளிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அதையாவது சொல்லப்பா. உனக்குத்தான் அவளுடைய உசத்திகள் சரியானபடி தெரிந் திருக்கின்றன; இல்லையா? நீ நினைத்திருப்பதைக் கேட்டால் எனக்கு அல்லவா பொறாமை தோன்றும்போல் இருக்கிறது; நம்மைவிட நம் மனைவியை அதிகம் அறிந்திருக்கிறானே என்று!'' என்று கணேசன் பரிகசித்துச் சொன்னபொழுது ஜம்புநாத னுக்குத் தன்னுடைய படபடப்பில் சிறிது வெட்கம் ஏற்பட்டது. ஆனாலும், ஏதோ சிறிதாவது அவரிடம் உண்மையைத் தெரி வித்துப் பேசினதாகத் திருப்தி கொண்டான். இப்பொழுது இல்லாவிட்டாலும் பிறகு, தான் சொன்னதை நினைத்துப் பார்க் கும்பொழுது, கணேசன் மனத்திற்கும் அது படலாம் அல்லவா?

"உண்மையில் அத்தங்காள் உயர்ந்தவள் அல்லவா? அதனால்தான் சொல்கிறேன்'' என்று அழுத்திச் சொல்வ

தோடு நிறுத்திக்கொண்டான்.

'ஒருவரைப்பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங்களை அவர்கள் முகத்துக்கு நேரிலேயே வெளியிட்டுச் சொல்லும் தைரியம் ஜம்புநாதனுக்கு எப்பொழுது வந்தது?' என்கிற ஆச்சரியந்தான் பசுபதிக்கு. ஆனால், இப்பொழுதெல்லாம் பசுபதி அவனைத் தெரிந்துகொண் டிருப்பதற்கு மேலாகவே எவ்வளவோ விதத்தில் அவன் புது விதமாக நடந்துகொள்கிறனே!

சாவித்திரியை அவள் வீட்டில் சரியானபடி கௌரவிக்கவில்லை என்று ஜம்புநாதன் என்ன, பசுபதியுந்தான் நினைத்து வந்திருக்கிறன். அதைக் கணேசனிடமே ஜம்புநாதன் சொல்லத் துணிந்தது வேண்டுமானால் சற்று அதிசயமாகப் பட்டது பசுபதிக்கு என்று கூறலாம்.

அவர்கள் ஹாஸ்டலுக்குக் கிளம்பினபோது சாவித்திரியும் கணேசனும் அவர்களைக் காரிலேயே கொண்டுபோய் விட்டு வருவதாகக் கூறி, கூடப் போய்விட்டு வந்தார்கள். பதினைந்து நாள் இடைவெளிக்குப் பிறகு அவர்களுடைய குருகுல வாசம் மறுபடியும் ஆரம்பமாயிற்று. விடுமுறைக்குத் தங்கள் ஊர்களுக்குச் சென்று திரும்பி வந்தவர்கள் சிலர், எங்கும் போகாமல் அவ்விடத்திலேயே தங்கினவர்கள் சிலர், இப்படிக் கல்லூரி மாணவர்கள் இருதரப்பட்டவர்களாக இருந்தார்கள். எங்குமே செல்லாமல் தங்கிவிட்டவர்களில் ஜானும் ஒருவன். மேரி இருக்கும் இடத்திலாவது இருக்க எண்ணி, அவன் எங்கும் செல்லவில்லை. வகுப்புகள் ஒன்றும் இல்லாத சமயத்தில், சும்மா இருக்கும் நேரங்களில் அந்தப் பிரதேசத்தைச் சுற்றி வருவதால், ஒருவேளை மேரியைத் தனிமையில் சந்திக்க நேரலாமோ என்கிற ஆசை அவனுக்கு. மேரிக்கும் பொழுது போகாதல்லவா? அவளும் அங்கும் இங்கும் உலாவுவதற்கு வரக் கூடும். ஆனால் அவ்விதம் ஒன்றும் நேருவதற்கு இல்லாமல் மேரி அவள் பெற்றோர் இருக்கும் ஊருக்குச் சென்று விட்டாள். அது எதிர்பாராததுதான்; ஜான் ஏமாறும்படி ஆயிற்று.

அவனுடன் படிக்கும் மாணவர்களில் பாதிப் பேரும் இல்லாமல் அவன் ஆசையோடு எதிர்பார்த்தபடி மேரியையும்

சந்திக்க இயலாமற் போகவே, அவன் ஒன்றும் செய்வதற்கின்றித் தவித்துப் போனுன். ஒன்றிலும் மனம் பொருந்தாமல், பொழுதையும் கழிக்க வகையற்று நாட்களை எண்ணித் தள்ளிக்கொண்டிருந்தான். ஜம்புநாதனின் வரவைக் காண அவனுக்குத்தான் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. தன் அந்தரங்கச் சுகதுக்கங்களைச் சொல்லிக்கொள்ள, அவனைத் தகுதியான ஆளாக நினைத்து வைத்திருக்கிருன் அல்லவா? காரிலிருந்து இறங்கும் அவனைப் பார்த்தவுடன் காரின் பக்கத்திலே போய் ஆவலாக வரவேற்ருன் அவன். அவன் அவ்விதம் செய்ததில் சாவித்திரியையும் கணேசனையும் பார்க்க நேர்ந்தது. ஜம்புநாதனும் அவனுக்கு அவர்களையும், அவர்களுக்கு அவனையும் அறிமுகப்படுத்திஞன். அவன் எங்குமே போகவில்லையா, என்பதாக ஏதோ கேட்டுவிட்டுக் கணேசன் காரை ஓட்டிச் சென்ற பிறகு, பசுபதி, ஜம்புநாதன், ஜான் மூவரும், பொதுவாக ஊர் சென்று வந்ததைப்பற்றிச் சிறிது பேசிக்கொண் டிருந்தார்கள். பசுபதி எழுந்து வார்டனைப் பார்த்து வருவதாகச் சென்ற பொழுது ஜான், "வா, சற்று வெளியிற் சென்று உலாவி வருவோம" என்று ஜம்புநாதனை அழைத்தான். "பசுபதியிடம் சொல்ல வேண்டாமா?" என்று ஜம்புநாதன் சந்தேகித்ததற்கு, "பக்கத்தில் இருக்கும் நண்பனிடம் சொல்லிவிட்டு வா; அவன் தெரிவிப்பான்" என்று சொல்லிவிட்டான் ஜான். அதன்படியே செய்து இருவரும் கிளம்பி வெளியே சென்ருர்கள். ஜானுக்கு அவன் மேரியுடன் தனித்து இன்பமாக நாட்களைக் கழிக்க நினைத்திருந்தது நடவாமல் போன மன வருத்தத்தைச் சொல்லி ஆற வேண்டும் என்கிறது. அதற்கு ஜம்புநாதனைவிடப் பொறுமையுடன் கேட்கக்கூடிய ஆசாமி யார்தான் இருக்கிருர்கள்? அதற்காகவே துடித்துக்கொண் டிருந்த அவன், ஜம்புநாதனைத் தனியே அழைத்துச் சென்று பதினைந்து நாட்களாகத் தான் தவித்த தவிப்பையும் எண்ணிய எண்ணங்களையும் சொல்லித் தீர்த்தான்.

"இவ்வளவுக்கும் மேரி இன்னும் இவ்விடம் வநததாகவே தெரியவில்லை. நாளைக்குத்தான் வருவாள்போல் இருக்கிறது" என்ருன் அவன்.

"நீ தனியாக இப்படிக் கஷ்டப்படுவதில் பிரயோஜனம்

என்ன? உன்னளவு அவளுக்கு உன்னிடம் அன்பு இருந்தால் அவள் அதன் பொருட்டு ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ள மாட்டாளா? அப்படி ஒன்றும் அவள் செய்வதாகத் தெரியவில்லையே! அவள் உன்னிடம் சொல்லாமலகூட ஊருக்குப் போயிருக்கிருளே!'' என்று ஜம்புநாதன் சந்தேகித்ததற்கு, "உனக்கு மேரியைத் தெரியாது. அதனுல் சொல்லுகிருய். அவள் தமக்கை, அவள் புருஷன் இவர்கள் எங்கள் காதலைக் குறித்துச் சரியான அபிப்பிராயம் கொள்ளாததால் அவள் அவ்விதம் என்னிடம் அசட்டை காண்பித்து நடந்துகொள்ள வேண்டி இருக்கிறது'' என்று ஜான், ஜம்புநாதனின் சந்தேகங்களை ஏற்காமல் பேசினுன்.

''இருந்தாலும் எனக்குச் சந்தேகந்தான் ஏற்படுகிறது அப்பா; அவளோ உனக்கு வயதில் பெரியவள்; உனக்காக அவள் எவ்வளவு காலந்தான் விவாகம் இல்லாமல் காத்திருப்பாள்? உன் கல்லூரிப் படிப்பு முடியவே இன்னும் இரண்டு வருஷம் இருக்கிறது. அப்புறம் உனக்கு வேலை கிடைத்தாக வேண்டும். அப்படியும் எடுத்த எடுப்பில் நல்ல சம்பளமாக இருந்தால் ஆயிற்று. இல்லாவிட்டால் சம்பள உயர்வுக்குக் காத்திருக்க வேண்டும். இவைகளை எல்லாம் சிந்தனை செய்யும்பொழுது நீ வீணுக்கு அவளிடம் ஆசை வைத்துத் தவிக்கிருய் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நீ அந்த ஆசையை விட்டுவிடுவதுதான் நலம்'' என்று ஜம்புநாதன் ஜானுக்குப் புத்தி கூறினுன். அவன் வீணுக்குக் கஷ்டப்பட்டு மனத்தை வாட்டிக்கொள்கிருன் என்கிறது அவனுக்கு.

''இந்தக் காதலை விடுவதா? அது என் உயிருடன் அல்லவா ஒன்ருகச் சேர்ந்து பிணைந்து கிடக்கிறது! அதைத் துறப்பது என் உயிரையும் துறப்பதுதான்; தெரியுமா? இருதயத்தினுள் வேரூன்றிவிட்ட ஒன்றைப் பிடுங்கி எடுப்பது அந்த இருதயத்தையே இரண்டாகப் பிளந்துவிடாதா? நீ சொல்கிறபடி மேரி வேறு யாரையாவது மணப்பதாக இருந்தாலும் அப்பொழுதும் நான் என் மனத்தை இன்னொருத்தியிடம் செலுத்த மாட்டேன். என் காதல் சாதாரண சரீர சம்பந்தமாக ஏற்படுகிற ஆசை அல்ல; அதை நினைத்தபடி மாற்றிக்கொள்ள முடியாது. மேரிக்

காக என் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்து, அவளை நினைத்த வண்ணம் என் ஆயுளைக் கழித்துவிடுவேன்; தெரியுமா! அவள் நன்மை ஒன்றைத்தான் நான் கோருகிறேன். அவள் என்னை விட்டுப் பிரிந்து சுகப்படுவதாக இருந்தால், நான் அதற்கு ஒருபோதும் குறுக்கே நிற்கமாட்டேன். ஆனால் பிரம்ம சாரியாகவே இருந்து என் வாழ்நாளை அவளுக்கு அர்ப்பணம் செய்து, அவள் நலத்தையே சதா தியானிப்பேன்'' என்று என்ன என்னவோ பேசினான் ஜான்.

ஜம்புநாதனால் அறிய முடியாதபடி ஜானின் உணர்ச்சிகள் நூதனமாக இருந்தன. "என்னவோ அப்பா, இது மாதிரி விஷயங்களில் எனக்கு அதிகம் சொல்லத் தெரியவில்லை. கதைகளிலும் கவிதைகளிலும் தவிர, நிஜ வாழ்க்கையில் காதல் அநுபவங்களைக் கண்டவர்கள் எங்களில் யாரும் இல்லை. அதனால் என்னாலும் உன்னைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது'' என்றான்.

"அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்? நீங்கள் எந்தப் பெண்ணிடத்திலும், வாழ்க்கையில் எந்தச் சமயத்திலும் அன்பும் ஆசையும் கொள்வதில்லையா?'' என்றான் ஜான்.

"அதில்லாமல் என்ன? எவ்வளவோதான் இருக்கிறது. நமது சகோதரிகளிடம் அன்பில்லையா? இருக்கத்தான் இருக் கிறது. நம்மைச் சேர்ந்த பெண்களிடம் அன்பு இல்லாமற் போகுமா? நீ ஏதேதோ சொல்லுகிறாயே. அவ்விதம் இல்லை என்று சொல்லுகிறேனா'' என்றான் ஜம்புநாதன்.

"உங்கள் அன்பைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்காததனா லேயே அது உங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. வேறொன் றும் இல்லை. மானிடர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்கக் கூடிய உணர்ச்சியல்லவா அது! மற்ற எல்லா உணர்வுகளும் ஒரேவிதம் இருக்கும்பொழுது, காதல் உணர்ச்சி மட்டும் ஒரு நாட்டாருக்கு இல்லையென்று ஆகுமா? நீங்கள் அதற்கு இடங்கொடாமல் அது தோன்றுமுன் அமிழ்த்திச் சாக அடித்துவிடுகிறீர்கள் என்றுதான் நினைக்கிறேன். காதல் இல்லாத வாழ்க்கை சூனியம் அல்லவா? அது ஈசுவர பக்திக் குச் சமானம் ஆயிற்றே! அதற்கு இடங்கொடாமல் மிருகங்

களைப்போல உணர்வற்று இருப்பார்களா? நீ எந்தப் பெண்ணை யாவது இதுவரையிலும், உலகில் மற்ற எல்லாரையும்விட உயர்ந்தவளாக நினைத்ததில்லையா? அவளைப் பார்க்க, அவ ளுடன் பேச, அவள் பக்கத்தில் இருக்க, அவள் விருப்பத்தைச் செய்ய நீ ஆசைப்பட்டதில்லையா? அவளுக்குக் கடுகளவு சிரமம் ஏற்படுவதாக இருந்தாலும், உனக்கு அது மலைபோலப் பெரிதாகத் தோன்றின தில்லையா? அவள் முகம் எப்பொழு தும் ரோஜா மலராக மலர்ந்து இருப்பதை விட்டு, சிறிது வாட்டம் அடைந்தாலும், விளக்கில் விழுந்த விட்டிலைப்போல் நீ துடித்துச் சிரமப்பட்ட தில்லையா? வாழ்க்கையில் அவள் சந்தோஷத்தைத் தவிர வேறு ஒன்றையும் விரும்பாமல் இருக்க உனக்குத் தோன்றின தில்லையா? இப்பொழுது இல்லாவிட்டா லும் இன்னும் கொஞ்சம் பொறுத்தாவது இந்த உணர்ச்சிகள் உனக்கு ஏற்பட்டுத்தான் தீர வேண்டும். வாழ்க்கையில் இன்று இல்லாவிட்டாலும் ஒரு நாள் நீயும் இந்தக் காதல் நங்கையைக் கண்டுதான் தீருவாய். ஒருவன் எந்த ஜாதியாக இருந்தால் என்ன, எந்தத் தேசத்தானுக இருந்தால் என்ன? அவன் வேண்டுமானுல் காதலைப் புரிந்துகொள்ளாமல் இருப்பான். ஆனுல் அந்த உணர்வு மட்டும் அவனுக்கு உண்டாகாமல் போகாது; நிச்சயம்!'' என்று ஆவேசம் வந்தவன்போல் பேசி னுன் ஜான்.

''அதற்கென்ன; நீ சொல்கிற அவ்வளவும், - நான் இன்று என்னுடன் காரில் வந்தாளே அத்தங்காள் – அவளுக்காக நான் நினைத்து அநுபவிக்கும் எண்ணங்களும் உணர்ச்சிகளுந் தான். இவைகளையா நீ காதல் என்று கூறுகிருய்!'' என்று அதிசயத்துடன் கேட்டான் ஜம்புநாதன்.

''ஆமாம்; உனக்கு ஏன் அவளிடம் காதல் உண்டாகக் கூடாது? பார்க்கும்பொழுதே மனத்தை வசீகரிக்கும்படியான சௌந்தரியம் தென்படுகிறதே அவளிடம்'' என்றுன் ஜான்.

''அட சீ! அவள் என்னுடைய அத்தங்காள்! எனக்கு வயதில் பெரியவள்! அவளுக்குக் கல்யாணம் ஆகியிருக் கிறது! சில வருடங்களாகக் கணவனுடன் வாழ்க்கை நடத்து கிருள்! இவ்வளவு இருக்கும்பொழுது அவளிடம் எனக்கு

இருக்கும் அன்பிற்குக் காதல் என்று பொருள் கொள்வ தாவது!'' என்றான் ஜம்புநாதன். சாவித்திரியிடம் இருக்கும் அன் பிற்கு இவ்விதம் பெயரிடுவதாவது என்று இருந்தது அவனுக்கு.

''அங்கேதான் நீ தவறு செய்கிறாய். காதல் இவ்விதமெல் லாம் யோசித்துக்கொண்டு ஏற்படும் உணர்ச்சி அல்ல. அது காரணங்கள் தேடிக்கொண் டிராது. அதற்கு வயது, அந்தஸ்து, நிலைமை என்று வித்தியாசம் கிடையாது. அதனால்தான் ஈசு வரப் பிரேமையை ஒத்திருக்கிறது அது!'' என்றான் ஜான். 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக, எதிலிருந்தோ எதற்கோ கொண்டுபோகிறானே!' என்று ஜம்புநாதன் மனம் தடுமாறினான்.

ஆனால் ஜான் நிறுத்தாமல், ''ஒன்றுதான்: இந்தக் காதல் சரியான இடத்தில் சரியான முறையில் ஏற்பட்டதானால் நன் மையாக ஆகிறது. சொர்க்க சுகத்தை இவ்விடத்திலேயே அடையச் செய்கிறது. அப்படி இல்லாமல், அது தாறுமாறாக ஏற்பட்டுவிட்டால் அப்பொழுது வாழ்க்கை பாழ்தான்; பாலை வனத்திற்குச் சமானந்தான். அதனால்தான் காதலுக்கு அதிர்ஷ் டம் வேண்டும் என்கிறது. நான் மேரியிடம் ஆசை வைத்திருக் கிறேன். அவளை மணம் புரியும்படியான தகுதியையும் அந்தஸ் தையும் அடையச் சில வருஷங்கள் நான் காத்திருக்க வேண்டி யிருக்கிறது. ஆனால் உனக்கு அந்தச் சௌகரியங்கூட இல்லையே. முதலிலிருந்தே அவ்வளவும் தவறாக இருக்கிறதே. உங்களில் வயதில் பெரியவர்கள் மணக்க முடியாது என்ப துடன், உன் அத்தங்காள் விவாகமானவளுங்கூட. எங்களில் அப்படி இல்லை. வயதில் பெரியவர்களை மணக்கக் கூடாது என்கிற சட்டம் கிடையாது. அதோடு விவாகமானவரானாலும் விவாக ரத்துச் செய்துகொண்டு மறு மணமும் செய்துகொள்ள லாம். உங்களில் அப்படி இல்லையே. நீ உன் ஆசையை எந்த விதத்திலும் விட வேண்டியதுதான். அது என்னுடைய அன் பைப்போல் ஆழமாக வேரூன்றி இல்லாதிருந்தால் உன்னால் அது சாத்தியமாகும்'' என்று ஜானே ஜம்புநாதனுடைய அன் பைக் காதல் என்று ஸ்திரப்படுத்திக்கொண்டு, அதற்கு மேல் செய்ய வேண்டியதைக் குறித்தும் தீர்மானங்கள் சொல்லி

விட்டான்.

அவன் மேலும் அது விஷயமாகத் தொடர்நது சொல்லிக் கொண்டு போவதைக் கேட்டுக்கொண்டு அவனோடு அங்கே இருக்க ஜம்புநாதனால் முடியவில்லை. அவன் தன்னைப்பற்றி வெளிப்படுத்தின சங்கதிகள் அவனை ஒரு கலக்குக் கலக்கிவிட்டன. அவன் சொல்வதில் உள்ள தவறுகளையோ பொருத்தத்தையோ அலசிப் பார்க்கக்கூட அவன் மூளை அந்தச் சமயத்தில் வேலை செய்ய மறுத்தது. அவ்வளவு அதிர்ச்சி அதற்கு ஏற்பட்டுவிட்டது. "நாளைக்குப் பார்க்கிறேன்" என்று ஏதோ சொல்லி, விடைபெற்றுக்கொண்டு, எழுந்து தன் அறையை வந்து அடைந்தான்.

"வருவதற்குள் ஜான் உன்னை இழுத்துக்கொண்டு எங்கேயடா போனான்? அதற்குள் என்ன உபதேசத்திற்குக் கிளம்பி விட்டான்?" என்று அறையிலிருந்த பசுபதி கேட்டபொழுது, அந்த உபதேசம் என்கிற சொல் ஜம்புநாதனின் இருதயத்தில் ஊசிகொண்டு குத்துவதுபோல் இருந்தது. உண்மையில் ஜான் அவனுக்குக் காதல் உபதேசந்தான் செய்தானா என்ன?

பசுபதிக்குப் பதில் சொல்லக்கூட அவனுக்கு எளிதாக வார்த்தைகள் வரவில்லை. "என்னவோடா, எனக்குத் தலையை வலிக்கிறது. இரவு ஆகாரம் வேண்டாமென்று தோன்றுகிறது. நான் படுத்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் படுக்கையை விரித்துப் படுத்தும் விட்டான் அவன்.

ஏதாவது காய்ச்சல் வரப்போகிறதா என்ன? பசுபதிக்குத் திடுக்கிட்டது. ஜம்புநாதனுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். நெற்றி கொதிப்பதுபோலப் பட்டது அவனுக்கு. 'லங்கணம் பரம ஔஷதம்' என்று பெரியவர்கள் சொல்வதை நினைத்தவனாக, இரவுச் சாப்பாடு இல்லாமல் இருப்பது நல்லது தான்; அவனை அப்படியே விட்டுவிட்டு அவனுக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்கவேண்டி விளக்கையும் அணைத்துவிட்டுத் தான் மட்டும் சென்று சாப்பிட்டு வந்து, சத்தம் செய்யாமல் படுத்துக்கொண்டான். காய்ச்சல் ஒன்றும் பெரிதாக வராமல் காலையில் சரியாகப் போக வேண்டுமே என்கிறது அவனுக்கு.

ஜம்புநாதன் கண்களை மூடிப் படுத்திருந்தான். அவன் தேகம் அசைவற்றுத்தான் படுக்கையில் கிடந்தது. ஆனால் மூளை மட்டும் காற்றின் வேகத்தில் சுழன்று வேலை செய்து கொண்டிருந்தது. வழக்கமாக ஜானிடம் தான் தனித்து நடத்தும் சம்பாஷணையை முழுதும் அப்படியே பசுபதியிடம் சொல்லா விட்டாலும், அங்கங்கே பொதுவாகச் சிலவற்றைச் சொல்லத் தான் சொல்வான். பசுபதியும், "போடா, நீ அவன் பேச்சைப் பெரிதாக எடுத்துக்கொண்டு" என்றுதான் அதை அலட்சியம் செய்துவிடுவான். இன்று, ஜான் சொன்னவைகளைச் சிறி தளவாவது பசுபதியிடம் கோடி காண்பிப்பது சாத்தியமாக அவனுக்குப் பட்டதா? தன் மனத்திற்குள் நினைத்துப் பார்க்கவே ஜம்புநாதன் நடுங்குகிறானே! இன்னொருவரிடம் சொற்களைக் கொண்டு அவைகளை வாயால் சொல்வது எப்படி? அத்தங்காளிடம் அவன் வைத்திருக்கும் அன்பிற்கு, காதல் என்றல்லவா ஜான் பொருள் கொடுத்துப் பேசுகிறான்? அது அப்படித்தானா? உண்மையாகவே காதல் என்னும் சொல்லுக்குப் பொருள்தான் என்ன? ஸ்திரீ புருஷர்களிடையே ஏற்படுகிற ஒருவகை அன்பை, பரஸ்பரக் கவர்ச்சியைக் காதல் என்று புத்தகங்கள் வருணித்து, அதைக் கொண்டு என்ன என்னவோ கதைகளும் சித்திரித்துக் கூறுகின்றன. நேரில் ஒருவருக்கு அந்த அநுபவம் ஏற்பட்டு யாராவது கண்டிருக்கிறார்களா? ஜான் இப்பொழுது அந்த உணர்ச்சியில் தான் அமிழ்ந்து கிடப்பதாகத் தன்னைப்பற்றிச் சொல்லிக்கொள்கிறான. அவன் தன்னோடு நிறுத்திக்கொண்டானா? இல்லையே. அவனையும் அலலவா அந்த உணர்வுக்கு ஆதீனம் ஆக்கியிருக்கிறான்?

உண்மையில் ஜான் சொல்கிறபடி தன்னுடைய நிலைமை இருக்கிறதா? ஜம்புநாதன் சங்கோசம், பயம், அருவருப்பு இவைகளை விட்டு முதலிலிருந்து நடந்தவைகளைத் தனக்குள்ளாகவே நினைத்துப் பார்த்தான். அத்தங்காளைப் பார்த்த நிமிஷமே அவள் அழகைக் கண்டு அவன் பிரமித்துப் போனான்.

அவளுடன் பழகப் பழக அவள் குணங்கள் அவனை அடிமையாக்கிக் கொண்டன. அத்தங்காளிடத்தில் அவனுக்கு அபாரப் பிரேமைதான் இருக்கிறது. எந்தப் பெண்ணையும்விட அவளை உயர்ந்தவளாக மதிக்கிறான். அவள் சந்தோஷத்தில் சந்தோஷமும், துன்பத்தில் துன்பமும் படத் தயாராக இருக்கிறான். அவளுக்கு மனத்தாலும் யாராவது கெடுதல் நினைப்பதை அவனால் பொறுக்க முடியவில்லை. இதுவரையிலும் வீட்டில் அம்மா, அத்தை, இவர்கள் யாருக்காகவுங்கூட அவன் அதுமாதிரி இருந்ததில்லை. அவர்கள் விருப்பத்துக்கு மாறாக அவன் தந்தையோ அத்திம்பேரோ அவர்களைக் கஷ்டப்படுத்தும்போது கூட, சாவித்திரியின் விருப்பத்திற்கு விரோதமாக நடப்பவர்களிடம் உண்டாகும் கோபமும் வெறுப்பும் ஏற்பட்டதில்லை; சாவித்திரி வருந்துவதைக் கண்டு ஏற்படும் மனக் கிலேசமும் ஏற்பட்டதில்லை. இப்பொழுது அவனேகூடக் கல்யாணம் வேண்டாம் என்று மறுத்துக் கூறி, அவன் அம்மா முதலானவர்களை வருத்தத்திற்கு உள்ளாக்கியிருக்கிறானே. அதை அவன் சிறிதாவது சிந்தித்துப் பார்த்தானா? அதைப்பற்றி நினைவே இல்லாமல், திருப்தியோடுவேறு இருக்கிறான். அத்தங்காள் தன்னைச் சிலாகித்தாள் என்பதற்குச் சந்தோஷம் வேறு கொள்கிறான். இவைகளெல்லாம் ஜான் சொல்லும் காதல் உணர்ச்சியின் அடையாளங்கள்தாமா? காதலைத்தான் அவைகள் குறிக்கின்றனவா?

அத்தங்காள் தன்னைவிடப் பெரியவளாயிற்றே! வயதில் சிறிய பெண்ணிடமே காதல் ஏற்பட்டதாக நமது இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால், ஜான் அப்படி ஒன்றும் கிடையாது என்கிறான். காதலுக்குக் கண்ணில்லை என்பது அவன் வாதம். ஆற அமர யோசித்து, காரண காரியங்களோடு ஏற்படும் அன்பு, காதலாக ஆக முடியாது என்பது அவன் கட்சி. அவன் சொல்லும் முறையைப் பார்த்தால் அவனுடையது காதலாக இருப்பதற்கு ஒரு தடையும் இல்லை. இவ்விதமெல்லாம் அத்தங்காள்பால் தன்னுடைய உணர்ச்சிகளைத் தனக்குள்ளாகவே அவன் துழாவித் துழாவி அலசிப் பார்த்தான். அவனுக்குச் சந்தேகத்தைத் தவிர தெளிவு ஏற்படவில்லை. ஜான் சொல்

கிறபடி தன்னுடைய உணர்வைக் காதல்தான் என்று ஏற்றுக் கொண்டு நினைக்கும்பொழுது சந்தோஷம் ஒரு புறமும் வருத்தம் ஒரு புறமும் உண்டாயிற்று அவனுக்கு. இதற்கு முன் நம்மில் யாரும் அநுபவித்தறியாத காதல் உணர்வை வாழ்க்கையில் அவன் அடைந்துவிட்டதில் சந்தோஷம். ஆனால், அது சரியான முறையில் சரியான இடத்தில் ஏற்படாமல் போய்விட்டதில் வருத்தம். தன்னிடத்திலேயே திருட நினைத்ததுபோல ஒருவகை அருவருப்பும் அவநம்பிக்கையும் உண்டாயின அவனுக்கு. பிறர் மனைவியை மனத்தினால் நினைப்பதும் பெரிய பாவம் என்பது இந்துக்களின் கொள்கை. அந்தப் பாவத்தை அல்லவா அவன் செய்கிறவன் ஆகிறான்? எவ்விதப் பிராயச்சித்தம் செய்து அதை மாற்றிக்கொள்வான் அவன்? அவனுடைய அன்பு, கேவலம் காமத்தால் உண்டானதாக இராமல் தெய்வத்தன்மை பொருந்தியதாகச் செய்துவிடுவான். அதைக் கொண்டு அத்தங்காளை மலர் கொண்டு அர்ச்சிப்பதுபோல அர்ச்சிப்பான். அதாவது ஜான் சொல்லுவதுபோல் பிரம்மசரியத்தில் வாழ்நாளைக் கழித்துக்கொண்டு சதா அவளுடைய நன்மைகளையே மனத்தில் வைத்து ஈசுவரனைத் தியானிப்பான். அப்பொழுது அவன் காதலில் உள்ள மாசு நீங்கி, பயங்கரம் மாறி, உயர்வாக ஆகி, தூய்மை பெற்று, அத்தங்காளுக்கு நன்மைகளைச் செய்யும்படியான சக்தியைப் பெற்றுவிடும்.

இப்படித் தபசாக அதை மாற்றி, அவளுக்கு நன்மை செய்வதில் உபயோகித்துவிடுவான். ஜானே, பிறர் மனைவியை இச்சிப்பதும், அவள் மனத்தை மாற்றித் தன்னை அடையும்படி செய்துகொள்வதும், சகசமாக நிகழக்கூடிய ஜாதியில் பிறந்தவன். அவனால் சாத்தியமாகும் ஒன்று, தியாகத்திற்கே பெயர்பெற்ற ஒரு மதத்தில் பிறந்திருக்கும் தன்னால் முடியாதா? தியாகத்திலேயே உருவாகிற வாழ்க்கையல்லவா நம்மவர்களுடையது?

இப்படிப் பல பல எண்ணினான். தேகத்தின் எங்கோ ஒரு விரல் நுனியில் கடித்த பாம்பின் விஷம், உடல் முழுதும் பரவுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? அப்படி ஜானின் சொற்கள் ஏற்படுத்திய கிளர்ச்சி, ஜம்புநாதனின் மனத்தில்

எங்கோ ஒரு மூலையில் தோன்றி, இருதயம் பூராவும் வியாபித்துக்கொண்டது. மாற்று எண்ணத்துக்கு அதில் இடம் இருப்பதாகவே தெரியவில்லை.

இப்படிச் சாவித்திரியிடத்தில் காதல் உண்டு என்பதை ஏற்றுக்கொண்ட பிறகு, அதற்கு மாற்ருகச் செய்ய வேண்டிய பிராயச்சித்தங்களைப்பற்றியே எண்ணிப் புரண்டுகொண்டிருந்தான். முதலில் அவன் செய்ய வேண்டியது தன் உணர்ச்சியை யாரும் அறிந்துகொள்ளாமல் இருக்கும்படி மறைத்து வைத்துக்கொள்வதுதான். உடனிருக்கும் பசுபதியும் ஊகித்து விட முடியாதபடி ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். அடிக்கடி அத்தங்காள் வீட்டுக்குச் சென்று அவளைப் பார்ப்பதை அடியோடு விட்டுவிட வேண்டும். படிப்பில் மனத்தை முழுதும் ஈடுபடுத்தி, தனது அன்பை மறக்க முயல வேண்டும். இப்படி ஒவ்வொன்ருக நிபந்தனைகளை விதித்துக்கொண்டான். இரவு முழுதும் இவ்விதம் மனத்தை வருத்திக்கொள்வதிலேயே கழிந்தது அவனுக்கு.

மறு நாள் சூரிய வெளிச்சத்துடன் அவன் இருண்டிருந்த இருதயத்துக்கும் சிறிது பிரகாசம் ஏற்படுவதுபோல் தோன்றிற்று. தன்னுடைய நிலைமைக்கு இரவிலிருந்த பயங்கரம் குறைந்து, தான் அதைப் பரிசுத்தம் ஆக்கிவிடுவோம் என்கிற நம்பிக்கையும் பிறந்தது. அத்தங்காளிடம் இருக்கும் அன்பு, காதல் என்று மாறினதற்காகவும் வெளிப்படையாக ஒரு வித்தியாசத்தையும் அவன் அடைந்துவிட்டதாகத் தெரியவில்லை.

"என்னடா! உடம்பு எப்படி இருக்கிறது? தலைவலி போயிற்ரு?" என்று பசுபதி கவலையோடு கேட்டதற்கு, "ஒன்றும் இல்லை, எல்லாம் சரியாகிவிட்டது" என்று பாதியும் உண்மையாகவே பதில் சொன்ஞன் அவன்.

"அப்பா, உனகுக் காய்ச்சல் ஏதாவது வந்துவிடப் போகிறதே என்று நான் விசாரப்பட்டுப் போனேன்" என்ருன் பசுபதி.

"காய்ச்சல் வந்துவிட்டால்தான் என்ன குடி முழுகிப் போகும்? தலைவலியும் காய்ச்சலும் மனிதர்களுக்கு வராமல்

இருக்குமா? மரம் மட்டைகளுக்கு வருமா?'' என்றான் ஜம்புநாதன்.

''அதற்கில்லையடா, உன் மன நோய்களுக்கு நான் பொறுப்பாளி அல்ல. ஆனால் உன்னுடைய தேக நலத்திற்கு நான் உத்தரவாதமாக, என்னை நானே நினைத்துக்கொண்டிருக்கிறேன்; தெரியுமா? உன்னைத் திடகாத்திரனாக, உன் படிப்பு முடிந்து உன் மனிதர்களிடம் ஒப்படைப்பது என் பொறுப்பு. ஆனால் உன் இருதயத்தைக் குறித்து எனக்கு அக்கறை இல்லை. அதை நீ எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்'' என்றான் பசுபதி.

அவன் எதையாவது ஊகித்துக்கொண்டுதான் அப்படி மறைபொருளாகப் பேசுகிறானா என்று திடுக்கிட்டது ஜம்புநாதனுக்கு. பேச்சுத் தொடர்ந்து ஏதாவது நம்மை மீறி வார்த்தை வெளி வந்துவிடப் போகிறதே என்கிற ஜாக்கிரதையுடன் விளக்கிக் கேள்வி கேட்காமல் பேச்சை நிறுத்திக்கொண்டான்.

அன்றிலிருந்து அவன் மிக்க சிரத்தையுடன் வகுப்புப் பாடங்களில் ஈடுபட்டான். கல்லூரி விவாதப் போட்டி, பேச்சுப் போட்டி, வியாசங்கள் போட்டி இவ்விதம் பல போட்டிகளிலும் சேர்ந்து முயன்று சிலவற்றில் பரிசுகள்கூட வாங்கினான். அவனுடைய காதல் அவைகளுக்குத் தடையாக நின்று, மனம் பொருந்திச் செய்ய முடியாதபடி அடித்துவிடவில்லை. அவனுக்கே அது சற்று ஆச்சரியந்தான். காதல் பித்துக்கொண்டவர்கள் வேறு ஒன்றிலும் மனம் செல்லாது இருப்பார்கள். என்று அவன் கேள்விப்படுவது மட்டுமா? புத்தகங்களிலெல்லாம் படித்திருக்கிறான். அதற்கு மாறாக அவன் தவமாக மேற்கொண்டதாலோ என்னவோ? அதனால் படிப்பில் மனம் பொருந்திப் பாடுபட முடிந்தது. நடு நடுவே உள்ளூற ஒரு வேதனை மட்டும் தோன்றாமல் இருந்தால் அவன் உத்ஸாகமாகவே இருந்திருப்பான். அதற்கு வழி இல்லாமல் அவனுடைய முறையற்ற காதலைக் குறித்துச் சொல்ல முடியாத ஒரு வருத்தம் அவன் இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்தது. அதை எவ்விதமாவது மறக்கத்தான், தன் கவனம் முழுவதையும் ஒரேயடியில் படிப்பில் செலுத்திப் பாடுபட்டான் அவன்.

ஓரளவு வெற்றி பெற்றான் என்றும் சொல்ல வேண்டும். அவனைப் பார்த்ததுமே கெட்டிக்காரன் என்பதாக மதித்துக் கொண்ட ஆசிரியர்களின் எண்ணம் ஓரளவு சரியானதே என்பதை அவன் நிரூபித்துவிட்டான். அவனை அவர்கள் கௌரவித்துக் கொண்டாடி உத்ஸாகம் ஊட்டினார்கள். ஜானுடன் பொழுது பொழுதாகத் தனிமையில் உறவாடுவதை அவன் முற்றும் நிறுத்திக்கொண்டான். அவன் மேரியைப் பற்றிப் பேசுவதுபோல, அத்தங்காளைக் குறித்துப் பேச அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. காதல் உணர்ச்சி இருவருக்கும் ஒன்றாக இருந்தாலும் அதுபற்றி நினைக்கும் விதத்தில் இருவரும் வெவ்வேறாக இருக்கிறார்களல்லவா?

ஜம்புநாதனுடைய இந்த மாறுதல் பசுபதிக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தாலும், திருப்தியும் அடையச் செய்தது. முதலிலிருந்தே அவனுக்கு ஜானுடைய நட்பு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதனால் நன்மை வராது என்று நிச்சயமாக எண்ணியிருந்தான். அதற்குத் தகுந்தாற்போல் ஜம்புநாதனுடைய மைக்கல்மஸ் பரீக்ஷை முடிவு அவ்வளவு உயர்வாக இல்லை. எல்லாப் பாடங்களிலும் அவன் பசுபதிக்குக் குறைவாகவே மார்க்கு வாங்கியிருந்தான். அவர்கள் இவ்வளவு நாளாகச் சேர்ந்து படித்ததில் இதுவரையில் அதுமாதிரி நேர்ந்ததில்லை. அது உண்மை நட்புக் கொண்ட பசுபதியின் மனத்திற்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. ஜம்புநாதன் இப்படிக் குறைந்து போனதற்குக் காரணம் என்ன என்றுதான் சிந்தனைக்கு உள்ளானான். தன்னுடைய படிப்பையும் கூடவே இருந்து தூண்டிவிடப்போவதாகச் சொன்னவன், இவ்விதம் அவனே குறைந்து போகிறானே என்கிற வருத்தம் அவனுக்கு. ஆகையால், இப்பொழுது ஜம்புநாதன் மறுபடியும் படிப்பில் சிரத்தை காண்பிக்கத் தொடங்கினதற்கு மிகுந்த சந்தோஷம் கொண்டான். ஆனால், இந்த நல்ல மாறுதலுக்குக் காரணம் தெரியாமல்தான் திகைத்துக்கொண் டிருந்தான். ஜம்புநாதனைப் பலவிதமாகக் கேட்டுப் பார்த்தும், அவன் ஒரு சமயம், அசதி மறதியாகவும், ஒரு காரணமும் வெளியிடுவதாக இல்லை. 'எல்லாம் நன்மையாக இருக்கிறது; அதற்குமேல் வேண்டுவ

தென்ன! அந்தமட்டும் ஜானுடைய அதிக உறவு குறைந்ததில் நன்மை ஏற்படுகிறது என்று தெரிகிறது; இருக்கட்டும்' என்று மேலும் அறிய முயல்வதை நிறுத்திக்கொண்டான்.

சாவித்திரியின் வீட்டுக்கும் இப்பொழுது சில தினங்களாக அவர்கள் தனித்தோ இருவருமாகவோ செல்லவில்லை. கல்லூரியில் பல காரியங்களில் பங்கெடுத்துக்கொண்டதில் அதற்கு நேரம் கிடைக்கவில்லை என்பதுதான் காரணமென்று பசுபதி சந்தேகமற நினைத்தான. வேறு காரணம் இருப்பதை அவன் எப்படி அறிவான்? அதை ஊகமாகக்கூட நினைப்ப தெப்படி? ஜம்புநாதன், தனக்கு அத்தங்காளிடம் காதல் என்ப தாகக் கொண்டு, அதற்கு முதல் பிராயச்சித்தமாக அவளைப் பாராமல் இருக்கிறன் என்று யாருக்குத்தான் தோன்றும்? சில வாலிபர்கள் தங்களுக்கு ஒரு பெண்ணிடம் காதல் உண்டாகி விட்டதாக இந்தக் காலத்தில் நினைத்துக்கொள்கிருர்கள். அரை குறையாக மேல்நாட்டைப்பற்றித் தெரிந்தும், அவர்கள் திரைப் படங்களை நிறையப் பார்த்தும அப்படிப் பிரமை கொள்ளு கிருர்கள். ஆனல், ஜம்புநாதன் எண்ணியிருந்தபடி அதாவது வயதில் பெரியவளான அத்தங்காளிடம காதல் ஏற்பட்டதாக யாருமே எண்ணினது கிடையா தல்லவா? அதனல் பசுபதி யினல் அதை ஊகமாகக்கூட அறிய முடியவில்லை.

## 26

ஜம்புநாதன் தனக்குத்தானே விதித்துக்கொண்ட நிபந் தனைகளின்படி சாவித்திரி வீட்டுக்குச் சென்று இரண்டொரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை அவ னுக்குக் கணேசனிடமிருந்து கார்டு ஒனறு வந்தது. 'என்ன, நீ எங்களை மறந்தேவிட்டாயா? என்று உன் அத்தங்காள் கேட் கிருள். இந்த ஞாயிற்றுக்கிழமை உன்னைக் கட்டாயம் எதிர் பார்க்கிருேம்' என்று அதில் எழுதியிருந்தது. அந்த அழைப் புக்கு ஜம்புநாதன் போகாதிருந்தால் நன்ருக இருக்குமா? சந்தேகம் வராதா? அதற்காக வேண்டி அவன் கிளம்பினன். பசுபதியை, "நீயும் வா" என்று அழைத்ததற்கு, "நான் வர

வில்லே அப்பா, அவர்கள் உன்னை மட்டுந்தானே கூப்பிட்டிருக் கிருர்கள், அழையாத இடத்திற்கு நான் வரமாட்டேன்'' என்று விளையாட்டாகச் சொன்னுலும், அந்த எண்ணம் அவனுக்குச் சிறிது இருக்கத்தான் இருக்கிறது என்று தோன்றிற்று.

"அதொன்றும் இல்லே; உன்னுடைய பெயரைக் குறிக்கக் கணேசன் விட்டிருக்கிருர்; அவ்வளவுதான். ஆங்கிலத்தில் நீ என்பதற்கும் நீங்கள் என்பதற்கும் ஒரே சொல்தான் அல்லவா? ஆகையால் நம் இருவருக்கும் சேர்ந்ததுதான் இந்த அழைப்பு'' என்ருன் ஜம்புநாதன்.

"இருந்தாலும் நான் வரவில்லே என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான் பசுபதி. அவர்கள் வீட்டில் சரோஜாவின் வளேகாப்புச் சீமந்தங்கள் நடக்க இருக்கின்றன. அவர்கள் காரியத்திற்கு இடைஞ்சலாக நான் எதற்கு? உனக்குத்தான் தீராது; நீ போய்வா'' என்று சொல்லிவிட்டான்.

உண்மை; சரோஜாவின் வளேகாப்பு விசேஷம் பெரிய தடபுடல்தான் என்று தோற்றிற்று. வீடெங்கும் புதிதாக வெள்ளேயடித்துத் துலாம்பரமாக விளங்கிற்று. மாளிகையின் முன்ருல் இருந்த பசுந்தரைக்குப் பதிலாக அவ்விடத்தில் படர விட்டிருந்த வெள்ளரிக்கொடி இப்பொழுது நன்ருக, இடைவெளி இல்லாமல், தரை முழுவதும் படர்ந்து, சிறு சிறு மஞ்சள் மலர் கள் பூத்து, தங்க நாணயங்களே அந்தப் பிரதேசம் முழுதும் வாரி இறைத்தாற்போல் செய்திருந்தது. அவர்களுக்கு உதவியாக இயற்கை செய்திருக்கிற அலங்காரம் அது. 'அந்தப் பச்சைக் கொடியை ஆகாயம் என்ருல் அந்த மஞ்சள் பூக்களே அதில் ஒளிரும் நட்சத்திரங்கள் என்று சொன்னுலும் தகும்' என்று ஜம்புநாதன் நினைத்தான்.

'புதுப் பயிர் உண்டாகி, புதுக் குழந்தை பிறந்த சந்தோஷம் ஏற்படும்' என்று கணேசன் சொன்னது ஜம்புநாதன் நினே விற்கு வந்து, அதன் பொருத்தமும் மனத்தில் பட்டது. வாசல் தாழ்வாரத்தில் ஜோடியாக, இரட்டைக் குழந்தைகள்போல, ஐந்தாறு வயது மதிக்கத் தகுந்த இரண்டு பெண் குழந்தைகள் நின்றிருந்தார்கள். வெள்ளேக்காரச் சிறுமிகள் அணிவதுபோல்

முழங்காலுக்குமேல் கௌன் அணிந்து, தலைமயிரையும் இரட்டையாக, இரண்டு பக்கத்திலும் அழகிய பட்டு நாடா வைத்துப் பின்னித் தொங்கவிட்டுக்கொண் டிருந்தார்கள். அவர்களுக்கு அந்த அலங்காரம் பொருத்தமாக அமைந்திருந்தது. அவர்கள் ஆளுக்கொன்றாக அவர்களைப்போலவே உடை அணிந்திருந்த மேல்நாட்டு டாலி பொம்மைகள் வைத்திருந்தார்கள். அவர்கள் பத்மாவின் குழந்தைகளாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்டான் ஜம்புநாதன். சரோஜாவின் வளைகாப்புச் சீமந்தத்துக்கு அவள் தமக்கை டில்லியிலிருந்து வரப்போவதாக முன்பே அவன் கேள்விப்பட் டிருந்தா னல்லவா? அவர்களைப் பார்த்துக்கொள்ளவென்று வெள்ளைக்காரர்களுடைய ஆயா ஸ்தானத்தில், வட நாட்டு ஸ்திரீ ஒருத்தியும் அவர்களுடன் கூட இருந்தாள். அந்தச் சிறுமிகள் தாங்கள் ஒருவருக்கொருவர் ஆங்கிலத்திலும் ஆயாவிடம் ஹிந்தியிலும் வெகு சரளமாகப் பேசுவதைப் பெருமையோடு கேட்டுக்கொண்டு சுந்தரேசையர் விசுபலகையில் உட்கார்ந்திருந்தார்.

“இவர்கள் பத்மாவின் பெண்களா? பத்மா வந்திருக்கிறாளா?” என்று ஜம்புநாதன் அவரைக் கேட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தான். “ஆமாம்” என்று அவர் சொல்லவும், அந்தப் பெண்கள் தன்னையே சந்தேகத்துடன் பார்ப்பது கண்டு, “இவள் பெயர் என்ன?” என்று கேட்டான்.

அவனுடைய கேள்வி தமிழில் இருந்தபடியால் அந்தக் குழந்தைகள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்று தெரிந்தது. அதற்குள் சுந்தரேசையர், “அவர்களுக்கு அவ்வளவாகத் தமிழ் தெரியாது; நீ கேட்பது அவர்களுக்கு விளங்கி யிராது” என்று வியாக்கியானம் செய்துவிட்டு, “இவர் உங்கள் பெயர் என்னவென்று கேட்கிறார்” என்று ஆங்கிலத்தில் அவர்களிடம் சொன்னார். உடனே அந்தச் சிறுமிகளில் ஒருத்தி வெகு அழகாக, “என் பெயர் ரஞ்சனி, என் தங்கை பெயர் விமலா” என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னாள். இதற்குள் பத்மாவே அவர்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டு அவ்விடம் வந்தாள்.

அவளைக் காணவும் அவளிடம் ஓடிய விமலா, “அம்மா,

இவருக்கு இங்கிலீஷ் தெரியாதா என்ன? தமிழிலேயே பேசு கிருரே!'' என்று அதிசயத்தோடு கேட்டாள். அதைக் கேட்ட பத்மாவும் சுந்தரேசையரும் லேசாகச் சிரித்துக்கொண்டார்கள்.

''சரிடீ, துஷ்டை!'' என்று பத்மா பெண்ணைச் செல்லமாக ஆங்கிலத்தில் அதட்டினுள்.

அந்தச் சிறுமி விடாமல், ''இந்த ஊரில் யாருமே தமிழில் தவிர வேறு பேசமாட்டேன் என்கிருர்கள் அம்மா'' என்று, அது ஒரு குறைபோலச் சொன்னுள்.

அதைக் கேட்டுக்கொண்ட பிறகு பத்மா, அவர்களுக்குத் தமிழே தெரியாது என்று சொன்னதோடு, ஹிந்தியும் ஆங்கில மும் அவர்களுக்கு வருகிற வேகத்தையும் வெகுவாகப் புகழ்ந்து பெருமை அடித்துக்கொண்டாள்.

''என்ன இருந்தாலும் தமிழ் நமது தாய்ப்பாஷை இல்லையா? அது தெரியாமல் இருக்கலாமா?'' என்ருன் ஜம்பு நாதன்.

நாடு சுதந்தரம் பெற்றுத் தாய்நாட்டின் பெருமையும் தாய்ப் பாஷையின் மோகமும் விசேஷமாக ஏற்பட்ட பிறகும் இது மாதிரி, பிரதேசப் பற்றுக்கொண்டவர்களும் இருக்கிருர்களே என்கிற ஆச்சரியமும் வெறுப்பும் அவர்களுக்கு. பத்மாவின் அலங்காரமே அவளுக்கிருக்கும் வெளிநாட்டு மோகத்தைக் காட்டுவதாக இருந்தது. வட நாட்டு ஸ்திரீகளைப்போலவே நெற்றிக்குமேல், மயிரை உயர்த்தி வாரிக்கொண்டு, கண் களுக்கு மையும் உதட்டுக்கு வர்ணமும் தீட்டிக்கொண் டிருந் தாள் அவள். அவள் அணிந்திருந்த ஜாக்கெட்டும் கழுத்துப் பட்டைகளும் புது மாதிரியாகத்தான் இருந்தன. அவள் பேச் சைக் கேளாமல் தோற்றத்தை மட்டும் கண்டால் அவள் யாரோ, வடநாட்டு நங்கை என்று சந்தேகமற எடுத்துக் கொண்டுவிடலாம். அவ்விதம் இருந்தன அவள் அலங்காரமும் அதற்கேற்ப அவள் நடை உடை பாவனையும்.

''மன்னிக்குச் சரியான அம்மாஞ்சி பிள்ளை என்பதைக் காண்பிக்கிருயே!'' என்று அவள் ஜம்புநாதன் சொன்னதற்குப் பதில் கூறிக்கொண்டு, ''மன்னிதான் இதை எல்லாம் பிரமாதம் என்கிருள். நமது பாஷைகூட வராமல் போய்விடுமா? பிற

பாஷை வருகிறது வேணுமானால் கஷ்டம். சொந்தப் பாஷைக் கென்ன? தானே வந்துவிட்டுப் போகிறது'' என்றாள் அலட்சியமாக.

''அதை அவ்வளவு எளிதாகக் கூறிவிட முடியுமா?''என்று ஜம்புநாதன் ஆரம்பிப்பதற்குள், ''அவா இங்கிலீஷும் ஹிந்தியும் பேசறச்சே என்னதான் அழகா யிருக்கு! அந்தப் பக்கங்களிலே இருந்தா மட்டும் எல்லாக் குழந்தைகளுக்கும் இவ்வளவு நன்னவந்துடுமா? பத்மா குழந்தைகளுக்கே தனிப் புத்தி தான்!'' என்று மீனாக்ஷியம்மாள் அங்கே வந்தவள் அந்தப் பெருமையில் பங்கெடுத்துக்கொண்டாள்.

''பாட்டி, உனக்கு இங்கிலீஷ் பேசத் தெரியலையே'' என்றாள் அந்தச் சிறுமிகளில் ஒருத்தி.

''அவள் என்ன படித்திருக்கிறாளா? உங்களண்டைதான் அவள் கத்துக்கணும்'' என்றார் சுந்தரேசையர்.

''பாட்டிக்குக் கத்துக்கொடுத்தாக்கூட வரமாட்டேங்கறது. வார்த்தைகளைச் சரியாகவே சொல்லத் தெரியலே'' என்றாள், அந்தக் குழந்தை மேலும் விடாமல்.

மீனாக்ஷியம்மாள் தன்னுடைய சொந்தப் பேத்திகள் தன்னை அவ்விதம் மட்டந் தட்டினதால்தான் பொறுத்துக்கொண்டாள். வேறு எந்தக் குழந்தையாவது சொல்லி யிருந்தால் அவள் பொறுப்பாளா?

ஜம்புநாதனைக் காணச் சாவித்திரி உண்மையிலேயே சந்தோஷப்பட்டாள் என்று தெரிந்தது. ''என்ன, வர வர மாதக் கணக்கில் எங்களைப் பார்க்காமலேயே இருந்துவிடுகிறாயே'' என்றாள்.

''அப்படித்தான் படிப்பில் சிரத்தை எடுத்துக்கொண்டு படிக்க வேண்டும். வீணுக்கு அலைந்து 'டயத்'தை வீணாக்கிவிடக் கூடாது'' என்றார் கணேசன். இப்படியாக அவன் வராததற்கு அவர்களே கேள்வி கேட்டு, அவர்களே விடைகளைக் கூறிக் கொண்டதால், தன்னைப் பதில் சொல்லித் திண்டாட வைக்காமல் அவர்களாகவே ஏதோ சொல்லிக்கொள்கிறார்களே என்று ஜம்புநாதன் சந்தோஷப்பட்டான்.

சரோஜாவின் வளைகாப்பு, பெரிய தடபுடலான சமாசாரம்

என்றுதான் சொன்னேமே. பாட்டுக் கச்சேரி முதல் ஏற்பாடு கள் ஆகி, மகரம் ஜோடித்து, அழைப்புக் கடிதங்கள் அச்சடித்து அனுப்பப்பட்டு, எல்லாம் பெருந் தோரணையில் நடந்தது. சரோஜாவுக்குப் பொன் காப்பு, வெள்ளிக் காப்புடன் ஒரே ஜரிகைத் தகடிச் சேலை எடுத்திருந்தார்கள். இவ்வளவு இருந் தும் மீனுக்ஷியம்மாள் குறைப்பட ஏதோ விஷயம் இருந்ததாகத் தெரிந்தது. அதாவது சரோஜாவுக்கு நல்ல சீமைக் கமலத்தில் வளையலோ இங்கிலீஷ் மோஸ்தரில் ப்ரெஸ்லெட்டோ செய்ய இயலாமல் போன குறைதான் அது என்று தெரிந்தது. சுந்தரே சையர் தம் மனைவியின் திருப்திக்காக எதுவும் செய்யத் தயார் தான். அவருடைய பொக்கிஷந்தான் அதற்கு இடம் தரவில்லை. கமலம் வாங்குவதற்கு வேண்டிய பணத்திற்கு எங்கே போகி றது என்றுதான் அவர் தம் மனைவியின் ஆசையைப் பூர்த்தி செய் யாமல் இருந்தார்.

அதை நன்கு அறிந்திருந்தும் மீனுக்ஷியம்மாளால் தன் மனத்தைச் சமாதானம் செய்துகொள்ள முடியவில்லை. என்றுமே பெண்களுக்குச் செய்ய நினைப்பது முடியாமற் போகிறதே என்பதை எந்தக் காரணத்திற்காகவும் அவளால் பொறுக்க முடிந்ததில்லை. இப்பொழுது அவள் அருமைச் சரோஜாவுக்கு, அதிலும் அவள் கர்ப்பமாக இருக்கும் சமயத்தில், அருமையை எல்லாருக்கும் எடுத்துக் காட்டும் வளைகாப்பு விசேஷத்துக்குச் செய்ய முடியாமல் இருக்கிறதென்ருல் மனம் பொறுக்குமா?

பணம் அபரிமிதமாக இல்லாமல் இருப்பதற்கு, அவளுக் குக் கணவரிடம் ஏற்பட்ட வெறுப்பிற்கு அளவில்லை. 'ஒவ் வொருவர் எவ்வளவு சம்பாதித்து, பெருத்த ஆஸ்தி சேகரித்து, எந்தச் செலவையும் கவலையற்று, லக்ஷ்யம் செய்யாமல் செய்து விடுகிருர்கள். அவர்களுக்குக் காசு செடியில் காய்க்கிற மாதி ரின்ரு இருக்கிறது. செடியில் காய்க்கும் கறி வகைகளுக்குக் கூடத் தட்டு ஏற்படும். ஆனல் இவர்களுக்குப் பணத்திற்குத் தட்டு வரக் காணுமே' என்று யார் யாரைப்பற்றியோ நினைத்து அசூயை கொண்டாள்.

'சர்க்கார் வேலையில் இருந்தவர்கள், ரிடையர் ஆனவர், எல்லாரும் என்ன என்னவோ செய்து எவ்வளவோ விதமாக

ஆயிரம், பதினாயிரம் என்று வாரிக் கொட்டுகிறார்களே! இந்தப் பிராம்மணனுக்கு விசுப்பலகையில் உட்கார்ந்திருக்கத்தானே யோக்கியதை இருக்கிறது.' அதிகம் சொன்னால், 'உள்ளதுக்குச் சந்தோஷப்படுவோமே. இவ்வளவுகூட நமக்கு அந்தஸ்து ஏற்படுமென்று நாம் முன்பு நினைத்தோமா?' என்று தங்களுடைய பழைய ஸ்திதியை நினைப்பூட்டி, அவர் வேதாந்தம் பேசுவதைக் கேட்க அவளுக்கு வேண்டியிருக்கவே இல்லை.

இவ்வித மனோபாவத்தால்தான் அவளுக்குச் சாவித்திரியின் செல்வத்தில்கூடப் பொறாமை தோன்றிற்று. அவள் தன்னுடைய நாட்டுப் பெண்; ஆகையால் தன்னைச் சேர்ந்தவள் என்பதைக்கூட மறந்து, 'அவளிடம் வைரமும் சிவப்புமாக எத்தனை நகைகள் கொட்டிக்கிடக்கின்றன! அவளுடையது, அவள் அம்மாவினுடையது இரண்டு பேருடையதும் அவள் ஒருத்திக்குத் தானே சொந்தம்? அவள் சிறுமியாக இருக்கும்பொழுது அணிந்திருந்த செட்டு நகைகள் முழுவதும் அப்படியே தொடுவாரற்று இன்னும் கிடக்கின்றனவே. ஓர் உபயோகமும் இல்லாமல் பெட்டியில் கிடந்து வீணாகின்றன. அது மாதிரி உபயோகமற்ற பழசு நம்மிடம் இருந்தாலாவது அழித்து, புது தினுசு செய்துகொள்ளலாம். அதற்கும் இல்லாதிருக்கிறது' என்பது அவள் குறை.

இப்படி நினைத்துத் தாங்காமல் அங்கலாய்த்துக்கொண்டிருந்தது அவள் மனம். 'சாவித்திரியிடம் கிடந்து வீணாகப் போகும் அந்தக் கூடைச் சாமான்களில் ஒன்றைச் சரோஜாவுக்கென்று அவள் கொடுத்தால் என்ன? சரோஜா சொந்த நாத்தனார்தானே? கொடுக்கப் பாத்தியம் இல்லையா? இவளுக்கென்ன குழந்தையா, குட்டியா? யாருக்குப் பூட்டி வைக்கணும்?' என்று நினைத்தது அவள் உள்ளம். உள்ள உணர்வு வாய்ச் சொற்களிலும் அப்பொழுது அப்பொழுது வெளிவராமற் போகுமா?

'ஆசைக்கு அளவில்லை' என்று சும்மாவா சொல்லுகிறார்கள். அதற்கு அளவு இல்லாததுடன் நியாயமும் இருப்பதில்லை. சாவித்திரியிடமிருந்து அவளுக்குச் சொந்தமானதை-அதாவது அவள் பிறந்தகத்துச் சீதனத்தை-இவர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று நினைப்பது நியாயமா? அவளுக்குக்

குழந்தை ஏற்படாது என்று தீர்த்துக் கட்டி நினைப்பது வேறு எத்தனை பாதகமானது! அதொன்றையும் நினையாமல் மீனாக்ஷி யம்மாள் ஜாடைமாடையாக, 'வீணாகப் போகிற பழைய நகை கிடைத்தாலாவது புது விதம் செய்துகொள்ளலாம். யார் தருகிறார்கள்? நம்ம சரோஜாவுக்குப் பண்ணிப்போட நமக்கு முடியாமல் இருக்கிறது. இந்தக் குறையை யாரிடம் சொல்கிறது? யார் தீர்த்து வைக்கப் போகிறார்?' என்று சாவித்திரி காது கேட்கப் பல விதத்தில் அங்கலாய்த்தவண்ணம் இருந்தாள். சாவித்திரி அவள் வார்த்தைகளின் பொருளை அறிந்திருந்தாலும், தன்னிடமுள்ள ஆபரணங்கள் எதையாவது எடுத்துக்கொள்ளச் சொல்லி முன்வரவில்லை. என்னதான் நல்ல குணம் படைத்தவளாயினும் அவளைப்பற்றித் துளியும் நினையாமல் தங்களுக்காகவே நினைத்து, தங்களுக்காகவே செய்துகொள்ளும் அவர்களுடைய சுயநலத்தினிடம் வெறுப்பு ஏற்படாதா? தன்னிடம் அவர்களுடைய போக்கையும் மறந்து அதற்குத் தன்னாலான உதவியையும் செய்துகொண் டிருக்கப் பிடிக்குமா?

பத்மாவும் ஒளிவு மறைவின்றிப் பேசும் அவள் சுபாவப்படி, "மன்னி, நீ யாருக்கு இவ்வளவு நகைகளையும் பொக்கிஷமாக வைத்துக்கொண் டிருக்கிறாய்? உனக்கோ குழந்தை குட்டியைக் காணோம்; சும்மாக் கொடுக்க வேண்டாம்; பழைய விலைக்குக் கொடேன்; சரோஜாவுக்கு ஏதாவது செய்யட்டும். அதற்குத் தான் அம்மாவும் சுற்றி வளைத்துச் சொல்லுகிறாள்" என்று சொன்ன பிறகு அப்படிச் செய்ய யாருக்குத்தான் மனம் பொறுத்து இடம் கொடுக்கும்? அவளுக்குக் குழந்தை இல்லை என்று சொல்லிக் காண்பிப்பதோடு இனியும் பிறக்காதென்று ஜோசியம் வேறு கூறுகிறாள். அப்படி வாய் கூசாது சொல்ல இருதயம் துடைத்துவிட்டிருக்கிறதே அவளுக்கு.

'ஒருவித உணர்ச்சிக்கும் மனத்திலே இடங்கொடாமல் சாவித்திரி இதைக் கேட்டுக்கொண் டிருப்பது எப்படி? தன் மனம் வருந்தி எக்கேடு கெடட்டும்; தன்னை நினையாமலே அவர்கள் பேசட்டும்; தனக்குக் குழந்தை இல்லை என்பதை எடுத்துச் சொல்லும்பொழுது, அவள் தமையனுக்கும் இல்லை

என்று ஆகிறதே; அந்த வருத்தங்கூடச் சிறிதும் இன்றி அவள் சொல்லுகிறளே! சாவித்திரி பொங்கி வரும் துக்கத்தையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு, "என்னுடைய அம்மா அப்பா எனக்கு அருமையாகச் செய்து கொடுத்தவை அவை; என் உயிருள்ள வரைக்கும் அவற்றை நான் யாருக்கும் எந்த விதமாகவும் கொடுப்பதாக இல்லை" என்று மட்டும் நிச்சயமாகச் சொன்னுள்.

"மனசோடு கொடுக்க யோசிக்கிருயே, அவ்வளவுதான். உனக்குப் பிறகு உன்னைக் கேளாமலே அவைகளை யாரோ கொண்டுபோகப் போகிருர்கள்!" என்று பத்மா கூசாமல் சொன்னபொழுது சாவித்திரிக்கு எப்படித்தான் இருந்திருக்கும்?

இவர்களுடைய இந்தச் சம்பாஷணையின்போது சும்மா சாவித்திரியைப் பார்த்துப் போக வந்திருந்த கமலினிக்குத் தான் பத்மா பேரிலும், அவள் தாயார் பேரிலும் பொறுக்காத கோபம் ஏற்பட்டது. "உங்களையெல்லாம் ஏமாற்றிக்கொண்டு மன்னிக்குப் பெண்ணும் பிள்ளையும் பிறப்பார்கள்; பாருங்கள்; அப்பொழுது இது மாதிரி பேசமாட்டீர்கள்" என்று சாவித்திரிக்குப் பரிந்துகொண்டு சொன்னுள். பொது நியாயத்தைச் சொல்ல அவள் யாரிடம் பயப்பட வேண்டும்?

"பத்மா இருந்தாலும் ரொம்ப மோசம்; நினைக்காமல் தோணினபடி பேசுகிருள். தனக்கு ஏதோ எல்லாம் நிறைந்திருக்கிறது என்கிற தெம்பில் கண்டபடி வார்த்தைகளைக் கொட்டுகிருள். நல்ல காலம், எங்கள் வீட்டுக்கு வந்த சரோஜா இவ்வளவு கேவலமாக இல்லை" என்று அவள் பிறகு சாவித்திரியிடம் சொன்னுள்.

அயல் வீட்டுப் பெண்ணை அவளுக்கு இருக்கும் பிரியமும், அவளுக்குப் படும் நியாயமும், கணவனுடன் கூடப் பிறந்த தங்கையான பத்மாவுக்கு இல்லையே என்றுதான் சாவித்திரி பொருமிப்போனுள். பத்மா வந்ததிலிருந்தே அவளுக்குச் சோதனை காலமாகத்தான் இருந்தது. சாவித்திரிக்குக் குழந்தை இல்லாத குறையை அடிக்கடி நினைப்பு மூட்டினதோடு, தான் பெரிய உத்தியோகஸ்தனின் மனைவி, வடக்கே வசிப்பவள்,

ஆகையால் அவர்களையெல்லாம்விட அவள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவள் என்பதாக அவர்களை இறக்கிப் பேசி வேறு தெரிவித்தாள். மரியாதைக்காகவும் மறைத்துப் பேசும் சுபாவம் அவளுக்கு இல்லை. எதற்கும், 'எங்கள் டில்லி' என்று ஆரம்பிப்பாள். அங்கே நடப்பவை அவ்வளவும் மிகவும் உயர்ந்தனவாகவும், இங்கிருப்பன அவ்வளவும் மோசமானவையாகவும் தூஷித்து வந்தாள். மீனாக்ஷியம்மாள் சென்னைக்கும் கிராமத்துக்கும் வைத்திருந்த வித்தியாசத்தை அவள் அந்த வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் வைத்திருந்தாள்.

"உலகம் முழுவதுமே ஒன்று; அதிலுள்ள மக்கள் யாவருமே ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் என்கிற உயர்ந்த நோக்குக் கொண்டிருக்கும் பெரியார்களின் கொள்கையை இது மாதிரி, 'உழக்கிலே கிழக்கு மேற்கு'க் காணும் குறுகிய மனப்பான்மை உள்ளவர்கள் என்றாவது உணர்ந்து தேர்வதற்கு வழி உண்டா?"

## 27

ஜம்புநாதன் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் மத்தியான்னச் சிற்றுண்டி கழிந்து, பத்மா முதலியவர்கள் வெளியே சென்று வரக்கிளம்பினார்கள். இன்ன இடமென்று முக்கியமாக ஒன்று இல்லாவிட்டாலும் சாயங்காலங்களில் வீட்டில் அடைந்து கிடக்காமல் வெளியே போய்வர வேண்டியது இன்றைய நாகரிகமாயிற்றே. அதற்காகக் கிளம்பினார்கள். ஜம்புநாதன் இன்னும் சிறிது நேரத்தில் கலாசாலை திரும்ப வேண்டியவனாதலால், அவர்கள் அழைத்தபோது உடன் செல்லவில்லை. சாவித்திரி அவன் அபூர்வமாக வந்திருப்பவன் என்பதற்காகத் தானும் அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டாள். கணேசன் ஆபீஸ் அறையில் கச்சேரிக் காரியமாக இருந்தார். இவர்கள் மூவரையும் தவிர மற்றவர்கள்–பத்மாவின் குழந்தைகளுடைய ஆயா உள்பட–மோட்டார் ஏறிச் சென்றார்கள்.

போகும்பொழுது பத்மா சாவித்திரியிடம், "மன்னி, பேச்சுச் சுவாரஸ்யத்தில் குழந்தைகளுக்கு இலைப் பருப்பு

வைக்கச் சொல்ல மறந்து போகாதே. உனக்கு அவர்கள் நினைவு இருக்கிறதே இல்லை. நேற்றுப் பருப்பு இல்லாமல் அவர்கள் ஒருவாய்ச் சாதங்கூடச் சாப்பிடவில்லை. டில்லியில் எங்களுக்கு இரவில்கூடப் பருப்புஞ் சாதம் சாப்பிட்டுத்தான் பழக்கம்'' என்று அதிகாரமாக உத்தரவிட்டுவிட்டுச் சென்றாள்.

''அப்பா! என்ன தேள் கொட்டுகிறதுபோல் கடுமையான சொற்களால் உத்தரவிடுகிறாள்!'' என்று ஜம்புநாதனுக்கு அவளிடம் மிகுந்த கோபம் உண்டாயிற்று. 'அத்தங்காளுடன் தனியாக விடப்படுகிறோமே; ஜான் சொல்லுகிறதுபோல் உணர்ச்சி மேலிட்டுத் தன்னை மறந்து ஏதாவது தாறுமாறாக உளறிவிடுவோமோ?' என்று அவன் இருதயம் படபடத்து, சற்று முன் சந்தேகித்துத் தவித்ததையும் மறந்து அவன், ''பத்மா தன் அம்மாவையே தோற்கடித்துவிடுவாள்போல் இருக்கிறதே! இவள் அதிகாரம் தாங்கக்கூடியதாக இல்லையே! டில்லியே இவருக்குச் சொந்தம்போல் பேசுகிறாளே! அங்கே இவள் கணவர் உத்தியோகம் பார்ப்பதனால்தா இவ்வளவும்! நாளைக்கு மத்திய சர்க்கார் அவரை அங்கிருந்து மாற்றிவிட்டால், அப்பொழுது என்ன செய்வாள்?'' என்றான்.

''அந்தப் பெருமைகள் கிடக்கட்டும். பிறரை நோகடித்துப் பேசுகிறாளே அதுதான் எனக்குப் பொறுக்கவில்லை. நான் ஒரு போக்கற்றவள். இவர்களிடம் சொல் கேட்க என்று பிறந்திருக்கிறேன். அந்த அதிசயத்தை இன்னும் அல்லவா சொல்ல வேண்டும்? நான் அருமையாகப் பிறந்தென்ன? பணமும் காசும் இருந்துதான் என்ன? இவர்களுக்குத் தாழ்மையாகவே இருக்கிறேன்!'' என்றாள் சாவித்திரி; அவளுக்கும் துக்கம் குமுறி வருகிற மாதிரி இருநதது.

அவ்வளவு தூரம் அவளே வாய்விட்டுத் தன் துக்கத்தைச் சொல்லிக்கொள்வதை அப்பொழுதுதான் முதல் தடவையாக ஜயபுநாதன் கேட்டான். அவள் அவ்விதம் வருந்த என்ன நடந்தது என்பதை அறிய அவன் மனம் துடித்தது.

அவன் கேட்டதற்கு, ''தனியாக நடக்கிறதென்ன? எப்பொழுதுந்தான் இவர்கள் அலட்சியம் தெரிந்தே இருக்கிறது. என் மாமியாராவது வாயைத் திறந்து வார்த்தைகளில் ஒன்றும்

காண்பித்துவிட மாட்டான்; பத்மாவிடம் அது கிடையாது. அவளுக்கு எல்லா அதிருஷ்டமும் பொங்குகிறது; தலை கால் தெரியவில்லை. பிறரை என்ன வேண்டுமானாலும் பேசத் தோன்றுகிறது. குழந்தை பிறப்பதும் பிறக்காதிருப்பதும் நம்முடைய செயலா? அதற்காக என்னை இகழ்ந்து கூறும்பொழுது தான் தாங்காமல் வருகிறது" என்று சாவித்திரி சொல்லும் பொழுதே அவள் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. அதைப் பார்த்த ஜம்புநாதன் பதறிப்போனான். அவளைத் தொட்டு அவள் கண்ணீரைத் துடைத்துச் சமாதானம் செய்ய அவன் இருதயம் வெகுவாகத் துடித்தது.

"இவள் பேச்சை இங்கே எல்லாரும் சம்மதமாகக் கேட்டு வருகிறார்கள். கமலினிக்குத்தான் இன்று பொறுக்காமல் வந்தது. பதிலுக்கு வாயடைத்துப்போகும்படி சூடாகச் சொன்னாள். அதுவும் பத்மாவின் மனத்தில் உறைத்ததாகத் தெரியவில்லை" என்று மேலும் சாவித்திரி தன் மனக்குறையைச் சொல்லிக்கொண்டு போனாள்.

ஜம்புநாதனுக்கு அவள் வருத்தத்தைக் காணச் சகிக்கவில்லை. அவளிடம் அவன் கொண்டிருக்கும் அன்பு அவ்வளவும் திரண்டு பத்மாவிடம் கோபமாக மாறிப் பொங்கி எழுந்தது. 'அவள் கிடக்கிறாள், உன்னை நிமிர்ந்து பார்க்க அவளுக்குத் தகுதி உண்டா? அவள் பேசுவது நிர்மலமான வான வெளியில் தாவல்யமாக மிதக்கும் முழு மதியை அதனிடம் களங்கம் இருக்கிறது என்று குறை கூறுவதற்கு ஒப்பாக அல்லவா இருக்கிறது?' என்று ஏதேதோ சொல்ல நினைத்தான். அவள் காலடியில் மண்டியிட்டு அவள் வருத்தத்தைக் கண்டு தன் இருதயம் எவ்விதம் துடிக்கிறது என்பதை மனம் விட்டுத் தாழ்மையாக மன்றாடிச் சொல்வதன்மூலம் திறந்து காண்பிக்க நினைத்தான். தனக்கு அவளிடம் இருக்கும் பரிசுத்தமான காதலையும் அவளுடைய சந்தோஷத்திற்காக எத்தகைய தியாகம் செய்யவும் அவன் தயாராக இருப்பதையும் வார்த்தைகளால் விளக்கித் தெரிவிக்க நினைத்தான். ஆனால் அவ்வளவும் அவன் உள்ளத்தில்தான் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து, அலைகள்போல் எழும்பி வந்தனவே தவிர, வாய்

வார்த்தைகளில் எதுவும் வெளிவரவில்லை. மனத்தால் எப்படி நினைப்பதும் எளிது; ஆனால் அவைகளை வெளியிட்டுச் சொல்ல நேரும்போதல்லவா அவைகளின் பொருத்தமற்ற தன்மையும் அசம்பாவிதமும் ஒழுங்கீனமும் மற்றவைகளும் மனத்தில் பட்டு, நம்மைச் சொல்ல விடாமல் தடைசெய்து விடுகின்றன.

ஜம்புநாதன் தன்னுடைய எண்ணங்களை உள்ளுக்குள்ளேயே கண்டு திக்பிரமை கொண்டு ஊமையானான். சொல்வது, செய்வது ஒன்றும் தெளிவாக அவனுக்கு விளங்கவில்லை. அவனுடைய இந்த நிலைமையை நீடிக்கவிடாமல் கடவுளே மனம் இரங்கி, கணேசனைக் கச்சேரிக் காரியங்கள் முடிந்து இவர்களைத் தேடிக்கொண்டு அவ்விடம் வரும்படி செய்தார் என்று தோன்றிற்று.

கணேசன் சந்தேகிக்காதபடி சாவித்திரி கண்ணீரை வேகமாகத் துடைத்துக்கொண்டாள். அப்படியிருந்தும் அவன் சாவித்திரியையும் ஜம்புநாதனையும் மாறி மாறிப் பார்த்தது, சாவித்திரி ஏதோ அவனிடம் குறைப்பட்டிருக்கிறாள் என்று சந்தேகிப்பதைக் காட்டியது. "உன்னை விட்டுவிட்டு அவர்கள் வெளியே போய்விட்டார்களா?" என்று ஏதோ அதுதான் அவள் மனக்குறையோ என்று நினைத்தவனாகக் கேட்டான்.

"நான்தான் ஜம்புநாதனுக்காக நின்றுகொண்டேன். அவன் வருவது அபூர்வம் ஆகிவிட்டதல்லவா?" என்று சாதாரணமாகச் சொன்னாள். "ஆமாம் அப்பா, நீ என்னவோ எங்களைக் கண்டு, தொத்து வியாதியைக் கண்டு மிரள்வதுபோல் விலகுகிறாயே!" என்று கணேசன் விளையாட்டாகக் குற்றம் சாட்டினார். ஜம்புநாதன் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண் டிருந்தானாதலால், "நீங்கள் சொன்னீர்களே, கவனித்துப் படிக்க வேண்டும் என்று. படிக்க வேண்டியவைகளும் நிறைய இருந்தன, அதனால் வர முடியவில்லை" என்று காரணமும் கூறினான். அப்புறம் அவர்கள் கலாசாலைப் படிப்பு முதலானவைகளைப்பற்றிச் சிறிது பேசிக்கொண் டிருந்தார்கள். ஜம்புநாதனும் ஒருவாறு விடைபெற்றுக்கொண்டு ஹாஸ்டலுக்குத் திரும்பிச் சென்றான்.

நடந்தவைகளைக் குறித்து வழி முழுதும் அவன் எண்ண

மிட்டுக்கொண்டேதான் போனான். அவனுக்கு முதல் முதலாக உண்டான உணர்ச்சி, அவளை அசம்பாவிதமாக நடந்து கொள்ளாதபடி,சமயத்தில் காப்பாற்றின கணேசனின் வருகைக் கான நன்றி உணர்ச்சிதான். நல்ல காலம்! அவன் தன்னை மீறி எண்ணங்களை வெளியிட்டுவிடவில்லை. அவ்விதம் செய் திருந்தானானால் அத்தங்காள் அவன் அன்பை எவ்விதம் ஏற் றிருப்பாளோ? அவனுடைய காதலைச் சரியானபடி புரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தபடி அவனிடம் அநுதாபமும் பிரிய மும் காட்டியிருப்பாளா? ஆனால் அவள் எந்த முறையில் ஏற்றால்தான் என்ன? அந்தச் சமயத்தில் கணேசன் அங்கே வந்தது அவளுடைய நிலைமையைக் கேவலமாக அடித்திருக் குமே. கதைகளில் வரும் போக்கிரியாக அல்லவா கணேச னுடைய கண்களுக்கு இவன் தென்பட்டிருப்பான்? ப்ரான்ஸ்கி யின் ஸ்தானத்தில் அவனுக்கும் கேவலமாகப் பிறர் மனையாளை மோகிக்கும் தூர்த்தர்களின் ஸ்தானத்தில் இருப்பதை அவன் விரும்புவானா? அதை நினைக்கவே அவன் உடல் தானாகவே அதன் பயங்கரத்தை எண்ணிச் சிலிர்த்தது.

சிறு குழந்தைகளைப்போல் எல்லாருடனும் வெளியே போகாததற்கு அவள் வருந்துகிறாளோ என்று கணேசனுக்குத் தோன்றினதை நினைக்க, அவன் சாவித்திரியை அறிந்திருக்கும் லக்ஷணத்திற்குக் கணேசனிடம் பரிகாசங்கூடத் தோன்றிற்று.

சாவித்திரி தன்னிடம் சொன்ன அளவுகூடத் தன் கண வனிடம் தன் மனவருத்தத்தின் காரணத்தைச் சொல்லவில்லை என்பதை ஜம்புநாதன் என்ன கண்டான்? அவர்கள் தனக்குக் குழந்தை இல்லை என்பதாக ஏசிக் காண்பித்து, அதனால் அவள் மனம் புண் ஆனதைக் கணேசனிடங்கூட வெளியிட்டுத் தெரி விக்க அவள் கூசினாள். அவன் அதைப் பெரிதாக நினைத்து, அவளுடன் சேர்ந்து அநுதாபமோ வருத்தமோ காண்பியாததுடன் அலட்சியமும் செய்து பேசுவான். அதை அவளால் ஏற்க முடியாது. அதை எண்ணியே அவள் அதுபற்றி அவனிடம் வாய் திறக்கவில்லை. எங்கும் மக்களில்லாக் குறைக்கு ஏச்சுக் கேட்பது ஸ்திரீகள்தான் அல்லவா? அந்த மன வருத்தமும் தனியே அவர்களைச் சேர்ந்ததாகத்தானே இருக்கும். அந்த

மனநிலையை ஆடவன் புரிந்துகொள்வது எப்படி?

கணேசனைச் சாவித்திரி அறிந்துகொள்ளவில்லை என்று குற்றம் கூறுகிறானே ஜம்புநாதன்! இவன் அவளைச் சரியாகப் புரிந்துகொண்டுவிட்டானா? பத்மாவின் எல்லாச் சொற்களையும்விட, அவள் மலடி என்பதாகச் சொல்லிக் காண்பிப்பது தான் அத்தங்காளை அதிகம் வருத்துகிறது என்பதை இவன் அறிந்துகொண்டானா? பொதுவாகப் பத்மா, அவள் தாயார் இவர்கள் நடக்கும் விதம் சாவித்திரியைக் கஷ்டப்படுத்துகிறது என்று மட்டுந்தான் அறிந்தான். அதற்காக அவர்களிடம் மிகுந்த கோபம்கொண்டான். கமலினி அவர்களை எதிர்த்துப் பேசினாள் என்பதைக் கேட்டு அவளிடம் மிகுந்த நல்ல எண்ணம் உண்டாயிற்று. அத்தங்காளிடம் அவள் அவ்விதம் பிரியம் வைத்திருப்பதற்கு அவளை உயர்வாக நினைக்கத் தொடங்கினான். அவள் பேச்சும் உருவமும் அவன் கண்முன்னே வந்து நின்றன. அன்று அவள் வெட்கத்தோடு தன்னை நிமிர்ந்து நோக்கின அந்தப் பார்வையில் தென்பட்ட புத்தி சாதுரியத்தையும் அடக்கத்தையும் தன் உள்ளேயே வியந்து பாராட்டிக்கொண்டான். அவள் எவனுக்கு வாழ்க்கைப்பட்டாலும் அவன் மகா பாக்கியசாலி என்றுகூட நினைக்கத் தோன்றிற்று அவனுக்கு.

அவன் ஹாஸ்டலை அடைந்து, அறையினுள் நுழைந்த பொழுது, "என்னடா, என்ன விசேஷம்? உன் உறவினர்களுடைய அமராபுரியில் என்ன நடந்துகொண்டிருக்கிறது?" என்று பசுபதி ஹாஸ்யமாகக் கேட்டான். நாட்டின் நிலைமையைப் பொருட்படுத்தாது, தங்கள் சுகசௌக்கியத்தில் இருப்பவர்கள் அவர்கள் என்பதனால் அவர்களுக்கு அவன் இட்டிருக்கும் பெயர் அது.

"என்னவோடா? அமராபுரி என்று நீ பெயர் வைத்து என்ன பண்ணுகிறது? அங்கிருக்கும் பொறுமைக்கும் அதன் விளைவாக ஏற்படும் மனப் புண்ணிற்கும் கணக்கிருக்கும் என்றே தோன்றவில்லை" என்றான் ஜம்புநாதன் வெறுப்புடன்.

"தேவலோகத்தில் மட்டும் பொறுமை கிடையாதா? ஊர்வசியிடம் மற்ற அப்சரஸ்களுக்கெல்லாம் கொஞ்ச அசூயையா இருந்திருக்கும்? அவர்களும் வேண்டிய சுடு சொற்

களை ஒருவருக்கொருவர் பிரயோகம் பண்ணித்தான் இருப்பார்கள். அது கிடக்கட்டும். என்னவோ வெறுப்புடன் சுற்றி வளைக்கிருயே; விஷயம் என்ன, சொல்லு'' என்ருன் பசுபதி.

பத்மா வந்திருப்பதையும் அவள் தோரணைகளையும் அவள் சாவித்திரியைப் பேசும் மாதிரிகளையும் அதற்கு அவள் கஷ்டப்படுவதையும் அதிகம் விவரிக்காமல் சொல்லி, கமலினி எவ்வளவு அன்புடன் சாவித்திரியிடம் நடந்துகொள்கிருள் என்பதையும் சொன்னுன்.

“நீ அந்த ஜட்ஜ் வீட்டுப் பெண்ணைப் பார்த்ததே இல்லையே. அவ்ளுடைய அந்தஸ்து அவ்வளவு மேம்பட்டது என்று யாரும் தெரிந்துகொள்ள முடியாது. அவ்வளவு அடக்கம் அவளிடம் குடிகொண் டிருக்கிறது. இந்தக் காலத்தில் அவள் மாதிரி பெண்களைப் பார்ப்பதே துர்லபம். அவளுடைய உயர்ந்த சங்கீதத்துக்கு அவள் துளிப் பெருமை காண்பித்துக் கொள்ளவில்லை என்ருல் பார்த்துக்கொள்ளேன். அழகும் குணமும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கிருள்'' என்று கமலினியைப் புகழ்ந்து பேசினுன். சாவித்திரியைப்பற்றி அதிகம் சொல்லிக்கொண் டிருக்க வேண்டாம் என்கிற எண்ணம் அவனுக்கு. பசுபதி எங்காவது தன் உள்ளுணர்வைச் சந்தேகப் பட்டுவிடாமல் இருக்கவே அவன் கமலினியைப்பற்றி அதிகம் சொன்னுன். ஆனுல் அவன் உண்மையிலேயே கமலினியைக் குறித்து அப்படித்தான் எண்ணினுன். ஆதலால் அவன் சொற்களும் உண்மை உணர்ச்சியோடு வெளிவந்தன.

பசுபதியும் அதை அவ்விதமே புரிந்துகொண்டான். “பொன் மலர் வாசனை பெற்றுவிட்ட தல்லவா? அபூர்வமாக எங்காவது ஓர் இடத்தில் பணமும் பதவியும் விசேஷ அறிவையும் அதோடு அமரிக்கையையும் கொடுத்து ஒப்புயர்வு இல்லாமல் செய்துவிடுகிறது. உண்மை'' என்று, தான் நேரில் பாராவிட்டாலும் ஜம்புநாதனின் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து ஏற்றுக்கொண்டான்.

பிறகு அவர்கள் நடராஜன் கல்யாணத்திற்குத் தாங்கள் செல்ல வேண்டிய அவசியத்தைப்பற்றிப் பேசினுர்கள். “உங்களுக்கு ஒரு மாத டயம் கொடுத்து இப்பொழுதே சொல்லி

விட்டேன். தை பிறந்து என் கல்யாணத் தேதியைத் தெரிவித்தாயிற்று. சாக்குப் போக்கு எதுவும் சொல்லாமல் வந்து சேர வேண்டியது உங்கள் பொறுப்பு. இவ்வளவு முன்கூட்டித் தெரிவித்திருப்பது அதற்காகத்தான். உங்கள் கல்லூரிப் பாடங்களை அதற்குத் தகுந்தபடி சரி செய்துகொண்டு விடுமுறையையும் தயாராக வாங்கிக்கொண்டு வந்து சேரத் தவறினால், அப்புறம் நமக்குள் பேச்சுவார்த்தைகளே அற்றுப் போக வேண்டியதுதான்" என்று கண்டிப்பான பயமுறுத்தலுடன் நடராஜனிடமிருந்து வந்திருந்த கடிதந்தான் இவர்கள் அதுபற்றி இப்பொழுது சிந்திக்கக் காரணமாயிற்று. அவனுடைய உத்தரவிற்கு அவர்கள் அப்படியே கீழ்ப்படியத் தயார்தான். நடராஜன், மாப்பிள்ளையாக நடந்துகொள்வதை அவர்கள் பார்க்க வேண்டாமா? அவர்கள்தாமே மாப்பிள்ளைத் தோழர்களாகவும் இருக்க வேண்டியவர்கள். கிறிஸ்மஸ் விடுமுறையோடு சேர்ந்து இருந்துவிட்டு வருவதற்கில்லை. ஏனெனில் அது கழிந்த பிறகு பத்து நாள் இருக்கிறது கல்யாணத்திற்கு. நடுவில் வகுப்புக்கு வராவிட்டால் கல்லூரி அட்டன்டன்ஸ் போய்விடும். ஆகையால் தனியாகக் கல்யாணத்திற்கென்று இரண்டொரு நாள் பிரின்ஸ்பாலிடம் பிரத்தியேக அநுமதி பெற்றுக்கொண்டு சென்று வர வேண்டியதுதான் என்று ஏற்பட்டது. அடுத்தடுத்து இருமுறை ரயில் பிரயாணம் செய்து ஊர் சென்று வராவிட்டால் என்ன? கிறிஸ்மஸ் விடுமுறையைச் சென்னையிலேயே கழித்துவிட்டாலோ? ஜம்புநாதன் சென்னையில் கிறிஸ்மஸ் விநோதங்களைப் பார்த்தவன் இல்லையல்லவா? இவ்விதம் யோசித்து, அப்படிச் செய்ய அநுமதி கேட்டுத் தந்தைக்குக் கடிதம் எழுதினார்கள். அவரும் ஒப்புக்கொண்டு விடவே அவர்கள் எங்கும் போகாமல் ஹாஸ்டலிலேயே இருந்துகொண்டு ஒன்று வீடாமல் எல்லா விநோதங்களையும் சுற்றி அலைந்து பார்த்தார்கள்.

தனக்குள்ளாகவே சிந்தனைக்கு இடங்கொடாமல் அவ்விதம் சுற்றிவந்து பொழுது போக்குவது ஜம்புநாதனுக்கு ஒரு வகையில் மிகவும் பிடித்திருந்தது. அவனுடைய ஒழுங்கற்ற காதலைப்பற்றிச் சதா எண்ணித் துன்புறுவதைவிடப் பல

விநோதக் காட்சிகளில் மனத்தைச் செல்ல விடுவது மேலாகத் தோன்றிற்று. ஜான் வேறு ஊரில் இல்லாதிருந்ததால் காதல் விஷயங்களை நினைப்பு மூட்ட ஆளின்றிச் சௌகரியமாக இருந்தது. ஜான், அவர்கள் பண்டிகைக்காகத் தன் பெற்றோர் இருக்குமிடம் சென்றிருந்தான். ஜானுடன் அவன் நெருங்கிப் பழகுவதைக் குறைத்திருந்தானானாலும் ஜான் காதல் பேச்சை எடுக்காமலே இருக்கும் அளவிற்கு அவர்களுக்குள் முழுதும் பேச்சே நின்று போகவில்லை அல்லவா? ஜான்தான் அவனுடைய காதலைக் கண்டுபிடித்துச் சொன்னது. இவனும் அது இருக்கும் என்பதாக ஒருவாறு ஏற்றுக்கொண்டிருக்கிறான். ஆனாலும், ஜான், மேரியைப்பற்றிப் பேசுவதைப் போல் அவனிடம் அத்தங்காளைப்பற்றிப் பேசுவது அவனுக்குச் சாத்தியமாகவில்லை. ஜான், மேரியை அங்க அங்கமாகக் கூச்சமின்றி வருணித்தானே! ஜம்புநாதன் அதுபோல் அத்தங்காளின் உருவை மனத்திற்குள்ளேகூட நினைத்துப் பார்க்க முடிந்ததா? இல்லை யல்லவா? கோவில் அம்பாளைப் பக்தியோடு தியானிப்பதுபோலத்தான் அத்தங்காளையும் அவன் தியானிக்கிறான். ஜானுடைய மேரியையும் அத்தங்காளையும் ஒரு ஸ்தானத்தில் வைத்து ஒன்றுபோல் பேச மனம் இல்லாததனாலேயே மெள்ள மெள்ள ஜானுடைய சகவாசத்தையே குறைத்துக்கொண்டான். அத்தங்காள் அவளுடைய பெயருக்கேற்பப் பதிவிரதைகளில் முதல் ஸ்தானத்தை வகிக்கும் சாவித்திரியைப் போன்றவள்தான். அவளுடைய வாழ்க்கையும் சோதனைகளுக்கு உள்ளாகித்தான் பரிசுத்தத்தை அடைந்திருக்கிறது. ஒரு காலத்தில் கணவனுடைய அன்பில்லாமல் அவள் கஷ்டப்பட்டாள் என்று அப்பா சொல்லியிருக்கிறார். இப்பொழுதுதான் என்ன? அவளுக்கு இருக்க வேண்டிய அளவு சந்தோஷம் இருக்கிறதா? அப்படியிருந்தும் அவள் தன் கணவனிடம் அன்புடன் நடந்துகொள்வதில் ஏதாவது குறைவு இருக்கிறதா? இல்லை! அவ்வளவு உயர்ந்த அத்தங்காளைத் தன் மாசு படிந்த எண்ணங்களால் அசுத்தப்படுத்தத் துணிவானா அவன்? மாட்டான்! தன்னுடைய

16

வாழ்க்கையைப் பிராயச்சித்தத்தால் பரிசுத்தமாக்கி, அவளுக்கு அர்ப்பணம் செய்யத்தான் தன்னைத் தயாராக்கி வருகிறான். அப்படியிருக்க ஜானுடன் சேர்ந்து மனம் போனபடி பேசுகிறதாவது! ஜான் இப்பொழுது அங்கே இல்லாதிருப்பதற்கு அவன் பரம திருப்தி கொண்டான். நம்மில் யாரும் அநுபவித்திராத காதல் அநுபவம், கதைகளிலும் கவிதைகளிலும் நடப்பதுபோன்ற ஒரு காதல் நிகழ்ச்சி, தன் வாழ்க்கையில் நடக்கிறது என்கிற எண்ணம் மட்டும் இல்லாதிருந்தால் அவன் இதுபோல் அத்தங்காளிடம் காதலைச் சம்மதமாக ஏற்பானா? அவ்விதம் நினைப்பதற்கே மனம் கூசித் தன்னிடத்திலேயே வெறுப்பு ஏற்பட்டிராதா?

ஈசுவரானுபவத்தைப்போல் ஒருவருக்கும் கிட்டாதது தனக்குக் கிட்டியிருக்கிறது என்கிற எண்ணத்தில்தான் அது முறை தவறியதாக இருப்பதற்கு வருந்தினாலும், உள்ளுக்குள் ஏதோ ஒரு சிறு திருப்தியும் இருந்தது அவனுக்கு. மேலும் அவளுக்காகத் தான் செய்யப்போகும் தியாகத்தை நினைத்து உள்ளூற ஒரு பெருமையும் கொண்டான் அவன்.

நடராஜனுடைய விவாகம் பெரிய மகோத்ஸவமாக நடந்தது. திருச்சியில் நடக்கும் சில பெரிய கல்யாணங்களில் அதுவும் ஒன்றாக எல்லா விதத்திலும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. ராமசாமி ஐயரும் அவர் வீட்டவர்களும் பார்த்துப் பிரமித்து, தங்களுக்கு வரவிருந்த பெரிய சம்பத்தைத் தங்கள் அசட்டுத்தனத்தினால் இழந்தோமோ என்று பச்சாத்தாபப்பட்டு வருந்த வேண்டும் என்றே சங்கரையர், எதிர் வீட்டு நடராஜனை மாப்பிள்ளையாக வரித்து, வெகு விமரிசையாகச் சீருடனும் சிறப்புடனும் விவாகத்தை நடத்திக் காண்பித்தார் என்று தோன்றும்படி இருந்தது அது. அவ்விதந்தான் ராமசாமி ஐயரையும் அவர் வீட்டவர்களையும்—சம்பந்திக்கு நண்பர்கள் என்கிற பாவனையில்-சம்பந்திக்கும் மேலாகவே உபசரணை செய்து தடபுடல் செய்தார். நிஜமான சம்பந்தி தியாகராஜையரா ராமசாமி ஐயரா என்று திகைக்கும் அளவிற்கு ஆசார உபசாரம் செய்து பொழுது பொழுதாகச் சாப்பாட்டுக்கும் இன்னொன்றுக்கும் தம்முடைய காரை எடுத்துச் சென்று அழைத்து

வந்து உபசரணை செய்தார். என்ன இருந்தாலும் மனித சுபாவந்தானே; உள்ளூரில் எல்லா விதத்திலும் இவ்வளவு உயர்வாகக கிடைக்கவிருந்த சம்பந்தத்தை நாமே அசட்டை செய்து தள்ளிவிட்டோமோ என்று ராமசாமி ஐயருக்கு வருத்தம் தோன்றியிருந்தால் அதில் தவறு சொல்வதற்கில்லை. அவர் அப்படி நினைத்ததும் நினைக்காததும் நிச்சயம் தெரியாவிட்டா லும், அவர் வீட்டு ஸ்திரீகள் அப்படி நினைத்து மிகவும் வருந்தி ஞர்கள் என்பது அவர்கள் பேச்சுக்களிலிருந்து நன்கு தெரிந்தது.

"படிப்பு, பணம் ஒன்றும் இல்லாத இந்த நடராஜனுக்கு இவ்வளவு அதிருஷ்டம் இருந்திருக்கே. சங்கரையர் மாப்பிள்ளை யாக ஒரே அமர்க்களப்படுகிருனே! ஏதோ கிடைக்கத் தகாத வரன் கிடைத்துவிட்ட மாதிரி அந்தப் பிராம்மணன் மாப்பிள்ளைக்கு மட்டும் தனியாகச் செய்திருக்கிற சீரே எவ்வள வோன்னு இருக்கு!" என்று அசூயை மேலிட அதிசயித்தாள் அத்தை.

"நம்ம பிள்ளைக்குக் கோண புத்தி தோணி, அதையும் ஒரு தகப்பன் சரியென்று கேட்டு நடத்தினுல் அசலானுக்கு யோகம் அடிக்காமே என்ன பண்ணும்!" என்று அலுத்துக் கொண்டாள் விசாலம்.

"இவைகளுக்கெல்லாம் ஒருத்தரையும் குற்றம் சொல்ல முடியாது. யார் பெண்டாட்டியை யார் கட்ட முடியும்!" என்று வேதாந்தம் பேசினுள் பாட்டி.

"பெண்ணினுடைய தாலிக் கூறை போலன்னு இருக்கு சம்பந்திப் புடவை. நடராஜன் அம்மா, அவள் ஜன்மத்தில் இவ்வளவு உயர்ந்த ஜரிகைப் புடவையை விரலால்கூடத் தொட்டுப் பார்த்திருக்கமாட்டாள்" என்று பேசினுள் அத்தை.

"சொன்னதைக் கேட்கிற பிள்ளையைப் பெத்திருக்கா. அதிர்ஷ்டமெல்லாம் நான் நீ என்று காலடியிலே வந்து நிற் கிறது. நமக்கு ஒரு நாளும் நல்ல அதிர்ஷ்டம் கிடையாது. நம்ம வார்த்தை ஒரு நாளும் எடுபட்டது கிடையாது. என்னிக் காவது ஆத்துக்காரர் சொன்னதைக் கேட்டிருந்தான்னு பிள்ளை யும் கேட்டு நடப்பன்? எல்லாம் பார்த்துப் பழகுவதுதானே" என்று விசாலம், கணவர், தன்னை அன்றிலிருந்து மதிக்

காத குறையையும் சேர்த்து வைத்து வருத்தப்பட்டாள்.

ஊர்வலத்தின்பொழுது பலவித வாணவெடிகள் ஆகாயத்தில் சென்று வெடித்து, தேவர்கள் புஷ்பமாரி பொழிவது போல் பொழிவது கண்டு, 'இத்தனையும் நம்ம அண்ணு கல்யாணத்து வைபவமாக இல்லாதிருக்கிறதே! எதிராளகத்து நடராஜன்ன மாப்பிள்ளையாக இருக்கிருன்!' என்று பெண்களுக்கெல்லாம் அங்கலாய்ப்பாக இருந்தது.

"நீதான் அண்ணு, கல்யாணம் வேண்டாம்னுட்டே; அவாத்து நடராஜனுக்குப் பதிலாக நீ மாப்பிள்ளையாக மாலை போட்டுண்டு, காரிலே ஊர்வலம் போவே; அப்போ நானும் உன்னேடு ஜம்முன்னு வந்திருப்பேன்" என்று சுந்தரி ஜம்புநாதனிடமே தன் குறையைத் தெரிவித்தாள்.

"உனக்கே மாப்பிள்ளை தேடி இதற்கும் மேலாகவே ஊர்வலம் பண்ணி ஜமாய்த்து விடுவோம்; கவலைப்படாதே!" என்று அவளுடன் விளையாடினன் அவன்.

அத்திம்பேருடைய வருத்தமும் கோபமும் வாயால் சொல்வதற்கு மேலே போயிருந்தது. அவர் யாருடனும் பேசாததுடன் ஜம்புநாதனை நிமிர்ந்தும் பாராமல் பராமுகமாக இருந்து, அவனிடம் தமக்கிருக்கும் கோபத்தைப் பிரத்தியேகமாகக் காண்பித்தார். அவர் அந்தக் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் போலவா? ஏதோ கல்யாணம் என்பதற்காக ஆசைப்படுகிருரா? அவர் தீர்க்க திருஷ்டியுடன் அவன் வருங்காலத்தின் நலனை எண்ணிப் பார்த்து, அந்த விவாகத்துக்குச் சிபாரிசு செய்திருக்க, அவன் ஒன்றையும் யோசியாது அலட்சியமாக மறுத்துக் கூறினதற்கு அவர் மனம் கோபப்படாமல் என்ன செய்யும்?

அவர் அவ்விதம் இருப்பதைப் பொறுக்காத ஜம்புநாதன் அவரைச் சமாதானம் செய்யப் பல விதத்திலும் முயன்று பார்த்தான். ஒன்றும் பலிக்காதவண்ணம் அவர் தம் கோபத்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண் டிருந்தார். அவன் என்ன பணிந்து பேசியும், 'பட்டணம் சென்று படிப்பதனல் பெரிய மேதாவி என்ற எண்ணம் வந்துவிட்டது; பெரியவர்களை மதிக்காமல் நடக்கத் தோன்றுகிறது' என்று ஒரே வார்த்தையில்

தீர்ப்புக் கொடுத்துவிட்டுச் சும்மா இருந்தார். 'பெரிய வீடு முறையின்போது அவகாசம் நிறைய இருக்குமே; அப்பொழுது எவ்விதமாவது அவரைச் சமாதானம் செய்துவிட மாட்டோமா?' என்ற நம்பிக்கையில்தான் ஜம்புநாதன் ஆச்வாசம் கொள்ள வேண்டியிருந்தது.

அவர் அவ்வளவு கடுமையாக ஜம்புநாதனைக் கண்டித்ததாலேயே அவன் அம்மா முதலானவர்கள் தங்கள் குறைகளைத் தங்களுக்குள்ளேயே அடக்கிக்கொண்டு, ஜம்புநாதனிடம் அதிகம் காண்பிக்கவில்லை. வீட்டில் எல்லோரும் சேர்ந்து, அவனைத் துன்புறுத்துவதில் அந்தப் பெண்களுக்கு மனமில்லை. தந்தை அடித்தால் தாயும், தாய் அடித்தால் தந்தையும் பரிந்து வருவது சகஜந்தானே?

இவ்விதம் ராமசாமி ஐயர் வீட்டில் எல்லாருடைய பொருமைத் தீயையும் வளர்த்துக்கொண்டு திருவானைக்காவில் ஸ்ரீ தியாகராஜையர் மகன் ஸ்ரீ நடராஜனுக்கும் திருச்சி ஜவுளி வியாபாரம் ஸ்ரீ சங்கரையர் மகள் செள. கௌரிக்கும் விவாகம் இனிது நிறைவேறியது. ஜம்புநாதனும் பசுபதியும் மாப்பிள்ளைத் தோழர்கள் ஸ்தானத்தை நன்கு வகித்து, எல்லா விமரிசைகளிலும் கலந்துகொண்டு சுபத்தை முடித்து வைத்தார்கள்.

நடராஜனுக்கிருந்த சந்தோஷத்திலும் பெருமையிலும் நண்பர்களிடம், "ஒவ்வொரு வகுப்புப் பரீட்சையிலும் முதலாவதாகத் தேறின உங்களைத் தவருது பாராட்டி வந்ததற்குப் பயனாக என்னை நீங்கள் இப்பொழுது பாராட்டும்படி எனக்கு முதலில் விவாகம் நன்ருக நடந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டான்.

"உன்னுடைய இந்த அதிருஷ்டத்துக்கு மலைக்கோட்டைப் பிள்ளையாருக்கு 108 அல்ல, 1008 தேங்காய்கள் உடைக்க வேண்டும் தெரியுமா!" என்ருன் பசுபதி விளையாட்டாக.

"ஆனுல், நான் பிள்ளையாரை மறந்துவிட்டதாக நினைக்கிருயா? அது ஒரு நாளும் இல்லை. நீ சொல்கிறவரைக்கும் காத்திருப்பேனு? முதலில் அவருக்குச் செய்துவிட்டுத்தான் பிறகு கல்யாணம் நடந்திருக்காக்கும்! நான் சிலரைப்போல் வாழ்வு வந்தவுடன் சுவாமியை மறந்து போகிறவன் அல்ல" என்ருன்

நடராஜன்.

"என்ன இருந்தாலும் இந்த அதிருஷ்டத்திற்குச் சுவாமி மட்டும் அல்லடா, ஜம்புநாதனும் உனக்கு உதவி செய்திருக்கிறுன் தெரியுமா? அவன் சமயத்தில் விவாகம் வேண்டாம் என்று மறுத்ததில் உன் காட்டில் மழை பெய்துவிட்டது. நீ பிள்ளையாருக்குக் காண்பிக்கும் நன்றியோடு ஜம்புநாதனுக்கும் கொஞ்சம் காண்பிக்கத்தான் வேண்டும்!" என்று மேலும் பசுபதி விளையாட்டாகவே பேசினுன்.

"உண்மை; பிள்ளையார்தான் இவன் மனத்திலே தோண வைத்திருக்கிருர் என்ருலும் இவன்தானே இதற்குக் காரணமாக இருந்திருக்கிருன். இவன் சமயத்திலே வேண்டாம் என்று மறுக்காவிட்டால் எங்களை இது தேடி வருகிறது ஏது? எனக்கும் இவ்வளவு பணத்துடனும் காசுடனும் மனைவி வருகிறது ஏது?" என்று நடராஜன் நிஜமாகவே அதை ஒப்புக்கொண்டு பேசினுன்.

"போடா போ! அவன் ஏதோ கேலியாகச் சொல்லுகிருன்; அது தெரியாமல் நீ அதை ஏற்றுக்கொண்டு பேசுகிருயே. நான் வேண்டாமென்ருல் அவர்கள் அடுத்தபடி உன்னைத் தேடித்தான் வர வேண்டுமா? 'கல்யாணங்கள் சொர்க்கத்திலேயே தீர்மானமாகின்றன' என்று ஆங்கிலத்தில் பழமொழிகூட உண்டு; கேட்டதில்லையா? நான்கூட, 'எல்லாம் தெய்வச் செயல்' என்பதாகத்தான் சொல்லுகிறது வழக்கம்" என்ருன் ஜம்புநாதன்.

"நடராஜனுடைய பக்திப் பிரவாகம் உன்னையும் அடித்துக்கொண்டு போகிறதா? உனக்கும் சாமிதான் எதற்கும் காரணம் என்கிற நம்பிக்கை வந்துவிட்டாற்போல் இருக்கிறதே!" என்று பசுபதி தன் பரிகாசத்தை ஜம்புநாதன்பேரில் திருப்பினுன்.

இப்படி நடராஜன் தனக்கு நல்ல இடத்தில் மனைவி வாய்த்த மகிழ்ச்சியை நண்பர்களிடம் சொல்லிச் சந்தோஷப்பட்டுக்கொண் டிருக்கும்பொழுது தியாகராஜையர் மற்ருெரு யோசனையை ராமசாமி ஐயரிடம் ரகசியத்தில் கலந்து, பலமாகச் செய்துகொண் டிருந்தார். அதாவது, 'நடராஜனுக்கு எதிர்

ஜாமீன் என்கிற வரையில் சங்கரையர் பணமாகக் கொடுத்த ஐயாயிரத்தோடு ராமசாமி ஐயர் ஓர் ஐயாயிரம் ரூபாய் சேர்த்துப் போட்டு இருவருக்கும் பொதுவாக ஒரு ட்ராக்டர் விலைக்கே வாங்கி விட்டாலோ?' என்கிற யோசனைதான் அது.

''இப்பொழுது பாருங்கள்; என் கையில் முழுசாக ஐயாயிரம் ரூபாய்கள் ரொக்கமாக இருக்கின்றன; நீங்கள் மற்றொரு பகுதியைப் போட்டீர்களானால் காரியம் நடந்துவிடும்; என்ன சொல்கிறீர்கள்? இவ்வளவு நாளும் முழுத் தொகையையும் உம்மையே போட்டு ட்ராக்டர் வாங்கச் செய்து உபயோகத்திற்கு மட்டும் நான் பங்கிற்கு வருவது அழகில்லை, என்றுதான் பேசாதிருந்தேன். நல்ல காலம்; நடராஜன் கல்யாணம் எல்லா விதத்திலும் நன்மையாக அமையும்போல் இருக்கிறது. அவனுக்கு வரதட்சிணையாகக் கிடைத்த இந்தப் பணத்தைச் சும்மாப் பாங்கில் போடுவதைவிட இதுமாதிரி செய்தால் என்ன என்கிற யோசனை உதித்தது; உடனே உம்மிடம் வந்தேன். சம்பந்தியிடமே இன்னொரு ஐயாயிரம் கடன் கேட்கலாம்; அது எனக்கு இஷ்டமில்லை. இன்னொருவன் தயவு எதற்கு? நீரானால் ஸ்நேகம்; அதோடு உமக்கும் அதனால் லாபம் இருக்கிறது. இரண்டையும் உத்தேசித்துத்தான் உங்களிடம் வந்தேன். என்ன சொல்கிறீர்? செய்வோமா?'' என்று விஷயத்தை விளக்கிச் சொல்லிக் கேட்டார்.

ராமசாமி ஐயர், ட்ராக்டர் விலை கொடுத்து வாங்குகிற வரைக்கும் யோசிக்கவில்லை. உணவுப் பற்றுக் குறையைத் தவிர்க்க உணவு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்கிறதுதான் அவருக்கு. ஆனால், பணம் போட்டு மிஷின் வாங்குவது குறித்து அவர் நினைக்கவில்லை. மேலும் அதற்கு ஆகிற பணச் செலவில் ஒரு கல்யாணம் செய்துவிடலாமே. பெண், கல்யாணத்திற்கு வயது வந்து நிற்பதை அவர் மனைவி அன்றுடம் ஒரு தடவையாவது அவருக்கு நினைப்பு மூட்டத் தவறினதில்லையே. அப்படியிருக்க அவர் அவ்வளவு தொகையைத் தம்மிடம் பணம் இருக்கிறதென்பதற்காக எப்படிச் செலவு செய்துவிடுகிறது? ஆனால் இப்பொழுது தியாகராஜையருடைய யோசனை சரியானதாகப் படுகிறது. 'பாதிச் செலவில் உபயோகமாக, இருவருக்

கும் பொதுவாக, ட்ராக்டர் கிடைத்துவிடுகிறது. அதைக் கொண்டு விவசாயம் நடத்தினால் கட்டாயமாக அதிக விளைவும் காணும். அப்பொழுது உணவுப் பற்றுக் குறையைத் தீர்த்துத் தானிய விருத்தி செய்வதுடன் ட்ராக்டருக்காகச் செலவழித்த பணத்தையும் எளிதில் திரும்பப் பெற்றுவிடலாம் —இப்படி ராமசாமி ஐயருக்கும் எண்ணங்கள் ஓடின.

''நீங்கள் சொல்வது சரியானதுதான். ஆனால், ராமகிருஷ்ணன் ஒப்பமாட்டானே. அதற்கென்ன பண்ணுகிறது? இந்த ட்ராக்டர் சங்கதியை நானும் அவனிடம் பலவிதமும் பேசிப் பார்த்தேன். அவன் ஒரு சமயமும் ஏற்க மறுத்து, துளியும் இடங் கொடுக்காமல் பேசுகிறான்'' என்றார் யோசனையுடன். தம் தங்கை புருஷரை இதற்குச் சம்மதிக்கச் செய்வது எப்படி? அவரும் கலந்து செய்தால் அல்லவா சௌகரியமாக இருக்கும் என்கிற கவலை அவருக்கு.

''இப்படிப் பார்த்துக்கொண் டிருந்தீரானால் முடியுமா ஸார்? நித்தியம் அரசாங்கம் முறையிடுகிற முறையீடு காதில் விழுந்தும், மிராசுதாராகிய நாம் ஒன்றும் செய்யாவிட்டால் வேறே யார்தான் செய்வது? சொல்லுங்கள்! ஒரு நெல் விளைகிற இடத்தில் இரண்டு நெல் விளையும்படி செய்கிறவன்தான் உண்மையான தேச சேவை செய்கிறவன் என்று நமது தலைவர்களெல்லாம் தாங்கள் செய்த எவ்வளவோ தியாகங்களை யெல்லாம் அலட்சியமாகத் தூரத் தள்ளி வைத்துவிட்டுப் பெரிதாகச் சொல்லுகிறார்களே; அதைக் கேட்டுவிட்டுக்கூடச் சும்மா இருப்பார்களா? இந்த வருஷம் பஞ்சத்தை இன்னும் அதிகமாகவே எதிர்பார்க்கிறார்களாம். காவேரி நீர்ப் பாசனத்திலேயே விளைவு குறைவாக இருக்காம். பார்த்துக்குங்கோ; காலத்திலே மழை இல்லாமல் போனதாலேயே பயிர் சோடையாப் போகும்னு எதிர்பார்க்கிறப்பலே இருக்கு. என்ன என்னவோ சமாசாரம் காதிலே விழுகிறது. அப்படியிருக்க நாம் யோசிக்கலாமா ஸார்? நீங்கதான் சொன்னீர்களே, ராமகிருஷ்ணயருக்கு ட்ராக்டர் சங்கதி தெரியவே வேண்டாம். மிஷின் வரட்டும், என் நிலத்திலே முதல் முதல் விவசாயம் தொடங்குவோம். நந்தன் சரித்திரத்தில் வேதியரைப்போல்

அவரே கண்ணுலே பார்க்கட்டும். அப்புறமும் ஒரு மனுஷன் முரண்டு பிடிப்பானு பார்ப்போமே! பிரத்யட்சமாகப் பலனைக் கண்ட பிறகுகூட ஒப்புக்கொள்ளாமல் வம்பு பிடிப்பதற்கு அவர் குழந்தையில்லை பாருங்கள்'' என்றுர் தியாகராஜையர்.

அவர் சொல்வது அவ்வளவும் சரியானதாகவே ராமசாமி ஐயருக்குப் பட்டது. தன்னைப்போன்றவன் விளைச்சலை விருத்தி செய்யாமல் வேறு யார்தான் செய்கிறது? அதிகப்படி நெல் அளப்பவனுக்குப் போனஸ் கொடுப்பதாக அரசாங்கத்தார் ஆசை காட்டிச் சொல்லிப் பார்க்கிறுர்கள். அவர்கள் சொல்வதுபோல் பரோபகாரமாகவும் ஒருவிதத்தில் ஆகிறது. ஜனங்களைப் பட்டினியினின்றும் காப்பது சாமானிய தர்மமா? இந்த நன்மையை நாட்டிற்குச் செய்ய முன் வராமல் இருப்பது தன்னைப்போன்றவருக்கு அழகா? பொதுஜன சேவை செய்ய அதுவாக நேர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தைக் கைவிடலாமா? தன்னைப்போல் சர்க்கார் உத்தியோகம் பார்த்தவன் இது விஷயங்களில் அவர்களோடு ஒத்துழைக்க வேண்டாமா? அப்படிச் செய்வதற்குத் தியாகராஜையர் வேறு வழி சொல்லுகிறுர். தாம் பாதிச் செலவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறுர். முதலில் தம்முடைய நிலத்தில் வேலை ஆரம்பிப்பதற்கும் ஏற்றுக்கொள்கிறுர். அது எவ்வளவு விதத்தில் சௌகரியம்? 'அவர் செய்து பார்த்துப் பலன் சரியாகக் கிடைக்கவில்லை என்றுல் ராமகிருஷ்ணனுக்குத் தெரியவே வேண்டாம். நாம் அதைக்கொண்டு விவசாயமே தொடங்காமல் நிறுத்திவிடலாம். தியாகராஜையருக்கு உதவியாகப் பணம் கொடுத்த மாதிரி பாவித்துக்கொண்டு விடுகிறது. அவ்வளவுதானே! அப்படிக்கின்றி ஒன்றுக்கு மூன்றுக விளைந்ததானுல் அப்பொழுது ராமகிருஷ்ணன் தானுகவே வழிக்கு வந்துவிட்டுப் போகிறுன். அப்புறமும் அவன் பிடிவாதமாக இருந்தானுனுல் அப்பொழுது அவனை மீறித்தான் செய்யவேண்டி வரும்.'

அப்படி மீறும்படி வந்ததானுல் என்கிற கவலை அவரைத் திரும்பத் திரும்ப வாட்டிற்று. ராமகிருஷ்ணையருடைய பிடிவாத குணம் அவர் அறிந்ததுதானே. அதைத்தான் அவர் ஜம்புநாத

னிடம் தனக்கும் தியாகராஜையருக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லும்பொழுது, "எவ்வளவோ சௌகரியமாக உணவுப் பெருக்கைச் செய்து பார்க்கச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அத்திம்பேருக்காகத்தான் பார்க்கவேண்டி யிருக்கிறது. அவர் புரியாமல், தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம் செய்வாரே!" என்றார் கவலையுடன்.

"அத்திம்பேரை விரோதித்துக்கொள்ளக் கூடாது; அவருக்கு வருத்தம் வரும்படி நடக்கக் கூடாது; உண்மை. இருந்தாலும் அப்பா, எத்தனையோ ஜனங்களுக்கு அன்னதானம் செய்வதற்குச் சமானமான உபகாரத்தைச் செய்ய நம்மால் முடியும்படி இருக்கும்பொழுது சும்மா இருப்பார்களா? அது சரியானதாகத் தோன்றவில்லை அப்பா; பெரிய குற்றமாகக்கூடக் கருதலாம். நாம் சமயத்தில் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறுவது அவ்வளவுக்குத் தப்பான காரியந்தான். அத்திம்பேர் ட்ராக்டர் செய்யும் வேலையை அவரே கண்ணுல் பார்த்தால் ஒப்புக்கொள்வார் அப்பா; அப்படி இல்லாவிட்டாலும் அவரை மீறிச் செய்ய வேண்டியதுதான். வேறு வழி இல்லை" என்றுன் ஜம்புநாதன் திடமாக.

அவனும் அத்திம்பேருக்காகப் பார்த்து முடியாது; செய்யத்தான் வேண்டும் என்று கருதுகிறுன் என்று ஏற்பட்ட பிறகு ராமசாமி ஐயர் எதற்காகத் தயங்குகிறது? அவர் சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வந்தார். ஜம்புநாதனிடமும் பசுபதியிடமும் சென்னை சென்றதும் ட்ராக்டர் விலைக்கு வாங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்து வைக்கும்படி சொன்னுர். பிறகு அவர்கள் தை மாசத்து அறுவடை முடிந்து நெல் விற்ற பணத்துடன் புறப்பட்டு நேரில் சென்று மிஷினை வாங்கி வருவது என்று நிச்சயித்தார்கள்.

ஏற்கனவே தன் கல்யாண விஷயமாக மனஸ்தாபத்தோடு இருக்கும் அத்திம்பேரை நினைத்துத்தான் ஜம்புநாதனுக்கு உள்ளூறக் கவலையாக இருந்தது. 'ட்ராக்டர் சங்கதி அவரைப் பின்னும் மனஸ்தாபப்பட வைக்காமல் இருக்க வேண்டுமே ஈசுவரா!' என்றுதான் அவன் பிரார்த்தித்துக்கொண்டான்.

விஷயம் இரண்டு வீட்டிலும் யாருக்கும் தெரியக் கூடாது;

எல்லாம் பரம ரகசியமாக நடக்க வேண்டும். அப்படியாக ஏதாவது வெளிவந்தாலும் அது தியாகராஜையர் சமாசாரம் என்பதாகச் சந்தேகமறத் தோன்றும்படி நடந்துகொள்ள வேண்டும். பட்டணம் சென்று ட்ராக்டர் வாங்குவது ஒன்றுதான் அவர் செய்வார். மிஷின் திருச்சி வந்த பிறகு தியாகராஜையர் சகலமும் பார்த்துக்கொள்ள வேண்டியது. இப்படி முடிவு கட்டின பிறகு அவர்களுக்கு ஒருவாறு நிம்மதி ஏற்பட்டது.

தமக்கு ஏதோ சுக்கிரதசைதான் ஆரம்பமாகி இருக்கிறது. அதனால்தான் தாம் முனைகிற காரியம் எதுவும் அவ்விதம் ஜயமடைந்து வருகிறது என்று தம்மிடத்திலேயே தியாகராஜையருக்குப் பரம திருப்தி ஏற்பட்டது. 'ஏர் பிடித்தவன் என்ன செய்வான், பானை பிடித்தவள் பாக்கியசாலி' என்று புதிதாக வந்திருக்கும் நாட்டுப்பெண்ணை அதிருஷ்டசாலி என்று கொண்டாடி, ஏற்கனவே ஆனந்த வெள்ளத்தில் மிதக்கும் நடராஜனைப் பின்னும் அதில் முழுகித் திணறச் செய்தார் அவர்.

## 28

ராமசாமி ஐயர் போட்ட திட்டப்படி, சென்னைக்குப் போக இரண்டு மாத காலம் பிடித்தது. ராமகிருஷ்ணையருக்குச் சந்தேகம் இருக்கக் கூடாதல்லவா? அதற்காகச் சாவித்திரியைப் பார்த்துவிட்டுப் பரீக்ஷை சமயத்தில் ஜம்புநாதன் சிரத்தையாகப் படிப்பதற்கு வேண்டி, அவன் பக்கத்தில் இருந்துவிட்டு, வருவதாகச் சொல்லிக்கொண்டு வந்து சேர்ந்தார். அவர் வந்த சமயம் ஜம்புநாதனுக்கும் பசுபதிக்கும் பரீக்ஷை சமயமாகத்தான் இருந்தது. ஆகையால் அவர்கள் கல்லூரியைவிட்டு ராமசாமி ஐயர் வந்திருப்பதற்காகக்கூடச் சாவித்திரி வீட்டுக்கு வரவில்லை. ஆனால், முன்னடியே ட்ராக்டர் வாங்குவதற்கு வேண்டிய ஆர்டரைப் பதிவு செய்து, மெஷினை வரவழைத்துத் தயாராக வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளைக் கம்பெனியில் கணேசனுடைய உதவியில் செய்திருந்தார்கள். அதனால் ராமசாமி ஐயர் வரவும், பணத்தைக் கொடுத்து ட்ராக்டரைப் பெற்றுக்கொள்ள வேண்டியது ஒன்றுதான் பாக்கியாக இருந்தது.

அதன்படி செய்து, அதைத் திருச்சிக்கு அனுப்பும்படியான ஏற்பாடுகளையும் கம்பெனியாரையே கொண்டு செய்யும்படி செய்துவிட்டு, பரீக்ஷை முடிந்தவுடன் ஜம்புநாதன் பசுபதி இவர்களுடன் ஊர் புறப்படச் சித்தமாக இருந்தார் ராமசாமி ஐயர்.

"ட்ராக்டர் வாங்குகிற சாக்கிலாவது வந்து பத்து நாள் இருந்தீர்களே, சித்தப்பா! எனக்கு ரொம்ப சந்தோஷம். சித்தியையும் பெண்களையுந்தான் அழைத்து வராமல் வந்துவிட்டீர்கள்!" என்றாள் சாவித்திரி.

"பெண்களுக்குப் பள்ளிக்கூடம் சாத்தியாகவில்லை; அதனால் வருவதற்கில்லை. மேலும் இந்த ட்ராக்டர் விஷயம் ஆத்தில் யாருக்கும் தெரிய வேண்டாம் என்கிறது. கூட வந்தால் தெரிந்து போகாதா?" என்றார் ராமசாமி ஐயர்.

"நீங்கள் இப்படி ரகசியமாக வைத்து நடத்துவது சரியா? மறைத்துச் செய்கிறதாகப் பின்னால் தெரிந்தால் பின்னும் அல்லவா மனஸ்தாபத்திற்கு இடமாகும்? அதைவிடச் சண்டை வேண்டுமானாலும் வரட்டும் என்று தாட்டியாகச் சொல்லி விடுவதே மேல் என்று எனக்குப் படுகிறது. ஒரு குற்றத்தோடு போகும்; மறைத்த குற்றமும் சேர்ந்து பின்னும் பெரிதாக ஆகாது" என்றார் கணேசன்.

"அதற்கில்லை அப்பா; ராமகிருஷ்ணன் என்ன சொன்னாலும் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறான். எல்லாம் நாசமாகப் போய்விடுகிற மாதிரி பேசுகிறான். காரணத்தோடு ஏற்பட்டிருக்கிற வெறுப்பாக இருந்தால் ஏதாவது சொல்லிச் சரிப்படுத்தலாம். காரணமே இல்லாத வெறுப்பிற்கு என்னத்தைச் செய்கிறது? ஒன்றும் பிரயோஜனம் இல்லாமற் போகிறது. காரியத்திலாவது நடத்திக் காட்டுவோம் என்கிறது எனக்கு. அதனால்தான் முன்கூட்டித் தெரிவியாமல் தியாகராஜையர் நிலத்தில் விவசாயம் செய்து காண்பித்துவிட வேண்டுமென்று பார்க்கிறேன்" என்றார் ராமசாமி ஐயர்.

"என்னவோ? அதுவரைக்கும் விஷயம் அவருக்குத் தெரியாமல் இருக்க வேண்டுமே! சாத்தியமா? இவ்வளவிற்குப் பிறகும் அவர் பிடிவாதத்தைக் கைவிடாவிட்டால்?" என்றார் கணேசன் சந்தேகத்துடன்.

"நமக்கு மெஷின் வாங்குவதற்கே இப்படி யோசித்துத் தயங்கவேண்டியிருக்கிறது. இங்கே கம்பெனியில் பார்த்தால் நமக்கு முன்னமேயே எவ்வளவு பேர் வாங்கிப் போயிருக்கிறார்கள் தெரியுமா? இப்படித் தயங்குவதற்கு எனக்கே வெட்கமாக இருக்கிறது. நல்ல காரியத்தைச் செய்ய இவ்வளவு சங்கோசப் படும்படி இருக்கிறதே!" என்று வருத்தத்தோடு கூறிக்கொண்டார் ராமசாமி ஐயர். அவருக்கு ட்ராக்டர் வாங்குகிறவர்களில், தாம் முதல் ஆசாமி என்று இருந்தாலாவது இவ்வளவு தயங்குவது குறித்துச் சிறிது சமாதானம் ஏற்படும்போல் இருந்தது. இங்கே வந்து பார்த்த பிறகு அந்தச் சமாதானத்திற்கும் வழியில்லை என்று தெரிந்தது.

"என்னவோ ராமகிருஷ்ணன் இப்படிப் பிடிவாதமாக இருக்கிறான். ஜம்புநாதன் கல்யாணம் செய்துகொள்ளாத கோபமே இன்னும் தீர்ந்தபாடில்லை. அதற்கு மேலும் இந்த ட்ராக்டர் சங்கதியைக் கிளப்பப் பயந்துகொண்டுதான் தெரிவிக்காமல் வந்துவிட்டேன்" என்று மேலும் காரணம் கூறினார் ராமசாமி ஐயர்.

"சித்தப்பா! உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டுமே; அதற்காக அல்லவா சிறிது நேரமாகத் துடித்துக்கொண்டிருக்கிறேன். சற்று முன் வந்து போன சரோஜாவின் மாமியார் நம்ம ஜம்புநாதன் ஜாதகத்தைத் தன் பெண்ணுக்காக உங்களிடம் வந்து வாங்க வேண்டுமென்று சொல்லிப் போகிறாள். அதற்கு அவள் கணவர் ஜட்ஜே வருவாராம்" என்றாள் சாவித்திரி மிகுந்த குதூகலத்துடன். அவளுக்குப் பெரிய காரியம் சாதித்துவிட்ட மாதிரி உத்ஸாகம் இருந்தது தெரிந்தது.

"அதென்ன சமாசாரம்?" என்று கணேசன், ராமசாமி ஐயர் இருவரும் வியப்போடு கேட்டார்கள்.

"ஜம்புநாதனை அன்று நம் ஆத்தில் பார்த்ததிலிருந்து அந்த அம்மாளுக்கு இந்த எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் தெரிந்துகொண்டு விட்டேன். ஆனாலும் அவர்களாகச் சொல்கிறவரையிலும் நாம் எப்படித் தீர்மானித்து விடுகிறது என்றுதான் பேசாமல் இருக்க வேண்டி வந்தது. அந்தத் திருச்சிப்

பெண்ணை நீங்கள் பண்ணுறதது அதனுல்தான் எனக்கு அப்பொழுது அவ்வளவு சந்தோஷமாக இருந்தது. இனிமேல் அத்திம்பேர் வருத்தப்படவே வேண்டாம். அவர் சிபாரிசு செய்த பெண்ணைவிடக் கமலினி எவ்வளவோ உசத்தி!'' என்று ஒரேயடியில் கல்யாணம் நிச்சயமாகிவிட்டதாகவே சாவித்திரி உத்ஸாகத்தோடு பேசினுள்.

ராமசாமி ஐயருக்குக்கூட மிகுந்த பெருமையும் திருப்தியும் ஏற்படுகிற மாதிரிதான் தெரிந்தது. யாருக்குத்தான் இராது? உத்தியோகத்தின் சிகரமான ஹைகோர்ட் நீதிபதி பதவி வகிப்பவரின் மகளை வெறும் மிராசுதாரரான தம் மகனுக்குக் கொடுக்கிருர்கள் என்ருல் அது சாமானியமான கௌரவமா !

பெண்ணின் உயர்வையெல்லாம் சாவித்திரி வாய் ஓயாது அவருக்கு எடுத்துச் சொன்னுள். கமலினியின் குணங்களை வருணிப்பதில் அவளுக்குச் சிரமம் என்ன? அவள்தான் அதை நினைத்து நினைத்துக் கொண்டாடிக்கொண் டிருக்கிருளே. தான் ஆசைப்பட்டபடி காரியம் நடக்கப்போகிறது என்கிற சந்தோஷத்திற்கு அளவிருந்ததாகவே தெரியவில்லை. தன்னுடைய வாழ்க்கையில் இருக்கும் சிறு குறைகளும் ஜம்புநாதன், கமலினி இவர்கள் வாழ்க்கை ஒன்றுபட்டால் இராது என்று அவள் கருதினுள். கணேசனுக்காவது பெண்கள் மனத்தை நுட்பமாக அறியும் ஆற்றல் போதாது; அதனுல் எவ்வளவோ சிறு மன வருத்தங்களுக்கு அவளை உள்ளாக்கி யிருக்கிருன். இப்பொழுது கூட அவள் குழந்தை இல்லை என்று குறைப்படுவதற்கு அவன் அநுதாபம் காண்பிக்காததுடன் அசட்டை செய்து அவளை அதிகம் வருத்துகிருனே. அதுபோல் ஜம்புநாதன் இருப்பானு? அவள் மனம் சிறிது மாறுவதைக்கூட அவன் எவ்விதமோ அறிந்து அதற்கு அநுதாபமும் காண்பிக்கிருன். ஜம்புநாதனுக்கு வாழ்க்கைப்படுகிற பெண் யாராக இருந்தாலும் சுகப்படுவாள்; நிச்சயம்! அவன் அவ்வளவுக்கு மனமறிந்து நடந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவனுக இருக்கிருன். அவனுக்குத் தகுந்த மனைவி கமலினிதான். அவளைப்போல் எல்லாம் பொருந்திய உயர்வான பெண் வேறு எங்கும் கிடைக்க மாட்டாள். அவர்கள் இருவரும் மணந்து, தம்பதிகளானுல்

பார்வதி பரமசிவனைத்தான் அவர்களுக்குச் சமமாகக் கூறலாம். அவ்வளவு ஒத்த மனத்தோடு வாழ்வார்கள். இவ்விதமெல்லாம் சாவித்திரி அவர்கள் பொருத்தத்தைப் பெரிதாக எண்ணி மகிழ்ந்து போனாள். தான் போட்ட திட்டம் தவறாமல் பலிக்கிறது என்கிறதில், அந்த மகிழ்ச்சி பின்னும் அதிகரித்தது.

கணேசனும் சாவித்திரி சொல்வதை ஒப்புக்கொண்டார். சாவித்திரி நினைத்த அளவிற்கு ஜம்புநாதனை எல்லாம் தெரிந்த மேதாவியாக நினைக்காவிட்டாலும் ஹைகோர்ட் நீதிபதி மகளை மணக்கத் தகுந்தவன் என்கிற வரைக்கும் அவர் ஏற்றுக் கொண்டார்.

சம்பிரதாயப்படி ஹைகோர்ட் ஜட்ஜ் நேரில் வந்து கமலினியின் ஜாதகத்தை ராமசாமி ஐயரிடம் கொடுத்து, ஜம்புநாதன் ஜாதகத்தை ஊர் சென்றதும் முதல் காரியமாக அனுப்பிவைப்பதாக அவர் மரியாதையுடன் சொன்ன பதிலை ஏற்றுக்கொண்டு போன பிறகு, மீனாக்ஷியம்மாளுக்கு உண்டான ஆச்சரியத்திற்குத்தான் அளவே இல்லாமல் இருந்தது. 'பெரிய ஹைகோர்ட் நீதிபதியின் மகளுக்குக் கேவலம் மிராசுதார் மகன்தானா? உத்தியோகத்திற்கு உத்தியோகம், பணத்திற்குப் பணம் என்று பாராமல் இதென்ன, சம்பந்திகள் தங்கள் ஒரு பெண்ணுக்கு இப்படி வரன் தேடுகிறார்கள்? பட்டண வாசத்து நாகரிகத்துக்கும், பட்டிக்காட்டு அநாகரிகத்துக்கும் ஒத்து வருமோ? இதை நினைத்துப் பார்க்கவில்லைபோல் இருக்கிறதே அவர்கள்!' என்று அதிசயித்தாள்.

சரோஜாவுக்கு இருக்கும் உடம்புத் துர்பலத்தில் நல்லபடியாகப் பிரசவித்து எழுந்திருக்க வேண்டுமே என்று அடி வயிற்றிலிருந்து படும் கவலையையும் மறந்து, வைஸ்ராய் மாளிகை விருந்திற்குத் தான் போகாது முடியாது என்று சொல்லிக் கொண்டு, தங்கையின் பிரசவத்திற்காகவும் காத்திராமல் டில்லி சென்றதால் பத்மாவிடத்திலேயே ஏற்பட்டிருந்த ஏமாற்றத்தையும் மறந்து, வாய்விட்டே தனது அதிசயத்தை அவள் வெளிக்காட்டினாள்.

தாயார் இவ்வளவு கவலைப்படும்பொழுது தங்கையின்

பிரசவத்திற்குப் பக்கபலமாக இருந்து போக வேண்டியது, பத்மாவுக்கு முக்கியமாகத் தோன்றவில்லையே என்கிறதில் மீனுக்ஷியம்மாளுக்கு ஏமாற்றம். ஆனல் அவள் போகவேண்டும் என்பது வைஸ்ராய் மாளிகை விருந்திற்கல்லவா என்கிறதில் தாங்கமுடியாத பெருமை. இவ்விதம் ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டு உணர்ச்சிகளின் மத்தியில் ஊசலாடிக்கொண்டிருந்தாள் அந்த அம்மாள். 'கமலினி பிறத்தியார் பெண்; அவர்கள் எப்படி யாருக்குக் கொடுத்தால் நமக்கென்ன?' என்று நினைத்தாலும், 'என்ன உசத்தியைக் கண்டுவிட்டாள் சம்பந்தியம்மாள் ஜம்புநாதனிடம்? அந்தஸ்தைத் துளியும் சிந்திக்காமல் இருக்கிறளே!' என்று ஆச்சரியப்பட்டுத் தீராதுபோல் இருந்தது அவளுக்கு. அவர்களையும்விடப் பெரிய இடத்தில் கமலினி வாழ்க்கைப்பட்டு, அதனல் அம்மாவும் பெண்ணும் ராங்கியாக இராவிட்டால் இப்படித்தான் மட்டமாக இருக்கட்டுமே என்று நினைத்தாள் அந்த அம்மாள். அதிசயம் மட்டும் அவளைவிட்டு நீங்குவதாக இல்லை.

'சம்பந்தியம்மாளே ஒரு போக்கு. அவளுக்கு ஒன்றையும் சரியானபடி அறியத் தெரிகிறதில்லை. தான் என்னவோ படித்தவள்; பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப் படாதவள் என்று காண்பித்துக்கொள்வதில் ஒரு பெருமை. அதுதான் அவளுக்குப் புத்தி இப்படிப் போகிறது' என்று முடிவு கட்டினள். அந்தஸ்தைத் தராசு கொண்டு நிறுத்து, துளி கீழே இறங்கிவிடக் கூடாது என்று கருதுகிறவளானல் சரோஜாவைத் தன் மகனுக்கு விவாகம் செய்துகொண்டிருப்பாளா? அப்பொழுது அவள், 'ஒரு போக்'காக இருந்தது மீனுக்ஷியம்மாளுக்கு நன்மையாகத்தானே இருந்தது? சரோஜாவின் அழகிற்கும் கலாசாலைப் படிப்புக்குமாகத்தானே அவளை நாட்டுப் பெண்ணுக ஏற்றுக்கொண்டாள் சம்பந்தியம்மாள்? அதை மறந்துபோனுள் மீனுக்ஷியம்மாள். இப்பொழுது ஜம்புநாதனுக்கு அடிக்கும் அதிருஷ்டத்தை நினைத்துத்தான் மனம் பொருமிப்போயிற்று அவளுக்கு. கமலினி அழகில்லை என்று அவள் கொண்டிருந்த எண்ணங்கூட இப்பொழுது மறைந்து போயிற்று. அழகில்லாத குறைக்காக, மட்டமாக வாழ்க்கைப்

படுவது நியாயம் அல்லவா?

ஜம்புநாதனும் பசுபதியும் பரீக்ஷை முடிந்து ராமசாமி ஐயரோடு ஊர் செல்லவென்று அவர்கள் வீட்டிற்கு வந்த பொழுது, மீனாக்ஷியம்மாளால் வழக்கமான அலட்சியத்துடன் அவர்களை வரவேற்க முடியவில்லை. அவர்களைத் திரும்பிப் பாராமல் இருப்பதென்பது சாத்தியமாக வில்லை. உள்ளூற ஏற்பட்ட மதிப்பில் உபசாரமாகக்கூடப் பேச வைத்தது என்றால் அதற்குமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது! சாவித்திரியின் அம்மாஞ்சி என்பதற்குமேல் ஒன்றும் ஜம்புநாதனைப்பற்றி அறிய ஆவல் காண்பிக்காத சரோஜாகூட அவனுடன் சில வார்த்தைகள் பேச முன்வந்தாள்.

அவர்களுடைய இவ்வளவு மாறுதல்களுக்கும் காரணத்தை அவர்கள் ரயிலுக்குப் புறப்பட இன்னும் சிறிது நேரம் இருக்கும்பொழுதுதான் சாவித்திரியின் சொற்களாலேயே ஜம்புநாதனும் பசுபதியும் அறிந்துகொண்டார்கள். சாவித்திரி, அவர்கள் மட்டும்–அதாவது அவள் மாமனார், மாமியார் இவர்கள் இல்லாமல் மற்றப்படி தாங்கள் மட்டும்–இருக்கும்போது பேச்சைத் துவக்கி, ஜம்புநாதனுக்கு விஷயத்தைத் தெரிவித்து, அப்பொழுது அவனுக்கு உண்டாகப்போகிற மகிழ்ச்சியை நேரில் காண்பதற்கு ஆவலோடு இருந்தாள். என்ன இருந்தாலும் அவள் மாமனார் மாமியார் எதிரில் இருக்கும்போது, அவர்களுக்குள் மனம் விட்டுப் பேசி, உணர்ச்சிகளை விவரித்துக் கொள்வது முடியாதல்லவா? அவர்கள் நினைக்கும் விதத்துக்கும் இவர்கள் நினைக்கும் விதத்துக்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறதே!

அதன்படி அவர்கள் ரயிலுக்குப் புறப்படுவதற்குச் சற்று முன், ராமசாமி ஐயர் பெட்டியில் துணிமணிகளை எடுத்து வைத்துக்கொண்டு அவருக்கென்று விட்டிருந்த அறையில் இருந்தார். பசுபதியும் ஜம்புநாதனும் அவருடன் அங்கேதான் இருந்தார்கள். அந்தச் சமயத்திற்குச் சரியாகச் சாவித்திரி, கணேசனுடன் அவர்களைத் தேடி, வேண்டுமென்றே அங்கே வந்து சேர்ந்தாள்.

"என்ன சித்தப்பா, கிளம்பிவிட்டீர்களா? இனி ஒரு நிமிஷமும் தாமதிக்கக் கூடாதாக்கும். ஜம்புநாதன் வந்த பிறகு இரண்டொரு நாளாவது தங்கிப் போகலாம் என்றால், ட்ராக்டர் ஊர் போய்ச் சேர்ந்துவிடும். அதற்குள் போய் ஆக வேண்டும் என்று அதன் தலையில் பழி போடுகிறீர்கள்!" என்று பேச்சை ஆரம்பித்தாள் சாவித்திரி.

"அது உண்மை அல்லவா? நமக்கு முன்னே அது அங்கே சென்று அவர்களுக்குத் தெரியாமல் ஏதாவது கந்தரகூளம் ஆகிவிட்டால்? அது கூடாது பார்; இன்னொரு தரம் சாவகாசமாக வருகிறேன்" என்றார் ராமசாமி ஐயர்.

"அடுத்த முறை நீங்கள் இங்கே வருகிறபோது உங்களுக்குச் சம்பந்தி அகம் ஏற்பட்டுவிடும். ஆசார உபசாரமாகப் பெரிய இடத்தில் அங்கே போய் இருப்பீர்களா? எங்களை லட்சியம் செய்துகொண்டு இங்கே வந்து தங்குவீர்களா!" என்று சாவித்திரி குற்றச் சாட்டோடு விஷயத்தைத் துவக்கினாள்.

"என்ன உசத்தியாக இருந்தாலும், சம்பந்தி என்றாலும் உனக்குச் சமான மாவார்களா? அது ஒருபோதும் இல்லை" என்று அவள் சொன்னபடியே அவரும் பதில் அளித்தார்.

"இப்பொழுது இப்படிச் சொல்வீர்கள். கல்யாணம் ஆகட்டும்; அப்புறம் தானே மாறிவிடுவீர்கள்" என்றாள் சாவித்திரி.

"யார் எப்படி இருந்தாலும் ஜம்புநாதன் நிச்சயம் வேறாக ஆகிவிடுவான். அவனை இங்கே காணவே முடியாது. சாவித்திரி, நீ ஜம்புநாதனைப் பார்க்கிறது என்பது சாத்தியப்படாது. அந்த ஆசையை விட்டுவிட வேண்டியதுதான்" என்று பிரசங்கித்தார் கணேசன்.

இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்கிறது தெரியாமல் ஜம்புநாதனும் பசுபதியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத் திகைத்தார்கள். அவர்களை அவ்விதம் திகைக்க அடிக்க வேண்டுமென்றுதானே சாவித்திரி பேச்சை அப்படி ஆரம்பித்திருந்தாள். அதற்கு ஒத்துப் பாடினார்கள் ராமசாமி ஐயரும் கணேசனும். அவர்களுக்கும்–உண்டாகியிருந்த மனத் திருப்தியில்–சிறிது விளையாட்டாக இருக்கத் தோன்றியிருந்தது. ராம

சாமி ஐயருக்கு மகனுக்குப் பெரிய இடத்துச் சம்பந்தம் என்கிற தில் தன்னிடத்திலேயே மதிப்பும் பெருமையும். கணேசனுக்கும் ஹைகோர்ட் நீதிபதி தனக்குப் பலவகையிலும் உறவினராவதில் எவ்வளவோ நன்மை என்கிற எண்ணம். அவனுடைய வக்கீல் தொழிலுக்கு அவர் உறவு, கட்சிக்காரர் முதலானவர்களிடத்தில் அவன் மதிப்பை ஏற்ருதா? அது அவனுடைய சம்பாத்தியத்திற்கு எவ்வளவு பெரிய நன்மை.

"என்ன, நீங்கள் புதிர் போடுகிற மாதிரி பேசுகிறீர்களே? யாரைக் குறித்து இவ்வளவும் சொல்லுகிறீர்கள்? தெரியவில்லையே!" என்ருன் ஜம்புநாதன்.

"இப்பொழுது புரியுமா, புரியாதுதான். நாளைக்கு ஜட்ஜ் அகத்து மாப்பிள்ளையாகிக் கௌரவப்படப்போகிற போதல்லவா தெரியும்? கமலினியைப் பெண்டாட்டியாக அடைந்த மகிழ்ச்சியில் எங்களையெல்லாம் மறந்தே போகமாட்டாயா?" என்று சாவித்திரி சொன்ன பிறகு அவர்களுக்கு விஷயம் ஒருவாறு விளங்கலாயிற்று. ஜட்ஜ் வந்து ஜாதகம் கொடுத்துப் பதிலுக்கு ஜாதகம் கேட்டுவிட்டுப் போயிருப்பதையும் ராமசாமி ஐயர் சொன்ஞர்.

"அவாகளே நம் சம்பந்தத்தை நாடி வருகிருர்கள்; அப்படி இருக்கும்பொழுது நமக்கு என்ன? நாம் இரண்டு கையாலேயும் பெண்ணை ஏற்கத் தயார்! ஜாதகமும் பார்த்துச் சேர்ந்துவிட வேண்டும். அவ்வளவுதான்" என்ருர் ராமசாமி ஐயர்.

"ஜாதகம் சேரணும் என்கிறீர்களே; மனம் பொருந்திப் போன பிறகு ஜாதகம் என்ன வந்தது? அது தாஞகவே பொருந்திவிடும்; அது இரண்டாம் பக்ஷந்தான்" என்ருள் சாவித்திரி.

"மனம் பொருந்தியிருக்கிறது என்பதைக் கண்டவர் யார்?" என்று ஜம்புநாதன் ஆரம்பித்தான். அவன் அப்பொழுதுதான் திகைப்பு நீங்கி, விஷயத்தைச் சரியானபடி கிரகித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு உண்டானதென்ன, மகிழ்ச்சியா, துக்கமா? எதுவாஞலும் இப்பொழுது அவன் அதைச் சிந்தித்துப் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை. அத்தங்காளிடத்திலிருக்கும் தன் அன்பிற்காக அவன் செய்ய நினைத்திருக்கும்

தியாகத்தைச் செய்ய அதுதான் தருணம். அவனுக்கு வர இருக்கும் நிஜமான பாக்கியத்தை அவன் ஏற்க மறுப்பதில் அல்லவா உண்மைத் தியாகம் இருக்கிறது. அத்தங்காளும் அப்பொழுதுதான் அவன் அன்பின் ஆழத்தை அறிந்துகொள்ள முடியும். அந்த அன்பைப் புனிதமாக்கி அவளுக்கு அர்ப்பணம் செய்ய அவன் விரும்புகிறதையும் கொஞ்சமாவது அவளால் தெரிந்துகொள்ள முடியும். இவ்விதம் எண்ணங்களை மனத்தில் ஓடவிட்டான். மனம் ஒன்றைக் கற்பித்துக்கொண்டுவிட்ட தாலுல் அதற்கு அநுசரணையாக மேலே மேலே சிந்தித்துக் கொண்டு போக அதற்கு அநுசரணையாகக் கற்றுக்கொடுக்க வேண்டுமா?

அவனுடைய காதல் எண்ணங்களையும் அதற்காக அவன் செய்யச் சித்தமாயிருக்கும் தியாகத்தையும் சிறிதும் அறியாத சாவித்திரி, "ஏன்? காணுமல் என்ன?" என்று அவனுக்குப் பதில் சொல்லிக்கொண்டு ஆரம்பித்தாள். "கமலினி, அவள் அம்மா அப்பா இவர்கள் மன விருப்பந்தான் அவர்கள் ஜாதகத் திற்காக வந்ததிலிருந்தே தெரிந்து போயிற்று. இங்கேயோ சித்தப்பா, நாங்கள் எல்லோரும் மிகவும் மனச் சம்மதத்தோடு இருக்கிறோம். எங்களுடையதோடு சேர்ந்ததுதான் ஊரில் சித்தி முதலானவர்கள் சம்மதம். உன்னைப்பற்றியும் எனக்கு நம்பிக்கைதான். நீ வேறு விதம் நினைக்க இதில் இடமே இல்லை. உனக்கு எல்லா விதத்திலும் தகுந்தவள் கமலினி என்பதை நீயே தெரிந்துகொண் டிருப்பாய். பசுபதி உன் விஷயத்தில் உன் விருப்பப்படிதான் நினைப்பான். பிறகு வேறு யார் இருக்கிருர்கள் மனச் சம்மதம் இல்லாமல் இருப்பதற்கு?" என்று சாவித்திரி கணக்கெடுத்துச் சொன்னுள்.

"எனக்குத்தான் விவாகம் செய்துகொள்ள மனமில்லாமல் இருக்கக் கூடாதா?" என்று தயக்கத்தோடு ஆரம்பித்தான் ஜம்புநாதன். அத்தங்காள் அவ்வளவு நிச்சயமாக நினைத்திருப் பதை இல்லையென்று மாற்றுவதற்கு அவனுக்கு மனம் வராது போல் இருந்தது. அவள் ஆசையோடு எதிர்பார்த்திருக்க, அவளிடத்தில் இருக்கும் அன்பிற்காகத்தான் என்றுலும் அவளை ஏமாறும்படி செய்யலாமா? ஏது, தர்ம சங்கடமாக

வல்லவா இருக்கும்போல் இருக்கிறது. அவன் விவாகம் வேண்டாமென்ருல் அத்தங்காள் வருந்துவாள்போல் இருக்கிறது. அவன் என்ன செய்வான்? காரணத்தைக் கூறிஞலாவது அவள் தெரிந்துகொண்டு அவனுடைய உண்மை அன்பின் சமுத்திரம்போன்ற ஆழத்தையும், அவன் அதற்காகச் செய்ய நினைத்திருக்கும் மலைச் சிகரம் போன்ற தியாகத்தின் உன்னதத்தையும் பாராட்டக் கூடும்.

அவன் கமலினியை மணக்க விரும்பாததால் ஏற்படுகிற வருத்தமும் தணியும். தன்னிடம் உண்டாகியிருக்கும் காதலிஞல்தான் அவன் அவ்விதம் அவனுடைய வாழ்க்கை இன்பத்தையே துறக்க நிச்சயித்திருக்கிருன் என்று அறியும்பொழுது எந்தப் பெண்ணுக்குத்தான் திருப்தி ஏற்படாமல் போகும். ஆஞல், அதைத் தெரிவிக்க இப்பொழுது சந்தர்ப்பம் சரியில்லாமல் இருக்கிறது. கணேசன் முன்னிலையில், அவன் அப்பாவின் எதிரில் இதுபோனற விஷயங்களை வெளியிடுவது எங்காவது சாத்தியமா? அவர்கள் அதைச் சரியாகப் புரிந்துகொண்டு ஏற்பார்களா? மன்னிக்க முடியாத குற்றமாக அவர்களுக்கு அது தோன்றிவிடும். கணேசன் இருக்கட்டும்; முதலில் அவன் தந்தை, பிறகு அவன் முகத்திலும் விழிப்பாரா? காதலையும் அதற்கான தியாகங்களையும் அவர்கள் என்ன கண்டார்கள். அவன் ஏதோ பாதகமான செயலில் இறங்கிவிட்டதாக அவனை நிந்திப்பார்கள். அவனைக் கண் காணுமல் துரத்தியடிக்கும் அளவிற்கு அவர்களுக்குக் கோபம் பொங்கி வரும். ஆகையால், அவர்களிடம் இது விஷயமாக வாய் திறப்பதற்கு இல்லை. "கல்யாணம் வேண்டாம், அதற்கு இப்பொழுது அவசரம் இல்லை."—இந்தச் சொற்களைத்தான் அவர்கள் கேட்கும் பலவிதக் கேள்விகளுக்கும் அவன் திரும்பத் திரும்பப் பதிலாகச் சொல்லும்படி நேர்ந்தது.

அவன் அவ்விதம் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டு அவர்களைக் கலக்கிவிட்டான். அவர்கள் அவ்வளவு பேருக்கும் முதலில் தாங்கள் சரியானபடிதான் புரிந்துகொள்கிருேமா என்று தங்கள் காதுகளையே நம்ப முடியாதபடி திகைப்புத்தான் ஏற்பட்டது. பிறகு அவர்களுக்கு உண்டான கோபத்திற்கு

அளவே இல்லாமல்தான் இருந்தது.

"கிடக்கிறுன் கழுதை! ரொம்பப் புத்திசாலிதான். இவனைத் தெரிந்தவனுக மதித்துக் கேட்டது பிசகு. இவன் சொல்லே இங்கே யாரோ இனிமேல் கேட்டு நடந்துகொண் டிருக்கப் போகிறுர்கள்!'' என்று ராமசாமி ஐயர் கோபத்தோடு ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு, "அவர்கள் ஜாதகங்கள் பொருந்தியிருப்பதாகச் சொல்லிக்கொண்டு வரட்டும்; நான் கல்யாணத்தை நடத்திவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்'' என்று அதட்டிச் சொல்லி மகனை அசட்டை செய்து பேசினுர்.

கணேசன் ஜம்புநாதனுக்குப் புத்தி பிசகிவிட்டது என்றே தீர்மானித்துவிட்டான். தான் மகா மேதாவி என்கிற கர்வம் தலைக்கேறித் தலைகால் புரியாமல அடிக்கிறது என்று நிச்சயித்தான். 'நாம் இவனை ஒரு பொருட்டாக மதித்து இவ்வளவு நாளும் பழகிக்கொண்டதே பிசகு; இனித் திரும்பியும் பார்க்கக் கூடாது!' என்று ஆத்திரங் கொண்டான். 'சாவித்திரி வேறு அவனை வெகுவாகக் கொண்டாடி அவனுக்குத் தன்னைப்பற்றியே பெரிதாகத் தோன்ற வைத்துவிட்டாள். ஜட்ஜ் பெண்ணின் உயர்த்தியைக்கூட அறிய முடியாமல் செய்துவிட்டாள். தனக்கு வரவிருக்கும் பாககியத்தைத் தெரிந்துகொள்ளாமல் அல்னுஷர் கதையாகக் காலைத் தூக்கி உதைத்து வீணுகப் போகிறுன்!' என்று முடிவு கட்டினுன்.

"பார்த்தாயா சாவித்திரி! ஜம்புநாதன் மகா மேதாவி என்று பெருமை அடித்துக்கொண்டாயே! அவன் புத்தி போகிற போக்கைப் பார். ஆனுல் நீயும் அவனுடைய தலைக் கிறுக்குக்குப் பாதி காரணம் என்று நான் சொல்லுவேன். நீதான் அவனை, 'ஆர்தர்...அது இது!' என்று என்ன என்னவோ சொன்னுய். அதிலிருந்து அவன் தன்னை ஏதோ கதாநாயகனுகவே எடுத்துக்கொண்டு எல்லாரும் அதிசயிக்கும்படி நடந்து காண்பிக்கிறுன்!'' என்று தனக்கு ஜம்புநாதனிடம் இருக்கும் வெறுப்பையும் கோபத்தையும் வெளியிட்டுப் பேசினுர் கணேசன்.

சாவித்திரிக்கும் கணவன் கூறுவது சரியாக இருக்குமோ என்கிற சம்சயந்தான் உதித்தது. ஜம்புநாதன் தன்னைப்பற்றியே

உயர்வாக எண்ணிக்கொண்டுதான் அவ்விதம் தாறுமாறுகப் பேசுகிருஞ? இல்லாவிட்டால் கமலினியை மனேவியாக அடையும் பாக்கியத்தைப் புரிந்துகொள்ளாமல் இருப்பாஞ? அவனேப்பற்றி அவள் உயர்த்தியாக நினைத்திருந்த தென்ன? அதற்கு முற்றும் மாருக இப்பொழுது அவன் நடப்பது என்ன? அவள் அவனேப்பற்றிக் கொண்டிருந்த எண்ணங்கள் அவ்வளவையும் மாற்றியல்லவா நினைக்கும்படி செய்கிருன். அவள் அவசரப்பட்டு அவனே எல்லா ஆண்பிள்ளேகளுக்கும் மேலாகவே-முக்கியமாக-தன் கணவனுக்கும் மேலாகவே ஏற்றி வைத்துவிட்டாளே! அது எவ்வளவு தப்பிதம் என்பதை இப்பொழுது அவன் காட்டிவிட்டான். அவன் என்ன இருந்தாலும் உலக அநுபவம் அற்ற சிறு பிள்ளே என்பதை அவள் மறந்துவிட்டாள்.

இப்படித் தனனிடத்தில் உள்ள தப்பை ஏற்றுக்கொள்ள அவளுக்குச் சமாதானமாக இருக்கவில்லே. மேலும் மேலும் அதுபற்றி நினேத்து அவனேடு தர்க்கித்துப் பேச அவளுக்கே பிடிக்காமல் போயிற்று. அவ்வளவுக்கு மனம் குன்றிச் செயலற்றுப் போனுள் என்றுதான் சொல்ல வேண்டும். அவள் வெகு சந்தோஷத்தில் இருந்ததை ஜம்புநாதன் ஒரு நொடியில் போக்கடித்துவிட்டான். அவன் தந்தை அவன் பேச்சைக் கேளாது விவாகத்தை நடத்தி வைக்கலாம்; ஆனுலும் அவள் ஆசையாக எதிர்பார்த்தது அதுவா? இலக்கியங்களில் வரும் காதல் மணமாக அல்லவா அவள் அதைத் தனக்குள் பாதியும் தீர்மானித்து வைத்திருந்தாள்.

ஜம்புநாதனுக்கு, 'அத்தங்காளே இவ்விதம் வருத்தத்திற்கு உள்ளாக்குகிறேமே!' என்கிறதுதான். ஆனுல், அவள் இஷ்டப்படி மணமும் செய்துகொண்டு, தியாகத்தினுல் பிராயச்சித்தம் செய்ய நினேத்திருப்பதையும் அனுஷ்டிப்பது எப்படி என்று புரியாமல்தான் தவித்தான். எவ்வளவோ வகையில் அவளுடைய ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அவளுடன் பேசி, மாற்ற எத்தனித்திருப்பான். ஆனுல் கணேசன் அதற்கு இடம் கொடுக்கவில்லே. வீட்டில் யார் காதிலும் இது விஷயம் விழக் கூடாது. ஜட்ஜ் வீட்டவர்களுக்கு அரை குறையாக ஜம்புநாத

னுக்குச் சம்மதம் இல்லை என்கிறதாகத் தெரிந்தாலும் பிறகு அது ஆபத்துத்தான். அவன் எதிர்பார்த்த நன்மைகளுக்கெல்லாம் நேர்மாருன பலன்தான் ஏற்படும். ஆகையால் அது பற்றின பேச்சை அத்துடன் நிறுத்திக்கொண்டுவிட வேண்டும் என்று அவர் கண்டிப்பாக உத்தரவிட்டுவிட்டார். உண்மையும் அதுதானே! அவ்வளவு பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் சம்பந்தத்தை அடைவதில் சந்தேகம் கொள்வது அழகா!

நடந்தது அவ்வளவையும் பார்த்தும் கேட்டும் கொண்டிருந்த பசுபதி, ஜம்புநாதனின் விபரீதப் போக்குக்குக் காரணம் புரியாமல்தான் திகைத்துக்கொண் டிருந்தான். அதுவரைக்கும் ஜம்புநாதனுடைய பேச்சுக்களிலிருந்து கமலினியை மணக்க அவனுக்கு ஆட்சேபம் இருக்கக் கூடுமென்றே அவன் கருதவில்லை. கமலினியை அவ்வளவு உயர்வாக அவன் வருணித்திருந்தான். அப்படி ஒருவனுக்கு ஒரு பெண்ணிடம் உயர்வுகள் தோன்றிஞல் அதைச் சாதாரணமாகத் தள்ளிவிட முடியுமா? அவ்விடத்தில் கதைகளில் வரும் காதலைக்கூடத் துணிந்து புகுத்தத் தயாராக இருந்தான் பசுபதி. மேலும் அத்தங்காளின் விருப்பத்திற்கு மாருக ஜம்புநாதன் நடப்பான் என்பதும் அவன் கனவிலும் நினைக்காத விஷயம். அவனே நேரில் விஷயங்களைக் கிரகிப்பதனுல்தான் அதை இப்பொழுது நம்புகிருன். இவ்வளவுக்கும் வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும். ஒருவேளை ஏதாவது ஜானுடைய போதனையாக இருக்குமோ? ஊர் போன பிறகு ஆற அமர விஷயத்தை விசாரித்து அறிய வேண்டும் என்று நிச்சயித்து, தன் ஆவலை அடக்கிக்கொண்டு, அதற்குச் சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான் பசுபதி.

## 29

அவர்கள் திருச்சி வந்த மறு நாளே ட்ராக்டரும் வந்து சேர்ந்தது. அதனுடன் அந்த யந்திரத்தின் வேலை தெரிந்த ஆசாமி ஒருவனும் வந்திருந்தான். திருவானைக்காவில் யாருக்கும் தெரியாமல் இருக்க வேண்டித் தியாகராஜையர் ரயிலடிக்கே சென்று அங்கிருந்தே அதையும் அதனுடன் வந்த ஆசாமியையும்

கிராமத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றிருந்தார். அவ்விடத்தில் அதைச் சரி பார்த்து ஒன்று சேர்த்து வயலில் ஓட்டத் தயாராகச் செய்து முடிந்ததும் ராமசாமி ஐயருக்குத் தெரிவிப்பதாகவும் சொல்லிச் சென்றார். அதன்படி அவர் மறு நாள் வந்தபொழுது அந்தச் சேதி சொல்லத்தான் வந்திருக்கிறார் என்றே ராமசாமி ஐயரும் ஐம்புநாதனும் சந்தேகமற நினைத்தார்கள். அவர்கள் மட்டும் தனித்திருக்கிறார்களா என்பதைக் கவனித்துப் பார்த்துக்கொண்டு அவர் சொன்ன விஷயம் முற்றும் வேருக இருந்தது. அதாவது ட்ராக்டர் வந்து சேர்ந்தும், அதை உடனே ஓட்டிப் பார்க்க முடியாதபடி அதனுடைய மரைகளில் ஒன்று குறைகிறது; வந்து சேரவில்லை என்கிறதுதான் அது.

"என்ன ஸார்! இந்தக் கம்பெனி ஆசாமிகள் சுத்த மோசமான பேர்வழிகளாக இருக்கிறார்கள். இவ்வளவு ரூபாயை வாங்கிக் கொட்டிக்கொண் டிருக்கிறான்; மிஷினை அதில் எல்லாச் சாமான்களுடனும் சரிபார்த்து அனுப்பத் தெரியவில்லை. முக்கியமான சிறு மரை ஒன்றைக் காணவில்லையாம். அது இல்லாமல் மிஷினை ஓட்ட முடியாது என்கிறான் இந்த ஆசாமி. அதை இப்பொழுதே வரவழைத்து ஆகவேண்டும் என்கிறான். என்ன துப்புக்கெட்ட காரியம் பாருங்கள். பெரிய வியாபாரம் பண்ணுகிறார்கள்! அதற்கு வேண்டுமென்கிற பொறுப்பைக் காணோம்; சுத்த சோம்பேறிகள்: மிஷின் ஒன்றைக் கண்டு பிடித்துச் செய்துவிடாவிட்டாலும் விற்ற மிஷினைக்கூடச் சரியானபடி பார்த்து, ஒன்று விடாமல் அனுப்ப வேண்டும் என்கிற பொறுப்பைக் காணோமே!" என்று பெரிய ஏமாற்றத்துடன் ஆத்திரம் பொங்கக் கூறினார் தியாகராஜையர்.

"நம்மளவன்கள் எதற்குத்தான் லாயக்கு, சொல்லுங்கள்? எல்லாம் வெள்ளைக்காரனைப்போல் செய்கிறதாக நினைப்பு. அவர்களைப்போல் அடி வரையும் காரியத்தைக் கவனித்துச் சரியானபடி நடத்தப் பொறுமையும் பொறுப்பும் இருப்பதில்லை. பிறர் கண்ணில் மண்ணைத் தூவிக் கொள்ளையடிக்கப் பார்க்கிறார்கள். பணம் ஒன்றுதான் குறியாக இருக்கிறது; வேலையைச் சரியாகச் செய்ய வேண்டும் என்கிறது இல்லை. இப்பொழுது நாம் என்ன செய்கிறது? அந்தச் சாமானை அனுப்பும்

படி கம்பெனிக்கு எழுத வேண்டியதுதானே? சின்ன மறை என்கிறீர்; எங்காவது தொலைத்தேவிட்டிருப்பானே என்னவோ? இவன்களுக்குப் பதிலுக்காவது அதுபோல் பண்ணத் தெரியுமா? அதுவும் தெரியாது. என்ன தொல்லையோ போங்கள்!'' என்று ராமசாமி ஐயரும் சேர்ந்து கவலைப்பட்டு அலுத்துக்கொண்டார்.

''தொலைத்துமட்டும் இருந்தான்களானால் சும்மா விட்டுவிடுகிறதா? அமெரிக்காவிலிருந்து வரவழைத்துக் கொடுக்கட்டும்; இல்லாவிட்டால் அவர்கள் செலவில் வேறு மிஷினைப் பதிலுக்கு அனுப்பட்டும்; பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டுப் பேசாமல் இருக்க முடியுமா? நீங்கள் கம்பெனிக்குத் தந்தி கொடுங்கள ஸார்; அனுப்பச் சொல்லி; பார்ப்போம். வீண் காலதாமதம் ஆகிறது!'' என்றார் தியாகராஜையர். அவருக்கு, 'இதென்ன, கடன் வாங்கியும் பட்டினி' என்கிற சங்கதியாக மிஷினை விலை கொடுத்து வரவழைத்த பிறகும் வேலை செய்து பார்க்க முடியாமல் இருக்கிறதே என்கிற தவிப்பும் கோபமும். மிஷினுடன் வந்து சேராத அந்த யந்திர உறுப்பின் பெயரையும், மெகானிக்கிடம் கேட்டுத் தெரிந்து வந்திருந்தார் அவர்.

ராமசாமி ஐயர் உடனேயே கம்பெனிக்கு, அவர்கள் அனுப்பத் தவறியிருப்பதையும், சடுதியில் பார்ஸல் செய்து அனுப்பும்படிக்கும் தந்தி எழுதி ஜம்புநாதனிடம் கொடுத்து, அனுப்பச் செய்துவிட்டு, ''இது மாதிரியெல்லாம் அரைகுறைக் காரியம் செய்யக் கூடாது என்கிறதுதான் எனக்கு. அதற்குத் தான் நம்ம பையன்கள் சீமை சென்று பழகி வர வேண்டும் என்கிறேன்; விஷயங்களைத் தெரிந்துகொள்வது பெரிதில்லை; அவர்களைப்போல் அவைகளைச் செயலில் நடத்தும்பொழுது, பொறுப்புடனும் நம்பிக்கையுடனும் சோம்பலின்றிச் சுறுசுறுப்பாகவும் நடத்தத் தெரிந்துகொள்ள வேண்டும். ஜம்புநாதன் அதுமாதிரி பழக வேண்டும் என்கிறது எனக்கு. அவனுடைய இவ்விடப் படிப்பு முடிந்ததும் சீமைக்கு அனுப்புவதாகத்தான் எண்ணியிருக்கிறேன். விஞ்ஞானப் படிப்புப் படித்து நமது ஊரிலேயே தொழிலை ஆரம்பிதது, நம்பிக்கையான முறையில் அதில் வியாபாரம் நடத்த வேண்டும் என்கிறதற்காகத்

தான் அவனை நான் ஸயன்ஸ் படிப்பிலே போட்டிருக்கிறேன்'' என்று, தாம் நாட்டின் பொதுநலத்திற்காக யோசனையுடன் பிள்ளையைப் படிக்க வைத்திருக்கும் பெருமையை முன்பு எத்தனையோ தடவைகள் சொல்லிக்கொண் டிருப்பதையும் மறந்து, மறுபடியும் ஒரு முறை தியாகராஜையரிடம் எடுத்துச் சொல்லிக்கொண்டார்.

அந்தச் சின்ன சாமான் குறைந்து போயிராமல் வந்து சேர வேண்டுமே என்கிற முக்கிய கவலையில், தியாகராஜையருக்கு ராமசாமி ஐயருடைய சொந்தப் பாராட்டுதல் ஒன்றும் காதில் விழவில்லை. இப்பொழுது நடக்க வேண்டிய காரியத்திற்கும், பின்னுடி ஜம்புநாதன் விஞ்ஞானத்தைக் கசடறக் கற்று, உலகுக்கு உயர்த்தியாக உபகாரம் செய்யப்போவதற்கும் என்ன சம்பந்தம்? என்பதாக நினைத்தார். ஆனல், அவர் அந்த எண்ணத்தை வெளியிட்டுவிடவில்லை. அதை ராமசாமி ஐயர் ரஸிக்க முடியாது என்பது அவருக்குத் தெரியாதா? 'இப்பொழுது காரியம் நடக்க வேண்டிய அவசரத்தில் அவர் ரஸிக்காத விதம் பேசி அவர் உத்ஸாகத்தைக் குறைப்பதில் சாதகம் என்ன?' என்றுதான் அவர் சொன்னவைகளை மௌனமாகவே கேட்டு வந்தார். கம்பெனியிலிருந்து அந்தச் சாமான் தவக்கமின்றி வந்து சேர வேண்டுமே என்கிற தவிப்புத்தான் அவருக்கு.

நல்ல காலம்; அவர் பயந்தபடி அது கெட்டொன்றும் போயிருக்கவில்லை. அவர்கள் அனுப்பத்தான் தவறிப் போயிருந்தார்கள். உடனே பார்ஸலில் அனுப்பிவிட்டதாக அவர்களிடமிருந்து செய்தி வந்தது ராமசாமி ஐயருக்கு. அதிலும் ஒரு சிறு தவறு செய்திருந்தார்கள் அவர்கள். தியாகராஜையர் பேருக்கு அனுப்ப வேண்டும் என்கிறதை மறந்து, ராமசாமி ஐயர் விலாசத்திற்கே அனுப்பியிருந்தார்கள். ஆர்டர் ராமசாமி ஐயர் கொடுத்ததானுலும் அனுப்ப வேண்டியது தியாகராஜையருக்கு என்பது அதற்குள் அவர்கள் கவனத்தைவிட்டு அகன்று போயிற்று. அந்தப் பார்ஸல் வீட்டுக்கு வந்துவிடக் கூடாது. யார் கண்ணிலாவது பட்டு, யாருக்காவது சந்தேகத்தைக் கிளப்பிவிட்டால் என்கிற பயம் அவர்களுக்கு. அதனுல் அதைத்

தான் பெற்றுக்கொள்ள, அப்பாவிடமிருந்து அனுமதிக் கடிதம் வாங்கிக்கொண்டு ஜம்புநாதன் நேராக ரயிலடிக்கே சென்று, பார்ஸலைப் பெற்று, கிராமத்திற்குக் கொண்டு வருவதாகத் தியாகராஜையரிடம் சொல்லிவிட்டுச் சென்றான். தியாகராஜையரும் நடராஜன் சகிதம் கிராமத்திற்குச் சென்று ஜம்புநாதன் வருகைக்காகக் காத்திருப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

ஜம்புநாதன் பார்ஸலைப் பெற வேண்டி ரயிலடிக்குச் சென்றவன் நேராக ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று தந்தையின் கடிதத்தைக் காண்பித்தான். அவரும் அதைப் பார்த்து, பார்ஸல கிளார்க்கிடம் அவனை அனுப்பி, அந்தப் பார்ஸல் வந்து சேர்ந்துவிட்டதா என்பதைப் பார்த்து, அவனிடம் அதைத் தரும்படி உத்தரவு கொடுத்தார். பார்ஸலைக் கண்டுபிடித்து, அதற்கு வேண்டிய கையெழுத்து இடுவது முதலான சடங்குகளைப் பூர்த்தி செய்து அதைப் பெற்றுக்கொண்டு வெளிவரும் வரையில் அவனுக்கு வேறு எதிலும் கவனம் செல்லவில்லை. அவன் ஸ்டேஷனுக்குள் நுழைந்து அங்கும் இங்கும் ஒன்றையும் பாராமல் காரியத்திலேயே கண்ணாகத்தான் இருந்தான். இப்பொழுது—சாமானைப் பெற்றுக்கொண்ட பிறகு—அவனுக்கு அவ்வளவு வேகம் வேண்டியதில்லை யல்லவா? அதனால் அங்கே பிளாட்பாரத்தில் சென்னை செல்ல, காலை வண்டிக்காக வந்து கூடும் ஜனங்களைப் பராக்குப் பார்த்த வண்ணம் மெதுவாக நடைபோட்டு வந்துகொண் டிருந்தான். மூன்றாம் வகுப்பு டிக்கட்டுகளுக்காக டிக்கட் விற்கும் இடத்தில் ஜனங்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக்கொண் டிருந்தார்கள். சில இரண்டாம் வகுப்பு, முதல் வகுப்புப் பிரயாணிகள் பிளாட்பாரத்தில் நடை போட்டுக்கொண் டிருந்தார்கள். ரயில் புறப்பட அதிக நேரம் இல்லை யல்லவா?

ஜம்புநாதன் சற்றுத் தொலைவில் ஓர் ஆங்கிலோ இந்திய யுவனும் யுவதியும் செல்வதைக் கண்டான். அவன் பார்வை அந்த வாலிபன் மேல் விழுந்த மாத்திரத்திலேயே—அது அவனுடைய பின்புறந்தான் என்றாலும்—அது ஜான் என்பதைச் சந்தேகமறத் தெரிவித்துவிட்டது. ஜான் இங்கே எங்கு வந்தான்? என்கிற அதிசயம் நீங்கி அவனைப் பெயரைச் சொல்லி

அழைக்குமுன் ஜானுடைய ஒரு கை அந்த இள நங்கையின் இடையை முழுதும் சுற்றிச் சென்றிருப்பதும், அவனும் அவளும் வெகு நெருங்கி உடலோடு உடல் உராய நடந்து செல்வதும் தெரிந்து, வார்த்தைகள் வாய்க்குள்ளாகவே நின்றுவிட்டன. 'இங்கே யாருடன் இத்தனை உறவாக நெருங்கிக் காதலனைப் போல் நடை போடுகிறுன்? மேரியல்லவே இந்தப் பெண்!' என்று திகைத்துத்தான் அவனுக்கு அவ்விதம் பேச்சற்றுப் போயிற்று. அந்தச் சமயத்திற்குச் சரியாகப் பிளாட்பாரத்தின் கோடியை அடைந்த ஜான் தன்னுடைய நடையைத் திருப்பவும், ஜம்புநாதன் தன்னையே வெறித்துப் பார்ப்பதைக் கண்டான். 'அவன் ஏன் அவ்விதம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறுன்?' என்பது ஜானுக்குத் தெரியாதா? அவன் கை தானுகவே அந்தப் பெண்ணின் இடையிலிருந்தும் நழுவிப் பக்கத்தில் விழுந்தது. அவன் முகம் வெட்கிச் சிவப்பேறிப் போயிற்று. ஆனுல், ஒரு நிமிஷந்தான் ஜானுக்கு இந்தத் தலை இரக்கம். மறு விநாடியே அவன் சமாளித்துக்கொண்டு அந்தப் பெண்ணை அவ்விடத்திலே இருக்கவிட்டு ஜம்புநாதனை நோக்கி வந்தான். ஜம்புநாதனுடைய கையைப் பிடித்துக் குலுக்கவும் குலுக்கினுன். பிறகுதான், "நீ இங்கு எங்கே வந்தாய்?" என்று தன்னைச் சமாளித்துக்கொண்டு கேட்க முடிந்தது ஜம்புநாதனுல்.

"இந்த ஊரில் என் சித்தி வீடு இருக்கிறது. அங்கே இரண்டு நாள் தங்கிவிட்டுப் போக வந்தேன். இந்த ரயிலுக்குத் திரும்பச் சென்னை போகிறேன்" என்றுன் அவன்.

"நீ ஒரு தரமும் உன் பந்து இங்கே இருப்பதாகச் சொல்லவில்லையே!" என்று அதிசயித்துக் கேட்டான் ஜம்புநாதன். அவனுக்கு ஜானுடைய வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படவில்லைபோல் இருந்தது.

"அதுபற்றிப் பேச்சு வரவில்லை; அதனுல் நானும் கூறவில்லை" என்று காரணம் கூறினுன் ஜான்.

"நாங்கள் புறப்படும்பொழுதுகூட நீ இங்கே வரப்போவதாகச் சொல்லவில்லையே. தெரிந்திருந்தால் நான் உன்னை வந்து பார்த்து, என் வீட்டுக்கு அழைத்துப் போயிருப்பேனே; இப்பொழுது சென்னை புறப்பட்டுவிட்டதாகச் சொல்லுகிறுய்.

உன் பயணத்தைத் தள்ளிப்போடுவதற்கும் இல்லைபோல் இருக்கிறது'' என்று ஜம்புநாதன் ஒருவகை அங்கலாய்ப்புடன் சொன்னான்.

''ஆமாம்! என்ன செய்கிறது. நான் போகத்தான் வேண்டும். ஏதோ திடீரென்று நினைத்து வந்தேன். உன்னைத் தேடி வரவும் முடியாமல் போய்விட்டது'' என்று அரைகுறையாக ஜான் சால்ஜாப்புக் கூறினான்.

''உன்னோடு இருந்த அந்தப் பெண் யார்? அவள் ஏன் நாம் இருக்கும் இடத்துக்கு வராமல் திரும்பிப் போகிறாள்?'' என்று ஜம்புநாதன் கேட்டான். ஜான் அவ்வளவு ஸ்வாதீனமாக அணைத்திருந்தானே, அந்தச் சுந்தரி யார் என்று அறிய அவனுக்கு ஒரு துடிப்பு இருந்தது.

அந்தக் கேள்வி சரியாகக் காதில் விழாதவன்போல் ஜான், ரயில் புறப்பட நாழியாகிவிட்டதுபோல், தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ஒருவேளை அவள் அவன் சித்தியின் பெண்ணாக இருப்பாளோ? என்கிற எண்ணம் உதித்தது ஜம்புநாதனுக்கு. அவ்விதம் நினைக்கவும் அவன் மனம் சமாதானம் அடைகிற மாதிரி இருந்தது. ஜான் மேரியைத் தவிர வேறொரு பெண்ணிடத்திலும் இவ்விதம் அதிக உறவாக இருக்கிறான் என்பது இல்லாதிருக்க வேண்டும், என்பதை அல்லவா அவனையும் அறியாமல் அவன் மனம் விரும்புகிறது? அவன் ஸ்திரமற்றவன் ஆகிவிட்டால், அவனுடைய சொற்களுக்கு எந்த வித மதிப்பு இருக்கக் கூடும்? காதலுக்குப் பிரமாணமாக அவன் எவ்விதம் ஆவான்?

''உன் தங்கை, தமக்கை யாராவதா அவள்? அதாவது உன் சித்தியின் பெண்ணு?'' என்று தானே கேட்டு ஜானிடமிருந்து, 'ஆம்' என்கிற பதிலை எதிர்பார்த்து நின்றான் ஜம்புநாதன்.

ஜான் ஏதோ தலையைமட்டுந்தான் ஆட்டினான். அது ஆம் என்கிறதைக் குறிக்கிறதா? இல்லையென்றா? என்று ஜம்புநாதன் தெரிந்துகொள்ளுமுன், ''ரயில் புறப்படுகிற நேரம் ஆகிவிட்டது; நான் வருகிறேன்'' என்று கூறிக்கொண்டு ஒரு நொடியில் ஓட்டமாக ஓடிச் சென்றுவிட்டான் ஜான்.

ஜான் இவ்விதம் தன்னிடத்தில் நடந்துகொள்கிறான்! ஜம்புநாதனுக்கு நம்பிக்கை வரவில்லை. தன்னுடன் வார்த்தை யாடிக்கொண்டு நிற்கப் பிடிக்காமல்தான் அவன் அவ்விதம் சாக்குச் சொல்லிவிட்டு ஓடுகிறான் என்று ஜம்புநாதனுக்குத் தெரிந்தது. ஏனெனில், வண்டி புறப்பட இன்னும் சில நிமிஷங்கள் இருக்கத்தான் இருந்தன. ஒரு வேளை அவன் வண்டி புறப்படும் நேரத்தைத் தவறாக அறிந்துகொண் டிருப்பானோ? எதுவாக இருந்தாலும் தன்னை அகஸ்மாத்தாகப் பார்த்ததில் ஏற்பட வேண்டிய சந்தோஷம் அவனுக்கு ஏற்படவில்லை. மேலும் தன்னை விட்டுப் பிரிந்து போவதில் ஆவலுடன் வேறு இருந்தான் என்று பட்டதில் அவனுக்கு மிகுந்த ஏமாற் றம் உண்டாயிற்று. அந்த வியப்பில்தான் தன்னை விட்டுப் பிரிந்த ஜான் எந்த வண்டியில் ஏறிக்கொண்டான்; அவன் உடனிருந்த பெண் என்னவானாள்? அவளும் அவனோடு சென்னை செல்கிறாளா? இவைகள் ஒன்றையும் அவன் அங்கே நின்று பார்த்துக்கொண் டிருக்கவில்லை. முழுதும் தெளிந்து அறியவும் அவனையும் அறியாமல் அவன் மனம் கூசிற்று.

ஸ்டேஷனை விட்டு வெளி வந்தான். ட்ராக்டரின் சாமானைத் தியாகராஜையரிடம் சேர்த்துவிட்டு, சாப்பாட்டு நேரத்துக்குள் யாரும் சந்தேகிக்காவண்ணம் அவன் வீட்டுக்கு வந்துவிட வேண்டுமே; அதற்காகப் போக வர வாடகை வண்டி அமர்த் திக்கொண்டு அதில் கிராமத்துக்குச் செல்லத் துரிதப்பட்டான். திருச்சிக்குப் பத்து மைலிலிருந்த அந்தக் கிராமத்தை அடையும் வரையில் அவன் சிந்தனை ஜானைப்பற்றியேதான் இருந்தது. 'அவன் ஏன் என்னிடம் முகங்கொடுத்துப் பேசாமல் போக வேண்டும்? இவ்விடம் தான் வரப்போவதையோ, வந்திருப்ப தையோ ஒன்றையும் ஏன் தெரிவிக்கவில்லை? என்னிடத்தில் அவனுக்கு ஏதாவது மனஸ்தாபமா? அப்படி இருப்பதற்கு ஒரு காரணமும் இல்லையே. அவனுடன் இருந்த அந்த யுவதி யாராக இருக்கும்? அவன் சித்தி பெண்ணாகத்தான் இருப்பாள்! வேறு யாருடன் அவன் அவ்வளவு நெருங்கி உற வாடுவான்? தங்கை முறை என்றாலும் இப்படியா நெருக்கி அணைத்துக்கொள்வது! அவள் உடல் முழுதும் அவன் உட

லுடன் ஒன்றியிருந்ததே! கொஞ்சமும் நன்றாக இல்லை. இவர்களுக்கு இவைகளெல்லாம் தப்பல்ல. பசுபதி சொல்வது சரி. எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பழகி இருந்துவிட்டு, தப்பு ஒன்றும் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நமது சொந்தத் தங்கை, தமக்கை இவர்களுடன்கூடத்தான் நாம் இவ்விதம் ஏதாவது நடந்துகொள்வோமா? சீ, என்ன ஆபாசம்! மேரி இன்று பார்த்திருந்தால் அவளுக்கு ஜானிடத்தில் தவறு ஒன்றும் தோன்றியிராதா? அவளுக்கும் இவைகள் பழக்கந்தானே? அதனால் நாம் தவறாக நினைக்கும் விதம் மேரி நினைக்கமாட்டாள். இன்னொன்று எனக்குப் படுகிறது. மேரி இவனிடம் ஆசைதான் படுகிறாளா? அதுவே சந்தேகமாகத்தான் இருக்கிறது. அவளும், ஏதோ அவர்கள் வழக்கப்படி இவனிடம் தாராளமாகப் பழகியிருப்பாள். நிஜமாகவே அன்பு இருந்தால் இவ்விதம் இவன் பிரிவைக் கொஞ்சமும் பாராட்டாமல் அவள் பாட்டுக்கு இருக்கிறாளே! இவ்விதம் இருக்கத் தோன்றுமா? ஜான் என்னவோ மேரிதான் தன் உயிர் என்கிறான். அவளின்றித் தனக்கு இவ்வுலகம் இல்லை எனகிறான். அவனுக்கும் எல்லாம் யௌவனத்தின் கோளாறுதானோ என்னவோ? யார் கண்டது?'

இவ்விதம் என்ன என்னவோ நினைத்தான். ஜானை அன்று ரயிலடியில் அவ்விதம் பார்த்ததில் அவன் மனம் மருண்டு போயிற்று. ஜானைப்பற்றி எந்த விதம் எடுத்துக்கொள்வது, என்பது ஒன்றும் தெளிவு படவில்லை.

வழி நெடுகிலும், வயல் வேலைகள் தொடங்கியிருக்கவில்லை. குடியானவர்கள் வேலையற்றுச் சும்மா அங்குமிங்கும் காணப்பட்டார்கள். அவர்களிலும் யௌவனத்தின் மிடுக்குள்ள இளங் காளைகள் இளம் பெண்களுடன் கூச்சமின்றிக் கை வீசி நடந்து உல்லாசமாகத்தான் சென்றார்கள். 'இந்தப் பருவத்தின் உடல் கொழுப்புக்கும் உண்மைக் காதலுக்கும் வித்தியாசந் தான் என்ன? காதலின் கரையைக் கண்ட ஜானும், இவ்விதம் தான் காதலித்த நங்கையுடன் இருப்பதற்கு ஆசைப்படுகிறான். அவன் இல்லையென்று சொல்லிக்கொண்டாலும், அவன் வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் காமிகளின்

ஆசைச் சொற்களாகத்தான் இருக்கின்றன. வெளிப்படையான செய்கைகளிலும் ஓரளவு நினைப்பிலும் உண்மைக் காதலுக்கும், உடலளவோடு நிற்கும் காமத்திற்கும் வித்தியாசம் கிடையாது போலும்!' என்று எண்ணமிட்டவாறே ஜம்புநாதன் கிராமத்தைச் சென்று அடைந்தான்.

## 30

கிராமத்தில் தியாகராஜையர் ஜம்புநாதன் வருகைக்காகக் காத்துத் தவித்துக்கொண்டிருந்தார். அவன் ட்ராக்டரின் சரியான சாமானுடன் வந்து சேர வேண்டுமே. கம்பெனிக்காரர்கள் அதைத் தொலைத்திராமல் இருக்க வேண்டுமே என்றெல்லாம் அவருக்கு விசாரம். மெகானிக ஜம்புநாதனிடமிருந்து பார்ஸலை வாங்கிப் பிரித்துப் பார்த்து ஒத்துக்கொள்ளுகிற வரையிலும் அவருக்கு ஒன்றுமே ஓட வில்லை. ஒரு தவறு நேர்ந்துவிட்டதிலிருந்து மேலும் தவறுகள் நேரக் கூடுமோ என்கிற கவலை அவருக்கு.

சாமான் சரியானதாகத்தான் இருந்தது. அதைக் கொண்டு ட்ராக்டரைச் சரி செய்வதில் ஈடுபட்டான் அந்தக் கம்பெனி ஆசாமி. தியாகராஜையர், தாம் அங்கிருந்துகொண்டு அவன் செய்யும் வேலையைக் கிட்ட இருந்து பார்த்துவிட்டு வருகிறதாகச் சொல்லி, நடராஜனை ஜம்புநாதனோடு திருவானைக்கா போகும்படி அனுப்பிவிட்டுப் பின் தங்கினார்.

"வேலை முடிய இன்றெல்லாம் ஆகலாம். நீங்கள் மட்டும் சாப்பாட்டுக்குச் சிரமப்பட்டுக்கொண்டு இங்கிருப்பானேன். மெக்கானிக் செய்யும் வேலையில் உங்களுக்கு என்ன தெரியப் போகிறது. சாப்பிட்ட பிறகு திரும்ப வரலாம்; வாருங்களேன்" என்று ஜம்புநாதன் அழைத்ததை அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவருக்கு இருந்த ஆவலில் ட்ராக்டரைப் பார்த்துக்கொண்டிருந்தாலே போதும்; சாப்பாடுகூட வேண்டாம் என்றுதான் இருந்தது. அவருக்கிருந்த ஒருவகைப் பரபரப்பில், வீட்டில் சம்பிரமமாக இலையில் உட்கார்ந்து உணவு

அருந்திலுல்தான் என்ன, உணவு செல்லப்போகிறதா? சந்தேகந்தான். கடைசியில அவர் முயற்சி கைகூடுகிறது என்றதில் அவரையும் மீறின சந்தோஷம் அவருக்கு. புதிதாகக் கிடைத்த விளையாட்டுச் சாமானை விட்டுப் பிரிய மனமில்லாத சிறு பையனைப்போல், அதை ஓட்டிப் பார்க்கும் வரையில் ட்ராக்டர் இருக்கும் இடத்தைவிட்டு, வேறு இடத்தில் அவருக்கு இருப்புக்கொள்ளுமென்று தோன்றவில்லை.

ஜம்புநாதன்தான், வீட்டவர்கள் சந்தேகிக்காமல் இருக்க வேண்டி உடனேயே திரும்பவேண்டி இருந்ததென்றால் நடராஜனுக்கோ வீடு செல்வதிலேயே மனம் இருந்தது. தந்தை சொல்லவும் அவன் உத்ஸாகத்துடன் கிளம்பிவிட்டான். ஜம்புநாதனுக்குத்தான் நடராஜன் இருந்து வரக்கூடாதா என்று இருந்தது. அவர்கள் இருவருமாக வண்டியில் செல்லும் பொழுது, "ஏண்டா, நீ இருந்திருக்கலாமே! ட்ராக்டர் முடுக்கி வேலை செய்வதைக் கிட்ட இருந்து பார்த்திருக்கலாமே; எனக்குத்தான் வீட்டிற்குப் போயாக வேண்டும்; தேடுவார்கள்; உனக்கென்ன?" என்றான்.

"எனக்குந்தான் போக வேண்டும். அதுதான் கிளம்பினேன். ட்ராக்டர் இனி நம்மிடந்தானே இருக்கப்போகிறது; பார்த்துக்கொண்டே இருக்க வேண்டியதுதானே" என்று அசட்டையாகக் கூறினான் நடராஜன்.

என்னடா இப்படி அடித்துவிடுகிறாய்? அவன் வேலை செய்வதைக் கிட்ட இருந்து பார்த்துக்கொண்டோமானால், நமக்கு அதில் சில விஷயங்கள் புரியக்கூடும். ஏதாவது சில்லறைக் கோளாறு நேர்ந்தால் மெக்கானிக் இல்லாமல் நாமேகூடப் பழுது பார்த்துக்கொண்டுவிடலாம்; அது சௌகரியம் அல்லவா?" என்றான் ஜம்புநாதன் விடாமல். அவன் இருந்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமாகப் பட்டது ஜம்புநாதனுக்கு. தான இருக்க முடியாமல் திரும்ப வேண்டி இருக்கிறதே என்று அவன் கஷ்டப்பட்டான்.

"நீ ஸயன்ஸ் படிக்கிறாய்; உனக்கு இவைகளில் புத்தி செல்லக்கூடும்; பார்த்தாலும் ஏதாவது தெரிந்துகொள்வாய். எனக்கு எல்லாம் கிரீக்கும் லாட்டினுந்தான். ஒன்றும் புரியப்

போகிறதில்லை. அப்பா ஒருவர் நகராமல் உட்கார்ந்திருக்கிருரே; இன்னும் எத்தனை பேர் வேண்டும்? என் அளவு அவரும் தெரிந்துகொள்வார். போதாதா? மேலும் உள்ளதை உன்னிடம் சொல்கிறேனே; ஆத்தில் கௌரி அதாவது என் மனைவி எனக்காகக் காத்திருப்பாள். நான் சாப்பாட்டுக்கு வருவதும் வராததும் சொல்லாமல் வந்துவிட்டேன். அவள் எனக்காகத் தானும் சாப்பிடாமல் பட்டினி கிடப்பாள்'' என்ருன் நடராஜன். அப்படிச் சொல்லும்பொழுதே மனைவியின் ஞாபகத்தில், ஒருவகைச் சந்தோஷ ஒளி அவன் முகத்தில் படர்ந்தது. ஐம்புநாதனும் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

''அதற்காக நீ வர வேண்டுமா? நான் போனதும் உன் வீட்டில் சொல்லிவிடமாட்டேனு?'' என்ருன் ஐம்புநாதன்.

''சொல்லுவாய்; இருந்தாலும் நான் வராதது குறித்துக் கௌரி ஏமாறிப்போவாள். அது எனக்கு இஷ்டமில்லை. நான் இல்லாமல் அவளால் சிறிது நேரங்கூட இருக்க முடிவதில்லை. அதை நன்ருகக் கவனித்துவிட்டேன். நான் அங்கே இங்கே காரியமாகச் சற்றுப் போனலுல்கூட, 'நீங்கள் இல்லை, எனக்கு இங்கே இருப்பாகவே இல்லை' என்கிருள். என்னிடத்தில் அவளுக்கு எதனுல்தான் அவ்வளவு பிரியம் ஏற்பட்டதோ எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. உன்னிடம் சொல்லாமல் நான் யாரிடம் சொல்லிக்கொள்ளப் போகிறேன். என்னிடத்தில் என்னடா இருக்கு, தனியாக! ரூபமா, பணமா, படிப்பா! என்ன உசத்தி எனக்கு விசேஷமாக இருக்கிறது? அப்படியிருக்க அவள் என்னிடம் உயிரையே அல்லவா வைத்திருக்கிருள். வந்து சில மாதங்கள்தான் ஆகிறது; அதற்குள் என்னுடைய விருப்பு வெறுப்புகளையெல்லாம் என்ன நன்ருகத் தெரிந்துகொண் டிருக்கிருள் தெரியுமா? வர வர அம்மாவுக்குக்கூட எனக்குச் சரியானபடி செய்யத் தெரியவில்லை. இவள் தெரிந்துகொண்டுவிட்டாள். எனக்குப் பிடித்த சமையல், எனக்கு வேண்டுமென்கிற அளவு சூடு வெந்நீர், எல்லாம் அவளுக்குத் தெரிந்திருக்கிறது. நான் சொல்லாமலே அவளாகவே பார்த்து எனக்கு வேண்டும் என்கிறபடி செய்துவிடுகிருள். அதிகம் சொல்லுவானேன். எள் என்கிறதற்குள் எண்ணெ

யாக இருக்கிறதாகச் சொல்லுவார்களே, அப்படித்தானடா கௌரி இருக்கிருள்!'' என்று மனம் விட்டு ஜம்புநாதனிடம் மனைவியின் அன்பைக் குறித்துப் பெருமை பாராட்டிக்கொண் டான். அவன் உள்ளம் முழுதும் அந்தப் பெருமை நிரம்பி வழிந்துகொண் டிருந்தபோது அது எந்த விதத்திலாவது சிறிது வெளிப்படா திருக்குமா! ஜம்புநாதன் தன் சிநேகிதன் எனவே அவனிடம் தாராளமாகச் சொல்லிக்கொண்டான்.

'மாட்டுக்காக ஊற வைத்திருந்த பருத்திக்கொட்டையை, கணவனுக்குத் தன் கையால் உணவு செய்விக்கிரும் என் கிற உத்ஸாகத்தில் மனைவி தவறிப்போய் பழையது என்ற நினைப்பில் பிடிப் பிடியாக எடுத்துக் கணவன் கையில் போடு கிருள். அந்தக் கணவனும் மனைவியின் கைப் பிரசாதம் என் கிற மதி மயக்கத்தில் பருத்திக்கொட்டை என்பதைத் தெரிந்து கொள்ளாமல் அவ்வளவையும் உண்டுவிட்டு அவதிப்பட்டான்' என்று ஒரு விகடப் பத்திரிகையில் படித்திருந்தது ஜம்புநாதனின் நினைவுக்கு வந்தது. இது காதல் இல்லாமல் வேறு என்ன என்றுதான் ஹாஸ்யமாக எடுத்துக் காட்டியிருந்தார் அந்த ஆசிரியர்.

இப்பொழுது நடராஜனுடைய போக்கு அதைத்தான் அவ னுக்கு நினைப்பூட்டிற்று. மனைவி போடுகிருள் என்கிற ஆனந் தத்தில் பருத்திக்கொட்டையையும் நிஜமாகவே அவன் வாரி வாரி உண்ணத் தயங்கமாட்டான் என்று தோன்றிற்று. அவ் வளவு ஆசை அவனுக்கு மனைவியிடம் பொங்குகிறமாதிரி இருந்தது.

அவன் உத்ஸாகத்தைக் குறைக்காமல் இருக்க எண்ணி, "அவ்வளவுக்குத் தெரிகிறதா உன் மனைவிக்கு. சிறு பெண் தானே அவள். அதற்குள் உன் மனதறிந்து நடக்கத் தெரிந்து கொண்டுவிட்டாளா?'' என்ருன்; கணவன் மனமறிந்து நடக்க வயதும் அநுபவமும் போதுமா அந்தச் சிறு பெண் ணுக்கு என்கிற பாவனையில்.

"அதுதானே எனக்கும் ஆச்சரியம், கல்யாணத்தின்போது, 'என்ன இருந்தாலும் பணக்கார வீட்டுப் பெண், ராங்கியாக இருப்பாள்; நம்மிடம் அலக்ஷ்யமாக இருக்கலாம்' என்றெல்லாம்

நான் நினைத்தது உண்டு. இப்பொழுது பார்த்தாலல்லவா தெரிகிறது; என்னுேடு குடிசையிலும் அவள் சந்தோஷமாக வசிப்பாள்போல் இருக்கிறது. அவ்வளவுக்கு அவள் பதவி சாக நடந்துகொள்கிருள். அம்மாவுக்குச் சரியாக, 'நான், நான்' என்று எந்த வீட்டுக் காரியத்திற்கும் முன் வந்து நிற்கிருள். அம்மாவுக்குப் பரம சந்தோஷம். படிப்புக் குறைவென்று நினைத்தோமே! இல்லவே இல்லையடா. நிமிஷமாகத் தமிழ்ப் புத்தகங்கள், பத்திரிகைகள் எல்லாம் படித்துத் தெரிந்து கொண்டுவிடுகிருள். இங்கிலீஷ்கூடத்தான் நான் கொஞ்சம் சொல்லித்தரலாம் என்று இருக்கிறேன். நொடியில் கிரகித் துக்கொண்டு விடுவாள்; சந்தேகம் இல்லை. நான்தான் அவ ளுடன் தனித்திருக்கும்பொழுது ஏதேதோ பேசிப் பொழுதைக் கழித்துவிடுகிறேன். காரியமாகச் சொல்லிக் கொடுக்க முடி யாமல் இருக்கிறேன். என்னவோடா, நான் அதிருஷ்டசாலி தான்! எல்லாவிதத்திலும் உசத்தியாக மனைவி கிடைத்து விட்டாள் எனக்கு. கல்யாணத்தின்பொழுது அவள் பாடின தைத்தான் கேட்டாயே. ரொம்ப நன்ருக இருக்கவில்லையா?'' என்று மேலும் விடாமல் பெருமை பேசினுன் நடராஜன். 'ஏதோ சுமாராக இருந்ததே பாட்டு! அதையா இவன் இப் படிப் புகழ்ந்துகொள்கிருன்! கமலினியின் பாட்டைக் கேட் டால் என்ன சொல்லுவானே?' என்று தானே நினைத்துக் கொண்டான் ஜம்புநாதன். 'இதுபோலத்தான் அவனது மற் றப் புகழ்ச்சிகளும் இருக்கக் கூடும்' என்று நினைத்தபொழுது, 'காதலுக்குக் கண்ணில்லை என்கிறதுபோல், இவனுடைய மனைவி ஆசைக்கும், கண், காது ஒன்றுந்தான் இராதுபோலும்!' என்று எண்ணிக்கொண்டான்.

''எனக்குக் கிடைத்திருக்கும் மாதிரி உனக்கும் பெண்டாட்டி கிடைக்கட்டுமடா. போதும்!'' என்று ஜம்புநாதனுக்கு ஆசீர் வதிக்கும் அளவுக்குச் சென்றது நடராஜனுடைய மனத் திருபதி.

'நடராஜனுடைய உணர்ச்சிக்கு என்ன பெயரிடுகிறது? காதல் என்ரு காமம் என்ரு? என்ன சொல்லுகிறது?' என்று தான் ஜம்புநாதன் எண்ணமிட்டான். 'மனைவியை ஆதரிசப் பெண்ணுகவே அவன் பாவித்துப் பேசுகிருன். அவள் குணங்

கள் தன்னை மயக்கி அடிமை கொண்டுவிட்டதாகப் பாரட்டிக் கொள்ளுகிறான். கேவலம் உடல் சம்பந்தத்திலிருந்து உண்டாகி யிருக்கிற ஆசையாக அவன் காண்பித்துக்கொள்ளவில்லை. காதலித்த நங்கையிடத்தில் காண்பதுபோல் குற்றம் குறைகளை யும் அவன் மனைவியிடம் காணவில்லை. இவனுடையதை உண் மைக் காதல் இல்லையென்றால், காதல் என்பது வேறென்ன? காதலியை விட்டுப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் ஒவ் வொரு யுகமாகக் காதலனுக்குத் தென்படும் என்று ஜான் என்ன, புஸ்தகங்களுந்தான் சொல்லுகின்றன. இவனுக்கு அதுபோலத்தான் பெண்டாட்டியை விட்டுச் சற்றுப் பிரிந்திருக் கக்கூட முடியாமல் இருக்கிறது. ட்ராக்டரைப் பார்த்துக் கொண்டு அவன் தங்காததே அதற்குச் சாட்சியாக இருக் கிறது.'

'கிடைத்ததைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டுவிடுவதே என் வாழ்க்கை லக்ஷயமாக வைத்துக்கொண் டிருக்கிறேன்' என்று நடராஜன் சொல்லிக்கொண்டானே; அப்படி அவன் செய்வதிலிருந்து, தேடி அடைய ஆசைப்படுபவைகளும் தாமா கவே அவனுக்குக் கிட்டி விடுகின்றனவா என்ன? அவன் காதல் மயமான இன்ப உணர்ச்சியில் அல்லவா மூழ்கிக் கிடக் கிறான்! நான் கூடாத இடத்தில் காதலை அடைந்து கஷ்டப் படுகிறேனே. இவன் சௌகரியமாக மனைவியினிடத்திலேயே அது ஏற்பட்டு இன்புறுகிறானே?' இவ்விதம் நடராஜனுடைய உணர்ச்சிகளுக்குக் காதல் என்று பெயர் கொடுத்தவுடன், அவன், 'நம்மில் யாருக்கும் உண்டாகாத தூய காதல் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அது சரியான முறையில் இல்லையென்றாலும் பரவாயில்லை. நாம் உண்மைக் காதலை இன்னதென்று அறிந்துவிட்டோமல்லவா?' என்று தனக்குத் தானே கொண்டிருந்த சிறு திருப்தியும் மறைந்து போகிற மாதிரி இருந்தது அவனுக்கு.

"அதோ பாருடா! நான் என்ன சொன்னேன்! கௌரி என்னை வழி பார்த்துக்கொண்டு வாசலில் நிற்கிறாள் பார்!" என்று நடராஜன் பெருமையுடன் சொன்ன பிறகுதான் தன்னு டைய எண்ணங்களிலிருந்து விடுபட்டவனாக, 'வண்டி வீட்டைச்

சமீபித்துக்கொண் டிருக்கிறது. நடராஜன் மனைவி அவன் வீட்டு வாசலில் அவனுக்காக வழி பார்த்து நிற்கிருள்' என்ற இரண்டையும் அறிந்தான் ஜம்புநாதன். வண்டியிலிருந்து இறங்கும் நடராஜனைக் காணவும், முகத்தில் லேசாகப் புன்முறுவல் தோன்ற உள்ளே சென்றுவிட்டாள் அவள். புது நாகரிகப் பெண்ணைப்போல் அவள் அவ்விடமே நின்று அன்பை வெளிக் காண்பித்து வரவேற்காவிடினும், அந்தப் புன்முறுவல் அவனை ஆசையுடன் அவள் வரவேற்கிருள் என்பதை வெளிக்காட்டிற்று. நடராஜனுக்கு அவள் தனக்காக அவ்விதம் வழி பார்த்து இருக்கிருள் என்பது தனக்கு மட்டும் அல்ல, ஜம்புநாதனுக்கும் தெரிந்தது பரம சந்தோஷம் என்ருலும், அவள் அத்தனை நேரம் தனக்காகக் காத்திருந்து பட்டினி கிடந்திருக்கிருளே, என்கிற தவிப்பிலும், பரபரப்பிலும் ஜம்புநாதனிடம் அதிகம் ஒன்றும் சொல்லிக்கொண்டு நிற்காமல், "வருகிறேனடா" என்று அவசரத்தில் கூறிவிட்டு மனைவியைத் தொடர்ந்து வீட்டுக்குள் சென்றுவிட்டான்.

நடராஜன் மகிழ்ந்து போகும் விதத்தால், அந்தப் பெண்ணுக்கு அவனிடம் மிகுந்த அன்பு உண்டாகியிருக்கத்தான் வேண்டும் என்பது தெரிந்தது. அந்த இளம் பெண்ணினுடைய பரிசுத்தமான ஹிருதயத்திலிருந்து உண்டான அந்தப் பிரேமை அவனையும் அவள்பால் பதிலுக்கு அபாரப் பிரேமை கொள்ளச் செய்திருக்கிறது. இருவரும் இளம் பருவத்தினர்; இருவருக்கும் கணவன், மனைவி என்கிற திடமான பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மாற்றமுடியாத இந்தப் பிணைப்பால், உண்மைக் காதலே பரிணமித்திருக்கிறது என்று ஏன் சொல்லக்கூடாது? ஆண் பெண் என்கிற பரஸ்பர ஆசையும் அன்பும் உண்டாகக் காரணமாகத் தானே அது கூறப்படுகிறது. காதலர்கள் உடல் சம்பந்தத்தையும் விரும்பத்தானே விரும்புகிருர்கள். அவ்வாறு ஒன்றும் இல்லாமல் அத்தங்காளிடமிருக்கும் தன் அன்பிற்கு என்ன சொல்கிறது? சரீர சம்பந்தத்தை இச்சிக்காத அந்த அன்பு மற்ற அன்புகளுக் கெல்லாம் மேற்போனதல்லவா? இவ்விதம் ஏதோ எண்ணியவாறே வீடு போய்ச் சேர்ந்தான். தந்தையிடம் தனிமையில், பார்ஸலைப் பெற்றுக் கிராமத்திற்குச் சென்று

கொடுத்துவிட்டு வந்த விவரம் முழுவதையும் சொன்னான்.

## 31

ஜானுடைய சிநேகந்தான் ஜம்புநாதனுடைய இத்தகைய போக்கிற்குக் காரணம் என்று பசுபதி நினைத்தான். 'அவன் தான் ஏதோ காதல், கத்திரிக்காய் என்று சதா பேசி, ஜம்புநாதன் உள்ளத்தில் என்ன என்னவோ விபரீத எண்ணங்களைப் புகுத்தியிருக்கிறான். இதனால்தான் இவர்களின் நட்புக் கூடாது என்கிறது! அவர்களுக்கு ஆடவர் பெண்டிரைச் சார்ந்த நெருங்கின உறவுபற்றி விவஸ்தையே இல்லை. தவறான நடத்தைக்கு உயர்ந்த பெயர்களைக் கொடுத்து, நியாயங்கூடப் பேசி, பிறர் கண்ணில் மண்ணைத் தூவுகிற சங்கதிதான் அவர்களுடையது. அப்படிப்பட்ட ஒருவனுடைய நட்பை ஜம்புநாதன் சம்பாதித்துக்கொள்ளும்படி நாம் சும்மா பார்த்துக்கொண்டு இருந்துவிட்டோமே. ஜம்புநாதன் உலகம் அறியாதவன். வீட்டவர்களின் ஒரே அன்புப் பராமரிப்பில் கவலையற்று வளர்ந்தவன். சுற்றிலும் பரிசுத்தமான நேர்மை உணர்ச்சிகளின் மத்தியில் உருவாக்கப்பட்டவன். அவன் வீட்டில் சிறுவர்கள் உட்பட அவ்வளவு பேர்களிடத்திலும் ஓர் இழி குணத்தைக்கூடக் காண முடியாது. புத்த பகவானைப்போல் உலகத்தின் தன்மையையே அறியாது, அதிலுள்ள பொய், பித்தலாட்டங்கள், காமக் குரோதங்கள் ஒன்றும் தெரியாத வகையில் வளர்ந்திருக்கிறான். புஸ்தகங்கள்தான் அவன் வெளி உலகமாக இருந்திருக்கின்றன. அதன் பயனாகக் கற்பனைகளுக்கு மூளையில் நிறைய இடம் வைத்திருக்கிறான். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதற்கு இணங்க அவனைத் திடீரென்று தனித்து விட்டிருப்பது, திக்குத் திசை தெரியாமல் அவனை விழிக்கச் செய்கிறது. யாருடன் சிநேகம் கொள்கிறது, கூடாது, என்பது ஒன்றையும் அறியச சக்தியற்று இருக்கிறான். அப்படி இவன் இருப்பதாலேயே ஜானுக்குச் சௌகரியமாகப் போயிற்று. தான் இழுத்தபடியெல்லாம் இழுபடக்கூடிய பத்தரை மாற்றுத் தங்கம் எனத் தெரிந்துகொண்டு ஜம்புநாதனைத் தன் போக்கில் இழுத்துச் செல்லத் துணிந்து

விட்டான். எப்பொழுதும் சுத்தமான வெள்ளை ஹிருதயத்தைக் கெடுக்கக் கெடுமதிகளுக்குப் பிரியம் அதிகமல்லவா? இதைத் தெரிந்திருந்தும், ஜம்புநாதன் தகப்பனுர்வேறு அவனுடைய நன்னடத்தைக்கு நம்மை நம்பியிருக்கிருர் என்பதை அறிந்திருந்தும், அசட்டையாக இருந்துவிட்டோமே! நம்மை விட்டுவிட்டு வேறு எவனுடனே அதிக உறவாடுகிருன் என்ற கோபத்தில் கவனியாமல் இருந்தோமே! இந்தச் சிநேகத்தைத் தடுக்க உடனேயே தீவிர முயற்சி செய்திருக்க வேண்டாமா?'—இவ்விதம் பசுபதிக்கு ஜம்புநாதனின் மாருன போக்கிற்குக் காரணங்கள் தோன்றி அதை முன்னமே தடுத்துச் செய்யாதது, தான் செய்த பெரிய தவறு என்று பட்டிருந்தது.

இனியும் சும்மா இருக்கக் கூடாது. காரியம் மிஞ்சிப் போகாமல் தடுப்பது தன் கடமை என்று நிச்சயித்துக்கொண்டான். அவர்கள் ட்ராக்டர் விஷயமாகக் கிராமத்திற்கும் வீட்டுக்குமாக ரகசியத்தில் அலைந்துகொண் டிருந்தார்களாதலின் அவனுடன் அதுபற்றிப் பேசிச் செய்யச் சென்னையிலிருந்து வந்த இந்த ஒரு வாரமாக அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காமலேயே போயிற்று. அவன் அவ்விதம் எதிர்பார்த்துக் காத்திருந்த அவகாசம் இன்று அவர்கள் காற்ருடக் காவேரிக் கரையில் உலாவச் சென்றபொழுது கிடைத்தது. உடனே பசுபதி லேசாகப் பேச்சைத் துவக்கினுன்.

"பகலெல்லாம் என்ன கடும் வெயில் கொளுத்தினுலும், சாயங்காலத்தில் இந்தக் காவேரிக் கரையில் தனியாகத்தான் சுகமாகக் குளிர்ந்த காற்று வீசுகிறது. இதுவரையில் பட்ட சிரமத்தை யெல்லாம் நொடியில் மறக்க வைக்கிறது" என்ருன்.

"இந்த வருஷம் கோடையின் வெப்பம் அதிகந்தான். பகலில் காய்ந்த வெயிலில் சூடேறின மணல் இன்னமும் சூடு தணிந்தபாடில்லை, பார். காவேரிகூட மெலிந்து, அடக்க ஒடுக்கமாகப் புக்ககத்து நாட்டுப்பெண்போல் செல்கிருள்" என்ருன் ஜம்புநாதன்.

"வைகாசி பிறக்கும் வரையில்தான் இந்த அடக்கம். பிறகு அணைக்கட்டுத் திறந்து பூரணப் பிரவாகத்துடன் செல்லும்பொழுது பார்க்க வேண்டுமே! அப்பொழுது கட்டுப்படுத்த

முடியுமா!'' என்றான் பசுபதி.

''அடே அப்பா! அப்பொழுது காளி ஸ்வரூபமல்லவா எடுத்துவிடுவாள்! பிரவாகத்தைக் கண்ணால் பார்க்கும் பொழுதே நம்மை இழுத்துக்கொண்டு போகிறதுபோல் அல்லவா இருக்கும். இப்பொழுது தாயின் மடியில் துள்ளி விளையாடும் இளம் குழந்தையைப்போல், நீர்ப் பரப்பின்மேல் வந்து துள்ளி விளையாடுகின்றனவே இந்த மீன்கள்! இவைகளை அப்புறம் கண்ணால் பார்க்கத்தான் முடியுமா? எங்கோ அடியில் ஓடி ஒளிந்துகொண்டு விடாவா? சந்திரன் ஆகாயத்தின் பல வர்ண ஜாலங்களைக் கண்ணாடிபோல் பிரதிபலித்து, பூமியிலும் பரவச் செய்துகொண்டு சாந்தமாகச் செல்கிற மாதிரி தெரிகிறதே, இந்த நீரோட்டம். அப்பொழுதானால் இவ்விதம் இருக்குமா? வானத்தை ஒரு சுழற்றுச் சுழற்றித் தன்னுடன் இழுத்துச் செல்கிறதுபோல் அல்லவா ஓடும். இப்பொழுதிருக்கும் ரம்மியமான சாந்தத்திற்கும் அந்தப் பயங்கரத்திற்கும் எவ்வளவோ மாறுதலல்லவா காணும்!'' என்றான் ஜம்புநாதன்; காவேரியின் முற்றும் மாறான இரு தன்மைகளையும் நினைத்துப் பார்த்தவனாக.

''காதலன் தனித்து நிம்மதியாகத் தனது காதலியைச் சிந்தித்திருக்கத் தகுந்த காலமாக இது இருக்கிறது. ஜான் இவ்விடம் இருந்தால் மேக தூதத்தின் யட்சனைப்போல் காதலியைப் பிரிந்த விரக தாபத்தில் நன்றாகப் புலம்பிவிடுவான்'' என்றான் பசுபதி; ஜானுடைய பேச்சை எவ்விதமாவது கிளப்ப வேண்டும் என்கிறதல்லவா அவன் நோக்கம்.

'ஜான் இவ்விடம் வந்துதான் இருந்தான். ஆனால், அவன் தனித்து விரகத்தை அநுபவிப்பவனாகத் தோன்றவில்லை. அவனுடன் வேறொரு பெண்தான் இருந்தாளே!' என்கிற நினைப்பு வந்தது ஜம்புநாதனுக்கு. ஆனால் அதைப் பசுபதியிடம் சொல்ல அவனுக்கு மனமில்லை. 'பசுபதி ஜானை முதலிலேயே இகழ்கிறவன். இதையும் கேட்டால் பின்னும் நிச்சயமாகப் பழிக்கத் தொடங்கிவிடுவான்' என்று கருதியவனாக, ''ஜான் இங்கே வந்திருந்தான். இரண்டு நாளைக்கு அவன் உறவினர் வீட்டுக்கு வந்து போகிறானாம்; நான் நேற்று ரயிலடியில் அவனைச் சந்தித்

தேன்'' என்று மட்டுஞ் சொல்லி, ''ஜானுடைய காதல் உனக்கு அவ்வளவு பரிகாசமாக இருக்கிறது அல்லவா? யட்சனுடையது உயர்வு; இவனுடையது மட்டம். அப்படித்தானே?'' என்றான்.

''யட்சன், மனைவியின் பிரிவாற்றாமையால் கஷ்டப் பட்டான். ஜான் அப்படி இல்லையே! தன்னைவிட வயதில் பெரிய ஓர் அந்நியப் பெண்ணையல்லவா நினைத்துஉருகுகிறான்!'' என்றான் பசுபதி. இப்படி இரண்டிற்கும் இருக்கும் வித்தியா சத்தை எடுத்துச் சொன்னான்.

''காதல் ஏற்படும்பொழுது இடம், பொருள், ஏவல் என் கிறதை எதிர்பார்த்து வராது, தெரியுமா? அவ்விதம் பார்த்துக் கொண்டு வரும் காதல் அந்தப் பேருக்கு ஏற்றதும் அல்ல. காதலுக்கு ஜாதி மதம் அந்தஸ்து ஒன்றும் இல்லை. யாரை வேண்டுமானாலும் யாரும் காதலிக்கலாம். ஈசுவரனைப் பக்தி பண்ண இன்னார்தான் என்று உண்டா? ஆனால், சிலருக்குத் தான் பக்தி உண்டாகிறது. அப்படியே அதிருஷ்டவசமாகச் சிலருக்குத்தான் காதல் உணர்ச்சியும் உண்டாகும். அதிருஷ்டம் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். ஏனெனில் காதல் ஒருவனை அவ்வளவுக்குப் பரிசுத்தம் ஆக்கிவிடுகிறது!'' என்று ஜானுக்குச் சரியான சிஷ்யனாகக் காதலைப்பற்றி நன்கு தெரிந்த வனாகப் பேசினான் ஜம்புநாதன்.

''நீ சொல்வது புது விஷயமாக இருக்கிறதே! காதல் மனிதனைப் பரிசுத்தம் ஆக்குகிறதா! நான் கேட்டதே இல்லை. 'காதல் பித்துக் கொண்டவர்கள் தாறுமாறாக நடந்துகொள்வார் கள்!' என்றல்லவா சொல்லுகிற வழக்கம்'' என்றான் பசுபதி.

''பரிசுத்த ஹிருதயத்திலிருந்து எழும் தூய்மையான காதல் அப்படி இல்லை. அது புனிதமான தெய்வாம்சம் பொருந்தியது. தெய்வத்தை எப்படிப் பக்தியுடன் வழிபடுகிறோமோ அப்படித் தான் காதலியிடத்திலும் இருக்கத் தோன்றும். ஈசுவரியைத் தியானிப்பதுபோல் அவளைத் தியானிப்பதில் மனம் திருப்தி கொள்ளும். அதற்கு மேற்பட்ட உறவுகொள்ள ஆசைப் படாது'' என்றான் ஜம்புநாதன். இப்படிப் பசுபதியிடம் கூறி வரும்பொழுதே தன் காதலும் அப்படித்தானா என்றுதான் பார்த்துக்கொண்டான் அவன். அவனுக்கே அதில் ஒரு வகைச்

சந்தேகம் தோன்றுகிற மாதிரி இருந்தது.

'இவனுக்கு எந்த நங்கையிடத்திலாவது காதல் ஏற்பட்டிருக்கிறதா என்ன? சொந்தத்தில் அநுபவிப்பவன்போல் பேசுகிறனே!' என்று சந்தேகித்தான் பசுபதி. 'ஒரு வேளை கமலினியிடந்தான் ஆசை உண்டாகி இருக்கிறதோ? அப்படியானல் பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரிதான்' ஆனல் அப்படி நினைக்க முடியாமல் இவனது நடத்தை வித்தியாசமாக இருக்கிறதே! கமலினியை மணக்க ஆசையோடு இருப்பதற்குப் பதில் விவாகமே வேண்டாம் என்று வேதாந்தம் பேசுகிறனே!' பசுபதி விஷயத்தை முழுதும் கிரகிக்க எண்ணிப் பேச்சைத் தொடர்ந்தான்.

"தனக்கு, தமக்கை ஸ்தானத்தில் இருக்கக் கூடியவளிடம் ஜானுக்கு உண்டாகியிருக்கிறதே ஏதோ ஒன்று; அதுவும் தூய்மையான காதல்தான் ஆக்கும்!" என்று சந்தேகம் தெளியக் கேட்பதுபோல் கிண்டலாகக் கேட்டான் பசுபதி.

"மேரி வயதில் சில வருஷம் பெரியவள் என்பதற்காக அவனுடையது காதல் இல்லை என்று ஆகிவிடுமா? ரோமியோவும் ஜூலியட்டும் விரோதிக் குடும்பத்தவர்கள் என்பதனல் அவர்களுக்குக் காதல் ஏற்படவில்லையா? அதைவிடப் பரிசுத்தமான உயர்ந்த காதல்வேறு இருக்க முடியுமா? அவர்கள் அதனல் சுகப்படாமல் மாண்டு போனலும் அந்தக் காதல் உலகுள்ள அளவும் சிரஞ்சீவி ஆகிவிட வில்லையா?" என்றன் ஜம்புநாதன். ஜானுக்காக இல்லாவிட்டாலும் காதலுக்காகக் கட்சியாடினன் அவன்.

"அந்த இடத்தில் அந்தப் பிரபுக்களுடைய விரோத பாவந்தான் தவருனது; மற்றப்படி ரோமியோவும் ஜூலியட்டும் நியாயமாகத்தான் அன்பு கொண்டார்கள். அவர்களுக்கிடையே வயது, குலம், அந்தஸ்து இப்படி ஒன்றும் குறுக்கே நிற்கவில்லை. மாசற்ற ஹிருதயங்கள் அப்படித்தான் காதல் கொள்ளுமென்று நாமும் ஒப்புக்கொள்கிறேம். நேர்மை மாருத அரசன் துஷ்யந்தன், சகுந்தலையிடம் தனக்குண்டான காதலுக்கு அவ்விதமல்லவா காரணம் தேடி, அவள் ரிஷி கன்னிகை அல்ல, என்று தெறிந்து சந்தோஷிக்கிறன். சீல

வான்கள் தங்கள் அன்பைத் தகாத இடத்தில் செலுத்தமாட்டார்கள். அவர்கள் கட்டுப்படுத்தியிருக்கும் மாதிரியில், மனமே கண்ட இடத்தில் அவர்களை மீறிப் பிரவேசித்துவிடாது. ஆனால், ஜானுக்கு என்ன, அவன் என்ன சீலத்தைக் கண்டான்! அவனுக்கு எந்தப் பெண்ணிடத்திலும் காதல் ஏற்படுவதற்கு ஒரு தடையும் இராது. இளம் நங்கையாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான்!'' என்று பழித்துக் கூறினான் பசுபதி.

பசுபதி இப்படிச் சொல்லி வரும்பொழுதே ஜம்புநாதனுடைய மனத்தில், ரயிலடியில் மேரியல்லாத வேறொரு பெண்ணுடன் வெகு உறவாக ஜான் இருந்ததைப் பார்த்த காட்சி, தன்னிடத்திலேயே அவன் முகம் கொடுத்துப் பேசாமல் சென்றது, இவைகள் எழுந்து வேதனையைக் கொடுத்தன. அதைக் தள்ளிக்கொண்டுதான் ஜானுக்காகப் பரிந்து பேசப் பார்த்தான் அவன். நம்பி ஏற்றிருந்த நண்பனை விட்டுக்கொடுத்துவிட மனம் வரவில்லை அவனுக்கு.

''ஜான், வேறு மதஸ்தன் என்பதற்காக அவனை இகழ்ந்து, அவன் காதலையும் இகழ்கிறதா? நமது இலக்கியங்களில் தன்னை விட வயதில் பெரியவளான ஸ்திரீயினிடம் ஆசை ஏற்பட்டதாக இல்லை என்பதற்காக அவ்விதம் இருக்கவே முடியாது என்று முடிவு கட்டிவிடுகிறதா? சில பெண்கள், ஆண்களைவிடப் பெரியவர்கள் என்கிறதற்காகக் காதல் கொள்ளும் விஷயத்தில் ஒரு வித்தியாசமும் உண்டாகிவிடாது. எனக்குத் தெரியும். காதல் அநுபவம் கொஞ்சமும் இல்லாத நம்மவர்கள் பேசுகிற பேச்சு இது. மனைவி என்று ஏற்பட்டு, குடும்பம் என்று உண்டாகிற பாசத்தைத் தவிரக் காதலைப்பற்றி நமக்கு என்ன தெரியும்?'' என்றான் ஜம்புநாதன்.

'இவனுக்கே இவனைவிடப் பெரியவள் யாரிடமாவது அன்பு ஏற்பட்டிருக்கிறதா என்ன!' என்று பரிகாசமாக நினைத்தான் பசுபதி. ''ஏதப்பா உனக்கு அவ்வளவும் அநுபவத்தில் தெரிந்த மாதிரி பேசுகிறாயே!'' என்றான் கிண்டலாக.

''எனக்குத் தெரியக் கூடாதா? நமக்கு நமது உணர்ச்சிகளைப் பிரித்து அறியத் தெரியாமல் இருப்பதாலேயே காதலையும்

தெரிந்துகொள்ளாமல் இருக்கிறோம். ஒருவரிடம் தனியாக விசேஷ அன்பு உண்டாகி, அவர்களுக்காக எந்தத் தியாகத்தையும் செய்ய மனம் சித்தமாக இருந்தால் அப்பொழுது அவ்விடத்தில் காதல் என்று கொள்வதைவிட்டு வேறு என்ன சொல்லக் கிடக்கிறது? 'இது மாதிரி ஓர் உணர்ச்சி உண்டு; அதுதான் காதல்' என்று அறியாமல் இருப்பதாலேயே நமக்குக் காதல் ஏற்பட்ட பிறகும் நாம் அதைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறோம்; அவ்வளவுதான்!'' என்றான் ஜம்புநாதன். அவன் சந்தேகமற வார்த்தைகளை வீசினான்.

'ஒரு வேளை சாவித்திரியிடம் இவனுக்கு இருக்கும் அன்பிற்குக் காதல் என்று பெயர் வைத்துக்கொண்டுதான் புது விதமாக நடந்துகொள்கிறானோ!' பசுபதிக்குச் சந்தேகம் பலத்தது. அவன் விவாகம் வேண்டாம் என்கிறதற்கும் காரணம் ஏதோ மின்னல் மின்னினதுபோல் தெரிகிற மாதிரி தோன்றிற்று.

''நமக்கு எவ்வளவோதான் நமது தாயாரிடத்தில், சகோதரியினிடத்தில், நீ சொல்லும் விதம் அன்பு பொங்கித் ததும்புகிறது. அவர்களுக்காக எது செய்யவும் தயாராக இருக்கிறோம். அதற்குக் காதல் என்று பெயர் சூட்டிவிடுகிறதா?'' என்றான் பசுபதி சிறிது பரிகாசமும் சந்தேகமும் கலந்த குரலில்.

''அப்படி அல்ல; இவர்களுக்காகவெல்லாம் நாம் அநுபவிக்கும் இன்ப துன்பத்தைவிடப் பன்மடங்கு அதிகமாகவே, நம் காதலுக்குப் பாத்திரமானவர்களுக்காக நாம் அநுபவிக்கிறோம். அவர்களுடைய சின்ன மன வருத்தமும் நமக்கு மலையத்தனை பெரிதாகத் தோன்றி நம்மை வருத்துகிறது. அவர்களுக்குக் கெடுதல் நினைப்பவர்களை அப்படியே நாசம் செய்துவிடும் அளவிற்கு ஆத்திரம் மூண்டு எழுகிறது'' என்றான் ஜம்புநாதன் ஆவேசத்துடன்.

'சரி சரி, நாம் சந்தேகப்பட்ட படிதான் போலும்! அத்தங்காளிடம் தனக்கு இருக்கும் அதிகப் பிரியத்தைத்தான் இவ்விதம் ஏதோ திரித்துக்கொண்டு கஷ்டப்படுகிறான். சந்தேகம் இல்லை' என்று பசுபதிக்குத் தோன்றியவுடன் அதிலுள்ள ஹாஸ்யமும் விநோதமும் அவனுக்குப் புலப்படாமல் போகவில்லை. சிரிப்பேகூட வரும்போல் இருந்தது. சிரிப்பதற்கு

அது சமயம் அல்ல என்றுதான் அடக்கிக்கொண்டான். "நீ சொல்வதைக் கேட்டால் உன் அத்தங்காளிடம் உனக்கு இருக்கும் பிரியத்தைக்கூடக் காதல் என்று கூறுவாய்போல் இருக்கிறதே!" என்று மனத்தில் உள்ள சந்தேகத்தை வெளியிட்டுக் கேட்டான். அவன் அசட்டுத்தனமாக அவ்விதம் நினைத்திருந்தாலும் அதை எப்படியாவது மாற்ற வேண்டும் என்கிறது அவனுக்கு.

ஜம்புநாதன் உடனே பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தது, 'ஆம்' என்று அதை அவன் ஒப்புக்கொள்வது போல் இருந்தது. இப்பொழுது, பசுபதிக்குத் தன் மனம் முழுதும் தெரியக்கூடாது என்கிற எண்ணம் ஜம்புநாதனுக்கு இல்லை. தான் விவாகம் வேண்டாம என்று கூறி எல்லாரையும், முக்கியமாக, அவன் தந்தை, அத்தங்காள் இவர்களை வெறுப்பும கோபமும் அடையச் செய்ததற்குத் தகுந்த காரணத்தை ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் இருப்பது சாத்தியமா? நம்மைச் சேர்ந்தவர்கள் நம்மை முற்றும் தவருக நினைத்துக்கொள்ள விட்டுவிட்டுச் சும்மா இருப்பது என்பது எளிதா? நண்பனுன பசுபதியிடமாவது அந்தரங்கத்தை வெளியிட்டு, அவனுவது அதை நியாயமானதாக ஏற்பதில் சிறிது சமாதானம் அடைய மனம் ஆசைப்படாதா? அதனுல் பசுபதி அவ்விதம் கேட்ட பொழுது இவ்வளவு நாளும்போல் அவனுக்குத் தெரியக்கூடாது என்பதாக அவன் அதை மறுத்துக் கூறி விடவில்லை.

"உன் அத்தங்காளிடம் உனக்கு இருக்கும் அதிக கௌரவத்திற்கும் உறவினள் என்கிற அபிமானத்திற்கும் இந்தப் பெயரைச் சூட்டிக்கொண்டு கஷ்டப்படுகிருயாடா! இவை காதல் உணர்சசிகள் என்று உனககு யார் சொன்னுர்கள்? அவள உன்னைத் தம்பியாக நினைககிருள்; நீயும் அவளைத் தமககை ஸ்தானத்தில் வைத்திருக்கிருய். அதற்குமேல் ஒனறும் இதில் கிடையாது; தெரியுமா? மதிப்பும் அன்பும எவ்வளவு அதிகம் இருந்தாலும் காதலாக ஆகாது. மனைவியாகச் செய்துகொள்ள விரும்பினுல் அன்றி—ஒரு பெண்ணிடத்தில் அவ்வளவு பாத்தியதையை எதிர்பார்த்தாலன்றி—அதைக் காதலாக ஒருபொழு

தும் சொல்ல முடியாது. உடலைச் சொந்தமாக அடைய இச்சிக்காத காதலே இல்லை'' என்றான் பசுபதி, சந்தேகம் இல்லாமல். இப்படியும் ஒரு பித்துக்குள்ளி இருப்பாளா என் கிறது அவனுக்கு.

''என்னுடைய அன்பு இவைகளுக்கெல்லாம் மேலே போனது! சொந்தமாக அடைய விரும்பாத சுயநலமற்ற அன்பு அது. அப்படியும் ஒரு வகை உயர்ந்த காதல் உண்டு; தெரி யுமா? அம்மா எவ்வளவோ சமயங்களில் என்னிடம் வருத்தப் பட்டிருக்கிறாள். நான் அவைகளைப் பொருட்படுத்தினதே கிடையாது. ஆனால், அத்தங்காளுடைய சின்ன வருத்தமும் என்னால் சகிக்க முடியவில்லை. அவளுக்கு வருத்தத்தைக் கொடுத்தவர்களை நாசஞ் செய்ய விருப்பம் கொள்ளும் அள விற்கு அசாத்தியக் கோபம் பொங்கி எழுகிறது'' என்றான் ஜம்புநாதன். எப்படித் தான் தன் அம்மாவுக்கும் மேலாக அவளை நேசிக்கிறான் என்பதை அப்படி விளக்கிக் கூறினான். அது காதல் உணர்ச்சியின் முக்கிய அம்சம் என்பதாகவும் எடுத்துச் சொன்னான்.

''அதற்கென்ன; உன் அம்மா, அப்பாவின்பேரில் குற்றம் கூறுகிறாள். உனக்கு உன் தாய் தந்தை இருவர்களிடத்திலும் சமமான அன்பு இருக்கிறது. அதனால் இருவரையும் ஒரே மனோபாவத்தோடு வித்தியாசமின்றிப் பார்க்கிறாய். அப் பொழுது தந்தையுடைய தப்பொன்றும் அதிகம் இல்லைபோல் தோன்றுகிறது. தாயும் பெண்களுக்குள்ள சுபாவப்படி கொஞ்சம் அதிகப்படுத்தித்தான் வருந்துகிறாள் என்று படுகிறது. நியாயமாக, தவறு செய்திருப்பவளாகக் குற்றஞ் சாட்டப் படுகிறவரிடம் கோபம் வர மறுக்கிறது. இங்கே அப்படியா? உன் அத்தங்காள் புருஷனும் அவள் மனிதர்களும் உனக்கு என்ன இருந்தாலும் அயலார்கள்தாமே. அவர்களுடைய குற் றம் பெரிதாகத் தோற்றம் அளிக்கிறது. அதனால் சாவித்திரிக் கும் மேலாகவே வருந்திப் பரிந்துகொண்டு மனது கஷ்டப் படுகிறது. எப்பொழுதும் நமக்கு வேண்டும் என்கிறவர்களின் துன்பம், அவர்களுக்கே இருப்பதைவிட நமக்குத்தான் பூதக் கண்ணாடியில் பார்ப்பதுபோல் பெரிதாகத் தோன்றும்'' என்று

பிரசங்கித்தான் பசுபதி.

"ஜான் காதலைப்பற்றித் தெரிந்தவனுயிற்றே; அவன் என் உணர்ச்சிகளைக் காதல் என்றுதானே சொல்லுகிருன்" என்ருன் ஜம்புநாதன் தயக்கத்துடன்.

"ஜானுடைய வார்த்தைகளைப் பிரமாணிக்கமாக எடுத்துக் கொள்கிருயா? அவனுக்குத் தன்னைப்பற்றியே நிச்சயம் இல்லாதிருக்கிறதே! தனக்கு மேரியிடம் உயிரைக் கொடுக்கும் காதல் என்ருனே; இப்பொழுது வேருெரு பெண்ணுடன் கை கோத்துக்கொண்டு போகிருன் தெரியுமா? அன்ருெரு நாள் நான் பார்த்தேன். உனனிடம் சொல்ல மறந்து போனேன். நாம் திரும்பக் கலாசாலை போன பிறகு நீயே பார்ப்பாய்" என்ருன் பசுபதி. தொடர்ந்து, "காதல் உணர்ச்சிகளை அலசி ஆராய்ந்து பார்த்திருக்கும் ஆங்கில ஆசிரியர்களே, ஒருவன் தானுக ஏற்றுக்கொள்ளும மனப் பிரமம் என்றுதான் அதைச் சொல்லுகிருர்கள். ஆஸ்கார் வில்டு என்னும் பேராசிரியர் ஓரிடத்தில் அவ்விதமே கூறியிருக்கிருர். அவர்களில் இன்னும் எவ்வளவோ பெரியவர்கள் அதுமாதிரிதான் சொல்லியிருக் கிருர்கள்" என்று காதலைக் குறித்து, அது தனியாக ஒன்று மில்லை, என்பதாகப் பசுபதி பேசினுன்.

பசுபதி காதலைப்பற்றிச் சொன்னவைகள் ஜம்புநாதன் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருந்தனவோ இல்லையோ? ஆனல் ஜான்-மேரியிடம் தனது ஆழ்ந்த காதலைப்பற்றி அவ்வளவெல்லாம் பேசினவன்-அதற்குள் மாறிவிட்டானு என்கிற ஏமாற்றம் மட்டும் பெரிதாக ஏற்பட்டது. "ஜானையா! வேருெரு பெண்ணுடனு! எப்பொழுது பார்த்தாய்? எங்கே பார்த்தாய்?" என்று பதற்றத்துடன் கேட்டான் ஜம்புநாதன். அன்று ரயிலடியில் ஜானை அவன் பார்த்ததற்கு இணங்க, பசுபதியும் ஏதோ அவ்விதம் சொல்லுகிருனே என்கிறது அவனுக்கு.

"எங்கே பார்த்தேனு? எல்லாம் நமது கலாசாலைக்கு அருகில்தான். காலேஜ் நேரம் முடிந்து அவர்கள் உலாவச் சென்ருர்களோ அல்லது ரயிலுக்குச் செல்லும் அவளை அது

வரைக்கும் உடன் சென்று விட்டுவரத்தான் அவன் சென்ருனே எனக்குத் தெரியாது. ஆனால், நான் அவர்களைப் பார்த்தேன்'' என்ருன் பசுபதி.

''ஒருவேளை அவள் மேரியாகவே இருந்தால்? நீ அவர்களை நேருக்கு நேராகவே சந்தித்தாயா? அல்லது தொலைவில் இருந்துதான் பார்த்தாயா?'' என்று சந்தேகத்தோடு கேட்டான் ஜம்புநாதன். 'கலாசாலைக்கு அருகே என்கிருனே; மேரியா கவே ஏன் இருக்கக் கூடாது' என்கிற நம்பிக்கை அவனுக்கு உண்டாயிற்று.

''நான் அவர்களைத் தூரத்தில்தான் பார்த்தேன் என்ருலும் அவள் மேரி அல்ல என்கிற வரையிலும் எனக்கு நிச்சயந்தான். மேரி, ஜானுக்குச் சரியாக நல்ல உயரமும் ஒற்றை நாடிச் சரீர மும் உள்ளவள் ஆயிற்றே. இந்தப் பெண் ஜானுடைய தோளுக் குத்தான் வந்தாள். இருவரும் அவ்வளவு நெருங்கிச் சென்ற தால் நான் அதை நன்ருகத் தெரிந்துகொள்ள முடிந்தது. மேலும் அவள் பருமனுகவும் இருந்தாள். அவள் தலைமயிரும் மேரியுடையதுபோல் கறுப்பல்ல; சற்றுச் சிவந்த செம்பட்டை. சென்னையில் வசித்துக்கொண்டு கல்லூரிக்கு வந்து படித் துச் செல்லும் மாணவிகளுள் அவளும் ஒருத்தி என்று நினைக்கிறேன். வேறு வகுப்பில் படிப்பவளாக இருக்கலாம்'' என்ருன் பசுபதி சந்தேகம் இல்லாமல். தான் அந்தப் பெண்ணை இன்னுர் என்று நிச்சயமாக அடையாளம் கண்டு கொள்ளாததற்கு, அந்த வகுப்பு வித்தியாசத்தைக் காரண மாகச் சொன்னுன் அவன்.

பசுபதி இவ்விதம் சொல்லி வரும்பொழுதே ஜம்புநாத னுக்கு, திருச்சி ஜங்ஷனில் ஜானுடன் தான் பார்த்த பெண் ணும் அதிக உயரமின்றிப் பருமனுகக் காணப்பட்டதும், அவள் தலைமயிரும் செம்பட்டையாக இருந்ததும் நினைப்பு வந்தது. பசுபதி சொல்லும் அடையாளங்களிலிருந்து, தான் பார்த்த பெண்ணும் அவன் சொல்பவளும் ஒருத்திதான் என்று நிச் சயப்பட்டது. அப்படியானுல் ஜான் மேரியைவிட்டு வேருெரு பெண்ணை நேசிக்கத் தொடங்கிவிட்டானு! அவனுக்கு உண் டான ஏமாற்றத்திற்கு அளவே இல்லை.

பசுபதியிடம் ஜானை ரயிலடியில் ஏதோ ஒரு பெண்ணுடன் தான் பார்த்த காட்சியை அப்படியே சொல்லி, "ஜான் இவ்வளவு கேவலம் என்று நான் நினைக்கவில்லையடா; உண்மைக் காதலை, தான் ஒருவனே கண்டறிந்தவனுகப் பேசியல்லவா என்னை ஏமாற்றிவிட்டான்!" என்று வருந்தினுன்.

"போடா போ, ஜான் என்ன உன்னை ஏமாற்றுகிறது; நீயும் எதற்காக அது குறித்து வருந்துகிறது? எனக்கு அது சரியாகத் தோன்றவில்லை; காதல் என்று நீ நினைக்கிறபடி தனியே ஒன்றுஇருக்கிறதா என்ன? அதுவே எனக்குச் சந்தேகந் தான். எல்லாம் யௌவனத்தின் மதத்திஞல் எழும் மனப் பிராந்தி தவிர வேறில்லை" என்ருன் பசுபதி.

ஜானைத் தானே நேரில் பார்த்ததிலிருந்தும், பசுபதி சொன்னவைகளிலிருந்தும் ஜான் மேரியை விட்டுவிட்டு வேருெரு பெண்ணுடன் உறவு கொண்டாடத் தொடங்கிவிட்டான் என்கிற வரையில் ஜம்புநாதனுக்கு நிச்சயமாகிவிட்டது. தன்னை அவன் உத்ஸாகத்துடன் ஏற்காத காரணமும் இப்பொழுது நன்கு விளங்கிற்று. ஆனுல், 'ஜான், காதலில் ஸ்திரமற்றவனுக இருக்கிருன் என்பதனுல் நாமும் அதுபோல் இருக்க வேண்டும் என்பது இல்லையே! பிராயச்சித்தமாக நாம் செய்ய நினைத்ததைச் செய்யத்தான் வேண்டும்' என்று தன்னைப்பற்றி உறுதிகொண்டான்.

"நீ இந்த விவாகத்திற்கு ஒப்புக்கொள்ளாவிடில், உன் அத்தங்காளுக்குச் சம்மதமாக இருக்குமென்று தோன்றவில்லை. எல்லாரையும்விட அவள்தான் இதில் மிகுந்த ஆசையோடு இருக்கிருள்" என்ருன் பசுபதி தொடர்ந்து, ஜம்புநாதனுடைய எண்ணங்கள் ஒன்றும் தெரியாதவனுக.

"நான் எதற்காக விவாகத்தை வேண்டாம் என்கிறேன் என்பது தெரிந்தால் அவளும் சமாதானம் ஆகிவிடுவாள். அவளிடத்திலுள்ள அன்பிஞலேயே நான் இந்தத் தியாகம் செய்கிறேன் என்பதை அறிந்தால், அவளுக்குத் திருப்திதான் உண்டாகும்" என்ருன் ஜம்புநாதன் நிச்சயத்துடன். ஏதோ நாடகத்தில் நடிப்பவன்போல் பேசினுன் அவன்.

"அவளுக்கு உன் காரணம் தெரிகிறதா? யோசித்துச்

செய் அப்பா. ஜானுடைய மேரியையும் இன்னொருத்தரையும் போலவா நம் தேசப் பெண்கள். கொண்ட கணவனைத் தவிர, வேறொருவன் அவன் யாராக இருந்தாலும், தன்னிடத்தில் அவன் காதல் கொள்கிறான் என்று அறிய அவர்கள் மனம் பொறுக்குமா? நம் தேசப் பதிவிரதைகள் சரித்திரங்கள் நீ படிக்காததல்லவே. தாங்கள் மனத்தாலும் பர புருஷனை நினையாததுடன், அந்தப் பரபுருஷன் மனத்தில் தாங்கள் இடம் பெறுவதையும் அவர்கள் தங்கள் பாதிவிருத்தியத்திற்குப் பங்கமாக வல்லவா கருதுவார்கள். அவைகள் புஸ்தக உணர்ச்சிகள் என்று தள்ளினாலும், ஓரளவுக்கு அவ்விதம் நினைக்கத் தான் பழக்கப்பட்டுப் போயிருக்கிறார்கள் நமது ஸ்திரீகள். உன் அத்தங்காளும் அந்த விதிக்கு விலக்கானவள் என்று நான் நினைக்கவில்லை. அதனால்தான் நீ உனது காதலைப்பற்றி நினைப்பதுபோல்—நீ காதல் என்று நினைத்திருப்பதால் சொல்லுகிறேன்—சரீர சம்பந்தத்தை விரும்பாத ஒரு காதல் உணர்ச்சி உண்டு என்றாவது, அது தன்னைவிட வயதில் பெரியவளிடம் ஏற்படும் என்கிறதையாவது நான் ஏற்கத் தயாராக இல்லை! அவள் அறிந்துகொள்ளும்படி விடாதே. அந்தச் சம்சயம் சிறிது ஏற்பட்டாலும் அவள் உன்னை மிகவும் வெறுக்கத் தொடங்கி விடுவாள். தன்னையும் வெறுத்துக்கொண்டு உன்னையும் வெறுப்பாள்! நிச்சயம்! ஜான் புகுத்தியிருக்கும் இந்த எண்ணம் உனக்குள்ளேயே இருக்கட்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் உன் அத்தங்காள் அதை அறியும்படி விட்டுவிடாதே. இது விஷயத்தில் நான் சொல்வதைக் கேள். உன்னைக் காட்டிலும் எனக்கு உலக அநுபவம் நிறைய உண்டு'' என்றான் பசுபதி திடமாக.

நிஜமாகவே ஜம்புநாதன் ஏதாவது அசட்டுத்தனமாக நடந்து, சாவித்திரியின் மதிப்பை இழந்துவிடப் போகிறானே என்கிறது அவனுக்கு. இந்தப் பைத்தியக்கார எண்ணத்திலிருந்து எவ்விதமாகவாவது அவனை மீட்க வேண்டும் என்றும் நினைத்தான். ''நாம் காதலிப்பது பெரிதல்ல, அதை ஏற்றுக் கொள்ளுகிறவர்களின் மனத்தையும் நாம் நிதானித்து அறிந்து கொள்ள வேண்டும். நாம் நம்முடைய அன்பினால் அவர்களைக்

கௌரவித்து மகிழ்விப்பதாக நினைத்திருக்க, அவர்கள் அதையே தங்களை அவமதித்துச் செய்ததாக நினைத்துவிடக் கூடாதல்லவா?'' என்று விளக்கிவேறு சொன்னான்.

ஜம்புநாதன் பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாகப் பசுபதியின் சொற்களைக் கேட்டு வந்தான். அவன் சொல்லும் விதந்தானா தனது நிலைமை இருக்கிறது? என்கிற கவலை அவனுக்கு. இருவரும் அவரவர் வீடு செல்ல வேண்டிப் பிரிந்தபொழுதுகூட, பசுபதி, ''நான் சொல்பவைகளுக்காக நீ என்னிடம் மனஸ்தாபப்படாதே. நீயே தவறாக, மனப் பிரமமாகக் காதல் என்று ஒன்றை நினைத்திருக்கிறாய். சாவித்திரியிடம் அத்தங்காளென்ற அன்பும், அவள் உயர் குணமும் சிறந்த அழகும் காரணமாக விசேஷ மதிப்பும் உனக்கு இருக்கிறது. அதைத்தான் நீ காதல் என்று எடுத்துக்கொண்டிருக்கிறாய். அது எனக்கு நன்றாகத் தெரிகிறது. உன்னிடம் மறைவின்றிக் கூறுகிறேன். இந்த ஜட்ஜ் சம்பந்தத்தை உன் அத்தங்காள் மட்டும் அல்ல; உன் தந்தையும் சிலாக்கியமாகக் கருதுகிறார். உனக்கேகூடக் கமலினியைப் பிடித்திருக்கிறது. நீ அவளை மணக்க மறுப்பதை தியாகமாகக் கருதுவதில் இருந்தே அது நன்கு வெளியாகிறது. சங்கரையர் பெண்ணை வேண்டாமென்று சொன்னபொழுது இவ்விதம் ஏதாவது தோன்றிற்றா? இப்பொழுது மறுபடியும் அது மாதிரி ஒன்று நேருவதாக இருந்தால் நீ அதைத் தியாகமாக நினைப்பாயா? மாட்டாய் என்பது உனக்கே நன்கு விளங்கும். நீ கமலினியை விவாகம் செய்துகொள்வதில் புத்தகங்களில் வருணிக்கப்படும் காதல் மணந்தான் உனக்கு நடக்கப்போகிறது. தவறான பாவனையினால் இந்த நன்மைகளை எல்லாம் வீணுக்குக் கெடுத்துக்கொண்டுவிடப் போகிறாயே என்கிற கவலைதான் எனக்கு. எதையும் சிந்தித்துப் பார்க்க உனக்குத் தெளிந்த புத்தி இருக்கிறது. அவசரப்பட்டு ஒன்றும் தாறுமாறாகச் செய்துவிடாதே'' என்று வற்புறுத்திக் கூறி விடை பெற்றுக்கொண்டான் பசுபதி.

அவனைப் பிரிந்து வீடு செல்லும் வழியில் பிரமை பிடித்தவன்போல் நடந்து சென்றான் ஜம்புநாதன். பசுபதி சொன்னவைகள் ஒவ்வொன்றும் மனத்தில் எழுந்து வேதனையைச்

கொடுத்தது. ‘உடல் சம்பந்தத்தை இச்சிக்காத காதல் கிடையாது; நல்ல சீலவானுடைய உள்ளம் தவருன இடத்தில் பிரவேசிக்காது; அத்தங்காளுக்கு உன்னுடைய காதல் வெறுப்பைத்தான் கொடுக்கும்’ இப்படி அவன் ஒரு சிறிதும் சிந்தித்துப் பார்க்கவே இல்லை. பசுபதி சொன்ன பிறகுதான் அவனுக்கு அவைகள் புதிதாகப் புலப்படுகின்றன. தட்டுக்கெட்ட பாதையில் செல்ல அவன் விரும்புவாஞே? ராவணனைப்போல் கெட்ட மனத்தினஞக நடந்துகொள்ள அவனுக்குப் பிடிக்குமா? அத்தங்காளின் மதிப்பையும் பிரியத்தையும் இழக்க அவனுல் முடியுமா? அவன் யாருக்காகத் தியாகஞ் செய்ய நினைக்கிருஞே அவளே அதை அப்படி ஏற்கமாட்டாள் என்ருல் அப்புறம் அதில் என்ன இருக்கிறது? அவன் காதலையும், அதற்காக அவன் செய்யும் பிராயச்சித்தத்தையும், அவள் அறிந்து பாராட்டவில்லை யென்ருல், அவனுடைய அந்தச் செய்கைகளால் பிரயோஜனந்தான் என்ன?

அவன் தலை குனிந்து ஓடும்படி அவளால் அவமதிக்கப்படுவான் என்ருல், அதை அவன ஏற்பது எவ்விதம்? ஹிருதயத்தினுள் காதல் முளை தோன்ற, உடல் சம்பந்தமான ஆசை அவசியம் வேண்டும் என்ருல், அவனுக்கு எப்பொழுதாவது அத்தங்காளிடம் அவ்விதம் ஆசை தோன்றின துண்டா? ‘ஒரு பொழுதும் இல்லை’ என்று நினைத்தபொழுது அவனையும் அறியாமல் ஆசுவாசத்தோடு ஒரு பெருமூச்சு எழுந்தது அவனுக்கு. ஜான் அதைக் கிளப்பாவிட்டால் தன்னுடைய அன்பு, காதல் என்றுதான் அவன் தனித்து எண்ணியிருக்கப்போகிருஞ? மாட்டான். இந்த உறுதி அவனுக்குத் தோன்றிற்று. காதலில் ஸ்திரமில்லாத ஜானுடைய சொல்லை, காதலுக்குப் பிரமாணமாக எடுத்துக்கொள்ளுகிறதாவது! அவன் உண்மைக் காதலில் முழுகிக் கிடப்பதாகப் பேசுகிருன்; அவ்வளவுதான். ஆஞல் அவனுடையது முற்றும் காமத்தைச் சேர்ந்ததுதான். வெவ்வேறு பெண்ணிடம் மாறிக்கொண்டே போகும் அன்பு, உண்மை அன்பாக ஆகாது; நிச்சயம். மனைவியிடம் நடராஜனுக்கு ஏற்பட்டிருக்கும் பாசத்தை வேண்டுமாஞல் காதல் என்று சொல்லலாம். அவ்வளவுக்கு அவனுக்குத் தன் மனைவி

யிடம் மாருத அன்பு பொங்கித் ததும்புகிறது. நடராஜன் மட்டுந்தாஞ அப்படி இருக்கிருன்? சரோஜா முதல் அவன் பார்த்த எத்தனையோ தம்பதிகளும் அந்த அன்பைத்தான் நிரூபித்துக்கொண் டிருக்கிருர்கள். உலகத்திலுள்ள இலக்கியங்களெல்லாம் காதலைப்பற்றித்தான் கூறுகின்றன. ஓர் அழகிய வாலிபனும் ஓர் அழகிய நங்கையும் ஒருவரை ஒருவர் கண்டு காமுற்றதாகத்தான் அவைகள் வருணிக்கின்றன. ஆகையால் காதலுக்கு அடிப்படையாக ஸ்திரீ புருஷருடைய பரஸ்பர ஆகர்ஷண சக்தி உதவத்தான் உதவுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் ஒருவரை ஒருவர் காமுற்றுத்தான் நல்ல முறையில் இன்ப வாழ்க்கை நடத்தி வருகிருர்கள்.

இவ்விதம் ஏதோ மனம் குழம்பி யோசித்துக்கொண்டே சென்றதில், வீட்டைச் சமீபித்து, எதிர்ச் சாரியில் தியாகராஜையர் வீட்டை அவன் தாண்டுகிற சமயத்தில், அவரும், அவர் மகன் நடராஜனும் தன்னைப் பெயர் சொல்லி அழைப்பது கூட அவன் காதுகளில் விழவில்லை. அவர்கள் இரண்டு மூன்று முறை பலக்கக் கூப்பிட்ட பிறகே அவன் அதைத் தெரிந்துகொண்டு அவர்கள் இடத்திற்குச சென்ருன்.

"என்ன அப்பா! எந்தக் கோட்டையைப் பிடிப்பதில் இருக்கிருய்? நாங்கள் கத்திக் கூப்பிடுவதுகூடக் காதில் விழக் காணுமே!" என்ருன் நடராஜன்.

"ஒன்றும் இல்லையடா; நான் கவனிக்கவில்லை" என்று அவன் சமாதானமாக ஆரம்பிக்குமுன், "அது கிடக்கட்டும்; இதோ பார் ஆள் வந்திருக்கிருன்; ட்ராக்டர் தயாராக இருக்கிறதாம்; நாளைக்கு வயலில் ஓட்டிக் காண்பிப்பதாகச் சொல்லுகிருன். காலையில் காபி சாப்பிட்டவுடன் கிராமத்துக்குப் போகலாம் என்று இருக்கிறேன். அப்பாவிடம் சொல்லு; நீயும் அவரும் வாருங்கள்; ட்ராக்டர் செய்யப்போகிற வேலையைக் கிட்ட இருந்து பார்ப்போம். உங்கள் வீட்டுக்கு வந்து உங்கள் அப்பாவிடம் சொல்லத்தான் இருந்தேன். அதற்குள் நீயே தென்பட்டுவிட்டாய்; சொல்லிவிட்டேன். காலையில் வந்து சேருங்கள்" என்ருர் தியாகராஜையர். அவருக்கு ட்ராக்டர் சங்கதி அவ்வளவுக்கு முன்னேறிவிட்டதில் பரம திருப்தி.

ஐம்புநாதன், ஆகட்டும் என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்றான். முதல் முதலாக முன் அறையில் தந்தை எதிர்ப்படவே, தியாகராஜையர் சொன்னவைகளை அவரிடம் சொல்லி, "நீங்கள் போங்கள், நாங்களும் வீட்டில் யாருக்கும் தெரியாமல் வந்து சேருகிறோம்; என்று சொல்லி விட்டேன் அப்பா! முக்கியமாக அத்திம்பேருக்குத் தெரியக் கூடாதே!" என்றான்.

"என்னடா, சுற்றிப் பார்த்துக்கொள்ளாமல் பேசுகிறாய்!" என்று அவன் தந்தை எச்சரித்த பிறகுதான் சுந்தரி அவ்விடத்தில் இருந்ததை அவன் கவனித்தான். நல்ல காலம், அவள் மறு நாள் தன் பரீக்ஷைக்கான பாடத்தில் கவனமாக இருந்தாள் என்று தெரிந்தது. இல்லாவிட்டால் அவள் அவ்விதம் சும்மா இருந்திருப்பாளா? ஆயிரம் கேள்விகளை விடாது கேட்டிருக்க மாட்டாளா? பிழைத்தோம் என்கிற ஆசுவாசத்துடன், வீட்டினுள் தனிமையைத் தேடி, மாடி அறையை நோக்கிச் சென்றான். ஏற்கனவே குட்டையாகக் குழம்பிக் கிடக்கும் மூளையைப் பின்னும் குழப்பிக்கொண்டு சிந்தனை செய்ய விஷயந்தான் அவனுக்கு இருக்கிறதே!

## 32

சுந்தரி விஷயத்தைக் கிரகிக்கவில்லை என்று ஐம்புநாதன் நம்பியது தவறு, என்பது பிறகு நடந்தவைகளிலிருந்து வெளியாயிற்று. அதாவது ஐம்புநாதனும் ராமசாமி ஐயரும் காபி அருந்தினவுடன், தாங்கள் ஏதோ காரியமாகக் கிட்டத்து ஊருக்குப் போய் வருவதாகவும் மத்தியான்னச் சாப்பாட்டுக்குக் கூட வர முடியாதென்றும், சாயங்காலந்தான் அவர்களை எதிர் பார்க்க முடியுமென்றும் வீட்டில் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் அகிலாண்டத்தின் கல்யாண விஷயமாகத்தான் போகிறார்கள் என்று விசாலத்திற்கு உள்ளூற ஏதோ தோன்றிற்று. ஏனெனில் கிட்டத்தில் ஒரு நல்ல வரன் இருப்பதாகவும், அவனைப் பார்த்து வரலாமென்றும் தன் கணவர் சொல்லிக் கொண்டிருந்தது அவள் நினைவில் இருந்தது. இப்பொழுது

அவர்கள் அவ்விதம் முக்கியமாகச் செல்வது அதற்காகத்தான் இருக்கும் என்று தோன்றி, அவளுக்குத் திருப்தியைக் கொடுத்தது. முன்னுலேயே வீட்டில் கலந்து, சொல்லிக்கொண்டு செய்யும் வழக்கம் அவள் கணவருக்குக் கிடையாதல்லவா? அதனுல் அவள் அவ்விதம் எளிதில் தீர்மானித்துக்கொண்டு விட்டாள்.

அதற்கு விரோதமாக நினைக்க மற்றவர்களுக்கு ஒன்றும் இல்லை யாதலால் யாரும் அவர்கள் சென்றிருப்பதைக் குறித்து வேறு விதம் நினைக்கவில்லை. அத்திம்பேர் பகல் போஜனம் அருந்திக்கொண் டிருக்கும்பொழுது, "சாப்பாட்டுக்குக்கூட வரவில்லை என்ரு சொல்லிப்போயிருக்கிருர்கள்? அப்படி எங்கே? என்ன காரியம்?" என்று தானே சொல்லிக்கொள்ளுகிறவர்போலவும் பரிமாறிக்கொண் டிருக்கும் மனைவியிடம் கேட்பவர்போலவும் கேட்டார். அவர் காலையிலேயே தோட்டத்திற்குச் சென்றவர், சாப்பிடத்தான் உள்ளே வந்திருக்கிருர். ஆதலால் அவர்கள் சென்றதே அவருக்குத் தெரியாது.

"யார் கண்டா? அண்ணு என்ன, சொல்லிவிட்டா போகிருர்? சாப்பிட வரமாட்டோமென்று ஜம்புநாதன் சொன்னுன். அதுதான் தெரியும்" என்ருள் அத்தை ஜானகி.

"திருச்சிக்குத்தான் போயிருக்கிருர்களானுல் சாப்பாட்டுக்கு வர முடியாமல் போகாது. அதைவிடத் தூரமாக எங்காவது போயிருந்தால்தான். ஒருவேளை ஏதாவது கல்யாணம் காட்சிக்குப் போயிருப்பார்களோ? அப்படியும் நமக்குத் தெரிந்த இடத்தில் ஒரு கல்யாணமும் நடப்பதாகக் காணுமே!" என்று சந்தேகித்தார் அத்திம்பேர்.

"மன்னி ஏதோ வரன் விஷயமா இருக்குமோன்னு சந்தேகப்படுகிருள். கிட்டத்து ஊரிலே எங்கோ பிள்ளை இருப்பதாக அண்ணு சொல்லிக்கொண் டிருந்தாராம்" என்ருள் ஜானகி.

'யாரது கிட்டத்திலே நல்ல வரன்? நமக்குத் தெரியுமா? அவர்கள் அதுபற்றி நம் காது கேட்கப் பிரஸ்தாபிக்கவே இல்லையே!' என்கிற யோசனையில் ஆழ்ந்தார் அத்திம்பேர். இந்தச் சமயத்தில்தான் சுந்தரி அண்ணு அப்பாவிடம் சொன்

னதை—அப்பொழுது அரை குறையாகக் கவனித்திருந்தவள்—இப்பொழுது நினைவுக்குக் கொண்டுவந்து இவர்களுக்கெல்லாம் தெரியாத விஷயம் தனக்குத் தெரிந்திருக்கிறது என்கிற சந்தோஷத்தில், "அவா போயிருக்கிற இடம் எனக்குத் தெரியும், ஆனால் சொல்லமாட்டேன்; அது ரகசியம்; ஒருத்தருக்கும் தெரியப்படாது; அத்திம்பேருக்குக்கூடத் தெரியப்படாதுன்னு சொல்லியிருக்கா" என்றாள். அவர்கள் ரகசியமென்று சொன்னது அவளுக்கு நினைவு வந்துதான் அதுமாதிரி சொன்னாள்.

'ஏதோ குழந்தை சும்மாச் சொல்லுகிறாள்' என்று அவர்கள் யாரும் அதை முக்கியமாக எடுத்துக்கொண்டு அவளிடம், என்ன ஏது என்பதாகக் கேட்க முன்வரவில்லை.

ஸ்ரீமதி மட்டும், "ஆமாம், ரகசியத்தை உன்னிடம் மட்டும் அந்தரங்கமாகச் சொன்னாளாக்கும்!" என்றாள்.

"சொல்லத்தான் சொன்னா. பின்னே எனக்கு எப்படித் தெரிஞ்சுது?"

"என்ன தெரிஞ்சிருக்கு. நீ சும்மாவானாலும் பொய் சொல்றே" என்று ஏசினாள் ஸ்ரீமதி.

சுந்தரிக்குக் கோபம் வந்துவிட்டது. "பொய்யா! அப்பா வந்தால் கேட்டுப் பாரு. அண்ணாதான் அப்பாவிடம் சொன்னான்; நானுந்தான் இருந்தேன். ஏதோ மிஷின் வந்திருக்காம்; வயலிலே இன்னிக்கு ஓடறதாம்; எதிராளாத்து மாமாகூட அங்கேதான் போறா; நம்மாத்திலே ஒருத்தருக்கும் தெரியப்படாது; அத்திம்பேருக்குத் தெரியப்படாதுன்னு சொன்னான் அண்ணா, தெரியுமா?" என்று தான் கேட்ட முழுச் சமாசாரத்தையும் நினைவுக்கு வரவழைத்துக்கொண்டு சொல்லிவிட்டாள். அவள், தான் சொன்னவைகளிலிருந்து உண்டாகப்போகிற பூகம்பம்போன்ற விபரீதத்தை என்ன கண்டாள்! குழந்தை தானே. பெரியவர்களுடைய மனக் கோளாறுகளாக ஏற்படுகின்ற கோப தாபங்கள், அதன் பயங்கர விளைவுகள் இவைகளை யெல்லாம் எதிர்பார்க்க அவளுக்குத் தெரியுமா?

அத்திம்பேருக்கு அவ்விதந்தான் கோபம் ஜ்வாலையாகக் கிளம்பி எழுந்தது. தன்னுடைய சொந்தப் பொருளைப் பலாத்காரமாகத் தன்னிடமிருந்து எடுத்துத் தன் முன்னேயே தாறு

மாருக உபயோகித்து நாசம் செய்வதைப் பார்ப்பதைப்போல், பொறுக்காத ஆத்திரம் மூண்டு எழுந்தது. நொடியில் விஷயத்தை அவர் மனப்போக்குப்படி கிரகித்துக்கொண்டு விட்டார்: அவர்கள் ட்ராக்டர் வரவழைத்து தனக்குத் தெரியாமல் நிலத்தில் உழவு வேலை நடத்துகிருர்கள் என்பது தான் அது. அவருக்கு உண்டான கோபத்தின் பரபரப்பில், நிலத்தில் வேலை தொடங்க, காவேரியில் தண்ணீர் வர வேண்டாமா, என்கிறதுகூட மறந்து போயிற்று.

"எனக்குச் சொல்லாமல், என்னை அவமதித்து, இவர்கள் தோன்றினபடி செய்கிறதென்று வந்துவிட்டதா? நான் ஒருவன் எதற்காக இவ்வளவு பாடும் பட்டுக்கொண்டு இங்கே உட்கார்ந் திருக்கிறது! கடைசியில் ராமசாமி இப்படியா கிளம்பிவிட்டான்! சுத்த மோசக்காரத்தனமாக அல்லவா இருக்கிறது!" என்று ஆத்திரத்துடன் கர்ஜித்தார்.

அத்தைக்கும் அதைக் கேட்க அதிர்ச்சியாகத்தான் இருந் தது. "அண்ணு இவ்வளவு நாளும் இல்லாமல் ஆத்துக்காரரை அவமதித்துத் தாறுமாருக ஏதோ செய்வதாகத் தோன்றிற்று. விஞ்ஞானத்தின் பலனுக ஏற்பட்ட இந்தப் புது முறைகளை விஷ யம் தெரிந்த ஆண்பிள்ளையான அத்திம்பேரே ஒத்துக்கொள்ள வில்லை என்ருல், வீட்டோடு கிடக்கும் பெண்கள் ஒப்புவார் களா? ஆனுலும் கணவரைச் சமாதானப்படுத்தி, என்னவோ செய்து பார்க்கட்டுமே; 'பட்டால் தெரியும் பாப்பானுக்கு' என்று கெடுதல் வந்தால் தானே தெரிஞ்சுட்டுப் போறது. நீங்கள் சும்மா இருங்கள்" என்ருள். அவ்விதம் அவர்களைத் தனக்குச் சொந்தமில்லாமல் அயலாராக வைத்துப் பேசுவதில், அவர் சமாதானம் அடைவார் என்று அவள் எதிர்பார்த்தாள்.

"சும்மா இருக்கிறதா? நான் சரீரத்தை ஓடாக உழைத்து விருத்தி செய்திருக்கிறதாவது! இவன்கள் அதை நாசம் செய் கிறதாவது! அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். ஜம்பு நாதன் விஞ்ஞானம் படிக்கவென்று சென்னை கிளம்பினபோதே எனக்கு விபரீதம் வருமென்று தெரியும். ராமசாமி மட்டுமோனுல் கூட இப்படியெல்லாம் கிளம்பிவிட மாட்டான். இத்தனை நாள் எனக்கு எதிராக அவன் ஒன்றும் செய்ததில்லை. ஜம்புநாதன்

கிளம்பித்தான் இது மாதிரி நடக்கிறது. நல்ல கல்யாணத்தை வேண்டாம் என்றான். போகிறான், அது அவன் சொந்த விஷயம் என்று விட்டேன். நிலத்திலே கை வைக்கிறதாவது! அக்கிரம மாக இருக்கிறது! இதற்கு நான் சும்மா இருக்கப்போகிற தில்லை!'' என்று ஆத்திரத்தில் பெரிதாக இறைந்தார்.

"சும்மா இராமே என்ன பண்ணுகிறது என்கிறீர்கள்?'' என்று அத்தை அவரைத் தடுத்து ஏதோ ஆரம்பிக்குமுன், "என்ன பண்ணமாட்டேன்? இவர்களை வயல் பக்கம் வர விடுகிறேனா, பார்க்கட்டும்! இன்று வேண்டுமானால் எனக்குத் தெரியாமல் இவர்கள் கிளம்பியிருக்கிறார்கள். இனிமேலும் அது மாதிரி முடியுமா! குடியானவர்களெல்லாம் எனக்கு வேண்டியவர்கள்; அவர்களைக் கொண்டு அந்தப் பக்கம் தலை காட்ட முடியாமல், இவர்களை விரட்டியடிக்க மாட்டேனா!'' என்று வீராவேசத்துடன் கர்ஜித்தார்.

இந்த மாதிரி அவர் பேசுவது அத்தைக்குப் பிடிக்கவில்லை. "போறுமே, நீங்க பேசற அழகு! சொத்து அவாளுடையது. அதை என்ன வேண்டுமானாலும் செய்ய அவாளுக்குப் பாத்தியம் இருக்கு. அதுக்கு நீங்களும் நானும் என்ன பண்ணு கிறது? விரட்டறதாவது! என்ன பேச்சு!'' என்றாள். கோபத் தில் அவர் அது மாதிரி ஏதாவது நிஜமாகச் செய்துவிடுவாரோ என்கிற பயம் அவளுக்கு. அதைத் தடுக்கத்தான், நிலத்தில் அவருக்குப் பாத்தியம் இல்லை, என்பதை அவ்விதம் எடுத்துக் காட்டினாள். அதொன்றும் அவர் மனத்தில் அவ்விதம் உறைப் பதாக இல்லை.

"எனக்கு அதில் சொந்தம் இல்லையா! யார் சொன்னது!'' என்றுதான் பெரிதாக அதட்டிக்கொண்டு கிளம்பினார்.

"யார் சொல்றதென்ன? நான்தான் சொல்லுகிறேன். பிள்ளையார் கோவிலைப் பெருக்கலாம் மெழுகலாம்; வேறு செய்யப்படுமோ? அதுபோல் வேலை செய்யத்தான் நமக்குப் பாத்தியம். அதற்கு மேலே இப்படித்தான் நடக்கணும்னு சட்ட மிட நாம் யாரு? குழந்தைகள் ஆகட்டும்; சொத்தாகட்டும்; நம்மதுன்னு இருந்தால்தான், நம்ம மனசுபோல் செய்ய முடியும். சொந்தமாக இல்லாவிட்டால் சும்மா இருக்க வேண்டியதுதான்.

அதுக்காகக் கண்டபடி கோவிச்சுண்டு கத்துவது சரியா? ஜம்பு நாதன்வேறே பெரியவனுகப் போயிண்டு வரான். பட்டணம் போய்ப் படிச்செல்லாம்வேறே அவனுக்கு எவ்வளவோ தெரியறது. அவன் சொல்றது அண்ணுவுக்குச் சரின்னு தோணுமே இருக்கணும்னு முடியுமோ? போறும்; பேசாமல் இருங்கோ'' என்று கணவரை அதட்டிக் கண்டிக்கும் பாவனையில் பேசினுள் அத்தை.

இவர்களுடைய பேச்சு, சமையல் அறையில் இருந்த பாட்டியின் காதுகளில் விழுந்தது. அவள் அங்கிருந்தவாறே பெண்ணை, "ஜானகி! என்ன பேச்சுப் பேசறே, எல்லாம் அவா வந்தாத் தெரியறது. அதுக்குள்ளே ஏதுக்கு இந்தத் தர்க்கம்?'' என்று எச்சரித்தாள். மாப்பிள்ளைக்கு வீணுக்குக் கோபம் மூட்டிவிடப் போகிருளே பெண் என்கிற விசாரம் அவளுக்கு.

"ஆமாம், நம்ம நிலைமை தெரியாமலே கோவிச்சிண்டா நன்ருருக்கா? அதுக்குத்தான் சொல்றேன்; ஏதோ போட்டதைச் சாப்பிட்டுட்டுச் சொன்னதைச் செஞ்சிண்டு இருக்கிறதற்கு மேலே நமக்கென்ன யோக்கியதை இருக்கு! அதுக்குத்தான் சொல்றேன்'' என்று கணவர் செய்யும் தப்பை தனக்குள் நினைத்துக்கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் அம்மாவுக்கும், ஏன், கணவருக்குங்கூட, காதில் படும்படி வெளியிட்டுச் சொல்லிவிட்டுச் சமையலறைக்கு வந்தாள்.

"அவர் கோவிச்சுக்கட்டுமே, அதில் உனக்கு என்ன வந்தது? புருஷாளுக்குக் கோபம் வருகிறது என்கிறதற்காக, நாமும் அவாளுக்குச் சரியா அதட்டிப் பேசலாமா!'' என்று பாட்டி பெண்ணிடம் சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே, கூடத்தில் சாப்பிட்டுக்கொண் டிருந்த ராமகிருஷ்ணையர் இலையை விட்டு எழுந்துவிட்டார். அவருக்கு மோர் வார்க்கவென்றே, மோர் எடுத்துவர உள்ளே சென்று, மோருடன் திரும்பி வந்த அவர் மனைவி, கொல்லையில் அவர் கை கழுவிக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டு, "என்ன இது, மோருஞ் சாதம் சாப்பிடாமே எழுந்துட்டேள்! நான் மோர் கொண்டு வரத்துக்குள்ளே ஆளைக் காணுமே!'' என்ருள்.

"எனக்கு மோர் வேண்டியதில்லை" என்றார் அவர். அவருக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிந்தது. அவர் மேலும் அங்கே நின்றுகொண் டிராமல், அவள் சொல்பவைகளைக் கேட்கப் பிடிக்காதவராக வயலை நோக்கிச் சென்றார்.

"அட பாவமே! யார் என்ன தப்பைச் சொல்லிப்பிட்டா! அடிக்கிறேன் உதைக்கிறேன்னு நன்னாயில்லையேன்னு சொல்ல வந்தா அது பெரிய தப்பா? எப்பவும் உள்ளதைச் சொன்னா உடம்பெரிச்சல்தான்!" என்று மேலும் அவள் ஏதோ விடாமல் சொல்லிக்கொண்டு திரும்பச் சமையலறை சென்றுவிட்டாள். 'இதென்ன அசட்டுக் கோபம்!' என்றுதான் இருந்தது அவளுக்கு. 'அவா ஏதோ நிலத்திலே செஞ்சு பார்த்தாப் பார்க்கட்டுமே! என்ன குடி முழுகிப்போச்சு. அதுக்கு இதுமாதிரியா தலைகால் தெரியாமே கோவிச்சுக்கிறது! என்னவோ கோவிச்சுண்டு போறாப் போகட்டும்; எல்லாம் தானே தணிஞ்சு போகும். இதை இப்போ பெரிசாக் கவனிச்சிக்கப்படாது' என்று நினைத்துக்கொண்டாள் அவள்.

அவள் தாயார், "ஏண்டீ, மோருஞ் சாதம் சாப்பிடாமயா போறார்! கூப்பிட்டு உட்காரச் சொல்லு" என்று பறந்து சொன்னதற்கு, "இருக்கட்டும் அம்மா; ஒருவேளை மோருஞ் சாதம் சாப்பிடாட்டா ஒன்னும் வந்துவிடாது. அவர்தான் சொல்றதைக் கேட்டுக்காம போறாரே; நாம் என்ன பண்ணறது?" என்று சொல்லிவிட்டாள்.

தான் ஏதோ வரன் விஷயம் என்று எண்ணித் திருப்தியுடன் இருக்க, இது ஏதோ கல்யாணத்திற்கு ஆகக்கூடிய பணத்தைக் கரியாக்கி நாசமடிக்கிற காரியமாக வல்லவா இருக்கிறது என்கிற வேதனையில் விசாலத்திற்கு ஒன்றுமே ஓடவில்லை. நாத்தனார் அகத்துக்காரர் பாதிச் சாப்பாட்டில் எழுந்து செல்கிறார், என்பதைக்கூடக் கவனித்துக்கொள்ள முடியாமல் இருந்தாள் அவள்.

தன்னால்தான் அத்தைக்கும் அத்திம்பேருக்கும் சண்டை மூண்டது. அவர் முழுதும் சாப்பிடாமே பொகிறார் என்ற தவிப்பு, சுந்தரிக்கு ஏற்பட்டது. அவள் வாசல் வரைக்கும்

சென்று குறைச் சாப்பாட்டையும் சாப்பிடும்படி அவரை அழைத்தாள். அவர் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், அவளுக்கு நின்றும் பதில் சொல்லிக்கொண் டிராமல் மேல் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வீட்டுப் படி இறங்கி வெயிலையும் லட்சியம் செய்யாமல் வேகமாகச் சென்று விட்டார். அவர் மனைவிதான் அவருக்கென்று சொந்தமாகக் குழந்தைகளோ சொத்தோ இல்லா திருக்கும்பொழுது பிறத்தியாருடையதில் பாத்தியம் கொண்டாடக் கூடாது என்று சொல்லிக் காண்பித்திருக்கிறுளே; அப்படியிருக்க, சுந்தரியை எதற்காகத் திரும்பிப் பார்த்து, அவள் அழைப்புக்கு இணங்கி உள்ளே வருகிறது? தனக்கு ஒரு பந்தமும் இனி இந்த இடத்தில் வேண்டியதில்லை என்கிற வைராக்கியத்துடன் அவர் சென்றுர். அவருக்குப் பொதுவாக உலகத்தினிடத்திலேயே அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. அவர் அன்பாக வளர்த்த குழந்தைகள், அதற்குமேல் அன்புடன் பராமரித்து வந்த பூமி இவைகள் யாவும் அவருக்குச் சிறிதும் சொந்தமில்லை; அவைகளிடத்தில் அவர் ஆசை, அவர் இஷ்டம், ஒன்றும் ஒரு பொருட்டாகவும் கருதப்படமாட்டா. அவைகளின் நலத்திற்காக அவர் பாடுபடுவது அவ்வளவும் விழலுக்கு இறைத்த நீர்; இதை அறிந்தும் அவர் சும்மாப் பொறுத்திருப்பதா? அவர் அன்பிற்கு, அவர் உழைப்பிற்கு, மதிப்புக் கொடுப்பதற்குப் பதிலாக, அவருக்குச் சொந்தமில்லை என்பதைக் காண்பித்துக்கொண்டு, அவரை மீறி, அவருக்கு விரோதமாக, ரகசியத்தில் காரியம் நடத்திக்கொண்டு போகிறுர்கள். இனிமேலும் மானத்தை விட்டுவிட்டு முன்போல் சாதாரணமாக அந்த வீட்டில் இருந்துகொண் டிருக்க முடியுமா? தடி கொண்டு அடித்து வீழ்த்தின பிறகு, காயானது திரும்பவும் மரத்தில் சென்று காம்புடன் ஒட்டிக்கொள்கிறது எங்காவது உண்டா? ‘நம் உறவு தீர்ந்தது. நாம் யாரோ, அவர்கள் யாரோ?’ இவ்வித விரக்தியில் அவர் கால் சென்ற திக்கில் நடந்து செல்லத் தொடங்கினுர்.

அவர் போன பிறகு அத்தை ஒன்றும் நடக்காதவள் போல், தன் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினாள். பாட்டியும் அதைப்பற்றி அதிகம் கொட்டி அளக்க மனமில்லாமல்தான் பேசாதிருந்தாள். விசாலம், 'கணவர் இப்படிக் குடும்பத்தின் நலத்தைப் பார்க்காமல் செய்யக் கிளம்பிவிட்டாரே! ஜம்புநாதன் பட்டணத்திலே படிக்கப்போனது நல்லதுக்கில்லைபோல் இருக்கே; அன்றிலிருந்து ஒரு காரியமும் நல்லபடி நடக்க விடமாட்டேன் என்கிறானே. அதுக்குத்தான் நான் அப்பவே, "இங்கிருக்கிற படிப்புப் போறும்"னு சொன்னேன். ஏழை சொல் அம்பலம் ஏறுமா? நம் வார்த்தை எங்கே எடுபடுகிறது? அவன் தனியாகப் பட்டணத்தில் இருக்கிற தெம்பிலே, தோணினபடி நடக்க ஆரம்பிச்சுட்டான். அவன் காலடியில் வந்த கல்யாணத்தை வேண்டாம்னுன். எதிராளகத்துக்கு அதிர்ஷ்டம் அடிச்சுடுத்து. குஞ்சலம்போல் கூடை நகையோடு, மகாலக்ஷ்மியாட்டம் நாட்டுப்பெண் வீட்டைச் சுத்தி வளைய வரு. ஒவ்வொரு நாளும் கிழமையும், சீரும் செனத்தியுமாகத் தடபுடல் படுகிறது. அதுதான் போகட்டும்னு இதென்ன காரியம் இப்போ? பெண் குதிர்போல் கல்யாணத்திற்கு நிற்கிறது தெரியாமே, என்னவோ மிஷினிலே காசைக் கொட்டிக் கரியா அடிக்கிறாரே! என்ன கேடுகாலம் சம்பவிக்கப்போகிறதோ தெரியவில்லை! ஜானகி அகத்துக்காரருக்குவேறே மனஸ்தாபம் வந்திருக்கு. இதெல்லாம் என்ன காரியம்!' என்று தனக்குள்ளாகவும் வாய்விட்டுச் சொல்லியும் வருத்தப்பட்டுப் புலம்பத் தொடங்கிவிட்டாள். வீட்டில் ஒன்றும் சரியாக நடக்கவில்லைபோல் இருக்கிறது என்று பெண்களுக்கும் அவர்கள் போக்கில் மனசுக்கு வேதனை உண்டாயிற்று.

பகல் முழுதும் இவ்விதம் அவரவர்கள் நினைப்பில் ஏதோ சென்றது. அஸ்தமித்து விளக்கேற்றின பிறகுதான் ஜம்புநாதனும் ராமசாமி ஐயரும் திரும்பி வந்தார்கள். அவர்களுக்கு ட்ராக்டர் செய்த வேலையில் பரம திருப்தி. அது காடு, மேடு எல்லாவற்றையும் சமமாக உழுது தீர்த்துவிடும் என்று தெரிந்

தது. எவ்வளவு கட்டாந்தரையும் கல்லுப் பிரதேசமும் அதற்கு ஒரு பொருட்டு என்று தோன்றவில்லை. பூமியைப் பாதாளம் வரைக்கும் புரட்டி எடுத்துவிடும்போல் இருந்தது; அது உழுது மண்ணைப் புரட்டின மாதிரியில் மேடாகக் கிடந்த தன்னுடைய சில நிலங்களைக்கூட அதன் உதவியால் உழலாம் என்கிற நம்பிக்கை ராமசாமி ஐயருக்கு ஏற்பட்டது. சில நிலங்கள் அவருக்கு அவ்விதம் உபயோகம் இல்லாமல்தான் தரிசாகக் கிடந்தன. அவைகளில் முதலாக விவசாயம் ஆரம்பிக்கலாம் என்றுகூட நிச்சயித்தார் அவர். ட்ராக்டரால் இவ்வளவு சௌகரியம் இருக்கிறது தெரிந்ததில் அவருக்குப் பரம சந்தோஷம். 'போகிறது. நாம் ஏதோ கவலைப்பட்டுக்கொண்டிருந்தோமே! ட்ராக்டரால் வீணாகச் சும்மாக் கிடக்கும் நிலத்தையும் உழுது பயிரிடலாம் என்றால் ராமகிருஷ்ணன்கூட ஒப்புக்கொண்டுவிடுவான். அதைத்தான் முதலில் அவனுக்குச் சொல்லி எடுத்துக் காண்பிக்க வேண்டும். அவனும் அதைப் பார்த்தால் ஏற்றுக்கொண்டு விடுவான்' என்கிற உத்ஸாகத்துடன் வீடு வந்தார் அவர். ஒரு நெல் விளைகிற இடத்தில் இரண்டு நெல் அல்ல; நெல்லே விளையாமல் தரிசாகக் கிடக்கும் பூமியை வளம்பெறச் செயதுவிடுகிறது என்றால், அது சாமானியமா? அதனால் உண்டாகக்கூடிய திருப்தியும் சந்தோஷமும் யாருக்குத்தான் சாதாரணமாக இருக்கும்! அதிலும் உணவுப் பொருளின் பற்றுக்குறையைத் தீர்த்து, பொதுஜன சேவை செய்யத் துடித்துக்கொண்டிருக்கும் ராமசாமி ஐயருக்கு, 'குருடன் பார்வை பெற்றதுபோல்' தாங்காத மகிழ்ச்சி ஏற்பட்டதில் அதிசயம் என்ன!

வீட்டிற்கு வந்த பிறகு அதுபற்றிப் பேச முடியாது என்பதற்காகவே, அவர் வழியில் தாமதித்து நின்று, தியாகராஜையரிடம் தம் சந்தோஷத்தைப் பலவிதம் பேசித் தெரிவித்துக்கொண்டார். தாங்கள் நினைத்ததற்கும் மேலாகவே ட்ராக்டர் விஷயம் திருப்திகரமாக மாறுவதில், தன்னுடைய மனப் போராட்டங்களையுங்கூட மறந்து சந்தோஷப்பட ஜம்புநாதனும் முடிந்தது. அத்திம்பேரையும் அழைத்துச் சென்று காண்

பித்து, அவரும் அதைத் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டு விட்டாரானால், பிறகு அந்தச் சந்தோஷம் பரிபூரணம் அடைவதற்குக் கேட்பானேன்! அப்பொழுது அவன், 'தன்னுடைய காதல் மாசற்றதாக ஆக முடியுமா? மற்றும் அது காதல்தானா?' என்றெல்லாம் தன் மனத்தை வருத்தித் தொல்லை கொடுக்கும் கேள்விகளுக்கு, பதிலைத் தேடிக் கஷ்டப்படாமல், அவைகளை மறந்து நிம்மதியாகக்கூட இருக்கப் பார்ப்பான். 'காரியங்கள் அததுவாக நடக்கிறபடி நடக்கட்டுமே; நாமென்ன அவைகளை நடத்திவைப்பது!' என்றுகூட அவன் விஷயங்களை அதனது போக்கில் விடத் தயாரானான். பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களைத் திருப்தி செய்து வைக்க வேண்டியது சிறியவர்களுடைய கடமையல்லவா? அதைச் செய்துவிட்டுச் சும்மா இருப்போமே என்றுகூட நிச்சயித்தான்.

இவ்விடம் ட்ராக்டர் விஷயம் வெற்றிகரமாக முடிகிறது என்கிற சந்தோஷத்தில், தான் சொந்தத்தில் மேற்கொள்ள எண்ணியிருந்த என்ன என்னவோ நிபந்தனைகளைக்கூட அவன் ஒருவாறுகக் கைவிடத் தயாராகிவிட்டான். வீட்டிற்கு வந்த பிறகும் தந்தையும் மகனும் அவரவர் சிந்தனையில் இருந்தார்களே தவிர, சுற்றிலும் வீட்டவர்கள் கலகலப்பின்றி இருப்பதைக் கவனித்துக்கொள்ளவில்லை. விளக்கு வைத்துச் சிறிது நேரம் ஆகியும் பாதிச் சாப்பாட்டில் எழுந்து சென்ற அத்திம்பேர் வீடு திரும்பவில்லை. அத்தை ஜானகியின் மனத்தில் அது வரைக்கும், 'எல்லாம் தானே கோபம் தணிந்து வருகிறார்' என்று இருந்த அலட்சிய பாவம் மறைந்து, கவலை தோன்றியிருக்க வேண்டும் என்று தெரிந்தது. அவள் சற்றைக்கொரு தரம் ஓசை செய்யாமல் வாசலுக்குச் சென்று, இரண்டு புறமும் தெருவைக் கண்ணுக்கு எட்டியமட்டும் நோக்கிவிட்டு வந்து கொண்டிருந்தாள். எங்காவது தூரத்தில், ஆண்பிள்ளை என்பதைக் குறிக்க, வெளுப்பான வேஷ்டியுடன் ஓர் உருவம் தெரிந்தால், அது அவராக இருக்குமோ என்கிற நம்பிக்கையுடன் அந்த உருவம் சிறிது சமீபம் வந்து, அவர் இல்லை என்று தெரிகிற வரைக்கும் உற்றுப் பார்த்துவிட்டு நிராசையுடன் உள்ளே சென்றுகொண் டிருந்தாள்.

சுந்தரியும், அத்திம்பேர் வருகையையே எதிர்பார்த்திருந் தாள். அத்தை கவலையுடன்தான் அவ்விதம் உள்ளுக்கும் வாசலுக்குமாக நடக்கிறுள் என்பதும் அவளுக்குத் தெரிந்து போயிற்று. அவளையும் லேசாக ஒருவகைக் கவலையும் பீதியும் பிடித்துக்கொள்ளத் தொடங்கின. வழக்கம்போல் அந்தச் சிறுமிகள், வீட்டுப் பெரியவர்களுக்கு முன்னுல் சாப்பிட உட் கார்ந்த பொழுது, அவளுக்குச் சாப்பாடே செல்லவில்லை. "ஏண்டீ, சாதம் வேண்டி யிருக்கவில்லையா?" என்று பக்கத் திலே உட்கார்ந்திருந்த ஸ்ரீமதி பரிவோடு கேட்டபொழுது அவளுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்து, நெஞ்சை அழுத் திற்று. அந்தப் பெண்கள் யாருக்குமே அன்று சரியான படி உணவு செல்லவில்லை. பெரியவர்களும் வழக்கம்போல் அதைக் கவனித்து, 'ஏன்? என்ன?' என்று காரணம் கேட்டு அவர்களுக்குச் சாப்பாடு செய்துவைக்கவில்லை. அவர்களுக்கு இருந்த ஏதோ ஒரு மன வேதனையில் அவர்கள் கண்களில் அது படவே இல்லை என்றுதான் தெரிந்தது. மாடி அறையில் சென்று படுத்துக்கொண்ட பிறகும் அந்தச் சிறுமிகளுக்கு லகுவில் தூக்கம் வருமென்று தோன்றவில்லை. கீழே அத்திம்பேர் வருவ தன் அரவம் ஏதாவது கேட்கிறதா, என்று கவனித்தவண்ணம் படுக்கையில் புரண்டுகொண் டிருந்தார்கள். கீழே நிசப்தம் தான் நிலவிக்கொண் டிருந்தது. யாரும் பேசுவதாகக்கூடத் தெரியவில்லை.

ஜம்புநாதனுக்கும் ராமசாமி ஐயருக்கும் சாப்பிட உட் காரும் வரைக்கும், அத்திம்பேர் வீட்டில் இல்லை என்கிறது தெரிந்திருந்தா லல்லவா அவர்கள் அதைக் குறித்து ஏதாவது பேசிச் செய்வதற்கு? இலையில் உட்காரும்பொழுதுதான் அவரையும் சாப்பிட அழைக்க, அவர் பகலிற் சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை என்கிற விஷயம் தெரிந்தது. "அவர் எங்கும் போகிறவர் இல்லையே, அப்படியும் அஸ்தமித்த பிறகு எங்கும் தாமதிக்கமாட்டாரே! எப்பொழுது போனுர்? என்ன சொல்லிவிட்டுப் போனுர்?" என்று அவர்கள் மேலும் மேலும் விசாரித்த பிறகு முழு விவரமும் சொன்னுர்கள் அந்த ஸ்திரீகள்.

"இவ்வளவு நேரம் நீங்கள் சொல்லாமலே இருந்திருக்கிறீர்களே! வந்ததுமே அவரைத் தேடிப் போயிருக்கலாமே!" என்றார் ராமசாமி ஐயர்.

"ஏதோ நாழியாகிறது; வந்துவிடுவார்; கலவரப்படுத்துவானேன் என்கிறதுதான்" என்று அவர் தாயார் சொன்னதற்கு, "வராமே என்ன? கோவிச்சிண்டு வீட்டை விட்டு ஓடிப் போகிறதற்குச் சிறு பிள்ளையா என்ன! இருந்தாலும் நாழி ஆகிறதே!" என்றுதான் அவர் கவலைப்பட்டார்.

"நீங்கள் சாப்பிட வாருங்கோ! அதற்குள்ளே அவரும் வருவார்" என்று விசாலம் சொன்னதற்கு, "இல்லே; வரட்டும்" என்று அவர் தீர்மானமாகச் சொல்லி, வாயிலை நோக்கி எழுந்து சென்றார். தாங்கள் பாதி சாப்பிடும்பொழுது அவர் திரும்பி வர நேர்ந்தால் அவருக்காக அவர்கள் காத்துக்கூட இராமல் சாப்பிட்டதற்கு அவருக்குப் பின்னும் கோபம் அதிகமாகும் என்றுதான் அவர் இலையில் உட்காராமல் காத்திருக்கத் தீர்மானித்தார். ராமசாமி ஐயர் எது நேரக்கூடாது என்று நினைத்தாரோ அதுவே நேர்ந்துவிட்டதில் அவருக்கு மிகுந்த கவலை ஏற்பட்டுவிட்டது. ராமகிருஷ்ணன் வந்ததும் அவன் கோபத்தை எப்படித் தணிப்பது என்கிற யோசனையில் முழுதும் முழுகினார்.

"ஒருவேளை அகிலாண்டேசுவரி சந்நதியில இருப்பாரோ? பார்த்து வரட்டுமா அப்பா?" என்று ஜம்புநாதன் கேட்டதும் அவருக்கு அது சரி என்று பட்டது. ராமகிருஷ்ணனுக்கு அகிலாண்டேசுவரியிடம் அபார பக்தியாயிற்றே; அவளிடந்தான் கோபம் தணிந்து, மனம் சமாதானம் பெறச் சென்றிருப்பான் என்று நினைத்தார்.

ஆனால் ஜம்புநாதன் அவ்விடத்தில் சென்று பார்த்து, அவர் அங்கே இல்லையென்று திரும்பி வந்தான். இன்னும் அவர் செல்லக்கூடிய இடங்கள் இன்ன இன்ன என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்து, அங்கெல்லாம் சென்று அவரைத் தேடிப் பார்த்தார்கள். அங்கே எங்கும் அவர் இல்லை. அவர் அதிகம் வீட்டைவிட்டு வெளியே செல்லுகிறவர் இல்லையாதலால், அவர் போகும் இடங்களும் அதிகம் இருக்கவில்லை. உள்ளூரிலே அவருக்குப் பழக்கமான மளிகை வியாபாரி ஒருவர்

உண்டு. அவரிடத்திற்கு அடிக்கடி சென்று நாட்டுப் பொது விஷயங்களைப்பற்றி அவர் பேசிப் பொழுதுபோக்குவது வழக்கம். அந்த வியாபாரியிடமும் சென்று கேட்டார்கள். தான் அன்று அவரைப் பார்க்கவே இல்லை என்று அவர் சொல்லிவிட்டார். ஆகையால் அந்த நம்பிக்கையும் போயிற்று. இதற்குள் விஷயம் தெரு முழுதும் பரவிவிட்டது. ஒவ்வொரு வீட்டாரும் தங்கள் தங்கள் யோசனையைச் சொல்லிக்கொண்டு, உதவி செய்ய முன்வந்தார்கள். எதிர் வீட்டுத் தியாகராஜையருக்கு இதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது. எல்லாம் வெகு செம்மையாக நடந்துகொண்டு போகிறது என்று நாம் சந்தோஷித்திருக்க, இதென்ன, 'பூசை வேளையில் கரடியை விட்டு அடித்த!' மாதிரி பலத்த கலவரம், என்றுதான் விசாரம் எழுந்தது. 'ராமகிருஷ்ணையர் நம்ம காரியத்துக்கு ஒரு முட்டுக்கட்டை. அன்றிலிருந்து நாம் செய்ய நினைக்கும் நல்ல காரியத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறுர்' என்பதால் அவருக்கு அவரிடம் பிரியம் இல்லை. ராமசாமி ஐயர் உத்ஸாகமாக வேலை தொடங்குகிறு இந்தச் சமயத்தில் இப்படி ஒரு கலவரத்தை உண்டுபண்ணி அதைக் கெடுக்கிறுரே; ராமசாமி ஐயருடைய ஒத்தாசை நமக்கு இல்லாமல் அடித்துவிடப் போகிறுரே!' என்று இப்பொழுது அவர்பேரில் பிரமாதக் கோபமே எழுந்தது. கோபப்பட்டு என்ன செய்கிறது? அவரும் ராமசாமி ஐயருக்கு உதவியாக ஆளைத் தேடிக் கண்டுபிடித்து, சமாதானம் செய்தாலாவது உண்டு. இதனுல்தான் அவரும் அவர்களுடன் நெடுகிலும் தேடினுர். அத்திம்பேரைத் தேடிக்கொண்டு, அகிலாண்டேசுவரி கோவிலை அவர்கள் பல பிரதட்சிணம் வந்திருப்பார்கள். ஸ்ரீரங்கம் கோயில், திருச்சி உச்சிப்பிள்ளையார் சந்நிதி, இவ்விதம் அவர்கள் அன்று ஓர் இரவில் அவ்விடத்துக் கோவில்களைச் சுற்றின சுற்றுக்கு, ஈசுவரனை மட்டும் மனத்தில் கொண்டு அவ்விதம் செய்திருந்தால், அவர்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய புண்ணியத்திற்குத்தான் அளவு இருந்திருக்குமா! அவருடைய பக்தி நிறைந்த சுபாவத்திற்கு அவ்விடங்களுக்குத் தான் அவர் செல்லக்கூடும் என்கிற எண்ணம் அவர்கள் எல்லோருக்கும். அதன்படி அவர்கள் அத்தனை முறை திரும்பத்

திரும்ப ஒருவர் மாற்றி ஒருவர் அந்த இடங்களில் அவரைத் தேடி அலைந்தார்கள். ஆனால் அவரை மட்டும் எங்கும் காண வில்லை. எங்காவது ரயிலேறிச் சென்றிருப்பாரோ என்பதற்கும் அவரிடம் அரைக் காசும் இல்லை. அப்படியிருந்தும் ரயிலடியில் சென்றும் தேடினார்கள் அவர்கள்.

கூடத்தில் போட்டிருந்த இலைகள் அப்படியே சிந்துவா ரற்றுக் கிடந்தன. சமைத்த உணவு அடுப்பருகே அப்படியே மூடி வைத்தபடி இருந்தது. யாரும் சாப்பிடவோ தூங்கவோ இல்லை. ராமசாமி ஐயரோ ஜம்புநாதனோ உள்ளுப்புறமே வரவில்லை. எங்காவது சுற்றி வருவதும், ஒருவேளை தாங்கள் போயிருக்கும்பொழுது வீட்டிற்கே வந்திருப்பாரோ என்று வந்து பார்ப்பதுமாக இருந்தார்கள். தெருவார், பாதி ராத்திரி வரை இவர்களுக்கு உதவியாகச் சுற்றிவிட்டு, 'காலையில் பார்ப்போம்; போலிசுக்குத் தெரிவிப்போம்' என்று சொல் லிக்கொண்டு அவரவர் வீடுகளுக்குப் போனார்கள்.

'இதென்ன, வயது வந்த ஓர் ஆண்பிள்ளை செய்கிற காரி யமா! ஏதோ அவர்கள் நிலத்தில் அவர்கள் ஏதோ செய்து கொண்டால், அதற்கு இப்படியா சிறு பிள்ளையைப்போல் கோபித்துக்கொண்டு, சொல்லாமல் கொள்ளாமல் போகிறது!' என்று சிலரும், 'என்ன இருந்தாலும் ராமகிருஷ்ணையருக்கு மனசில்லாததை இவர் செய்யலாமா? அவர் இவர்களுக்காகக் கொஞ்சப் பாடா படுகிறார்! ராமசாமி ஐயருக்கு ஏன் இப்படித் திடீரென்று பணப் பேராசை வந்துவிட்டது!' என்று சிலரும் இரு புறத்து நியாயத்தையும் எடுத்து அலசிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள். தியாகராஜையர் ஒருவர்தான் தமக்கும் அந்தக் கவலையில் நிஜமான பங்கு உண்டு என்பதுபோல் தூங் காமல் முழுதும் ராமசாமி ஐயருடன் கூடவே இருந்தார்.

"எங்கேதான் போயிருப்பார்? அப்படி என்னதான் பிர மாதம் நடந்துவிட்டது! இதென்ன அசட்டுத்தனம்! பெரியவா செய்யற காரியமா இல்லையே! சீ சீ! சிறுபிள்ளைத் தனமான்னா இருக்கு! அதற்குத்தான் ஸார், நான் ரொம்ப ஜாக்கிரதை வேணும்னேன். குழந்தை காது கேட்கப் பேசிப்பிட்டேளே. இதைவிட நாமே சொல்லியிருந்தாக்கூடப் பெரிசாத் தோணி

யிராது'' என்று அவர் விதவிதமாகச் சொல்லி அங்கலாய்த்த பொழுது, ராமசாமி ஐயரால் சகித்துக் கேட்க முடியாமல்தான் இருந்தது. அவருக்கிருந்த கவலையிலும் கலவரத்திலும் அது மாதிரி பிரயோஜன மற்ற பேச்சுகள் கட்டோடு பிடிக்க வில்லை. நிற்காமல் யந்திரமாகச் சுற்றி, ராமகிருஷ்ணயரைக் கொண்டு வந்து நிறுத்துவது ஒன்றுதான் சமாதானமாகத் தோன்றும்போல் இருந்தது. ஆனாலும், அவர் தியாகராஜைய ரின் நல்ல எண்ணத்தை அறிந்துகொள்ளாமல் இல்லை. தமக்குச் சரியாக விழித்திருந்து அவர் கஷ்டப்படுவதற்கு நன்றி உணர்ச்சி மேலிட்டுத்தான், அவர் பேச்சுக்களைச் சகித்துப் பொறுத்துக்கொண் டிருந்தார்.

அவர் உள்ளேயே வராமல் அவ்விதம் தெருவிலேயே விடியும் வரை நின்று தவிப்பதைக் காண, ஈசுவரனே சகிக்காதவர் போல், வருண பகவானைக்கொண்டு மழை பெய்யும்படி செய்துவிட்டார் என்று தோன்றிற்று. அவ்விதம் கோடை மழையானது திடீரென்று இடி மின்னலுடன் வருஷித்து விடியச் சிறிது நேரம் இருக்கும்பொழுது ராமசாமி ஐயரை வீட்டிற்குள் ஒதுங்கச் செய்தது.

## 34

'காலையில் வராமல் போகமாட்டார்'. என்று அவர்கள் நம்பி இருந்ததையும் இல்லையென்று தெரிவித்துக்கொண்டு பொழுது விடிந்து, பொழுது ஏறிக்கொண் டிருந்தது. மழைக்காகச் சிறிது நிறுத்தியிருந்த தங்கள் அலைச்சலை மறுபடியும் துவக்கினார்கள் ராமசாமி ஐயர் முதலானோர்கள். இனி போலீசுக்குத் தெரிவிக்காமல் முடியாது; அவர்களும் சேர்ந்து தேடினால்தான் கண்டுபிடிப்பது சாத்தியமாகும் என்று நிச்சயித்துப் போலீசுக்குத் தெரிவித்தார்கள். போலீஸ் சேவகர்கள் வீட்டிலுள்ளவர்களைச் சந்தேகிப்பதுபோல் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பொறுமையுடன் பதில் சொல்லிக்கொண்டு, தங்களுக்கு உதவியாக அவர்களைப் பல இடங்களிலும் பார்க்கச் செய்தார்கள். நெடுகிலும், காவேரிக் கரையின் ஓரங்களிலும்

ஆட்கள் அமர்த்திப் போலீஸ் தேட நினைத்தபோது, ராமசாமி ஐயருக்குத் திடுக்கிட்டுத் தூக்கி வாரிப் போட்டது. 'அப்படியும் ஏதாவது நேர்ந்திருக்குமா!' என்று நினைக்கவே முடியாமல் ஹிருதயம் அடிப்பது நின்றே போயிற்று. 'உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு இரண்டுங்கெட்டானு அவர்! இல்லையே!' என்று தானே சமாதானம் செய்துகொள்ளப் பார்த்தார். வீட்டைவிட்டுச் சொல்லிக்கொள்ளாமல் சென் றிருப்பது சிறுபிள்ளைத்தனம் அல்லவா? முன்னுடி யாராவது ராமகிருஷ்ணன் அதுமாதிரி செய்வான் என்று சொல்லியிருந் தால், அவர் நம்பியிருப்பாரா? இப்பொழுது அது நடந்திருக் கிறதே! என்று நினைத்தபொழுது இனி எதுதான் நடக்காது? என்று மனது ஓய்ந்து போயிற்று. தான்தான் இவ்வளவுக்கும் காரணம் என்று எண்ணியபொழுது தன்னிடம் வெறுப்பு மேலிட்டு வந்தது. காரியத்தை வெளிப்படையாக நடத்தத் தனக்குத் தைரியம் போதவில்லை. தன்னுடைய கோழைத் தனமே இவ்வித ஆபத்தை வரவழைத்திருக்கிறது. எப்பொழு தும் நேரான பாதையில் செல்லும் நாம் இவ்விதம் தவறி நடந்தது பிசகல்லவா? இனிமேல் நாமென்ன பெரிய பொது நன்மை செய்கிறது. ஒரே அருமைத் தங்கையின் தலையில் பேரிடி விழச் செய்துவிட்டு, எந்த நன்மையை யாருக்குச் செய் தால்தான் அதற்குப் பிராயச்சித்தமாகும். இனி எந்த நல்ல காரியத்தில்தான், நம் மனது சாந்தி பெறும். இவ்விதம் நினைத்து அவர் செயலற்றுப் போனுர்.

வீட்டில் ஒவ்வொருவரும் தாங்கள்தான் அத்திம்பேர் காணுமைக்குக் காரணம் என்று தங்களைத் தாங்களே குற்றம் கூறிக்கொண்டு மனம் நொந்து வருந்தினுர்கள். தன்னுடைய பக்கபலம் இல்லாவிட்டால் தந்தை ட்ராக்டர் வாங்கித்தான் இருப்பாரா? மாட்டார் என்று ஜம்புநாதன் நினைத்தான். "அவர் எவ்வளவோதான் யோசனை பண்ணினுர், நான்தான், 'இதென்னப்பா, இப்படிப் பார்த்தீர்களானுல் நல்ல காரியம் நடக்கிறது ஏது? எல்லாம் அத்திம்பேர் பிறகு, தாமே ஒப்புக் கொண்டுவிடுவார் பாருங்களேன்' என்று தெம்பு கூறினேன். அப்பாவின் போக்கில் விட்டிருந்தால் இது நடந்தே இராது

அவர் எவ்வளவோ நாளாகத்தான் ட்ராக்டர் வாங்குவதுபற்றிச் சொல்லிக்கொண் டிருக்கிறார், செய்தாரா? இல்லை. நான் தானே அத்திம்பேருக்குச் சத்துருவாகக் கிளம்பினேன். மேலும் நான்தான்—காதல், மற்றொன்று, இவ்விதம் வேண்டாத மனக்குழப்பத்தில்—சுந்தரி இருந்ததைப் பாராமல்—பேசி இவ்வளவு தூரத்திற்குச் செய்துவிட்டேன். அவர் என்னிடத்தில் வைத்திருந்த அபிமானத்திற்குப் பிரதி செய்துவிட்டேன்" என்று பசுபதியிடம் சொல்லிச் சொல்லி வருந்தினான். தான் பெரிய குற்றவாளியாகத் தோன்றிக்கொண் டிருந்தது அவனுக்கு.

"'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்' என்பதற்கு இணங்க நடந்திருக்கிறது; நீ என்ன பண்ணுவாய்? இப்படியெல்லாம் நிகழும் என்று தெரிந்தா இது விஷயத்தில் பிரவேசித்தாய்? சில சமயம் பெரியவர்கள் தவறாக நினைத்துக் கொண்டு விடுகிறார்கள். தங்களை எதிர்ப்பதாகத் தோன்றி விடுகிறது, அவர்களுக்கு. மனம் பொறுக்காமல் ஏதாவது செய்துவிடுகிறார்கள்" என்று பசுபதி சமாதானமாகச் சொன்னதொன்றும் அவன் காதில் ஏறவில்லை. அவன் மனப்பிரமத்தில் அஜாக்கிரதையாக நடந்துகொண்டது, ஹிருதயத்தினுள்ளே ஊசி நுழைந்துவிட்டதுபோல் சொல்ல முடியாத வேதனையைக் கொடுத்தது. வீட்டிற்குள்ளேயே இருந்து கொண்டு அத்தை முதலானவர்களின் வருத்தத்தைக் காணச் சகியாமல், அவன் அத்திம்பேரை எங்காவது கண்டுவிட மாட்டோமா என்கிற ஆவலில் ஊரைச் சுற்றி அலைவதிலேயே இருந்தான்.

அத்தை, தானேதான் கணவரை விரட்டினவள் என்பதாகப் புலம்பித் தீர்த்தாள். "நான் அப்படிக் கடுமையாகப் பேசியிராவிட்டால் அவர் போயிருப்பாரா? அண்ணா நடந்து கொள்வதற்கு அர்த்தம் தெரிந்தவள்போல் அவருக்குக் குழந்தைகளும் சொத்துக்களும் இல்லையென்று நான்தானே எடுத்துக் காண்பித்தேன். அவருக்கு இல்லையென்றால் எனக்கு மட்டும் இருக்குமா? அதுகூடத் தோன்றவில்லையே எனக்கு. நான் அப்படிச் சொன்னது மனம் பொறுக்காமல்தான் அவர் எங்கோ சென்றுவிட்டார். நான் செய்தது பெரிய தப்புத்தான்.

அதற்காக அவர் காலில் விழுந்து என்ன தண்டனை விதித் தாலும் ஏற்கத் தயாராக இருக்கிறேனே; அப்படியும் அவரைக் காணுமே!'' என்று ஓயாது புலம்பி அழுது தீர்த்தாள்.

''நீங்கள் ஏதுககு அக்கா இப்படி அழுது புலம்பறேள். நீங்கள் என்ன தனியாத் தப்புச் செஞ்சுப்புட்டது. அவர் பாதிச் சாப்பாட்டிலே எழுந்து போறதைப பார்த்திண்டு நான் பிரமிச்சாப்பலே பேசாம இருந்திருக்கிறேனே! என்னைச் சொல்லுங்கோ! உடனே தடுத்து ஏதாவது பண்ணமாட்டேனு? எனக்கு எங்கே புத்தி போச்சு? உங்களைப்போலவா நான்? நான் அசல் பொம்மனாட்டி. என் வார்த்தையைத் தட்ட அவர் நிச்சயம் யோசித்திருப்பார். எல்லாம சரியாய்ப் போயிருந் திருக்கும். இந்தப் பிள்ளையும் இவரும் சேர்ந்துண்டு பண்ணற அக்கிரமத்திலே வர வர எனககு ஒண்ணும் தெரியாமே போயிடறது. ஜம்புநாதன் எதுக்குத்தான் இப்படி வெட்டுண்டு போறுன் தெரியலே. எல்லாம் தெரிஞ்ச மாதிரி திடீர்னு கிளம்பிவிட்டானே. என்ன பொண்ணும் பிள்ளையும் வேண்டி யிருக்கு!'' என்று ஒரேமட்டில் வெறுத்துக்கொண்டாள் விசாலம். அவளுக்கு யாரைக் கண்டாலும் வேண்டியிராமல் வந்தது. பெண்களை, ''எதுக்கடி இங்கு மங்கும் நின்னுண்டு!'' என்று கண்களில் காணும்பொழுதெல்லாம் கரித்துக் கொட் டினுள். சுந்தரியிடம் கூடவே கொஞ்சம் கோபம் வருகிறமாதிரி இருந்தது அவளுக்கு.

பாவம் சுந்தரி திக்பிரமை பிடித்துப் போனாள். அவள் தான் அத்திம்பேரை வீட்டைவிட்டு விரட்டி, வீட்டில் அப்பா, அம்மா, அத்தை அவ்வளவு பேரையும் ஒரே கஷ்டப்பட வைத் திருக்கிறதாகத் தோன்றிவிட்டது அவளுக்கு. அந்தச் சின்னக் குழந்தை உள்ளம், அத்தனை பெரிய பழியைத் தாங்குமா? சக்தி யற்றுத்தான் துவண்டு போயிற்று. தனிமையில் அழுது அழுது அவள் பொருமிப் போனாள். ஸ்ரீமதி அவள் அவ்விதம் அழுவ தைப் பார்க்கும்பொழுதெல்லாம, ''ஏண்டீ அழறே? அழாதே! நீ பொய் சொல்றேன்னு சொல்லி நான் கோபமூட்டாட்டா நீ சொல்லியிருக்கவே மாட்டயே! நான்னு உன்னைச் சொல்ல வச்சுட்டேன்'' என்று தங்கைக்குச் சமாதானம் கூறுகையில்

தான் செய்த தவற்றுக்காகத் தானும் சேர்ந்து அழுதாள். அகிலாண்டமும் சங்கரியும் அவர்களைச் சமாதானம் செய்தாலும், 'அத்திம்பேர் எங்கேயோ போய்விட்டாரே; தெரியவில்லையே!' என்றுதான் அவர்களுக்கும் துக்கம் பொத்துக் கொண்டு வந்தது.

பாட்டி ஒருத்திதான் அவள் கவலையும் வருத்தமும் எவ்வளவு இருந்தாலும் வாய்விட்டு அதிகமொன்றும் புலம்பவில்லை. 'அவ்வளவுக்குச் சாமி சோதிப்பாரா? மாட்டார்!' என்றுதான் திடமாகச் சமாதானம் சொன்னாள். 'தாயே, அகிலாண்டேசுவரி, நான் ஒரு இடறு கட்டை இருக்கேன்! மறந்து போயிடாதே!' என்று அவள் சிறிது நேரத்திற்கு ஒருதரம் எதற்காகச் சொல்லிக்கொள்ளுகிறாள் என்றுதான் ஒருவருக்கும் புலப்படவில்லை. பாட்டிக்குத்தான் சுந்தரி ஏக்கம் பிடித்துக் கிடப்பது தெரிந்தது. அவள் சுந்தரியைக் கிட்ட அழைத்து முதுகில் தடவிக்கொடுத்து, "வாடி, என் கண்ணே! என்னோடே நீயும் இந்த அகிலாண்டேசுவரிக்குப் பிரார்த்திச்சுக்கோ; அத்திம்பேர் வருவார்; எல்லாம் சரியாப்போகும்" என்று சொல்லிச் சமாதானம் செய்தாள். பாட்டி அது மாதிரி சொன்னது சுந்தரிக்குத் தாங்கவே இல்லை. அவள் இளம் ஹிருதயம் துக்கம் தாங்காது வெடித்துவிடும்போல் ஆயிற்று. அவள் விம்மி விம்மி அழுது, பாட்டியின் மடியில் முகத்தை மறைத்துக்கொண்டாள். அந்தக் குழந்தையின் மன வருத்தத்தைக கவனிக்க மற்றவர்களுக்குச் சமயம் எங்கே? அவர்கள் தான் தங்களுடைய சோகத்திலேயே மூழ்கிக் கிடக்கிறார்களே!

இவ்விதம் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று நாட்கள் சென்றுவிட்டன. அத்திம்பேரின் தகவல் ஒன்றும் தெரியவில்லை. அவர் எங்கோ அந்தர்த்தானம் ஆகிவிட்டார்போல் இருந்தது. போலீஸ் ஆட்கள் வருவதும் போவதும் இருந்ததே தவிர அவர்களுக்கும் நிச்சயமாக ஒரு புலனும் கிடைக்கவில்லை. 'அவர்கள் காவேரிக் கரையில் தேடினதற்கு அடையாளமாக, வேறு ஏதாவது சமாசாரத்துடன் வராமல் இருக்கிறார்களே!' என்கிற ஆசுவாசம் ராமசாமி ஐயருக்கு.

அன்றும் வழக்கம்போல் காலை ஒன்பது மணிக்குத் தபால்

காரன் தபாலைக் கொண்டுவந்து கொடுத்துப் போனான். ராம சாமி ஐயரேதான் அவைகளை வாங்கிக்கொண்டார். அதிலிருந்த ஒரு கார்டுதான் அவர், "ஜம்புநாதா!" என்று போட்ட சத்தத் திற்குக் காரணம் என்று தெரிந்தது. உள்ளிருந்த அவன் ஓடோ டியும் வந்து, 'என்ன சமாசாரம்?" என்று கேட்டான். அவன் விடியற்காலையிலேயே எழுந்து அத்திம்பேரைத் தேடி ஒரு முறை திருவானைக்காவைச் சுற்றி வந்திருந்தான். கார்டை மகனிடம் நீட்டினார் தந்தை. அவர் கை நடுங்கிக் கொண் டிருந்தது.

திருவானைக்காவுக்கு இருபது மைலிலிருக்கும் கிராமம் ஒன்றி லிருந்து எழுதப்பட்டிருந்தது அது. அத்திம்பேர் சமாசாரந்தான். அந்தக் கிராமத்தில் அத்திம்பேரின் தூர பந்து ஒருவர் இருக் கிறார். அவர் மிகவும் ஏழை. அங்கேதான் அத்திம்பேர் சென் றிருக்கிறார் என்பதை அந்தக் கார்டு சொல்லிற்று. அதைமட்டுஞ் சொல்லி நிறுத்தியிருந்தால் அவருடைய மகிழ்ச்சிக்கு எல்லை இருக்காது. ஆனால் அப்படிச் சந்தோஷப்படுவதற்கின்றி, அவர் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியும் அதில் கண்டிருந்தது. 'அவர் பிரக்ஞை இழந் திருப்பதாலேயே நான் இந்தக் கார்டைத் தங்களுக்கு எழுது கிறேன். அவர் நினைவுடன் இருக்கும்வரையில் நான் உங்களுக் குத் தெரிவிக்க விடவில்லை அவர்' என்று அந்த உறவினர் எழுதியிருந்தார்.

அத்திம்பேர் இருக்கிற இடம் தெரிந்தும் அவரை உயிரு டன் பார்ப்போமா என்கிற கவலை வந்துவிட்டது அவர்களுக்கு. உடனே, தாமதம் செய்யாமல் தியாகராஜையரும் பசுபதியும் சொன்ன யோசனையின்படி திருச்சியிலிருந்து டாக்டர் சகிதம் மோட்டார் ஒன்றை அமர்த்திக்கொண்டு சென்றார்கள். அங்கே சென்று பார்த்த பிறகே அத்திம்பேரின் நிலைமை எவ்வளவு தூரம் கவலைக்கு இடமாக இருக்கிறது என்பது அவர்களுக்கு நன்கு புலனாயிற்று. டாக்டர், "அவருக்கு வந்திருக்கும் காய்ச் சல் 'டபிள் நிமோனியா'; மிகவும் கடுமையான வகை. உட னேயே திருச்சி சென்று ஊசி கொண்டு மருந்து ஏற்றிச் சரியான படி சிகிச்சை செய்து பார்க்க வேண்டும்" என்று சொல்லி

விட்டார்.

அவர் இருந்த நிலையில் அவரை ஆடாமல் அசையாமல் இருபது மைல் எடுத்துச் செல்வதுகூடச் சாத்தியமில்லாத செயலாகத் தோன்றிற்று. அவ்விடத்திலேயே அவரை வைத்துக் கொண்டு வைத்தியம் செய்வது என்பதும் சாத்தியமில்லை என்று தெரிந்தது. ஊரைவிட்டு இருபது மைல் தள்ளி, வைத்தியத்திற்கு வேண்டிய ஒரு சௌகரியமும் கிடைக்காத அந்த இடத்தில், குடிசை போன்ற ஓர் இடத்தில் சிகிச்சை பெறக்கூடிய வியாதியா அது!

அவர்கள் கலந்து ஆலோசித்துத் திருச்சியிலிருந்து ஆம்புலன்ஸ் கார் கொண்டுவந்து அவரை அப்படியே அசையாமல் எடுத்துச் செல்வதென்று தீர்மானித்தார்கள். அதன்பேரில் பசுபதி சென்று, அவ்விதமே கார் கொண்டு வந்தான். அவரை அதில் கிடத்தி மெதுவாகக் காரை ஓட்டிச் சென்றார்கள். ராம கிருஷ்ண ஐயருக்கு இதெல்லாம் தெரியாது. அவருக்குத் தம் நினைவு இருந்தால் அல்லவா தம்மைச் சுற்றி நடப்பது தெரியப் போகிறது! அவருக்குத்தான் அதற்கு முதல் நாளிலிருந்தே நினைவு போய்விட்டதே. அவர் இவ்வளவு நாளும் இல்லாமல் இப்பொழுது அந்தத் தூர பந்துவைத் தேடி அங்கே எவ்விதம் வந்தார் என்றால், வருத்தத்திலும் கோபத்திலும் வீட்டை விட்டுக் கிளம்பினவர் கால் போன திக்கில் சென்று, திருச்சியில் பகலெல்லாம் வெயிலின் கடுமையையும் பொருட்படுத்தாமல் தெருவிலேயே சுற்றிக்கொண் டிருந்தார். எங்காவது நிழலுக்கு ஒதுங்கவும் அவருக்கு மனம் இல்லை. மனிதர்களுடைய செயலையும் சொல்லையும்விடச் சூரியனுடைய தாபம் பொறுக்க முடியாததாக அவருக்குத் தோன்றவில்லை. அன்றியும் உலகளவு பெரிதாக இருந்த அவருடைய சோகத்திற்கு, உடலை வருத்துவதில் ஓர் இன்பமே இருந்தது. இருட்டின பிறகுதான் அவருக்குத் தாம் மேற்கொண்டு என்ன செய்கிறது என்கிற யோசனை எழுந்தது.

திரும்ப அவர் தம் மச்சினர் வீடு போகப் போவதில்லை. திருச்சியிலேயே சுற்றிக்கொண் டிருந்தால் அவர்கள் தம்மைக் கண்டுபிடித்துவிடுவார்கள். வேறு எங்காவது சென்றுவிட

வேண்டும். இப்படி நினைத்ததுந்தான் அவருக்கு அந்தச் சொந்தக்காரர் நினைப்பு வந்தது. உடனே அவர் கிராமத்தை நோக்கி நடையைக் கட்டினார். அந்த இடத்தை அடைய அவருக்கு ஒன்றும் அவசரம் இல்லை அல்லவா? அதனால் இரவு முழுதும் மெதுவாக நடந்து சென்று காலையில்தான் உறவினரின் வீட்டை அடைந்தார். அந்த விடியற்காலையில் பெய்த மழை அவரைத் தெப்பலாக நனைத்திருந்தது. அவர் ஒன்றையும் லட்சியம் செய்யவில்லை. நனைந்த வஸ்திரம் தானாக உடலின் சூட்டினால் காய்ந்துகொண் டிருந்தது. அவர் அடைந்திருந்த தாங்கொணா மனக்கொதிப்பும், கடும் வெயிலில் வதங்கி மழைக்கு நனைந்ததும் எல்லாமாகச் சேர்ந்து சும்மா இருக்குமா? அது கடும் ஜுரமாகப் பரிணமித்தது.

அவரை அந்த ஸ்திதியில் ஏற்க அந்த உறவினருக்குச் சம்மதமாக இருக்கவில்லை. அவர் உடனேயே ராமசாமி ஐயருக்குச் சமாசாரம் தெரிவிக்கத் துடித்தார். ஆனால், ராமகிருஷ்ணயர் கடுமையாகக் கோபித்துக்கொண்டுவிடவே அவ்விதம் செய்ய முடியாமல் தடை ஏற்பட்டுப் போயிற்று. பிறகுதான் காரியம் மிஞ்சுகிறது என்று தெரிந்து அவர் ஒரு கார்டையாவது போடுவோமென்று போட்டார். அதன் விளைவாகத்தான் இப்பொழுது ராமகிருஷ்ணயரை அவர்கள் மெதுவாக வீடு கொணர்ந்து சேர்த்தார்கள். உயிரற்ற உடலை எடுத்து வருவதுபோல் பிரக்ஞை அற்ற அவரை உள்ளே படுக்கையோடு கொணர்ந்த போது வீட்டவர்கள் அவ்வளவு பேரும் பதறிப்போனார்கள்.

"ஜானகி! உன் தலையிலே என்னடி எழுதியிருக்கு! இந்த அகிலாண்டேசுவரி என்னடி நினைத்திருக்காள்!" என்று பாட்டியே மனம் தளர்ந்து பதறிச் சொன்னபொழுது மற்றவர்கள் தாங்குவார்களா? அவர் இறந்துவிட்டதாகவே நினைத்து எல்லோரும் மனம் விண்டு தவித்துப் போனார்கள்.

ஒரு வாரம் ஈட்டி முனையில் இருப்பதுபோல் அந்த வீட்டவர்கள் தவித்த தவிப்பை, அந்த அகிலாண்டேசுவரி ஒருத்திதான் அறிய வல்லவள்! அவ்விதம் கண் திறக்காது உயிருக்கு மன்றாடினார் ராமகிருஷ்ணயர். டாக்டர் தம் முழுச் சாமர்த்தியத்தையும் உபயோகித்துச் சிகிச்சை செய்து, இனிப் பய

மில்லை என்று சொன்னபொழுது அவர்களுக்கு எப்படித்தான் இருந்திருக்கும்!

"என் அம்மா ஜானகி, உன்னை நான் எந்த விதம் பார்க்கப் போகிறேனே என்றுதான் தவித்துப்போனேன். உலகத்தார் பாக்கியமாகக் கருதுகிறது ஒன்றும் உனக்கில்லை. இந்த ஒன்றை யும் நானே காரணமாக இருந்து உனக்கு இல்லாமல் செய்ய இருந்தேனே! அது என்னால் பொறுக்கக் கூடியதா? இந்தப் பத்து நாளாக இந்த எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு நான் எப்படித்தான் சகித்தேனோ!" என்று ராமசாமி ஐயர் தம்மிடத்திலேயே அங்கலாய்ப்புடன் வாய் விட்டு அழுது புலம்பினார். அவர் ஹிருதயத்தை அழுத்திக்கொண் டிருந்த துக்கம் கொஞ்சம் தணிந்து, இப்படி வெளி வந்து ஆறுதல் பெற முயன்றது.

அவள் தமையனே அவ்விதம் மனம் விட்டுக் கலங்கும் பொழுது அத்தையால், தான் அநுபவித்த துக்கத்தை வெளிக் காட்டாது இருக்க முடியுமா? அவர் தோளில் சாய்ந்தபடியே, 'ஓ'! என்று அலறிவிட்டாள் அவள்.

"போடா போ, நீ என்ன பண்ணுவெ? படவேண்டிய வேளை!" என்று அவர் தாயார் அவருக்குச் சமாதானம் சொன்ன பொழுது, "அம்மா, உன் பொறுமைக்குத்தான் சுவாமி இவ்விதம் கண் திறந்திருக்கிறார். நல்ல செய்தி கேட் கிறோம். அகிலாண்டேசுவரியிடம் உனக்கு இருக்கும் பக்திக் கும் நம்பிக்கைக்கு மாகத்தான் அவள் முழுதும் சோதித்து விடாமல் இந்த மட்டும் கிருபை செய்திருக்கிறாள்" என்றார் ராமசாமி ஐயர். தாயாரின் பொறுமை அவருக்கு அதிசயமாக இருந்தது. தாங்க முடியாத கஷ்டம் வந்துவிடாது என்கிற திட நம்பிக்கை கொண்டவள்போல் அவள் மனம் தளராமல் சாந்த மாக இருந்ததைப் பார்த்தபொழுது அப்படித்தான் நினைக்கத் தோன்றிற்று அவருக்கு.

வீடே பெருத்த புயல்காற்றுக்குப் பிறகு அடையும் சாந்தத் தையும் அமைதியையும் அடைந்தது. எல்லார் மனத்திலும் அகிலாண்டேசுவரியின் அருள் என்பதாக அவளிடம் பூரண மாகப் பக்தி பிறந்தது. பாட்டி அவ்வளவுக்குத் திடமாக

அம்பாளை நம்பியிருந்தாளே.

## 35

இவ்விதம் அவர்கள் ஆற்றோடு போய்விடாமல், கரை சேர்க்கப்பட்டவர்கள்போலவும் திக்குத் திசை தெரியாத காட்டில் வழி கண்டுபிடித்து விட்டவர்கள் போலவும், பாலை வனத் திடலில் பசுமையைப் பார்த்துவிட்டவர்கள்போலவும் அமைதி அடைந்து, இன்புற்றிருக்கும்பொழுது, காலையில் ஸ்நாநம் செய்து, மடி உடுத்தி ஜபத்திற்கு உட்கார்ந்திருந்த ராமசாமி ஐயரின் தாயார், "ராமசாமியைக் கூப்பிடு! எனக்கு என்னவோ செய்கிறது!" என்று சொல்லி லேசாகச் சாய்ந்தாள். காபி அருந்திக்கொண்டு அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த ஜம்புநாதன், "என்ன பாட்டி, என்ன பண்ணுகிறது?" என்று பதறிப்போய்க் கேட்டு அவள் மடி என்பதையும் மறந்து, அவளை நிமிர்த்தி மார்பில் சார்த்திக்கொண்டான். அவள் ஜபத்திற்காக வைத்திருந்த பஞ்ச பாத்திரத்தின் தண்ணீரையும் அவள் முகத்தில் தெளித்தான். இதற்குள் அறையிலிருந்த விசாலம் முதலியவர்கள் கலவரப்பட்டு ராமசாமி ஐயரை அழைத்து வந்தார்கள். அந்தக் குளிர்ந்த நீர் பட்டுக் களை தீர்ந்தவள்போல் கண்களைத் திறந்த பாட்டி, சுற்றி ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தான் யார் மடியில் சாய்ந்திருக்கிறோம் என்பது தெரிந்தவளாக, "அவளுக்குக் காது கேட்டுடுத்து! ராமசாமி எங்கே? நான் வருகிறேன். ஜம்புநாதா, சமத்தாய் இரு" என்று ஏதேதோ நாத் தழுதழுக்க முணுமுணுத்துவிட்டு மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள். அவள் விடுகிறது சுவாசமோ என்று ஜம்பு நாதனுக்குச் சந்தேகம் எழுந்தது.

"பாட்டி, என்ன செய்கிறது சொல்லேன்! சொல்லேன்!" என்று அவன் மன்றாடிக் கேட்டும் பாட்டி ஒன்றும் பதில் சொல்வதாக இல்லை. அவன் தந்தை வந்து பார்த்தவர் கலவரப்பட்டு வைத்தியரை அழைத்து வந்தார். வைத்தியர் வந்து பார்க்கும் பொழுது பாட்டியின் பிராணன் பறந்து சென்றுவிட்டது என்று தான் தெரிந்தது. அன்றாடம் ஜபம் செய்யும்பொழுது அவள்

வேண்டிக்கொண்ட அநாயாச மரணம் அவளுக்குக் கிடைத்து விட்டது. வியாதியோடு போராடாமல் சொஸ்தமாக இருப்ப வரைத் திடீரென்று கொண்டு போகும் காலனுடைய விளை யாட்டு அது என்று தெரிந்தது.

ஊரில் உள்ளவர்கள் எல்லோரும், 'என்ன புண்ணியமான ஆத்மா! என்ன நல்ல உயிர்!' என்றுதான் பாட்டியைக் கொண் டாடினார்கள். நடு வயதினரான ராமகிருஷ்ணையர் பிழைத் தெழுந்து, வயது சென்ற கிழவி போவதென்றால் அதை யார்தான் உயர்வாகக் கொண்டாடமாட்டார்கள். ஆனால், ராமசாமி ஐயருக்கும் அவர் வீட்டவருக்கும் அவ்விதம் அதைச் சமாதானமாக ஏற்க முடியவில்லை. எதற்கும் சடுதியில் மனம் தளர்ந்து போகாமல் மரத்தின் ஆணி வேராக, குடும்பத்தையே தளராது தாங்கும் அடித் தெம்பாக அவள் இருந்திருக்கிறாள் என்பதை நினைத்து நினைத்து எல்லோரும் வருந்தினார்கள். விரதங்களினாலும் பசி பட்டினியினாலும் இளைத்த அந்தத் துர்ப்பல மான தேகத்தினுள் இருந்த அந்த ஹிருதயத்தின் உறுதியை நினைத்துத்தான் அவர்கள் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்! அவள் இந்த ஒரு வாரமாக விடாமல் அகிலாண்டேசுவரியை என்ன பிரார்த்தித்தாள் என்பது அவர்களுக்கு இப்பொழுது நன்கு விளங்கிற்று. 'அவள் காது கேட்டுவிட்டது' என்று கடைசி வாக்கியமாக அவள் ஏதோ சொன்னது அந்த ஜகன்மாதா வான அம்பிகையைக் குறித்துத்தான்.

தன் வேண்டுகோளுக்கு இணங்கித் தன்னை அவள் ஏற்றுக் கொண்டுவிட்டாள் என்பதைத்தான் பாட்டி தெரிவித்துவிட்டுப் போனாள் என்று தோன்றிற்று. இவ்விதம் பாட்டி, தங்கள் நன்மையையே மனத்தில் கொண்டு வாழ்ந்ததை எண்ணி அவர்கள் வருந்திப் புலம்பாமல் என்ன செய்வார்கள்! 'ஆண் டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ!' என்னும் வாக்கியத்தை எண்ணித்தான் அவர்கள் தங்கள் சோகத்தைத் தணித்துக்கொண்டு மேல் நடக்க வேண்டிய காரியங்களைத் தொடங்கவேண்டியிருந்தது. 'வயதான கிழவி, நல்ல பெரிய சாவு! என்றுதான் எல்லா வைதிகக் காரியங்களை

யும் சிறப்பாகவும் செம்மையாகவும் செய்து,கருமத்தை முடித்துத் தம் கடமையைத் தீர்த்துக்கொண்டார் ராமசாமி ஐயர். பாட்டி யின் சுபஸ்வீகாரத்திற்குச் சாவித்திரியும் கணேசனும் வந்திருந் தார்கள். பெரியவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறப் பந்துக்கள் எல்லோரும் வரவேண்டும் அல்லவா?

அன்பு மிக்க தாயை இழந்த துக்கம் ஒரு புறமும். அருமைத் தங்கையின் கணவர் புத்துயிர் பெற்று எழுந்த சந்தோஷம் ஒரு புறமுமாக, ஏக காலத்தில் ஒன்றுக்கொன்று நேர் மாறுன இரண்டு வித உணர்ச்சிகளையும் அநுபவித்துக்கொண்டு சுகம், துக்கம் இரண்டையும் சமமாகப் பார்ப்பது எப்படி என்பதைத் தமக்கு எடுத்துக் காண்பிக்கவே இவ்விதம் ஒன்றுக அவை நேர்ந்திருக்கின்றனவோ என்கிற அதிசயத்தில் ஆழ்ந்திருக்கும் சிற்றப்பாவைக் கண்டு, அவர் துக்கத்திற்கு ஆறுதலளிக்கவும், அவர் சந்தோஷத்தில் பங்கெடுத்துக்கொள்ளவுமே சாவித்திரி வந்திருந்தாள்.

அத்திம்பேர், உடம்பு குணமாகிப் படுக்கையை விட்டு எழுந்து உட்காரவும்,பத்தியமாகச் சிறிது ஆகாரம் உட்கொள்ள வும் தொடங்கியிருந்தார். இப்படித் தாம் செத்துப் பிழைத்ததில் தம்மிடத்தில் அவ்வீட்டவர்களின் அன்பைப் புடம்போட்டுச் சோதித்து அறிந்த மாதிரி இருந்தது அவருக்கு.

குழந்தை சுந்தரி முதல் எல்லோரும் பட்ட கஷ்டங்களையும், அவருடைய மாமியார் தம் பிராணனையே அவருக்காகத் தியாகம் செய்ததுபோல் இறந்து போனதையும், அறிந்த பிறகும் ஒருவன் அவர்கள் அன்பின் ஆழத்தைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பானு? அவருக்குத் தம்மிடத்திலேயே அவமானம் ஏற் படுகிற மாதிரி இருந்தது. சிறு குழந்தையைப்போல் தாம் அடம் பிடித்து எல்லோரையும் துன்புறுத்திவிட்டோமோ என்று மனம் குன்றிப்போனுர். அந்தப் பச்சாத்தாபத்தில்தான் வீட்டில் எல்லோருமாக-சிறுவர்கள் உள்பட-அவரைச் சுற்றி உட் கார்ந்து பேசியிருந்தபோது இவ்விதம் சொற்கள் அவர் வாயி னின்றும் வெளிவந்தன. "நீங்க ளெல்லோரும் இவ்வளவு அன்புடன் என்னிடம் பிராணுக இருந்திருக்கிறீர்கள். நான் வெறும் முட்டாளாக நடந்து உங்களை யெல்லாம் சிரமப்

படுத்தியிருக்கிறேன். அதை நினைக்கவே என்னால் முடிய வில்லை. அம்மாவைச் சாகும்படியே அடித்துவிட்டேன்!'' என்று வருந்தினார்.

''ஒருத்தரை ஒருத்தர் சாக அடிக்கிறதாவது! என்ன பேச்சு!'' என்றாள் அத்தை ஏதாவது அவ்விதம் வருந்தி அவர் பலவீன நிலைமையில் உடம்பு திருப்பிக்கொள்ளப்போகிறதே என்கிற பயம் அவளுக்கு.

''அம்மாதான் சொல்லுவளே, 'அதது நடக்கிறபடிதான் நடக்கும்' என்று. இன்னது இன்னபடி நடந்தாக வேண்டும் என்று இருந்தால் நாம் மாற்ற முடியுமா?'' என்றார் ராமசாமி ஐயர் அவருக்குச் சமாதானமாக.

''அந்த நம்பிக்கை பாட்டிக்கு அசாத்தியம். ஜம்புநாதன் கல் யாணம் வேண்டாம் என்றபொழுது எல்லோரும் அவனையும், அவன் சொல்படி கேட்டு நடப்பதற்காக உங்களையும் ஒரே மட்டில் குற்றம் சாட்டினார்களே; பாட்டி அப்பொழுதும் ஒரு வார்த்தை சொல்லவில்லை. இவர்கள் சொன்னவைகளுக்குக் கூட, 'நாமாகச் செய்யறது என்ன இருக்கு!' என்றுதான் சொன்னாள்'' என்றாள் சாவித்திரி.

''அந்தக் கல்யாணம் நிற்கக்கண்டுதானே இப்பொழுது இன்னும் பெரிய இடமான ஹைகோர்ட் நீதிபதியின் பெண் மனைவியாக வர இருக்கிறாள்'' என்றார் கணேசன். ஜம்பு நாதன் மறுத்துச் சொன்னதொன்றையும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாதென்று அவர் வைத்திருந்தார் என்று தெரிந்தது.

'அதென்ன சமாசாரம்! எங்களுக்குத் தெரியாதே!'' என்று சிறுவர்கள் முதல் எல்லோரும் பரபரப்புடன் கேட்டார்கள். ராமசாமி ஐயர், தம் வீட்டில் யாருக்கும் தகவல் சொல்லவில்லை. 'ஊருக்கு முன் என்ன தமுக்கடிப்பு? அவர்கள் ஜாதகம் பார்த் துக்கொண்டு வரட்டும், பிறகு சொல்லிக்கொள்ளலாம்' என்று தான், வந்ததும் ஜம்புநாதனின் ஜாதகத்தை மட்டும் முதல் காரியமாக அனுப்பிவிட்டுச் சும்மா இருந்தார். அவரும் ஜம்பு நாதனுடைய வார்த்தைகள் ஒன்றையும் ஒரு பொருட்டாக இது விஷயத்தில் ஏற்பதாக இல்லை. நடத்திவிடுகிறது என்கிற தீர்மா

னத்தில் இருந்தார். அதற்குள்ளாகத்தான் இவ்வளவு தூரம் நடந்து, ஒன்றைப்பற்றியும் சிந்திக்கவோ பேசவோ சாத்திய மில்லாமல் போய்விட்டது. இப்பொழுது கணேசன் பேச்சைத் துவக்கவும் அவர்கள் விஷயம் தெரிந்துகொள்ளத் துடித்தார் கள். ஜட்ஜ் வீட்டவர்கள் ஜாதகம் வாங்கிப்போயிருப்பதையும் இப்பொழுது பொருந்தியிருப்பதாக வந்து கேட்க உத்தேசித் திருப்பதையும் அத்திம்பேரின் உடல் அசௌகரியம், பாட்டியின் சாவு இவைகளினுல்தான் தவக்கம் என்பதையும் சித்தப்பாவுக் கும் சேர்த்து மேற்கொண்டு சமாசாரம் சொன்னுள் சாவித்திரி.

அப்படிச் சொல்லும்போது ஜம்புநாதனுடைய முகத்தை அவள் கூர்ந்து கவனித்தாள். அவன் மறுபடியும் ஆட்சேபங்க ளைக் கிளப்புவானே என்கிறது அவளுக்கு. அவனை எல்லாம் தெரிந்தவனுக—அதாவது மனிதர்களின் தராதரத்தை அறிந்தவ னுக-அவள் நினைத்தபடி அவன் இருக்கவில்லை. அதனுல் அவ னிடம் நம்பிக்கை குறைந்திருந்தது அவளுக்கு. அவன் இப் பொழுது தன்னை மாற்றிக்கொண்டுவிட்டான். தானுக ஒன்றை நினைத்து அதன்படிதான் நடக்க வேண்டும் என்று ஒரு முயற்சியும் செய்யப்போவதில்லை. அவ்விதம் செய்ய முயல்வது விபரீதப் பலனைத்தான் அளிக்கிறது. எல்லாம் பெரியவர்கள் இஷ்டம் என்று வைத்துக்கொள்வதே மேல் என்ற முடிவுக்கு வந்திருந்தான்.

அவன் சென்னை செல்லும் வரையில் அந்த விதந்தானே நடந்து வந்திருக்கிருன். அவனுக்கு அதுதான் உகந்ததாக இருக்கிறதென்ருல் எதற்காக மாற்றிக்கொள்வது? பாட்டி சாகு முன், 'சமத்தாய் இரு' என்று தனக்குத் தனியாகச் சொன்ன வார்த்தைகளுக்கும் பொருள் அதுதான் என்று அவன் தீர்மா னித்துக்கொண்டு விட்டான் என்கிறது அவளுக்குத் தெரிந்திருந் தால் அவள் அப்படி அவனைச் சந்தேகத்துடன் பார்த்திருக்க மாட்டாள். முதலிலேயே அவன் ஆசை பொங்கக் கமலினியை மணக்க முன் வராதது அவளுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்திருந்தது. கமலினியிடம் காதலே அல்லவா அவனுக்கு உண்டாகியிருக்க வேண்டும் என்கிறது அவளுக்கு.

"அப்படியா?" என்று அந்தப் பெண்களுக்குச் சரியாக அத்திம்பேரும் உத்ஸாகத்துடன் கேட்டார். அவர் ஜம்புநாத னிடமிருந்த கோபத்தையெல்லாம் தான் புனர்ஜன்மம் எடுத்த தன் பயனுக எப்பொழுதோ மறந்துவிட்டார் என்றாலும் இந்தச் சங்கதி, 'சபாஷ்!' என்று அவனை முதுகில் தட்டிக்கொடுத்துச் சந்தோஷப்பட வேண்டும்போல் அவர் உத்ஸாகத்தைக் கிளப்பிவிட்டது. சங்கரையர் பெண்ணை வேண்டாமென்று சொன்ன அவன் புத்தியை மெச்சக்கூட மெச்சினார். 'தியாக ராஜையர் பிள்ளை நடராஜனுக்குத்தான் அந்தப் பெண் தகுதி; அவர்கள் நன்றாக இருக்கட்டும்!" என்று அந்தத் தம்பதிகளை ஆசீர்வதிக்கும் அளவுக்கு அவர் சந்தோஷம் அவருக்குத் தாராள மனப்பான்மையைக் கொடுத்தது.

"யார் பெண்டாட்டியை யார் கட்டுகிறது என்று அம்மா சதா சொல்லுவாளே; அது சரியாகத்தான் இருக்கிறது. ஜம்பு நாதனுக்கு ஜட்ஜ் பெண் வர இருக்கிறபோது அவன் ஜவுளி வியாபாரியின் பெண்ணை எப்படி மணப்பான்! அதுதான் நடக்க வில்லை. இப்போது ஜம்புநாதன் கல்யாணம் வரும்பொழுது அம்மா இல்லையே! போய்விட்டாளே!" என்று வருந்தினாள் அத்தை.

"சாவித்திரி! உனக்குப் பிள்ளை பிறக்கணும்னு அகிலாண் டேசுவரியை அம்மா மனதோடு பிரார்த்தித்தாள். இப்போது அது நடக்கப்போகிற சமயத்தில் அவள் இல்லை! அவள் தெய்வ மாக இருந்துதான் அவள் கோரின நலங்கள் நடப்பதைப் பார்த்து ஆசீர்வதிக்க வேண்டும்!" என்று அத்தை மேலும் சொல்லிக் கண்ணீர் பெருக்கினாள்.

சாவித்திரி வந்தது முதல் தனிச் சந்தோஷத்துடன் இருப்ப தாக ஜம்புநாதனுக்குத் தோன்றிக்கொண் டிருந்தது. அவள் முகத்தில் தனிப் பொலிவு காணப்படுவதாக நினைத்தான். கணேசன்வேறு, அதிகம் கவனிக்காத அவன் சுபாவத்தை விட்டு, காதல் கணவனாக மாறி மனைவியின் முகம் பார்த்து, அவள் திருப்திப்படும்படி நடப்பவனாகக் காணப்பட்டார். அவ னைத் தானே அவ்விடம் அழைத்து வந்திருப்பதுடன், திரும்பச் செல்வதற்கும் தன் கச்சேரி திறக்கப்போகும் அவசரம் ஒன்றை

யும் அவர் சொல்லிக்கொண் டிருக்கவில்லை. அவளாகப் புறப் படும் தினத்தை எதிர்பார்த்துச் சும்மா இருக்கிறார். கணேசன் மாறியிருக்கிறார் என்பதை இவை சந்தேகமறச் காண்பித்தன ஜம்புநாதனுக்கு. அவனுக்கு அதனால் ஒருவகைச் சமாதான மும் ஏற்பட்டது.

இலக்கியங்களில் வரும் உத்தம கதாநாயகிக்கு நிகரானவள் அத்தங்காள். அவர்களைப்போலவே காதலித்து, பூசிக்கப்பட வேண்டியவள். அப்படியிருக்க, கணேசன் சாதாரணமான மற்றத் தம்பதிகளைப்போல்கூடத் தன் நேசத்தை வெளிக்காட் டாமல் இருக்கிறாரே என்றுதான அவன் வருந்தி அதற்கு ஈடு செய்யத் தன்னுடைய அன்பை அவளுக்கு அர்ப்பணம் செய்யத் துணிந்துவிட்டானா? காதலிக்கப்படவில்லை என்கிற குறைவு அவளுக்கு இருக்கக்கூடாது என்கிற எண்ணமே, அவளிடம் தனக்கு இருந்த அன்பைக் காதல் என்று நினைத்துக்கொள்ள அவனைத் தூண்டிற்று? எதுவாயினும் இனி அவனுடைய அன் பும் ஆதரவும் அவளுக்கு அவசியமில்லை. இப்பொழுது பிறரு டைய அன்பிற்கும் அநுதாபத்திற்கும் அவள் ஏங்கி நிற்பவளா கத் தெரியவில்லை. அவளுக்குக் குழந்தை பிறக்கப்போகிறது! அதில் அவள் மட்டுமல்ல; கணேசனும் பரமானந்தத்தில் இருக் கிறார் என்று தெரிகிறது. தன் வாழ்க்கைக் குறை தீர்ந்துவிட் டதுபோல் அவள் மனம் நிம்மதியான ஆனந்தத்தை அநுபவிக் கிற மாதிரி காண்கிறது. அவள் என்னவோ இதுவரைக்கும் அவன் அறியாத அத்தங்களாக இருக்கிறாள் என்றே அவனுக் குப் பட்டது. 'அவள் மனக்குறைக்கு என்ன என்னவோ கார ணங்களை நினைத்து யார் யாரையோ குற்றம் கூறினேமே! கடைசியில் அவள் விரும்பித் தவித்தது, தாய்மை என்ற பத வியை அடையத்தானா? பெண்கள் மனத்தை அறிவது கஷ்டம் போலும்!' அவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

சுந்தரி தனியாகக் கேள்விகள் கேட்டு மன்னியாக வரப் போகிற கமலினியைத் தனக்குமட்டுந்தானே தெரியும் என்கிற பெருமைப்பட்டு ஒன்றும் செய்யவில்லை. அவள் தமக்கைகளைப் போலவே வரப்போகிற அண்ணாவின் கல்யாண சந்தோஷத் தைத் தங்களுக்குள்ளாகவே சொல்லிக்கொள்வதோடு நிறுத்திக்

கொண்டாள். பெரியவர்களின் பேச்சின் நடுவில் புகத்தான் அவளுக்குப் பயம் வந்துவிட்டதே.

''என்னப்பா தியாக புருஷரே! தங்கள் வைராக்கியமெல்லாம் காற்றிலே பறந்து போயிற்று?'' என்று ஜம்புநாதன் கல்யாணத்திற்குச் சம்மதித்துவிட்டான் என்பதைக் குறிப்பாக அறிந்துகொண்டு பசுபதி அவனைத் தனித்துக் கேட்டான். ஜம்புநாதனுடைய மனப் பிராந்தி தெளிந்துவிட்டது என்கிற தைரியம் அவனை இவ்விதம் விளையாட்டாகக் கேள்வி கேட்கத் தூண்டிற்று. மனம் இத்தனை புயலில் அடிபட்ட பிறகு அதற்கு முன்னுடியிருந்த எண்ணங்களுக்கு வேர் எங்கே நிலைத்து நிற்க முடியும் என்கிறது அவனுக்கு.

''போடா, தியாகங்கள் செய்ய மனத் திடம் வேண்டாமா? பாட்டிக்கு அது இருந்தது! அவள், 'அத்திம்பேர் சாகக் கூடாது; தான் சாக வேண்டும்' என்று திடமாக நினைத்து அவ்விதமே தன்னைத் தியாகம் செய்துகொண்டுவிட்டாள். நமக்கு அவ்வளவெல்லாம் எங்கே!'' என்றான் ஜம்புநாதன் தாழ்மையுடன்.

முதலில் தியாகத்துக்கு அவசியம் இருந்தால் அல்லவா? அநாவசியமாக எதற்காகச் செய்கிறது?'' என்றான் பசுபதி. அவன் மேலும் தொடர்ந்து, ''உன் அத்தங்காளும் இப்பொழுது மன வருத்தம் நீங்கியிருக்கிற மாதிரி தெரிகிறது. அதற்குக் காரணங்களும் நாம் நினைத்தபடி ஒன்றும் இல்லை. என்கிறதும் தெரிகிறது. இல்லையா? நாம் யார் யார்பேரிலோ குற்றஞ் சாட்டி அவர்களை, யெல்லாம்-நமக்குள்ளே தான் என்றாலும்-நிந்தித்தோமே'' என்றான்.

''அத்தங்காள் வீட்டவர்கள் என்ன இருந்தாலும் அல்பர்கள்தான். அவளை அவர்கள் அவளுக்கு உகந்த மாதிரியில் நடத்தவில்லைதான். எங்கள் வீட்டிலுள்ள இந்தப் பெண்களுக்கும், அத்தங்காள் யாமியார் முதலானவர்களுக்கும், அப்பா! எவ்வளவு வித்தியாசம்! இரவுக்கும் பகலுக்கும் உள்ள பேதந்தான்! சுயநலம் என்கிற ஊரிலேயே இவர்கள் பிறக்கவில்லை; அவர்களுக்கு அதைத் தவிர வேறு தெரியாது. தேவபட்டணம் போல் இங்கே ஓரே சமஉரிமை நிலவுகிறது. அவ்விடத்தில் உண்மையில் அவர்களைவிட எல்லாவிதத்திலும் உயர்ந்த அத்தங்

காலைக்கூட அவர்கள் தங்களுக்குத் தாழ்வாக நடத்துகிறார்கள். அத்தங்காள் பாராட்டிக்கொள்ளவில்லை; திருப்தியாக இருக்கிறாள் என்பதற்காக அவள் வீட்டவர்கள் மாறிவிடுவார்களா?'' என்றான் ஜம்புநாதன்.

''அவர்கள் மோசந்தான்; ஆனால் அவள் பாராட்டிக்கொள்ளாததால் நமக்கும் அது குறித்து அவ்வளவாகக் கஷ்டமோ கோபமோ வேண்டியதில்லையல்லவா?'' என்று ஜாடையாக, இனி சாவித்திரிக்காகப் பரிந்துகொண்டு, அவன் சுயநலத் தியாகம் செய்ய வேண்டாம் என்பதை ஜம்புநாதனுக்கு உணர்த்தினான் பசுபதி.

''ஆனால், ஜட்ஜ் வீட்டவர்கள் சுபாவமே வேறு என்று நினைக்கிறேன். உன் அத்தங்காளே கமலினியை உனக்குச் சிபார்சு செய்கிறாளே!'' என்றான்.

'ஜட்ஜ் வீட்டவர்களின் சுபாவம் முற்றும் வேறுதான்; அதிலும் கமலினி மிகச் சிறந்த குணமுடையவள்' என்று சொல்ல வந்த ஜம்புநாதன் அதைச் சொல்லாமல் அடக்கிக் கொண்டான்.

என்ன இருந்தாலும் சில தினங்கள் முன்தானே அத்தங்காளிடம் தனக்கிருக்கும் காதலைப்பற்றியும் தான் காதலின் கரையையே கண்டுவிட்டவனாகவும் பேசினான் அவன். அதற்குள் வேறு மாதிரி தொனிக்கும்படி—பசுபதியிடந்தான் என்றாலும்—சொல்லுகிறதாவது. 'இன்னொருவனானால் தன்னைப் பரிகசித்து, நாலு பேர் இகழும்படி விஷயத்தைப் பகிரங்கப்படுத்தி அவமானம் செய்திருப்பான். அப்படி இல்லாவிட்டாலும் அப்பாவிடம் மட்டுமாவது அவனுடைய நன்மையைக் கோரிச் சொல்வதுபோலச் சொல்லி அவருடைய கோபத்திற்கும் வெறுப்பிற்கும் அவனை ஆளாக்கியிருப்பான். அவ்விதமொன்றும் செய்யாததுடன் தன்னுடைய மனத்தைத் தெளியவைக்க எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு பசுபதி பேசியிருக்கிறான். நாம் எப்படிப் போனால் என்ன என்று இல்லாமல் நமக்காகப் பாடுபட அவன் தயாராக இருக்கிறானே! பசுபதிக்குத்தான் நம்மிடத்தில் எவ்வளவு பிரியம்!' என்று நினைத்தான் ஜம்புநாதன். இப்படிப்பட்ட உண்மை நண்பனுக்கு அவன் என்ன கைம்மாறு

செய்வான்! தன்னுடைய தங்கை அகிலாண்டத்தை அவனுக்கு மணம் செய்வித்து அவனைத் தனது பந்துவாகக் கொண்டுவிட வேண்டும். அதை அவனும் விரும்பி ஏற்பான் என்ற உறுதி தோன்றிற்று அவனுக்கு.

ஆனால் மறுபடியும் அத்திம்பேர் மனஸ்தாபப்படும்படியான காரியமாகுமோ அது என்ற எண்ணம் தோன்றி, அவர்கள் இந்த ஒரு மாதமாக அநுபவித்தது அவ்வளவும் நினைவிற்கு வந்து அவன் உடல் குலுங்கிற்று.

ஆனால், அத்திம்பேர் இப்பொழுது முற்றும் வேறு மனிதர் ஆகிவிட்டார். தம் எண்ணங்கள் எதுவானாலும் அதை விட்டுக் கொடுக்கும் அளவிற்குத் தாம் என்கிற அகங்காரம் அவரை விட்டே போய்விட்டது. எவ்வளவோ தன்னலமற்ற சுபாவமானாலும் தனியாகச் சிலவற்றில் தம் மனப்போக்குப்படி தான் என்கிற வீம்புகூட இப்பொழுது குறைந்து போய்விட்டதாகத் தெரிகிறது. ஏனெனில், ட்ராக்டரைப்பற்றி அவராகவே விசாரித்து, அது பண்ணுகிற வேலைகளை யெல்லாம் கோபமின்றி அமைதியாகக் கேட்டுக்கொள்ளுகிறார் என்றால் அப்புறம் என்ன!

பசுபதி நல்ல பிள்ளை என்கிறதாக, என்றுமே அவருக்கு அபிமானம் உண்டு. இப்பொழுது - அவர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தபொழுது - அவன் செய்த சிச்ருஷையைப் பெற்றுக்கொண்ட பிறகு அது பின்னும் அதிகமாகி யிருக்கும். ஒரே ஜாதியில் இந்தச் சில்லறை வகுப்பு வித்தியாசத்தை அவர் ஒரு ஆட்சேபமாகக் கருதமாட்டார் என்றுதான் நினைத்தான்.

அவசரப்படாமல் சாவதானமாக, அவரிடம். விஷயத்தைச் சமயம் பார்த்துச் சொல்லிப் பார்க்க வேண்டும் என்று கூட நிச்சயித்துக்கொண்டான். மனத்தில் உள்ளதை வெளியிட நிதானத்தைக் கையாளுவது அவசியம் என்று நினைத்ததும், 'நல்ல காலம்! அவசரப்பட்டு அத்தங்காளிடம் ஒன்றும் உளறாமல் இருந்தேனே! இப்பொழுது பார்க்கும்பொழுதல்லவா நம்மை அவள் எவ்வளவு கேவலமாக நினைக்க அது ஏதுவாக இருந்திருக்கும் என்று தெரிகிறது. நமது உணர்ச்சியின் மகத்தான தவற்றைத்தான் அவள் உணர்ந்திருப்பாளே தவிர நம்

தியாகத்தின் உயர்வு ஒன்றும் அவள் மனத்தில் பட்டிருக்கப் போவதில்லை. பிறர் மனத்தை அறிவதொன்றும் எளிதல்ல. நாம் ஊகமாக நினைத்திருக்கும் விதம் ஒன்று; அவர்கள் இருப்பது வேறொன்று. அதிலும் பெண்கள் தம் மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு, வெளிக்கு வேறு விதம் நடந்துகொள்வதில் வெகு சமர்த்தர்களாக இருக்கிறார்கள்!' என்று எண்ணினான்.

அந்த எண்ணத்தைத் தொடர்ந்து, 'நம்முடைய மனத்தைத் தான் நம்மால் அறிய முடிகிறதா?' என்கிற சந்தேகம் எழுந்தது அவனுக்கு. 'அது பல சமயம் நம்மைக் கவிழ்க்கிறதே! அப்படியிருக்கப் பிறர் மனத்தைப் பிசகின்றி நாம் என்ன கண்டறிகிறது!' என்றும் எண்ணினான்.

இந்தச் சில மாதங்களாக அவன் அநுபவித்த மனப் போராட்டங்கள் என்ன? இப்பொழுது அவைகள் மாறியிருக்கும் விதந்தான் என்ன என்று அவைகளை நினைத்துப் பார்த்தவனாக எண்ணமிட்டான்.

'எல்லாம் ஈசன் செயல், நம்மால் ஒன்றும் இல்லை' என்கிற முடிவிற்கு வருவதுதான் அவனுக்குச் சரியாகத் தோன்றிற்று. இப்படிக் கடவுளிடம் ஒப்பற்ற நம்பிக்கை ஏற்பட்டதாலேயே, எதிர்வீட்டு நடராஜன்—அவன் காதிலும் ஜம்புநாதனுக்கு ஹைகோர்ட் நீதிபதியின் மகள் மனைவியாக வரப்போகிற செய்தி எட்டினதற்கு அடையாளமாக – "பார்த்தாயா? நான் என்ன சொன்னேன்! 'நீங்களெல்லாரும் லட்சிய வாழ்க்கை வாழ்கிறவர்கள்; அதற்கேற்ப லட்சியப் பெண்ணையும் மனைவியாகத் தேர்ந்தெடுப்பீர்கள்!' என்று சொல்லவில்லையா? அதன்படி இப்பொழுது எல்லாச் சிறப்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற பெண்ணைச் சம்பாதித்துவிட்டாயே! கெட்டிக்காரனப்பா!" என்று சந்தோஷம் விசாரித்தபொழுது, "நான் என்னடா சம்பாதிக்கிறது? எல்லாம் பெரியவர்கள் ஏற்பாடு; சுவாமி செயல்" என்றான் ஜம்புநாதன் அடக்கமாக.

"போடா, என்னிடம் பக்தி வேஷம் போட்டு மறைக்கப் பார்க்காதே; சென்னையில் உன் அத்தங்காள் வீட்டில் அந்தப் பெண்ணும் நீயும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட பிறகு ஏற்படுகிற காதல் மணம் இது என்கிறது எனக்குத் தெரி

யாதோ!" என்றான் நடராஜன்.

"இதை யாரடா சொன்னார்கள்!" என்று அதிசயித்தான் ஜம்புநாதன்.

"போடா, ரொம்ப சாது மாதிரி நீ விழிக்காதே, உன் தங்கை சுந்தரிதான் சொன்னாள். உன் அத்தங்காள் உன் அப்பா அம்மாளிடம் சொல்லிக்கொண் டிருந்தாளாம்" என்றான் நடராஜன்.

"சுந்தரி இவ்வளவு அநுபவித்த பிறகும் தன் நாரதர் வேலையை விடவில்லையா என்று ஜம்புநாதனுக்குச் சிரிப்புத் தான் வந்தது. "அவளுக்கு என்னடா, ஏதாவது அரை குறை யாகக் காதில் விழுவதற்குள் தமுக்கடிக்கக் கிளம்பிவிடுவாள்!" என்றான்.

"அப்படியும் அதில் உண்மை இல்லாமல் இல்லையே. உன் அத்தங்காளுக்கு உன் மனசு தெரிந்திராதா?" என்றான் நடராஜன்.

"மனத்தை அறிகிறதாவது, மண்ணாங்கட்டியாவது! அது ஒருவருக்கும் சாத்தியமில்லை; தெரியுமா?" என்றான் ஜம்பு நாதன் அநுபவத்தின்பேரில். அவன் தனக்கு அத்தங்கா ளிடம் காதல் என்று நினைத்திருக்க, அவள் அவனுக்குக் கமலினியிடம் காதல் என்று நினைத்திருக்கிறாளே என்று அதிச யித்துக்கொண்டான்.

அவன் ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்காக நடராஜன் அது அவ்விதம் இல்லையென்று தீர்த்துக்கொண்டுவிடவில்லை. "இப்பொழுது, 'ஆமாம்' என்று உடனே ஒப்புக்கொண்டு விடுவாயா? மாட்டாய். பிறகு நீயாகவே என்னிடம் சொல்லிக் கொண்டு வருவாய். அப்பொழுது சொல்லுகிறேன். என்ன இருந்தாலும் கௌரி என்னிடம் வைத்திருக்கும் அன்பளவு உன் மனைவி உன்னிடம் அன்பு வைத்தால் அதுவே காதலுக் குப் போதுமானது" என்று சொல்லிச் சென்றான்.

சாவித்திரியும் கணேசனும் சென்னை புறப்படு முன், "இப் பொழுதுதான் பாட்டி சாவு நடந்திருக்கிறது; ஜம்புநாதனுடைய விவாகம் உடனே செய்வதற் கில்லை. நிச்சயதார்த்தத்தை இப்பொழுது செய்து வைத்துக்கொள்வோம். தை பிறந்து

விவாகத்தை நடத்திவிடுவோம். இவ்விதம் ஜட்ஜ் வீட்டவர்களிடம் சொல்லலாம் அல்லவா?'' என்று ராமசாமி ஐயர் முதலானவர்களிடம் கலந்து தீர்மானித்துக்கொண்டு, ஊர் கிளம்பினார்கள்.

''கமலினி சரோஜாவைப்போல் ஆடை அலங்காரத்தோடு நின்றுவிட மாட்டாள். உனக்குச் சரியாகப் படிப்பிலும் இருப்பாள். இருவரும் இலக்கிய உலகிலேயே சஞ்சரித்துக் கொண்டு மற்றவைகளைக் கவனியாமல் போய்விடக் கூடாதே! அந்த விசாரந்தான் எனக்கு. ஆனால், கமலினி உன் அளவு மோசமில்லை. அவளுக்குப் புத்தகத்தோடு வெளி விஷயங்களும் தெரியும்'' என்றாள் சாவித்திரி, ஜம்புநாதனைப் பரிகசிக்கும் தோரணையில்.

அவள் அவனைக் கவனித்துப் பார்த்துக்கொண்டு அவ்விதம் சொன்னபோது, அவள், அவன் ஹிருதயத்தை உட்புகுந்து பார்த்துவிடுவாள்போல் அவனுக்குக் கூச்சம் ஏற்பட்டது. அவன் என்ன என்னவோ எண்ணச் சுழல்களில் அகப்பட்டுத் தவித்தபோதிலும் அவைகளுக்கெல்லாம் அடியில் மறைந்து, கமலினியிடம் அன்பு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதாக அவள் கண்டுபிடித்திருந்தாள். அவன் அந்தப் பேச்சை மாற்ற எண்ணி, ''சரோஜா சௌக்கியமா? உன் மாமியார் பயந்தபடி ஒன்றும் நேர்ந்துவிடாமல் அவள் பிள்ளைக் குழந்தை பெற்றுத் திடமாக இருப்பதில் உன் மாமியார் கவலை நீங்கிச் சந்தோஷமாக இருக்கிறாள் இல்லையா?'' என்று கேட்டான்.

''என் மாமியாருடைய கவலைகள் நீங்குகிறதேது! சமுத்திர அலைகள்போல் ஒன்று போக ஒன்று உண்டாகாதா? சரோஜாவின் உடல் நிலை குறித்து விசாரப்பட்டாயிற்று. இப்பொழுது பிள்ளை பெற்ற அவள் உடம்பு தேறுவதைக் குறித்து விசாரப்படுகிறார். அதோடு குழந்தை வளர்க்கும் விசாரமும் சேர்ந்துகொண் டிருக்கிறது'' என்றாள் சாவித்திரி சிரித்துக்கொண்டு.

'குழந்தையும் திடமாக வளர வேண்டும். பெற்ற தாயும் குழந்தையைக் கவனிப்பதில் முனைந்து, உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது' என்று இரண்டுக்கும் பார்த்து அந்த

அம்மாள் எப்படிக் கவலைப்பட்டுப் போவாள், என்று கற்பனை செய்து பார்த்துத் தானே சிரித்துக்கொண்டான் ஜம்புநாதன்.

எந்த நிலையிலும் மாறாத சில பிரகிருதிகள் தனியே உலகில் இருக்கத்தான் இருக்கிறார்கள் என்று எண்ணவும், 'தனியே என்று பிரிப்பதென்ன, யார்தான் மாறுகிறார்கள்? தங்களுக்குள்ளேயே உட்புகுந்து பார்த்து, தங்களுடைய சிறு குற்றங்குறைகளையும் தெரிந்துகொண்டு, மாற்றிக்கொள்ளுகிறவர்களுக்கும், அது பிறவிக் குணமாக இருப்பதால்தான் சாத்தியமாகிறது. உடன் பிறந்த ஒன்றைச் சற்று மறைத்துக்கொள்ளலாமே ஒழிய அடியோடு அதை விட்டுவிடுவது சாத்தியமா? முடியாது!' என்றுதான் ஜம்புநாதன் திடமாக நினைத்தான். இவ்வளவு தவறுதலுக்குப் பிறகும் தன் போக்கில் சிந்திக்கும் சுபாவத்தை விட்டு அவன் இப்பொழுது மாறியிருக்கிறானா? மேலும் ஏதோ சிந்தனைக்கு ஆளாகிறானே! அவரவர் சுபாவப்படி அவரவர் இருப்பதுதான் சாத்தியம் போலும்.